
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்

# மாயா விநோதப் பரதேசி

## 3



**வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்**

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மாயா விநோதப் பரதேசி

## மூன்றாம் பாகம்

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிவு
ஜெனரல் பப்ளிஷர்ஸ்
முதற் பதிப்பு - 2004

© பதிப்பகத்தார்

மொத்தப் பக்கங்கள் : 312

**விலை: ரூ. 120.00**

Laser Typeset by - **Print Point Graphics,** Chennai - 20.
Printed at - Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

மூன்றாம் பாகம்

# மாயா விநோதப் பரதேசி

★ ★ ★

*12–வது அதிகாரம் தொடர்ச்சி...*

மனோன்மணியம்மாளினது நிலைமை அங்ஙனமாக, பட்டாபிராம பிள்ளைக்கும், வேலாயுதம் பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணையை நாம் இனி விஸ்தரிப்போம். கடைசியாக வேலாயுதம் பிள்ளை கேட்ட கேள்விக்கு மறுமொழியாக பட்டாபிராம பிள்ளை, "இல்லை அண்ணா! பிள்ளையாண்டானைப் பற்றி எவ்வித தகவலும் தெரியவே இல்லையே! நானும் என்னால் ஆன முயற்சிகளை எல்லாம் செய்து பார்க்கிறேன். இந்த ஊர்ப் போலீஸ் கமிஷனர் உத்தியோக தோரணையில் எனக்குக் கீழ்ப் பட்டவர்; அதுவுமன்றி, அவர் எனக்கு நிரம்பவும் வேண்டிய மனிதர்; பையன் காணப்படவில்லை என்ற சங்கதி அவருக்குத் தெரிந்த நிமிஷம் முதல் அவர் இரவு பகல் இதே கவலை கொண்டு தம்மாலான பிரயத்தனங்களை எல்லாம் செய்து வருகிறார். இந்த நகரத்தில் உள்ள சகலமான போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அவர் உடனே அவசரமாக இந்தத் தகவலைத் தெரிவித்து, ஆயிரக் கணக்கில் இந்த ஊரில் இருக்கும் போலீஸ் ஜெவான்களுக்கும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும் பிள்ளையாண்டானுடைய அங்கமச்ச அடையாளங்களைத் தெரிவித்து, ஓரிடம் விடாமல் தேடிப் பார்க்கும்படி செய்திருக்கிறார். அதுவுமன்றி இந்த ராஜதானியைச் சேர்ந்த மற்ற இருபத்தைந்து ஜில்லாவில் உள்ள போலீஸ் சூபரின்டென்டெண்டுகளுக்கும், ரயில்வே போலீசாருக்கும் இதைப்பற்றி அவசரமான செய்தி அனுப்பி, வெளியூர்களில் உள்ள சகலமான போலீஸ் சிப்பந்திகளுக்கும் இந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி நம்முடைய பிள்ளையாண்டானைத் தேடும்படி செய்திருக்கிறார். நான் ஒரு மணிக்கு ஒரு தரம் டெலிபோன் மூலமாக இந்த நகரப் போலீஸ் கமிஷன

ரோடு பேசி ஏதாவது செய்தி தெரிந்ததா என்று கேட்டுக் கொண்டேதான் இருக்கிறேன். இன்று நான் என்னுடைய பங்களாவில் இருந்து புறப்பட்ட நிமிஷம் வரையில் அவரைப் பற்றிய தகவல் எதுவும் போலீசாருக்குத் தெரியவில்லை. அவர் ஏதாவது உத்தேசத்தோடு எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று புறப்பட்டு மன்னார்குடிக்குத்தான் வந்திருப்பார் என்றே உறுதியாக நம்பி இருந்தேன். அவர் அங்கே வரவில்லை என்று நீங்கள் தெரிவித்ததைப் பார்த்த பிறகுதான் எங்கள் மன நிலைமை அதிக குழப்பத்திற்கு வந்துவிட்டது. அவர் எங்கேதான் போயிருப்பார் என்ற குறிப்பே கொஞ்சமும் தெரியவில்லை; மாயமாய் மறைந்து போயிருக்கிறார். அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கும் மனிதனுக்குப் பிரக்ஞை அப்போதைக்கப்போது கொஞ்சம் கொஞ்சம் உண்டாகிறது. ஆனால், அவன் வாயைத் திறந்து பேசும் நிலைமைக்கு வரவில்லை. அவனோடு பேச்சுக் கொடுத்தால், அவன் உடனே கண்களை மூடிக்கொண்டு சோர்ந்து தூங்கி விடுகிறான். அவன் எப்படியும் இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள் பேசும்படியான நிலைமைக்கு வந்து விடுவான் என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதுவரையில் நாம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருந்து, அவன் சொல்லும் தகவலை வைத்துக் கொண்டுதான், நாம் நம்முடைய பிள்ளை யாண்டான் இருக்கும் இடத்தையும், இருக்கும் நிலைமையையும் கண்டுபிடிக்க வேண்டும். அவன் சரியான நிலைமைக்கு வந்தாலும், உண்மையான தகவலைத் தெரிவிக்கிறானோ இல்லையோ! அவன் சொல்வதை வைத்துக் கொண்டு தேடுவதைத் தவிர வேறு எவ்விதமான மார்க்கமும் இல்லை. நான் என் கடிதத்தோடு உங்க ளுக்கு அனுப்பிய புகைப்படத்தை நீங்கள் பார்த்திருப்பீர் களே. அந்த மனிதன் இன்னான் என்ற அடையாளம் தெரிகிறதா?" என்றார்.

பட்டாபிராம பிள்ளை போலீசாரைக் கொண்டு அத்தனை ஏற்பாடுகளையும் முயற்சிகளையும் செய்திருந்தும், கந்தசாமி அகப் படவில்லை என்ற செய்தியைக் கேட்க, வேலாயுதம் பிள்ளை முதலிய எல்லோரும் கட்டிலடங்கா மனவேதனையும், ஏமாற்றமும், கலக்கமும் அடைந்து இடிந்து துயரக் கடலில் ஆழ்ந்து

போயினர். அவர்களது தேகம் எல்லாம் சோர்ந்து உட்கார்ந்து போயிற்று. முகம் முற்றிலும் வாட்டமடைந்து கீழே சாய்ந்து போய் விட்டது. தாம் என்ன செய்வது, எங்கே போவது, தனது விசனத்தை எப்படி வெளியிடுவது என்பதை அறியாமல் அவர்கள் எல்லோரும் நெருப்புத் தணல்களின் மீது நிற்பவர் போலத் தத்தளித்தனர். உடனே வேலாயுதம் பிள்ளை கலெக்டரைப் பார்த்து, "நீங்கள் அனுப்பிய படத்தைப் பார்த்தோம். படத்தில் உள்ள மனிதன் விரோதிகளைச் சேர்ந்தவனல்ல. அவன் நம் முடைய கந்தசாமியோடு கூடவே படித்துக் கொண்டிருந்த எங்கள் ஊர்ப் பையன். அவனுடைய பெயர் கோபாலசாமி என்பது" என்றார்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை திடுக்கிட்டு மிகுந்த வியப் பும், கலக்கமும் அடைந்து, "என்ன ஆச்சரியம் இது! நம்முடைய பிள்ளையாண்டானோடு கூடப் படித்துக் கொண்டிருக்கும் பையன் எதற்காக உங்களுடைய மைத்துனி புருஷன் என்று சொல்லிக் கொண்டு எங்களிடம் வந்தான் என்பது தெரியவில் லையே! அவனோடு கூடவந்த யௌவனப் பெண் பிள்ளை யாராக இருக்கலாம்? அவனுக்குக் கலியாணம் ஆயிருக்கிறதா? அந்தப் பெண் அவனுடைய சம்சாரமாய் இருப்பாளா? அப்படி இருந்தாலும், அவர்கள் இருவரும் என்ன கருத்தை வைத்துக் கொண்டு எங்களிடம் வந்து, உங்களுடைய நடையுடை பாவனை களைப் பற்றிப் பெண்ணினிடம் பேசி, அவளுடைய மனதைக் கலைக்க முயன்றிருப்பார்கள் என்பது தெரியவில்லையே!" என்றார்.

உடனே வேலாயுதம் பிள்ளை, "நம்முடைய எதிரிகள் லேசான வர்கள் அல்ல. நாங்கள் இந்தப் பெண்ணை எங்கள் பையனுக்குக் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டு எதிரிகள் இதைத் தடுக்க ஏற்பாடு செய்திருக்கலாம். இந்தப் பெண்ணை அவர்களுடைய வீட்டில் கட்டிக் கொடுப்பதாக நீங்கள் முன்னே அவர்களிடம் சொல்லி அவர்களைத் தண்டனைக்குக் கொண்டு போனீர்கள் அல்லவா. அந்த ஆத்திரமும் இருக்கலாம். கந்தசாமியோடு அன்னியோன்னியமாய்ப் பழகும் மனிதனாகிய இந்த கோபாலசாமிக்கு ஏதாவது பணம் கொடுத்து இவனை

வசப்படுத்திக் கொண்டிருக்கலாம். இவனைத் தூண்டி, அவனை எங்கேயாவது தனியான இடத்திற்கு அழைத்து வரச்செய்து, ஆட்களை விட்டு, அவனை அபகரித்துக் கொண்டு போயிருக்க லாம். உங்கள் பெண்ணின் அடையாளம் இந்த கோபாலசாமிக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம். அல்லது, மத்தியானமே பங்களா விற்கு வந்து பெண்ணைப் பார்த்துக் கொண்டு, கட்டிடத்தின் அமைப்பையும் தெரிந்து கொண்டிருக்கச் செய்து, இரவில் ஆட்கள் வரும்போது அவர்களுக்கு உதவியாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். அப்படி வந்த இடத்தில், அவனுடைய துரோக புத்திக்குத் தகுந்த தண்டனையைக் கடவுள் செய்வித்தத னால், அவன் இப்போதிருக்கும் நிலைமையை அடைந்திருக்க லாம். அவனுக்குக் கலியாணம் ஆகவில்லை. அவனோடு வந்த பெண் எதிரியைச் சேர்ந்த வேறே மனுஷியாகத்தான் இருக்க வேண்டும். இந்தச் சம்பவத்தைப் பற்றி நாங்கள் எல்லோரும் யோசித்து யோசித்துப் பார்த்தோம். இது தான் எங்கள் மனசுக்குப் படுகிறது. இதைத் தவிர வேறு எந்தவிதமாக அர்த்தம் செய்கிறது என்பதே தோன்றவில்லை" என்றார்.

பட்டாபிராம பிள்ளை, "ஆம் அண்ணா! எனக்கும் அப்படித் தான் படுகிறது. நான் இந்த கோபாலசாமியினுடைய படத்தை உங்களுக்கு அனுப்பியதும் நல்லதாகவே முடிந்திருக்கிறது. நீங்கள் சொன்னது நிரம்பவும் முக்கியமான தகவல். இதை நான் உடனே போலீசாருக்குத் தெரிவித்தால், இதை வைத்துக் கொண்டு அவர்கள் மறுபடி பிரயத்தனப்பட்டுப் பார்ப்பார்கள். சரி; நீங்கள் எல்லோரும் இப்படியே அடியேனுடைய பங்களாவிற்கே வர வேண்டும். எங்களுடைய பங்களாவில் ஒரு பெரிய பாகம் காலி செய்யப் பட்டிருக்கிறது. அது நிரம்பவும் சௌகரியமான பாகம். அங்கே அநேக சிப்பந்திகள் இருக்கிறார்கள். போனவுடன் ஸ்நானம், அநுஷ்டானம், போஜனம் முதலியவற்றைச் செய்வதற்கும், இரவில் படுத்துக் கொள்வதற்கும் வேண்டிய சகலமான ஏற்பாடுகளும் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. கோமளேசுவரன் பேட்டையில் உள்ள உங்கள் கிரகத்தில் இது வரையில் அவர் ஒருவரே இருந்தார் ஆகையால், அவ்விடத்தில்

அவர் ஒருவருக்கு மாத்திரமே அவசியமான பாத்திரங்களும், படுக்கையும் இருக்கும். நீங்கள் போய்ப் புதிதாய் எல்லா வற்றையும் தருவிப்பது வீண் பிரயாசையான வேலை. அதோடு, எல்லாச் சாமான்களும் வந்து சேருவதற்குள் வீண் கால தாமதம் ஆகும். அதுவுமன்றி, நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த இக்கட்டான நிலைமையில் பிள்ளையாண்டானைப் பற்றி அப்போதைக் கப்போது நமக்குக் கிடைக்கும் தகவல்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ளவும், மேலே ஆகவேண்டிய விஷயங் களைப் பற்றிக் கலந்து யோசனை செய்யவும், நீங்கள் என் பங்களாவிலேயே இருப்பது நிரம்பவும் அனுகூலமாக இருக்கும். இவைகளை எல்லாம் உத்தேசித்து நான் உங்களுக்கு என் பங்களாவிலேயே ஜாகை தயாரித்திருக்கிறேன். ஆகையால் நீங்கள் எல்லோரும் அவ்விடத்திற்கே எழுந்தருள வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட வேலாயுதம் பிள்ளை அன்பாகவும் நயமாகவும் பேசத் தொடங்கி, "நீங்கள் சொல்லுகிறபடி நாங்கள் அங்கே வந்திருப்பதில் பல அனுகூலங்கள் இருக்கின்றன என்பது வாஸ் தவமே. ஆனால், எல்லாவற்றிலும் முக்கியமான இன்னொரு விஷயம் இருக்கிறது. இன்றைய தினம் நாள் அவ்வளவு நன்றாக இல்லை. நாம் ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்து கொள்ளப் போகிறவர்கள். தற்கால அனுகூல பிரதிகூலங்களை நாம் கவனிப்பதை விட நம்முடைய நீடித்த பாந்தவ்வியத்தையும், அன்னியோன்னிய பாவத்தையுமே நாம் அதிக முக்கியமாய்க் கோர வேண்டும். இன்று பரணி கிருத்திகையாய் இருப்பதோடு இன்னும் மற்ற அம்சங்களும் திருப்திகரமாக இல்லை ஆகையால், இப்படிப்பட்ட அசுபமான தினத்தில் நாங்கள் உங்கள் கிருகத்தில் பிரவேசிப்பது அவ்வளவு உசிதமான காரியமல்ல. நாம் இன்று ஒருவரை ஒருவர் சந்தித்தது கூட அவ்வளவு சரியான காரியமல்ல. நேற்று இருந்த கலவரத்தில் இதைப் பற்றி எண்ணாமல் நாங்கள் தந்தி அனுப்பி விட்டோம். நீங்களும் எங்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று வந்து விட்டீர்கள். இந்தச் சந்திப்பு தான் என்னவோ நம்மை மீறி நடந்து போய்விட்டது. நாம் செய்த பிழை இவ்வளவோடு நிற்கட்டும். இப்படிப்பட்ட கெட்ட தினத் தில்

கோமளேசுவரன் பேட்டையில் உள்ள எங்கள் கிரகத்திற்குக் கூடப் போவது என் மனதிற்கு உறுத்தலாக இருக்கிறது. இருந் தாலும் வேறே வகை இல்லாதபடியால், அங்கே போகவேண்டி இருக்கிறது. இனி பையன் திரும்பி வந்த பிறகு, நாம் இந்த நிச்சய தார்த்தத்தை நடத்தத் தொடங்கினால், நாங்கள் அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு எங்கேயாவது போய் இருந்துவிட்டு நல்ல நாள் பார்த்துக் கொண்டு தான் மறுபடி அந்த வீட்டிற்கு வந்து அந்தச் சுப காரியத்தை நடத்த வேண்டும் என்று நினைத்திருக்கி றோம். ஆகையால், நாம் ஒரு காரியம் செய்வோம். நாள் இருந்த படி இருக்கட்டும் என்று நாங்கள் இப்போது கோமளேசுவரன் பேட்டைக்கே போகிறோம். இன்று புதன்கிழமை அல்லவா? இதற்கடுத்தாற்போல ஏதாவது நல்ல நாள் வாய்த்தால், அன்று புறப்பட்டு உங்களுடைய பங்களாவிற்கே நாங்கள் வந்து விடுகிறோம். அதுவரையில் தாங்கள் எங்களை மன்னித்துக் கொள்ள வேண்டுகிறேன்" என்று நிரம்பவும் பணிவாகக் கூறினார்.

பட்டாபிராம பிள்ளை, "சரி; எந்த விஷயத்திலும் அடியேன் உங்களுடைய பிரியப்படி நடக்கக் காத்திருக்கிறேன். உங்கள் யோசனைப்படியே செய்வோம். எல்லாவற்றிற்கும் நான் ஒரு வாடகை மோட்டார் வண்டி பேசித் தயாராய் வைத்திருக்கிறேன். அதில் நாம் கோமளேசுவரன் பேட்டைக்கு வேண்டுமானாலும் போகலாம். என்னுடைய பங்களாவிற்கு வேண்டுமானாலும் போகலாம்; அதில் 8-பேர் உட்காரலாம். நான் கோமளேசுவரன் பேட்டை வரையிலாவது வந்து உங்களை உங்கள் ஜாகையில் சேர்த்து விட்டு வருகிறேன். அவ்விடத்தில் உள்ள வேலைக் காரியைக் கண்டு, அவளிடம் பேசி நம்முடைய கந்தசாமியும், இந்த கோபாலசாமியும் ஒருவருக்கொருவர் எவ்வித மாக நடந்து வந்தார்கள் என்பதைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு வர உத்தேசிக்கிறேன்" என்றார். வேலாயுதம் பிள்ளை, "சரி; அப்படியே செய்யுங்கள்" என்றார்.

பட்டாபிராம பிள்ளை, "ஏன்; நாம் வெளியில் போகலாம் அல்லவா?" என்றார்.

வேலாயுதம் பிள்ளை, "ஓ! போகலாம் வாருங்கள்" என்று கூறிய வண்ணம், முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் வெளியேறும் வழி இருந்த திக்கை நோக்கிச் செல்லலானார்.

அதை உணர்ந்த பட்டாபிராம பிள்ளை, "அண்ணா! அங்கே இருப்பது முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் போகும் வழி. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் போவதற்கு இந்தப் பக்கத்தில் வேறே வழி இருக்கிறது. நாம் இப்படியே போக வேண்டும்" என்று நிரம்பவும் பணிவாகக் கூறினார்.

உடனே வேலாயுதம் பிள்ளை, "நாங்கள் முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கி இருக்கிறோம். ஆகையால் நம்மைத் தடுக்க மாட்டார்கள். நாம் முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணி களின் வழியாகவே போகலாம். அங்கே தான் ஜன நெருக்கம் அதிகமாக இல்லை" என்றார்.

பட்டாபிராம பிள்ளை முற்றிலும் வியப்படைந்து, "நீங்கள் முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கிவிட்டு மூன்றாவது வகுப்பில் ஏன் வந்தீர்கள்?" என்றார். வேலாயுதம் பிள்ளை, "எல்லாம் கால பலன்; எங்கள் குடும்பத்திற்கே பொதுவாக இப்போது வேளை சரியாக இல்லை. எங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய நன்மை எதுவும் இப்போது சரியாய்ப் பலிக்கிறதில்லை. முக்கியமாகப் பையன் விஷயத்தைப் பாருங்கள். அவனுக்குக் கலியாணம் நடத்த வேண்டும் என்று நாம் இருதிறத்தாரும் சம்மதித்துச் சகலமான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். அது கைகூடாமல் போன தோடு பையனுக்கே மோசம் வந்திருக்கிறது. அது போலவே எல்லா விஷயமும் நடக்கிறது. மன்னார் குடியில் நாங்கள் முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டே வந்தோம். மாயவரம் வந்த வரையில் எங்களுக்கு அந்த வகுப்பில் இடம் கிடைத்தது. மாயவரத்தில் நாங்கள் வண்டிமாறி, மெயில் வண்டியில் ஏறியபோது, முதல் வகுப்பில் இடமே இல்லை. இரண்டாவது வகுப்பில் வண்டிக்கு ஓர் இடமாக இரண்டு வண்டிகளில் இரண்டு இடங்கள் காலி இருந்ததாகத் தெரிந்தது. நல்ல வேளையாக மூன்றாவது வகுப்பு வண்டியில் நாங்கள் அறுவரும் உட்காரு வதற்கு வசதியான இடம் அகப்பட்டது. அதற்குள் வண்டி

புறப்படும் சமயம் நெருங்கிவிட்டது ஆகையால் எந்த இடத்தி லாவது தொற்றிக் கொண்டு பட்டணம் வந்து சேர வேண்டும் என்கிற ஆவலில், அந்த மூன்றாவது வகுப்பு வண்டியில் ஏறிக் கொண்டு வந்து சேர்ந்தோம். இந்தப் பொல்லாத வேளையில் கடவுள் கிருபையால், அந்த இடமாவது கிடைத்ததையே நாம் ஒரு பெருத்த நன்மையாக மதித்துக் கொள்ள வேண்டுமே அன்றி வேறல்ல. வண்டியில் நமக்கு முதல் வகுப்பு இடம் கிடைக்காமல் போனதற்கு, முதல் வகுப்பு வழியாகவாவது நாம் வெளியில் போகலாகாதா?" என்று புன்னகையோடு கூறினார்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை, "ஓகோ! அப்படியா சங்கதி! சரி; வாருங்கள் போவோம்" என்று கூறி அவர்களை நடத்தி அழைத்துக் கொண்டு முதலாவது இரண்டாவது வகுப்பு வாசலின் வழியாக வெளியில் சென்றார். சென்றவர் தமது புதல்வியான மனோன்மணியம்மாள் அவ்விடத்தில் இருக்கிறாளோ என்று நாற் புறங்களிலும் திரும்பிப் பார்த்தார்; அவளாவது தங்களது பெட்டி வண்டியாவது அவ்விடத்தில் காணப்பட்டமையால் அவள் பங்களாவிற்குத் திரும்பி போய்விட்டாள் என்று நிச்சயித்துக் கொண்டவராய், தாம் அமர்த்தியிருந்த மோட்டார் வண்டியில் வேலாயுதம் பிள்ளை முதலியோரை உட்காரவித்துத் தாமும் அவர்களோடு உட்கார்ந்து கொண்டார். வண்டி புறப்பட்டு இடை வழியில் எவ்வித விசேஷ சம்பவமும் இன்றி பத்து நிமிஷ நேரத்தில் கோமளேசுவரன் பேட்டையில் உள்ள வேலாயுதம் பிள்ளையின் மாளிகையை அடைந்தது.

அன்றைய தினம் அசுபதினம் ஆதலால், தமது புதிய சம்பந்தி யான பட்டாபிராம பிள்ளை முதன் முதலாகத் தமது கிருகத்திற்கு வருவது வேலாயுதம் பிள்ளையின் மனதிற்குச் சம்மதமில்லை ஆனாலும், வரவேண்டாம் என்று சொல்வது மரியாதைக் குறைவான காரியம் என்று கருதி அவர் மௌனமாகவே இருந்தார்.

கந்தசாமியின் சமையல்காரி மன்னார்குடியில் இருந்து, வேலா யுதம் பிள்ளையினால் அனுப்பப்பட்டு வந்தவள் ஆதலால், அவள் அவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் கண்டவுடனே அவர்கள் இன்னார் என்பதை உணர்ந்து கொண்டாள். பட்டாபி

ராமபிள்ளை அதற்கு முன் அவ்விடத்திற்குப் பல தடவை களில் வந்து போயிருந்தார் ஆதலாலும், அவர் கந்தசாமிக்கு மாமனார் ஆகப் போகிறவர் என்பதை அறிந்து கொண்டிருந்தாள் ஆதலாலும், அவரது அடையாளத்தையும் அவள் உடனே கண்டு கொண் டாள். அவளும், அவளது புருஷனும் தமக்கென்று தனியான ஜாகை ஒன்று வைத்துக் கொண்டிருந்தனர் ஆதலால், அவள் இரவில் படுத்துக் கொள்வதற்கு மாத்திரம் தனது சொந்த ஜாகைக்குப் போவதும், மற்ற காலத்தில் கந்தசாமியின் வீட்டில் இருந்து அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வதுமாய் இருந்து வந்தாள். கந்தசாமி காணாமற் போன தினம் முதல் அவன் எப்போது திரும்பி வருவான் வருவான் என்று அவள் ஆவலோடு அவனது வருகையை எதிர்பார்த்துப் பதைபதைத்து நெருப்புத் தணல்களின் மேல் நிற்பவள் போல அளவிட இயலாத சஞ்சலமும் கலவரமும் விசனமும் அடைந்தவளாய் இருந்து வந்தாள். கந்தசாமி காணாமல் போனதைப்பற்றி, அவள் மன்னார் குடிக்குக் கடிதம் எழுத முயன்ற காலத்தில் பட்டாபிராம பிள்ளை அவ்விடத்திற்கு வந்து, தாம் மன்னார்குடிக்குத் தந்தி அனுப்பி இருப்பதாகவும், மறுபடி விவரமான கடிதம் அனுப்பப் போவ தாகவும் கூறியதைக் கேட்ட பிறகு அவள் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டு, அது முதல் நிமிஷத்திற்கு நிமிஷம் கந்தசாமியின் வருகையையும் அவனைச் சேர்ந்த மனிதர்களின் வருகையையும் எதிர்பார்த்த வளாய் வேதனைக் கடலில் ஆழ்ந்து தத்தளித்து இருந்தாள்.

ஆகவே, புதன்கிழமை காலையில் வந்து சேர்ந்த வேலாயுதம் பிள்ளை முதலியோரைக் கண்டவுடன் அவளுக்கு ஆத்திரமும் அழுகையும் பொங்கி எழுந்தமையால், அவள் உடனே கோவெனக் கதறி அழுது, "எஜமானே! குழந்தை அகப்பட்டாரா?" என்று கட்டி லடங்கா ஆவலோடு கேட்க, அவளது உருக்கமும் விசனமும் தொற்று வியாதி போலப் பரவி மற்றவரது மனத்தையும் கப்பிக் கொண்டமையால், வேலாயுதம் பிள்ளையும், அவரைச் சேர்ந்த வர்களும் கலங்கிக் கண்ணீர் விடுத்துத் தேம்பித் தேம்பி அழுதவர்களாய் உள்ளே சென்றனர். பட்டாபிராமபிள்ளை அந்த வேலைக்காரியை நோக்கி நிரம்பவும் அன்பாகப் பேசத் தொடங்கி, "பிள்ளையாண்டான் இன்னம் அகப்படவில்லை அம்மா!

அவரைத் தேடிப்பிடிப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சீக்கிரம் அகப்பட்டு விடுவார்" என்று கூறிய வண்ணம் தமது சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருந்த ஒரு புகைப் படத்தை வெளியில் எடுத்து அந்தச் சமையல்காரியிடம் நீட்டி, "இதைப் பாரம்மா, இதில் இருக்கும் மனிதர் யார் என்பது உனக்குத் தெரியுமா என்று பார்த்துச் சொல்" என்றார்.

உடனே சமையல்காரி ஆவலோடு அந்தப் படத்தை வாங்கிப் பார்த்து விட்டு, "ஓகோ! இது நம்முடைய கோபாலசாமியின் படமல்லவா! இது எங்கிருந்து உங்களுக்குக் கிடைத்தது?" என்றாள்.

பட்டாபிராம பிள்ளை, "இவருக்கும் உனக்கும் எப்படிப் பழக்கம்?" என்றார். சமையல்காரி, "இவரும் மன்னார் குடியில் இருந்து இந்த ஊரில் வந்து படித்துக் கொண்டிருப்பவர். இங்கே பக்கத்தில் உள்ள சாப்பாட்டுக் கடையில் இவர் சாப்பிட்டுவிட்டு எப்போதும் இங்கே தான் நம்முடைய சின்ன எஜமானரோடு கூடவே படித்துக் கொண்டிருப்பார்; இராத்திரி வேளையிலும் இங்கே தான் படுத்துக் கொள்வார். நம்முடைய சின்ன எஜமானர் காணாமல் போனதற்குப் பிறகு நான் பல தடவை, அந்தச் சாப்பாட்டுக் கடைக்குப் போய் இவரைப் பற்றி விசாரித்தேன். இவர் அங்கே சாப்பாட்டுக்கு வரவே இல்லையம். சோற்றுக் கடைக்காரரும் கவலைப்பட்டு இவரைப் பற்றி விசாரித்தேன். இவர் அங்கே சாப்பாட்டுக்கு வரவே இல்லையாம். சோற்றுக் கடைக்காரரும் கவலைப்பட்டு இவரைப் பற்றி அடிக்கடி என்னிடம் விசாரித்துக் கொண்டே இருக்கிறார். இவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு தான் எங்கேயாவது போயிருக்க வேண்டும். ஆனால், சேர்ந்தாற் போல இத்தனை நாள்கள் வரையில் இவர்கள் இதுவரையில் வீட்டுக்கு வராமல் வெளியில் இருந்ததே இல்லை. இரண்டொரு நாள்கள் எங்கேயாவது போனால், என்னிடம் தகவல் சொல்லிவிட்டுத்தான் போவார்கள். இந்தத் தடவை எவ்வித தகவலும் சொல்லாமல் போயிருக்கிறார்கள். எங்கேதான் போயிருப்பார்கள் என்பது தெரியவில்லையே!" என்றாள்.

பட்டாபிராம பிள்ளை, "கடைசியாக இவர்கள் இருவரும் எப்போது இவ்விடத்தில் சேர்ந்திருந்தார்கள்? போகும் போது இருவரும் ஒன்றாகவே சேர்ந்து போனார்களா?" என்று வினவினார்.

சமையல்காரி, "கடைசியாக சனிக்கிழமை காலையில் இவர்கள் இருவரும் இங்கே ஒன்றாக இருந்தார்கள். பத்து மணிக்கெல்லாம் நான் சின்ன எஜமானருக்குச் சாப்பாடு போட்டேன். சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகள் கலாசாலையில் ரஜா தினங்கள் ஆகையால், அந்த இரண்டு தினங்களிலும், நான் சின்ன எஜமானருக்குச் சாப்பாடு போட்ட பிறகு என்னுடைய ஜாகைக்குப் போய் பிறகு பகல் நாலு மணிக்குத் திரும்பி வருகிறது வழக்கம். அதன்படி சனிக்கிழமை காலையில் நான் சாப்பாடு போட்டு விட்டு எஜமானரிடம் சொல்லிக் கொண்டு என் ஜாகைக்குப் போனேன். இரண்டு நாழிகைக்குப் பிறகு கோபாலசாமி வீட்டு வாசலில் திறவு கோலை என்னிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டு, தாங்கள் எங்கேயோ நடக்கும் பாட்டுக் கச்சேரிக்குப் போவதாய்ச் சொல்லி விட்டுப் போய்விட்டார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும், அதன் பிறகு அவர்கள் திரும்பி வீட்டுக்கு வரவே இல்லை" என்றாள்.

பட்டாபிராம பிள்ளை, "அதிருக்கட்டும், இவர்கள் இருவரும் எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள் என்று சொன்னாயே; இவர்கள் ஒருவரோடு ஒருவர் உண்மையான பிரியத்தோடு இருந்தார்களா? இவர்களுக்குள் எப்போதாவது சண்டை அல்லது மனஸ்தாபம் ஏற்பட்டதை நீ பார்த்ததுண்டா? இந்த கோபாலசாமியின் சுபாவம் கபட சுபாவமா, அல்லது, ஒழுங்கான சுபாவமா?" என்றார்.

சமையல்காரி சிறிது சிந்தனை செய்து, "இவர்கள் இருவரும் எப்போதும் சிநேகமாகத் தான் இருந்தார்கள். ஆனால், அடிக்கடி இவர்கள் இருவரும் எதைப்பற்றியாவது வாக்குவாதம் செய்து ஒருவரிடத் தொருவர் கொதிப்பாகப் பேசிக் கொள்வதும் உண்டு. இரண்டொரு சந்தர்ப்பங்களில் இருவரும் ஒருவரிடத் தொருவர் முகங் கொடுத்து அன்னியோன்னியமாகப் பேசாமல் மனஸ்தாபமாக இருந்ததும் உண்டு. போன சனிக்கிழமைக்கு முந்திய நாள்

இரவில் கூட ஏதோ இவர்களுக்குள் பலமான வாக்குவாதம் நடந்தது. நம்முடைய சின்ன எஜமானரின் சுபாவம் எப்போதும் பெருந்தன்மையானது, அற்பபுத்தியே அவரிடம் இல்லை. பிறரிடம் அவர் கோபம் என்பதையே காட்டாமல் எல்லோரிடத் திலும் நிரம்பவும் தயாளமாகவும் காருண்யமாகவும் நடந்து கொள்வார். கபடம் என்பதே அவருக்குத் தெரியாது. ஆனால், இந்த கோபாலசாமியின் குணம் அதற்கு நேர் விரோதமானது. பொறாமை, கோபம், தான் என்ற அகம்பாவம், கபடம் இதெல்லாம் கொஞ்சம் அவரிடம் உண்டென்பதை நான் பல தடவைகளில் கண்டிருக்கிறேன். கோபாலசாமியிடத்தில் இப்படிப் பட்ட கெட்ட குணங்கள் கொஞ்சம் இருந்தாலும், சின்ன எஜமானர் அவரிடம் வைத்திருந்த பிரியத்திலும் மதிப்பிலும், அதை எல்லாம் பாராட்டாமல், அவரிடம் ஒரே மாதிரியாகவே இருந்து வந்தார்" என்றாள்.

அவ்வளவோடு அவர்களது சம்பாஷணை முடிந்தது. உடனே பட்டாபிராம பிள்ளை வந்திருப்பவர்களுக்கு ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கும்படி, அவளை உள்ளே அனுப்பி விட்டு வேலாயுதம் பிள்ளையை நோக்கி, "அண்ணா! கேட்டீர் களா இந்த அம்மாள் சொன்ன வரலாற்றை? இந்த கோபாலசாமி யின் குணாதிசயத்தைப் பற்றி இவள் சொன்ன தகவலை நாம் எண்ணிப் பார்த்தால், பெருத்த பணத் தொகையை எதிரிகள் இவனுக்கு லஞ்சம் கொடுத்திருந்தால், இவனுடைய புத்தி மாறிப் போகக் கூடியதென்றே படுகிறது. இவனைப் பற்றி நீங்கள் செய்த யூகம் சரியானதாகத் தோன்றுகிறது. சனிக்கிழமை காலையிலேயே இந்த கோபாலசாமி நம்முடைய பிள்ளையாண்டானை வஞ்சித்து அழைத்துப் போய் எதிராளிகளிடம் சிக்க வைத்து விட்டு ஒரு பெண் பிள்ளையையும் வேலைக்காரப் பெண் ஒருத்தியையும் அழைத்துக் கொண்டு எங்கள் பங்களாவிற்கு வந்திருக்க வேண்டும் என்பதே நிச்சயமான சங்கதியாகத். தோன்று கிறது. சரி; இருக்கட்டும். இவன் எங்கே தப்பினான்? வைத்திய சாலையில் தானே இருக்கிறான். டாக்டர்கள் இவன் எப்படியும் பிழைத்துக் கொள்வான் என்றே சொல்லுகிறார்கள். உடனே போலீசார்

இவனைச் சிறைச்சாலையில் அடைத்து நயத்திலோ பயத்திலோ உண்மையைக் கிரகித்து விடுவார்கள். இருக்கட்டும், நான் உடனே போலீஸ் கமிஷனரிடம் போய் இந்த வரலாறுகளை எல்லாம் தெரிவித்து விட்டு என் ஜாகைக்குப் போகிறேன். இன்று எனக்கு வழக்கப்படி காலை 11-மணி முதல் மாலை 41/2 மணி வரையில் கச்சேரி உண்டு. அங்கே போய்விட்டு நான் நேராக இங்கே வருகி றேன். அதற்குள் நீங்கள் ஸ்நானம் போஜனம் முதலியவற்றை முடித்துக் கொண்டு கொஞ்சம் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங் கள்" என்றார்.

வேலாயுதம் பிள்ளை, 'சரி அப்படியே செய்யுங்கள்' என்று கூறி, அவரை இரகசியமான ஓரிடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் திகம்பரசாமியாருக்கு எதிரிகள் பெட்டியில் நாகப்பாம்புகளை வைத்தனுப்பிய விவரத்தையும், அவர் அந்த அபாயத்தில் இருந்து சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டு, இறந்து போய் விட்டதாகத் தந்திரம் செய்திருப்பதையும் கூறியதன்றி, அந்த விஷயத்தை வேறு யாரிடமும் வெளியிடாமல் பரம ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்றும் எச்சரித்தார். அதுவுமன்றி, துரைத்தனத்தார் திகம்பரசாமியாரின் மரணத்தைப் பற்றி அதிசீக்கிரத்தில் விளம்பரம் வெளியிடுவார்கள் என்றும் கூறினார்.

அந்த எதிர்பாராத விபரீதச் செய்தியைக் கேட்டு இன்பமும் துன்பமும் அடைந்த பட்டாபிராம பிள்ளை முடிவாக அவரிடத்தி லும் கண்ணப்பாவிடத்திலும் அனுமதி பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார். போனவர் நேராக போலீஸ் கமிஷனரது பங்களாவை அடைந்து, வேலாயுதம் பிள்ளை முதலியோர் வந்ததைப் பற்றியும், கோபாலசாமியைப் பற்றி அவர் தெரிந்து கொண்ட வரலாறுகளையும் சவிஸ்தாரமாகக் கூறினார். கந்தசாமியோடு கூடவே இருந்து படித்து வந்தவனான அவனது சிநேகிதன் கோபாலசாமியே அவனுக்குக் கெடுதல் செய்ய எத்தனித்திருக்கிறான் என்பதைக் கேட்ட போலீஸ் கமிஷனர் அளவற்ற வியப்பும் மனக்குழப்பமும் அடைந்தவராய், "ஆகா! அப்படியா சங்கதி! என்ன உலகம் பாருங்கள்! இந்த உலகத்தில் பணம் செய்யும் வேலை எப்படி இருக்கிறது பார்த்தீர்

களா! எவ்வளவோ அன்னியோன்னியமாக நடந்து கொள்ளும் சிநேகிதன், அண்ணன், தம்பி, பெண்ஜாதி, தாய், தகப்பன் முதலியவர்கள் ஒருவரை ஒருவர் பகைக்கவும், வெறுத்து விலக்கவும், ஒருவரை ஒருவர் கொல்லவும் தூண்டத்தக்க மகா விபரீதமான ஒரு சக்தி இந்தப் பணத்தினிடம் அமைந்திருக்கிறது பார்த்தீர்களா! நீங்கள் சொல்லுகிறதைப் பார்த்தால், இந்த மன்னார் குடியாருடைய பகைவர்களின் புத்தி மகா யூகமாக வேலை செய்திருக்கிறது போலத் தோன்றுகிறது. அவர்கள் தங்களுடைய பணத்தையும் அபரிமிதமாக வாரி இறைக்கிறார்கள் போலிருக் கிறது. நல்ல வேளையாக இந்த ஒரு மனிதனாவது நம்முடைய வசத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். இல்லாவிட்டால் நமக்கு எவ்விதமான புலனும் தெரியாமல் போயிருக்கும். நேற்று மாலையில் நான் ஆஸ்பத்திரிக்குப் போய் அந்த கோபாலசாமி யைப் பார்த்த காலத்தில், டாக்டர் வந்து அவனுடைய உடம்பைப் பரீட்சித்துப் பார்த்தார். இந்த நான்கு தினங்களாய் அவன் ஆகாரம் என்பதே சாப்பிடவில்லையாம். அப்போதைக் கப்போது கண்கள் கொஞ்சம் திறந்து பிறகு மூடிக்கொள்ளுகின்றனவாம். நாடி வரவரத் தளர்ந்து கொண்டே போகிறதாம். காலில் இரண்டோர் இடங்களில் இருந்த வீக்கம் அநேகமாய்க் குறைந்து போயிருக்கிறது. அவனுடைய மண்டையில் பலமான அடிபட்டதனால், மூளை கலங்கிப் போயிருக்க வேண்டும் என்றும், அது இன்னம் சரியான நிலைமைக்கு வரவில்லை என்றும் டாக்டர் அபிப்பிராயம் தெரிவித்ததால், தலையின் மேல் காயம், அல்லது, வீக்கம் எதுவும் காணப்படவில்லை ஆகையால், ஊமைக் காயமாக தலையின் உள் பக்கத்தில் அடி தாக்கி இருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். அவனுடைய பொறி கலங்கிப் போயிருப்பதைச் சரிப்படுத்த அவர் ஏதேதோ சிகிச்சைகளையும் தந்திரங்களையும் செய்து வருகிறார். இதுவரையில், எதுவும் பலன் தரவில்லை. அவர் இன்னம் மூன்று தினந்தான் கெடு வைத்திருக்கிறார். அதற்குள் அவனுடைய மூளை சரியான நிலைமைக்கு வரா விட்டால், அதற்கு மேல் அவன் பிழைக்க மாட்டான் என்று டாக்டர் முடிவாகச் சொல்லி விட்டார். தெய்வாதீனமாக அவன் பிழைத்துக் கொண்டால், நம்முடைய வேலை சுலபமாக முடிந்து

போகும். அவன் இறந்து போவானாகில், பிறகு நம்முடைய பாடு அவஸ்தை தான். நான் மறுபடி இன்று காலையில் வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன். இப்போது அங்கே போவதற்கு ஆயத்தமானேன். அதற்குள் நீங்களும் வந்தீர்கள்" என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை, "சரி; அப்படி யானால் நானும் உங்களோடு கூடவே வருகிறேன். புறப்படுங்கள், நானும் அவனைப் பார்த்துவிட்டுப் போகிறேன்" என்றார்.

உடனே இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு நேராக ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கே இருந்த பெரிய டாக்டர் துரையைக் கண்டு கோபாலசாமியின் அப்போதைய நிலைமை யைப் பற்றி விசாரித்ததன்றி, அவரோடுகூடச் சென்று அவனை நேரிலேயே பார்த்தனர். அவனது நிலைமை முதல் நாள் மாலையில் இருந்ததைவிட அதிக கேவலமாக இருப்பதாகத் தோன்றியது. அவனுக்கு அப்போதைக்கப்போது பலவந்தமாக உள்ளே செலுத்தப்பட்ட சொற்ப அளவு பாலைத் தவிர, வேறு எவ்வித ஆகாரமும் இல்லாமையால், அவனது கையின் நாடி தளர்ந்து நாளுக்கு நாள் மெலிந்து பலவீனப்பட்டு வருவதாக டாக்டர் மறுபடியும் கூறினார். அதைக் கேட்டுக் கொண்ட பட்டாபி ராம பிள்ளை போலீஸ் கமிஷனரை அனுப்பிவிட்டு அவ்விடத்தில் இருந்து புறப்பட்டுத் தமது பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது மணி ஒன்பதரைக்கு அதிகம் ஆய்விட்டது ஆகையால், அவர் மனோன்மணியம்மாளிடம் சென்று அதிகமாய்ப் பேச அவகாசம் இல்லாமல் போய்விட்டது. அதுவுமன்றி, அவளுக்கும் அன்று காலை 10-மணி முதல் பரீட்சை ஆதலால், அவள் கலா சாலைக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருப்பாள் என்ற நினைவும் உண்டானது ஆகையால், பட்டாபிராம பிள்ளை அவளிடம் தாம் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை இரவில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்துக் கொண்டு, தமது ஸ்நானம், போஜனம் முதலியவற்றை முடித்துக் கொண்டு உடனே புறப்பட்டுத் தமது கச்சேரிக்குப் போய்விட்டார்.

காலையில் எழும்பூரில் இருந்து எட்டு மணி சுமாருக்குத் தமது பங்களாவை அடைந்த மனோன்மணியம்மாள் நேராகத் தனது

சயனக் கிரகத்திற்குள் நுழைந்து கட்டிலின் மீது சாய்ந்து கொண்டாள். அன்றைய பரீட்சையில் தான் எப்பாடு பட்டாயினும் தேறவேண்டும் என்ற மனவுறுதியோடு அவள் பல மாத காலமாய் இரவு பகல் உழைத்து உடம்பையும் மூளையையும் வதைத்துப் படித்து வந்திருந்தாளாயினும், எழும்பூரில் இருந்து திரும்பி தமது ஜாகைக்கு வருவதற்குள், அவளது உடம்பில் இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவித பாதை உண்டாகிவிட்டது. மனதில் பெருத்த வேதனையும் கவலையும் தோன்றிவிட்டன. தான் அரும்பாடுபட்டு தனது உயிரில் பெரும் பாகத்தையும் செலவிட்டு, உலகில் மற்ற சகலமான பாஷைகளிலும் சிலாக்கியமானதாய் எல்லோராலும் கருதப்படும் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக் கரைகண்டு, அதில் பொதிர்ந்து கிடக்கும் அற்புதங்களையும், உணர்ந்த ஞானத்தையும் பயின்று பெண்பாலார் பெறுதற்கு அரிதான பி.ஏ., பட்டத்தை சம்பாதிக்கப் போகும் தருணத்தில், தனது தந்தை இங்கிலீஷ் நாகரிகத்தையும், இங்கிலீஷ் பாஷை கற்றவரின் மேம்பாட்டையும் சிறிதும் அறியாதவர்களான சுத்த கர்னாடக மனிதரது வீட்டில் தன்னைக் கொண்டு போய் வாழ்க்கைப் படுத்தித் தனது வாழ்நாள் முழுதும் தன்னை வேதனைக் கடலில் ஆழ்த்தப் போகிறாரே என்ற கவலையும், மலைப்பும் அந்த மடந்தையின் மனத்தில் தோன்றி விட்டன ஆதலால், முன்னரே நிரம்பவும் தளர்வடைந்து துர்ப்பலமாய் இருந்த அவளது உடம்பு அப்படியே சோர்ந்து விழுந்து விட்டது. அவளது மனத்தில் சகிக்க இயலாத துயரமும் அழுகையும் எழுந்து அவளை மேற்கொள்ளத் தொடங்கி விட்டன. அடிக்கடி கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வழிந்தோடியது. அவளது கைகால் முதலிய அங்கங்கள் யாவும் பதறித் துடிக்க ஆரம்பித்தன. "ஆகா! என்ன ஆச்சரியம் இது! கடைசியில் என்னைக் கொண்டு போய் இப்படிப்பட்ட பாழ்நரகில் வீழ்த்துவதற்கா என் தகப்பனார் என்னை இவ்வளவு தூரம் படிக்க வைத்து, நான் மேலான விவேகத்தையும், ஞானத்தையும் அடையும்படி செய்தார். ஆகா! நான் இதுவரையில் கற்றுக் கொண்ட அற்புதமான விஷயங்களை எல்லாம் அடியோடு மறந்து மன்னார் குடியார் வீட்டில் போய் எப்போதும் அடுப்பங் கரையில் உட்கார்ந்து கொண்டு, ஆனா,

ஆவன்னா கூட அறியாத சுத்த மௌட்டீகமே வடிவாய் இருக்கும் வடிவாம்பாள், திரிபுரசுந்தரி யம்மாள் முதலியோருக்கு நான் அடங்கி அவர்கள் சொல்லுகிறபடி கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டிய நிலைமையை என் தகப்பனார் எனக்கு உண்டாக்கிக் கொடுக்க முயற்சி செய்கிறாரே. நான் இது வரையில் கட்டி வந்த மஸ்லின் ஆடைகளை நான் இவர்களுக்கு பயந்து விலக்கிவிட்டு, நிரம்பவும் கனமாகவும் படாடோபமாகவும் இருக்கும் பட்டுப் புடவைகளைக் கட்ட வேண்டுமாம். இல்லாவிட்டால், என்னை எல்லோரும் தாசிப் பெண் என்பார்கள். ஆண்பிள்ளைகளைக் கண்டால் பிளேக், காலரா முதலிய பயங்கரமான தொற்று வியாதிகளைக் கண்டு, மனிதர் அஞ்சி நடுங்கி விலகுவது போல, அப்பால் போய் ஒளிந்து கொள்ள வேண்டும். ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் ஆகிய எவரிடத்திலும் நான் வாயைத் திறந்து பேசாமல் மௌன விரதம் பூண்டு கொள்ள வேண்டும். அவர்களுக் கெதிரில் நான் உட்காரக் கூடாது. அவர்கள் போடும் சாப்பாட்டை நான் சாப்பிட வேண்டும். சே! இது கேவலம் அடிமைத்தனமே அன்றி வேறல்ல. சுயமதிப்பு, கண்ணியம், சுயேச்சை முதலிய அரும்பெரும் விஷயங்களை எல்லாம் நான் கற்கும்படி ஏற்பாடு செய்த என் தந்தை அவைகளை எல்லாம் விட்டு அவற்றிற்கு மாறான வாழ்க்கையை நான் ஏற்று என் ஆயிசு கால பரியந்தம் பாழ்நரகில் கிடந்து உழலுவதற்கல்லவா வழி தேடுகிறார். சே! என்ன கலியாணம் வேண்டியிருக்கிறது. இதை சுபகாரியம் என்று சொல் வதைவிட அசுபகாரியம் என்றே மதிக்க வேண்டும். ஒரு நாளும் நான் என் மனதார இந்தக் கலியாணத்திற்கு இணங்கப் போகிறதில்லை. என் தகப்பனார் இருக்கும் இருப்பைப் பார்த்தால், அவர் இந்த விஷயத்தில் ஒரே பிடிவாதமாக இருப்பார் போலத் தோன்றுகிறது. இருந்தாலும் நான் என்னால் கூடிய வரையில் அவருக்குச் சொல்லிப்பார்க்கிறேன். அவர் என் விருப்பத்தை அலட்சியம் செய்து என்னை அதே இடத்தில் கட்டிக் கொடுக்க எத்தனித்தால், நான் உடனே மெத்தையில் இருந்து கீழே விழுந்து உயிரை விட்டுவிடுகிறேன். அதுதான் நான் செய்யக்கூடிய காரியம்" என்று மனோன்மணியம்மாள் பலவிதமாக எண்ணமிட்டு மன்னார் குடியாரது சம்பந்தம் தனக்கு உதவாது என்ற விபரீதமான

முடிவிற்கு வந்து அளவற்ற விசனமும், சஞ்சலமும், மனக் குழப்பமும் அடைந்து ஓய்ந்து படுக்கையில் படுத்தபடியே இருந்துவிட்டாள். தனது குழப்பமான மன நிலைமையில்தான் பரீட்சைக்குப் போய், அவ்விடத்தில் சரியானபடி விடை எழுத முடியாதென்ற எண்ணம் தோன்றியது ஆகையால், அவள் அந்தப் பரீட்சைக்கு அடுத்த வருஷம் போகலாம் என்று தீர்மானித்துக் கொண்டு, அன்றைய தினம் போஜனத்தை நாடாமலும், கலாசாலைக்கே போகாமலும் இருந்து விட்டாள். வேலைக்காரி பன்முறை வந்து போஜனத்திற்கு வரும்படி அழைத்ததற்கு, தனக்கு வயிறு மந்தமாயிருப்பதாயும், தனக்கு மாலை வரையில் ஆகாரம் வேண்டாம் என்றும் மறுமொழி கூறிவிட்டு, கட்டிலே கதியாக இருந்து சஞ்சலக் கடலில் ஆழ்ந்து அன்றைய பகற் பொழுதைப் போக்கினாள். பட்டாபிராம பிள்ளை தமது கச்சேரி வேலைகளை முடித்துக் கொண்டு மாலையில் அதை விட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் கோபாலசாமியைப் பார்த்து, அவனது நிலைமையில் எவ்வித மாறுபாடும் ஏற்படாததை உணர்ந்து கொண்டு நேராக கோமளேசுவரன் பேட்டைக்குப் போய்ச் சேர்ந்தார். அன்றைய தினம் அவர் தனது கச்சேரியை விட்டுப் புறப்படுவதற்கு முன் டெலிபோன் யந்திரத்தின் மூலமாய்ப் போலீஸ் கமிஷனரோடு பேசிவிட்டு வந்திருந்தார் ஆதலால், கந்தசாமியைப் பற்றி அவர் வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு எவ்வித புதிய தகவலும் கூற இயலவில்லை ஆனாலும், அவர்கள் அன்றைய தினம் சௌகரியமாக போஜனம் முதலியவற்றை முடித்துக் கொண்டது முதலிய அவர்களது யோக க்ஷேமங்களைப் பற்றி விசாரித்தார். வேலாயுதம் பிள்ளையும் மற்றவர்களும் கந்தசாமியைப் பற்றி எவ்விதமான செய்தியும் தெரியாதிருந்தமை யாலும், தாம் எங்கே போய் அவனைத் தேடுவது என்பதை உணர மாட்டாத நிலைமையில் இருந்தமையாலும், அவர்களது விசனமும், கவலையும், மனவேதனையும், முகவாட்டமும் நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ந்து மலை போலப் பெருகிக் கொண்டே போயின ஆதலால், அவர்கள் இருந்த மகா பரிதாப கரமான நிலைமையைக் கண்ட பட்டாபிராம பிள்ளையும் அவர்க ளைப் போல நிரம்பவும் தத்தளித்து அவர்களுக்கு எவ்விதமான

தேறுதல் கூறுவதென் பதை அறியாமல் தடுமாறி, "எப்படியும் போலீசார் கூடிய சீக்கிரம் பிள்ளையாண்டானைக் கண்டு பிடித்து விடுவார்கள்" என்ற ஜோசிய வசனத்தைப் பன்முறை உப யோகித்து, அவர்களைப் பன்முறை தேற்றி விட்டு இரவு எட்டு மணி வரையில் அவர்களோடிருந்து அவ்விடத்தை விட்டுத் தமது பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்.

சேர்ந்தவர், காலை முதல் தமது புதல்வியோடு பேசாமல் இருந்தவர் ஆதலாலும், அவள் தனது பரீட்சையில் எப்படி மறுமொழி எழுதி இருக்கிறாள் என்பதை அறிய வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தவர் ஆதலாலும், அவர் நேராகத் தமது புதல்வியின் விடுதிக்குப் போய்ச் சேர்ந்து அவளைப் பார்க்க, அவள் தனது கட்டிலின் மேல் அலங்கோலமாகப் படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த காட்சி தென்பட்டது. அவள் பரீட்சைக்குப் போய் வந்த அலுப்பினால் அவ்வாறு தூங்குகிறாள் என்ற எண்ணம் உடனே அவரது மனதில் தோன்றியது ஆகையால், அவளை எழுப்பக் கூடாதென்றும், அவளோடு மறுநாட் காலையில் பேசிக் கொள்ளலாம் என்றும் தீர்மானித்துக் கொண்டவராய், அவர் தமது விடுதிக்குச் சென்று, தமது உடைகளை மாற்றிக் கொண்டு போஜனத்திற்குச் சென்ற காலத்தில், வேலைக்காரி அவளிடம் வந்து, "எஜமானே! குழந்தை காலை முதல் சாப்பிடவே இல்லை. வயிறு மந்தமாக இருக்கிற தென்று சொல்லிக் கொண்டே இருந்து, அப்படியே தூங்கிப் போய்விட்டது. நீங்கள் அதை எழுப்பி, கொஞ்சம் ஆகாரம் சாப்பிடும்படியாவது செய்ய வேண்டும்; அல்லது, டாக்டரை வரவழைத்து மருந்தாவது கொடுக்கச் செய்ய வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை திடுக்கிட்டு, மிகுந்த கலக்கமும் கவலையும் அடைந்து, "என்ன! காலையிலிருந்து இன்னமும் சாப்பிடவே இல்லையா? அப்படியானால் பரீட்சைக்குப் போகவில்லையா?" என்று பதைபதைப்பாக வினவினார்.

வேலைக்காரி, "காலை முதல் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை; பரீட்சைக்கும் போகவில்லை; அப்படியே படுத்த படுக்கையாக இருக்கிறது" என்றாள்.

பட்டாபிராம பிள்ளை, "என்ன விபரீதம் இது! எவ்வளவோ பாடுபட்டு வெகு காலமாகப் பரீட்சைக்குப் படித்தவள், அதற்குக் கூடப் போகவில்லை என்றால், அவளுடைய உடம்பின் நிலைமை சகிக்க முடியாததாக இருக்க வேண்டுமே, நீங்கள் பகலிலேயே இதை டெலிபோன் மூலமாக எனக்குச் சொல்லி இருக்கக்கூடாதா? நான் உடனே வந்து டாக்டரை வரவழைத்து மருந்து கொடுக்கச் செய்திருப்பேனே!" என்றார்.

வேலைக்காரி, " 'டெலிபோன் வழியாக உங்களுக்கு இந்தச் சங்கதியைத் தெரிவிக்கட்டுமா' என்று நான் குழந்தையைக் கேட்டதற்கு, 'வேண்டாம் பரவாயில்லை. சாயுங்காலத்திற்குள் உடம்பு சரியாய்ப் போய்விடும். அப்பாவுக்கு அநாவசியமான மனக்கவலையை உண்டாக்க வேண்டாம்' என்று சொல்லி விட்டது. அதனால் நான் அப்படிச் செய்யவில்லை" என்றாள்.

அதைக் கேட்டுக் கொண்ட பட்டாபிராம பிள்ளை மிகுந்த கவலையும் கலக்கமும் அடைந்தவராய் போஜனத்தை நாடாமல் அவ்விடத்தை விட்டு மறுபடி மனோன்மணியம்மாளின் விடுதிக்குப் போய்க் கட்டிலண்டை நின்றபடி, "அம்மா! அம்மா! மனோன்மணீ" என்று பன்முறை கூப்பிட; அந்த மடந்தை அப்புறம் இப்புறம் புரண்டு விழித்துக் கொண்டு தனது தந்தையின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து தனது கேசத்தையும் ஆடைகளையும் திருத்தி முகத்தைத் துடைத்துக் கொண்டாள். மின்சார விளக்கின் வெளிச்சம் பளிச்சென்று தாக்கிய தாகையால் அவளது கண்கள் கூசின. அவள் தனது முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள்.

உடனே பட்டாபிராம பிள்ளை, "அம்மா! உடம்பு என்ன செய்கிறது? நீ காலையிலிருந்து சாப்பிடவே இல்லையாம்; பரீட்சைக்கும் போகவில்லையாம். வயிறு மந்தமாய் இருந்தால், உடனே ஒரு டாக்டருக்குச் சொல்லி அனுப்பி, ஏதாவது மருந்து சாப்பிட்டால்; உடனே உடம்பு சௌக்கியமாய்ப் போகிறது. அதை விட்டு இப்படி படுத்துக் கொண்டிருக்கிறாயே! வேலைக் காரி டெலிபோன் மூலமாய் இதை எனக்குத் தெரிவிக்கலாம் என்று கேட்டதற்கும், வேண்டாம் என்று சொல்லி விட்டாயாம். போனது

போகட்டும். இப்போது உடம்பு எப்படி இருக்கிறது? கொஞ்ச மாவது வயிற்றில் பசி உண்டாயிருக்கிறதா? எழுந்து வா. நானும் இன்னும் சாப்பிடவில்லை. இரண்டு பேருமாகப் போய்ச் சாப்பிட லாம். ஏதோ பிடித்த வரையில் கொஞ்சம் சாப்பிடு" என்று உருக்கமாகவும் வாஞ்சையாகவும் கூறினார்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் தனது உண்மையான மனநிலைமையை அப்போது எப்படி வெளியிடுவது என்பதை உணராது சிறிது நேரம் தத்தளித்தாள். காலை முதல் அன்னம் தண்ணீர் முதலியவை எதுவுமன்றி இருந்தமையால், அவளது நுட்பமான தேகம் முற்றிலும் தளர்ந்து கட்டிலடங்காமல் துடித்த தாகையால், தான் தனது தந்தையோடு வாக்கு வாதம் புரிவதற்குப் போதிய வலுவில்லை என்பதை அவள் உணர்ந்து, தனது உண்மையான மனநிலைமையை மறுநாட் காலையில் அவரிடம் தெரிவிக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டதன்றி, அவர் சந்தேகிக்காது இருக்குமாறு, அப்போது போய்ச் சிறிதளவு போஜனம் செய்து கொள்ள நினைத்தவளாய் மெதுவாகக் கட்டிலை விட்டுக் கீழே இறங்கி "உடம்பு இப்போது கொஞ்சம் குணப்பட்டிருக்கிறது. வயிறு பசிப்பது போலவும் இருக்கிறது. கொஞ்சம் சாப்பிட்டுப் பார்க்கலாம்" என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டு நடக்கத் தொடங்கினாள்.

உடனே தந்தையும் புதல்வியும் சமையலறைக்குச் சென்றனர். பட்டாபிராம பிள்ளை வழக்கப்படி தமது போஜனத்தை முடித்துக் கொண்டார்; மனோன்மணியம்மாளுக்கு அவளது மனவேதனை யில் போஜனத்தின் மேல் அதிக விருப்பம் ஏற்படவில்லை ஆதலால், அவள் சொற்பமாக மிளகு ரசமும் அன்னமும் உட்கொண்டாள். அவளது தேகஸ்திதி கெட்டிருக்கையில், தாம் பல கேள்விகள் கேட்டு அவளை வருத்தக் கூடாதென்று நினைத்த அவளது தந்தை அவளிடம் அதிகமாய் வார்த்தை ஆடாமல், மிகுந்த வாத்சல்யத்தோடு அவளை உண்பித்து அழைத்து வந்து மறுபடியும் படுக்கையில் சயனிக்கச் செய்து விட்டு, தாமும் போய்த் தமது சயனத்தை அடைந்தார்; அந்த இரவு எவ்வித விசேஷ சம்பவமும் இன்றிக் கழிந்தது.

மறுநாட் காலையில் பட்டாபிராம பிள்ளை எழுந்து தமது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு மனோன்மணியம்மாளது தேக நிலைமையைப் பற்றி விசாரிக்கும் பொருட்டு அவளது விடுதிக்குச் சென்றார். அவளும் எழுந்து படுக்கையிலேயே சாய்ந்த படி உட்கார்ந்திருந்தாள் ஆனாலும், அவளது முகம் மிகுந்த வாட்டத்தையும் அளவற்ற விசனத்தையும் மனத் தளர்ச்சியையும் தோற்றுவித்தது. அதைக் கண்ட அவளது தந்தை மிகுந்த கவலையும் கலக்கமும் அடைந்து அவளிடம் நெருங்கி, "மனோன் மணீ! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? டாக்டரை அழைக்கட்டுமா?" என்று வாஞ்சையோடு வினவினார்.

மனோன்மணியம்மாள் சிறிதும் உற்சாகமும் முகமலர்ச்சியும் அற்றவளாய், "உடம்பில் நோய் ஒன்றுமில்லை. மனசு தான் நோய் கொண்டிருக்கிறது. அதற்கு எந்த டாக்டர் மருந்து கொடுக்கப் போகிறார். மனசுக்கு மனசே டாக்டர்" என்று நிரம்பவும் விரக்தியாக மறுமொழி கூறினாள்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை ஒருவித வியப்பை அடைந்தார் ஆனாலும், முதல் நாள் தான் பரீட்சைக்குப் போக இயலாமல் போனது பற்றி, அவள் அப்போது விசனமுற்று வருந்துகிறாள் என்று தீர்மானித்துக் கொண்டவராய், "அம்மா! எதற்காக உன் மனசு நோய் கொள்ள வேண்டும்? இந்தப் பரீட்சை போனால், இதனால் குடியே முழுகிப் போய்விட்டதா. வெறும் பெருமைக்காகவும், ஆசைக்காகவும், உன்னை நான் இந்தப் பரீட்சைக்குப் போகச் சொன்னதே யன்றி, இந்தப் பட்டத்தை நீ இந்த வருஷமே சம்பாதித்துக் கொள்ளாவிட்டால், உனக்கு உத்தி யோகத்தில் சம்பள உயர்வு இல்லாமல் போய் விடுமா? இந்த வருஷத்தில் இல்லாவிட்டால், அடுத்த வருஷத்தில் நீ பரீட்சைக்குப் போனால் அந்தப் பட்டம் கிடைக்கிறது. உடம்பல்லவா பிரதானம். உடம்பு அசௌகியப்பட்டுப் போனால், அந்த நிலைமையில் யார் தான் பரீட்சைக்குப் போவார்கள்" என்று உருக்கமாகவும், வாஞ்சையாகவும் கூறினார்.

உடனே மனோன்மணியம்மாள், "அடுத்த வருஷந்தான் நான் எதற்காக இந்தப் பரீட்சைக்குப் போக வேண்டும்? பரீட்சைக்குப்

போகவில்லையே என்று நான் விசனப்படவில்லை. இத்தனை வருஷ காலமாக இந்தப் பரீட்சையை உத்தேசித்து என் உடம்பையும் மூளையையும் ஏன் சித்திரவதை செய்து கொண்டேன் என்ற விசனந்தான் என்னை வதைக்கிறது. அன்றைய தினம் கொடி முல்லையம்மாள் வந்து சொன்ன போது, நமக்கு அவள் மேல் கோபம் வந்ததே; அவள் சொன்னதெல்லாம் உண்மை என்பது இப்போது நன்றாகத் தெரிகிறது. என்னுடைய இங்கிலீஷ் படிப்பும், பி.ஏ. பட்டமும் மன்னார்குடியார் வீட்டில் ஒரு காசுக்குக் கூட உபயோகப்படப் போகிறதில்லை. நான் கற்றுக் கொண்டதை எல்லாம் அடியோடு மறந்து, கேவலம் அடிமையின் குணங்களை அணிந்து கொண்டாலன்றி என்னுடைய வாழ் நாள் சுகத்தையாவது சந்தோஷத்தையாவது காணப் போகிறதில்லை. அந்த பாஷையைப் படித்து அதில் உள்ள மேலான தத்துவங்களை உணர்ந்து உயர்ந்த மனப்போக்கை அடைந்தபின், திடீரென்று பாதாள லோகத்தில் விழுந்து அடிமை நிலைமையை அடைவது எளிதான காரியமா? ஆதிமுதலே என்னை நீங்கள் இந்தப் படிப்பில் விடாமல், அடிமைத் துறையில் பழக்கி இருந்தால், நான் இந்நேரம் அந்த அம்சத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பேன். என் மாமனார் வீட்டிற்குப் போனவுடன் எனக்கு அவர்கள் பி.ஏ., எம்.ஏ. முதலிய பட்டங்களை எல்லாம் கொடுப்பார்கள்" என்று நிரம்பவும் மனக்கசப்போடு கூறினாள். அதைக் கேட்ட பட்டாபி ராம பிள்ளை அப்போதே அவளது மனநிலைமையை உள்ளபடி யூகித்தறிந்தார். மன்னார் குடியார் கர்னாடக மனிதர் போல இருப்பதைக் கண்டு மனோன்மணியம்மாள் வெறுப்படைந்து, அவர்களது வீட்டில் வாழ்க்கைப்பட மனமற்றவளாய் அவ்வாறு கூறுகிறாள் என்றும், அந்த விசனத்தினாலேயே அவள் முதல் நாள் போஜனம் செய்யாமலும் பரீட்சைக்குப் போகாமலும் இருந்திருக்கி றாள் என்றும் எண்ணிக் கொண்டார். அவளது மனத்தை நயமாக வும், படிப்படியாகவும் திருப்ப வேண்டுமன்றி, முரட்டுத் தனத்தை யும் கோபத்தையும் காட்டி, அவளைத் திருப்புவது தவறு என்று நினைத்த பட்டாபிராம பிள்ளை, மிகுந்த வாஞ்சையும் உருக்கமும் தொனித்த குரலில், "அம்மா மனோன்மணி! இதற்காகவா நீ விசனப்படுகிறாய்! எனக்கு உன்னைத் தவிர இந்த உலகத்தில் அருமையான பந்து வேறே யாராவது இருக்கிறார்களா? நான் தேடி

வைத்திருக்கும் அபாரமான செல்வமும், இனி தேடப் போகும் செல்வமும் உன்னைச் சேர்ந்தவை அல்லவா. அவ்வளவு செல்வத்திற்கும் உன்னை எஜமானியாக்கப் போகும் நான் உன்னைக் கேவலம் அடிமை நிலைமையில் கொண்டு போய் அமர்த்துவேன் என்று நினைத்தாயா? இந்த அற்ப விஷயத்தை அறிந்து கொள்ள மாட்டாத மூடன் என்று நீ என்னை மதிக்கிறாயா? அப்படி நினைக்காதே. இதோ அந்த வடிவாம்பாள் இருக்கிறாளே; அவள் எப்பேர்ப்பட்ட பெரிய மனிதருடைய பெண் என்பது உனக்குத் தெரியுமா? அவளுடைய தகப்பனாருக்கு வருஷ வருமானம் மாத்திரம் ஒரு லட்சம் ரூபாய் வருகிறது. அவர்களுக்கு இவளைத் தவிர வேறே சந்ததியே இல்லை. எல்லாச் சொத்தும் இவளையே சேரப் போகிறது. அவர்களுடைய பெண் இந்த மன்னார் குடியார் வீட்டில் இருந்து வாழவில்லையா? அவளை அவர்கள் அவமரியாதையாக நடத்தினால், அந்தப் பெண் அவர்களுடைய வீட்டில் உள்ள மற்றவர்களிடத்தில் அவ்வளவு அந்தரங்கமான பிரியத்தோடு இருந்து வருவாளா? அவர்கள் தக்க பெரிய மனிதர்கள் அல்லவா; தங்களுடைய நாட்டுப் பெண்களை அடிமை போல நடத்தி அவமானப்படுத்துவார்களா? வெளிப்பார்வைக்கு அவர்கள் கர்னாடக மனிதர்கள் போல இருக்கிறார்களே அன்றி, குணத்தில் தங்கக் கம்பியல்லவா; மற்றவர்களிடம் அவர்கள் வைக்கும் பிரியத்தையும், காட்டும் மரியாதையையும், நீ கொஞ்ச நேரம் அவர்களோடு கூட இருந்து பழகினால், நீ அவர்களை தெய்வம் என்றே கொண்டாடுவாய். கிட்ட நெருங்கிப் பழகாமல், தூரப் பார்வையிலிருந்தே மனிதருடைய குணத்தைப் பற்றி தவறான அபிப்பிராயம் கொள்வது தர்மமாகாது. நீ இது வரையில் இங்கிலீஷ் பாஷை கற்றதனால், குடி முழுகிப் போகாது. எந்த பாஷையானால் என்ன? எதிலும் நல்ல நடத்தையும், நல்ல விவேகமும், நல்ல குணமும் முக்கியமாக போதிக்கப்படுகின்றன. எதிலும் ஸாரத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு சக்கையை விலக்குவதே விவேகிகளுக்கு அழகு. வீணாக ஏன் நீ உன் மனசை வதைத்துக் கொள்ளுகிறாய்? மூடர்களாக இருந்தால் பயப்பட வேண்டியது தான். உன்னைப் போன்ற புத்திசாலிகள் அயலாருடைய மர்மத்தைக் கொஞ்சம்

கவனிப்பாகப் பார்த்து அதற்குத் தகுந்தபடி நடப்பது ஒரு பெரிய காரியமா? உன்னை அவர்கள் அடிமை போல நடத்த மாட்டார்கள். நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே அம்மா!" என்று நிரம்பவும் இதமாகக் கூறினார்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் சிறிதும் ஆறுதலடையாத வளாய், "நீங்கள் பொதுப்படையாகப் பேசுகிறீர்கள். இவ்வளவு பெரிய தனவந்தராய் இருப்பவர்கள், இன்னொரு பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணை மரியாதையாகத் தான் நடத்துவார்கள் என்ற யூகமே தவிர, உண்மையில் அவர்கள் எப்படிப்பட்ட மனிதர்களோ என்பது நெருங்கிய பழக்கத்தினால் தான் தெரியும். நான் அவர்களோடு அதிகமாய்ப் பழகினால், அவர்களிடம் இருக்கும் தவறுகளை எடுத்துச் சொல்வேன். இப்போது பழகாமை யால் அதிகமாய் எதையும் எடுத்துச் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம். அது போல அவர்கள் அபாரமான செல்வம் வாய்ந்த தனிகர்களாயிற்றே; அவர்கள் எல்லோரும் ஓர் இரவு முழுதும் மூன்றாவது வகுப்பு வண்டியில் ஆடு மாடுகள் அடைபடுவது போல அடைபட்டு வந்திருக்கிறார்களே. லோபிக் குணத்தினால்தானே அவர்கள் இப்படி வந்திருக்கிறார்கள். நானும் அவர்களோடு வந்திருந்தால், அதே வகுப்பில் தானே நானும் வரவேண்டும். என் ஆயிசு காலத்தில் நான் அப்படிப்பட்ட கஷ்டம் அடைந்ததுண்டா? அதை மாத்திரம் நீங்கள் சொல்லி விடுங்கள். நான் மற்ற விஷயங்களைப் பின்னால் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றாள்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை சந்தோஷத்தோடு புன்னகை செய்து, "அம்மா! அந்த விஷயத்தில் உன்னைப் போல நானும் அவர்களைப் பற்றி முதலில் தவறான அபிப்பிராயம் கொண்டேன். நடந்த விஷயத்தை அவர்கள் சொன்ன பிறகு உண்மை தெரிந்தது. அவர்கள் முதல் வகுப்பு டிக்கெட்டுகளே வாங்கிக் கொண்டு மாயவரம் வரையில் முதல் வகுப்பில் வந்தார்களாம். மாயவரத்தில் வந்து வண்டி மாறி மெயிலில் ஏறும்போது, முதலாவது வகுப்பிலும், இரண்டாவது வகுப்பிலும் இடமே இல்லையாம். மூன்றாவது வகுப்பில் மாத்திரம் இடம்

அகப்பட்டதாம். அவசர சந்தர்ப்பத்தைக் கருதி அவர்கள் மூன்றாவது வகுப்பில் ஏறிக் கொண்டு வந்தார்களாம்" என்றார்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் வியப்பும் சந்தேகமும் கொண்டு, "அப்படி நடந்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை. கௌரதைக்காக அவர்கள் அப்படிச் சொல்லிக் கொள்ளுகிறார்கள் போலிருக்கிறது" என்றாள்.

பட்டாபிராமபிள்ளை, "இல்லை. டிக்கெட்டுகளை அவர்கள் ஸ்டேஷனில் திருப்பிக் கொடுத்த போது நான் கூடவே இருந்து என் கண்ணாலேயே பார்த்தேன். அவர்கள் முதல் வகுப்பு டிக்கெட்டுகளையே கொடுத்தார்கள். இல்லாவிட்டால், அந்த வழியாக வெளியில் விடுவார்களா" என்றார்.

மனோன்மணியம்மாள் அந்த விஷயத்தில் மன்னார்குடியாரைப் பற்றி தான் கொண்ட கெட்ட அபிப்பிராயம் தப்பானது என்று உடனே உணர்ந்தாள் ஆயினும், தான் மன்னார்குடியார் வீட்டில் வாழ்க்கைப் படக்கூடாது என்று கொண்ட உறுதியை மாத்திரம் தளர விடாதவளாய், "என்னவோ எல்லாம் நடக்க நடக்கத் தானாகவே விளங்கிப் போகிறது. நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்து வெளித் தோற்றத்திற்காக அவர்கள் முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கி வந்திருக்கலாம். என் மனசில் அவர்கள் நமக்குத் தகுந்தவர்கள் அல்ல என்று தானாகவே ஓர் எண்ணம் உண்டாகி உறுதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. என் மனப் போக்குக்கு விரோதமான காரியம் நடக்குமானால் என் உயிர் அதிக காலம் இந்த உடம்பில் நிலைத்திருக்காதெனத் தோன்றுகிறது. நான் வேறு அதிகமாய் உங்களிடம் சொல்ல இஷ்டப் படவில்லை. அவ்வளவே முடிவு" என்றாள்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை, "அம்மா! முடிவில் எல்லாம் நன்மையிலேயே கொண்டு போய்விடும். வீணில் கவலைப்பட்டு மனசைப் புண்படுத்திக் கொள்ளாதே. இன்றாவது நீ எழுந்து வழக்கப்படி சாப்பிட்டு உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். எனக்கு நேரமாகிறது. நான் ஆஸ்பத்திரி, கோமளேசுவரன் பேட்டை முதலிய இடங்களுக்குப் போய் வந்து

கச்சேரிக்குப் போக வேண்டும்" என்று கூறிய பின், அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டார். அவ்வாறு புறப்பட்டவர் முதல் நாளில் செய்தது போல போலீஸ் கமிஷனருடன் ஆஸ்பத்திரியை அடைந்து கோபாலசாமியைப் பார்த்து அவனது நிலைமையைப் பற்றி டாக்டர்களிடம் விசாரிக்க, அவர்கள் சந்தோஷகரமான செய்தி எதையும் கூறவில்லை. முதல் நாளில் இருந்ததைவிட, அவனது நிலைமை கேவலப்பட்டிருந்ததாகவும், அவன் பிழைப்பது துர்லபம் என்றும் கூறினர். அந்தத் தகவலைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை மிகுந்த கவலையும் கலக்கமும் கொண்டவராய்ப் போலீஸ் கமிஷனரோடு சிறிது நேரம் சம்பாஷணை புரிந்திருந்த பின்னர் அவரை அனுப்பிவிட்டு வேலாயுதம் பிள்ளையின் மாளிகையை அடைந்து கோபாலசாமியின் நிலைமையைத் தெரிவித்ததன்றி, அவர்களது யோக க்ஷேமங்களை விசாரித்த வண்ணம் அவ்விடத்தில் ஒரு நாழிகை காலம் வரையில் அவர்களோடு சம்பாஷணை புரிந்து கொண்டிருந்தார். கந்தசாமி எங்கே இருக்கிறான் என்பதைப் பற்றி எவ்விதமான தகவலும் தெரியாமல் இருந்ததானாலும், கோபாலசாமி பிழைக்க மாட்டான் என்ற செய்தியைக் கேட்டதனாலும், வேலாயுதம் பிள்ளையும் மற்றவர்களும் தாங்க ஒண்ணாத விசனமும் கவலையும் கலக்கமும் அடைந்து தளர்ந்து உட்கார்ந்து போய் விட்டனர் ஆதலால், பட்டாபிராம பிள்ளை அவர்களுக்குப் பலவகையில் ஆறுதல் கூறிய பின் அவ்விடத்தை விட்டுத் திரும்பித் தமது பங்களாவிற்கு வந்து, தமது ஸ்நானம் போஜனம் முதலியவற்றை முடித்துக் கொண்டு வழக்கப்படி தமது கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார். அன்று மாலையிலும், மறுநாளாகிய வெள்ளிக்கிழமை காலையிலும், அவர் வைத்திய சாலைக்குப் போய் கோபாலசாமியின் நிலைமையைப் பற்றி மிகுந்த கவலையோடு விசாரிப்பதும், போலீஸ் கமிஷனரிடம் போய் அவருக்கு வந்திருக்கும் தகவல்களைத் தெரிந்து கொண்டு, அவருக்குப் பற்பல யோசனைகளைச் சொல்லுவதும், வேலாயுதம் பிள்ளை யின் ஜாகைக்குப் போய் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகத்தக்க தைரிய மொழிகளைக் கூறி அவர்களைத் தேற்றுவதுமாய் இருந்தனர்.

வெள்ளிக்கிழமை பகல் நான்கு மணி இருக்கலாம்; அவர் தமது கச்சேரியில் இருந்து தமது உத்தியோக அலுவல்களைக் கவனித்திருந்த சமயத்தில், அவருக்குப் பக்கத்தில் இருந்த டெலிபோனில் கணகணவென்று மணியடித்துக் கொண்டது. யாரோ தன்னோடு பேச விரும்புவதை உணர்ந்த பட்டாபிராம பிள்ளை உடனே டெலிபோனை எடுத்து வைத்துக் கொண்டு "யார் என்னைக் கூப்பிடுகிறது?" என்று வினவினார். டெலிபோன் வழியாகப் பேசிய மனிதர், "ஐயா! தாங்கள் கலெக்டர் பட்டாபிராம பிள்ளைதானா" என்றார்.

கலெக்டர், "ஆம், நீங்கள் யார்?" என்று வினவினார். மற்றவர், "நான் ஒரு போலீஸ் ஜெவான்; எழும்பூர் மாஜிஸ்டிரேட் கச்சேரியைச் சேர்ந்த சப் ஜெயிலிலிருந்து நான் இப்போது உங்களுக்கு இந்தச் செய்தி அனுப்புகிறேன்" என்றார். கலெக்டர், "ஓகோ! அப்படியா! சரி; என்ன செய்தி? காணாமற்போன பையனைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?" என்று மிகுந்த ஆவலோடு வினவினார்.

அந்த மனிதர், "இல்லை. இது வேறே விஷயம். இந்த சப்ஜெயிலில் ஒரு புதிய கைதி வந்திருக்கிறான். சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தில் நேற்று ராத்திரி படுத்திருந்த இவன் தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த ஒரு வழிப்போக்கருடைய கை விரலில் இருந்த வைர மோதிரத்தைக் கழட்டி வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி விட்டானாம். அந்தத் திருட்டுக் குற்றத்திற்காக இவனைப் பிடித்து இங்கே அடைத்திருக்கிறார்கள். அவனிடம் நான் தனியாகப் பேசி, அவனுடைய மர்மத்தை எல்லாம் தந்திரமாக விசாரித்து அறிந்த காலத்தில், அவன் உங்களைப் பற்றி முக்கியமான ஒரு செய்தி தெரிவித்தான். கும்பகோணத்தில் உள்ள உங்கள் விரோதி ஒருவர் அவனை இங்கே அனுப்பினாராம். அவனுக்குத் துணையாக இன்னம் பல ஆள்கள் வந்திருக்கிறார்களாம். உங்கள் வீட்டில் இன்று உங்கள் பெண்ணுக்கு நிச்சய தார்த்தம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறீர்களாம். அந்த முகூர்த்தம் நடக்காமல் செய்துவிடவோ, அல்லது, உங்களுக்கும், உங்களுடைய சம்பந்தி வீட்டாருக்கும் ஏதேனும் கெடுதல்

செய்யவோ அவர்கள் எல்லோரும் வந்திருப்பதாகத் தெரிகிறது. உங்கள் சம்பந்தி வீட்டார் கோமளேசுவரன் பேட்டையில் இறங்கி இருக்கிறார்களாம். இந்த முரட்டு மனிதருடைய தலைவனான அவன் பிடிபட்டுப் போயிருந்தாலும், மற்றவர்கள் எப்படியும் தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவார்கள் போலத் தோன்றுகிறது. ஆகையால், நீங்கள் இன்று இரவு நிரம்பவும் ஜாக்கிரதையாக இருங்கள். கோமளேசுவரன் பேட்டையில் உள்ளவர்களை உங்கள் பங்களாவிற்கே அழைத்துக் கொள்வதோடு, இதைப் போலீஸ் கமிஷனருக்குத் தெரிவித்து, 50 போலீஸ் ஜவான்களை வருவித்து உங்கள் பங்களாவிற்கு இன்று இரவு முழுதும் காவல் போட்டு வையுங்கள். இது விஷயத்தை அசட்டை செய்தால், உங்களுக்குப் பெருத்த அபாயம் நேருவது நிச்சயம். நான் மறுபடியும் அந்தக் கைதியிடம் பேச்சுக் கொடுத்து விவரமான செய்திகளை எல்லாம் அவனிடத்தில் இருந்து கிரகித்து மறுபடியும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆகையால் நீங்களாவது, போலீஸ் கமிஷனராவது இங்கே வரவும் கூடாது, இந்தக் கைதிக் கெதிரில் இந்தப் பிரஸ்தாபத்தையே எடுக்கவும் கூடாது. இவனிடத்தில் இருந்து நான் கிரகித்த விஷயத்தை மற்றவருக்குத் தெரிவித்திருக்கிறேன் என்பது இவனுக்குத் தெரிந்தால், இவன் அதற்கு மேல் எச்சரிப்படைந்து தன்னைப் பற்றி எந்தத் தகவலும் வெளியிட மாட்டான். ஆகையால், நாம் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவசரம், அவசரம், அவசரம். ஏமாறினால் அபாயம் சம்பவிப்பது முக்காலும் திண்ணம். மாஜிஸ்டிரேட் கைதிகளைப் பார்க்க இதோ வருகிறார். ஆகையால், நான் இங்கே நின்று மேலும் உங்களோடு பேச முடியவில்லை; நான் போகிறேன். மறுபடி உங்களை உங்களுடைய வீட்டில் இருக்கும் டெலிபோன் வழியாக கூப்பிடுகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை, "ஐயா! உங்களுடைய பெயர் என்ன?" என்றார்.

அதற்கு யாதொரு மறுமொழியும் கொடாமல் அந்த மனிதர் டெலிபோனை மூடிவிட்டு அப்பால் போய்விட்டது தெரிந்தது. அந்த மனிதர் கூறிய விபரீதமான செய்தியைக் கேட்டதனால் பட்டாபிராம பிள்ளையின் மனம் மிகுந்த கலவரமும் கவலையும்

கொண்டு வருந்தியது ஆதலால், அவர் அப்படியே சிறிது நேரம் தமது ஆசனத்தில் இருந்தபடி ஆழ்ந்து சிந்தனை செய்தார். அவரது தேகம் பதறிக் கொண்டிருந்தது. மனம் இன்னதென்று விவரிக்க இயலாத பெருத்த சஞ்சலத்தினால் உலப்பப்பட்டபடி இருந்தது. தாம் எவ்விதமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அவர் ஒருவித முடிவிற்கு வந்தவராய், மறுபடி டெலிபோனண்டை போய், அதைத் தமது பங்களாவில் இருந்த டெலிபோனோடு சேர்க்கச் செய்து, அவ்விடத்தில் இருந்த மனோன்மணியம்மாளை அழைத்து, சற்று நேரத்திற்கு முன் போலீஸ் ஜெவான் தமக்குத் தெரிவித்த விபரீதச் செய்தியை அவளிடம் கூறியதன்றி, தாம் உடனே போலீஸ் கமிஷனரிடம் போய் அன்றைய மாலையில் இருந்து இரவு முழுதும் தமது பங்களாவைப் பாதுகாப்பதற்கு ஏராளமான ஜெவான்களை அனுப்பச் செய்து விட்டு, நேராக கோமளேசுவரன் பேட்டைக்குப்போய், வேலாயுதம் பிள்ளை முதலியோரை அழைத்துக் கொண்டு வரத் தீர்மானித்திருப்பதாகவும் கூறி முடித்த பின், தமது கச்சேரியை விட்டுப் புறப்பட்டு நேராக போலீஸ் கமிஷனரது கச்சேரியை நோக்கிப் போய்விட்டார்.

தனது தந்தை தெரிவித்த செய்தியைக் கேட்டவுடன் மனோன்மணியம்மாள் திடுக்கிட்டு மிகுந்த கிலியும் குழப்பமும் அடைந்து விட்டாள். கொடிமுல்லையம்மாளும் கோபாலசாமியும் வந்திருந்த அன்றைய தினம் இரவில் பல முரட்டு மனிதர்கள் தங்களது பங்களாவில் நுழைந்து வேலைக்காரர்களையும் டலாயத்துகளையும் அடித்து அட்டூழியம் செய்து விட்டுப் போனது அவளது மனதில் நன்றாகப் பதிந்து அப்போதே நடப்பது போல இருந்தமையால், மறுபடியும் அவர்கள் வந்து தங்களுக்கு எவ்விதமான பொல்லாங்கை இழைப்பார்களோ என்ற திகிலும் நடுக்கமும் உண்டாகி விட்டன. அதனால் ஏற்பட்ட கலக்கத்தைக் காட்டிலும், வேலாயுதம் பிள்ளை முதலியோர் தமது பங்களாவிற்கே வந்து விடப் போகிறார்களே என்ற பயமும், அவர்கள் தனது நடையுடை பாவனைகளில் எவ்விதமான குற்றங்களைக் கண்டு தன்னை தூஷிப்பார்களோ என்ற கவலையும் நூறு மடங்கு அதிகமாக எழுந்து அவளை வதைக்கத் தொடங்கின. முன் தடவையில்

எதிரிகளைச் சேர்ந்த முரட்டு மனிதர்கள் நடு இரவில் திடீரென்று வந்தமையால், தாங்கள் அஜாக்கிரதையாக இருக்க நேர்ந்து விட்ட தென்றும், இன்றைய தினம் முன்னாக எச்சரிக்கப் பட்டிருப்பதால், தனது தந்தை தக்க போலீஸ் பந்தோபஸ்துடன் வருவார் ஆதலால், அந்த முரடர்களால் தங்களுக்கு இரண்டாவது தடவை எவ்விதக் கெடுதலும் நேராதென்றும் அவள் சிறிது நேரத்தில் யூகித்துக் கொண்டாள். ஆகவே, அவளது கவலையும், கவனமும் முக்கியமாக வேலாயுதம் பிள்ளை முதலியோரது வருகையைப் பற்றியதாகவே இருந்தன. தனக்குக் கலியாணமான பிறகு வேலாயுதம் பிள்ளை வீட்டார் தன்னை அன்பாகவும் மரியாதை யாகவும் நடத்துவார்கள் என்று தனது தந்தை முதல் நாள் காலையில் தனக்கு உறுதி கூறினார் ஆனாலும், அவளது மனம் சமாதானம் அடையாமல், இரண்டு தினங்களாய்த் தாமரை இலை நீர்த்துளி போலத் தத்தளித்துக் கொண்டே இருந்தது. தான் எப்படியாவது முயன்று அந்தக கலியாணம் நடவாவிதம் தடுத்து விட வேண்டும் என்ற எண்ணமே அவளது மனத்தில் அடிக்கடி தோன்றி உறுதிப்பட்டு வந்தது. தனது தந்தை தன்மீது கோபங் கொள்ளாதபடி நயமாக அவரைத் தனது வழிக்குத் திருப்புவதற்கு தான் எவ்வித தந்திரம் செய்யலாம் என்று சிந்தித்த வண்ணமாய் இருந்தாள்; வெள்ளிக்கிழமையாகிய அன்றைய தினம் தனக்கு நிச்சயதார்த்தம் நடத்த அவர்கள் தீர்மானித்திருந்தது தற்செயலாக எப்படி நின்று போய்விட்டதோ, அது போலவே, அந்தக் கலியாண ஏற்பாடும் எப்படியாவது மாறிப் போக வேண்டும் என்று அவள் தியானம் செய்தபடி, தனது பசி தாகங்களை அதிகமாய்ப் பொருட்படுத்தாமல் படுத்திருந்த சமயத்தில் தனது தந்தை இடத்திலிருந்து அந்த விபரீதச் செய்தி வரவே, "ஆகா! நம்முடைய தகப்பனார் மன்னார்குடியாரை இன்னம் கொஞ்ச நேரத்தில் இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடுவாரே! உடனே அவர்கள் வந்து என்னைப் பார்ப்பார்களே! நான் அவர்களிடம் கொண்டுள்ள அருவருப்பு எப்படியும் வெளிபட்டுப் போகுமே! நான் என்ன செய்யப் போகிறேன்! அவர்களிடம் நான் அவமரியாதையாக நடந்து கொண்டால் என் தகப்பனாருக்கு என் மேல் கோபமும் மனஸ்தாபமும் உண்டாகுமே! நான் உடுத்திக்

கொண்டிருக்கும் இந்த வெள்ளைப் புடவையைக் கண்டால், இவர்களுக்கும், எவளாவது ஒரு தாசிப் பெண்ணின் நினைவல்லவா உண்டாகும்! ஆகா! என்ன நாடு நம் தமிழ்நாடு! என்ன மனிதர்கள் நம் தமிழ் மக்கள்! இவர்களுடைய அஞ்ஞான இருள் எப்போது விலகுமோ! இவர்களுடைய மூடநம்பிக்கை களும், நடையுடை பாவனைகளும் எப்போது இவர்களை விட்டொழியுமோ தெரியவில்லையே! நிர்வாண தேசத்தில், ஆடையுடுத்தியவன் அசடனென்ற பழமொழி நம்முடைய தேசத்து மனிதருக்குத் தான் நன்றாகப் பொருந்துகிறது. மன்னார் குடியார் வீட்டுப் பெண்பிள்ளைகள் இங்கே வந்தவுடன், எப்படியும் என்னைப் பார்க்க வருவார்கள். நான் அவர்களைப் பார்க்காமல், ஏதாவது தந்திரம் செய்யலாம் என்றால், அது பலிக்காது போலிருக்கிறது. எனக்கு உடம்பு சரியாக இல்லை என்று கட்டிலில் துப்பட்டியால் உடம்பு முழுதும் மூடிக் கொள்ளலாம் என்றாலோ, எத்தனை நாள்கள் தான் படுத்திருக்க முடியும். ஆகா! என்ன தருமசங்கடம் இது!" என்று தனது கைகளைப் பிசைந்து கொண்டு சஞ்சலக் கடலில் ஆழ்ந்தவளாய் இரண்டு நாழிகை காலம் வரையில் படுத்திருந்த மனோன்மணி யம்மாள் கடிகாரத்தைப் பார்த்தாள். மாலை 6 மணி அடிக்கும் சமயமாக இருந்தது. அவளது மனம் பதறியது. இருதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது. கைகளும், கால்களும் உடம்பும் வெலவெலத்துச் சோர்ந்து மூலைக்கு மூலை தாறு மாறாய்ச் சென்றன. ஏதோ நினைவைக் கொண்டவள் போல அவள் கட்டிலை விட்டெழுந்து அங்குமிங்கும் இரண்டு மூன்று தடவை போய் வந்து உலாவிய பின்னர், மேஜையின் மீது கிடந்த கொத்துச் சாவியைத் தனது கையில் எடுத்துக் கொண்டு, அந்த அறையை விட்டு வெளியில் போய் பக்கத்தில் இருந்த இன்னோர் அறைக்குள் நுழைந்து, அவ்விடத்தில் ஒரு மூலையில் இருந்த ஒரு பெரிய பெட்டியைத் திறந்தாள். இறந்து போன அவளது தாயினால் உபயோகிக்கப்பட்டவையும், வெகுகாலமாய் வாசனையூட்டப் பெற்று பத்திரமாய் வைக்கப் பெற்றிருந்தவையு மான ஐந்தாறு பட்டுச் சேலைகளும், ஏராளமான ஆபரணங்களும் அந்தப் பெட்டிக்குள் காணப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலே

இருந்ததும், வசீகரமான ஜரிகைத் தலைப்பைக் கொண்டதுமான நீலவர்ணப் புடவை ஒன்றை மனோன்மணியம்மாள் வெளியில் எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். அது பார்ப்பதற்கு நிரம்பவும் அழகாகவே இருந்தது. உடனே மனோன்மணியம்மாள் தனது உடம்பில் இருந்த வெள்ளை ஆடைகளை விலக்கிவிட்டு அந்த நீலவர்ணப் பட்டாடையை உடுத்திக் கொண்டாள்; பெட்டியில், ஓர் அறைக்குள் காணப்பட்ட பல இரவிக்கைகளில் ரோஜா வர்ணமுள்ள ஜரிகை ரவிக்கை ஒன்றை எடுத்து அணிந்து கொண்டாள். அவளது மனமே ஒருவித பிரமிப்பை அடைந்தது. தான் வெள்ளை ஆடைகள் அணிந்திருந்த காலத்தில் இருந்ததை விட அப்போது ஆயிரம் மடங்கு அதிக அழகாகவும் வசீகரமாகவும் இருப்பது போல அவளது மனத்திலேயே ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. உடனே அவள் குனிந்து பெட்டியில் இருந்த ஏராளமான வைர ஆபரணங்களில் பலவற்றை எடுத்து ஒவ்வொன்றாக அணிந்து கொண்டு பார்க்கப் பார்க்க தனது வனப்பும் வசீகரத் தன்மையும் அற்புதமாய் அதிகரித்துக் கொண்டே போவதாக அவளுக்குத் தோன்றவே அவள் தனது தலை முதல் கால் வரையில் ஏராளமான ஆபரணங்களை அணிந்து கொண்டவளாய், சிறிது தூரத்திற்கப்பால் இருந்த நிலைக் கண்ணாடிக்கெதிரில் போய் நின்று தனது புதிய வடிவத்தைப் பார்க்கவே, அவள் தனது விழிகளையே நம்பாமல் இரண்டு மூன்று தரம் தனது விழிகளைக் கசக்கி விட்டுக் கொண்டு உற்று நோக்கி, அப்படியே பிரமிப்படைந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். "ஆகா! இந்த அலங்காரம் எவ்வளவு அழகாய் இருக்கிறது. சிவப்பாகவும் கொடி போலவும் இருக்கிற என் உடம்பை வெள்ளை மஸ்லின் புடவை அவ்வளவாக எடுத்துக் காட்டவில்லை. இந்த ஆடைகளும் நகைகளும் என் உடம்பின் அழகைப் பதினாயிரம் மடங்கு அதிகமாக அல்லவா எடுத்துக் காட்டுகின்றன. இந்த மன்னார் குடியார் வந்திருந்து விட்டுப் போகிற வரையில் நான் இப்படியே அலங்காரம் செய்து கொண்டிருந்தால் என்ன? அவர்கள் போன பிறகு வேண்டுமானால் நான் மறுபடி மஸ்லினை உடுத்திக் கொள்ளுகிறேன்" என்று அந்த மடந்தை எண்ணமிட்டிருந்த சமயத்தில், "அம்மா! அம்மா!" என்று வேலைக்காரி தன்னை

அழைத்துக் கொண்டு வந்ததை கண்ட மனோன்மணியம்மாள் தான் புதிய விதமாய் மாறியிருந்ததைக் கருதி ஒருவித லஜ்ஜையும் சஞ்சலமும் அடைந்தவளாய் அவளை நோக்கி மிருதுவாகப் பேசத் தொடங்கி, "ஏன் அம்மா! என்ன விசேஷம்?" என்றாள்.

உடனே வேலைக்காரி, "மன்னார்குடியில் இருந்து வந்திருக்கும் புது சம்பந்திகளை அழைத்துக் கொண்டு எஜமானர் வந்து விட்டார்கள். அவர்களுக்காக ஒழித்துவிடப்பட்டிருக்கும் விடுதியில் அவர்கள் வந்திறங்கி இருக்கிறார்கள். உங்களுக்கு மாமியார் ஆகப் போகிற அம்மாளும், அவர்களுடைய மூத்த மருமகளும் உங்களைப் பார்க்க இதோ வருகிறார்கள். உங்களோடு கூட இருந்து அவர்களை உபசரிக்கும்படி எஜமானர் என்னை அனுப்பினார்கள். வெள்ளை ஆடைகளை விலக்கிவிட்டு பட்டுப் புடவை முதலியவைகளை உபயோகிக்கும் படியும் எஜமானர் சொல்லச் சொன்னார்கள். நான் சொல்வதற்கு முன் நீங்களே அதைச் செய்து விட்டீர்கள். நல்லதாயிற்று. வாருங்கள் உங்களுடைய விடுதிக்குப் போவோம். அவர்கள் வந்து விடுவார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் தான் என்ன செய்வ தென்பதை அறியாது மனக்குழப்பமும், கலக்கமும், சஞ்சலமும் அடைந்தாள். தான் வேண்டாம், வேண்டாம் என்று எவ்வளவு தான் விலகினாலும், மன்னார்குடியாரது சம்பந்தமாகிய வலை தன்னை விடாமல் நான்கு பக்கங்களிலும் வந்து வளைத்துக் கொண்டிருக்கிறதே என்று அவள் நினைத்து வருந்தினாள் ஆனாலும், எப்படியாவது தான் பிரயாசைப்பட்டு அவர்கள் இரண்டொரு நாள் இங்கே இருக்கும் வரையில் தான் அவர்களது மனப்போக்கின்படி இருந்து விட்டு, அவர்கள் போன பிறகு எப்படியாவது முயன்று அந்தக் கலியாணத்தைத் தடுத்து விட வேண்டும் என்ற முடிவைச் செய்து கொண்டவளாய், அவ்விடத்தை விட்டு வேலைக்காரியோடு தனது விடுதிக்குப் போய்ச் சேர்ந்தாள். வரப் போகிறவர்கள் நாற்காலி முதலிய உயர்வான ஆசனங்களில் உட்கார மாட்டார்கள் என்ற எண்ணம் தோன்றியது ஆகையால், அவள் வேலைக்காரியை ஏவி, தானும் உதவி செய்து, அவ்விடத்தில் இருந்த நாற்காலிகளையும் சோபா

வையும் அப்புறப்படுத்தி விட்டு ஒரு மூலையில் சுருட்டி நிறுத்தப் பட்டிருந்த பிரப்பம் பாய் ஒன்றை எடுத்துத் தரையில் பிரித்து வைத்து விட்டு ஜன்னலின் வழியாய் வெளியில் பார்த்தபடி சிறிது நேரம் பொறுத்திருக்க, அடுத்த நிமிஷம் திரிபுரசுந்தரியம்மாளும், வடிவாம்பாளும், அவர்களது வேலைக்காரியும் அங்கே வந்து சேர்ந்தனர். வேலைக்காரி தனது கையில் ஒரு பெருத்த வெள்ளித் தாம்பாளத்தை வைத்திருந்தாள். அதில் ஐந்நூறு ரூபாய் விலையுள்ள வசீகரமான பட்டுச் சேலை ஒன்று, ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாய் விலை பெறத்தக்க நான்கு இரவிக்கைத் துண்டுகள், வெள்ளிக் கிண்ணங்களில் சந்தனம், குங்குமம், மஞ்சள் பொடி, வெற்றிலை, பாக்கு பழவகைகள் முதலிய மங்களகரமான வஸ்துக்கள் ஏராளமாக நிறைந்திருந்தன. அவர்களைக் கண்டவுடன் மனோன்மணியம்மாளோடு இருந்த வேலைக்காரி ஓடோடியும் முன் சென்று வணக்க வொடுக்கங் காட்டி மரியாதையாக அவர்களை வரவேற்று, "வாருங்கள்; வாருங்கள் இப்படி உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று உவப்போடு உபசரிக்க, அவளுக்குப் பக்கத்தில் நாணத்தினாலும், அச்சத்தி னாலும் மேற் கொள்ளப்பட்டவளாய் மனோன்மணியம்மாள் குனிந்த தலையோடு அழகாய் நின்று, தான் தனது வாயைத் திறந்து அவர்களோடு பேசலாமோ, அதுவும் தவறாய் முடியுமோ, என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள மாட்டாதவளாய்த் தத்தளித்திருக்க, அதைக் கண்ட திரிபுரசுந்தரியம்மாள், தனது மாமியார் வந்திருப்பதைக் கருதி, அவள் உத்தம ஜாதி ஸ்திரீகளின் லட்சணப்படி நாணிக் குனிந்து நிற்கிறாள் என்று நினைத்து, "வா, கண்ணு! இப்படி, இதோ உன்னுடைய அக்காள் வந்திருக்கிறாள். உன்னை எப்போது பார்க்கப் போகிறோம் என்று எனக்கும் உன் அக்காளுக்கும் இருந்த ஆவல் சொல்லி முடியாது. நேற்றும், முந்திய நாளும் கெட்ட நாள்களாய் விட்டன. இன்று நல்ல முகூர்த்த நாள். நாம் கோடித்திருந்தபடி நிச்சயதார்த்தம் இன்று நடந்திருந்தால், அந்த வைபவம் வேறு மாதிரியாக இருந்திருக்கும். அது இப்போது கைகூடாவிட்டாலும், இந்த சுபகாலத்தில் வந்து உன்னையாவது பார்க்க வேண்டும் என்ற நினைவோடு இங்கே வர நாங்களே தயாராக இருந்தோம். அதற்குள் உன் தந்தையாரே

வந்தார்கள். உடனே புறப்பட்டு நாங்களும் வந்தோம். வா, அம்மா, இப்படி வந்து, இந்த மங்களகரமான வஸ்துக்களை உன் கையாலேயே வாங்கி அப்பால் வை தங்கமே!" என்று கரை புரண்டோடிய வாஞ்சையோடு கூற, மனோன்மணியம்மாள் திக்பிரமை கொண்டு சிறிது நேரம் திணறி நின்றுவிட்டாள். அவர்கள் அநாகரிகர்களான மனிதர்கள் என்று நினைத்ததற்கு மாறாக, அவர்கள் அன்பின் வடிவாகவும், மரியாதைக்கு உற்பத்தி ஸ்தானம் போலவும், நற்குணங்களுக்கே பீடிகை போலவும் இருந்ததைக் காண, அவள் அவர்களிடம் கொண்டிருந்த வெறுப்பில் சிறிதளவு விலகியது. அவர்கள் ஏதாவது மரியாதைப் பொருள்களைக் கொடுத்தால் அதை எப்படி வாங்குவதென்பதை சற்று நேரத்திற்கு முன் வேலைக்காரி மனோன்மணியம்மாளுக்குச் சொல்லி வைத்திருந்தாள் ஆதலால், அந்த மடந்தை தன்னை முற்றிலும் மறந்து வேலைக்காரி சொன்னது போலவே செய்யத் தொடங்கி, குனிந்த தலையை நிமிர்க்காமல் மடவன்னம் போலவும், தோகை மயில் போலவும் மிருதுத் தன்மையே வடிவெடுத்தது போல நடந்து சென்று தனக்கெதிரில் நின்ற திரிபுர சுந்தரியம்மாளின் முன் மண்டியிட்டு நமஸ்காரம் செய்ய, திரிபுரசுந்தரியம்மாள் அளவற்ற மகிழ்ச்சியும் குதூகலமும் பூரிப்பும் அடைந்து, "அம்மா! நீ மகராஜியாய் தீர்க்க சுமங்கலியாய் சிரஞ்சீவியாய் வாழ வேண்டும்" என்று ஆசீர்வதித்தாள். அதைக் கேட்டுக் கொண்ட நமது மனோன்மணியம்மாள் பக்கத்தில் நின்ற வடிவாம்பாளுக்கு எதிரிலும் சென்று அவளுக்கும் நமஸ்காரம் செய்ய எத்தனித்தாள். உடனே வடிவாம்பாள் மிகுந்த வாத்சல்யத் தோடு, "அம்மா! எனக்குக் கூடவா நீ நமஸ்காரம் செய்ய வேண்டும். வேண்டாம் அம்மா! இந்தத் தட்டை வாங்கிக்கொள்" என்று கூறி, அவள் தன்னை நமஸ்கரிக்காமல் தடுத்து, வேலைக்காரியிடத்தில் இருந்த தட்டை வாங்கி மனோன்மணியம்மாளிடம் கொடுக்க, அவள் அதை வாங்கித் தனது வேலைக்காரியிடம் கொடுத்தாள். அவள் அவ்வாறு பணிவாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டதைக் கண்ட திரிபுரசுந்தரியம்மாளும் வடிவாம்பாளும் மனங்கொள்ளா மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்தவர்களாய் ஒருவரை ஒருவர்

பார்த்துத் தமது திருப்தியை வெளியிட்டுக் கொண்டனர். பட்டாபி ராம பிள்ளை தமது குமாரத்தியை நன்றாகப் படிக்க வைத்திருக்கி றார் என்று மாத்திரம் அவர்கள் கேள்வியுற்றிருந்தனர் ஆதலால்; அவ்வளவு அதிகமாய்ப் படித்திருப்பவளும், மிகுந்த செல்வாக்கு, அளவற்ற செல்வம், உன்னத பதவி முதலியவற்றிற்கு அதிபதியான ஒரு செல்வச் சீமானது ஏக புத்திரியாய் இருப்பவளு மான மனோன்மணியம்மாள் அகம்பாவம், ஆடம்பரம், பதற்றம் முதலிய துர்க்குணங்கள் இன்றி சுத்த சாத்வீக வடிவாய் நிரம்பவும் பணிவாகத் தங்களிடம் நடந்து கொள்வதைக் காண திரிபுரசுந்தரி யம்மாளின் உள்ளம் குளிர்ந்தது. தங்களுக்கு வந்து வாய்த்துள்ள மூத்த மருமகளைப் போலவே, அவளும் விலையில்லா மாணிக்கம் போன்றவள் என்றும், கந்தசாமி நல்ல அதிர்ஷ்டசாலி என்றும் உடனே தீர்மானித்துக் கொண்டு, வாஞ்சையாகிய அமிர்த தாரையைத் தனது இரண்டு விழிகளாலும் வழியவிட்டு, அதனால் மனோன்மணியம்மாளை அபிஷேகம் செய்விப்பவள் போல ஆசையோடும், ஆவலோடும் பன்முறை அவளது முகம் முதல் நகம் வரையில் கடாக்ஷித்து உவகை பூர்த்து நெக்கு நெக்குருகித் தன்னை மறந்து நிற்க, மறுபடியும் மனோன்மணி யம்மாளது வேலைக்காரி, "தாங்கள் உட்கார்ந்து கொள்ளாமல் நிற்கிறீர்களே! பெண் தங்களோடு பேசுவதற்கு அஞ்சுகிறது. வேறே பெரியவர்கள் யாரும் இல்லை ஆகையால், தங்களைத் தக்கபடி உபசரிக்க வேண்டிய பொறுப்பெல்லாம் இந்தக் குழந்தையைச் சேர்ந்ததாய் இருந்தாலும், தாங்கள் மாமியார் ஆகப்போகிறவர்கள் என்ற லஜ்ஜையினால், குழந்தை வாயைத் திறந்து பேசமாட்டாமல் தவிக்கிறது. பிள்ளை வீட்டிற்கு எப்படி நீங்களே தலைமை வகித்து எல்லாக் காரியங்களையும் நடத்துவீர் களோ அது போல இவ்விடத்திலும் நீங்களே முதன்மையானவர் கள் ஆகிவிட்டீர்கள் ஆகையால், எல்லாவற்றையும் நீங்கள் தான் எங்களுக்கு எடுத்துக் காட்டி நடத்திக் கொண்டு போக வேண்டும். நீங்கள் முதலில் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று நிரம்பவும் பணிவாக உபசார மொழிகள் கூறினாள்.

அப்போது வடிவாம்பாள் தனது மாமியாரை நோக்கி, "நீங்கள் உட்கார்ந்து மனோன்மணியம்மாளிடம் பேசிக் கொண்டிருங்கள்.

நான் போய் இராத்திரிக்கு வேண்டிய பலகாரங்களைத் தயார் செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறினாள். உடனே திரிபுரசுந்தரியம்மாள், "நான் இப்போது உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. மனோன்மணியம்மாள் இப்போது தான் முதன் முதலாக நம்மைப் பார்ப்பதால், அவள் நிரம்பவும் கிலேசப் படுகிறாள். இந்த நிலைமையில் அவள் நம்மிடம் சரியாய்ப் பேச முடியாது. அவள் அதிகமாய்ப் பேசும்படி நாம் இப்போது செய்வது அவளை உபத்திரவிப்பது போல இருக்கும். அதுவுமன்றி எனக்கு அவசரமான வேலையும் இருக்கிறது. எஜமானருக்கு மத்தியானமே உடம்பு சரியாக இல்லை, அவருக்கு எது இதமான பலகாரம் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு தான் நாம் அதைத் தயாரிக்க வேண்டும். அதற்கு நானே போக வேண்டும். மனோன்மணியம்மாள் தன்னுடைய வழக்கப்படி சுயேச்சையாக இருக்கட்டும்" என்று அன்பாகக் கூறிய பின், மனோன்மணியம்மாளை ஆசையோடு இன்னொரு முறை பார்த்து, "அம்மா! நீ இரு; நான் மறுபடியும் வந்து பார்க்கிறேன்" என்று கூறிய வண்ணம் வடிவாம்பாளையும் தனது வேலைக்காரி யையும் அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு தாங்கள் இறங்கியிருந்த பக்கத்து விடுதிக்குச் சென்று விட்டாள். தங்களுக்காக ஒழித்துவிடப்பட்டிருந்த வசதியான விடுதியில், வேலாயுதம் பிள்ளையும் அவரைச் சேர்ந்த மற்றவர்களும் அன்றைய இரவில் நிரம்பவும் சௌகரியமாக இருந்தனர். பட்டாபிராம பிள்ளை அளவற்ற அன்பும் வணக்கமும் காட்டி அவர்களுக்குத் தேவையான சௌகரியங்கள் அனைத்தையும் காமதேனுவைப் போலப் பொழிந்தார்.

அன்றைய தினம் மாலையில் பட்டாபிராம பிள்ளை போலீஸ் கமிஷனரிடம் போய்ப் பேசிவிட்டு வந்தபின், மாலை ஆறு மணிக்கே ஐம்பது போலீஸ் ஜெவான்கள் கத்தி துப்பாக்கி முதலிய பாதுகாப்புகளுடன் வந்து அவர்களது பங்களாவைச் சுற்றிலும் நின்று நிரம்பவும் விழிப்பாகவும் எச்சரிப்பாகவும் அந்த இரவு முழுதும் காவல் காத்திருந்தனர். ஆயினும் பட்டாபிராம பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, கண்ணப்பா ஆகிய எல்லோரும் இரவில்

எவ்விதமான விபரீத சம்பவம் நேருமோ என்று மிகுந்த கவலையும் கலக்கமும் கொண்டு தூக்கமே பிடியாதவர்களாய் விழித்திருந்தே அந்த இரவைப் போக்கினர். பெண் பாலாரும் கவலை கொண்டு வருந்தி வெகு நேரம் வரையில் விழித்திருந்து பிறகு மெய்ம்மறந்து தூங்குவதும், அல்லல்பட்டு விழித்துக் கொள்வதுமாய் அந்த இரவைக் கடத்தினர். மறுநாட் காலையில் எல்லோரும் தமது காலைக் கடன்களை முடித்துக் கொள்ள, பட்டாபிராம பிள்ளை வேலாயுதம் பிள்ளை முதலியோர் இருந்த இடத்திற்குப் போய், "அண்ணா! போலீஸ் ஜெவான்கள் நேற்று இரவு முழுதும் கண் கொட்டாமல் நிரம்பவும் ஜாக்கிரதையாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்களாம். எதிரியைச் சேர்ந்த மனிதர்கள் யாரும் வரவே இல்லையாம். நாம் காவல் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டு வராமல் இருந்து விட்டார்களோ, அல்லது, அந்தக் கைதி ஜெவானிடம் சொன்னது தான் பொய்யான தகவலோ, உண்மை இன்னதென்று தெரியவில்லை. இருந்தாலும் இன்னம் சில தினங்கள் வரையில் போலீஸ் ஜெவான்களில் பத்துப் பேர் இரவில் வந்து காவல் காத்திருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கி றேன். இன்றைய தினம் நான் உங்களுடன் கூடவே இருக்க எண்ணுகிறேன் ஆகையால், கச்சேரிக்குப் போகாமல் இருக்கும்படி ரஜாவுக்கு எழுதிவிட்டேன். இன்றைக்கு அந்த கோபாலசாமியின் நிலைமை எப்படி இருக்கிறதென்பதை நான் போய்ப் பார்த்து விட்டு போலீஸ் கமிஷனரையும் கண்டு பேசிவிட்டு வருகிறேன். அதற்கு முன் உங்களிடம் ஒரு சிறிய விண்ணப்பம் செய்து கொள்ள எண்ணுகிறேன். நம்முடைய பிள்ளையாண்டான் காணாமல் போயிருப்பதனால் நாம் எல்லோரும் நிரம்பவும் கவலை கொண்டு சஞ்சலப்பட்டு உழலுகிறோம். எங்களை விட நீங்கள் எல்லோரும் இன்னம் பதினாயிரம் மடங்கு அதிகமாய்த் துயரக் கடலில் முழுகிக் கிடக்கிறீர்கள். நேற்று நாம் செய்ய எத்தனித்த சுபகாரியம் நிறைவேறாமல் போனது ஒரு பக்கத்தில் மனசில் உறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அசந்தர்ப்ப வேளையில், நாம் சந்தோஷகரமான காரியம் எதையும் செய்ய நம்முடைய மனம் இடந்தராது. இருந்தாலும், நான் எவ்வளவு தான் தவம் செய்தாலும், தங்களைப் போன்ற உத்தமர்கள் என்

குடிசைக்கு விஜயம் செய்வது மகா அரிதான சம்பவம். தாங்கள் தங்களுடைய வேலைக்காரரை விட்டுச் செய்யச் சொல்லும் ரசம் அன்னத்தை, நான் என்னுடைய வேலைக்காரர்களை விட்டுத் தயாரிக்கச் சொல்லுகிறேன். தாங்கள் எல்லோரும் இன்று என்னோடு போஜனம் செய்ய வேண்டும். அவ்வளவு தான் என்னுடைய கோரிக்கை. இன்று சனிக்கிழமை, ஸ்திரவாரம்; இன்று நாம் ஆரம்பிக்கும் இந்த சுபகாரியம் எப்போதும் ஸ்திரமாக இருக்க வேண்டும். ஆகையால், தாங்கள் இதை மறுக்காமல் என் விருப்பத்தைப் பூர்த்தி செய்து என்னை சந்தோஷப்படுத்த வேண்டும்" என்று நிரம்பவும் பணிவாகக் கூறினார்.

அதைக் கேட்ட வேலாயுதம் பிள்ளை, "தம்பீ! நீங்கள் செய்யப் பிரியப்படுவது நியாயமான காரியமே. நாம் சாப்பிடுவதை எங்கே சாப்பிட்டால் என்ன; அதைப் பற்றி எனக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை. ஆயினும், நேற்று இராத்திரி நானும் என் மனிதர்களும் கலந்து பேசி ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். எங்களுக்குக் கால பலன் சரியாக இல்லை. நாம் எதிர்பார்க்காத துன்பங்கள் எல்லாம் வந்து நேருகின்றன. பையனைப் பற்றிய தகவல் எதுவும் தெரியவே இல்லை. அவன் உயிரோடு க்ஷேமமாய் இருக்கிறான் என்ற ஒரு விஷயம் நமக்கு முதலில் தெரிந்தால் அதுவே போதும் என்று நாங்கள் ஆவல் படுகிறோம். ஒரு தகவலும் கிடைக்கவில்லை. எங்களுடைய மனம் தாமரை இலை நீர்த்துளி போலத் தவித்துக் கொண்டிருக்கிறது. எங்கே யாவது போய்த் தேடுவோம், அல்லது, ஏதாவது முயற்சி செய்வோம் என்றால், எங்கே போவது என்ன செய்வதென்பது தெரியவில்லை. நமக்காக போலீசார் எல்லோரும் பாடுபடுகிறார் கள். அதுவுமன்றி முக்கியமாக எங்களுடைய சிரமத்தை எல்லாம் நீங்களே ஏற்று எங்களால் செய்யக் கூடியதைவிட ஆயிரம் மடங்கு அதிகமான பிரயத்தனங்களைச் செய்து வருகிறீர்கள். ஒவ்வொரு நிமிஷம் கழிவதும் விஷம் தலைக்கேறுவது போல, எங்களுடைய மனவேதனை அக்ஷயமாய்ப் பெருகிக் கொண்டே போகிறது. இந்த மூன்று தினங்களாய் நாங்கள் ஒரு நாளைக்கு ஒருதரம் கூட ஆகாரம் செய்யாமல் வியாகுலப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய கெட்ட காலத்திற்குச் சாந்தியாக

இன்று முதல் மூன்று தினங்களுக்கு நான் சுத்த பட்டினியாய் இருந்து சிவபூசை செய்யத் தீர்மானித்திருக்கிறேன். நான் பட்டினியாய் இருக்கையில் மற்றவர்கள் சாப்பிட மாட்டார்கள்; ஒரு நாளைக்கு ஒரு தரம் ஏதாவது பலகாரம் செய்வார்கள். இந்த மூன்று தினங்களும் கழிவதற்குள் நமக்கு ஈசன் அருள் பிறந்து பையன் அகப்பட்டுப் போவானாகில், உங்களுடைய பிரியத்தை நாங்கள் எல்லோரும் வட்டியும் முதலுமாகப் பூர்த்தி செய்து வைக்கிறோம். நான் வரும்போது என் பூஜைப் பெட்டியையும் கொண்டுவந்திருக்கிறேன். இந்தப் பூஜை விஷயத்தில் நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். எனக்கு தினம் ஒன்றுக்கு அர்ச்சனைக்கு ஒரு வண்டி புஷ்பம் வேண்டும். முதல் நாள் பாரிஜாதப் புஷ்பம், இரண்டாம் நாள் மல்லிகை புஷ்பம், மூன்றாம் நாள் ரோஜா புஷ்பம்; இம்மாதிரி மூன்று தினுசு புஷ்பங்களாய் வரவழைத்துக் கொடுக்க வேண்டும். இது தான் நான் உங்களிடம் கோருவது" என்றார்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை அவரது நோக்கம் போல நடந்து கொள்ளத் தீர்மானித்து, அவ்வாறே புஷ்பம் தயாரித்துத் தருவதாய்ச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார்.

வேலாயுதம் பிள்ளை முதலியோர் இருப்பதற்காக பட்டாபிராம பிள்ளையினது பங்களாவின் முதல் உப்பரிகையின் வடபாகம் முழுதும் ஒழித்து விடப்பட்டிருந்தது; அதன் மத்தியில் ஒரு பெரிய கூடமும், அதைச் சுற்றிலும் பல விடுதிகளும் இருந்தன. எல்லா இடங்களிலும் நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள், சோபாக்கள், மின்சார விளக்குகள், மின்சார விசிறிகள், பூத்தொட்டிகள், தண்ணீர்க் குழாய்கள் முதலிய சகலமான அலங்காரங்களும் வசதிகளும் சம்பூர்ணமாக நிறைந்திருந்தன. அவர்களுக்கு விடப்பட்டிருந்த பாகம் முழுதும் அன்றைய தினம் காலையில் ஒரு மாசுமறுவில்லாமல் சுத்தி செய்யப்பட்டதன்றி, அதன் மத்தியில் இருந்த பெருத்த கூடமே சுவாமி பூஜை செய்வதற்குத் தகுந்த இடம் என்று அவர்கள் தீர்மானம் செய்தனர். அந்தக் கூடத்தில் இருந்த நாற்காலி சோபாக்கள் முதலிய பழைய சாமான்கள் யாவும் விலக்கப்பட்டுப் போயின. திரிபுரசுந்தரியம்மாளும், வடிவாம்

பாளும் சேர்ந்து அந்தக் கூடத்தை நன்றாக மெழுகிப் பெருக்கி, எங்கு பார்த்தாலும் அழகான கோலங்களையும், செங்காவிப் பட்டைகளையும் நிரப்பி விட்டனர். அதன் ஒரு பக்கத்தில் உயர்வான பீடம் ஒன்று போடப்பட்டு, அதன்மேல் பூஜைப் பெட்டி வைக்கப்பட்டது. அதைச் சுற்றிலும் சுவர் முழுதும் சுவாமியின் படங்கள் ஏராளமாக மாட்டப்பட்டன. பூஜைப் பெட்டிக்கெதிரில் உயரமானவையும் பளிச்சென்று மின்னுகின்ற வையுமான நாலைந்து குத்து விளக்குகள் வைக்கப்பட்டன. திரிபுர சுந்தரியம்மாள் அந்த விளக்குகளில் நெய்யையும் பருத்தி நூல் திரிகளையும் நிரப்பி வைத்தாள். கண்ணப்பா கடைக்குப் போய் வண்டிக் கணக்கில் தேங்காய், பலவகைப்பட்ட பழங்கள், வாசனைத் திரவியங்கள், அபிஷேகத்திற்குரிய கரும்பு, நெய், தேன், பால், தயிர், பன்னீர் முதலிய வஸ்துக்கள் யாவற்றையும் வாங்கிக் கொணர்ந்து, அந்தக் கூடத்தின் பெரும் பாகத்தையும் நிறைத்து விட்டதன்றி, அன்றைய தினம் முதல் ஒவ்வொரு தினமும் ஏழை எளியவர்களான ஆயிரம் ஜனங்களுக்கு அன்னமிடு வதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்தான்.

பகல் 10-மணிக்குள் சகலமான ஏற்பாடுகளும் முடிந்து போயின. அந்தக் கூடம் தத்ரூபம் தெய்வ லோகம் போல விளங்கியது. வேலாயுதம் பிள்ளை பிராயச்சித்த மந்திரத்தைச் சொல்லி ஸ்நானம் செய்து, நார்மடி வஸ்திரங்களைத் தரித்து, விபூதி, உருத்திராக்ஷம் முதலியவற்றை அணிந்து பூஜைப் பெட்டிக்கு முன்னால் போடப்பட்டிருந்த பெருத்த மணைப் பலகையின் மீது நிஷ்டையில் அமரும் பெருத்த யோகீசுவரர் போல சுத்தாத்விக குணமும், பக்திப் பெருக்கும் உள்ளடக்கிய விசனமும் நன்றாக ஜ்வலித்த முகத் தோற்றத்தோடு சிவப்பழமாய்க் காணப்பட்டார். அவரது திருவாய் அடிக்கடி, "சிவ, சிவ, சம்போ, சங்கரா, மகாதேவா, கருணா நிதே, என் அப்பனே!" என்ற நாமதாரகத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தது. அவரது தோற்றம் இருந்ததற்குத் தகுந்தபடி கண்ணப்பா, திரிபுரசுந்தரியம்மாள், வடிவாம்பாள், வேலைக்காரன், வேலைக்காரி ஆகிய எல்லோரும் நீராடி மகா பரிசுத்தமான உடைகளை அணிந்து, விபூதி தரித்து,

வேலாயுதம் பிள்ளையின் சிஷ்யகோடிகளாய் விளங்கி, அவர் மனதால் நினைக்கும் முன், அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்த வண்ணம் நின்றனர். வடிவாம்பாள் பூஜைப் பாத்திரங்களைப் பளிச்சென்று சுத்தி செய்து, சந்தனம் அரைத்து வைத்தாள். திரிபுரசுந்தரியம்மாள் படங்களுக்குப் புஷ்பமாலைகள் சாத்தி, சந்தனப் பொட்டுகள் வைத்தாள். கண்ணப்பா வாழைப் பழம், மாம்பழம், பலாப்பழம் முதலிய பழவகைகளை நறுக்கி தட்டுகளில் வைத்ததன்றி, எங்கும் கமகமவென்று மணம் கமழத் தக்க ஊதுவர்த்திகளை ஏராளமாகக் கொளுத்தி வைத்து விட்டு, மகா நைவேத்தியங்களைக் கொணர்ந்து சேர்த்துக் கொண்டிருந்தான்.

அவ்வாறு நாம் விவரிக்க இயலாத வகையில் அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அபாரமான எண்ணிறந்த ஏற்பாடுகளைச் செய்து சிவபூஜையை நடத்தலாயினர். வேலாயுதம் பிள்ளையின் வேண்டுகோளிற் கிணங்க, பட்டாபிராம பிள்ளை ஒரு வண்டி புஷ்பம் வரவழைத்துக் கொடுத்ததன்றி, அன்றைய தினம் கச்சேரிக்குப் போகாமல் அவர்களுக்கு அநுசரணையாக இருந்து வந்தார். அவரும் மனோன்மணியம்மாளும் அன்றைய தினம் மடியாக இருந்து தீபாராதனை சமயத்தில் அங்கே வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு, பிரசாதம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று வேலாயுதம் பிள்ளை காலையிலேயே கேட்டுக் கொண்டார் ஆதலால், அதற்கிணங்க பட்டாபிராம பிள்ளை அப்படியே ஆயத்தமானார். அந்தச் செய்தியை அவர் அன்றைய தினம் காலையில் வேலைக்காரி மூலமாய் மனோன்மணியம்மாளுக்கும் சொல்லி அனுப்பினார்.

அவர்கள் எல்லோரும் மூன்று தினங்களுக்கு உண்ணா விரதம் இருந்து, சிவபூஜை செய்யப் போகிறார்கள் என்ற செய்தியைக் கேட்கவே, மனோன்மணியம்மாள் உடனே கலகலவென்று வாய்விட்டுச் சிரித்து விட்டாள். முதல் நாள் மாலையில் அவள் தனது வெள்ளை ஆடைகளை மாற்றி, பட்டாடைகளையும் பல ஆபரணங்களையும் அணிந்து கொண்டது, அதன் பிறகு திரிபுர சுந்தரியம்மாள், வடிவாம்பாள் ஆகிய இருவரையும் வரவேற்று,

அவர்களால் கொடுக்கப்பட்ட பொருட்களைப் பெற்றது முதலிய விவரங்கள் முன்னரே கூறப்பட்டன அல்லவா, அப்போது முதல் அவளது மனம் ஒரு நிலையில் நிற்காமல் கோடானுகோடி எண்ணங்களையும் யோசனைகளையும் கொண்டு தத்தளித்துக் கொண்டிருந்தது. வேலாயுதம் பிள்ளை முதலியோர் தன்னைப் பற்றி தூஷணையான சொல் எதுவும் சொல்லக் கூடாதென்ற யோசனையினால், அவர்கள் அந்த ஜாகையில் இருக்கும் வரையில், தான் அவர்களது மனப்போக்கிற்குத் தகுந்தபடி நடந்து கொண்டாள் என்பதும், முக்கியமாக அவள் தனது தந்தையின் கோபத்திற்குப் பாத்திரமாகக் கூடாதென்ற நினைவினாலேயே அவ்வாறு தனது சுய அபிப்பிராயத்தை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு, தன் இஷ்டத்திற்கு விரோதமாகவே அந்தக் காரியம் செய்தாள் என்பதும் நமது வாசகர்களுக்கு விளங்கி இருக்கும். அவர்கள் தன்னிடம் எவ்வளவு தான் வாஞ்சையாகவும் மரியாதை யாகவும் நடந்து கொண்டாலும், அவர்கள் மேலான தத்துவங் களும், உயர்வான அறிவும் அற்ற சுத்த கர்னாடக மனிதர்கள் என்ற அபிப்பிராயத்தையும், அவர்களது வீட்டில் தான் வாழ்க்கைப் படவே கூடாது என்ற உறுதியையுமே அவள் அப்போதும் கடைப்பிடித்திருந்தாள். அவர்கள் உண்ணாவிரதம் இருந்து சிவபூஜை செய்யப் போகிறார்கள் என்பதைக் கேட்கவே, அவள் கொண்டிருந்த அபிப்பிராயம் முன்னிலும் பன்மடங்கு பலமாக உறுதிப்பட்டது. அவள் இங்கிலீஷ் பயின்ற கலாசாலை யில் கடவுளைப் பற்றியும், மதசம்பந்தமாகவும் அவள் எதையும் கற்றுக் கொள்ளாமல், இங்கிலீஷ் பாஷையின் உயர்வைப் பற்றியும், அதன் இலக்கியங்களில் உள்ள இன்பத்தை அனுபவிப்பதையும், வெள்ளைக்காரர்கள் செய்த அல்லது செய்யும் அரும்பெரும் செயல்களைப் பற்றியும் ஏராளமாகத் தெரிந்து கொண்டிருந்தாள்; அதுவுமன்றி மனிதனே தெய்வம் என்றும், அவனால் சாதிக்க இயலாத காரியம் எதுவுமில்லை என்றும், தெய்வம் என்பது ஒன்று இருக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் அவள் நினைத்து நாஸ்திக மனப்பான்மை கொண்டிருந்தாள். வெள்ளைக்காரரது கொள்கையின்படி, மோக்ஷ லோகத்தில் இருக்கும் கடவுள் எல்லோருக்கும் பிதா என்பதையும், மனிதர்

எல்லோரும் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்பதையும் நாம் தெரிந்து கொள்வதே போதுமானது என்றும், அவரை ஒரு நாளைக்கு மூன்று தடவை மனதால் ஸ்தோத்திரம் செய்வதைத் தவிர, மற்ற வெளிப்படையான சாங்கியங்களும், மந்திரங்களும், கிரியைகளும் அர்த்தமற்றவை என்றும் அவள் உறுதியாக எண்ணி இருந்தாள். நமது ஜனங்கள் கல்லையும் செம்பையும் சர்வ வல்லமையுள்ள தெய்வம் என்று வைத்து அதற்குப் பூஜை, நைவேத்தியம், தூபதீபம், அர்க்கியம் முதலியவற்றைப் புரிவது கேவலம் அக்ஞான இருளே அன்றி வேறல்ல என்பதும் அவளது கொள்கை. அதுவுமன்றி, வெள்ளைக்காரர்கள் எந்த விஷயத் தையும் எந்த சாஸ்திரத்தையும் கண்காணும்படி நிரூபித்துக் காட்டுகிறவர்களன்றி, மூட நம்பிக்கையாக எந்தக் கொள்கையை யும் ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் அல்ல ஆதலால், கடவுள் விஷயத்திலும் அவர்கள் கொண்டுள்ள கொள்கைதான் சரியானது என்ற அபிப்பிராயத்தை அவள் உறுதியாக வைத்திருந்தாள். அதுவுமன்றி, வெள்ளைக்காரர்கள் யந்திரங்களைக் கொண்டும், ரசாயன மூலமாகவும், மின்சார சக்தி, பிராணவாயு முதலியவற்றை சாரமாக எடுத்து புட்டிகளில் அடைத்துக் காட்டுவது போல, அவர்கள் என்றைக்காவது ஒரு தினம், சாஸ்திர ரீதியாகவும், மனிதரது புத்தி உணர்ந்து நம்பும்படியாகவும், கடவுளைக் கண்டு பிடித்து சாரமாகத் திரட்டி புட்டிகளில் அடைத்துக் காட்டுவார்கள் என்ற கொள்கையையும் அவள் கொண்டிருந்தாள்.

ஆகவே, வேலாயுதம் பிள்ளை ஸ்படிகத்தினால் ஆன ஒரு லிங்கத்தை வைத்து சிவபூஜை செய்து, அதன் மனம் இரங்க வேண்டும் என்று மூன்று நாட்கள் பட்டினி கிடக்கப் போகிறார் என்பதையும், அதன் பலனாக, கந்தசாமி அகப்பட்டுப் போய் விடுவான் என்று அவர் அபிப்பிராயப்படுகிறார் என்பதையும் கேட்கவே, அந்த மடந்தை தனக்குத் தானே நகைத்துப் புரளி செய்து கொண்டதன்றி, "நம்முடைய மூடஜனங்கள் தங்களுக்குப் பக்கத்தில் உள்ள காற்று சுத்தமான காற்றா அசுத்தமான காற்றா என்பதையும், நாம் குடிக்கும் ஜலத்தில் எத்தனை கிருமிகள் இருக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ள மாட்டாமல், அக்ஞான இருளில் கிடந்து பூச்சி புழுக்கள் போல நெளிகிறார்கள்.

இவர்கள் மனிதரது கண்ணுக்கும் மனதிற்கும் எட்டாமல் மோக்ஷ லோகத்தில் இருக்கும் கடவுளின் தன்மையைக் கண்டு விட்டார்களோ! குருவிக்குக் கூண்டே மோக்ஷ லோகம் என்கிறபடி, அறிவையும் மூளையையும் உபயோகிக்கத் தெரியாத மூடர் களுக்குக் கல்லும் மண்ணுந்தான் கடவுள்" என்று தூஷித்தவளாய், தான் செய்து கொண்ட தீர்மானத்திற்கு இணங்க, வெளிப் பார்வைக்கு, அவர்களுக்குத் தகுந்தபடி நடக்க ஏற்பாடு செய்யத் தொடங்கினாள். ஆகவே, அன்றைய தினம் வடிவாம்பாள் எவ்வாறு ஸ்நானம் செய்து ஆடை அணிகிறாள் என்பதை வேலைக்காரியின் மூலமாய் அவள் தெரிந்து கொண்டு, தானும் மஞ்சள் பொடி முதலியவற்றை முகத்திற்கு உபயோகித்து ஸ்நானம் செய்து, முதல் நாள் திரிபுர சுந்தரியம்மாளால் வழங்கப் பட்ட பட்டுச் சேலை ரவிக்கை முதலியவற்றையும், ஏராளமான ஆபரணங்களையும் அணிந்து, நெற்றி, கைகள், வயிறு முதலிய இடங்களில் விபூதி பூசிக் கொண்டு பிரசாதம் பெறுவதற்கு ஆயத்தமாக இருந்தாள்.

வேலாயுதம் பிள்ளை காலை பத்துமணி முதல் பகல் இரண்டு மணி நேரம் வரையில் ஒரே நிலையில் உட்கார்ந்து சிவபூஜை செய்து கொண்டிருந்தார். கண்ணப்பா, திரிபுரசுந்தரியம்மாள், வடிவாம்பாள் ஆகிய மூவரும் கைகட்டி வாய் புதைத்து பயபக்தி விநயத்தோடு பக்கத்தில் நிற்க, வேலாயுதம் பிள்ளை பெருத்த புத்திர காமேஷ்டி யாகம் செய்பவர் போல வெகு நேரம் வரையில் சுவாமிக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகளை நிரம்பவும் விரிவாகவும் உருக்கமாகவும் பக்தி ததும்பிய மனத்தோடும் செய்து கொண்டே போனார்; அவர் அர்ச்சனை செய்த புஷ்பம் பூஜைப் பெட்டிக்கெதிரிலும் சுவாமியின் மேலும் மலை போலக் குவிந்து கிடந்தது. விளக்குகளின் நெய் மணமும் தூபத்தின் தசாங்கப் புகையும், ஊதுவர்த்தி, சந்தனம், பன்னீர், புஷ்பம் முதலிய வற்றின் பரிமள கந்தமும், மகா நைவேத்தியங்களின் பரிபக்குவ மணமும் ஒன்றுகூடி அது உண்மையிலேயே ஈசுவர சன்னி தானமோ என்ற பிரமிப்பை உண்டாக்கின. முடிவாக வேலாயுதம் பிள்ளை தமது இடது கையில் மணியை வைத்து அடித்துக் கொண்டு, வலது கையால் நைவேத்தியங்களை சுவாமிக்கு

நிவேதனம் காட்டிய பின், எழுந்து நின்று கொண்டு கற்பூரங் கொளுத்தி ஆராத்தி எடுக்கத் தொடங்கினார். அதற்கு சற்று முன் பட்டாபிராம பிள்ளையும், மனோன்மணியம்மாளும் அவ் விடத்திற்கு வந்து சேர்ந்தனர். பட்டாபிராம பிள்ளை தாம் இங்கிலீஷ் கற்று பெரிய உத்தியோகத்தில் அமர்ந்த பிறகு அத்தகைய சடங்குகளைப் பார்க்காமல் இருந்தவர் ஆதலால், அவருக்குள் மறைந்து கிடந்த தெய்வ பக்தியும் உருக்கமும் உடனே வெளிப் பட ஆரம்பித்தன. அவர் தமது கைகளை எடுத்து குவித்தபடியே வணக்க வொடுக்கமாக நின்றார். மனோன்மணியம்மாளுக்கு அந்தப் பூஜை குழந்தை விளையாட்டைப் போலத் தோன்றிய தன்றி, உண்மையில் அவளுக்கு தெய்வ பக்தியாவது புளகாங்கித மாவது தோன்றவில்லை. சர்வ வல்லமையுள்ள ஜெகத்பிதாவான கடவுள் ஒரு சிறிய கல்லில் இருப்பதாக அவர்கள் நினைத்துப் பூஜை செய்வது கடவுளை அவமரியாதைப்படுத்தும் செய்கையே அன்றி, அவரை ஸ்தோத்திரம் செய்வதாகாது என்று அவள் எண்ணி, தன் மனதிற்குள் அருவருப்பும், புரளியும் செய்தவ ளாய், வெளிப்பார்வைக்குத் தனது தந்தை செய்வது போல நடிக்கலானாள். முடிவாக வேலாயுதம் பிள்ளை எழுந்து நின்று கற்பூர ஆரத்தி எடுத்து தமது பக்திப் பெருக்கு முழுதையும் ஆறாய்ப் பெருகவிட்டு அதைச் சுழற்றியபடி அடியில் வரும் பாடல்களைப் பாட ஆரம்பித்தார்:-

1. *அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்*
*ஆநந்த பூர்த்தியாகி*
*அருளொடு நிறைந்ததெது, தன் அருள் வெளிக்குளே*
*அகிலாண்ட கோடியெல்லாம்*
*தங்கும்படிக் கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்*
*தழைத்ததெது, மனவாக்கினில்*
*தட்டாமல் நின்றதெது, சமய கோடிகளெலாம்*
*தன்தெய்வம் என்தெய்வமென்*
*றெங்குத் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது,*
*எங்கணும் பெருவழக்காய்*
*யாதினும் வல்லதொரு சித்தாகி இன்பமாய்*

என்றைக்கு முள்ளதெது, மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுளதெது அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டனவெலாம் மோன உருவெளியதாகவும்
கருதி அஞ்சலி செய்குவாம்.

2. ஊர் அனந்தம், பெற்றபேர் அநந்தம், சுற்றும்
உறவநந்தம், வினையினால்
உடல் அநந்தம், செயும்வினை அநந்தம், கருத்தோ
அநந்தம், பெற்றபேர்
சீர் அநந்தம், சொர்க்கம் நரகமும் அநந்தம், நல்
தெய்வமும் அநந்த பேதம்
திகழ்கின்ற சமயமும் அநந்தம், அதனால் ஞான
சிற்சத்தியால் உணர்ந்து
கார் அநந்தங்கோடி வருஷித்ததென அன்பர்
கண்ணும் விண்ணும் தேக்கவே
கருதரிய ஆநந்த மழைபொழியும் முகிலைநம்
கடவுளைத் துரிய வடிவைப்
பேர் அநந்தம் பேசி மறை அநந்தம் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்
பேசரும் அநந்த பத ஞான ஆநந்தமாம்
பெரிய பொருளைப் பணிகுவாம்.

3. அத்துவித வத்துவைச் சொற்பிரகாசத் தணியை
அருமறைகள் முரசறையவே
அறிவினுக் கறிவாகி ஆநந்த மயமான
ஆதியை அநாதி ஏக
தத்துவ சொரூபத்தை மதசம்மதம் பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வ்யோம நிலையை
நித்த நிர்மல சகித நிஷ்பிரபஞ்சப் பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்

*நிரஞ்சன நிராமயத்தைச்*
*சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்றிலகு*
*திவ்ய தேஜோமயத்தைச்*
*சிற்பர வெளிக்குள் வளர் தற்பரமதான பர*
*தேவதையை அஞ்சலி செய்குவாம்.*

என்று வேலாயுதம் பிள்ளை அநேகம் பாக்களைக் கூறி கற்பூர ஆரத்தி காட்டி, "ஹர, ஹர, மகாதேவா, சம்போ சங்கரா" என்று கூறி ஆரத்தியைக் கீழே வைத்துவிட்டு சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து நமஸ்கரித்துக் கன்னத்தில் அடித்துக் கொண்ட பிறகு, ஆரத்தியை எடுத்து பட்டாபிராம பிள்ளை முதலிய எல்லோருக்கும் காட்ட, ஒவ்வொருவராய் அதைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு விபூதிப் பிரசாதம் வாங்கிக் கொண்டனர்.

வேலாயுதம் பிள்ளை பாடிய பாக்களைக் கேட்டு அவரும் மற்றவர்களும் காட்டிய பக்திப் பெருக்கைக் கண்ட மனோன்மணி யம்மாள் சித்தக் கலக்கமடைந்து சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். அவர் பாடிய பாக்களின் சொற் களும் கருத்துகளும் அவளது மனதில் தோன்றத் தோன்ற அவளது தேகம் பரவசமடைய ஆரம்பித்தது. தானாகவே உரோமம் புளகித்து நின்று தாண்டவமாடத் தொடங்கியது. "ஆகா! எவ்வளவு அற்புதமான பாக்கள்! இப்படிப்பட்ட பாக்களும் நம்முடைய பாஷைகளில் இருக்கின்றனவா! கடவுளை இப்படி மகா அருமையான சொற்களால் வர்ணித்துள்ள வேறே தேசமும் இந்த உலகில் இருக்கிறதா? வெள்ளைக்காரர்கள் தங்களுடைய தெய்வமே உண்மையான தெய்வம் என்றும், தங்களுடைய மதத்தைத் தழுவியவர்களன்றி மற்றவர்கள் அஞ்ஞானிகள் என்றும், அவர்கள் மோக்ஷ லோகத்தை அடைய முடியாதென்றும் அல்லவா சொல்லுகிறார்கள். இந்தப் பாட்டு என்ன சொல்லுகிறது? எத்தனையோ விதமான மதஸ்தர்கள் தன் தெய்வம் என் தெய்வம் என்று எந்த வஸ்துவைக் கொண்டாடுகிறார்களோ அந்த வஸ்துவை நாம் வணங்குவோம் என்றல்லவா சொல்லுகிறது? அது மட்டுமா? தெய்வமே இல்லை என்ற நாஸ்திக வாதத்தையும் உண்டாக்கி இருப்பது எந்த வஸ்துவோ அதை நாம் வணங்கு

வோம் என்றல்லவா சொல்லுகிறது. ஆகா! இப்பேர்ப்பட்ட சமரசமான குணம் வாய்ந்ததும், கடவுளின் குணாதிசயங்களை உள்ளபடி வர்ணித்து அவனது இருதயத்தை எட்டிப் பிடிப்பது மான மதம் வேறே எங்கே இருக்கிறது? ஆகா! இந்தப் பாக்களில் வர்ணிக்கப்பட்டுள்ள கடவுளின் லட்சணம் எதை வேண்டு மானாலும் எடுத்துக் கொண்டு, அந்த லட்சணம் தம்தம் கடவுளிடம் இல்லை என்று எந்த மதஸ்தராவது மறுக்க முடியுமா? அல்லது, அவர்கள் இவைகளைவிட கடவுளின் அருகில் போகக் கூடிய பதங்களை உபயோகிக்க முடியுமா? கடவுள் என்பது என்ன, அல்லது, யார் என்ற கேள்விக்கு வேறே எந்த ஜாதியாராவது இப்பேர்ப்பட்ட அத்யாச்சரியகரமானதும், சாரமானதும், சமரசமானதும், எவராலும் மறுக்க முடியாததும், இதற்கு மேல் சேர்க்க முடியாததுமான முடிவான விடையைக் கண்டு எழுதி இருப்பார்களா என்பதே சந்தேகம். "ஐயோ! நம்முடைய மனிதர்கள் சுத்த அஞ்ஞான இருளில் கிடந்து பூச்சி புழுக்கள் போல நெளியும் வண்டர்கள் என்றல்லவா நான் இது வரையில் நினைத்தேன். இப்பேர்ப்பட்ட மேதாவிகளும் நம்முடைய தேசத்தில் இருந்திருக்கிறார்களா? நிதிக்குவியல்கள் போன்ற இத்தகைய நூல்களும் நம் தேசத்தில் இருக்கின்றனவா? ஆகா! இப்போதுதான் நம்மவர்கள் கல்லையும், செம்பையும் வைத்துப் பூசை செய்வதன் உள் கருத்து எனக்குத் தெரிகிறது. மனிதர்களின் உடம்பு பிரம்மாண்டமாக நீடித்திருந்தாலும், அவர்களோடு நாம் பேசும் போது அவர்களது முகத்தைப் பார்த்துத்தானே பேசுகிறோம். அதுவுமன்றி, பிரம்மாண்டமான ஒரு வீட்டிற்குள், அல்லது கோட்டைக்குள், அல்லது, பட்டணத் திற்குள் நாம் நுழைய வேண்டுமானால், சிறியதாக உள்ள அதன் வாசலைத் தானே நாம் முதலில் அடைய வேண்டும். அது போல அகண்டாகாரமாயும், அண்டாண்ட பிரம்மாண்டமாயும், சகல ஜீவராசிகளாயும் நிறைந்துள்ள கடவுளை, நாம் அவற்றிற் கெல்லாம் பெரிதான ஓர் உருவத்தைத் தேடிப் பூஜிப்பது சாத்திய மாகாதல்லவா. எப்போதும் சபலித்து அலையும் தன்மையுடைய மனத்தை ஒருமுகப்படுத்தி, மனதால் மாத்திரம் கடவுளை ஸ்தோத்திரம் செய்வது நிலைத்ததாயிராது. எங்கும் நிறைந்துள்ள

பரம்பொருள் ஒரு சிறிய கல்லிலும் இருப்பதாய் எண்ணி அதை அவருடைய முகம் போல மனதால் பாவித்து அகண்டாகாரமான பரமாத்மாவை ஸ்தோத்திரம் செய்வது எப்படிக் குற்றமாகும்? இவர் பாடிய பாக்களைக் கவனித்தால், நம்மவர் சிறிய கல்லை யும், மரத்தையும் பூஜை செய்யும் போது, எங்கும் நிறைந்துள்ள பரமாத்மாவை மனதால் நினைத்தே பூஜிக்கிறார்கள் என்பது இப்போது தான் தெரிகிறது. இப்பேர்ப்பட்ட அதிஅற்புதமான பொருள்கள் அடங்கிய புஸ்தகம் இங்கிலீஷ் பாஷையில் ஒன்றுகூட இல்லையே! ஆகா! இது வரையில் நான் என்ன பாஷையைக் கற்றேன்! என்ன விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்! ஒன்றுமில்லையே! ஐயோ! என் ஆயிசு காலத்தில் இத்தனை வருஷ காலமும், என் உயிரிலும் தேகத்திலும் பெரும் பாகத்தையும் இந்த அன்னிய பாஷையின் பொருட்டு, விரயம் செய்தேனே! சே! என்னுடைய தகப்பனார் எனக்கு என்ன வழி காட்டினார்! நம்முடைய சுய பாஷையில் உள்ள இப்பேர்ப்பட்ட அருமையான புஸ்தகங்களை நான் படிக்கும்படி செய்திருக்கக் கூடாதா! ஆகா! இதுவரையில் நான் பட்டபாடெல்லாம் வியர்த்தம் வியர்த்தம் வியர்த்தம்!" என்று மனோன்மணியம்மாள் தனக்குள் ளாகவே நினைத்து அடியோடு மாறுபட்டுப் புதிய மனுஷியாகத் திரிந்து நிற்க, சிறிது நேரத்தில், வேலாயுதம் பிள்ளையின் சிவபூஜை அன்றைய பகலுக்கு அவ்வளவோடு முடிவு பெற்றது. பிறகு எல்லோருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. பங்களா வின் வெளியில் ஆயிரக் கணக்கில் காத்திருந்த ஏழைகள் பரதேசி கள் முதலியோருக்கு வெகு நேரம் வரையில் அன்னமளிக்கப் பட்டதோடு பகல் பொழுது முடிய, இரவு வந்துவிட்டது. வேலாயுதம் பிள்ளை ஒரு கடுகளவு விபூதியை சுவாமி பிரசாதம் என்று வாயில் போட்டுக் கொண்டதே அவருக்கு அன்றைய ஆகாரம். அவரைச் சேர்ந்த மற்றவர்கள் இரண்டொரு பழத் துண்டுகளை உண்டு சிறிதளவு தண்ணீர் பருகினர். பட்டாபிராம பிள்ளைக்கும் மனோன்மணியம்மாளுக்கும் பசிப்பிணி தோன்றி வதைத்தது ஆனாலும், அவர்களும் தங்களது மனத்தில் பக்திப் பெருக்கினால் ஏற்பட்ட நூதன இன்பத்திலும் உற்சாகத்திலும் தனது பசியை அடக்கிக் கொண்டு பழத் துண்டுகளையே உண்ட

னர். அவ்வாறு வேலாயுதம் பிள்ளை முதலியோர் அன்றைய சிவ பூஜையிலேயே தமது பொழுதையும் கவனத்தையும் செலுத்தி இருந்தனர் ஆதலால், அன்று மன்னார் குடிக்குத் தந்தி அனுப்ப மறந்து போயினர்.

அன்றைய தினம் மாலையில் பத்திரிகை நிருபர் வந்து தெரிவித்த பிறகே பட்டாபிராம பிள்ளை டெலிபோன் மூலமாய்ப் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து கோமளேசுவரன் பேட்டையில் முதல் நாள் இரவில் அங்கஹீனம் நடந்த வரலாற்றைத் தெரிந்து கொண்டு அதை வெளியிட, வேலாயுதம் பிள்ளை முதலியோர் திக்பிரமை யோடு திகைத்துப் போய், தமக்கு ஏற்பட இருந்த பெருத்த அபாயத்தை ஈசன் தடுத்தருளிய வகையை எண்ணி எண்ணிப் பேருவகை பூத்தனராயினும், தமக்குப் பிரதிநிதிகளாக இருந்து அந்தப் பேரிடரை ஏற்றுக் கொண்டவர்களைப் பற்றி, அளவற்ற துயரமும், இரக்கமும் கொண்டு தவித்தனர். அந்தச் செய்தியை வேலைக்காரியின் மூலமாய்க் கேள்வியுற்ற மனோன் மணியம்மாளும் மற்றவர்களைப் போல பெருத்த திகிலும் திகைப்பும் அடைந்தவளாய், "ஆகா! என்ன ஆச்சரியம்! பகைவர்கள் இப்படிப்பட்ட சதியாலோசனையும் செய்வார்களா! இந்த மன்னார் குடியார் இந்த விபத்தில் இருந்து தப்பியது கடவுளின் செயல் என்றே கருத வேண்டுமன்றி வேறல்ல. இவர்கள் உண்மையிலேயே யோக்கியமான மனிதர்கள் ஆத லாலும், கடவுளிடம் பக்தி உடையவர்கள் ஆதலாலும், இவர் களைக் கடவுள் காப்பாற்றி இந்த அபாயத்தில் இருந்து தப்ப வைத்தார். இவர் பாடிய முதல் பாட்டின் ஆரம்பத்தில், 'கடவுள் இங்கு தான் இருக்கிறார், அங்கு தான் இருக்கிறார்' என்று குறிப் பிட்டுச் சொல்ல முடியாத எங்கும் ஒரே ஜோதியாக நிறைந் திருக்கிறார் என்பது உண்மையான விஷயமே. வெள்ளைக்காரர்கள் கடவுள் மனிதருக்குத் தோன்றாத் துணைவராக இருப்பவர் என்று ஒப்புக் கொண்டாலும், அவர் மோக்ஷ லோகத்தில் இருப்பவர் என்று சொல்லுகிறார்கள். நம்மவர் கடவுள் எங்கும் நிறைந்திருக் கிறார் என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே ஒரு சிறிய கல்லிலும் அவர் இருப்பதாக மனதால் பாவித்துப் பூஜை செய்கிறார்கள். கடவுள் எங்கும் நிறைந்து

மறைந்திருந்து, மனிதர்களைக் காப்பாற்றுகிறார் என்பதை ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், நாம் சகுனங்களிலும் உண்மை இருப்ப தாக ஏன் எண்ணக் கூடாது. கடவுள் நேரில் வந்து எதையும் நமக்குக் காட்டுவதில்லை. ஒரு மனிதர் மூலமாகவோ, அல்லது, வேறு மிருகம், அல்லது, தோற்றம் முதலியவற்றின் மூலமாகவோ அவர் நமக்குக் குறிப்பறிவிக்கிறார் என்பதை மாத்திரம் நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இவர்கள் நேற்று இரவு இங்கே வந்ததையும், இன்று சிவபூஜை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவர்களுடைய மனதில் உண்டானதையும், இவர் களுக்கு அனுகூலமாக எதிரிகளைச் சேர்ந்த மனிதருள் ஒருவன் நல்ல தருணத்தில் வேறு குற்றத்தைச் செய்து பிடிபட்டு சிறைச்சாலைக்குப் போய், அவ்விடத்தில் ஜெவானிடம் இந்த அபாயத்தை அறிவித்ததையும் எண்ண எண்ண இவர்கள் யோக்கியமான மனிதர்கள் என்பதும், கடவுள் எங்கும் இருந்து நல்லவர்களைக் காப்பாற்றுகிறார் என்பதும், கடவுளைத் தமது வசப்படுத்துவதற்கு நம்மவர்கள் கையாளும் முறையே சுலபமும், ஒழுங்குமான முறைகள் என்பதும் நிச்சயமாகின்றன" என்று மனோன்மணியம்மாள் தனக்குள் பலவாறு வாததர்க்கங்கள் புரிந்து முற்றிலும் புதிய மனுஷியாக மாறிப் போயிருந்தாள்.

அந்தச் சமயத்தில் அவர்களது பங்களாவின் வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதற்குள் இருந்து இரண்டு துரைகள் கீழே இறங்கினார்கள். ஒருவர் வெளுப்பு நிறமாய் இருந்த இங்கிலீஷ்கார துரை; மற்றவர் மாநிறமாய் இருந்த நமது நாட்டு சட்டைக்கார துரை. அவரும் மற்றவரைப் போல தொப்பி, சட்டை, நிஜார், பூட்ஸ், மூக்குக்கண்ணாடி முதலிய ஆடம்பரங் களோடு வந்திருந்தார். இங்கிலீஷ்கார துரையைக் கண்ட டலாயத்துகள் குனிந்து அவருக்குச் சலாம் போட்டு, எஜமானர் விருந்தாளிக ளோடு முதல் உப்பரிகையில் இருப்பதாகக் கூறி னார்கள்; அவர்களுள் ஒருவன் உடனே மேலே ஓடி போலீஸ் கமிஷனர் துரையும், இன்னொரு சட்டைக்கார துரையும் வந்திருக்கிறார்கள் என்று பட்டாபிர்ாம பிள்ளையிடம் தெரிவிக்க, அவர்களை உள்ளே அழைத்து வரும்படி கலெக்டர் உத்தரவு செய்தார். அதைக் கேட்டுக் கொண்ட டலாயத்து கீழே வந்து துரைகள்

இருவரையும் உப்பரிகைக்கு அனுப்பினான். பட்டாபிராம பிள்ளையோடு, வேலாயுதம் பிள்ளையும், கண்ணப்பாவும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் சம்பாஷித்ததைக் கேட்டுக் கொண்டு பக்கத்து அறையில் திரிபுரசுந்தரியம்மாள் மனோன் மணியம்மாள் முதலியோர் தலை மறைவாக இருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் துரைகள் மேலே வந்தனர். முன்னால் வந்த போலீஸ் கமிஷனர் பட்டாபிராம பிள்ளையை நோக்கி சந்தோஷ மாக நகைத்த வண்ணம், "நாங்கள் அகால வேளையில் வருவதைப் பற்றி மன்னிக்க வேண்டும். இருந்தாலும் உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்ல வேண்டும் என்று நானே நேரில் இங்கே வந்தேன்" என்று கூறிய வண்ணம் அவரிடம் நெருங்கி னார். உடனே பட்டாபிராம பிள்ளை அவர்கள் இருவரையும் உட்காரச் செய்து, "நீங்கள் என் பொருட்டு இந்த அகாலத்தில் இவ்வளவு தூரம் வந்ததைப் பற்றி நானல்லவா உங்களுக்கு உபசார வார்த்தை சொல்லக் கடமைப்பட்டவனாய் இருக்கிறேன். நீங்கள் குறிக்கும் சந்தோஷச் செய்தி, நேற்று இரவில் கோமளேசு வரன் பேட்டையில் நேர்ந்த அபாயத்திலிருந்து இவர்கள் தப்பிய சங்கதிதானே" என்றார்.

**போலீஸ் கமிஷனர்:-** அந்தச் சங்கதியைத் தான் நீங்கள் டெலிபோன் மூலமாய்ப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடத்தில் இருந்து தெரிந்து கொண்டீர்களாமே. அதைப் பற்றி நான் மறுபடியும் சொல்ல வருவேனா?

**கலெக்டர்:-** அதிருக்கட்டும். நான் இன்று காலையில் வழக்கப் படி உங்களுடைய ஜாகைக்கு வந்தபோது, நீங்கள் விடியற்காலை யிலேயே எழுந்து எங்கேயோ போய்விட்டதாகச் சொன்னார் களே. அப்போது புறப்பட்டுப் போனவர்கள் எப்போது மறுபடி திரும்பி வந்தீர்கள்? நேற்று இரவு கோமளேசுவரன் பேட்டையில் நடந்த சம்பவத்தைப் பற்றிய செய்தி உங்களுக்கு எப்போது கிடைத்தது?

**கமிஷனர்:-** அந்தச் சம்பவத்தைப் பற்றி நான் காலையிலிருந்து இது வரையில் உங்களுக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்ற கருத்தோடு நீங்கள் கேட்கிறீர்கள் என்பது தெரிகிறது. நேற்று இரவு

மூன்று மணிக்கு இந்த ஊர் கவர்னர் வீட்டிலிருந்து டெலிபோனில் எனக்கு ஒரு செய்தி வந்தது. கவர்னருடைய மாளிகையில் இருந்த ஒரு குசினிக்காரன் சில நகைகளைத் திருடிக் கொண்டு ஓடிப்போய் விட்டதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியாகவும் எனக்குச் செய்தி கிடைத்தது. நான் உடனே புறப்பட்டு கவர்னருடைய மாளிகைக்குப் போய், அந்தத் திருட்டைப்பற்றி விசாரணை செய்து, அந்தக் குசினிக்காரனைக் கண்டு பிடிக்க எத்தனித்துப் பல இடங்களிலும் துப்பு விசாரித்து கடைசியில் அரக்கோணத்திற்குப் போய் அவனைப் பிடித்துக் கொண்டு இன்று சாயுங்காலம் வந்து சேர்ந்தேன். அவனிடம் இருந்த நகைகளை எல்லாம் கைப்பற்றி உடனே கவர்னருக்கு அனுப்பி விட்டு, அவனைப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரோடு சப் ஜெயிலுக்கு அனுப்பினேன். நான் அரக்கோணத்தில் இருந்து சென்டிரல் ஸ்டேஷனில் வந்து இறங்கிய காலத்தில் எதிரில் இருந்த ஆஸ்பத்திரி என் கண்ணில் படவே, எனக்கு அந்த கோபாலசாமியின் நினைவு வந்தது. குசினிக்காரனை நான் சப் இன்ஸ்பெக்டர் வசம் அனுப்பிவிட்டு, நேராக ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து பெரிய டாக்டரைக் கண்டு கோபாலசாமியின் நிலைமையைப் பற்றி விசாரித்தேன். தாங்கள் எத்தனையோ மருந்துகள் கொடுத்துப் பார்த்ததும், வேறு பல சிகிச்சைகள் செய்ததும் பலன் தரவில்லை என்றும், அவனுடைய நாடி நிரம்பவும் துர்ப்பலமாய் அடித்துக் கொள்வதாகவும், அவன் பொழுது விடிவதற்குள் அநேகமாய் இறந்து போவான் என்றும் அவர் சொன்னார். அதைக் கேட்ட உடனே என் மனம் மிகுந்த விசனத்தையும் சஞ்சலத்தையும் அடைந்து விட்டது. கடைசியாக நான் அவனை நேரில் பார்த்து விட்டு உங்களிடம் வரலாம் என்று நினைத்து அவன் இருந்த இடத்திற்குப் போனேன். போன காலத்தில், அந்த ஆஸ்பத்திரியின் இரண்டாவது டாக்டரான முதலியாரும், இதோ என்னோடு வந்திருப்பவரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். இதோ என்னோடு வந்திருக்கிறவர் எப்போதும் இருப்பது கல்கத்தாவாம். அந்த ஊரில் இவர் ஒரு பிரபலமான டாக்டராம். இவருடைய பெயர் மிஸ்டர் வெல்டன் என்பதாம். இந்த ஊரில் உள்ள கோடீசுவரரான யாரோ ஒரு செட்டியாருக்கு முக்கியமான ஒரு வைத்தியம் செய்வதற்காக அவர் இவரைத் தருவித்தாராம். இந்த ஊருக்கு வந்த இடத்தில், இவருக்கும் இந்த

ஊர் ஆஸ்பத்திரியின் இரண்டாவது டாக்டரான முதலியாருக்கும் பரிச்சயம் ஏற்பட்ட தாம். அவரும் இவரும் பேசிக் கொண்டிருந்த காலத்தில், முதலியார் அந்த கோபாலசாமியின் விஷயத்தைப் பற்றி இவரிடம் தெரிவித்தாராம். இவர் அதைக் கேட்டு ஆச்சரியமடைந்து நேற்று மாலையில் முதலியாரோடு கூட ஆஸ்பத்திரிக்குப் போய் கோபால சாமியைப் பார்த்து விட்டுத் தமது ஜாகைக்குப் போனாராம். மறுபடி இன்று பகலில் இவர் முதலியாரிடம் வந்து, தாம் தமக்குத் தெரிந்த சில சிகிச்சைகளைச் செய்ய உத்தரவு கொடுத்தால், கோபாலசாமியின் பொறிக் கலக்கம் தெளியும்படி தாம் செய் வதாக இவர் தெரிவித்தாராம். அதற்காக முதலியார் இவரை அழைத்துக் கொண்டு அங்கே வந்தார். அந்தச் சமயமும் நான் போன சமயமும் தற்செயலாக ஒத்துக் கொண்டன. மற்ற நோயாளிகள் இருக்கும் இடத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள ஓர் அறையில் கோபாலசாமி படுக்கவைக்கப்பட்டிருக்கி றான் அல்லவா. அந்த அறைக்குள் நானும், முதலியாரும், இந்த டாக்டருமாகப் போனவுடனே, இவர் கோபாலசாமி யண்டை போய் உட்கார்ந்து நாடி பார்க்கும் குழாயை அவனுடைய மார்பின் மீது வைத்து பல இடங்களில் பார்த்தார்; பார்த்தவர் உடனே என்ன செய்தார் என்றால் பக்கத்தில் நின்ற என்னைப் பார்த்து செவிடனுடன் பேசுவது போல ஓங்கிய குரலில் பலமாகப் பேசத் தொடங்கி, "என்ன மாசிலாமணிப் பிள்ளை! உம்முடைய சிநேகிதரைப் பார்க்க வேண்டும் என்று நீர் கும்பகோணத்தில் இருந்து வந்தது வீணாய்ப் போய்விட்டது. அநேகமாய்ப் பிராணன் போய்விட்டது என்றே சொல்ல வேண்டும்" என்றார். இவருடைய சொல்லைக் கேட்டவுடனே அதன் கருத்தை அறிந்து கொள்ளாமல் முதலியார் பிரமித்துப் போய் விட்டார். இவர் ஏதோ தந்திரம் செய்கிறார் என்று நான் உடனே உணர்ந்து கொண்டு, "டாக்டர் ஐயா! முகத்தில் இன்னம் கொஞ்சம் உயிர்க்களை இருக்கிறது. ஏதாவது மருந்து கொடுத்துப் பாருங்கள்" என்றேன். இவர் உடனே என்ன செய்தார் என்றால், "மாசிலாமணிப் பிள்ளை! உம்முடைய சிநேகிதர் இறந்து போன மாதிரி தான் எண்ண வேண்டும். இந்த மாதிரி பொறிக்கலக்கம் அடைந்தவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். மற்ற டாக்டர் களால் அவர்களுக்குத்

தெளிவுண்டாக்கவே முடியவில்லை. என்னிடம் ஒரு கலிக்கம் இருக்கிறது. அது மிளகாய்ப் பொடியை விட நூறு மடங்கு அதிக காரமாய் இருக்கும். அதில் கொஞ்சம் எடுத்து இரண்டு கண்களிலும் தடவி விட்டால், உடனே பொறிக் கலக்கம் தெளிந்து போகும். அந்தப் பொடியை நான் இதோ கொண்டு வந்திருக்கிறேன். இதை சாதாரணமாக நல்ல நிலைமை யில் இருப்பவர்கள் கண்ணில் போட்டுக் கொண்டால், ஆயிரம் ஊசிகளால் சுருக் சுருக்கென்று குத்துவது போல இருக்கும். பொறிக் கலக்கத்தை இது ஒரு நொடியில் விலக்கிவிடும். ஆனால் இவருக்குக் கொஞ்சமாவது நாடி அடித்துக் கொண்டிருந்தால் இந்த மருந்தை நான் உபயோகிப்பேன்; இவருடைய பிராணன் போய் விட்டது நிச்சயம். இருந்தாலும் பரவாயில்லை. இவருடைய ஆப்த சிநேகிதரான நீர் வந்து இவரோடு பேசப் பிரியப்படுகிறீர். அதைக் கருதி நான் இந்தக் கலிக்கப் பொடியில் கொஞ்சம் இவருடைய கண்களில் போடுகிறேன்" என்று பலமாகக் கூச்சலிட்டுப் பேசிக் கொண்டே, இவர் தம்மிடம் இருந்த சாதாரண மூக்குப் பொடியில் கொஞ்சம் எடுத்து அவனுடைய கண்களிலும் தடவினார். தடவியதில் கண்களில் இருந்து கொஞ்சம் கண்ணீர் வழிந்ததே அன்றி அவன் கொஞ்சமாவது அசையவுமில்லை; அவனுக்கு ஸ்மரணை உண்டானதாகத் தோன்றவுமில்லை. உடனே இவர் மறுபடியும் கூச்சலிட்டுப் பேசத் தொடங்கி "ஐயா! மாசிலாமணிப் பிள்ளை! பார்த்தீரா? கண்களில் நான் போட்ட கலிக்கத்தில் ஒரு துளி கண்ணீர்கூட வெளியில் வரவில்லை. இவர் இறந்து போனதற்கு இதை விட வேறே சாட்சியும் வேண்டுமா? சரி! முதலியார் ஐயா! இவரை இனி நாம் அடக்கம் செய்து விடுவோம். பக்கத்தில் இருக்கும் தோட்டத்தில் ஒரு குழி தோண்டச் சொல்லுங்கள்" என்றார். அதற்குள் முதலியாரும் இவர் செய்யும் தந்திரத்தை அறிந்து கொண்டார் ஆதலால் அவர், "சரி, நான் போய்க் குழி வெட்ட ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிய வுடன் அவ்விடத்தை விட்டு வெளியில் போயிருந்து கால் நாழிகைக் கெல்லாம் திரும்பி வந்து, "குழி வெட்டியாய் விட்டது. இவரைப் போட்டுப் புதைத்து விடலாம்" என்றார். நோயாளிகளைப் படுக்க வைத்து எடுத்துப் போவதற்கு ஏணி

போல நீளமாய் இருக்கும் படுக்கை ஒன்றையும் அவர் கொண்டு வந்தார். நாங்கள் மூவரும் கோபாலசாமியை எடுத்து, அதில் படுக்க வைத்து தோட்டத்திற்குள் கொண்டு போய், அவ்விடத்தில் இருந்த ஒரு குழிக்குப் பக்கத்தில் வைத்து அவனைத் தூக்கி அந்தக் குழிக்குள் படுக்க வைத்தோம். அந்தக் குழி இடுப்பளவு ஆழம் இருந்தது. அவனைக் குழிக்குள் இறக்கிவிட்ட பிறகு இவர் கால் பக்கத்தில் கொஞ்சம் மண்ணைத் தூவியபடி, "சரி; தள்ளுங்கள் மண்ணை; நன்றாக மூடிப் புதைத்து விடுவோம். ஐயோ பாவம்! இவருடைய முகத்தைப் பார்க்க எனக்கு நிரம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. இவருக்கு வயசு சுமார் இருபத்தைந்து தான் இருக்கலாம். இவருக்குத் தாய் தகப்பன் எங்கே இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. இவரைப் பார்த்தவுடனே எனக்கு இன்னொருவனுடைய ஞாபகம் வருகிறது. நேற்று நான் மன்னார்குடிக்குப் போயிருந் தேன். அந்த ஊர் ஆஸ்பத்திரியில் நேற்று ஒருவன் இறந்து போனான். அவனுக்கு வயது இருபதுதான் இருக்குமாம். அவனுடைய அழகை என்னவென்று சொல்லுவேன். அதுவு மன்றி, அவன் அந்த ஊரிலேயே பெருத்த தனவந்தரான வேலா யுதம் பிள்ளை என்பவருடைய இரண்டாவது பிள்ளையாம். அவனுக்கு மாத்திரம் ஒரு கோடி ரூபாய்க்கு ஐவேஜி உண்டாம். அந்தப் பையன் இந்த ஊரில் பி.ஏ. பரீட்சையில் தேறி, பி.எல். பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தானாம். அவன் இந்த ஊரில் கோமளேசுவரன் பேட்டையில் தான் இருந்தானாம். அவன் ஏதோ அபாயத்தில் மாட்டிக் கொண்டு நேற்று திடீரென்று இறந்து போய்விட்டான். அவனை நீங்கள் பார்த்திருந்தால், எப்படி வருத்தப்பட்டிருப்பீர்கள் தெரியுமா?" என்றார். இவர் அவ்விதம் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட உடனே குழிக்குள் கிடந்த கோபாலசாமியின் பிணம், "ஆ! அப்படியா! கந்தசாமி இறந்தா போய்விட்டான்!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்து கொண்டது. அதைக் காண நானும் டாக்டர் முதலியாரும் பிரமிப்படைந்து ஸ்தம்பித்துப் போய் விட்டோம். அப்போதும் இவர் நிதானமாகவே பேசத் தொடங்கி, "சரி; நான் போட்ட கலிக்கப் பொடி வேலை செய்து இவருடைய பொறிக் கலக்கத்தை நிவர்த்தி செய்திருக்கிறது. வாருங்கள், இவரை

மறுபடி ஏணியில் வைத்துத் தூக்கிக் கொண்டு போய்ப் படுக்கையில் விடுவோம்" என்றார். உடனே நாங்கள் மூவரும் கோபால சாமியைக் குழியில் இருந்து வெளிப்படுத்தி ஏணியில் படுக்க வைத்து மறுபடி அவனைப் படுக்கைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஆகாரம் இல்லாமையால் அவனுடைய தேகம் களைப்படைந்து போயிருந்தது ஆகையால், அவனுக்கு உடனே ஆகாரம் கொஞ்சம் வரவழைத்துக் கொடுத்தோம். அவன் அதைச் சாப்பிட்டான். கொஞ்ச நேரத்தில் அவனது களை தெளிந்தது. அவன் மன்னார்குடி கந்தசாமிக்கு என்ன அபாயம் நேர்ந்தது என்பதையும், அவன் எப்படி இறந்தான் என்பதையும் அறிய ஆவல் கொண்டவனாய் அதையே பலதடவை கேட்க, நாங்கள் அவனுடைய கேள்விகளுக்குச் சரியான விடை கொடுக்காமல், சனிக்கிழமை அன்று அவனும் இன்னொரு ஸ்திரீயும் இந்தப் பங்களாவிற்கு என்ன கருத்தோடு வந்தார்கள் என்பதை உள்ளபடி சொன்னால் கந்தசாமியைப் பற்றிய வரலாற்றை நாங்கள் சொல்லுவோம் என்றோம். கோபாலசாமி உடனே உண்மையைத் தெரிவித்தான். தனக்குச் சம்சாரமாகப் போகிற மனோன்மணியம்மாளை நேரில் பார்த்து, அவளது தோற்றத் தையும் குணாதிசயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கந்தசாமியே பெண் வேஷம் போட்டுக் கொண்டான் என்றும், தாங்கள் இருவரும் மன்னார்குடி வேலாயுதம் பிள்ளை யின் மைத்துனியும், மைத்துனி புருஷனும் என்று சொல்லிக் கொண்டு வந்ததாயும், வந்த இடத்தில் நடந்த மற்ற வரலாற்றை யும் தெரிவித்தான். அன்றைய இரவில் முரட்டு ஆள்கள் வந்து அடித்த காலத்தில் அவனுக்கு உண்மையில் கொஞ்சமே காயம் பட்டதாம். அதனால், அவனுக்கு மறுநாள் பகல் வரையில் மூளை கலக்கமாக இருந்து, உடனே தெளிவு அடைந்து போய்விட்டதாம். ஆனாலும், கந்தசாமிக்கு என்ன நேர்ந்தது என்பதையும், அவன் எவ்விதமான தகவலை வெளியிட்டிருக்கிறான் என்பதையும் தெரிந்து கொள்ளாமல், தான் உண்மையை வெளியிட்டால், அது அவனுக்கு அவமானமாக முடியும் என்று நினைத்து, அவன் ஸ்மரணை தெளியாதவன் போலவே பாசாங்கு பண்ணிக் கொண்டிருந்தானாம். ஆகாரம் உட்கொண்டால், டாக்டர்கள் தனது

சூதை அறிந்து கொள்வார்கள் என்று அவன் ஆகாரத்தையும் நாடாமல் மனவுறுதியோடு இருந்து வந்தானாம். தன் உயிர் போனாலும் சரி, தன்னைக் குழியில் வைத்துப் புதைத்து விட்டாலும் சரி, தான் கந்தசாமியின் தகவலின்றி எதையும் வெளியிடக் கூடாது என்று அவன் கடைசி வரையில் பிணம் போல இருந்தானாம். கந்தசாமி இறந்து போய்விட்டான் என்று கேள்வியுற்ற உடனே, அவன் அதை உண்மை என்று நம்பி பயந்து போய், அதன் வரலாற்றை அறிய ஆவல் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டானாம். இது வரலாற்றை எல்லாம் கேட்ட உடனே அவனையும் அழைத்துக் கொண்டு உடனே இங்கே வர வேண்டும் என்ற ஆவல் எழுந்து துடித்தது. ஆனால், அவன் ஏழெட்டு நாளாய் ஆகாரமே இல்லாமல் கிடந்து உண்மையிலேயே இறக்கும் தருணத்தில் இருப்பதால், அவனுக்கு நல்ல ஆகாரம் கொடுத்து, இன்று இரவு முழுதும் அங்கேயே படுக்க வைத்து நாளைக்கு அழைத்துக் கொண்டு போகலாம் என்று பெரிய டாக்டர் சொன்னார். ஆகையால் நாங்கள் அவனை அழைத்து வரவில்லை. இப்பேர்ப்பட்ட அபாய காலத்தில் நிரம்பவும் சூக்ஷுமமாக அவனுடைய சூதை உணர்ந்து அசாத்தியமான தந்திரம் செய்து அவனிடத்தில் இருந்து உண்மையைக் கிரகித்த மகா நிபுணரான இந்த டாக்டரை உங்களுக்குப் பரிச்சயம் செய்து வைக்க வேண்டும் என்று நான் இவரை இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன். இவர் அவசரமாய்ப் போக வேண்டும் என்றார். ஐந்து நிமிஷத்திற்கு மேல் நிற்க வைப்ப தில்லை என்று சொல்லி இவரை அழைத்து வந்தேன். இது தான் நான் இப்போது உங்களுக்குக் கொண்டு வந்திருக்கும் சந்தோஷச் சங்கதி — என்றார்.

போலீஸ் கமிஷனர் கூறிய மேற்படி வரலாற்றைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை, வேலாயுதம் பிள்ளை முதலிய எல்லோரும் அளவற்ற வியப்பும் திகைப்பும் அடைந்தனர். கல்கத்தாவில் இருந்து வந்துள்ள மிஸ்டர் வெல்டன் என்னும் டாக்டருடைய அத்யாச்சரியகரமான சாமர்த்தியத்தைப் பற்றி அவர்கள் எல் லோரும் அவரை அபாரமாக மெச்சிப் புகழ்ந்ததன்றி தங்களது

நன்றி அறிதலையும் பன்முறை வெளியிட்டுக் கூறினர். பட்டாபிராம பிள்ளை போலீஸ் கமிஷனரைத் தனியாக அழைத்துக் கொண்டு போய் தாம் ஏதாவது சன்மானம் செய்தால், மிஸ்டர் வெல்டன் அதை ஏற்றுக் கொள்வாரா என்று கேட்க, அவர் அதை வாங்க மாட்டார் என்று கமிஷனர் மறுமொழி கூறிவிட்டார். மிஸ்டர் வெல்டன் தமக்கு அவசரமாய்ப் போக வேண்டும் என்றும், தாம் மறுபடி வந்து அவர்களைப் பார்ப்பதாகவும் கூறி, அவ்விடத்தை விட்டு உடனே எழுந்து வெளியில் போய் விட்டார். போலீஸ் கமிஷனரும் மறுநாள் காலையில் வருவதாகக் கூறி பட்டாபிராம பிள்ளை முதலியோரிடம் விடைபெற்றுக் கொண்டு மிஸ்டர் வெல்டனைத் தொடர்ந்து போய்விட்டார். கந்தசாமி காணாமல் போன வகை இன்னதென்பது திட்டமாகத் தெரிந்து போனது ஆனாலும், அவனைப் பகைவர் இரவில் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள் என்ற செய்தியை உணர்ந்ததனால், எல்லோரும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கலக்கமும் கலவரமும் அடைந்தனர். தனது அழகையும், குணாதிசயங்களையும் கண்டறியும் பொருட்டு கந்தசாமியே பெண் வேஷந் தரித்து வந்தான் என்பதை உணர்ந்த மனோன்மணியம்மாளின் மன நிலைமையை நாம் யூகித்துக் கொள்வதே எளிதன்றி அதை விவரிப்பது அசாத்தியமான காரியம். அவன் தன்னிடத்தில் நடந்து கொண்ட மாதிரியும், அவன் தனக்கெதிரில் தரையில் உட்கார்ந்து கொண்ட மாதிரியும், அவனுக்கும் தனக்கும் நடந்த பல வாக்குவாதங்களும் மின்னல் பளிச்சென்று மின்னுவது போலவும் அப்போதே நிகழ்வன போலவும் அவளது கண்ணிற்கு முன் தோன்றின. கந்தசாமி பெண் வேஷத்தில் தத்ரூபம் அப்ஸர ஸ்திரீ போல இருந்ததொன்றே மனோன்மணியம்மாளை அப்படியே பிரமித்து சித்தப் பிரமை கொண்டு நிலை கலங்கிப் போகும்படி செய்து விட்டது. "ஆகா! அவருடைய சொல்லழகும், புத்தியின் விசாலமும், முகத்தின் வசீகரமும், உடம்பின் அழகும் நான் என்ன வென்று சொல்லுவேன்! அவரா எனக்குப் புருஷராக வரிக்கப்பட்டிருப்பவர்! ஐயோ! அவரை அதே கோலத்தில் நான் மறுபடி காணக் கிடைக்குமா! ஆகா! அவர் இப்போது எங்கே இருக்கிறாரோ தெரியவில்லையே! ஐயோ! என் தேகம்

பதறுகிறதே! என் உயிர் தள்ளாடுகிறதே! மூளை சுழலுகிறதே! அவர் வந்து என்னை தூஷித்துச் சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவ்வளவுக்கவ்வளவு இப்போது அழகாய்த் தோன்றுகிறதே! அவர் வந்து ஒரு க்ஷணத்தில் என் உயிரையும் மனதையும் கொள்ளை கொண்டு போய் விட்டாரே! என்னுடைய நடையுடை பாவனைகளைக் கண்டு அவர் என்மேல் அருவருப்புக் கொண்டு போயிருப்பாரோ! என்னை அவர் கட்டமாட்டேன் என்று மறுத்து விடுவாரோ! அவரால் வெறுக்கப்பட்ட நடையுடை பாவனை களை எல்லாம் நான் இந்த நிமிஷமே விலக்கத் தயார். என்னிடம் உள்ள இங்கிலீஷ் புத்தகங்களை எல்லாம் நான் இப்போதே நெருப்பில் போட்டுக் கொளுத்தி விடுகிறேன். இனி அவரும் அவரைச் சேர்ந்த மற்றவரும் காலால் இடுவதைத் தலையால் செய்து அடிமையிலும் அடிமையாக நடக்க நான் என் முழு மனதோடு சம்மதிக்கிறேன். நான் அவரிடம் தவறாக நடந்து அவரிடம் அபராதியானதை மாத்திரம் அவர் மறந்துவிட வேண்டும். ஈசா! அதற்கு நீ தான் துணை செய்ய வேண்டும். இனி நான் உன் அடைக்கலம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருக்கும் பரதேவதையான உன்னை இனி நானும் அஞ்சலி செய்கிறேன்" என்று தனக்குத்தானே எண்ணமிட்டு அன்றைய இரவு முழுதும் தூங்காமல் படுக்கையில் புரண்டு புரண்டு புழுங்கித் தவித்திருந்தாள்.

★ ★ ★

13-வது அதிகாரம்

## மொட்டைத்தலைக்கேற்ற பட்டுக்குல்லா

**நி**ச்சயதார்த்தத்திற்காகக் குறிக்கப்பட்டிருந்த தினமாகிய வெள்ளிக் கிழமை இரவு கோமளேசுவரன் பேட்டையில் ரமாமணியம்மாள் முதலியோரை அங்கஹீனப் படுத்திவிட்டு ஓடிவந்தவர்களான இடும்பன் சேர்வைகாரனது ஆட்களுள் பதினாறு மனிதர்கள் பிடிபட்டுப் போயினர். அவர்கள் எல்லோரையும் போலீசார் உடனே அழைத்துப் போய் விசாரணைக் கைதிகளை அடைத்து வைக்கும் சப் ஜெயிலில் பந்தோபஸ்தாக அடைத்து வைத்தனர்.

அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், அவர்கள் தமக்குள் கலந்து பேசி கட்டுப்பாடாக ஒரே விதமான தகவலைத் தெரிவிப்பார்கள் என்ற நினைவினால், போலீசார் அவர்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பதினாறு அறைகளில் வைத்ததன்றி, அவர்கள் எல்லோரையும் வரிசையாக நிறுத்தி போட்டோ படமும் பிடித்து வைத்துக் கொண்டனர். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்களை ஒவ்வொருவராக வரவழைத்து ரகசியமாக வைத்துக் கொண்டு உண்மையை வெளியிடும்படி கேட்க, அவர்கள் எல்லோரும் ஒரேவிதமான தகவலையே தெரிவித்தனர். தாங்கள் சந்தைகள், கடைகள், ரயிலடி முதலிய இடங்களில் நின்று மூட்டைகள் எடுத்து வேலை செய்யும் கூலியாள்கள் என்றும், அந்த இரவில் தாங்கள் தங்கள் வழக்கப்படி கோமளேசுவரன் பேட்டையில் வீட்டுத் திண்ணைகளில் மூலைக் கொருவராய்ப் படுத்திருந்த காலத்தில் அவ்விடத்தில் உண்டான பெருத்த கூக்குரலைக் கேட்டுத் தாங்கள் திடுக்கிட்டு விழித்து எழுந்து ஓடிவந்ததாயும், கலியாண வீட்டில் திருடர்கள் புகுந்து அடித்து விட்டு ஓடியதைக் கண்டு பயந்து, தாங்களும் அவர்களைச் சேர்ந்தவர்கள் என்று ஜனங்கள் எண்ணிவிடப் போகிறார்களே என்று நினைத்து அஞ்சி ஓடியதாகவும், அந்த சமயத்தில் தம்மைப் போலீசார் பிடித்துக் கொண்டதாகவும் உண்மையில் தாங்கள் எவ்வித குற்றமும் செய்யாத நிரபராதிகள் என்றும் அழுத்தந் திருத்தமாகக் கூறினர். அந்தப் பதினாறு மனிதர்களும் தமக்குள் ஒருவரை ஒருவர் அப்போதைக்கப்போது பார்த்திருக்கலாம் ஆயினும், ஒருவருக்கொருவர் உறவாவது, சிநேகமாவது, பரிச்சயமாவது இல்லை என்றும் அவர்கள் கூறினர். அவர்கள் சென்னைக்கு வரும் முன்னரே இடும்பன் சேர்வை காரன் அவர்களுக்கு நன்றாகப் பாடம் ஏற்றி வைத்திருந்தான் ஆதலால், போலீசார் எவ்வளவோ நயமாகவும், பயமுறுத்தியும், வற்புறுத்தியும் கேட்டும், உண்மையை அவர்களிடத்தில் இருந்து கிரகிக்க எத்தனித்ததெல்லாம் வீணாய் முடிந்தது. "என்னை நீங்கள் கொன்றாலும் கொல்லுங்கள். நான் யாதொரு பாவத்தையும் அறியேன். நான் திருடவுமில்லை; யாருக்கும் எவ்வித கெடுதலும் செய்யவில்லை" என்று ஒவ்வொருவனும் கடைசி வரையில் ஒரே

சாதனையாய்ச் சாதித்துவிடவே, போலீசார் அவர்கள் சொல்வது ஒருகால் உண்மையாய் இருக்குமோ என்ற சந்தேகத்தைக் கொள்ளத் தொடங்கி, அவர்கள் தான் உண்மையான குற்ற வாளிகளா என்பதை தாம் வேறு சாட்சிகளின் மூலமாகவே ருஜுப்படுத்த வேண்டும் என்று நினைத்து ரமாமணியம்மாள் முதலியோர் செளக்கியம் அடைந்து சரியான நிலைமைக்கு எப்போது வருவார்கள் என்று நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த் திருந்தனர்.

ரமாமணியம்மாள், அவளது தாய், தந்தை, பக்கிரியா பிள்ளை, போயி ஆகிய ஐவரும் சென்னை பெரிய ஆஸ்பத்திரியில் ஒரு பிரத்தியேகமான கூடத்தில் ஐந்து கட்டில்களின் மீது படுத்திருந் தனர். அக்கினித் திராவகம் கொட்டப்பட்டதனால் பக்கிரியா பிள்ளையின் முகம் முழுதும் வெந்து புண்பட்டுப் போயிருந்தமை யால், கழுத்திற்கும் மேல்பட்ட பாகம் எல்லாம் மருந்து பூசப் பட்டிருந்தது. ரமாமணியம்மாளின் மூக்கிலும், போயியின் கண்களிலும், மற்ற இருவரது காதுகளிலும் மருந்துகள் வைத்து பெரிய துணிக்கட்டுகள் போட்டிருந்தார்கள் ஆதலால், வீக்கத்தி னாலும் துணிக்கட்டுகளினாலும் அவர்களது முகங்கள் பார்வைக்கு நிரம்பவும் பயங்கரமாகத் தோன்றின. ரமாமணியம்மாளின் மீது காணப்பட்ட விலையுயர்ந்த ஆடையாபரணங்களைக் கொண்டும், அவர்களது சாத்வீகத் தோற்றத்தைக் கொண்டும், அவர்கள் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு எதிர்பாராத பெரிய இடர் நேர்ந்து விட்ட தென்றும் போலீசாரும், ஆஸ்பத்திரியில் உள்ளவர்களும் நினைத்து, அவர்களது விஷயத்தில் அளவற்ற அனுதாபமும் இரக்கமும் விசனமும் உருக்கமும் காண்பித்து, அவர்களை மிகுந்த அன்போடும் பச்சாதாபத்தோடும் நடத்தி, அவர்களது வேதனைகளையும் சிகிச்சைகளையும் நிரம்பவும் கவனிப்பாகச் செய்து வந்தனர். ஆரம்பத்தில் அவர்கள் முற்றிலும் ஸ்மரணை இன்றி, பிணங்கள் போலக் கிடந்த காலத்தில், அவர்கள் எல்லோரையும் ஒன்றாக வைத்துப் போலீசார் போட்டோப் படம் எடுத்து வைத்துக் கொண்டனர். ஏனெனில், அவர்கள் பிழைக்காமல் இறந்து போவார்களாகில், அவர்கள் இன்னார்

என்பதை அறிந்து கொள்வதற்கு அனுகூலமாய் இருக்கும் என்று அவர்கள் அவ்வாறு படம் பிடித்து வைத்துக் கொண்டனர். அந்த முரட்டு ஆள்களைக் கொண்டு வேலாயுதம் பிள்ளை வீட்டாரை மூளிபடுத்தும் பொருட்டு, ரமாமணியம்மாள் முதலியோர் வந்தவர்கள் என்பதைப்பற்றி போலீசாரும் மற்றவரும் சிறிதும் சந்தேகங் கொள்ளவில்லை ஆதலால், அவர்கள் ஐவரையும் தனித் தனியான இடத்தில் பிரித்து வைக்க வேண்டும் என்பதை எண்ணாது ஒரே கூடத்தில் பக்கம் பக்கமாகப் போடப்பட்டிருந்த கட்டில்களில் படுக்க வைத்திருந்தனர். மறுநாளாகிய சனிக்கிழமை பகல் முழுதும் அவர்கள் எல்லோரும் வாய் திறந்து பேச இயலாத நிலைமையில் கிடந்தனர். அக்கினித் திராவகத்தின் எரிச்சலைத் தாங்க மாட்டாமல் புழுவைப் போலத் துடிதுடித்திருந்த பக்கிரியா பிள்ளை அன்றைய தினம் மாலையில் தாங்கள் இன்னார் என்ற விவரத்தை மாத்திரம் வெளியிட்டானே அன்றி, மற்ற விவரம் எதையும் தெரிவிக்காமல் நரகவேதனை அனுபவித்திருந்தான். சனிக்கிழமை இரவில் மற்ற எல்லோரும் சிறுகச் சிறுக தெளி வடையத் தொடங்கி தங்களுக்கு நேரிட்ட பேரிடரையும் தாங்கள் இருந்த நிலைமையையும் உணரத் தொடங்கினர். இடும்பன் சேர்வைகாரனது ஆட்கள் தங்களை வேலாயுதம் பிள்ளை முதலியோர் என்று ஆள்மாறாட்டமாக எண்ணி அவ்வாறு அங்கஹீனப்படுத்தி விட்டார்கள் என்பதும் அவர்களுக்கு எளிதில் விளங்கி விட்டது. இனி தாம் தமது ஆயுள்காலம் முழுதும் வெளியில் தலைகாட்டாமல் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண் டியதான பெருத்த அவகேட்டை அந்த மனிதர்கள் தங்களுக்கு உண்டாக்கி விட்டார்களே என்பதை எண்ண எண்ண அவர்களது மனம் கட்டிலடங்காமல் கொதித்து அந்த ஆட்களின் மீது மிகுந்த ஆத்திரங் கொண்டதானாலும், அவர்கள் வேண்டும் என்று அவ்வாறு தங்களுக்குக் கெடுதல் செய்யவில்லை என்ற எண்ணம் அடிக்கடி தோன்றியது ஆகையால், அவர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொண்டனர். அந்த ஆட்களைப் போலீசாரிடம் காட்டிக் கொடுத்து அவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்ற ஆக்கிரோஷம் அவர்களது மனதில் எழுந் தெழுந்து துடித்தது ஆனாலும், அவனால் மாசிலாமணிக்கும்,

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியை விடுத்துச் சென்ற பிறகு இரண்டு நாழிகை காலம் கழிந்தது. நமது நீர்மேல்குமிழி நீலலோசனியம்மாள் மடிசஞ்சியும் கையுமாக ஆஸ்பத்திரிக்குள் வந்து சேர்ந்தாள். அவளது முகம் நிரம்பவும் விசனகரமாகவும் வாட்டமடைந்தும் இருந்தது. தேகம் பதறித் துடிதுடித்தது. கண் களில் இருந்து கண்ணீர் அருவி போலக் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது. அத்தகைய பரிதாபகரமான நிலைமையில் வந்து தோன்றிய நீலலோசனியம்மாள் ரமாமணியம்மாள் முதலி யோர் இருந்த கூடத்திற்குள் விரைவாக நுழைந்து, "விசாலாக்ஷி யம்மா! குழந்தாய் ரமாமணி! நீங்களா இங்கே படுத்திருக்கிறீர்கள்! ஐயோ என்ன கொடுமை! என்ன கொடுமை! ஆகா! உங்களைப் பார்க்க என் இருதயம் வெடித்துப் போய் விடும் போல இருக்கிற தே! ஐயோ! உங்களுக்கு என்ன காலம் வந்ததோ! ஆகா! அந்தப் போலீஸ் ஜெவான் சொன்னதைக் கேட்ட போது, அது சுத்தப் பொய் என்றல்லவா நான் நினைத்தேன். அவன் சொன்னது போலவே காரியம் நடந்திருக்கிறதே! எப்பேர்ப்பட்ட வேளையில் நீங்கள் அந்தச் சத்திரத்தை விட்டுப் புறப்பட்டீர்களோ தெரிய வில்லையே! ஆகா! அந்தத் திருடர்கள் உங்களை எப்பேர்ப் பட்ட கொடுமைக்கு ஆளாக்கி விட்டார்கள். அவர்களுடைய தலையில் இன்னமும் இடிவிழவில்லை. இவ்விதமான அட்டூழியத்தைப் பார்த்துக் கொண்டு கோவிலில் உள்ள தெய்வங்கள் எல்லாம் சும்மா இருக்கின்றனவே! அட பாவிகளா! சண்டாள துரோகிகளா! இப்படியும் செய்ய உங்கள் மனம் எப்படித் துணிந்ததோ! உங்களுடைய கைகள் தான் கூசாமல் இந்த அக்கிரமத்தை எப்படிச் செய்தனவோ! படுபாவிகள்! படுபாவிகள்!" என்று கூறி நிரம்பவும் உருகித் தவித்துக் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கி ஓலமிட்டழ, அவ்விடத்தில் இருந்த வைத்தியசாலைச் சிப்பந்திகள், "உஸ், உஸ், யாரம்மா அது? ஏனம்மா இப்படிக் கூச்சலிட்டு நோயாளிகளை அலட்டுகிறாய்? உன்னைப் பார்த்து இவர்களும் அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளப் போகிறார்கள். சும்மா சாதாரணமாகவே பேசிவிட்டு சீக்கிரம் வெளியில் போ அம்மா!" என்று அதட்டிக் கூறினர். அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் சிறிது சாந்தமடைந்தவளாய், "அப்படியே ஆகட்டும், ஐயா!

இப்பேர்ப்பட்ட அக்கிரமக் காட்சியைக் காண, என் மனசுக்குத் தாளவில்லை. அதனால் அழுது விட்டேனப்பா. கோபித்துக் கொள்ளாதேயுங்கள். நீங்கள் சொல்வது உண்மைதான். நான் மெதுவாகவே இவர்களிடம் பேசுகிறேன்" என்று சமாதானமாக மறுமொழி கூறி அவர்களை அடக்கி அப்பால் அனுப்பிவிட்டு, விசாலாக்ஷியம்மாளிருந்த கட்டிலண்டை போய் அவளது முகத்தையும் உடம்பையும் மிகுந்த வாத்சல்யத்தோடு தடவிக் கொடுத்து, "அம்மா! இந்தக் கோலத்தை அடையவா அன்று நீங்கள் சத்திரத்தை விட்டுப் போனீர்கள்!" என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

தங்களுக்கு அத்தகைய அபாயம் நேர்ந்ததென்பது நீலலோசனியம்மாளுக்குத் தெரிந்திருக்காதென்றும் அது தெரிந்தாலும், அவள் தங்களைப் பார்க்க விரும்பமாட்டாள் என்றும் அவர்கள் நினைத்திருந்தார்கள் ஆதலால், அதற்கு மாறாக, அவள் வந்ததைக் கண்டு எல்லோரும் திடுக்கிட்டு மிகுந்த வெட்கமும் கிலேசமும் அடைந்து குன்றிப் போய் எவ்விதமாக அவளிடம் பேசுவதென்பதை உணராது தத்தளித்தனர். ஆயினும் அந்த அம்மாள் கூறிய அனுதாப மொழிகளைக் கேட்டு, அவள் காட்டிய உள்ளார்ந்த உருக்கத்தையும் அபிமானத்தையும் உணர, அவர்களது மனம் ஒரு விதமான துணிவை அடைந்தது. அந்த அம்மாள் தங்களிடம் வைத்த பிரியமும் மதிப்பும் குறையவில்லை என்றும், அவை முன்னிலும் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன என்றும் அவர்கள் எளிதில் உணர்ந்து கொண்டனர். தங்களுக்கு நேர்ந்த அந்த எதிர்பாராத அவகேட்டினால், தாங்கள் அந்த அம்மாளிடத்திலிருந்து அபகரிக்க எண்ணிய ஐந்து லக்ஷம் ரூபாய் தங்களுக்கு இல்லாமல் போய் விட்டதே என்று ரமாமணியம்மாள் அதற்கு முன் நினைத்து விட்டாளானாலும், அவளை மறுபடி கண்டு அவளது மனநிலைமையை உணரவே, பழைய துர்நினைவும் சதியாலோசனையும் திரும்பவும் ரமாமணியம்மாளின் மனதில் தலையெடுக்கத் தொடங்கின. அவள் நீலலோசனியம்மாளுக்குத் தெரியாதபடி தனது தாயை நோக்கிக் கண் ஜாடை காட்டினாள். அதன் உள் கருத்தை உணர்ந்து கொண்ட விசாலாக்ஷியம்மாள், "அம்மா! எங்களுக்கு நேரிட்ட இந்தக் கொடுமையை என்னவென்று சொல்

வேன்! கோமளேசுவரன் பேட்டையில் எங்களுக்குத் தெரிந்த சில மனிதரைப் பார்ப்பதற்காக நாங்கள் வெள்ளிக்கிழமை மாலையில் போனோமல்லவா? போன இடத்தில் அகால வேளை ஆகி விட்டது. திரும்பி ராமசாமி முதலியார் சத்திரத்திற்கு வருவதைவிட அவ்விடத்திலேயே படுத்திருந்து மறுநாள் காலையில் எழுந்து வரலாம் என்று நினைத்து அங்கேயே படுத்துத் தூங்கினோம். நடு இரவில் திருடர்கள் உள்ளே புகுந்து ஆள்மாறாட்டமாய் எங்கள் மேல் பாய்ந்து இவ்விதமான கொடுமையை நடத்தி விட்டார்களம்மா. நாங்கள் இனி என்ன செய்யப் போகிறோம்! இவ்வித விகாரத் தோற்றத்தோடு நாங்கள் இனி எங்கள் ஊருக்கு எப்படிப் போகிறது? எல்லா மனிதருடைய முகத்திலும் எப்படி விழிக்கிறது? நாங்கள் இனி உயிரை வைத்துக் கொண்டிருப்பதை விட இந்த ஆஸ்பத்திரியிலேயே இறந்து விடுவது சிலாக்கியம் எனத் தோன்றுகிறது. மறுபடி நாங்கள் உங்களைப் பார்க்கப் போகிறோமா என்று நாங்கள் சந்தேகித்திருந்தோம். ஏதோ மலையவ்வளவு பாவத்தில் நாங்கள் கடுகவ்வளவு புண்ணியம் செய்திருந்தோம் போலிருக்கிறது. உங்களுடைய மாறாத பிரியமும் சிநேகமும் எங்களுக்கு இன்னமும் இருக்கின்றன" என்றாள்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் முன்னிலும் பன்மடங்கு அதிக மன இளக்கமும் கண் கலக்கமும் காட்டி நிரம்பவும் உருக்கமாகப் பேசத்தொடங்கி, "அம்மா! இப்பேர்ப்பட்ட மகா துக்ககரமான நிலைமையில் உங்களுக்கு நான் எவ்விதமான ஆறுதலைச் சொல்வதென்பதே தெரியவில்லை. உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் அற்பசொற்பான நஷ்டமல்ல. ஏதாவது பணம் போயிருந்தால் அதை ஒன்றுக்குப் பத்தாக மறுபடி உண்டாக்கிக் கொள்ள முடியாததாகவும், உங்கள் ஆயிசுகால பரியந்தம் நீடித்திருக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அதை நினைக்க நினைக்க, என் துக்கம் ஆறமாட்டேன் என்கிறது. ஏதோ நான் உங்களைக் கண்டு உங்களோடு பழகியது சொற்ப காலமாய் இருந்தாலும், என்னுடைய முழுப்பிரியத்தையும் என்றைக்கும் மாறாதபடி நீங்கள் கவர்ந்து கொண்டீர்கள். நீங்கள் நல்ல நிலைமையில் இருந்தால், நான் உங்களை விட்டுப் போயிருந்தால் கூட, அது ஒரு பொருட்டாகாது. உங்களுக்கு நேர்ந்துள்ள இந்த

மகா விபரீதமான துன்ப சமயத்தில் நான் உங்களை விட்டுப் போனால், என்னைப் போல மகா சண்டாள குணம் படைத்தவள் வேறே யாரும் இருக்கமாட்டாள். நேற்று முழுதும் நீங்கள் வருவீர்கள் வருவீர்களென்று பார்த்தபடி நான் சத்திரத்திலேயே இருந்தேன். நேற்று காலையிலேயே வந்து விடுவதாகச் சொன்ன வர்கள் வராமற் போகவே, என் மனம் பலவிதமான சந்தேகங் களைக் கொண்டு தவித்தது. இன்று காலையில் சத்திரத்தில் ஜனங்கள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டதைக் கண்டு ஏதோ விசேஷ சம்பவம் நடந்திருக்கிறதென்று நினைத்து நான் விசாரித்த தில், உங்களுக்கு இவ்விதமான விபத்து நேர்ந்து விட்டதென்றும், நீங்கள் எல்லோரும் இங்கே இருக்கிறீர்கள் என்றும் ஜனங்கள் சொன்னார்கள். உடனே நான் புறப்பட்டு இங்கே ஓடிவந்தேன். ஆனால், உங்களுடைய உயிருக்கு எவ்வித அபாயமும் இல்லை என்றும் 20 தினங்களில் காயம் ஆறிப் போகும் என்றும் டாக்டர் சொன்னார். அது ஒருவிதத்தில் ஆறுதலாக இருந்தது ஆனாலும், சாசுவதமாக உங்களுக்கு ஒவ்வோர் அங்கம் போய்விட்ட தொன்றே ஆறாத்துயரத்தை உண்டாக்குகிறது. உண்மையான சிநேகிதர்கள் அபாய காலத்தில் கைவிட மாட்டார்கள். அப்படிக் கைவிட்டால், அவர்கள் போலி சிநேகிதர்கள் தான். ஆகவே, நான் உங்களிடம் வைத்த சிநேகமும், பிரியமும் உண்மையானவை என்பதை இந்தச் சமயத்தில் தான் காட்ட வேண்டும் என்பது என் னுடைய உறுதியான தீர்மானம். இந்த நிமிஷம் முதல் என் னுடைய உடல் பொருள் ஆவியாகிய எல்லாவற்றையும் நான் உங்களுக்கே சொந்தமாக்கி விட்டேன். என்னால் உங்களுக்கு என்ன உதவி தேவையானாலும் நான் செய்யக் காத்திருக்கிறேன். என் மனசில் இன்னொரு யோசனையும் தோன்றுகிறது. அன்றைய தினம் சந்தோஷமாகவும் க்ஷேமமாகவும் இருந்த நீங்கள் இன்று இப்படிப்பட்ட மகா துக்ககரமான நிலைமையில் இருப்பதை எண்ண எண்ண, மனிதனுடைய வாழ்வு நிலையற்ற தாகத் தோன்றுகிறது. இந்த நிமிஷத்தில் இருக்கும் நிலைமை அடுத்த நிமிஷத்தில் எப்படி மாறிப் போகுமோ தெரியவில்லை. எந்த நிமிஷத்திலாவது எனக்கும் ஏதாவது அபாயம் நேர்ந்து விடுமோ என்ற கவலையும், அச்சமும் என் மனசில் உண்டாகிக்

கொண்டே இருக்கின்றன. ஆகையால், நான் செய்ய எண்ணி யுள்ள ஏற்பாடுகளை எல்லாம் இப்போதே திட்டமாகச் செய்து வைத்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். அதாவது, முக்கியமாக எங்கள் ஊர் செட்டியாரிடம் நான் போட்டு வைத்திருக்கும் ஐந்து லட்சம் ரூபாயைப் பற்றிய விஷயமே. நான் இனி என் ஆயிசுகால பரியந்தம் கும்பகோணத்தில் உங்கள் வீட்டில் இருக்கிறதென்றும், என்னை நீங்கள் கடைசி வரையில் சவரக்ஷிக்கிறதென்றும், நான் இறந்து போனவுடன் எனக்குரிய அந்தியகாலக் கிரியைகளை நீங்கள் செய்கிறதென்றும், அந்த ஐந்து லட்சம் ரூபாயையும் இன்னும் என் கைவசத்திலிருக்கும் சொத்தையும் ரமாமணி யம்மாளும், அவளுடைய புருஷனும் எடுத்துக் கொள்ளுகிற தென்றும், இன்றைய தினமே ஒரு பத்திரம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்ய உத்தேசிக்கிறேன். அந்த ஏற்பாட்டை நீங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வீர்கள் என்றும் நம்புகிறேன். பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய நீங்கள் சப்-ரிஜிஸ்டிரார் கச்சேரிக்கு வரமுடியாதாகையால், பத்து ரூபாய் பணம் கட்டி அவரை இவ் விடத்திற்கே அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட ரமாமணியம்மாள் முதலியோர் பருத்தி புடவை யாகவே காய்த்ததென்று நினைத்து, அளவற்ற மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்து போயினர். ரமாமணியம்மாளுக்கு மூக்கில் கட்டுப் போடப்பட்டிருந்தது பற்றி, அவள் தனது வாயைத் திறந்து நீலலோசனியம்மாளுடன் அதிகமாக சம்பாஷிக்க இயலாமல் இருந்தது. விசாலாக்ஷி யம்மாளும், அவளது கணவனும் நீலலோசனியம்மாளுக்குப் பல உபசார மொழிகள் கூறி, அந்த அம்மாள் தங்களுக்குப் பொருள் கொடுத்தாலும், கொடாவிட்டாலும், தாம் அவளைக் கடைசி வரையில் கைவிடமாட்டோம் என்று பிரமாண பூர்வமாக வாக்களித்தனர்.

அதன் பிறகு நீலலோசனியம்மாள் அவர்களோடு அரை நாழிகைக் காலம் சம்பாஷித்த பின்னர் செலவு பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாள். சென்றவள் அன்றைய

தினம் பகல் ஒரு மணிக்கு மறுபடி அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தாள். அவளுடன் கூட சப்-ரிஜிஸ்டிரார் ஒருவரும் வந்தார். பத்திரம் பதிவு செய்வதற்குரிய உபகரணங்கள் அடங்கிய ஒரு கைப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவர்களோடு ஒரு சேவகனும் வந்து சேர்ந்தான். நீலலோசனியம்மாள் தனது வாக்குறுதியை அப்போதே நிறைவேற்றப் போவதைக் கண்டு ரமாமணியம்மாள் முதலியோர் மிகுந்த மனவெழுச்சியும் பூரிப்பும் அடைந்து மெய்ம்மறந்து போயினர். உடனே நீலலோசனி யம்மாள் தனது கையில் வைத்திருந்த பத்திரத்தை சப்-ரிஜிஸ்டி ராரிடம் கொடுத்து, "ஐயா! இது ஓர் உடன்படிக்கைப் பத்திரம்; என் ஆயிசுகால பரியந்தம் இவர்கள் என்னை வைத்து சவரக்ஷிக்க வேண்டியதென்றும், எங்கள் ஊரில் நான் ரொக்கமாக ஒரு செட்டியாரிடம் வட்டிக்குக் கொடுத்திருக்கும் ஐந்து லட்ச ரூபாயையும், என் கையில் எவ்வளவு சொத்து மிச்சப்படுகிறதோ அதையும் இவர்கள் எடுத்துக் கொண்டு என் அந்தியக் கிரியை களை நடத்துகிறதென்றும் இதில் எழுதி இருக்கிறேன். இதைப் பதிவு செய்ய வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்ட சப் ரிஜிஸ்டிரார், "ஓகோ! அப்படியா! சரி; இங்கே ஐந்து பேர் இருக்கிறார்களே. இந்த ஐந்து பேரும் நீங்களுமாகத் தானே ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறீர்கள்?" என்றார்.

நீலலோசனியம்மாள், "இல்லை; இல்லை. இந்த ஐந்து பேரில் ஒருவன் வேலைக்காரன். அவனைவிட்டு மற்ற நால்வரையும் சேர்த்து எழுதி இருக்கிறேன். அதோ இருக்கும் பெரியவர் தான் வீட்டின் தலைவர். அவர் ஒன்று; அவருடைய சம்சாரமாகிய விசாலாக்ஷியம்மாள் இரண்டு; அவர்களுடைய பெண் ரமாமணி யம்மாள் மூன்று; அந்தப் பெண்ணின் புருஷர் பக்கிரியா பிள்ளை என்பவர் நான்கு. ஆக நால்வரும் நானும் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்வதாக எழுதி இருக்கிறேன்" என்றாள்.

உடனே சப் ரிஜிஸ்டிரார் அந்தப் பத்திரத்தை எடுத்துத் தமக்குள் ஒருதரம் படித்துப் பார்த்து, அது ஒழுங்காக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை நிச்சயித்துக் கொண்டபின், அதை மற்ற எல்லோரும் கேட்கும்படி ஒருதரம் படித்துக் காட்டி, "நான் படித்ததைக்

கேட்டீர்களே; இது உங்களுக்குச் சம்மதந்தானா? இதைப் பதிவு செய்து கொள்ளலாமா?" என்று வினவினார். ரமாமணியம்மாள் முதலியோருக்கு அந்தப் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்த எல்லா விஷயமும் திருப்திகரமாகத் தோன்றியதானாலும் பக்கிரியா பிள்ளையை ரமாமணியம்மாளின் புருஷன் என்று குறித்திருந்தது உசிதமாகப் படவில்லை. ஆயினும், தாங்கள் நீலலோசனியம் மாளிடம் அவ்விதம் கூறியிருந்தமையால், அந்தச் சந்தர்ப்பத்தில், அதைத் தாம் மறுத்தால், அந்த அம்மாள் உடனே சந்தேகங் கொண்டு பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டாம் சொல்லி விடு வாளோ என்ற அச்சத்தினால் அவர்கள் எவ்வித ஆட்சேப ணையும் கூறாமல், அதை அப்படியே ஒப்புக் கொண்டனர். உடனே சப் ரிஜிஸ்டிரார் அவர்கள் ஐவரது கையெழுத்துக் களையும், விரல் ரேகை அடையாளங்களையும் பத்திரத்தில் பெற்று அதைப் பதிவு செய்த பின் தமது சேவகனோடு அவ் விடத்தை விட்டுப் போய்விட்டார். அந்த முக்கியமான ஏற்பாடு எவ்விதமான இடையூறுமின்றி அவ்வளவு துரிதத்தில் நிறை வேறிப் போனதுபற்றி, நீலலோசனியம்மாளும் மற்ற நால்வரும் மிகுந்த களிப்புடன் சம்பாஷித்திருந்தனர். நோயாளிகளை அதிக மாய் அலட்டுவது கூடாதென்று டாக்டர்கள் செய்தி சொல்லி அனுப்பினாராதலால், நீலலோசனியம்மாள் தான் மறுபடி மாலையில் வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டு அவர்களிடம் செலவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள்.

அன்றைய பகற்பொழுது கழிந்தது. மாலை ஐந்தரை மணி சமயத்தில், மறுபடி நீலலோசனியம்மாள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தாள். சப் ரிஜிஸ்டிரார் பதிவு செய்த பத்திரம் அவளிடம் இருந்தது. அதோடுகூட ரமாமணியம்மாள் முதலியோருக்குக் கொடுப்பதற்கு, ஒரு நகலும் தயார் செய்யப்பட்டு வந்திருந்தது. அந்த நகலை நீலலோசனியம்மாள் விசாலாக்ஷியம்மாளிடம் கொடுத்து பத்திரமாக வைத்துக் கொள்ளும்படி கூறிய பின், "அம்மா! இன்று மத்தியானம் நான் இங்கே இருந்து போன பிறகு போலீஸ் சேவகர் ஒருவர் என்னிடம் வந்தார். இன்னம் இரண் டொரு தினங்களில், அந்த இடும்பன் சேர்வைகாரனுடைய வழக்கு

விசாரணைக்கு வரப் போகிறதென்றும், அதுவரையில் நான் இந்த ஊரை விட்டுப் போகாமல் இங்கேயே இருக்க வேண்டும் என்றும் சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு போனார். அவர் அப்படிச் செய்ததைக் கண்ட பிறகு என் மனசில் ஒரு யோசனை தோன்றிக் கொண்டே இருக்கிறது. அதை உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்றே நான் முக்கிய மாக இப்போது இங்கே வந்தேன்" என்றாள். விசாலாக்ஷியம்மாள், "அது என்ன யோசனை?" என்றாள்.

நீலலோசனியம்மாள், "இப்போது நாம் இருதிறத்தாரும் ஒருவருக் கொருவர் அன்னியோன்னியமான பந்துக்கள் போல ஆகிவிட்டோம். இருவரது மனதும் ஏகமனதாகி விட்டது. அந்த இடும்பன் சேர்வைகாரர் உங்களோடு வந்தவர்; அவர் உங்களுக்கு வேண்டிய ஒரு பெரிய மனிதருடைய காரியஸ்தர். அவர் என் விஷயத்தில் செய்த காரியம் தவறான காரியமாக இருந்தாலும், அவர் தண்டனை அடைவது உங்கள் மனசுக்கு எப்படியும் வருத்தமாகத் தான் இருக்கும். ஆகவே, அது என் மனசுக்கும் பிடிக்கவில்லை. அவர் தண்டனை அடையாமல் தப்பி வந்து விடும் படியான விசை இப்போது என் கையிலே தான் இருக் கிறது. நான் சாட்சி சொன்னால் அவர் தண்டனை அடைவார்; இல்லாவிட்டால், அவர் தப்பித்துக் கொள்வார். ஆகையால், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இப்போது நான் இங்கே இருந்து உங்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. நீங்கள் இன்னம் சுமார் 20 தினங்கள் வரையில் இங்கே இருக்க நேரும். எனக்கும் இந்த ஊர்ச் சாப்பாட்டுக் கடையின் ஆகாரம் உடம்புக்கு ஒத்துக்கொள்ள வில்லை. ஆகையால், நான் நாளைய தினம் இரவு ரயில் வண்டியில் யாருக்கும் தெரியாதபடி இந்த ஊரை விட்டுப் புறப்பட்டுக் கும்பகோணம் போய், உங்கள் வீட்டி லாவது, அல்லது, உங்களுடைய நண்பரான மாசிலாமணிப் பிள்ளையின் வீட்டிலாவது தலை மறைவாக இருந்து விடலாம் என்று நினைக்கிறேன். போலீசார் உங்களிடம் வந்து கேட்டால், நான் போன இடம் உங்களுக்கும் தெரியாதென்று சொல்லி விடுங் கள். போலீசார் கொஞ்ச காலம் பார்த்துவிட்டு சாட்சி இல்லை என்று சேர்வைகாரரை விட்டு விடுவார்கள்" என்றாள்.

அந்த யோசனையைக் கேட்ட ரமாமணியம்மாள் முதலியோர் மிகுந்த சந்தோஷமடைந்து, அது நிரம்பவும் உசிதமான யோசனை என்று ஒப்புக் கொண்டனர். நீலலோசனியம்மாள் சிறிது சிந்தனை செய்து, "சரி, அப்படியே செய்து விடுகிறேன். இன்று என் உடம்பு சரியான நிலைமையில் இல்லை. இன்று இரவு மாத்திரம் நான் இந்த ஊரில் தங்கி, நாளைய தினம் பகல் வண்டியில் ஏறி, அரக்கோணம், காட்பாடி வழியாகத் திருவண்ணாமலைக்குப் போய்விட்டு கும்பகோணம் போய்ச் சேருகிறேன். உங்கள் நண்பரான மாசிலாமணிப் பிள்ளைக்கு நீங்கள் ஒரு கடிதம் எழுதிக் கொடுங்கள். உங்களுக்கும் எனக்கும் சிநேகமான விதத்தையும், இடும்பன் சேர்வைகாரருக்கு ஏற்பட்ட உபத்திரவத்தையும், அவரைக் காப்பாற்றுவதற்காக நான் அங்கே ஒளிந்து கொள்ள வந்திருக்கிறேன் என்பதையும், எனக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் அவர் செய்து கொடுக்க வேண்டும் என்பதையும் நீங்கள் சுருக்கமாக ஒரு கடிதத்தில் எழுதிக் கொடுங்கள். அதை நான் அவரிடம் சேர்த்து, அவர் காட்டும் இடத்தில் ஒளிந்து கொண்டிருக் கிறேன். உங்கள் காயம் ஆறினவுடன் நீங்கள் அங்கே வந்து சேருங்கள். அதற்குள் சேர்வைகாரரையும் போலீசார் விட்டு விடுவார்கள்" என்றாள்.

அந்த ஏற்பாட்டையும் அவர்கள் முழுமனதோடு ஒப்புக் கொண்டனர். மாசிலாமணிக்குக் கடிதம் எழுதுவதற்குத் தேவையான ஒரு காகிதத்தையும், பென்சிலையும் உடனே நீலலோசனியம்மாள் கொடுக்க, அதை வாங்கி ரமாமணியம்மாள் படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டபடி கடிதம் எழுதத் தொடங்கினாள். தாங்கள் பட்டணம் வந்த வரலாற்றையும், தங்களுக்கும் நீலலோசனியம்மாளுக்கும் சிநேகம் ஏற்பட்ட விதத்தையும், சத்திரத்தில் இடும்பன் சேர்வைகாரன் மோதிரம் திருடி சிறைச்சாலையில் இருப்பதையும், தாங்கள் கோமளேசுவரன் பேட்டைக்குப் போய் கலியாண வீட்டில் படுத்திருந்த விவரத்தையும், இடும்பன் சேர்வைகாரனுடைய ஆள்கள் வந்து ஆள் மாறாட்டமாகத் தங்களை அங்கஹீனப்படுத்தி ஓடிய சமயத் தில் பிடிபட்டுச் சிறைச்சாலையில் இருக்கும் வரலாற்றையும், அந்த ஆள்களைத் தப்ப வைப்பதற்குத் தாங்கள் போலீசாரிடம் பொய்

வாக்குமூலம் கொடுத்ததையும், இடும்பன் சேர்வைகாரனைத் தப்ப் வைக்கும் பொருட்டு நீலலோசனியம்மாள் அங்கே ஒளிந்து கொள்ள வருவதையும் சுருக்கமாகக் கண்டு, அந்த அம்மாளைச் சௌகரியமாகவும் ஜாக்கிரதையாகவும் பார்த்துக் கொள்ளும்படி மாசிலாமணியை வேண்டி அந்தக் கடிதத்தை எழுதி முடித்து, ஓர் உறை தருவித்து அதற்குள் கடிதத்தைப் போட்டு ஒட்டி நீலலோசனியம்மாளிடம் கொடுத்தாள். விசாலாக்ஷி யம்மாளும் நீலலோசனியம்மாளைப் பார்த்து, "அம்மா! நமக்குள் ஏற்பட்டி ருக்கும் உடன்படிக்கை விஷயத்தை மற்றவர் அறிந்தால் பொறாமைப் படுவார்கள். அந்த மாசிலாமணிப் பிள்ளை மகா துர்க்குணமுடைய மனிதர். அவருக்கு இந்தச் சங்கதி தெரிந்தால், எங்களுக்குக் கெடுதல் நேரும். ஆகையால், அந்தப் பத்திரத்தின் சங்கதி எதையும் அவருக்குச் சொல்ல வேண்டாம்" என்று நயந்து வற்புறுத்திக் கூறினாள். நீலலோசனியம்மாள் அவர்களுடைய விருப்பத்தின்படி எச்சரிப்பாய் நடந்து கொள்வதாக உறுதி கூறிய பின், அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

அன்றைய இரவு கழிந்தது. மறுநாள் காலை பத்துமணி நேரமிருக்கலாம். நீலலோசனியம்மாள் மறுபடியும் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்து ரமாமணியம்மாள் முதலியோருக்கெதிரில் போய் நின்றாள். ஊருக்குப் போவதாகச் சென்றவள் மறுபடி வந்தது அவர்களுக்கு நிரம்பவும் ஆச்சரியகரமாக இருந்தது. அதுவுமன்றி, அந்த அம்மாள் ஒருவித கிலேசத்தோடு வந்திருந்ததும் தெரிந்தது. அதைக் கண்ட விசாலாக்ஷியம்மாள், "என்ன அம்மா விசேஷம்? எப்போது ஊருக்குப் புறப்படப் போகிறீர்கள்?" என்றாள்.

நீலலோசனியம்மாள் மிகுந்த கிலேசத்தோடு, "என்ன போங்கள். நான் ஒரு மூடக் காரியம் செய்து விட்டேன். இன்று காலையில் நான் சமுத்திர ஸ்நானம் செய்துவிட்டு போஜனம் முடித்துக் கொண்டு ரயிலில் ஏற உத்தேசித்து, சமுத்திரத்தில் இறங்கி ஸ்நானம் செய்தேன். நீங்கள் நேற்று மாசிலாமணிப் பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த கடிதம் என் மடியில் இருந்ததென்பதை மறந்து நான் தண்ணீரில் முழுகி விட்டேன். கடிதம் சமுத்திரத்திற்குள் எங்கேயோ விழுந்து காணாமல் போய்விட்டது. கரை ஏறியவுடன் எனக்குக்

கடிதத்தின் ஞாபகம் வந்தது. மடியில் தேடிப் பார்க்கிறேன் கடிதம் இல்லை. என் மடிசஞ்சியில் இருக்கிறதோ என்றும் பார்த்தேன். அதிலும் இல்லை. அற்காகத்தான் நான் மறுபடி இங்கே வந்தேன். இன்னொரு கடிதம் எழுதும்படியான சிரமத் தையும் துன்பத்தை யும் ரமாமணியம்மாளுக்கு நான் கொடுக்க நேர்ந்துவிட்டதைப் பற்றி என் மனம் நிரம்பவும் வருந்துகிறது" என்று நயமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட ரமாமணியம்மாள் இனிமையாக நகைத்து, "இது தானா ஒரு பெரிய காரியம்? இதோ ஒரு நிமிஷத்தில் இன்னொரு கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். மறதி என்பது எல்லோருக்கும் உள்ளது தானே" என்று தன் உதட்டை அசைத்து முணுமுணுத்து மெதுவாகப் பேசினாள். நீலலோசனியம்மாள் மறுபடி காகிதம், பென்சில், உறை ஆகிய மூன்றையும் கொடுக்க, ரமாமணியம்மாள் அவற்றை வாங்கி முன் போலவே இன்னொரு கடிதமெழுதி உறைக்குள் போட்டு ஒட்டி மேல் விலாசம் எழுதி நீலலோசனி யம்மாளிடம் கொடுத்தாள். அதைப் பெற்றுக் கொண்ட அந்த அம்மாள் முடிவாக அவர்களிடம் செலவு பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று விட்டாள்.

★ ★ ★

அங்கு நிலைமை அவ்வாறிருக்க, சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருந்த நமது இடும்பன் சேர்வைகாரனை நாம் சிறிது கவனிப்போம். அவன் நீலலோசனியம்மாளது மோதிரத்தைத் திருடிய குற்றத்திற்காக வியாழக்கிழமை இரவில் கைது செய்யப் பட்ட பின்னர், அந்த இரவு முழுதும் போலீஸ் ஸ்டேஷன் லாக் கப்பில் வைக்கப்பட்டிருந்து, மறுநாள் காலையில் மாஜிஸ்டிரேட் கச்சேரியைச் சார்ந்த சப்ஜெயிலுக்கு அனுப்பப்பட்டான். புதிதாகக் கைதி செய்யப்பட்ட குற்றவாளிகள் தங்கள் வழக்கின் விசாரணை முடிவடைகிற வரையில் இருப்பதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள சிறைச்சாலைக்கு சப்ஜெயில் என்று பெயர். இடும்பன் சேர்வைகாரன் அடைக்கப்பட்டிருந்த சப்ஜெயில் நிரம்பவும் அழுத்தமும் பந்தோபஸ்துமான ஒரு பெரிய கட்டிடம். அது இரண்டு கட்டுகள் உடையதாக இருந்தது. ஒவ்வொரு கட்டின் நடுவிலும் பெருத்த முற்றம் இருந்தது. அந்த முற்றத்தைச் சுற்றி

நான்கு பக்கங்களிலும் பெருத்த தாழ்வாரங்கள் இருந்தன. ஒவ்வொரு தாழ்வாரத்திலும் தடித்த இரும்புக் கம்பிக் கதவுகளைக் கொண்ட சிறிய சிறிய அறைகள் வரிசையாக அமைந்திருந்தன. மேற்படி இரும்புக் கம்பிக் கதவுகள் அழுத்தமான பெரிய இரட்டைப் பூட்டுகளால் பூட்டி பத்திரப்படுத்தப்பட்டிருந்தன. சில அறைகளில் அறைக்கு ஒவ்வொரு கைதி வீதம் விடப்பட்டிருந் தனர். எந்தக் கைதியின் விஷயத்தில் தக்க ருஜூ அகப்பட்டு விட்டதோ, அந்தக் கைதி பலருடன் ஒன்றாக இருக்க விடப்பட்டி ருந்தான். எந்தக் கைதியின் வழக்கில் சரியான ருஜூ அகப்படாமல் இருந்ததோ, அந்தக் கைதியைப் போலீசார் தனியாக அடைத்து வைத்திருந்தனர். அதுவுமன்றி, நிரம்பவும் துஷ்டர்களாகவும், தந்திரிகளாகவும் தோன்றிய குற்றவாளிகளை மற்றவருடன் பேசும்படி விடுத்தால், அவர்கள் மற்றவருக்கு துர்ப்போதனை களும், துர்யோசனைகளும் சொல்லிக் கொடுத்து அவர்களது மனதைக் கலைத்து விடுவார்கள் என்ற நினைவினாலும் சில கைதி களைத் தனிமையில் இருக்க விடுத்தனர். மேற்படி அறைகளை அடுத்தாற்போல் இருந்த நான்கு தாழ்வாரங்களிலும் ஒவ்வொரு தாழ்வாரத்தில் ஒவ்வொரு ஜெவானாக நான்கு ஜெவான்கள் கத்தி துப்பாக்கிகளுடன் இரவு பகல் பாராக் கொடுத்திருந்தனர். அவர் கள் தாழ்வாரத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குப் போவதும், மறுபடி திரும்புவதுமாய் அங்குமிங்கும் வட்டமிட்டுக் கொண்டே நிரம்பவும் ஜாக்கிரதையாகக் காவல் காத்திருந்தனர். மேற்படி காவலாளர்களைத் தவிர, வேறு பல ஜெவான்கள் ஆயுதபாணிகளாய் அடிக்கடி வருவதும், ஒவ்வொரு வழக்கிற்கும் சம்பந்தப்பட்ட கைதியை, அல்லது, கைதிகளை விலங்கிட்டு மாஜிஸ்டிரேட்டின் கச்சேரிக்கு அழைத்துப் போவதும் மறுபடி கொணர்ந்து அடைப்பதுமாய் இருந்தனர். அத்தகைய ஏற்பாடு களுடன் இருந்த சிறைச்சாலையின் இரண்டாவது கட்டில் ஒரு மூலையிலிருந்த ஓர் அறையில் நமது இடும்பன் சேர்வைகாரன் தனிமையில் அடைக்கப்ண்பட்டிருந்தான். மிகுந்த கோபத்தினாலும், ஆத்திரத்தினாலும் அவனது தேகம் படபடத்து ஆடிக்கொண் டிருந்தது; அவனது மீசைகள் துடித்தன; கண்களில் தீப்பொறி பறந்தது; அவனது மனம் கட்டிலடங்காமல் பொங்கித்

தவித்தது. தான் தனது ஆட்களுடன் மனோன்மணியம்மாளை அபகரிக்க வந்த காலத்தில் தாங்கள் ஏமாறிப் போனதற்கு ஓர் ஆறுதலாக அந்த இரண்டாவது முயற்சியில்தான் எப்படியும் மாசிலா மணியின் சதியாலோசனையை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று உறுதி கொண்டு வந்திருந்த சந்தர்ப்பத்தில், தான் சிறிதும் எதிர்பார்க்காதபடி, அத்தகைய பெருத்த இடையூறு குறுக்கிட்டு விட்டதே என்ற நினைவினால் தூண்டப்பட்டு, அவன் அப்போதே காட்டிலிருந்து புதிதாகப் பிடிபட்டு அடைக்கப்பட்ட கொடிய கரடி, புலி முதலிய விலங்குகள் போல ஆத்திரமே வடிவாக நின்று அங்குமிங்கும் உலாவுவதும், நெடுமுச்செறிவதும் வெளியில் தனது பார்வையைச் செலுத்தி ஆராய்ச்சி செய்வதும், தனக்குத் தானே பலவாறு எண்ணமிடுவதுமாய் இருந்தான். "ஆகா! என்ன இடைஞ்சல் வந்து குறுக்கிட்டு விட்டது! இன்றைய தினம் வெள்ளிக்கிழமை அல்லவா? நிச்சயதார்த்தம் நடந்து போய் விடுமே; நேற்று இரவு வண்டியிலேறி என்னுடைய ஆள்கள் இன்று காலையில் வந்திருப்பார்களே! எழும்பூர் ரயிலடியில் நான் வந்திருந்து அவர்களைப் பார்ப்பதாகச் சொல்லி இருந்தேனே! என்னைக் காணாமல், அவர்கள் என்ன செய்கிறார்களோ தெரிய வில்லையே. கோமளேசுவரன் பேட்டை இன்ன தெருவில், மன்னார்குடியார் வந்திறங்குவார்கள் என்றும், அவர்கள் இருக்கும் வீட்டில் பந்தல் வாழை மரங்கள் முதலிய அலங்காரங்கள் இருக்கும் என்றும், அவர்களில் இன்னின்னாரை இன்னவிதம் நடத்த வேண்டும் என்றும் நான் அவர்களிடம் சொன்னதை அவர் கள் ஒரு வேளை மறந்து விட்டார்களோ என்னவோ தெரிய வில்லையே! அல்லது, அவர்கள் அந்த விவரங்களை மறக்காமல் நினைத்திருந் தாலும், மன்னார்குடியார் இன்னார் என்ற அடை யாளமே என்னுடைய ஆள்களுக்குத் தெரியாது. ரமாமணியின் அடையாளமும் அவர்களுக்குத் தெரியாது. அதுபோல, ரமா மணிக்கும் அவர்களுடைய அடையாளம் தெரியாது. நானோ இவ்விடத்தில் அடைபட்டிருக்கிறேன். என் வழக்கு எப்போது விசாரணைக்கு வரும் என்பதும் தெரியவில்லை. இது இன் றைக்கே விசாரணைக்கு வந்தாலும், நான் தண்டனை அடை யாமல் விடுபடுவேன் என்பதும் நிச்சயமில்லை. இந்த

நிலைமையில், ரமாமணியம்மாள் முதலியோர் சத்திரத்திலிருந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். என் ஆள்களோ என்னைக் காணாமல் எங்கே அலைகிறார்களோ; அல்லது, என்ன செய்கிறார்களோ. இன்று இரவு அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை!" என்று இடும்பன் சேர்வைகாரன் பலவாறு எண்ணமிட்டு மிகுந்த கலக்கமும், கவலையும், ஆத்திரமும் கொண்டு நரக வேதனை அடைந்தவனாய் இருந்தான். ஒவ்வொரு நிமிஷம் கழிவதும் ஒவ்வொரு யுகம் கழிவது போல இருந்தது. அன்று முழுதும் ஆகாரத்தின் மேலாவது, தூக்கத்திலாவது அவனது மனம் நாட்டங்கொள்ளாமல் கட்டிலடங்காமல் துடிதுடித்துப் பறந்து கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று தினங்கள் கழிந்தது மூன்று பெருத்த கற்பகாலம் கழிந்தது போலவே தோன்றியது. ஆகாரம், நித்திரை முதலியவை இல்லா மையாலும், ஓயாமல் மனக்கவலையும் ஆவலும் கொண்டு அல்லல்பட்டிருந்தமையாலும், அந்த மூன்று தினங்களில் அவன் ஒரு துரும்பு போல மெலிந்து போனான். அவனது முகம் வெளுத்து விகாரமடைந்து போயிற்று. கண்கள் குழிவடைந்து போயின. அவனது சீவனில் பெரும் பாகமும் போய்விட்டதாகத் தோன்றியது. அந்த மூன்று தினங்களில் வெளியுலகத்தில் என்ன சம்பவங்கள் நடந்தன என்பதே அவனுக்குத் தெரியாதிருந்தமையால் அவன் அதே ஆவலினாலும், ஏக்கத்தினாலும் பைத்தியம் கொண்டவன் போலக் காணப்பட்டான். காலையிலும், பகலிலும், மாலையிலும் போலீசார் வந்து கைதிகளை வெளியில் அழைத்துப் போய் தேகபாதை நிவர்த்தி, ஸ்நானம் முதலியவைகளைச் செய்வித்துக் கொணர்ந்து அடைத்த காலத்திலும், சாப்பாடு கொடுத்த காலத்திலும், இடும்பன் சேர்வைகாரன் ஜெவான்களை நோக்கித் தனது வழக்கு எப்போது விசாரணைக்கு வரும் என்று கேட்பான். அவர்கள் தங்களுக்கு அந்தத் தகவல் தெரியாதென்று மறுமொழி கூறி விடுவார்கள். வெள்ளிக்கிழமை இரவில் பிடிபட்ட அவனது ஆட்களான பதினாறு மனிதர்களும் அந்தச் சிறைச்சாலையின் முன் கட்டிலிருந்த அறைகளில் அறைக்கு ஒருவராய் அடைக்கப்பட்டிருந்தனர் ஆனாலும் அவர்களும்

இடும்பன் சேர்வைகாரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. ஞாயிற்றுக்கிழமை பகல் வரையில் இடும்பன் சேர்வைகாரன் தனது அறையில் தனியாகவே இருந்து வந்தான். புதிதாக வந்த கைதிகளை எல்லாம் போலீசார் மற்ற அறைகளில் அடைத்தனரே அன்றி அவன் இருந்த அறைக்குக் கொண்டு வரவில்லை. திங்கள் கிழமை பகல் ஒரு மணி சமயத்தில் இரண்டு ஜெவான்கள் கத்தி துப்பாக்கி முதலிய ஆயுதங்களை ஏந்தியவர்களாய் ஒரு புதிய கைதியை அழைத்து வந்தனர்; அந்தக் கைதியின் கைகள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விலங்கிட்டு இருந்தார்கள். அந்த ஜெவான்கள் அந்தக் கட்டிலிருந்த நான்கு தாழ்வாரங்களின் வழியாக இரண்டு மூன்று தடவை சென்று, அந்தப் புதிய கைதியை அடைப்பதற்கு எந்த அறை தகுதியான தென்று ஆராய்ச்சி செய்தபின் முடிவாக நமது இடும்பன் சேர்வைகாரன் இருந்த அறைக்கெதிரில் வந்து நின்று, "சரி; மற்ற அறைகளில் பலர் அடைபட்டிருக்கிறார்கள். இதில் தான் ஒரே ஒருவன் இருக்கிறான். இதற்குள் இவரை விட்டு வைப்போம்" என்று கூறிய வண்ணம், அந்த அறையின் பூட்டை விலக்கி கதவைத் திறந்து புதிய கைதியை உள்ளே அனுப்பி, அவரது கை விலங்கை நீக்கி எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் போயினர்.

அவ்வாறு புதிதாக வந்த கைதி ஒரு துருக்க சாயப்பு; அவர் நிரம்பவும் விலைபெற்ற படாடோபமான தலைப்பாகை, சட்டைகள் நிஜார் முதலிய ஆடைகளைத் தரித்திருந்ததன்றி, கைவிரல்களில் பல மோதிரங்களையும் அணிந்திருந்தார். அவரது சட்டைப்பையில் தோலினால் செய்யப்பட்ட பெரிய பணப்பை (மணிபர்ஸ்) ஒன்று காணப்பட்டது. அநேகமாய் மற்ற எல்லாக் கைதிகளும் முரடர்களாகவும், ஏழைகளாகவும், அநாகரிகர்க ளாகவும் இருந்ததற்கு மாறாக அந்தத் துருக்க சாயப்பு பணக்காரர் போலவும், கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர் போலவும் காணப்பட்டார். மற்ற கீழ்த்தரமான கைதிகளோடு தம்மையும் போலீசார் கொணர்ந்து அடைத்து விட்டதைப் பற்றி அந்த சாயப்பு நிரம்பவும் பதைத்துக் குன்றிப் போனவராகக் காணப் பட்டார் ஆனாலும், அவர் எவ்வித குற்றமும் செய்யாத பரிசுத்தர்

போலவும், எதற்கும் அஞ்சாதவர் போலவும், தாம் எப்படியும் விடுதலையடைந்து விடலாம் என்ற நம்பிக்கையைக் கொண்டவர் போலவும் காணப்பட்டு ஒரு மூலையில் கம்பீரமாக உட்கார்ந்து, கால்மேல் கால் போட்ட வண்ணம் இருந்து ஏதோ சிந்தனை செய் வதும் தனது சகாக் கைதி எப்படிப்பட்டவன் என்பதைக் கவனிப் பதுமாய் இருந்தார். அப்போது தாழ்வாரத்தில் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த ஜெவான் உலாத்தியபடி அந்த அறைக்கெதிரில் வந்து நின்று அந்த சாயப்புவைப் பார்த்து, "ஐயா! சாயப்பு! என்ன குற்றத்திற்காக உம்மைக் கைதி செய்து கொண்டு வந்திருக்கி றார்கள்? உம்மைப் பார்த்தால், தக்க பெரிய மனிதர் போலிருக் கிறதே" என்று வினவினான்.

உடனே சாயப்பு நிரம்பவும் அலட்சியமாகவும் முறுக்காகவும் பேசத் தொடங்கி, "இவர்கள் கைதி செய்து கொண்டு வந்து விட்டால், என்னைத் தண்டித்துவிட முடியுமோ? இருக்கட்டும், ஒருகை பார்த்து விடுகிறேன். கல்கத்தாவில் இருந்து நார்டன் துரையை வரவழைத்தால், இந்தப் போலீசார் எல்லோரும் உடனே பஞ்சாய்ப் பறக்க வேண்டியது தானே; இருக்கட்டும். இவர்கள் செய்வதை எல்லாம் செய்யட்டும். என்னை அக்கிரமமாகக் கைதி செய்து அவமானப்படுத்தியதற்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மான நஷ்ட தாவா போட்டு விடுகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட பாராக்காரர் சிரித்துக் கொண்டு, "ஐயா! சாயப்பு! என்ன குற்றத்திற்காக உம்மை இங்கே அடைத்திருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். நீர் உம்முடைய கோபத்தை எல்லாம் என்னிடம் காட்டுகிறீரே!" என்றான். உடனே சாயப்பு முன் போலவே கோபமாய்ப் பேசத் தொடங்கி, "எனக்கு என்ன ஐயா கோபம் இருக்கிறது? இது உங்களுடைய ஆதீனம். நான் என்னுடைய கோபத்தை இங்கே காட்டினால் அது செல்லுமா? ஒரு நாளும் செல்லாது. நான் ஒரு பெரிய கம்பெனியில் கஜான்சி உத்தியோகம் பார்க்கிறவன். கம்பெனியின் பணத்தில் மூன்று லட்சம் ரூபாய் குறைகிறதாம். அதை நான் தான் எடுத்திருப்பேன் என்று சந்தேகப்பட்டு என்னைக் கைதி செய்திருக்கிறார்கள்.

செய்தால் என்ன? அதோடு குடி முழுகிப்போய் விட்டதா? இந்த நகரத்துப் போலீஸ் கமிஷனர் என்னை நன்றாக அறிவார். இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் எல்லோரும் எனக்குப் பழக்க மானவர்களே. நான் இன்னும் எவ்வளவு நாழிகை இங்கே இருக்கப் போகிறேன். என்னை ஜாமீனில் விடும்படி கேட்டுக் கொண்டிருக் கிறேன். அதன்மேல் உத்தரவு பிறக்கிற வரையில் தான் நான் இங்கே இருக்கப் போகிறேன். அவ்வளவு தான்" என்றார். பாராக்காரன், "ஓகோ! அப்படியா! சரி; இரும்; உம்முடைய பெயர் என்ன?" என்றான். துருக்க சாயப்பு, "என் பெயர் ஜானிஜான் கான் சாயப்" என்றார்.

அதைக் கேட்டுக் கொண்ட பாராக்காரன் அதற்கு மேல் அவரிடம் பேச்சுக் கொடுக்காமல் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான். அதுவரையில் அந்த அறைக்குள் ஏதேச்சையாக இருந்தவனான நமது இடும்பன் சேர்வைகாரன் வேறொருவர் அவ்விடத்திற்கு வந்து விட்டதைப் பற்றி மிகுந்த கிலேசமடைந்து குன்றிப் போனவனாய்க் கம்பிக் கதவின் பக்கத்தில் நின்று வெளியில் பார்த்தபடி வெகு நேரம் இருந்தபின் அலுப்புற்று, ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான். புதிதாய் வந்தவரோடு தான் பேச்சுக் கொடுத்து, வெளியுலகத்துச் செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணம் இடும்பன் சேர்வைகாரனுக்குத் தோன்றியது ஆனாலும், தான் இன்ன குற்றத்திற்காகக் கைதி செய்யப்பட்டிருப்பதாய் அவரிடம் சொல்ல நேரும் என்றும், அவர் பெரிய மனிதராய் இருப்பதால், கேவலம் திருடனாகக் கருதப்பட்டிருக்கும் தன்னோடு அவர் முகங் கொடுத்துப் பேசுவாரோ மாட்டாரோ என்றும் அவன் பலவாறு ஐயமுற்று, தான் என்ன செய்வதென்பதை அறியாது தவித்திருந்தான்; அன்றைய பகற்பொழுது கழிந்தது. மாலை வேளை வந்தது. வழக்கப்படி போலீசார் கைதிகளை வெளியில் அழைத்துக் கொண்டு போய் மறுபடி கொணர்ந்து அடைத்தனர். இடும்பன் சேர்வைகாரனுக்கு சர்க்கார் ஆகாரம் வந்து சேர்ந்தது. அவன் அதை ஒரு மூலையில் வைத்து உண்டான். ஜானிஜான் கான் சாயப்பு வின் சொந்தக்காரரான இன்னொரு துருக்கர் வெளியில் இருந்து அதிகாரிகளின் உத்தரவு பெற்று அவருக்கு ஆகாரம் எடுத்து வந்து

கொடுத்தார். அதை வாங்கி ஒரு பக்கத்தில் வைத்து உண்டபின் அவரது காதில் அவரது சொந்தக்காரர் தணிவான குரலில் ஏதோ ரகசியமான செய்தி கூறினார்.

அதைக் கேட்ட ஜானிஜான் கான் சாயப்பு, "இப்போது ஜாமீனில் விடுவதற்கு இருபதினாயிரம். பிறகு கேஸை மேலே அனுப்பாமல் தள்ளி விடுவதற்கு ஒரு லட்சம். அதற்குச் சம்மதமானால் சப் இன்ஸ்பெக்டரை வரச்சொல். என் கையில் இருக்கிற பணத்தில் இருபதினாயிரம் ரூபாயை இங்கேயே கொடுத்து விடுகிறேன்" என்று மெதுவான குரலில் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டு அவரது சொந்தக்காரர் போய்விட்டார். அவர்கள் ஒருவருக் கொருவர் நிரம்பவும் ரகசியமான வார்த்தை சொல்லிக் கொண்டனர் ஆனாலும் இடும்பன் சேர்வைகாரன் கவனிப்பாக உற்றுக் கேட்டு அவர்கள் பேசிக் கொண்டதை எல்லாம் அப்படியே தெரிந்து கொண்டு ஒன்றையும் அறியா தவன் போல ஒரு மூலையில் தனது படுக்கையை விரித்துப் படுத்துத் தூங்குகிறவன் போல நடித்துக் கொண்டிருந்தான்.

அதன் பிறகு இரண்டு நாழிகை காலம் கழிந்தது. போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் வெளியில் இருந்து வந்து அந்த அறைக்கு வெளியில் நின்று கம்பியின் இடுக்கால் உள்ளே பார்த்து "சாயப்பூ! சாயப்பூ!" என்று மெதுவாக இரண்டு தரம் கூப்பிட்டார். அது வரையில் சுவரில் சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்த சாயப்பு திடுக்கிட்டு விரைவாக எழுந்து கம்பிக்கருகில் போய் நின்று, சப் இன்ஸ்பெக்டரிடம் ரகசியமாகச் சிறிது நேரம் சம்பாஷித்திருந்த பின், தமது சட்டைப் பையிலிருந்த மணிபர்சை எடுத்து அதற்குள் ஏராளமாகத் திணித்து வைக்கப்பட்டிருந்த நோட்டுச் சுருளை எடுத்து சப் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து, "எல்லாம் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாய் இருபது நோட்டுகள் இருக்கின்றன. எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். என்னை எப்போது ஜாமீனில் விடுவார்கள்?" என்றார்.

சப் இன்ஸ்பெக்டர், "நாளை காலை ஏழு மணிக்கு நான் வந்து உம்மைப் பார்க்கிறேன். காலை பத்து மணிக்குள் நீர் வெளியில் வந்து விடும்படியான வழியைத் தேடுகிறேன்; பயப்பட

வேண்டாம்; எப்படியாவது பல்லைக் கடித்துக் கொண்டு இந்த ஓர் இரவைக் கடத்தும்" என்று கூறிவிட்டு விரைவாக அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார். தூங்குகிறவன் போலப் படுத்திருந்த நமது இடும்பன் சேர்வைகாரன் அவ்விடத்தில் நடந்தவைகளை எல்லாம் நன்றாகக் கவனித்துத் தெரிந்து கொண்டான். அவனது மனத்தில் பலவித எண்ணங்கள் தோன்றின. வெளியில் இருந்து தனக்கு உதவி செய்யத் தகுந்த மனிதர்கள் யாரும் இல்லாத இந்த அன்னிய ஊரில் வந்து தான் சிறைப்பட நேர்ந்ததே என்றும், அந்தச் சமயத்தில் மாசிலாமணி சென்னையில் இருந்தால், அவன் தன்னை விடுவிக்க ஏற்பாடு செய்வான் என்றும் இடும்பன் சேர்வைகாரன் எண்ணினான். ரமாமணியம்மாள் முதலியோர் சென்னையில் இருந்தும் தனக்கு எவ்வித உதவி செய்யவும் முன் வரவில்லையே என்ற ஆத்திரமும் பொங்கி எழுந்தது. தான் சிறைபட்டுப் போனதைப் பற்றி அவர்கள் கும்பகோணத்திற்கு உடனே ஒரு தந்தியனுப்பினால் மாசிலாமணி வந்து தனக்கு உதவி செய்வான் என்ற நினைவு தோன்றியதானாலும், தான் ரமாமணி யம்மாளைப் பார்ப்பதற்கும் வகை இல்லை என்பதை உணர்ந்த அவன் மிகுந்த கவலையும் சஞ்சலமும் அடைந்த வனாய்த் தனது திக்கற்ற நிலைமையை எண்ணி எண்ணி ஏங்கி இருந்த தருணத்தில், அவ்விடத்தில் சுவரில் சாய்ந்தபடி உல்லாச மாக உட்கார்ந்து கொண்டிருந்த ஜானிஜான் கான் சாயப்பு இடும்பன் சேர்வைகாரனை நோக்கி மிருதுவாகவும் நயமாகவும் பேசத் தொடங்கி, "ஐயா! ஏன் இவ்வளவு பொழுதோடு படுத்துக் கொண்டீர்? இதற்குள் தூக்கம் வந்துவிட்டதா என்ன?" என்றார்.

கண்ணியமும் மிகுந்த செல்வமும் செல்வாக்கும் வாய்ந்தவராகத் தோன்றிய அந்த சாயப்பு தன்னை மதித்து தன்னோடு பேசமாட்டார் என்று அவன் நினைத்ததற்கு மாறாக தான் எதிர்பாரா வகையில் அவர் தன்னோடு சிநேக பாவமாய்ப் பேச்சுக் கொடுத்ததை உணர்ந்த இடும்பன் சேர்வைகாரன் மிகுந்த களிப்பும் ஊக்கமும் அடைந்தான். தனது திக்கற்ற நிலைமையில் அந்தப் பெரிய மனிதரோடு தாம் பழக்கம் செய்து கொண்டு அவர் வெளியில் போனபின் அவரைக் கொண்டு மாசிலாமணிக்குச் செய்தி அனுப்பலாம் என்ற நினைவு தோன்றியது ஆகையால்,

அவன் சரேலென்று எழுந்து உட்கார்ந்து வணக்கமாகவும், மரியாதையாகவும், விநயமாகவும் மறுமொழி கூறத் தொடங்கி, "எனக்குத் தூக்கம் வரவில்லை. பகலெல்லாம் ஓயாமல் நின்றதனால் கால் கடுப்பெடுத்துக் கொண்டது; அதனால் இப்படிக் கொஞ்சம் படுத்தேன்" என்றான்.

அதைக் கேட்ட சாயப்பு அவனது வணக்கத்தையும், மரியாதையையும் கண்டு, அவனிடம் ஒருவித அபிமானமும், அன்பும் கொண்டவராய், "ஓகோ! சரி; அப்படியானால் படுத்துக் கொள்ளும். உம்மைப் பார்த்தால் தக்க பெரிய மனிதராயும், யோக்கியதா பட்சமுடையவராயும் தெரிகிறது. உம்மை ஏன் இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்? அபாண்டமாக என்னை இந்தப் போலீசார் கொண்டு வந்து இங்கே வைத்திருப்பதை எண்ண எண்ண, அநேகமாய் இவ்விடத்தில் இருப்பவர்கள் எல்லோரும் என்னைப் போலவே அக்கிரமமாக அடைபட்டிருப்பவர்கள் என்றே நினைக்கிறேன். என்ன குற்றத்திற்காக உம்மைப் போலீசார் இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்? நீர் எப்போதும் இருப்பது இந்த ஊர்தானோ?" என்றார்.

அவ்வாறு அவர் நிரம்பவும் அனுதாபத்தோடும், தான் குற்றமற்றவன் என்ற நல்ல அபிப்பிராயத்தோடும் பேசியதைக் கேட்ட இடும்பன் சேர்வைகாரன் மிகுந்த குதூகலமும் ஆறுதலும் அடைந்து, "சாயப்பு ஐயா! அந்த அக்கிரமத்தை என்னவென்று சொல்லுவேன். நான் இருப்பது கும்பகோணம். ஒரு கலியாண விஷயமாக நான் இங்கே வந்தேன். வந்து ராமசாமி முதலியார் சத்திரத்தில் நான் எங்கள் ஊர் மனிதர்களோடு தங்கியிருந்த காலத்தில் இராத்திரி படுத்திருக்கையில் ஒரு பெண் பிள்ளையின் கை விரலில் இருந்த மோதிரத்தை நான் திருடி விட்டேன் என்று அபாண்டமாக என்மேல் குற்றம் சுமத்தி போலீசார் என்னை இங்கே கொண்டுவந்து அடைத்திருக்கிறார்கள். இந்த வழக்கு எப்போது விசாரணைக்கு வரும் என்பதும் தெரியவில்லை. எனக்கு உதவி செய்யக்கூடிய மனிதர்கள் யாரும் இந்த ஊரில் இல்லை. என்னுடைய சொந்த ஊராகிய கும்பகோணமாய் இருந்தால், எனக்கு உதவி செய்ய ஏராளமான மனிதர்கள் வருவார்கள். ஆயிர

மல்ல, பதினாயிரமல்ல எனக்காகச் செலவு செய்யக்கூடிய மனிதர்கள் அங்கே இருக்கிறார்கள். எனக்கு இப்பேர்ப்பட்ட கதி நேர்ந்துவிட்டதென்ற செய்தியைக்கூட அவர்களுக்குத் தெரியப் படுத்த நான் அசக்தனாக இருந்து தவிக்கிறேன்" என்று நிரம்பவும் தாபந்திரியமாகவும் பரிதாபகரமாகவும் கூறினான். அதைக் கேட்ட சாயப்பு சிறிது நேரம் சிந்தனை செய்த பின்னர் நிரம்பவும் விசன கரமாகவும் கனிகரமாகவும் பேசத் தொடங்கி, "ஐயா! உம்முடைய வரலாற்றைக் கேட்க, நான் என்னுடைய சொந்த விசனத்தைக்கூட இப்போது அவ்வளவாக உணரவில்லை. உம்முடைய நிலைமை நிரம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. உம்முடைய முகத்தின் கம்பீரத்தைப் பார்க்கும் போதே, நீர் திருட்டு முதலிய அற்ப குற்றங் களில் இறங்கக் கூறியவர் அல்ல என்பது நன்றாகத் தெரிகிறது. நீர் சொன்ன வரலாறு உண்மையானதென்றே என் மனதில் தானாகவே ஒருவித நம்பிக்கை உண்டாகிறது. இந்த வேளையில் ஆண்டவன் என்னை இங்கே கொண்டுவந்து விட்டு, உம்முடைய துக்ககரமான வரலாறு என் காதில் விழும்படி செய்தது, நான் என்னால் ஆன உதவியை உமக்குச் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு தான் என்று நினைக்கிறேன். நான் உம்மைப் பார்த்த தற்கு ஒரு பலனாக, உமக்கு என்னால் ஏதாவது உதவி ஆக வேண்டுமானால், நான் அதைச் செய்யத் தயாராய் இருக்கிறேன். நாளைய தினம் சாயுங்காலத்திற்குள் நான் இவ்விடத்திலிருந்து வெளியில் போய் விடுவேன். இந்த ஊர் போலீஸ் கமிஷனர், இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் எனக்கு நிரம்பவும் வேண்டிய மனிதர்கள். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நாளைய தினம் காலையில் இங்கே வருவார். அவரிடம் உம்மைப் பற்றி நான் சிபார்சு செய்து பார்க்கிறேன். அவரால் உமக்குச் செய்யக்கூடிய உதவியை அவசியம் செய்யச் சொல்லுகிறேன். நீர் கவலைப்பட வேண்டாம்" என்றார்.

அதைக் கேட்ட இடும்பன் சேர்வைகாரன் அளவற்ற மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்து, தனது மனப்பூர்த்தியான நன்றியறிதலை வெளிப்படுத்தி, "சாயப்பு ஐயா! நீங்கள் சொல்வது போல, ஆண்டவன் தான் என்மேல் இரக்கங் கொண்டு உங்களை இந்தச் சமயத்தில் இங்கே அனுப்பி இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

என்னுடைய இந்த திக்கற்ற நிலைமையில் நீங்கள் இந்த உதவி செய்தால், உங்களுக்குப் பெருத்த புண்ணியம் உண்டாகும். ஆண்டவன் உங்களுக்கு எவ்வித குறைவையும் வைக்க மாட்டார்" என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறினான். அதற்கு மேல் அவர்கள் அதிகமாய் ஒருவரோடொருவர் பேசாமல் அவ் வளவோடு சம்பாஷணையை நிறுத்திக் கொண்டு அப்போதைக் கப்போது லோகாபிராமமாய் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் சொல்லியபடி இருந்து அப்படியே படுத்துக் கொண்டு துயின்று அந்த இரவைப் போக்கினார்கள். மறுநாள் காலையில் பாராக் காரர்கள் வந்து வழக்கப்படி அவர்களை வெளியில் அழைத்துக் கொண்டு போய்த் திருப்பி அழைத்து வந்து அவ்விடத்தில் அடைத்தனர். இடும்பன் சேர்வைகாரனுக்குக் காலை ஆகாரம் சர்க்காரால் கொடுக்கப்பட்டது. சாயப்புவுக்கு முதல் நாளைப் போல வெளியிலிருந்து சொந்த ஆகாரம் வந்தது. அதை அவர் உட்கொண்ட பின் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்தவராய்க் கம்பிக் கதவண்டை போய் நின்று கொண்டிருந்தார். கால் நாழிகை காலத்தில் அவரும் வந்து சேர, இருவரும் ஒருவருக்கொருவர் சலாம் வைத்து அன்னியோன்னிய மாய்ப் பேசத் தொடங்கினர். சப் இன்ஸ்பெக்டர் கம்பிக் கதவின் வெளிப் பக்கத்திலும், சாயப்பு உள் பக்கத்திலுமாய் நின்று காதோடு ரகசியமாய் அரை நாழிகை சாவகாசம் சம்பாஷித்திருந் தனர். அந்த சம்பாஷணையில் ஒரு வார்த்தைகூட இடும்பன் சேர்வைகாரனுக்குக் கேட்கவில்லை. சப் இன்ஸ்பெக்டர் தமது சம்பாஷணையை முடித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு உடனே போய் விட்டார். சாயப்பு கம்பிக்கதவை விட்டு அந்த அறையின் கோடிக்குப் போய் நின்று சைகை செய்து இடும்பன் சேர்வைகாரனை அழைக்க, அவர் தனக்கு ஏதோ விசேஷச் செய்தி சொல்லப்போகிறார் என்ற ஆவல் கொண்டவனாய் அவன் விரைவாக அவரிடம் போய் நிரம்பவும் வணக்கமாகவும் மரியாதை யாகவும் அடங்கி ஒடுங்கி நின்றான்.

உடனே சாயப்பு, "ஐயா! என்னை ஜாமீனில் விடும்படி இவர்கள் சிபார்சு செய்து விட்டார்களாம். இன்று மத்தியானம் 12 மணிக்குள் மாஜிஸ்டிரேட்டின் உத்தரவு கிடைத்துவிடும். நான் உடனே இவ்விடத்தை விட்டுப் போய் விடுவேன். இப்போது

வந்த சப் இன்ஸ்பெக்டரிடம் நான் உம்மைப் பற்றியும் பேசினேன். அவர் சொல்வதைப் பார்த்தால், நீர் உண்மையி லேயே திருட்டுக் குற்றம் செய்தவர் என்று நினைக்கும்படியாகத் தான் இருக்கிறது. உம்மை இவர்கள் பிடித்ததற்கு மறுநாள் உமக்கு பேதி மருந்து கொடுத்து உம்முடைய வயிற்றிலிருந்த மோதிரத்தை வெளிப் படுத்தினார்களாமே. அப்படி இருக்க, இவர்கள் அபாண்டமாக இதைக் கற்பனை செய்திருக்கிறார்கள் என்று நாம் எப்படி நினைக்கிறது" என்றார்.

இடும்பன் சேர்வைகாரன் நிரம்பவும் பரிதாபகரமான குரலில் "சாயப்பு ஐயா! ஆண்டவன் அறியச் சொல்லுகிறேன். நான் அந்த மோதிரத்தைத் திருடவே இல்லை. மறுநாள் இவர்கள் எனக்குப் பேதி மருந்து கொடுத்தது நிஜமே; அப்போது மோதிரம் வெளிப் பட்டதாக இவர்கள் சொல்லுகிறார்களே யன்றி, அதை நான் பார்க் கவே இல்லை. நான் வெளிக்குப் போய் வந்த பிறகு போலீசார் போய்ப் பார்த்து மோதிரத்தை அங்கே போட்டிருக்க வேண்டுமே யன்றி, பிரமாணமாக நான் திருடவே இல்லை" என்று அழுத்த மாகக் கூறினான்.

அதைக் கேட்ட சாயப்பு அதை இன்னதென்று தீர்மானிக்க மாட்டாமல் சிறிது நேரம் தவித்தவராய், "ஐயா! நீர் பேசுவதைப் பார்த்தால், உண்மை போலவே படுகிறது. அவர்களும் ருஜூ வோடு இந்த வழக்கை ஜோடித்திருக்கிறார்கள். இப்போது இருக்கும் நிலைமையில், இந்தத் திருட்டுக் குற்றத்திற்காக உமக்கு குறைந்தது ஆறுமாத காலத்திற்காவது கடுங்காவல் தண்டனை கிடைக்கும் என்று சப் இன்ஸ்பெக்டர் சொன்னார். அதுவுமன்றி இன்னொரு பெரிய சங்கதியும் சொன்னார். இந்த ஊரில் கலெக்டர் ஒருவர் இருக்கிறாராம். அவருடைய பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்களாம். அதற்காக மன்னார்குடியில் இருந்து பிள்ளை வீட்டார் வந்து கோம ளேசுவரன் பேட்டையில் இறங்கி இருந்தார்களாம். அவர்களுக்கு கும்பகோணத்தில் யாரோ பகைவர் இருக்கிறார்களாம்! அவர் களால் அனுப்பப்பட்ட ஆள்கள் வந்து இரவில் வீட்டிற்குள் புகுந்து கலியாணத்திற்கு வந்திருந்த மனிதர்களுடைய காது, மூக்குகளை எல்லாம் அறுத்து பெருத்த

அக்கிரமம் நடத்தி விட்டார்களாம். அவர்களுள் சிலர் பிடிபட்டு இந்தச் சிறைச்சாலையின் முதல் கட்டில் வைக்கப் பட்டிருக்கிறார்களாம். அவர்களைப் போலீசார் அடித்துக் கேட்டதில், நீர்தான் அவர்களை அழைத்து வந்தீர் என்று கொஞ்ச நேரத்திற்கு முன்னே தான் அவர்கள் ஒப்புக் கொண்டார்களாம். அந்த விஷயத்தில் உம்மேல் மகா விபரீதமான குற்றம் வந்து சுமருவது நிச்சயம் என்றும், அதற்காகவே இந்தத் திருட்டு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற தென்றும் சப் இன்ஸ்பெக்டர் சொன்னார். இதை எல்லாம் கேட்டவுடனே, நாம் உம் விஷயத்தில் செய்ய எத்தனிக்கும் உதவி பிரயோஜனப்படா தென்று தோன்றிவிட்டது. ஆனாலும், நான் துணிந்து சப் இன்ஸ்பெக்டரிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்து, நீர் கும்ப கோணத்தில் உள்ள யாருக்காவது கடிதம் எழுதி பணம் வருவித்துக் கொடுப்பதானால், அவர் அதை வாங்கிக் கொண்டு, உம்மை மெதுவாய்த் தப்பவைத்துவிட முடியுமா என்று கேட்டுப் பார்த் தேன். போலீஸ் கமிஷனருக்குப் பதினாயிரம், மற்ற போலீஸ் சிப்பந்திகளுக்கெல்லாம் ஐயாயிரம் ஆக பதினைந்து ஆயிரம் ரூபாய் பெயருமானால், உம்மை நிரம்பவும் தந்திரமாகத் தப்ப வைத்து விடுவதாகச் சொல்லுகிறார். உம்முடைய அபிப்பிராயம் என்ன? சீக்கிரம் சொல்லும். நான் இனி அதிக நேரம் இங்கே இருக்கமாட்டேன். அடுத்த நிமிஷத்தில் என்னை விட்டுவிட உத்தரவு வரக்கூடும்" என்றார்.

இடும்பன் சேர்வைகாரன் மிகுந்த கலக்கமும், திகிலும் கொண்டு சிறிது நேரம் ஆழ்ந்து யோசனை செய்தான். தன் மீது போலீசார் ஏற்படுத்தப் போகும் குற்றங்களில் தான் தப்புவது கூடாக் காரியம் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. ஆகையால், போலீசார் கேட்கும் தொகையை தான் மாசிலாமணியிடம் கேட்டு வாங்கிக் கொடுத்து தப்பிப் போவதே உசிதமாகப்பட்டது. ஆகவே, அவன் சாயப்புவை நோக்கி, "சாயப்பு ஐயா! நான் உண்மையில் குற்றம் செய்தேனோ இல்லையோ, அது ஆண்டவனுக்குத்தான் தெரிய வேண்டும். போலீசார் சொல்வதிலிருந்து அவர்கள் எனக்கு எப்படியும் தண்டனை செய்து வைப்பார்கள் என்பது நிச்சய மாகத் தோன்றுகிறது. அவர்கள் கேட்கும் தொகை பெரிய தொகையாக

இருக்கிறது. இந்த ஊரில் எனக்கு ஒரு செல்லாக் காசுகூடப் பெயராது. கும்பகோணத்தில் உள்ள என் சிநேகிதர் ஒருவருக்கு எழுதி அந்தத் தொகையை வரவழைத்துத்தான் கொடுக்க வேண்டும். அதை நான் எப்படி வரவழைக்கிற தென்பதுதான் தெரியவில்லை. என் சிநேகிதருக்கு நான் ஒரு கடிதம் எழுதுகிறேன். அதை யாராவது தபால் பெட்டியில் போட் டால், அது அவரிடம் போய்ச் சேர்ந்து விடும். அவர் உடனே பணத்தோடு வந்து சேருவார். அவ்வளவு தூரத்திற்கு நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட சாயப்பு சிறிது நேரம் யோசனை செய்து, "சரி, அப்படியே செய்து உம்முடைய சிநேகிதரைப் பணத்தோடு வரவழைத்து காரியத்தை முடிப்பதே உசிதப்படுகிறது. ஆனால், நீர் சொல்லுகிறபடி கடிதத்தை தபாலில் போடுவது பிசகு. அது தவறினாலும் தவறிப் போகும். இந்த அவசர வேளையில் அது அவரிடம் போய்ச் சேராமல் போனால், காரியம் கெட்டுப் போகும். கடிதத்தை ரிஜிஸ்டர் செய்வதும் பிசகு. அதுவே, பின் னால், உமக்கு விரோதமான சாட்சியாக முடிந்தாலும் முடியும். ஆகையால், இந்த விஷயத்தில் நான் உமக்கு ஓர் உதவி செய்கிறேன். நீர் கடிதம் எழுதி என்னிடம் கொடும். நான் என்னுடைய ஆளிடம் அதைக் கொடுத்து, இன்றைய இராத்திரி ரயிலிலேயே அவனை அங்கே அனுப்பி, நேரில் கடிதத்தைக் கொடுக்கும்படி செய்கிறேன். அவரே பணத்தோடு நேரில் புறப்பட்டு வருவதே நல்லதென்றும், அல்லது, தடுக்க முடியாத ஏதாவது அசந்தர்ப்பத்தினால், அவர் நேரில் வர முடியாவிட்டால், பணத்தை அந்த ஆள் வசமே கொடுத்தனுப்பலாம் என்றும் நீர் எழுதி விடும்" என்றார்.

இடும்பன் சேர்வைகாரன் அதற்கிணங்க, சாயப்பு தமது சட்டைப் பையில் இருந்த காகிதம், பவுண்டன் பேனா முதலியவற்றை எடுத்துக் கொடுக்க, அவன் அதை வாங்கி மாசிலாமணிக்கு சுருக்கமான கடிதம் ஒன்று எழுதினேன். அபாண்டமாகத் தன் மேல் ஒரு திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதால், அவன் பதினையாயிரம் ரூபாயோடு உடனே புறப்பட்டு நேரில் வர

வேண்டும் என்றும், வர முடியாவிட்டால், அதை அந்த ஆள்வசம் கொடுத்தனுப்ப வேண்டும் என்றும் எழுதி முடித்தான். அதைத் தவிர வேறு எந்த விஷயத்தையும் அவன் அதில் குறிக்கவில்லை. அவ்வாறு எழுதப்பட்ட கடிதத்தை அவன் சாயப்புவினிடம் கொடுக்க, அவர் அதை வாங்கிப் படித்துப் பார்த்து, அது நிரம்ப வும் ஜாக்கிரதையாகவும் நன்றாகவும் எழுதப்பட்டிருக்கிறதென்று அவனைப் புகழ்ந்து, அதைத் தாம் வெளியில் போனவுடன் ஓர் உறையில் போட்டு ஒட்டித் தமது ஆள்வசம் கொடுத்து அனுப்பி விடுவதாக உறுதி கூறி மடித்து சட்டைப் பையில் வைத்துக் கொண்டதன்றி, மாசிலாமணியின் விலாசத்தையும் கேட்டு இன்னொரு காகிதத்தில் குறித்துக் கொண்டார்.

அதன் பிறகு சாயப்பு, "ஐயா! இந்தப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இன்னொரு வேடிக்கையான சங்கதிகூடத் தெரிவித்தார். இந்த ஊர்க் கலெக்டருடைய பெண்ணைக் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மாப்பிள்ளை என்ன செய்தானாம், அந்தப் பெண்ணை அவன் இதற்கு முன் பார்த்ததே இல்லையாம். அவளுடைய அழகும் குணமும் எப்படி இருக்கின்றன என்று பார்ப்பதற்காக அவன் பெண் வேஷம் போட்டுக் கொண்டானாம். அவனுடைய சிநேகிதன் ஒருவனையும் கூட்டிக் கொண்டு, பெண்ணின் புதிய சம்பந்தி வீட்டு மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டு, அவர்களுடைய பங்களாவிற்குப் போய் அந்தப் பெண்ணோடு பேசிக் கொண்டிருந்தானாம். அந்தப் பெண் அந்தத் தகவலைத் தன் தகப்பனாருக்குத் தெரிவித்ததாம். அவர் உடனே மன்னார்குடிக்குத் தந்தி கொடுத்தாராம். அப்படிப்பட்ட உறவினர் தங்களுக்கு யாரும் இல்லை என்று மன்னார்குடியார் மறு தந்தி கொடுத்தார்களாம். உடனே கலெக்டர் போலீசாருடன் வந்து உண்மையை விசாரிக்க, அவர்கள் உண்மையைச் சொல்ல வில்லையாம். அவர்களைப் போலீசார் அவ்விடத்தில் இராத்திரி முழுதும் அடைத்து வைக்க உத்தேசித்துப் பூட்டி வைத்தார்களாம். அந்தச் சமயத்தில், கலெக்டருடைய பெண்ணை அபகரித்துப் போக வந்த யாரோ விரோதிகள் ஆள்மாறாட்டமாக பெண் வேஷத்தோடிருந்த மாப்பிள்ளையைத் தூக்கிக் கொண்டு போய்

விட்டார்களாம். அந்த ஆள்களும் இப்போது பிடிபட்டிருக்கும் ஆள்களும் ஒரே ஆள்கள் தானா என்பதைப் பற்றியும் போலீசார் விசாரணை செய்து வருகிறார்களாம். அது ருஜுவாகும் பட்சத்தில், அதிலும் போலீசார் உம்மைச் சம்பந்தப்படுத்த உத்தேசம் என்று சப் இன்ஸ்பெக்டர் சொன்னார்" என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட இடும்பன் சேர்வைகாரன் திடுக்கிட்டு, "ஆகா! அப்படியா!" என்று மிகுந்த வியப்பைக் காட்டும் சொற்களைக் கூறினான். உடனே சாயப்பு, "ஐயா! நீர் பேசுவதைப் பார்த்தால், இந்த விஷயம் ஏற்கெனவே உமக்குத் தெரியும் போலிருக்கிறதே" என்றார்.

இடும்பன் சேர்வைகாரன், "இல்லை இல்லை. நானும் அந்த மாசிலாமணிப் பிள்ளையும் ஒரு நாள் சமாசாரப் பத்திரிகை வாசித்த காலத்தில், இந்தத் தகவல் அதில் வெளியாய் இருந்ததைப் படித்து ஆச்சரியம் அடைந்தோம். அந்தப் பெண்ணின் புருஷனே பெண் வேஷம் போட்டுக் கொண்டு வந்தான் என்று இப்போது நீங்கள் சொன்னதைக் கேட்கவே எனக்கு அது நிரம்பவும் அதிசயமாகப் பட்டது. வேறொன்றுமில்லை" என்றான்.

சாயப்பு, "ஓகோ! அப்படியா சங்கதி! என்னவோ, போலீசார் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் வாங்கும் சம்பளம் செரிக்க வேண்டும் அல்லவா. அதற்கு நிரபராதிகளை எல்லாம் வயிறெரியச் செய்கிறார்கள். ஆனால் மொத்தத்தில் நான் ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயமாகச் சொல்லுவேன். இவர்கள் இந்தப் போலீஸ் வேலையில் இருந்து இவ்வளவு அபாரமான சொத்துக்களை கொள்ளையடிக்கிறார்களே! இவர்களில் எவனாவது முன்னுக்கு வந்து பிள்ளை குட்டிகளோடு நீடித்து க்ஷேமமாய் வாழ்ந்த துண்டா? அது ஒரு நாளுமில்லை. அக்கிரமக் காசு அடியோடு வேரைக் கல்லி விஷத்தை வைத்து அவர்கள் பூண்டோடு நாசமாய்ப் போய்விடும்படி செய்வது நிச்சயம்" என்றார்.

அதைக் கேட்ட இடும்பன் சேர்வைகாரன், "ஆம், ஆம், நீங்கள் சொல்வது மெய்யான விஷயம். இந்தப் புது மாப்பிள்ளையின்

விஷயத்தை என் சிநேகிதர் கேட்டால், என்னைவிட பத்து பங்கு அதிகமாய் ஆச்சரியமடைவார். அதைப் பற்றி, நான் ஒரு வரி என் சிநேகிதருக்கு எழுதலாம் என்று நினைக்கிறேன். தயவு செய்து அந்தக் கடிதத்தை கொடுங்கள்" என்றான்.

உடனே சாயப்பு கடிதத்தை எடுத்துக் கொடுக்க, இடும்பன் சேர்வைகாரன் அதன் அடியில் கீழே கண்டபடி சேர்த்தெழுதினான். "சென்னை கலெக்டர் பட்டாபிராம பிள்ளையின் வீட்டில் நடந்த சம்பவத்தை நாம் பத்திரிகையில் படித்தோமல்லவா, வேலாயுதம் பிள்ளையின் மைத்துனி என்று சொல்லிக் கொண்டு வந்து, இரவில் முரடர்களால் அபகரிக்கப்பட்டுப் போன பெண் உண்மையில் பெண் அல்லவாம். கலெக்டருடைய பெண்ணைக் கட்ட இருந்த மாப்பிளைப் பையனே அந்தப் பெண்ணின் குணாதிசயங்களை அறிய அப்படிப் பெண் வேஷம் போட்டுக் கொண்டு அங்கே வந்திருந்தானாம்" என்று இடும்பன் சேர்வைகாரன் சேர்த்து எழுதி, அதை மறுபடியும் சாயப்புவினிடம் கொடுக்க, அதை அவர் வாங்கி முன் போல பத்திரப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு இரண்டு நாழிகை காலம் கழிந்தது. போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வேறொரு ஜெவானோடு மறுபடி அங்கே வந்து சேர்ந்தார். அந்த ஜெவான் தனது கையில் வைத்திருந்த திறவு கோலால் அந்த அறையின் பூட்டைத் திறந்து விட்டான். உடனே சப் இன்ஸ்பெக்டர் உள்ளே நோக்கி, "சாயப்பு ஐயா! உம்மை ஜாமீனில் விடும்படி உத்தரவு ஆகிவிட்டது. வாரும் வெளியில்" என்றார்.

அதைக் கேட்கவே சாயப்புவின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்து போயிற்று. அவர் உடனே இடும்பன் சேர்வைகாரனைத் தனியாக ஒரு மூலைக்கு அழைத்துப் போய் வைத்துக் கொண்டு, "சேர்வைகாரரே! பார்த்தீரா என்னுடைய பணம் செய்த வேலையை. மகா ஆடம்பரமாக என்னைப் பிடித்து வந்து இங்கே அடைத்த இந்த சப் இன்ஸ்பெக்டர் என்னுடைய இருபதாயிரம் ரூபாயை வாங்கியவுடன் நாய் போலப் படிந்து எனக்கு உபசரணை செய்கிறான் பார்த்தீரா? நான் உம்மை எப்படியும் தப்ப வைப்பது நிச்சயம். ஆனால், அந்த மாசிலாமணிப் பிள்ளை

மாத்திரம் உடனே பணங் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். மற்ற வேலையை நான் ஒரு நொடியில் முடித்து விடுவேன். நான் போய் வருகிறேன். இன்று மாலையில் நான் என் ஆளை அனுப்பினால், அவன் நாளைய தினம் கும்பகோணத்துக் காரியத்தை முடித்துக் கொண்டு மறுநாள் இங்கே வந்து சேருவான். இன்று செவ்வாய்க் கிழமை அல்லவா. வியாழக் கிழமை காலை 8, அல்லது, 9-மணிக்கு நான் இங்கே வந்து முடிவை உனக்குத் தெரிவிக்கிறேன்" என்றார்.

உடனே சேர்வைகாரன், "சரி, அப்படியே செய்யுங்கள். இந்தச் சமயத்தில் நான் உங்களைத் தான் மலை போல நம்பி இருக்கிறேன். எப்படியாவது முயற்சி செய்து நீங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும். ஆனால், எனக்கு ஒரு நினைவு தோன்று கிறது. அந்த மாசிலாமணிப் பிள்ளையே நேரில் வருவாரோ மாட்டாரோ. அநேகமாய் அவர் பணத்தைத் தான் கொடுத்தனுப்பு வார் என்று நினைக்கிறேன். நீங்கள் அனுப்புகிற ஆள் நம்பிக்கைக் குப் பாத்திரமானவராக இருக்க வேண்டும். அதை நீங்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்" என்று நிரம்பவும் பணிவாகக் கூறினான்.

சாயப்பு, "ஐயா! அதைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். என்னுடைய ஆளிடம் லட்சம் ரூபாய் கொடுத்தால் கூட, அவன் அதை பத்திரமாக கொண்டு வந்து சேர்ப்பான். ஆனால் அவனுக்கு நேற்று உடம்பு ஜுரமாக இருந்தது. அவன் நல்ல நிலைமையில் இருந்தால் அவனை அனுப்புகிறேன். இல்லாவிட்டால், உமக்காக நானே நேரில் போய்விட்டு வந்து விடுகிறேன்" என்றார்.

அவ்வாறு கூறிய பின் சாயப்பு அவ்விடத்தை விட்டு வெளியில் வந்தார். உடனே ஜெவான் மறுபடி கதவை மூடிப் பூட்டினான். அவனும் மற்ற இருவரும் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டனர்.

★ ★ ★

மேலே குறிக்கப்பட்ட இடும்பன் சேர்வைகாரனது கடிதம் கும்பகோணத்திற்குப் போய்ச் சேர்ந்த வரலாற்றை நாம் தெரிவிக்கும் முன், அவ்விடத்தில் மாசிலாமணி எவ்வித நிலைமையில் இருந்தான் என்பதைச் சுருக்கமாகக் கூறுவோம். அவன் மனோன்

மணியம்மாளை பலாத்காரமாய் எடுத்து வர ஆள்களை அனுப்ப அவர்கள் நமது போலிப் பெண்ணை அபகரித்து வந்ததும், அதன் பிறகு, அவன் தனது ஆட்களையே புரோகிதர் முதலியோரைப் போல வேஷம் போட்டு அந்தப் பெண்ணை சாஸ்திரப்படி தான் கலியாணம் செய்து கொள்வது போல நடித்து அவளை ஏமாற்ற எண்ண, பிறர்க்குச் செய்ய நினைக்கும் கேடு தனக்கே வரும் என்ற நீதிப்படி, அவனுக்கு வந்து வாய்த்த மணப்பெண்ணே பொய் வேஷமாக முடிந்ததும், அதன் பிறகு அவன் சோபன முகூர்த்தம் நடத்திய கோலாகலமும், முடிவில், மாரீசன் பொன் மானாய் வந்து மாயமாய் மறைந்து போனது போல அந்த மணப்பெண் அவனது ஜீவாதாரமான ரகசியத்தையும் கவர்ந்து கொண்டு போனதும் முன்னரே விஸ்தாரமாகக் கூறப்பட்டன அல்லவா. அதன் பிறகு ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னையில் இருந்து வந்த சமாசாரப் பத்திரிகையைப் படித்து மன்னார்குடி வேலாயுதம் பிள்ளை முதலியோர் அங்கஹீனப்பட்டுப் போனதாய்த் தவறாக வெளியிடப்பட்டிருந்த செய்தியைப் படித்து அவன் அளவளாவி ஆனந்த பரவசமடைந்து ஆகாயத் தில் துள்ளிக் குதித்துப் பணத்தை வாரி இறைத்து அன்னதானம் வஸ்திரதானம் சுவாமி பூஜை முதலியவற்றை நடத்தி மெய்ம் மறந்து மதோன்மத்தனாய் இருக்க, மறுநாள் வந்த விபரீதச் செய்தி பேரிடி போல அவனைத் தாக்கி அவனது இறுமாப்பையும், களிப்பையும், குதூகலத்தையும் ஒரு நொடியில் துவம்சம் செய்து பஞ்சாய் பறக்கச் செய்ததும் முன்னரே கூறப்பட்டது. தான் தனது பகைவர்களுக்குச் செய்ய எண்ணிய மகா பயங்கரமான கேடு, தான் உயிருக்குயிராய் மதித்திருந்த ரமாமணியம்மாள் முதலியோருக்கே வந்து வாய்த்து விட்டதே என்பதை எண்ண, அவனது மனம் பொங்கி எழுந்து அப்படியே இடிந்து உட்கார்ந்து போய் விட்டது. வெட்கம், துக்கம், கோபம், அழுகை முதலிய பலவித உணர்ச்சிகள் ஒரே காலத்திலும் மாறிமாறி வீங்கி எழுந்து விவரிக்க இயலா வகையில் அவனை உலப்பின ஆதலால், அந்தச் செய்தியைப் படித்தவுடன் தனது படுக்கையில் படுத்தவன் அன்னம் தண்ணீர் முதலிய எதையும் நாடாமல் அப்படியே சிந்தாக்கிரகந்தனாய்க் கிடந்து

புரண்டு திங்கட்கிழமை பகலையும் இரவையும் கழித்தான். தான் செய்த சதியாலோசனை பலியாமல் போன ஏமாற்றம் ஒரு புறத்தில் வதைக்க, தனது ஆருயிர்க் கண்ணாட்டியான ரமாமணியம்மாள் மூக்கறுபட்டு விகார மடைந்து, தான் அருவருக்கத் தக்க நிலைமையை அடைந்த ஆராத் துயரம் இன்னொரு புறம் உலப்ப, அவர்கள் சென்னையில் எவ்விதமான சிக்கலில் அகப்பட்டுக் கொண்டார்களோ என்ற கவலையும், அதனால் தனக்கு எவ்விதமான பொல்லாங்கு சம்பவிக்குமோ என்ற பெருந் திகிலும் எழுந்து அவனைக் கப்பிக் கொண்டன. ரமாமணியம்மாள் மாத்திரம் கலியாணக் கும்பலில் நுழைந்து கொண்டு எதிரிகளுக்குக் கெடுதல் செய்யும்படி தான் ஏற்பாடு செய்திருக்க, அவளோடு அவளது தாய் தகப்பன் முதலிய மற்றவர்கள் எதற்காகப் போனார்கள் என்ற விஷயத்தை அவன் நினைத்து நினைத்துப் பார்த்து எவ்வித முடிவிற்கும் வரமாட்டாது தத்தளித்தான். அவர்களோடு சென்ற இடும்பன் சேர்வைகாரனும், அவனது ஆட்களும் மறுநாளே திரும்பி கும்பகோணத்திற்கு வந்து சேராமல் இருந்தது அவனால் சகிக்க இயலாத வேதனையை உண்டாக்கிக் கொண்டிருந்தது. சென்னையில் உண்மையில் என்ன நடந்ததென்ற முழு விவரத்தையும் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பெருத்து காட்டுத்தீ போல அவனது மனத்தில் மூண்டு பற்றி எரிந்ததானாலும், அதை எப்படி அறிவது என்பதை உணராதவ னாய்த் துடிதுடித்துக் கிடந்தான். அந்த நிலைமையில் தானே நேரில் சென்னைக்குப் போவது அவனுக்கு உசிதமாகத் தோன்ற வில்லை. வேறே ஆட்களை அனுப்பினால், அவர்கள் ஏதாவது தவறு செய்து, தனது கவலையையும் விசனத்தையும் அதிகரிக்கச் செய்து விடுவார்களோ என்ற நினைவும் தோன்றியது. ஆகவே, அவன் தான் என்ன செய்வதென்பதை நிச்சயிக்கமாட்டாமல், எந்த நிமிஷத்தில் போலீசார் தன் தலைக்கு ஏதாவது பொல்லாங்கு கொண்டு வருவார்களோ என்றும் நினைத்து நினைத்து அப்படியே தவித்துக் கிடந்தான். தன்னிடத்தில் இருந்து தப்பிப்போன சோபனப் பெண் உடனே சென்னைக்குப் போய் வேலாயுதம் பிள்ளை முதலியோரை எச்சரித்துத் தப்ப வைத்ததோடு அவர்களுக்குப்

பதிலாக ரமாமணியம்மாள் முதலியோர் அகப் பட்டுக் கொள்ளும்படி செய்திருக்க வேண்டும் என்ற நினைவே முக்கியமாகத் தோன்றியது. அந்தப் பெண் கடைசிவரையில் பொய்யான வரலாறுகளைக் கூறித் தன்னை முற்றிலும் ஏமாற்றி விட்டாள் என்ற விஷயமும் அவனது மனத்தில் நன்றாகப்பட்டது. "ஆகா! என்ன என்னுடைய அதிர்ஷ்டம்! நான் முன்பு வடிவாம் பாளைக் கொணர்ந்து கலியாணம் செய்து கொள்ள எத்தனித்த காலத்தில், அவள் சுமார் லட்சம் ரூபாய் பெறத்தக்க ஆடையாபர ணங்கயோடு எதிரியிடம் போய்ச் சேர்ந்தாள். அது போலவே இந்தப் பெண்ணும், போகும் போது சுமார் லட்சம் ரூபாய்க்கு மேல் பெறத்தக்க ஆடையாபரணங்களை அபகரித்துக் கொண்டு போனதோடு என்னுடைய முக்கியமான ரகசியத்தையும் தெரிந்து கொண்டு போய், நான் செய்த சதியாலோசனை எனக்கே வந்து வாய்க்கும்படி செய்து விட்டாளே! ஆகா! என்ன ஆச்சரியம் இது! இந்தப் பெண் யாராக இருப்பாள்! இவள் நம்முடைய பகை வருக்கு வேண்டிய மனுஷியா, அல்லது, அவர்களுக்கு விரோதி யான் மனுஷியா என்பதுகூடத் தெரியவில்லையே" என்று மாசிலாமணி பலவாறு எண்ணமிட்டுத் தத்தளித்திருக்க, மறு நாளாகிய செவ்வாய்க் கிழமையும் அவனுக்கு நரகவேதனையாகக் கழிந்தது. அன்றைய தினம் அவன் நிரம்பவும் களைத்துப் போன மையால் படுக்கையில் இருந்தபடியே சொற்ப ஆகாரம் தருவித்து உட்கொண்டான்.

மறுநாளாகிய புதன்கிழமை காலையில் அவனுக்கு வழக்கப்படி தபால்கள் வந்தன. அவன் மிகுந்த ஆவலோடு, சென்னையில் இருந்து வந்த பத்திரிகைகளைப் பிரித்துப் படித்தான். புதிய விசேஷம் எதுவும் காணப்படவில்லை. உடனே அவன் கடிதங் களைப் பிரித்துப் படித்தான். ஒரே ஒரு கடிதம் சென்னை முத்திரை யோடு வந்திருந்தது. மற்றவைகளை அவன் அலட்சியமாகப் படித்துப் போட்டுவிட்டு சென்னையில் இருந்து வந்த கடிதத்தை மாத்திரம் மிகுந்த ஆவலோடும் படபடப்போடும் பிரித்துப் படித்தான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

**அவசரம்**

ம-ா-ா-ஸ்ரீ மாசிலாமணிப் பிள்ளை அவர்களுக்கு, நண்பன் இடும்பன் சேர்வைகாரன் அநேக நமஸ்காரம் செய்து எழுதும் விக்ஞாபனம். நானும் ரமாமணியம்மாள் முதலியோரும் பட்டணம் வந்து ராமசாமி முதலியார் சத்திரத்தில் தங்கியிருந்தோம். எங்களுக்கு ரயிலில் பழக்கமான ஓர் அம்மாளும் எங்களுடன் தங்கி இருந்தாள். அந்த அம்மாள் தன்னுடைய கையில் அழகான வைர மோதிரம் ஒன்று போட்டிருந்தாள். அது இரவில் அந்த அம்மாளுடைய கை விரலிலிருந்து நழுவி தரையில் வெகு தூரத்திற்கப்பால் வந்து கிடந்தது: ஒன்றுக்கு எழுந்து போன நான் அதைக் கண்டு எடுத்துப் பார்த்தேன். அது கீழே கிடந்ததாகையால், அதை நானே எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு மூட எண்ணம் தோன்றியது. காலையில் அவர்கள் தேடிப் பார்க்கும் போது என் மேல் சந்தேகம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று நினைத்த, நான் அந்த மோதிரத்தை வாயில் போட்டு விழுங்கி விட்டேன். பிறகு அந்த அம்மாள் விழித்துக் கொண்டு மோதிரத்தைக் காணோம் என்று கூச்சலிட. போலீசார் வந்து எங்களை எல்லாம் பிடித்துக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் இருந்த எக்ஸ்ரே என்ற யந்திரத்தை வைத்துப் பார்த்து, என் வயிற்றில் மோதிரம் இருந்ததைக் கண்டு என்னை சப் ஜெயிலில் அடைத்து விட்டார்கள். இப்போது நான் அங்கே தான் இருக்கிறேன். வெள்ளிக்கிழமை இரவில் நாம் செய்ய உத்தேசித்த காரியத்தை நான் இல்லாமலேயே என்னுடைய ஆள்கள் நடத்தி விட்டதாகவும், முடிவில் அவர்கள் அகப்பட்டுக் கொண்டு சப் ஜெயிலில் வேறோர் இடத்தில் இருப்பதாகவும் தெரிகிறது. நம்முடைய ஆள்களைப் போலீசார் அடித்து வருத்தியதில் அவர்கள் ஏதோ சொற்ப தகவலை மாத்திரம் தெரிவித்திருப்பதாகவும் தெரிகிறது. அதை வைத்துக் கொண்டு போலீசார் என்னையும் அதில் சம்பந்தப்படுத்தவும், எனக்கும் உங் களுக்கும் சிநேகம் என்றும், நீங்களே எல்லா விஷயங்களையும் செய்ய எங்களை அனுப்பி இருக்கிறீர்கள் என்றும் ருஜூப் படுத்துவதற்காகவும் பலவகையில் பிரயத்தனங்களும் தந்திரங்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்று காலையில் போலீசார் என்னிடம் வந்து என்னை பயமுறுத்தி, நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கும்படி செய்து அதை

வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். என்னை மீட்பதற்காக பதினைந்து ஆயிரம் ரூபாயோடு நீங்கள் நேரில் உடனே புறப்பட்டு இங்கே வரவேண்டும் என்றும், அல்லது, கடிதம் கொண்டு வரும் மனிதரிடம் பணத்தையாவது அனுப்ப வேண்டும் என்றும் நான் எழுதும்படி கட்டாயப்படுத்தி அதை வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு யாராவது உங்களிடம் வருவார்கள். நீங்கள் எவ்வித பிடியும் கொடாமல் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங் கள். நீங்கள் உடனே பட்டணம் வந்தாலும், அல்லது, பணம் அனுப்பி னாலும், அதைக் கொண்டு உங்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இருக்கிறதென்பதை ருஜூப்படுத்த அவர்கள் உத்தேசிக்கிறார்கள். ஆகையால், நீங்கள் சென்னைக்கு வரவும் வேண்டாம்; பணம் அனுப்பவும் வேண்டாம்; "அடேய் இடும்பன் சேர்வைகாரா! திருட்டு நாயே! உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? என்னை சென்னைக்கு வரும்படி அழைக்க உனக்கு அவ்வளவு துணிவா? உனக்காகப் பதினையாயிரம் ரூபாய் செலவு செய்து உன்னை மீட்க, எனக்கு என்ன அக்கறை வந்திருக்கிறது. நீ கொழுப் பெடுத்துப் போய் திருடினால், அதற்கு நானா பிணை. நீ எக்கேடு கெட்டு எருக்கு முளைத்துப்போ. இனி மேல் நீ இப்படிப்பட்ட கடிதங்களை எனக்கு அனுப்பினால், உனக்குத் தக்க சிக்ஷை நடத்தி வைப்பேன். ஜாக்கிரதை" என்று நீங்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதி, அந்த மனிதரிடம் கொடுத்து அனுப்பி விடுங்கள்.

ஆனால், அவனை அனுப்பிய பின் நீங்கள் அது போல நடந்து என்னைக் கை விடாதீர்கள். போலீசாருக்குத் தெரியாமல் நீங்கள் உடனே நேரில் வந்தோ, ஆள்களை அனுப்பியோ, என்னைத் தப்ப வைக்க, வழி தேடும்படி வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகி றேன். ஏதோ அற்ப புத்தியால் நான் இந்தத் தவறைச் செய்து போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டேன். நான் இது வரையில் உங்களுக்குச் செய்துள்ள உதவிகளை நினைத்து இந்தச் சந்தர்ப் பத்தில் நீங்கள் என்னைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டுகிறேன்.

இங்கேயுள்ள பாராக்காரன் யோக்கியமான மனிதன். அவனு டைய உதவியால், நான் இந்தக் கடிதத்தை தபால் மூலமாக உங்களுக்கு அனுப்புகிறேன். அவனுக்கு ரூபாய் 100 தருவதாகச்

சொல்லி இருக்கிறேன். உங்கள் பணம் வந்து தான் கொடுக்க வேண்டும். மற்ற விஷயங்களை மறுபடி எழுதுகிறேன். இந்த அபாய காலத்தில் இந்த ஏழையைக் கைவிடாமல் காப்பாற்றும்படி உங்கள் காலுக்கு ஆயிரம் கும்பிடு போட்டு வேண்டிக் கொள்ளும்,

உங்கள் அடிமை,

**இடும்பன் சேர்வைகாரன்.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த மாசிலாமணி பெருத்த திகிலும் கலவரமும் அடைந்து கலகலத்துப் போனான். "ஆகா! இங்கே வந்த பெண் என்னுடைய ரகசியத்தைப் போலீசாரிடம் தெரிவித்து விட்டாள் போலிருக்கிறதே! அதன் மேல் அவர்கள் என்னை அதில் சம்பந்தப்படுத்தும் பொருட்டு ஏதேதோ தந்திரம் எல்லாம் செய்கிறார்கள் போலிருக்கிறதே! ஆகா! அவளைக் கொணர்ந்தது பெருத்த உபத்திரவத்தில் அல்லவா கொண்டு போய் விட்டிருக்கிறது. இடும்பன் சேர்வைகாரனுடைய ஆள்களையும் பிடித்துக் கொண்டு விட்டார்கள் போலிருக்கிறதே! அவர்கள் என்னென்ன விஷயங்களை வெளியிட்டு விட்டார்களோ தெரிய வில்லையே. ஆனால், நல்ல வேளையாக இடும்பன் சேர்வைகாரன் முன்னாக இந்தக் கடிதம் என்னிடம் வந்து சேரும்படி செய்து என்னை எச்சரித்தான். இந்த எழுத்து இடும்பன் சேர்வை காரனுடைய எழுத்தாகத்தான் இருக்கிறது. இது அவனால் அனுப்பப்பட்டதென்பதைப்பற்றி சந்தேகமில்லை. போலீஸ்காரன் வரட்டும் இடும்பன் சேர்வைகாரன் எழுதி இருப்பது போலவே நடந்து கொள்ளுகிறேன். போன இடத்தில் இந்த இடும்பன் சேர்வைகாரனுக்கு அந்த மோதிரத்தைப் பார்த்தவுடன் புத்தி அற்ப புத்தியாய்ப் போனதை என்னவென்று சொல்லுகிறது" என்று தனக்குள் பலவாறு எண்ணமிட்டவனாய் இருந்த காலத்தில், வேலைக்காரன் தோன்றி சென்னையில் இருந்து கடிதத்தோடு ஒருவர் வந்திருப்பதாகவும், அவர் நேரில் வந்து பார்த்துப் பேச விரும்புவதாகவும் கூறினான்.

அதைக் கேட்ட மாசிலாமணியின் மனம் நிரம்பவும் சஞ்சலம் அடைந்தது. வந்திருப்பவன் எவ்விதமான மோசக் கருத்தோடு வந்திருக்கிறானோ என்றும், அவனிடம் நிரம்பவும் ஜாக்கிரதையாக

இருக்க வேண்டும் என்றும் மாசிலாமணி தீர்மானித்துக் கொண் டான். இடும்பன் சேர்வைகாரன் முன்னாகவே தன்னை எச்சரித் திருந்தாலும், போலீஸ்காரன் தன்னை எப்படி ஏமாற்ற எண்ணி வந்திருக்கிறானோ என்று நினைத்து இன்னதென்று விவரிக்க இய லாத ஒருவித வேதனை அடைந்தவனாய் அவனை அழைத்து வரும்படி வேலைக்காரனை அனுப்பினான். அவன் வெளியில் போய் ஐந்து நிமிஷ நேரத்தில் திரும்பி வந்து சேர்ந்தான். சென்னையில் இருந்து கடிதம் கொணர்ந்திருந்த மனிதனும் அவனோடு கூட வந்து சேர்ந்தான். அவனை மாசிலாமணி இருந்த விடுதிக்குள் அனுப்பியவுடன் வேலைக்காரன் வெளியில் போய்விட்டான். உள்ளே வந்த மனிதனுக்குச் சுமார் முப்பது வயதிருக்கலாம். அவன் சுத்தமான ஆடைகள் தரித்திருந்தான் ஆனாலும் அவன் சாதாரண வேலைக்காரன் என்பது அவனது பணிவான நடத்தையில் இருந்து வெளியாயிற்று. அவன் மாசிலாமணியை நோக்கிக் குனிந்து வணங்கி, "ஐயா! நமஸ்காரம்! நீங்கள் தானே மாசிலாமணிப் பிள்ளை என்பது!" என்று நிரம்பவும் விநயமாகக் கேட்க மாசிலாமணி, விஷயம் ஒன்றையும் அறியாத வன் போல நடிக்கத் தொடங்கி, அந்த மனிதனை ஏற இறங்க இரண்டு தடவை உற்றுப்பார்த்து, "ஆம், நான்தான் மாசிலா மணிப்பிள்ளை; என்ன விசேஷம்? நீர் எங்கே இருந்து வருகிறீர்?" என்று அமர்த்தலாக வினவினான்.

அந்த மனிதன், "நான் சென்னப்பட்டணத்தில் இருந்து வந்திருக்கிறேன். அங்கே வந்திருக்கும் உங்களுடைய சிநேகிதர் ஒருவர் உங்களுக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பி இருக்கிறார்" என்றான்.

மாசிலாமணி மிகுந்த வியப்படைந்தவன் போல நடித்து, "சென்னப்பட்டணத்திற்கு என்னுடைய சிநேகிதர் யார் வந்திருக்கி றார்கள்? அவருடைய பெயரென்ன?" என்றான்.

***பட்டணத்தான்:-*** அவருடைய பெயர் இடும்பன் சேர்வைகாரராம்.

***மாசிலாமணி:-*** (மிகுந்த ஆச்சரியமும் கோபமும் அடைந்து) யார்? யார்? இடும்பன் சேர்வைகாரரா? எனக்கு அந்தப்

பெயருடைய சிநேகிதர் யாருமில்லையே! இந்தக் கடிதம் எனக்கு எழுதப்பட்டிருக்காது. வேறே யாருக்காவது எழுதப்பட்டிருக்கும். நீர் தப்பாக இதை என்னிடம் கொண்டு வந்திருக்கிறீர்.

***பட்டணத்தான்:-*** இல்லை இல்லை. கும்பகோணம் பெரிய தெருவில் உள்ள வக்கீல் சட்டைநாத பிள்ளையினுடைய சகோதரர் மாசிலாமணிப் பிள்ளை என்று இந்தக் கடிதத்தில் மேல் விலாசம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்து என்னை அனுப்பியவரும் அந்த விலாசத்தைத் தான் சொன்னார். நான் இந்த ஊருக்கு வந்து விசாரித்ததில் அந்த மேல் விலாசத்தில் குறிக்கப்பட்டுள்ள மனிதர் நீங்கள் தான் என்று என்னை இங்கே அனுப்பினார்கள். ஆகையால், அந்தச் சேர்வைகாரர் உங்களுக்குத் தான் இந்தக் கடிதத்தை அனுப்பி இருக்கிறார் போலிருக்கிறது. இதை வாங்கித் தான் பாருங்களேன்" என்று கூறிய வண்ணம் தனது சட்டைப் பையில் இருந்த கடிதத்தை எடுத்து மரியாதை யாகக் குனிந்து மாசிலாமணியிடம் கொடுத்தான். நிரம்பவும் அசட்டையாகவும் அலட்சியமாகவும் கடிதத்தை வாங்கி, மாசிலா மணி அதை உடனே பிரித்துப் படிக்க ஆவல் கொள்ளாதவன் போல நடித்து அந்த மேல் விலாசத்தின் எழுத்தை உற்றுக் கவனித்து, "இந்த எழுத்து இன்னாருடைய தென்ற அடையாளமே தெரியவில்லையே. இந்த மேல் விலாசம் நீர் குறிக்கும் இடும்பன் சேர்வைகாரரால்தான் எழுதப்பட்டதா? அவர் இதை எழுதிய போது நீர் பார்த்தீரா? – என்றான்.

***பட்டணத்தான்:-*** இந்த மேல் விலாசம் அந்த இடும்பன் சேர்வை காரரால் எழுதப்பட்டதோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது.

***மாசிலாமணி:-*** அந்த இடும்பன் சேர்வைகாரருக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்? நீர் அவருடைய சிநேகிதரா?

***பட்டணத்தான்:-*** அவருக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அவரை நான் பார்த்ததுகூட இல்லை. இந்தக் கடிதம் என்னிடம் எப்படி வந்ததென்பதை நான் விவரமாகச் சொல்லு கிறேன். நான் ஒரு சாயப்புவினிடம் குமாஸ்தாவாக இருக்கிறேன்.

அந்த சாயப்புவின் பெயர் ஜானிஜான் கான் சாயப்பு என்பது. அவர் ஒரு பெரிய கம்பெனியில் கஜான்சி உத்தியோகம் பார்க்கிறவர். அந்தக் கம்பெனியைச் சேர்ந்த பொக்கிஷத்தில் பெருத்த பணத்தொகை குறைவுபட்டதாம். கம்பெனியார் சாயப்புவின் மேல் சந்தேகங்கொண்டு அவரைப் பிடித்து இரண்டு தினங்களுக்கு முன் சிறைச்சாலையில் வைத்தார்கள். அவர் ஜாமீன் கொடுத்து விடுதலை பெற்று நேற்று வீடு வந்து சேர்ந்தார். சிறைச் சாலையில் அவர் இருந்த அறையில் இந்த இடும்பன் சேர்வை காரர் ஏதோ குற்றங்களுக்காக அடைபட்டிருக்கிறாராம். அவ் விடத்தில் என் எஜமானருக்கும் சேர்வைகாரருக்கும் பரிச்சயம் ஆனதாம். இந்தக் கடிதத்தை உங்களிடம் சேர்த்து விடும்படி சேர்வைகாரர் எங்கள் எஜமானிடம் இதைக் கொடுத்து நிரம்பவும் வேண்டிக் கொண்டாராம். ஆகையால், என் எஜமானர் தம்முடைய கையில் இருந்து என் வழிச் செலவுக்குப் பணம் கொடுத்து என்னை அனுப்பினார். இவ்வளவு தான் எனக்குத் தெரியும், நான் அந்த இடும்பன் சேர்வைகாரரை நேரில் பார்த்தது மில்லை. இந்தக் கடிதத்தை அவர்தான் எழுதினாரா என்பதும், அல்லது, இதில் அவர் என்ன எழுதி இருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியாது. நீங்கள் இதைப் பிரித்துப் பார்த்து, ஏதாவது பதில் எழுதிக் கொடுத்தால், அதை எடுத்துக் கொண்டு நான் ஊருக்குத் திரும்பிப் போகிறேன் — என்று நிரம்பவும் விநயமாகக் கூறினான்.

*மாசிலாமணி:-* (மிகுந்த ஆத்திரமும் வியப்பும் காட்டி) என்ன ஆச்சரியம் இது! இந்தக் கடிதத்தில் இருப்பது என்னுடைய மேல் விலாசமாகத் தான் இருக்கிறது. ஆனால், அந்த இடும்பன் சேர்வை காரன் இன்னார் என்பது எனக்கு விளங்கவில்லை. அதுவுமன்றி சிறைச்சாலையில் இருப்பதாகச் சொல்லும் அந்த மனிதர் எனக்கு என்ன விஷயம் எழுதி இருக்கப் போகிறார் என்பதும் புலப்பட வில்லை - இருக்கட்டும். மேல் விலாசம் என்னுடையதாக இருப்பதனால், நான் இதைப் பிரித்துப் பார்ப்பதில் கெடுதல் ஒன்று மில்லை - என்று கூறிய வண்ணம் கடிதத்தின் உறையைக் கிழித்து அதற்குள் இருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்துத் தன் மனதிற் குள்ளாகவே படிக்கத் தொடங்கினான். அதற்கு முன் இடும்பன்

சேர்வைகாரனிடத்தில் இருந்து தபாலில் வந்த கடிதத்தில் கண்டிருந்தபடியே அதுவும் எழுதப்பட்டிருந்தது. அபாண்டமாகத் தன்மேல் ஒரு திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதால், மாசிலா மணி உடனே பதினையாயிரம் ரூபாயோடு புறப்பட்டுப் பட்டணம் வரவேண்டும் என்றும், வரமுடியாவிட்டால், பணத்தை அந்த ஆள்வசம் கொடுத்தனுப்ப வேண்டும் என்றும் எழுதப் பட்டிருந்ததை மாசிலாமணி படித்த போது, முதலில் வந்த கடிதத்திற்கும் அந்த இரண்டாவது கடிதத்திற்கும் முக்கியமான ஒரு பேதம் காணப்பட்டது. முதலில் வந்த கடிதத்தில் இடும்பன் சேர்வைகாரன், கீழே கழன்று விழுந்து கிடந்த மோதிரத்தைத் தான் எடுத்து வாயில் போட்டு விழுங்கிவிட்டதாகவும், தான் ஏதோ புத்திப் பிசகினால் அந்தத் திருட்டைச் செய்து விட்டதாகவும் ஒப்புக் கொண்டிருக்க, இரண்டாவது கடிதத்தில், அந்தத் திருட்டு தன் மேல் அபாண்டமாகச் சுமத்தப்பட்டிருப்பதாக அவன் எழுதி இருந்ததான முக்கியமான வேறுபாட்டை மாசிலாமணி கவனித்தான். அதற்கு உடனே அவனது மனதில் ஒரு சமாதானம் உண்டாகிவிட்டது. தபாலில் வந்த கடிதத்தை இடும்பன் சேர்வை காரன் தனியாக இருந்து எழுதியிருப்பதனால், தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு உண்மையாக எழுதி இருக்க வேண்டும் என்றும், ஆள் மூலமாக அனுப்பப்பட்ட கடிதம் போலீசாரின் வற்புறுத் தலின் மேல் எழுதப்பட்டதாகையால், அவன் அவர்களிடம் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் மறுப்பதைக் கருதி, அது அபாண்டமாகத் தன்மேல் சுமத்தப்பட்டிருப்பதாக எழுதி இருக்கிறான் என்றும் மாசிலாமணி தனக்குத்தானே வியாக்கி யானம் செய்து கொண்டதன்றி, தபாலின் மூலமாக வந்த கடிதத்தின் படியே தான் நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் உடனே தீர்மானித்துக் கொண்டான். அதுவுமன்றி, அந்தக் கடிதத்தைக் கொணர்ந்தவன் சுமார் முப்பது வயதுள்ளவனாயும் செழுமையாக வளர்ந்து பெருத்தவனாயும் இருந்ததன்றி; அவனது தலையின் பின்பக்கத்து உரோமம் போலீஸ்காரர் வெட்டி விட்டுக் கொள்வது போல நிரம்பவும் உயரமாக வெட்டிவிடப்பட்டிருந்த தாலும், அவன் போலீஸ் ஜெவான் என்றும், அவன் சொல்லும் ஜானிஜான் கான் சாயப்புவின் வரலாறு முழுதும் கட்டுக்கதை

என்றும் மாசிலாமணி அந்தக் கடிதத்தைப் படிக்கும் போதே முடிவு கட்டிக்கொண்டான்.

ஆனால், அவன் முதலில் எழுதப்பட்டிருந்த விஷயத்தைப் படித்து விட்டு, அடியில் புதிதாகச் சேர்த்தெழுதப்பட்டிருந்த செய்தியைப் படிக்கவே, அவனது முகம் சடேரென்று மாறிப் போயிற்று. சென்னையில் இருந்து அபகரிக்கப்பட்டு வந்தது, பெண் வேஷந் தரித்திருந்த கந்தசாமி என்பதான அத்யாச்சரியகரமான விஷயத்தை அவன் படிக்கவே, அவன் தனது கண்களை நம்பவில்லை. அந்த பாகத்தை அவன் இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பிப் படித்தான். உடனே அவனது மனதில் இன்னதென்று விவரிக்க இயலாத அநேக எண்ணங்களும், சந்தேகங்களும் ஒரே காலத்தில் குபீரென்று கிளம்பின. கந்தசாமி கடைசி வரையில் பெண் போலவே இருந்து எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறான் என்ற வியப்பும், தனது பகைவனிடத்திலேயே தான் தனது சதியாலோசனையை வெளியிட நேர்ந்ததே என்ற ஏமாற்றமும் திகிலும் எழுந்து அந்த ஒரு நிமிஷ நேரம் அவன் அடியோடு நிலை கலங்கிப் போகும்படி செய்து விட்டன. சோபன அறையில் போலி மணப் பெண் பேசிய சமத்காரத்தைக் கண்டு, தான் பெருத்த வியப்படைந்து, அவள் ஆணாகப் பிறக்க வேண்டியவள் தவறிப் பெண்ணாக வந்திருக்கிறாள் என்று சொன்னது உண்மையாகவே முடிந்து விட்டதே என்ற நினைவும் தோன்றியது. திடீரென்று அவனது மனத்தில் காட்டாற்று வெள்ளம் போலவும், காட்டுத்தீ போலவும் குபீரென்று கிளம்பிய பலவகைப்பட்ட மூர்க்கமான உணர்ச்சிகளால், அவன் தன்னையும் மறந்து, தனக்கு முன்னால் அன்னியன் நிற்கிறான் என்பதையும் மறந்து, "ஆகா! கந்தசாமியா இங்கே வந்தவன்! அடாடா மோசம் போனோமே!" என்று வாய் விட்டுக் கூறி, மேலும் ஏதோ சொல்லப் போனவன் அன்னியன் நிற்பதை உணர்ந்து உடனே தன்னை அடக்கிக் கொண்டான். ஆயினும், அவன் தனது வலது கையை ஆட்டி கட்டை விரலை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டான். அவனது முகம் பெருத்த ஏமாற்றம், விசனம் முதலியவற்றை நன்றாகக் காட்டியது. அவனது உடம்பு முறுக்கிக் கொள்கிறது; கை கால்கள் பதறுகின்றன. அவன் வாயைத் திறந்து பேசமாட்டாமல் அபாரமான பிரமிப்படைந்து

அப்படியே ஸ்தம்பித்து கால் நாழிகை காலம் வரையில் உட்கார்ந் திருந்த பின் எதிரில் மனிதன் நிற்கிறான் என்பதையும், அவனுக் கெதிரில் தான் தனது உணர்ச்சிகளை காட்டிக் கொள்ளாமல் அவனுக்கு மறு மொழி எழுதிக் கொடுத்தனுப்ப வேண்டும் என்பதையும் எண்ணி நிரம்பவும் பாடுபட்டு தன்னை ஒருவாறு சமாளித்துக் கொள்ளத் தொடங்கினான். அவனது அப்போதைய விபரீதமான மனக் குழப்பத்தில், தனக்கு வந்த இரண்டு கடிதங் களின் எழுத்துகளையும் ஒத்திட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கூட அவனது மனத்தில் தோன்றவில்லை. அவனது மூளை கலங்கிச் சுழல ஆரம்பித்தது ஆகையால், தான் அப்போது இருந்தது எந்த இடம் என்பதும், கந்தசாமி பெண் வேஷத்தில் வந்து தப்பிப்போன விஷயமாகத் தான் இனி என்ன செய்ய வேண்டியது என்பதும் அவனுக்குத் தோன்றவில்லை. இடும்பன் சேர்வைகாரன் தபால் மூலமாய் அனுப்பிய கடிதத்தில் எழுதி இருப்பதுபோல தான் மறு மொழிக் கடிதம் எழுதி அந்தப் பட்டணத்தாரிடம் கொடுத்து அனுப்பியபின் மற்ற விஷயங் களைப் பற்றி நிதானமாய் யோசனை செய்து, தான் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று மாசிலாமணி முடிவு செய்து கொண்டவனாய்த் தனக்கெதிரில் நின்ற பட்டணத் தானை நோக்கித் தனது இயற்கைப்படி நிரம்பவும் இறுமாப்பாகவும் துடுக்காகவும் பேசத் தொடங்கி, "ஐயா! இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் என் மனசில் உண்டாகும் கோபம் இவ்வளவு அவ்வளவல்ல. நீர் வேறே ஒருவரால் அனுப்பப்பட்ட கூலிக்காரர் ஆகையால், என்னுடைய கோபத்தை உம்மிடம் காட்ட நான் இஷ்டப்படவில்லை. ஆகவே, நான் இந்நேரம் பாடுபட்டு என் கோபத்தை அடக்கிக் கொண்டேன். இந்தக் கடிதம் எழுதியிருப்பவன் யாரோ திருட்டு நாய். அவனுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அவன் இதற்கு முன் இந்த ஊரானாய் இருக்கலாம். ஏதாவது யாசகத்தின் பொருட்டு அவன் என்னிடம் வந்து என்னைத் தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், அவன் இன்னான் என்பது எனக்குத் தெரியவில்லை. அவன் கோரும் உதவியைச் செய்வ தற்கும் நான் தயாராக இல்லை. அப்படிப்பட்ட சர்க்காருக்கு விரோதமான காரியத்தில் நான் ஒருநாளும் இறங்கக் கூடியவனல்ல.

இப்போது நான் சொன்னது போலவே ஒரு கடிதத்தில் எழுதிக் கொடுக்கிறேன். அதைக் கொண்டு போய் நீர் அவனிடம் சேர்த்து, இனி இம்மாதிரியாக எனக்குக் கடிதம் எழுத வேண்டாம் என்று நான் கண்டித்துச் சொன்னதாகச் சொல்லும். இந்தத் தடவை அவனை மன்னித்து விடுகிறேன். இனிமேல் இப்படிப்பட்ட கடிதம் வந்தால், அதை உடனே போலீசாருக்கு அனுப்பி அவன்மேல் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு, கடிதம் கொண்டு வருகிறவருக்கும் தக்க மரியாதை நடத்தி அனுப்புவேன் என்று மறக்காமல் அவனிடம் சொல்லும்; தெரிகிறதா?" என்றான்.

அதைக் கேட்ட பட்டணத்தான், "எனக்கு விஷயம் தெரியாது. என் எஜமானர் இதை உங்களிடம் கொடுத்து, நீங்கள் கொடுக்கும் பதிலை வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். நீங்கள் எப்படி பதில் எழுதினாலும், அதை நான் வாங்கிக் கொண்டு போகத் தயார், பதிலே இல்லை என்றாலும், நான் உடனே புறப்பட்டுப் போக சித்தனாய் இருக்கிறேன். நீங்கள் சொன்னபடி நான் கூலிக்காரன். எனக்கு இதில் யாதொரு சம்பந்தமுமில்லை" என்றான்.

உடனே மாசிலாமணி தன் வாயால் சொன்னது போலவே ஒரு காகிதத்தில் எழுதி அதை ஓர் உறைக்குள் போட்டு ஒட்டி அந்தப் பட்டணத்தானிடம் கொடுக்க, அவன் அதைப் பெற்று, தான் போவதாக அவனிடம் கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டான்.

உடனே மாசிலாமணி பெருத்த துப்பட்டி ஒன்றை எடுத்து தலை முதல் கால் வரையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு கட்டிலில் சாய்ந்து விட்டான். அவனது மன நிலைமை விவரிக்க இயலாத பரம சங்கட நிலைமையாக இருந்தது. தேகமும் கட்டிலடங்காமல் பதறியது. அவனது மனம் விபரீதமான எண்ணங்களை எல்லாம் கொண்டு தவித்தது. "நான் எந்தக் காரியத்தில் இறங்கினாலும் அது ஏமாற்றமாகவே முடிவதோடு, பெருத்த அநர்த்தத்தையும், லட்சக் கணக்கில் பொருள் நஷ்டத்தையும் விளைவிக்கிறதே! நான் என்னுடைய ஆட்களைப் புரோகிதராகவும் விருந்தாளிகளாகவும் வேஷம் போட்டு, பொய்க் கலியாணம் நடத்தி பெண்ணை ஏமாற்ற முயற்சித்தால், பெண் அதற்கு முன்னாலேயே என்னை ஏமாற்றும்

பொய் வேஷமும், வஞ்சக வடிவமுமாக அல்லவா முடிந்தது. அதுவுமன்றி, அந்தக் கந்தசாமியினிடத்திலும், அவனைச் சேர்ந்தவர்களிடத்திலும் நான் கொண்டுள்ள ஜென்ம விரோதத்தையும், அவர்கள் விஷயத்தில் பழி தீர்த்துக் கொள்வதற்கு நான் செய்துள்ள சதியாலோசனை முழுதையும் அவனிடம் நான் என் வாயினாலேயே வெளியிட நேர்ந்ததே! ஆகா! என்ன விபரீதமான துரதிர்ஷ்டம் இது! என் பகைவனான அந்தக் கந்தசாமியை நான் உண்மையிலேயே பெண் என்று நினைத்து அவனை சோபன அறையில் வைத்துக் கொண்டு, அவனிடம் காமவிகாரமான வார்த்தைகளை எல்லாம் சொல்லி நிரம்பவும் கேவலமாக நடந்து கொண்டு விட்டேனே! அதை நினைக்க நினைக்க, நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை மாய்த்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறதே! அவன் கந்தசாமி என்பது தெரியாமல் போய் விட்டதே! தெரிந்திருந்தால், இன்னார் தான் செய்தார்கள் என்ற குறிப்பே இல்லாதபடி, அவனுடைய கண்கள் இரண்டையும் தோண்டி எடுத்துவிட்டு, அவனைக் கொண்டு போய் மன்னார் குடியில் உள்ள அவனுடைய வீட்டுத் திண்ணையில் படுக்க வைத்துவிட்டு வரச் செய்திருப்பேனே! கொஞ்சத்தில் ஏமாறிப் போய்விட்டேனே! மனோன்மணியை அபகரித்து வர எத்தனித்ததிலிருந்து இப்படிப்பட்ட விநோதமான விபரீதங்கள் நேர்ந்து விட்டன. வேலாயுதம் பிள்ளை முதலியோரை மூளிப்படுத்த ஆள்களை அனுப்பினால், அவர்கள் எனக்கு உயிருக்குயிரான மனிதர்களை மூளிப்படுத்தி விட்டதோடு, தாங்களும் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கெட்டதுமன்றி என்னையும் சந்தியில் இழுத்து விட்டு விடுவார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால், அந்த ஆள்களை நான் பார்த்ததில்லை. என்னையும் அவர்கள் பார்த்ததில்லை. தங்களை இடும்பன் சேர்வைகாரன் அனுப்பியதாக அவர்கள் ஒப்புக்கொள்ள நேருமேயன்றி நான் அனுப்பியதாகச் சொல்ல மாட்டார்கள்; இடும்பன் சேர்வைகாரன் என் விஷயத்தில் நிரம்பவும் மனவுறுதியுடையவன்; தன்னை அவர்கள் அணுவணுவாய் வெட்டிச் சித்திரவதை செய்தால் கூட, அவன் என்னைக் காட்டியும் கொடுக்கமாட்டான். எந்த ரகசியத்தையும் வெளியிடவும் மாட்டான். இடும்பன்

சேர்வைகாரனுக்கும், அவனுடைய ஆள்களுக்கும் நேர்ந்த கெடுதலைக் காட்டிலும், ரமாமணியம்மாள் முதலியோருக்கு நேர்ந்த கெடுதல் மகா விபரீதமானதாகவும் ஆறாத்துயரத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஐயோ! அவளுடைய அற்புதமான அழகென்ன! முகவசீகரம் என்ன! அவளுடைய மூக்கு அடியோடு போய்விட்ட தென்றால், மனசால் நினைக்கும் போதே, அது பயங்கரமாகத் தோன்றுகிறதே. பலவகையில் இன்பக் களஞ்சியமாக இருந்த அவளுடைய முகத்தை இனி கண்ணால் பார்க்காமல் இருப்பதே பரம இன்பம் என்று எண்ணும் படி ஆய்விட்டதே. என் பொருட்டு அவள் இந்தக் காரியத்தில் தலையிட்டு, சூர்ப்பனகை அடைந்தது போல, என்றைக்கும் தீராத மானபங்கம் அடைந்து விட்டாளே! அவளை நான் அவளுடைய ஆயிசுகால பரியந்தம் கைவிடாமல் காப்பாற்றக் கடமைப் பட்டவ னாகி விட்டேனே! நான் வேறே எந்தப் பெண்ணையும் கட்டிக் கொள்ளாமல் இருந்துவிட வேண்டும் என்றும், அவளையே நான் என்னுடைய சொந்த மனைவி போல வைத்து நடத்த வேண்டும் என்றும் ஆரம்பத்தில் இருந்தே அவள் சொல்லி என்னை உபத்திரவித்துக் கொண்டு வந்தவளாயிற்றே இப்போது அவள் அதே கருத்தை முன்னிலும் அதிக பாத்தியதையோடு வற்புறுத்தி வெளியிட்டு என்னை வதைக்க ஆரம்பிப்பாளே! அதற்கு நான் இணங்கவும், கடமைப் பட்டவனாகி விட்டேனே. இணங்காவிட் டாலும், அவள் என்னுடைய ரகசியங்களை எல்லாம் வெளியிட்டு என்னை சந்தியில் இழுத்து விட்டுவிடுவாளே, அதற்காக பயந்து மூக்கில்லாத பெண்ணோடல்லவா நான் கடைசி வரையில் இருந்து வாழ வேண்டும். ஆகா! என் அதிர்ஷ்டம் இப்படியா முடிந்தது! அவள் மூக்கறைச்சி; நான் மூடவன் இரண்டு பேருக்கும் பொருத்தம் சரியாகவே இருக்கிறது! பெண் சகலமான லட்சணங்களும் வாய்ந்து அப்ஸர ஸ்திரீபோலவும் கந்தருவ ஸ்திரீ போலவும் இருக்க வேண்டும் என்றும், இந்த உலகத்தில் மற்றவர் அனுபவிப்பதை விட லட்சம் மடங்கு விசேஷமான இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றும் நான் நினைத்து மனக்கோட்டை கட்டிய தெல்லாம் இப்படியா முடிய வேண்டும். எனக்கு ஈசுவரன் ஏராளமான சம்பத்தையும், செல்வாக்கையும், மாடமாளிகை

களையும் அளித்திருந்தும், ஸ்திரீ விஷயத்தில் மகா துர்ப்பாக்கிய வானாகப் படைத்து விட்டானே! நான் முதலில் வடிவாம்பாளை நாடினேன். அவளோ பெருத்த வாயாடி; அவளால் என் கால் நொண்டியானதோடு, நானும் என் அண்ணனும் சிறைச்சாலைக் குப் போனோம். மனோன்மணியம்மாளை அடைய எண்ணி னேன். அதற்குப் பதில் வஞ்சக வேஷம் ஒன்று வந்து என் ரகசியத்தை அபகரித்துக் கொண்டு போயிற்று. ரமாமணியம்மாளை வைத்து இன்பமுற நினைத்தால், அவர் மூக்கறுபட்ட மூளியாய் விட்டாளே! ஆகா! கஷ்டம் கஷ்டம்! இது சகிக்கவே முடியாத நரக வேதனை! சே! என் ஜென்மமும் ஒரு ஜென்மமா! ரமாமணியம்மா ளுடைய நிலைமையை நினைக்கும் போது எனக்கே இப்படிப் பட்ட வேதனை உண்டாகிறதே. மூக்கை இழந்த அவளுக்கு இது எப்படி இருக்குமோ தெரியவில்லையே! அந்த ஆத்திரத்தில் யாராய் இருந்தாலும் பார்ப்பார்களா? தன்னை மானபங்கப் படுத்திய ஆள்களின் மேல் அவளுக்கு உண்டான ஆத்திரத்தில் அவள் அவர்களைக் காட்டிக் கொடுத்து விடுவாளோ என்னவோ தெரியவில்லையே! அந்த ஆத்திரத்தில் முன் பின் யோசியாமல் அவள் எதையாவது உளறி வைத்து, அதனால் என் தலைக்கும் கல் வரும்படியான காரியத்தைச் செய்து விடுவாளோ என்னவோ தெரியவில்லையே! இந்த நிலைமையில் நான் உடனே புறப்பட்டுப் போய் அவளைப் பார்த்துத் தேறுதல் சொல்லாமல் இருந்து விட்டால், அது அவளுடைய மனசுக்கு நிரம்பவும் விசனமாக இருக்குமே. நான் போய்ப் பார்த்தாலோ, என் மேலேயே கண்ணோட்டமாக இருக்கும். இந்த ஊர்ப் போலீசார் உடனே மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு விடுவார்கள். நான் பட்டணம் போவதும் அவசியமாகத் தோன்றுகிறது. போனால் கெடுதல் நேரும் போலவும் தோன்று கிறது. நான் ரமாமணியம்மாளைக் கண்டு அவளை சாந்தப்படுத்தி, அவளை நான் கடைசி வரையில் காப்பாற்றுவதாகச் சொல்லிவிட்டு வந்தாலன்றி, அவளுக்கு என் மேல் ஆத்திரமும் அருவருப்பும் உண்டாவது நிச்சயம். தன் கோபத்தில் அவள் என்னையும் காட்டிக் கொடுத்தாலும் கொடுத்து விடக் கூடியவளே. அதுவுமன்றி, இடும்பன் சேர்வைகாரனிடம் என்னுடைய உயிரே இருக்கிறது. ஆகையால் இந்தச் சமயத்தில்

அவனையும் நான் கைவிடாமல் பதினாயிரமல்ல, லட்சமல்ல, செலவு செய்து அவனைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால், அவனாலும் பெருத்த விபரீதம் விளைந்து விடும். நான் போகாமல், வேறே யாரையாவது அனுப்பலாம் என்றால், இப்படிப்பட்ட மகா முக்கியமான காரியங்களை எல்லாம் சாமர்த்தியமாக நிறைவேற்றத் தகுந்த திறமைசாலியான ஆள் எவனுமில்லை. இந்த தர்மசங்கடத் தில் நான் என்ன செய்கிறதென்பது தெரியவில்லையே! ஆகா! என்ன செய்வேன்! அன்றைய தினம் சமாசாரப் பத்திரிகையில் வெளியான செய்தியில் பக்கிரியா பிள்ளை என்ற தவில்காரன் ஒருவனும் அவர்களோடு கூடயிருந்ததாகவும், இடும்பன் சேர்வை காரனுடைய ஆட்கள் அவனுடைய முகத்தில் அக்கினித் திரா வகத்தை ஊற்றி விட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே. அவன் யார் என்பதும், அவன் ரமாமணியம்மாள் முதலியோருடன் இருக்க வேண்டிய காரணம் என்ன என்பதும் தெரியவில்லையே!" என்று மாசிலாமணி பலவாறு எண்ணமிட்டுத் தத்தளித்து வாடித் துவண்டு மூடி முக்காடிட்டு விசனமே வடிவாகப் படுத்திருந்தான். சென்னையிலிருந்து கடிதம் கொணர்ந்த மனிதன் வெளியில் போய்க் கால் நாழிகை நேரத்தில் மாசிலாமணியின் வேலைக்காரன் மறுபடி உள்ளே வந்து, "எஜமானே; எஜமானே!" என்று மெது வாய்க் கூப்பிட, மாசிலாமணி திடுக்கிட்டுத் தனது போர்வையை விலக்கிக் கொண்டு, எழுந்து உட்கார்ந்து, "என்ன விசேஷம்?" என்று ஆவலோடு வினவினான். வேலைக்காரன், "சாமீ! வாசலில் யாரோ ஒரு பெரியம்மாள் வந்திருக்கிறார்கள்; சென்னப்பட்டணம் ஆஸ்பத்திரியில் உள்ள நம்முடைய ரமாமணியம்மாளிடம் இருந்து கடிதம் கொண்டு வந்திருக்கிறார்களாம்" என்று கூறினான். அதைக் கேட்ட மாசிலாமணி திடுக்கிட்டு, "ஆ! அப்படியா! அந்த அம்மாள் பார்வைக்கு எப்படி இருக்கிறார்கள்?" என்றான். வேலைக்காரன், "வயசு ஐம்பது, ஐம்பத்தைந்துக்கு மேல் இராது. பார்ப்பதற்குத் தக்க பெரிய இடத்து மனிதர் போல இருக்கிறது. கையில் மடிசஞ்சி மூட்டை ஒன்று இருக்கிறது. இடுப்பில் நார்மடிப் புடவை கட்டிக் கொண்டு, விபூதி, உருத்திராக்ஷம் முதலிய வைதிகக் கோலங் களோடு இருக்கிறார்கள்" என்றான்.

அதைக் கேட்ட மாசிலாமணி சிறிது நேரம் சிந்தனை செய்து பார்த்தான். அந்த அம்மாள் யாராக இருக்கலாம் என்று அவன் நினைத்து நினைத்துப் பார்த்தான். அவனுக்கு எதுவும் புலப்பட வில்லை. அவளை அழைத்து வரும்படி உடனே வேலைக் காரனிடம் அவன் கூற, வேலைக்காரன் முன் செய்தது போல வெளியில் போய், சிறிது நேரத்தில் நமது நீர்மேல்குமிழி நீலலோசனியம்மாளை அழைத்து வந்து மாசிலாமணி இருந்த விடுதியில் விட்டுவிட்டு உடனே வெளியில் போய்விட்டான்.

இடும்பன் சேர்வைகாரனது விஷயத்தில் போலீசார் தந்திரம் செய்து கடிதம் கொணர்ந்தது போல, ரமாமணியம்மாளின் விஷயத்திலும் அவர்கள் ஏதாவது கபட நாடகம் நடிக்கிறார்களோ என்ற எண்ணம் மின்னல் தோன்றி மறைவது போல மாசிலாமணி யின் மனதில் உதித்து, அந்த இரண்டொரு நிமிஷ நேரத்தில் அவனை வேதனைக் கடலில் ஆழ்த்தி விட்டது. ஆயினும், அவன் நமது நீலலோசனியம்மாளது சுத்த சாத்விகமான வடிவத்தைக் காண, அவனது சந்தேகத்தில் பெரும்பாகமும் உடனே நிவர்த்தி யாகி விட்டது. உத்தம ஜாதி ஸ்திரீகள் எவ்வளவு தங்களுக்கு அதிக வயது ஆகியிருந்தாலும், சாண் பிள்ளையாக இருக்கும் ஆண் பிள்ளைகளைக் கண்டால் கூட, எப்படி இயற்கையிலேயே நாணம், அச்சம், பணிவு, அடக்கம் முதலிய லட்சணங்களில் வழுவாமல் நடந்து கொள்ளுவார்களோ, அது போல நமது நீலலோசனியம் மாள் மாசிலாமணியைக் கண்டு மிகுந்த கிலேசம் அடைந்தவளாய் நாணிக்கோணிக் கதவின் மூலையில் மறைந்து நின்றதைக் காணவே, அவனது மனம் தனது சஞ்சலத்தை விலக்கி ஒருவித திடத்தைக் கொண்டது. அவன் அந்த அம்மாளிடம் நிரம்பவும் மரியாதையாகப் பேசத் தொடங்கி, "அம்மா! நீங்கள் பட்டணத்தில் இருந்தா வருகிறீர்கள்? அதோ இருக்கும் விசிப்பலகையின் மேல் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்றான்.

உடனே நீலலோசனியம்மாள் தனது மடியிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து மரியாதையாகவும் பணிவாகவும் மாசிலாமணியினிடம் கொடுத்த வண்ணம், "ஆம்; நான் பட்டணத்திலிருந்துதான் வருகிறேன். பட்டணத்தில் நடந்த துக்ககரமான விஷயங்களை

எல்லாம் நீங்கள் சமாசாரப் பத்திரிகையின் மூலமாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். உங்களுடைய முகம் நிரம்பவும் வாட்டமடைந்து விசனத்தைக் காட்டுவதைப் பார்த்தால், பட்டணத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பற்றியே நீங்கள் சிந்தித்து விசன முற்றிருந்த சமயத்தில் நான் வந்திருப்பதாகத் தோன்று கிறது. சென்னை ஆஸ்பத்திரியில் உள்ள ரமாமணியம்மாள் உங்க ளிடம் இந்தக் கடிதத்தைக் கொடுக்கும்படி என்னை அனுப்பி னாள்" என்றாள்.

அந்த அம்மாள் கூறிய சொற்களைக் கேட்டுக் கொண்ட மாசிலா மணி அந்தக் கடிதத்தைப் பிரித்தான். அதன் மேல் விலாசத்தின் எழுத்தையும், உள் பக்கத்தில் இருந்த எழுத்தையும், அவனது கண்கள் உடனே ஆராய்ச்சி செய்தன. உண்மையிலேயே அந்தக் கடிதம் ரமாமணியம்மாளால் எழுதப்பட்டதென்ற நிச்சயம் அவனது மனத்தில் உண்டாயிற்று. அவன் உடனே அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததைத் தனக்குள்ளாகவே படித்து முடித்தான். ரமாமணி அம்மாள் முதலியோர் கும்பகோணத்திலிருந்து புறப் பட்டது முதல் சென்னையில் தாங்கள் அங்கஹீனப்பட்டு ஆஸ்பத்திரியில் படுத்திருந்தது வரையிலுள்ள வரலாறு முழுவதை யும் ரமாமணியம்மாள் சுருக்கமாக அந்தக் கடிதத்தில் எழுதி யிருந்தாள். நீலலோசனியம்மாள் தாய் என்றும், பக்கிரியா பிள்ளை அந்த அம்மாளது மகன் என்றும், அவர்கள் சென்னையில் இடும்பன் சேர்வைகாரனுக்குக் கூறியது நமது வாசகர்களுக்கு நினைவிருக் கலாம். அதை மாசிலாமணிக்கு எழுதித் தெரிவித்தால், அதைப் பற்றி அவன் பிரஸ்தாபிக்க நேரும்போது, அது பொய் என்று நீல லோசனியம்மாள் மறுப்பதோடு தம்மைப் பற்றியும் கெட்ட அபிப்பிராயம் கொள்வாள் என்ற நினைவினால், அந்த வரலாற்றை எழுதாமல், பக்கிரியா பிள்ளை என்பவன் தனது தந்தைக்குப் பரிச்சயம் உள்ளவனென்றும், அவனும் ஏதோ சொந்தக் காரியத் தைக் கருதி பட்டணம் வரும் போது தற்செயலாய்த் தனது தந்தையைக் கண்டு தங்களோடு கூடவே வந்ததாகவும், நீல லோசனியம்மாள் சிதம்பரம் ஸ்டேஷனில் வந்து தங்கள் வண்டி யில் ஏறியதாகவும், அந்த அம்மாளின் பழக்கம் முற்றி சிநேகமாக

மாறிப்போனதால் அவளும் சத்திரத்தில் தங்களோடு கூட இருந்ததாகவும் எழுதி இருந்தாள். ஆனால், நீலலோசனியம்மா ளுக்கும் தங்களுக்கும் ஏற்பட்ட முக்கியமான சம்பந்தத்தை அவள் அந்தக் கடிதத்தில் எழுதாமல் விட்டுவிட்டாள். அதாவது, நீல லோசனியம்மாள் கும்பகோணத்தில் தங்கள் சவரக்ஷணையில் இருக்கப் போவதையும் அவளுடைய சொத்தை எல்லாம் அவள் தங்களுக்கே எழுதி வைத்து விட்டதையும் அவள் வெளியிடாமல் தான் சாட்சி சொல்லாமல் ஒளிந்து கொண்டிருந்து இடும்பன் சேர்வைகாரனைத் தப்ப வைப்பதற்காகவே அந்த அம்மாள் கும்பகோணத்திற்கு வந்திருப்பதாக மாத்திரம் கடிதத்தில் அவள் குறித்திருந்தாள். அதில் மற்ற விவரங்களை எல்லாம் எழுதி, முடிவில் ரமாமணியம்மாள், என் கண்ணாளரும், உயிருக்குயிரான காதலரும், என் இருதய கமலத்தில் நான் சதாகாலமும் வைத்துப் பூஜை செய்து வரும் ஒப்புயர்வற்ற உயிர்த் தெய்வமுமான உங்களைப் பார்க்க வேண்டும் என்று என் கண்கள் பறக்கின்றன. கூண்டில் அடைபட்ட கிளி போல என் மனம் துடிதுடித்துப் பதறுகிறது. கோமளாங்கரான உங்களுடைய இன்ப வடிவம் நான் பார்க்கும் இடத்தில் எல்லாம் நிறைந்து என் அகக்கண்ணிற்கு முன் சான்னித்தியமாக நின்று தரிசனம் தந்தபடி இருந்து உங்களைப் பார்க்க வேண்டும் என்று சதா சாவதா காலமும் என்னை இடித் திடித்துத் தூண்டிக் கொண்டே இருக்கிறது. ஆனாலும் நீங்கள் என்னைப் பார்த்தால், உங்களுக்கு என்னிடமுள்ள ஆசை எல்லாம் அருவருப்பாக மாறிவிடும் என்ற எண்ணம் உண்டாவதால், இந்த நிலைமையில் நான் உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை அடக்கிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆஸ்பத்திரிக்கு கல்கத்தாவில் இருந்து நிரம்பவும் பிரக்யாதி பெற்ற ஒரு பெரிய டாக்டர் வந்திருக்கிறார். அவருடைய பெயர் மிஸ்டர் வெல்டன் (Mr. Welldone) என்பதாம். இந்த ஆஸ்பத்திரியின் இரண்டாவது டாக்டரான ஒரு முதலியார் அந்தத் துரையை ஒரு நாள், நாங்கள் இருந்த இடத்திற்கு அழைத்து வந்தார். நான் அவர்களைப் பார்த்து வெட்கி என் முகத்தை மறைத்துக் கொண்டேன். அவர் என்னை நோக்கி, நிரம்பவும் வாஞ்சையோடு பேசத் தொடங்கி, "அம்மா! ஏன் வெட்கப்படுகிறாய்? இதெல்லாம் கர்மரோகம்; அவரவர்கள்

செய்த கருமத்தின் பலனை அவர்கள் வெட்கப்படாமல் அனுபவித்தே தீரவேண்டும். இருந்தாலும் நீ கவலைப்படாதே. இந்த விஷயங்களுக் கெல்லாம் நான் புதிய மாதிரியான ஒரு பரிகாரம் கண்டுபிடித்திருக்கிறேன். உனக்கு ரப்பரினால் மூக்கும், உன் தாய் தகப்பன்மார்களுக்கு ரப்பர் காதுகளும் இன்னம் பதினைந்து தினங்களில் நான் தயார் செய்து கொடுக்கிறேன். வேறே எந்த டாக்டருக்கும் அதைச் செய்யும் வழி தெரியாது. வில் வைத்த அந்த மூக்கு காதுகள் நிஜமானவை போலவே இருக்கும். அவைகளை முகத்தில் ஒட்ட வைத்திருக்கும் சுவடே தெரியாது. நீ பேசும் போது நொண நொணவென்ற விகாரமான ஓசையும் உண்டாகாது. முகத்தின் அழகு கொஞ்சமும் கெடாது. வெகு சீக்கிரம் நான் மூக்கு, காதுகளைத் தயார் செய்து போடுகிறேன். அதற்குள் இந்த ரணங்கள் ஆறட்டும்" என்று சொல்லி வாக்களித்து விட்டுப் போயிருக்கிறார். ஆகையால், என்னை நீங்கள் மறுபடி பார்க்கும் போது, நான் உங்களுடைய பழைய ரமாமணியாகவே இருப்பேன். அதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். இன்னம் 20-தினங்களில் நாங்கள் க்ஷேமமாய் அங்கே வந்து சேருவோம். அதற்குள் சேர்வைகாரரும் விடுதலை அடைந்து விடுவார். இந்தக் கடிதம் கொண்டு வரும் அம்மாள் தக்க பெரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள்; எங்களிடம் அபாரமான வாத்சல்யம் வைத்தவர்கள். இவர்கள் நீதிநெறி தவறாமல் நடக்கிறவர்கள் ஆனாலும், நமக்காக இடும்பன் சேர்வைகாரரைக் காப்பாற்ற எண்ணி அங்கே ஒளிந்து கொள்ள வந்திருக்கிறார்கள். ஆகையால், நீங்கள் இந்த அம்மாளை நிரம்பவும் மரியாதையோடும், கண்ணிய மாகவும் நடத்தி, இவர்களுக்குச் சகலமான செளகரியங்களையும் செய்து கொடுத்து, உங்கள் வீட்டில் யாரும் காணாதபடி இவர்கள் மறைந்திருக்கும்படி செய்யக் கோரி, தங்களுக்குத் திக்கு நோக்கி அநந்தகோடி தண்டனிடும்,

தங்களை என்றும் மறவாத அடிமை

**ரமாமணி.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்து முடிக்கவே, மாசிலாமணிக்கு மூச்சு ஒழுங்காக வரத் தொடங்கியது. பெருத்த ஆவலி

னாலும், சகிக்க இயலாத வேதனையினாலும் தவித்துத் தடுமாற்றங் கொண்டிருந்த அவனது மனம் உடனே சாந்த மடைந்து, உற்சாகம் கொள்ளத் தொடங்கியது. முகம் சந்தோஷத்தினால் சிறிது மலரத் தொடங்கியது. அந்தக் கடிதம் போலீஸ்காரரது வற்புறுத்தலினால் எழுதப்பட்டதல்ல என்றும், உண்மையிலேயே ரமாமணியம்மா ளால் எழுதப்பட்ட கடிதம் என்றும் மாசிலாமணி உடனே தீர் மானித்துக் கொண்டு மேலும் எண்ணமிடத் தொடங்கி, "நல்ல சமயத்தில் இந்தக் கடிதம் வந்தது. நான் பட்டணம் போகிறதா, போகிறதில்லையா என்பதை நிச்சயிக்கமாட்டாமல் தர்ம சங்கட நிலைமையில் இருந்த தருணத்தில் இது அமிர்த சஞ்சீவி போல வந்து சேர்ந்தது. ரமாமணி சாதாரணமான மனுஷியா! அவள் மகா புத்திசாலி; அதுவுமன்றி, அவள் என்னிடம் ஒரே உறுதியான பற்றும் பிரியமும் வைத்திருப்பவள் என்பது நிச்சயம். இடும்பன் சேர்வைகாரனுடைய விஷயத்தில் அவள் செய்திருக்கும் தந்திரமே நல்ல தந்திரம். ஒரே ஒரு சாட்சியான இந்த அம்மாள் ஒளிந்து கொண்டால், போலீசார் அவனை என்ன செய்ய முடியும்! சில தினங்கள் வரையில் பார்த்துவிட்டு பார்த்துவிட்டுப் பேசாமல் அவனை வெளியில் துரத்தி விடுவார்கள். வேறே யாராவது ரமா மணியைப் போல மூக்கறுபட்டிருந்தால், அப்படி அறுத்தவர் தங்களுடைய சொந்தத் தாய் தகப்பன்மாராக இருந்தால் கூட கொஞ்சமும் தாட்சணியம் பார்க்காமல் போலீசாரிடம் காட்டிக் கொடுத்திருப்பார்கள். ரமாமணி என் மேல் வைத்துள்ள அந்தரங்க மான வாஞ்சையினால் அதைப் பொறுத்துக் கொண்டு, அந்த முரடர்கள் தப்பும்படியான விதமாய் வாக்குமூலம் கொடுத்திருக்கி றாளாம். இந்த உலகத்தில் வேறே யார் இவ்வித அபார புத்தி யோடும் பெருந்தன்மையோடும் நடந்து கொள்ளப்போகிறார்கள். அந்த ஆள்களையும் போலீசார் ஒன்றும் செய்யமுடியாது. அவர் களும் சில தினங்களில் தப்பி வந்து விடுவார்கள். நல்ல வேளை யாக கல்கத்தாவிலிருந்து மிஸ்டர் வெல்டன் என்ற டாக்டர் இந்தச் சமயத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். அவர் வராவிட்டால், ரப்பர் மூக்கு, காது முதலியவை வைக்கலாம் என்று வேறே யாரும் சொல்லி இருக்க மாட்டார்கள். அவளுடைய மூக்காயிருந்தால் என்ன, இயற்கையில் உண்டான மூக்கானால் என்ன, அவளுடைய

முகத்தோற்றம் விகாரப்படாமல் இருப்பதே எனக்குப் போது மானது. அவளுடைய மூக்கு எதனால் ஆனதாக இருந்தாலும், அதனால் எனக்கு லாபமுமில்லை; நஷ்டமுமில்லை. இப்போது என்னுடைய ஒரு காலின் பாதி பாகம் இல்லை. அதனால் எனக்கு இப்போது எவ்வித உபத்திரவமும் உண்டாகவில்லை. நான் முடவன் என்று மற்றவர் நினைப்பார்களேயன்றி, நான் எவ்வித வித்தியாசத்தையும் உணரவே இல்லை. இது போலவே ரமாமணி யம்மாளுக்கும் புண் ஆறிப்போன பிறகு ஒட்டு மூக்கு வைத்து விட்டால், அதுவும் இயற்கையாகி விடுகிறது. அவள் வரட்டும்; நான் ஸ்திரீகள் விஷயத்தில் மாத்திரம் மகா தரித்திர அதிர்ஷ்டம் உடையவனல்லவா? என்மேல் கொஞ்சமும் பிரியம் வைக்காத வாயாடிகளையும் மோசக்காரிகளையும் கண்டு, அவர்கள் மேல் ஆசை வைத்து பெருத்த பொருள் நஷ்டத்தையும், மன வேதனை யையும், வேறு துன்பங்களையும் விலைக்கு வாங்கிக் கொள்வதை விட, என்னிடத்தில் மனப்பூர்த்தியான வாஞ்சையும் பிரேமையுங் கொண்டு, அதனால் தன் புருஷனைக் கூட விஷம் வைத்துக் கொன்றவளும், எனக்காகத் தன் மூக்கை இழந்து விகாரப்பட்ட வளும், இன்னம் எனக்காகத் தன் உயிரையும் கொடுக்கக் கூடியவளுமான ரமாமணியை நான் வெறுத்து விலக்கினால், அவளைவிட சிலாக்கியமான வேறு ஸ்திரீ எனக்கு வந்து வாய்ப்பாள் என்று நான் நினைப்பது வீண் மனப் பிராந்தியாகத்தான் முடியும். எனக்கு வந்து வாய்க்கும் பெண்ணினால் எனக்கு ஏதாவது அதிருப்தி இருக்க வேண்டும் அல்லவா? அதற்காக இவளுக்கு மூக்கில் ஊனம் ஏற்பட்டது போலிருக்கிறது. அந்த ஓர் ஊனத்தைத் தவிர, மற்ற எந்த அம்சத்திலும், நான் இவளிடம் குற்றம் கண்டு பிடிக்க முடியாது. அந்த ஊனமும் இவளிடம் இயற்கையிலேயே இருந்ததல்ல. அதுவும் என்னால் அவளுக்கு உண்டானதே அன்றி வேறல்ல. ஆகையால், நான் இனி திருப்தி அடைந்து இவள் ஒருத்தியோடு என் மனசை அடக்கிக் கொள்ளுகிறேன்" என்று தனக்குத்தானே பலவாறு சிந்தனை செய்த பிறகு, தனக்கெதிரில் கதவின் மூலையில் வணக்கமாக நின்று கொண்டிருந்த நமது நீல லோசனியம்மாளை நோக்கி, "அம்மா! கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். உங்களுடைய வரலாறும்

இதில் எழுதப்பட்டிருக்கிறது. அதையும் தெரிந்து கொண்டேன். நீங்கள் தக்க பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உங்கள் ஜாடையிலேயே நன்றாகத் தெரிகிறது. அதுவுமன்றி, ரமாமணி யம்மாளும் எழுதி இருக்கிறாள். உங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி உங்களை நான் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடத்த வேண்டும். இந்த நிமிஷம் முதல் நீங்கள் இந்த மாளிகையை உங்களுடைய சொந்த மாளிகையாக மதிக்கலாம். இங்கேயுள்ள வேலைக்காரர்கள் எல்லோரும் என்னிடம் எப்படி நடந்து கொள்ளு வார்களோ அது போலவே உங்களிடமும் நடந்து கொள்ளும்படி உத்தரவு செய்து விடுகிறேன். நீங்கள் நேற்று மாலையில் பட்டணத்திலிருந்து புறப்பட்டிருப்பீர்கள். இப்போது நீங்கள் முதலில் உங்களுடைய ஸ்நானம் சாப்பாடு முதலிய காரியங்களை முடித்துக் கொள்ளுங்கள். பிறகு நாம் சாவகாசமாய்ப் பேசிக் கொள்வோம்" என்றான்.

நீலலோசனியம்மாளின் முகம் நன்றியறிதலினால் மலர்ந்தது ஆனாலும், ஸ்திரீ ஜாதிக்குரிய இயற்கையான நாணத்தினால் அதை அவள் ஒருவாறு அடக்கிக் கொண்டவளாய், "நான் ரயிலிலிருந்து இறங்கிய பின் காலையில் காவிரியாற்றுக்குப் போய் ஸ்நானத்தை முடித்துக் கொண்டுதான் நான் இங்கே வந்தேன். நான் ஒரு நாளைக்கு ஒரே வேளைதான் போஜனம் பண்ணுகிறது. இனி நாளைய மத்தியானம் வரையில் எனக்கு அன்ன விசாரம் இல்லை. நேற்று ரயிலில் ஜன நெருக்கம் அதிகமாக இருந்ததாகையால், இராத்திரி முழுதும் நான் கண்ணை மூடவே இல்லை. நான் தலை மறைவாக இருப்பதற்கு ஏதாவது ஓர் இடம் காட்டினால், நான் அங்கே இருந்து சிரமபரிகாரம் செய்து கொள்ளுகிறேன். இந்த வீட்டிலேயே இடம் கொடுத்தாலும் சரி, அல்லது வேறே எங்கே யாவது கொடுத்தாலும் சரி" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணி சிறிது நேரம் சிந்தனை செய்து, "சரி; நீங்கள் இருப்பதற்குச் சௌகரியமான இடம் வேறே எங்கேயும் இல்லை. ஆனால், நீங்கள் இந்த வீட்டில் இருப்பதில் சில இடைஞ்சலும் இருக்கிறது. இந்த ஊரில் என் தமயனார் சர்க்கார் வக்கீலாக இருந்தவர். இந்த ஊரில் உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்

எல்லோரும், முக்கியமாய் இந்த ஊர்ப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஜெவான்களும் எங்களுக்கு நிரம்பவும் சிநேகமானவர்கள். அவர்கள் யாராவது அடிக்கடி இங்கே வந்து என்னோடு பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவார்கள். எனக்குக் கலியாணம் ஆகவில்லை ஆகையால், இந்த வீட்டில் பெண் பிள்ளைகள் யாருமில்லை. நான் மாத்திரம் வேலைக்காரர் வேலைக்காரிகளோடு தனியாக இருந்து வருகிறேன். ஆகையால், போலீசார் முதலிய உத்தியோகஸ்தர்கள் எப்போதும் இங்கே வந்து என்னோடு குதூகலமாக இருப்பார்கள். இந்த வீட்டின் எந்தப் பாகத்திற்கும் அவர்கள் தாராளமாக வந்து பழகுவார்கள். நீங்கள் இந்த வீட்டின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் அவர்களுடைய கண்ணில்பட நேரும். அதற்காகத்தான் நான் யோசனை செய்கிறேன். நம்முடைய ரமாமணியம்மாளுடைய வீட்டில் நீங்கள் இருந்தால், உங்களை யாரும் பார்க்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், அவள் தன்னுடைய வீட்டைப் பூட்டித் திறவுகோலைத் தன்னுடன் கூடவே கொண்டு போயிருக்கிறாள். இருந்தாலும் பரவாயில்லை; அவளுடைய வீட்டின் பூட்டிற்கு மறுசாவி போட்டுத் திறந்து உங்களை அங்கேயே வைக்கலாம் என்று நினைக்கிறேன், பூட்டுக் கடைக்காரனை வரவழைத்து அந்தப் பூட்டிற்குத் தகுந்த சாவி ஏதாவது இருக்கிறதா என்று பிரயத்தனப்பட்டுப் பார்க்கச் செய்கிறேன். அது இந்த அவசரத்திற்குச் சரிப்பட்டு வராது. அதை நாளைக்குள் முடிக்கிறேன். அதுவரையில் நீங்கள் இந்த வீட்டி லேயே மூன்றாவது மாடத்தில் இருங்கள். இதோ நானே வந்து உங்களுக்கு இடம் காட்டுகிறேன்" என்று கூறிய வண்ணம் எழுந்து அந்த அம்மாளையும் தன்னுடன் கூடவே அழைத்துக் கொண்டு வெளியில் சென்றான். அவனுக்குப் பின்னால் நடந்த நீலலோசனி யம்மாள் மிகுந்த வியப்போடு நாற்புறங்களிலும் தனது பார்வை யைத் திருப்பி, "ஆகா! இந்த இடம் ரிஷி ஆசிரமம் போல மனசிற்கு நிரம்பவும் ரமணீயமாக இருக்கிறது. பணம் படைத்தவர்கள் எல்லோரும் பணத்துக்குச் சொந்தக்காரர் ஆகிவிடுவார்களா? தமக்கு ஈசுவரன் கொடுத்த சொத்தைக் காவல் காக்கும் பூதம் போல இராமல், அதைத் தாமும் சரியானபடி அனுபவித்து உலகத்தாருக் கும் உபயோகிக்கிறவர்கள்தான் உண்மையில் தனவந்தர்கள்.

நானும் எத்தனையோ வீடுகளைப் பார்த்திருக்கிறேன். நானே மெத்தை வீடு படைத்து வாழ்ந்தேன். இந்த வீட்டில் உள்ள வேலைப்பாடுகளைப் போல நான் எங்கேயும் பார்க்கவில்லை. ஒவ்வொரு கதவு நிலையும் தேர்ச்சிங்காரம் போல் அல்லவா அபார மான வேலைப்பாடுகளும், பதுமைகளும், செடி கொடிகளும் நிரம்பப் பெற்றதாய் இருக்கிறது. ஒவ்வோர் இடத்தின் அழகும் கண்ணைப் பறிக்கிறதே" என்று மிருதுவான குரலில் கூறினாள். அந்தப் புகழ்ச்சியான மொழியைக் கேட்ட மாசிலாமணி மிகுந்த களிப்பும், உற்சாகமும் தற்பெருமையும் அடைந்தவனாய், "இந்த வீடு கட்ட நான் மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறேன். இவ்வளவு ரூபாய்ச் செலவு செய்து கட்டப்பட்ட வீடு இந்த ஜில்லாவிலேயே வேறே எந்த இடத்திலும் இல்லை என்று என்னுடைய சிநேகிதர் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்தக் கதவு நிலைகளைப் பார்த்தே நீங்கள் இவ்வளவு தூரம் ஆச்சரியப் படுகிறீர்களே! இன்னம் இந்த வீட்டில் உள்ள மகா மகா அருமை யான வேலைப்பாடுகளையும், சிங்காரங்களையும் பார்த்தால் என்ன சொல்லுவீர்களோ! எல்லாவற்றையும் நான் உங்களுக்குக் காட்டுகிறேன் பாருங்கள். நாளைய தினம் நீங்கள் ரமாமணி யம்மாளுடைய வீட்டிற்குப் போனால், அதற்குப் பிறகு இங்கே எப்போது வருவீர்களோ" என்று கூறிய வண்ணம் அந்த வீட்டின் மூன்று கட்டுகளின் கீழ்ப்பாகம், முதல் உப்பரிகை, இரண்டாவது உப்பரிகை, மூன்றாவது உப்பரிகை ஆகிய எல்லா இடங்களுக்கும் நமது நீலலோசனியம்மாளை அழைத்துக் கொண்டு போய்த் தனது சயனமாளிகை, கூடங்கள், பொக்கிஷ அறை முதலிய சகலமான இடங்களையும் காட்டினான். ஆங்காங்கு இரண்டோர் அறைகள் பூட்டப்பட்டிருந்தன. அவைகளின் திறவுகோல் அப்போது கீழே இருந்தமையால், அவைகளுக்குள் இன்னின்ன வஸ்துக்கள் இருக்கின்றன என்று வாயால் சொல்லி அவற்றைவிட்டு, மற்ற இடங்களைக் காட்டிக் கொண்டே அந்த அம்மாளை மூன்றாவது உப்பரிகைக்கு அழைத்துக் கொண்டு போய், அவ்விடத்தில் இருந்த ஒரு சயனக் கிரகத்தைக் காட்டி, "நீங்கள் இவ்விடத்திலேயே சௌகரியமாக இருங்கள். ஒரு வேலைக்காரியை எப்போதும் இங்கேயே இருக்கச் செய்கிறேன். உங்களுக்கு ஆகவேண்டிய

காரியங்களை எல்லாம் அவள் செய்வாள்" என்று கூறினான். அந்த அறை அந்த வீட்டின் முன் பாகத்தில் இருந்தது. அறையின் முன் பக்கத்தில் இரண்டு ஜன்னல்கள் இருந்தன. உள் பக்கத்தில், ஊஞ்சல் பலகை, சோபாக்கள், கட்டில், சாய்மான நாற்காலிகள், படங்கள், பூத்தொட்டிகள் முதலியவை நிறைந்திருந்தன.

மற்ற இடங்களைப் பார்த்தது போலவே நீலலோசனியம்மாள் அந்த அறைக்குள் நுழைந்து வியப்போடு பார்த்த பின் "எனக்கு இவ்வளவு சொகுசான இடம் எதற்கு? நான் என் சேலைத் தலைப்பை ஒரு மூலையில் விரித்து, அதன் மேல் படுக்கிறவள் தானே! இருந்தாலும் பாதகமில்லை. நான் இந்த இடத்திலேயே ஒரு மூலையில் முடங்கியிருந்து இன்றைய பொழுதைப் போக்கு கிறேன். நீங்கள் சீக்கிரமாகப் பூட்டுக்காரனை வரவழைத்து ரமாமணி யம்மாளுடைய வீட்டின் கதவைத் திறக்க வழிச் செய்யுங்கள். அங்கேயே போய்விடுகிறேன். ரமாமணியம்மாளுடைய வீடு எந்தத் தெருவில் இருக்கிறது? இவ்விடத்திற்கு அது நிரம்பவும் தூரத்தில் இருக்கிறதோ?" என்றாள்.

மாசிலாமணி, "இல்லை; இல்லை. அவளுடைய வீடு இதே தெருவில், இந்த வீட்டுக்கு நேர் எதிரில் இருக்கிறது. அந்த ஜன்னலின் வழியாகப் பார்த்தால்கூட அது தெரியுமே" என்றான்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் "ஓகோ அப்படியா!" என்று வியப்போடு கூறிய வண்ணம் ஜன்னலண்டை போய் நின்று வெளியில் பார்த்தாள். எதிர்ப் பக்கத்தில் இருந்த இரண்டு உப்பரிகைகளுடைய அழகான வீடு ஒன்று அவளது திருஷ்டியில் பட்டது. அதைப் பார்த்த நீலலோசனியம்மாள், "இதோ எதிரில் இருக்கும் இரண்டு உப்பரிகை வீடுதான் ரமாமணியம்மாளுடை யதா?" என்றாள்.

மாசிலாமணி, "ஆம்; அதுதான்" என்றான். நீலலோசனியம்மாள், "அதுவும் அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால், அதை இந்த வீட்டுக்கு ஈடு சொல்ல முடியாது ஆனாலும், அதுவும் சிறப்பாகத் தான் கட்டப்பட்டிருக்கிறது. அவர்களும் நல்ல தனிகர்கள் என்று தான் சொன்னார்கள். ஆனால் ரமாமணியம்மாளின் புருஷருக்கு

ஏதாவது உத்தியோகம் உண்டா? அல்லது, அவர் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் பி.ஏ., எம்.ஏ. முதலிய பரீட்சைகளுக்குப் படிக்கிறாரா? அந்த விவரத்தை அவர்களிடம் நான் கேட்க மறந்து விட்டேன்" என்றாள்.

மாசிலாமணி சிறிது கிலேசம் அடைந்தவனாய்ப் பேசத் தொடங்கி, "என்ன நீங்கள் அவர்களோடு சென்னையில் இரண்டு மூன்று தினங்கள் இருந்து பழகி இருக்கிறீர்கள். ரமாமணியம்மாளின் கழுத்தையும் முகத்தையும் கவனித்துப் பார்க்கவில்லை போலிருக் கிறதே!" என்றான்.

நீலலோசனியம்மாள் திடுக்கிட்டு மிகுந்த கிலேசமும் ஒருவித சந்தேகமும் கொண்டு, "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் சொல்வது எனக்குத் தெளிவாக விளங்கவில்லையே!" என்றாள்.

மாசிலாமணி, "ரமாமணியம்மாளுடைய புருஷர் இந்த ஊரில் ஒரு பிரபல வக்கீலாக இருந்து சமீப காலத்தில் தான் இறந்து போனார். அவள் இவ்வளவு இளமைப் பருவத்திலேயே கைம் பெண்ணாய் விட்டாள். அவளுடைய கழுத்தில் தாலியும், முகத்தில் மஞ்சளும் இல்லை என்பதை நீங்கள் கவனிக்கவில்லை போலிருக்கிறது" என்றான்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் முற்றிலும் திடுக்கிட்டுப் பெருத்த திகைப்படைந்தவளாய் மாசிலாமணியின் பக்கம் திரும்பி, "என்ன! என்ன! ரமாமணியம்மாள் விதவையா! அவளுடைய புருஷர் இறந்து போய்விட்டாரா! நான் இப்போது கனவு காண்கிறேனா, அல்லது, உண்மையிலேயே உங்களோடு பேசுகிறேனா என்பது தெரியவில்லையே!" என்று அபாரமான பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் காட்டி மறுமொழி கூறினாள்.

அதைக் கண்ட மாசிலாமணியும் ஒருவாறு திகைத்துப் போய், "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் கனவு காண்பதாய் ஏன் சந்தேகிக்க வேண்டும்? நான் சொன்ன சங்கதியில் அப்படிப்பட்ட புதுமையான விஷயம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லையே!" என்றான்.

நீலலோசனியம்மாள் தலைசுற்றலும் கிறுகிறுப்பும் அடைந்த வள் போலக் கீழே குனிந்து தனது நெற்றியைக் கையால் அழுத்திக்

கொண்டு இரண்டு நிமிஷ நேரம் ஆழ்ந்து யோசனை செய்தபின், "என்ன, நீங்கள் சொன்னது உண்மைதானா? ரமாமணியம் மாளுக்கு இப்போது புருஷர் இல்லையா?" என்று மறுபடியும் அழுத்தமாகக் கேட்டாள்.

மாசிலாமணி, "என்ன இப்படிக் கேட்கிறீர்களே! அவள் தான் விதவை என்று நான் சொன்னேனே. அவளுக்குப் புருஷர் இல்லையா என்று நீங்கள் மறுபடி கேட்க வேண்டிய அவசியமே இல்லையே. புருஷர் இருந்தால், நான் துணிந்து விதவை என்ற சொல்லை வாயால் உச்சரிப்பேனா?" என்றான்.

நீலலோசனியம்மாள் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த குழப்பமும் கலக்கமும் கவலையும் கொண்டு, "நீங்கள் சொல் வதைக் கேட்க கேட்க, நான் உங்களிடம் என்ன பேசுவதென்பதே தெரியவில்லை. ரமாமணியம்மாளுடைய புருஷர் சென்னப்பட்ட ணத்தில் அவர்களோடு கூடவே இருக்கிறார். அவருடைய முகத்தில் அக்கினித் திராவகம் கொட்டப்பட்டதனால், அவரும் மற்றவர்களோடு ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாரே; அப்படி இருக்க, ரமாமணியம்மாள் விதவை என்று நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணிக்கு மிகுந்த கோபமும் ஆத்திரமும் பொங்கி எழுந்தன. தான் உண்மையைச் சொல்லும் போது அதை ஏற்றுக் கொள்ளாமல் அவள் தாறுமாறாக உளறுகிறாளே என்ற எண்ணத்தையும் அருவருப்பையும் அவன் அடைந்தவனாய், "என்ன அம்மா! நீங்கள் எதையும் சரியாய் விசாரித்து உண்மையைத் தெரிந்து கொள்ளாமல், நீங்களே ஏதேதோ தப்பாக யூகித்துக் கொண்டு பேசுகிறீர்களே! அக்கினித் திராவகம் கொட்டப்பட்ட தனால் அவஸ்தைப்பட்டு ஆஸ்பத்திரியில் இருப்பவன் இந்த ஊரில் உள்ள ஒரு தவில்காரன் என்று பத்திரிகையில் வெளியாய் இருக்கிறதே, அதை நீங்கள் படிக்கவில்லையா?" என்றான்.

நீலலோசனியம்மாள் முற்றிலும் ஸ்தம்பித்து இடிந்து உட்கார்ந்து போய், "ஆ! அப்படியா! அந்த மனிதர் தவில்காரரா? பத்திரிகை களில் இந்த விபரீதச் செய்தி வெளியானதாக எல்லோரும்

சொல்லிக் கொண்டார்கள். அதை நான் நேரில் படித்து உள்விவரங் களைத் தெரிந்து கொள்ளவில்லை ஆனாலும், அந்த மனிதன் உண்மையில் தவில்காரன் தானா என்று என் மனம் நம்பிக்கை கொள்ளமாட்டேன் என்கிறது. அவர்களுடைய வரலாற்றை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் யாரோ ஒருவர் அந்தச் செய்தியை வெளியிட்டது தானே. ஆகையால், அந்த மனிதரைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பது மாத்திரம் ஒருவேளை தப்பாக இருக்கலாம்" என்றாள்.

மாசிலாமணி மிகுந்த ஆத்திரமடைந்து, "மற்ற எல்லோரும் ஸ்மரணை தப்பிக் கிடந்ததாகவும், அந்தத் தவில்காரன் மாத்திரம் முன்னால் தெளிவடைந்து தங்களுடைய வரலாற்றை வெளியிட்ட தாகவும் பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. அவனே தன்னைப் பற்றிச் சொன்ன வரலாறுதானே அது? அதைப் பொய் என்று நாம் ஏன் சொல்ல வேண்டும்" என்றான்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் உடனே தனது மடி சஞ்சியை அவிழ்த்து அதற்குள்ளிருந்த ஒரு போட்டோப் படத்தை எடுத்து, "இதோ பார்த்தீர்களா? அவர்கள் எல்லோரையும் வைத்து ஆஸ்பத்திரியில் படம் பிடித்தார்கள். ஐந்தாறு படங்கள் எடுக்கப் பட்டன. அதில் நமக்கு ஒரு படம் இருக்கட்டும் என்ற எண்ணத் தினால், நான் அந்தப் படம் பிடித்தவருக்கு ஒரு ரூபாய் கொடுத்து, எனக்கு ஒரு பிரதி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். அப்படியே அவர் மற்றவர்களுக்குத் தெரியாமல், இதை எடுத்துக் கொடுத்தார். இதைப் பாருங்கள். இதில் அந்த மனிதர் இருக்கிறார். அவர் உண்மையில் யார் என்று பாருங்கள்" என்றாள்.

அவள் கூறியதைக் கேட்ட வண்ணம் மாசிலாமணி மிகுந்த ஆவலோடு அந்தப் படத்தை வாங்கி அதற்குள் இருந்த வடிவங்களை உற்று நோக்கினான். எல்லோரும் அங்கஹீனம் அடைந்து படுத் திருந்த காட்சி பரமவிகாரமான காட்சியாக இருந்தது. முக்கியமாக அவன் ரமாமணியம்மாளது முகத்தையே நன்றாகக் கூர்ந்து நோக் கினான். அவளது முகம் பிரம்மாண்டமாக வீங்கியிருந்ததோடு, பெருத்த துணிக்கட்டு போடப்பெற்றும் இருந்தது. அதைக் காண,

மாசிலாமணியின் மனத்தில் சகிக்க ஒண்ணாத அருவருப்பும் வேதனையும் உண்டாயின. அதன் பிறகு அவன் மற்றவரது வடிவங்களையும் பார்த்து, "ஆகா! இவன் நம்முடைய ஊரில் உள்ள கும்பேசுவரர் கோவில் மேள ஜதையைச் சேர்ந்த தவில்கார னல்லவா. இவன் எதற்காக அவர்களோடு கூடவே பட்டணம் போனான் என்பதும், முக்கியமாய், வெள்ளிக்கிழமை இரவில் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த மனிதர் வீட்டுக் கலியாணத்திற்குப் போன இடத்திற்கு அவர்களோடு இவனும் எதற்காகப் போனான் என்பதும் தெரியவில்லையே!" என்று பெருத்த வியப்பும் திகைப்பும் கொண்டு கூறினான். நீலலோசனியம்மாள், "நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள். உண்மையில் அந்த மனிதன் இந்த ஊர்த் தவில்காரன்தானா?" என்றாள்.

மாசிலாமணி, "சந்தேகமே இல்லை. இவன் தவில் அடித்துக் கொண்டு இதே தெருவழியாகப் போனதை நான் ஆயிரம் தடவை பார்த்திருக்கிறேன்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினான்.

நீலலோசனியம்மாள், "அப்படியா! ஆகா! அவர்கள் நடந்து கொண்ட மாதிரியைக் கண்டும், அவர்கள் சொன்னதைக் கேட்டும் அநியாயமாய் நான் மோசம் போய்விட்டேனே! அடெ பாவிகளா! பரம சாதுக்கள் போலவும் மகா யோக்கியர்கள் போலவும் நடந்து கொண்டு என் தலையில் நன்றாக மிளகாய் அரைத்து விட்டீர்களே! ஐயோ என் வயிறு பற்றி எரிகிறதே! ஏதோ அக்கிரமம் செய்து இப்படி மூளியாய் இருக்கும் அவர்கள், மேலும் பெருத்த அக்கிரமத்தில் இறங்கி என்னைப் படுகுழியில் இறக்கி விட்டார்களே! அவர்களுக்கு நல்லகதி கிடைக்குமா? அவர்கள் கண் தெரிந்து வழி நடப்பார்களா? என்னுடைய காலைச் சுற்றிய சனியனா சிதம்பரம் ஸ்டேஷனில் என்னைக் கொண்டு போய் அவர்களுடைய வண்டியில் ஏற்றிவிட்டது. ரயில் வண்டிக்குள் தாயும் தகப்பனும் வழியில் உட்கார்ந்து கொண்டு வேறே யாரையும் உள்ளே விடாமல் காவல் காத்த வெட்கக் கேட்டை என்னவென்று சொல்லுவேன்! ரமாமணியம்மாளும் அந்தத் தவில்காரப் பையனும் அப்போது தனியாகவும் மறைவாகவும் இருந்த ஒரு சோபாவில் உட்கார்ந்து இரவு முழுதும் அடித்த

கொட்டத்தை நான் என்னவென்று சொல்லுவேன். அந்தப் பரம விகாரமான காட்சியைப் பார்ப்பதற்கே சகிக்கவில்லை. அப்போதே என் மனசில் ஒருவித சந்தேகம் உதித்தது. அவர்கள் புருஷன் பெண்சாதியாக இருந்தால், ரயிலில் அப்படிப்பட்ட மானங்கெட்ட காரியத்தில் இறங்க மாட்டார்களே என்ற எண்ணம் உண்டாயிற்று. அவர்கள் இருந்த பக்கம் என் முகத்தைத் திருப்பவே எனக்குக் கூசியது. நான் அவளுடைய தாயாருடன் பேசிய காலத்தில் தன்னுடைய பெண்ணும் மருமகப் பிள்ளையும் தனியாய் இருப்பதாகச் சொன்னது என் காதில் இப்போதும் ஒலிப்பது போல இருக்கிறதே. அதன் பிறகு அவர்களுடன் நான் சத்திரத்தில் இருந்த காலத்திலும் அவர்கள் விகாரமாகத்தான் நடந்து கொண்டனர். ஆனால், என் மனசில் இன்னொரு சந்தேகம் உதித்தது. அந்த இடும்பன் சேர்வைகாரன், போயி ஆகிய இருவருக்கும் முன்னால், அந்தப் பக்கிரியா பிள்ளையை அவர்கள் அன்னியன் போல நடத்தியதாகவும், அவர்கள் இல்லாத காலங்களில் அவனுடன் அந்தரங்கமான வாஞ்சையோடு நடந்து கொண்டதாகவும் என் மனதில் பட்டது. நான் அப்படி நினைப்பது சரியல்ல என்று என் மனசை நான் கண்டித்து அடக்கிக் கொண்டேன். ஆகா! அவர்கள் எப்பேர்ப்பட்ட அட்டூழியம் செய்திருக்கிறார்கள்! அந்தத் தவில்காரப் பையனுக்கும் அவளுக்கும் எவ்வளவு காலப் பழக்கமோ அது இப்போது சந்தி சிரிக்கும்படி ஆய்விட்டது. ஊர் கெட்ட கேட்டை என்னவென்று சொல்வது! அவர்கள் எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன என்று நினைத்து இதை விட்டு விடுவதற்கும் இல்லை. அவர்கள் என்னை அடியோடு படுகுழியில் இறக்கி இருக்கிறார்கள்" என்றாள்.

அவள் சொன்ன வரலாற்றைக் கேட்ட மாசிலாமணி உண்மையிலேயே பைத்திய வெறி கொண்டவன் போலானான். ரமாமணி தன்னை ஒருவனையன்றி வேறே எவனையும் கண்ணெடுத்தும் பாராமல் உறுதியாக இருந்து வருகிறாள் என்று அதுகாறும் நினைத்து வந்தவனாதலால், கேவலம் ஒரு தவில்காரப் பையனை அவள் அந்தரங்க ஆசை நாயகனாய் வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதைக் கேட்கவே, பெரும்புயலில் அகப்பட்ட கடலின்

அலைகள் போல, அவனது இரத்தம் கொதித்துக் கொந்தளித் தெழுந்து கட்டிலடங்காமல் மோதத் தலைப்பட்டது. அவனது கண்கள் கோவைக் கனி போலச் சிவந்து தீப்பொறி கக்கின. கை கால்கள் எல்லாம் தடதடவென்று ஆடுகின்றன. உடம்பு தாறுமாறாக முறுக்கிக் கொள்கின்றன. அவனது மனம் கட்டிலடங் காத கொதிப்பும், கலக்கமும், கடுங்கோபமும், வீராவேசமும் கொண்டு அமித கதியாகப் பறக்கிறது. கால் நாழிகை காலம் வரையில் தான் என்ன பேசுவதென்பதையாவது, என்ன செய்வ தென்பதையாவது அறியாதவனாய் அப்படியே ஸ்தம்பித்து நின்றவனாய், "ஆகா! ஆச்சரியம்! நீங்கள் சொல்லும் வரலாறு ஏதோ புஸ்தகத்தில் உள்ள கதையின் வரலாறு போலத் தோன்று கிறதே யன்றி உண்மை என்றே என் மனம் நம்பமாட்டேன் என்கிறதே! ரமாமணியும் இப்படி நடப்பாளா! அவர்களோடு நான் வெகுகாலமாக நெருங்கிப் பழகுகிறவனாயிற்றே. அவள் மகா சுத்த மான நடத்தையுள்ளவளாக நடந்து வந்தாளே. நீங்கள் சொல்வது அத்யாச்சரியகரமான விஷயமாக இருக்கிறதே. உங்களை அவர்கள் படுகுழியில் இறக்கிவிட்டதாகச் சொன்னீர்களே. அது என்ன விஷயம்? அதையும் சொல்லுங்கள்" என்றான்.

உடனே நீலலோசனியம்மாள் சித்தப்பிரமை கொண்டு கலங்கித் தவித்து நிரம்பவும் பரிதாபகரமாகத் தனது கைகளைப் பிசைந்து கொண்டு, "ஐயா! அந்தப் படுமோசத்தை என்னவென்று சொல்லுவேன்! இப்போது என் வாய் என்ன சொல்கிறதென்பதே என் மனசிற்குத் தெரியவில்லை. என் மனம் அவ்வளவு தூரம் கலங்கிக் கலவரமடைந்து தத்தளித்து நிற்கிறது. அந்த விவரத்தை நான் வாயால் சொல்வதற்கு முற்றிலும் அசக்தமானவளாய் இருக்கி றேன். இதோ என்னிடம் ஒரு தஸ்தாவேஜி இருக்கிறது. இதை நான் உங்களிடம் கொடுக்கிறேன். இதைப் படித்து உண்மையை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். இந்தப் பத்திரத்தைப் பற்றிய வரலாறு எதையும் உங்களிடம் நான் வெளியிட வேண்டாம் என்றும், அப்படிச் செய்தால் நீங்கள் பொறாமைப் படுவீர்கள் என்றும் சொல்லி அவர்கள் என்னை எச்சரித்தது இதற்குத் தான் போலிருக்கிறது. ஆகாகா! அவர்கள் என்னிடம் எவ்வளவு கபடமா கவும் வஞ்சகமாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள்!" என்று கூறிய

வண்ணம் தனது மடிசஞ்சியில் இருந்த உடன்படிக்கைப் பத்திரத்தை எடுத்து மாசிலாமணியினிடம் கொடுத்தாள்.

அவன் மிகுந்த ஆவலோடும் வியப்போடும் படபடப்போடும் அந்தப் பத்திரத்தை வாங்கி நிரம்பவும் கவனிப்பாக அதைப் பத்து நிமிஷ நேரத்தில் படித்து முடித்தான். முடிக்கவே, மாசிலாமணிக்கு அது, பூமியோ, ஆகாயமோ என்றும், தான் காண்பது கனவோ நனவோ என்றும் பலவகைப்பட்ட விபரீத எண்ணங்கள் தோன்றி மனப்பிராந்தியையும் கோப வெறியையும் உண்டாக்கின. ரமாமணியம்மாள், பக்கிரியா பிள்ளை, அவளது பெற்றோர் ஆகிய நால்வரையும் தான் கத்தியால் ஒரே வெட்டாக வெட்டிப் போட்டு விட்டு, தானும் தன்னைக் கொன்று கொள்ள வேண்டும் என்ற மூர்க்கமான நினைவும் வீராவேசமும் தோன்றின. ஆயினும் அவர்கள் பட்டணத்தில் இருப்பதையும், தான் அவ்விடம் போகப் கூடாத நிலைமையில் இருப்பதையும் உணர்ந்து அவன் உடனே எதையும் செய்ய மாட்டாதவனாய் நிலை கலங்கி அப்படியே சிறிது நேரம் ஒய்ந்து நின்றபின் நீலலோசனியம்மாளை நோக்கி நிரம்பவும் அன்பாகப் பேசத் தொடங்கி, "அம்மா! பத்திரத்தைப் படித்துப் பார்த்தேன். உண்மை விளங்கிவிட்டது. ரமாமணி வெளிக்கு மகா சுத்தமானவள் போல நடித்து, ரகசியத்தில் அந்த முரட்டுப் பையனிடம் சம்பந்தமாக இருந்து வருகிறாள் என்பது நன்றாகத் தெரிகிறது. அதற்கு அவளுடைய தாய் தகப்பன்மார் களும் உடந்தையாகவும் உதவியாகவும் இருந்து வருகிறார்கள் என்பதும் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. ரமாமணியின் புருஷர் இந்த ஊரில் மகா கண்ணியம் வாய்ந்த வக்கீல்; அவரை நான் என்னுடைய சொந்த அண்ணன் போல மதித்து வந்தேன். அவர் இறந்த பிறகு இவர்கள் சீர்குலைந்து போய்விடாமல், பலவகையில் நான் இவர்களுக்கு உதவி செய்து இவர்களுடைய சொத்து சுதந்திரங்களை எல்லாம் சீர்படுத்தி இவர்களை க்ஷேமமாய் இருக்க வைத்தால், இவர்கள் இப்படிப்பட்ட மானக்கேட்டில் இறங்கி இருக்கிறார்கள். அந்த ரமாமணியம்மாளை நான் என்னுடைய சொந்த அண்ணி போல மதித்து, நிரம்பவும் மரியாதையாகவும் மதிப்பாகவும் நடத்தி வந்தேன். அவள் வெளிப்பார்வைக்கு மகா

உத்தமி போல நடந்து உள்ளூற இவ்விதமான துர்நடத்தையில் இறங்கி இருக்கிறாள். அவர்கள் இப்படிக் கெட்டுப் போனதைப் பற்றி என் மனம் வருந்தித் தவிக்கிறதே அன்றி, அதனால் எனக்கு யாதொரு நஷ்டமாவது தலைகுனிவாவது இல்லை. எந்த ஊரில் இருந்தோ வந்த நீங்கள் உங்களுடைய பெருத்த சொத்தை இப்படிப்பட்ட அயோக்கியர்கள் பேரில் எழுதி வைத்துவிட்டு, அவர்களுடைய சவரக்ஷணையில் இருக்க உத்தேசிக்கிறீர்களே என்ற விஷயந்தான் இப்போது என் மனதை நிரம்பவும் வதைக்கிறது" என்றான்.

நீலலோசனியம்மாள், "வெளிப்பகட்டைக் கண்டு நான் வகை மோசம் போய்விட்டேன். ஐயா! இப்படிப்பட்ட துன்மார்க்க நடத்தை உள்ளவர்கள் வீட்டில் நாய்கூடத் தண்ணீர் குடிக்காது. உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் நான் அவர்களிடம் இரண்டொரு வேளை போஜனம் கூடச் செய்து விட்டேன். என் உடம்பை நெருப்பில் போட்டு சுட்டெரித்தாலன்றி அந்த அசுதி இனி தீராது. இது வரையில் தெரியாத்தனத்தினால் செய்ததே எனக்கு ஏழேழு ஜென்மத்திற்கும் போதுமே. அப்படி இருக்க, இனி ஒரு நிமிஷமும் நான் அவர்களுடைய சவரக்ஷணையில் இருப்பேனா? அல்லது, இனி நான் அவர்களுடைய முகத்தில் தான் விழிப்பேனா? அது ஒருநாளும் இல்லை. ஏற்கனவே தீர்மானித்துக் கொண்டபடி நான் இந்த ஊரில் தான் இருக்கப் போகிறேன். நான் இந்தப் பத்திரத்தை உடனே ரத்து செய்து, என் சொத்து முழுதையும் இந்த ஊரில் உள்ள கும்பேசுவர சுவாமிக்கு எழுதி வைத்து விடுகிறேன். அந்தச் சொத்தைப் பரிபாலித்து, அந்தத் தர்மத்தை எப்போதும் நடத்தி வருவதற்கு, உங்களைப் போன்ற தக்க பெரிய மனிதர் யாரையாவது தர்மகர்த்தாவாக நியமித்து விட லாம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அந்தத் தர்மத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?" என்றாள்.

மாசிலாமணி சிறிது சிந்தனை செய்பவன் போல இருந்து "ஆகா! நாம் சொந்தத்தில் இவ்வளவு அபாரமான சொத்துகளைச் செலவழித்து தர்மம் செய்யாவிட்டாலும், வேறொருவர் ஒப்படைப்பதை வைத்து நடத்துவது கூடவா ஒரு பிரயாசை?

நானும் கோவில்களுக்கு ஏராளமான சொத்துக்களைத் தர்மத்திற்காக விட உத்தேசித்திருக்கிறேன். அதோடு உங்களுடையதையும் சேர்த்து, நிரம்பவும் வைபவமாக ஏதாவது முக்கியமான சில உற்சவங்களை உங்கள் பேரால் நடத்த ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

உடனே நீலலோசனியம்மாள் சிறிது நேரம் யோசனை செய்து, "சரி; அப்படியே செய்துவிடுவோம். ஆனால், இந்த விஷயத்தில், எனக்கு நீங்கள் ஒர் உதவி செய்ய வேண்டும். உங்களுடைய தமையனார் இந்த ஊரில் பிரபலமான வக்கீலாக இருந்தார்கள் என்று சொன்னீர்களே. உங்கள் தமையனாருக்குப் பழக்கமான கெட்டிக்கார வக்கீல் பட்டணத்தில் யாராவது இருக்கிறார்களா? அவர்கள் யாரிடமாவது உங்களுக்குப் பரிச்சயமுண்டா?" என்றாள்.

உடனே மாசிலாமணி மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, "பட்டணத்தில் உள்ள எல்லா வக்கீல்களும் எங்களுக்குத் தெரிந்தவர்களே. முக்கியமாக எங்கள் பந்து ஒருவர் மயிலாப்பூரில் இருக்கிறார். பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை என்றால், நார்டன் துரைக்குக்கூட கொஞ்சம் யோசனைதான். என் தமயனார் ஏதாவது பெரிய வியாஜ்ஜியங்களில் யோசனை கேட்க வேண்டுமானாலும், அந்த பாரிஸ்டர் உதவியையே நாடுவார். அவருடைய கட்சிக்கு எப்போதும் ஜெயந்தான் கிடைக்கும். அவரிடமே நீங்கள் போகலாம். உங்களுக்கு அவரால் என்ன காரியம் ஆக வேண்டுமோ, அதைச் சொன்னால், நான் உடனே கடிதம் எழுதித் தருகிறேன்" என்றான்.

நீலலோசனியம்மாள், "இந்தப் பத்திரத்தைப் பட்டணத்தில் எனக்கு ஒரு வக்கீலே எழுதிக் கொடுத்தார். நாங்கள் ஐந்து பேர் சேர்ந்து உடன்படிக்கை போல இதை எழுதிக் கொண்டிருக்கிறோம். நான் மாத்திரம் சுதாவாக இதை ரத்து செய்துவிட எனக்கு அதிகாரம் உண்டா, அல்லது, மற்றவர்களுக்குத் தெரிவித்து விட்டோ, அல்லது, அவர்களுடைய சம்மதியைப் பெற்றோ, இதை ரத்து செய்ய வேண்டுமோ என்ற விஷயங்கள் எனக்குச் சட்டபூர்வமாக நிச்சயமாய்த் தெரிய வேண்டும். அவர் வேறொரு புதுப்பத்திரம்

தயார் செய்ய வேண்டும். அது இந்தப் பத்திரத்தை ரத்து செய்வதோடு, என் சொத்துக்களை கும்பேசுவர சுவாமிக்கு எழுதி வைத்து, உங்களையும் உங்கள் சந்ததியாரையும் சாசுவதமான தர்மகர்த்தாக்களாய் நியமிக்க வேண்டும். அப்படி எழுதும் புதிய பத்திரம் எவ்விதச் சிக்கலுமின்றி ஆணித்தரமாக இருக்க வேண்டும். சொத்து பெரிய சொத்தாகையால், அரைவாயன் கால்வாயன் எல்லாம் அதை எழுதினால், பிந்தி ஏதாவது கெடுதல் நேரும். நாம் செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும். அதனால் நூறு இருநூறு பணச்செலவு ஆனாலும் பரவாயில்லை. அந்தப் பத்திரம் எழுதுவதோடு, எங்கள் ஊரில் உள்ள செட்டியாருக்கு அவர் ஒரு கடிதம் எழுதி பணத்தை உடனே வருவித்து உங்களிடம் ஒப்படைக்கும்படி செய்ய வேண்டும். இந்த வேலைகளை நிரம்பவும் திறமையாக அந்த வக்கீல் செய்வார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால், அவருக்கு நீங்கள் உடனே ஒரு கைக்கடிதம் எழுதிக் கொடுங்கள். நான் இன்றைய இராத்திரி வண்டியிலேயே புறப்பட்டுப் பட்டணம் போய் நாளைய தினமே இந்த வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து சேருகிறேன். நான் தர்மத்திற்காக நியமிக்க உத்தேசித்திருக்கும் என் சொத்து அந்த பஞ்சமா பாதகர்களின் பேரில் இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நான் கும்பேசுவர சுவாமிக்குப் பெருத்த அபராதியாய் இருந்து வருவது போன்ற ஓர் உணர்ச்சி என் மனசில் தோன்றி என்னை நரக வேதனைக்கு உள்ளாக்கும் என்பதே நிச்சயம். ஆகையால், இந்த ஊரில் நான் தலைசாய்த்துப் படுக்கக்கூட என் மனம் இடந்தர வில்லை. தயவு செய்து நீங்கள் ஒரு கடிதம் எழுதிக் கொடுங்கள். நான் அறியாத பெண் பிள்ளை; அவர் பெரிய பாரிஸ்டர். அவர் கேட்பதற்குச் சரியான உத்தரம் சொல்லமாட்டாமல் நான் விழிக்க நேரும். ஆகையால், நான் இந்த வழக்கைப் பற்றி அவரிடம் என்னென்ன சொல்ல வேண்டுமோ அதை எல்லாம் சுருக்கமாக அவருக்கெழுதும் கடிதத்தில் நீங்களே எழுதிக் கொடுங்கள்" என்றாள்.

அதைக் கேட்ட மாசிலாமணி, "சரி, எழுதிக் கொடுக்கிறேன்; வாருங்கள், என்னுடைய அறைக்குப் போவோம்" என்றான்.

உடனே அவர்கள் இருக்கும் மூன்றாவது உப்பரிகையை விட்டுக் கீழே இறங்கி மாசிலாமணியின் அறைக்குச் சென்றனர். அவ்விடத்தில் மேஜையின் மேல் காகிதம், எழுதுகோல், உறை முதலியவைகள் ஏராளமாக இருந்தன. அவன் அவ்விடத்தில் உட்கார்ந்து மயிலாப்பூரில் உள்ள பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளைக்கு ஒரு கடிதம் எழுதி, அதை நீலலோசனியம்மாளுக்குப் படித்துக் காட்டிய பின் மேல் விலாசமும் எழுதி உறைக்குள் காகிதத்தைப் போட்டு ஒட்டி அதை அந்த அம்மாளிடம் கொடுத்தான். அவள் நிரம்பவும் வணக்கமாகவும் விநயத்தோடும் அதை வாங்கித் தனது மடிசஞ்சிக்குள் வைத்து கட்டிக் கொண்ட பின், "சரி, நான் இன்று இரவு வண்டியிலேயே பட்டணம் போய் இந்த வேலையை இரண்டொரு தினங்களில் முடித்துக் கொண்டு வந்து சேருகிறேன். அவ்விடத்தில் போலீசார் என்னைப் பார்க்காத படி நான் மறைவாக இருந்தே எல்லாக் காரியங்களையும் முடித்துக் கொண்டு வந்து சேருகிறேன். நான் எப்படியும் அந்த இடும்பன் சேர்வைகாரரைக் காப்பாற்றியே தீரவேண்டும். எனக்கு உத்தரவு கொடுங்கள். ராமசாமி கோவில் பிராகாரத்தில் இராமாயணம் முழுதையும் சித்திரமாகவே எழுதி இருக்கிறார்களாம். அது அழகாய் இருக்கிறதாம். அதைப் பார்க்க வேண்டும் என்று என் மனம் ஆசைப்படுகிறது. அதையும் இன்னும் மகா மகக்குளம் முதலிய வேறு சில முக்கியமான இடங்களையும் பார்த்துக் கொண்டே இருந்தால், அதற்குள் அந்தி நேரம் வந்துவிடும். உடனே ரயிலுக்குப் போய்விடுகிறேன்" என்றாள்.

அப்படியே செய்யும்படி மாசிலாமணி கூற, உடனே நீல லோசனியம்மாள் அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு ராமசாமி கோவிலை நோக்கிப் போய்விட்டாள்.

★ ★ ★

மறுநாட்காலை சுமார் பத்துமணி நேரமிருக்கலாம். சென்னை ஆஸ்பத்திரியில் தனியான ஒரு கூடத்தில் விடப்பட்டிருந்த ரமாமணியம்மாள் முதலிய ஐவருக்கும் அன்றைய பகல் போஜனம் நிறைவேறியது. எல்லோரும் தலையணை திண்டு

களில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் வெள்ளிக்கிழமை இரவு அங்கஹீனப்பட்ட பிறகு ஏழு தினங்கள் ஆயின ஆதலால், ரமாமணியம்மாளது முகத்தின் வீக்கம் வடிந்து போயிருந்தது. அறுபட்ட இடத்தின் ரணமும் அநேகமாய் ஆறிப் போனதாகக் காணப்பட்டது. அவள் தனது வாயைத் திறந்து சாதாரணமாய்ப் பேசக்கூடிய நிலைமைக்கு வந்திருந்தாள். மற்றவர்களது ரணங்களும் அநேகமாய் ஆறிப்போயிருந்தன. அவர்கள் ஒருவரோடு ஒருவர் அதிகமாய்ச் பேச்சுக் கொடுத்து உடம்பை அலட்டிக் கொள்ளக் கூடாதென்று டாக்டர்கள் கண்டித்துக் கூறியிருந்தனர் ஆதலாலும், அடிக்கடி பணிமக்கள் வந்து வந்து போய்க் கொண்டிருந்தமையாலும், அவர்கள் தபசிகள் போல இரவு பகல் எப்போதும் மௌனமாகவே இருந்து வந்தனர். அவர்கள் ஒருவரிடத்தொருவர் வெளியிட்டுக் கொள்வதற்கும், கலந்து யோசனை செய்வதற்கும் அவர்களது மனத்தில் ஏராளமான விஷயங்கள் இருந்தன ஆனாலும், அவ்விடத்துக் கட்டுப்பாட்டை மீற மாட்டாதவர்களாய்த் தவித்துத் தமது பொழுதை நிரம்பவும் பாடுபட்டுக் கழித்துக் கொண்டிருந்தனர்; அதுவுமன்றி, தங்கள் வேலைக்காரனான போயியும் அதே கூடத்தில் ஒரு கட்டிலில் படுக்கவைக்கப்பட்டிருந்தமையால், அவனுக்கருகில் இருந்து தமது ரகசியங்களை எல்லாம் பேசுவதற்கும் அவர்களது மனம் இடந்தரவில்லை. ஆகவே, அவர்கள் அப்போதைக் கப்போது பூடகமான சொற்களையும், கைஜாடை கண்ஜாடை முதலிய வற்றையும் உபயோகித்து ஒருவரோடொருவர் சம்பாஷித்து வந்தனர். அந்த ஐவருள் முக்கியமாக ரமாமணியம்மாளே தலை போல இருந்து வந்தாள் ஆதலால்; எல்லா விஷயங்களிலும் அபிப்பிராயங்களையும் உத்தரவுகளையும் அவளே பிறப்பித்து வந்தாள். நாம் மேலே கூறியபடி அவர்கள் வியாழக்கிழமை காலை பத்துமணிக்குத் தமது போஜனத்தை முடித்துக் கொண்டு உட்கார்ந் திருந்த காலத்தில், ரமாமணியம்மாள் தனது பெற்றோரை நோக்கி மெதுவாகப் பேசத் தொடங்கி, "இந்த நீலலோசனியம்மாளை நாம் அதிக நாள் மாசிலாமணியிடம் விட்டிருப்பது உசிதமாகத் தோன்ற வில்லை. பத்திரத்தில் கண்ட விஷயங்களை அவன் தெரிந்து கொள் வதில் கெடுதல் ஒன்றுமில்லை. பத்திரத்தை அவன் பார்த்தால்,

பக்கிரியா பிள்ளையைப் பற்றிய விஷயம் தெரிந்துபோகும்" என்று ரகசியமாகவும் சைகைகளாலும் கூறினாள்.

விசாலாக்ஷியம்மாள், "அந்தப் பத்திரத்தைப் பற்றிய விஷயம் எதையும் மாசிலாமணியிடம் சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த அம்மாள் அதை வெளியிடவே மாட்டாள்" என்றாள்.

ரமாமணியின் தகப்பன், "அவனுக்குத் தெரிந்தால் தான் என்ன? அவன் நம்மை என்ன செய்ய முடியும்? அவனுடைய சிநேகந் தானே போகும்; போனால் போகிறது. ஐந்து லட்சம் ரூபாய்க்கு முன் மற்றதெல்லாம் ஒரு பொருட்டல்ல" என்றார்.

ரமாமணியம்மாள், "அவனுடைய சிநேகம் நமக்கு இருக்கிற வரையில் ஆதாயந்தானே. நீலலோசனி அதிக காலம் நம்முடைய ஊரிலிருந்தால், பக்கிரியா பிள்ளை விஷயத்தில் நாம் பொய் சொல்லியிருக்கிறோம் என்பது எப்படியும் அவள் காதுக்கு எட்டும். அதனால் பிறகு நமக்குக் கெடுதல் வரும். ஆகையால், நாம் கூடிய சீக்கிரம் ஊருக்குப் போய், குடிகார வக்கீலை ஒழித்த மாதிரி, அவளுக்கும் ஒருவழி செய்து விட்டால், அவளுடைய சொத்து முழுதும் உடனே வந்து விடும். அதன் பிறகு நாம் மாசிலா மணியோடு எப்போதும் போல இருந்து வரலாம் அல்லவா. ஐந்து லட்சத்திற்கு மேல் அதிகமாக சொத்து சேர்ந்தால், அது செரிக்காமல் போகுமா" என்றாள்.

அவ்வாறு அவள் கூறி வாய் மூடுமுன், நமது நீலலோசனி யம்மாள் மடிசஞ்சியும் கையுமாக அவர்களுக்கெதிரில் வந்து நின்றாள். அவளைக் கண்ட ரமாமணியம்மாள் முதலிய எல்லோரும் பெருத்த பூதத்தைக் கண்டு திடுக்கிட்டு நடுங்கும் குழந்தைகளைப் போல திக்பிரமை கொண்டு ஸ்தம்பித்துப் போயினர். அவர்களது தேகங்கள் அந்த ஒரு நிமிஷமும் கிடுகிடென்று ஆடின. முகங்கள் விகாரப்பட்டுப் போயின. அவள் மறுபடி திரும்பி அவ்விடத்திற்கு வருவாள் என்று அவர்கள் எதிர்பார்த்தவர்களே அன்று ஆதலால், அவளது வருகை அவர்களது மனத்தில் பெருத்த திகிலையும், பீதியையும்,

கலக்கத்தையும், பலவகையான சந்தேகங்களையும் உண்டாக்கி விட்டன. தாங்கள் நீலலோசனியம்மாளை அதிக காலம் உயிரோடிருக்க விடக்கூடாது என்று அப்போதே ரமாமணியம் மாள் ஜாடையாகக் கூறியதை ஒருகால் அந்த ஸ்திரீ அறிந்து கொண்டிருப்பாளோ என்ற திகிலும் நடுக்கமும் எல்லோருக்கும் ஏககாலத்தில் தோன்றின. அதுவுமன்றி, கும்பகோணத்திலேயே இருப்பதற்காகப் போனவள் மறுதினமே திரும்பிப் பட்டணம் வந்து விட்டதன் காரணம் எதுவாக இருக்கும் என்ற பீதியே முக்கியமாக எழுந்து அவர்களது மனத்தைக் குழப்பிக் கலக்கின. ஒருவேளை போலீசார் அவளைத் தடுத்து அழைத்துக் கொண்டு வந்திருப்பார்களோ என்ற நினைவே முக்கியமாக அவர்களது மனதில் தோன்றித் தோன்றி மறைந்தது. அவ்வாறு அவர்கள் திகிலடைந்து பலவித எண்ணங்களைக் கொண்டு குழப்பமுற்றிருந்த நிலைமையில் நீலலோசனியம்மாள் நிச்சலனமான முகத்தோற்றத் தோடு உள்ளே நுழைந்து மற்ற எவர் பக்கமும் தனது முகத்தைத் திருப்பாமல் நேராக ரமாமணியம்மாளண்டை போய், "அம்மா! ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து நான் உன்னோடு தனியாகப் பேச வேண்டும். உங்கள் போயிக்கு அந்தச் சங்கதி தெரியக் கூடாது. எழுந்து ஐந்து நிமிஷ நேரம் வெளித் தாழ்வாரத்திற்கு வா" என்றாள்.

அதைக் கேட்ட ரமாமணியம்மாள் இன்னதென்று விவரிக்க இயலாத பெருத்த மனவேதனையும், குலைநடுக்கமும் அடைந்தாள். அவளது கைகளும், கால்களும், உடம்பும் வெட வெடவென்று நடுங்க ஆரம்பித்தன. மனம் கட்டிலடங்காமல் தவித்தது. "இவள் குறிக்கும் முக்கியமான விஷயம் எதுவாக இருக்கும்? இவளுடைய முகத்தோற்றத்தையும், இவள் பேசும் மாதிரியையும் பார்த்தால் இவள் நம்மிடம் வைத்திருந்த நம்பிக்கையும், மதிப்பும், பிரியமும் அப்படியே இருப்பதாகவே தோன்றுகின்றன. அது போலீசாரைப் பற்றிய விஷயமாகத் தான் இருக்க வேண்டும். எழுந்து போய், இவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்டறியலாம்" என்று ரமாமணியம்மாள் தனக்குத் தானே எண்ணித் தீர்மானித்துக் கொண்டவளாய்

மறுமொழி எதையும் கூறாமல் மெதுவாகக் கட்டிலை விட்டிறங்கி நீலலோசனியம்மாளைப் பின் தொடர்ந்து வெளியில் சென்றாள். விஷயம் இன்னதென்பதை அறியாமல் மற்றவர்கள் பெருத்த வியப்பும் திகைப்பும் அடைந்து ஆவலே வடிவாகத் தவித்திருந் தனர். கூடத்திலிருந்து சென்ற நீலலோசனியம்மாளும், ரமாமணி யம்மாளும் அதற்கு வெளியில் இருந்த தாழ்வாரத்தை அடைந்தனர். பிறர் காதில் விழாதபடி மறைவாக இருந்து தாம் சம்பாஷிப்பதற்கு எந்த இடம் தகுதியானது என்று ஆராய்ந்து பார்ப்பவள் போல நீலலோசனியம்மாள் தனது முகத்தை நாற்புறங்களிலும் திருப்பி மூலை முடக்குகளை எல்லாம் பார்த்தாள். ஆஸ்பத்திரியின் சிப்பந்திகள் ஆங்காங்கு உட்கார்ந்து கொண்டும், அப்போதைக்கப்போது போய் வந்து கொண்டும் இருக்கவே, அதைக் கண்ட நீலலோசனியம்மாள், "நாம் கால் நாழிகை நேரம் தனியாக இருந்து ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும். அது பிறர் காதில் படக்கூடாத பரம ரகசியமான விஷயம். எங்கே பார்த்தாலும் மனிதர் இருக்கிறார்கள்" என்று ரமாமணியம்மாளிடம் கூறியபடியே, அந்தத் தாழ்வாரத்தின் வழியாகச் சிறிது தூரம் அப்பால் போய் அவ்விடத்தில் இருந்த ஓர் அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டு மறுபடி திரும்பி ரமாமணி யம்மாளிடம் வந்து; "அம்மா! அதோ இருக்கிறதே அறை, அதற்குள் யாருமில்லை. அங்கே போவோம் வா" என்றாள். ரமாமணியம்மாள் அதற்கிணங்கி, நீலலோசனியம்மாளைப் பின்பற்றிச் செல்ல, அடுத்த நிமிஷம் அவர்கள் இருவரும் அந்த அறைக்குள் சென்றனர்.

அந்த அறையின் ஜன்னல் கதவுகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன ஆனாலும், வாசற்படியின் வழியாகவும், கூரையில் வைக்கப் பட்டிருந்த கண்ணாடியின் வழியாகவும் வந்த வெளிச்சத்தினால் அதன் உள்பக்கத்தில் போதுமான பிரகாசம் இருந்தது. அந்த அறையின் ஒரு பக்கத்து ஜன்னலோரமாய் ஒரு விசிப்பலகை போடப்பட்டிருந்தது. அந்த இடம் நன்றாகப் பெருக்கித் தண்ணீரினால் அலம்பப்பட்டிருந்தமையால், அறையின் எல்லா பாகமும் மகா பரிசுத்தமாகக் காணப்பட்டது. அவர்கள் இருவரும்

அந்த அறைக்குள் நுழைந்தவுடனே நீலலோசனியம்மாள், "இந்த ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் நோயாளிகளைப் பார்க்க வருவோர் உட்கார்ந்து கொண்டிருப்பதற்காக இந்த அறை ஏற்படுத்தப் பட்டிருக்கும் போலிருக்கிறது. நாம் இந்தப் பலகையின் மேல் உட்கார்ந்து பேசுவோம் வா. இப்படி உட்கார்ந்துகொள்" என்று கூறிய வண்ணம் வாசற்கதவை மூடி வைத்துவிட்டு வந்து பலகையின் நடுவில் உட்கார்ந்து கொண்டு, தனக்குப் பக்கமாய் உட்கார்ந்து கொள்ளும்படி ரமாமணியம்மாளை அழைக்க, அவள் அப்படியே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அதற்குள் ரமாமணியம்மாளின் மனம் சிறிது துணிவையும் தனது இயற்கை நிலைமையையும் அடைந்திருந்தது ஆகையால் அவள் மற்றவளை நோக்கி, "நீங்கள் கும்பகோணத்திற்கே போக வில்லையா என்ன? போலீசார் உங்களைத் தடுத்து விட்டார்களா" என்றாள்.

நீலலோசனியம்மாள், "இல்லையம்மா! நான் போலீசாருடைய கண்ணில் படவே இல்லை. அன்றைய தினம் இரவு வண்டியி லேயே புறப்பட்டு நான் கும்பகோணம் போய் நேற்று மத்தியானம் மாசிலாமணிப் பிள்ளையினுடைய வீட்டுக்குப் போய் அவரைப் பார்த்து உன் கடிதத்தையும் அவரிடம் கொடுத்தேன். அவர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு, என்னை நிரம்பவும் மரியாதையாக நடத்தி உபசரித்து அவருடைய வீட்டின் மூன்றாவது கட்டிலுள்ள ஓர் அறையை எனக்குக் காட்டி அங்கே என்னை இருக்கச் செய்தார். நாங்கள் இருவரும் அங்கே போனவுடன் உன்னைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தபோது, உன் புருஷர் இறந்து போய் விட்டதாகவும், நீ இப்போது விதவை என்றும் அவர் சொன்னார். அதைக் கேட்டவுடன், நான் கனவு தான் காண்கிறேனோ என்று என் மனம் பிரமித்துப் போய்விட்டது. நான் உடனே அவர் சொன்னதை மறுத்துப் பேசி, "ரமாமணியம் மாளின் புருஷர் அவளோடு பட்டணம் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாரே; அவளை விதவை என்று சொல்லுகிறீர்களே" என்றேன். அவர் உடனே சிரித்து என்னைப் புரளி செய்ததோடு, நீ உண்மையில் விதவை என்றே அவர் உறுதியாகச் சொன்னார்.

அதைக் கேட்டவுடன் எனக்கு நிரம்பவும் விசனமும் கவலையும் உண்டாகி விட்டன. அவர் சொன்னதற்கும் நீங்கள் என்னிடம் சொன்னதற்கும் ஒன்றுக்கொன்று முற்றிலும் விரோதமாக இருந்தது ஆகையால், நான் என்னிடமிருந்து நம்முடைய உடன்படிக்கைப் பத்திரத்தை எடுத்து அவரிடம் காட்டினேன்" என்றாள்.

அதைக் கேட்ட ரமாமணியம்மாளுக்கு இடி விழுந்தது போல ஆய்விட்டது. "ஆகா! மோசம் வந்துவிட்டதே! பக்கிரியா பிள்ளையின் விஷயம் மாசிலாமணிக்குத் தெரிந்து போய் விட்டதே" என்ற பெருத்த திகிலும், கலவரமும், குலை நடுக்கமும் எழுந்து அவளைக் கப்பிக்கொண்டன. அவளது முகம் உடனே மாறி விகாரப்பட்டுப் போய்விட்டது. ஆயினும் தான் ஏதாவது தந்திரம் செய்து, அந்த விபரீதமான நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டவளாய் உடனே ஆத்திரமாகப் பேசத்தொடங்கி, "ஆமம்மா! அவர் சொன்னது நிஜமான சங்கதி தானே, அதைக் கேட்டு நீங்கள் பிரமிப் படைய வேண்டிய காரணம் என்ன? நாங்கள் சொன்னதற்கும், அவர் சொன்னதற்கும் என்ன விரோதமிருக்கிறது? என் புருஷர் இந்த ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதாக உங்களுக்கு யார் சொன்னது?" என்று துணிவாகக் கூறினாள்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் அப்படியே ஸ்தம்பித்துப் போய், "என்ன அம்மா! என்னை நீங்கள் பைத்தியக்காரி ஆக்கி விடுவீர்கள் போலிருக்கிறதே. உன் தாயார், இந்தப் பக்கிரியா பிள்ளை தங்களுடைய மருமகப்பிள்ளை என்று உனக்கெதிரில் தானே சொன்னாள். அதுவுமில்லாமல் நாம் எழுதி ரிஜிஸ்டர் செய்த பத்திரத்தில் பக்கிரியா பிள்ளை உன்னுடைய புருஷரென்று எழுதியிருக்கிறோமே. அதை சப் ரிஜிஸ்டிரார் உங்களுக்குப் படித்துக் காட்டித்தானே ரிஜிஸ்டர் செய்தார். அப்போது அதை நீங்கள் ஒப்புக் கொண்டிருந்தீர்களே" என்றாள்.

உடனே ரமாமணியம்மாள் மிகுந்த கோபமும் சிடு சிடுப்பும் காட்டி, "என்ன அம்மா? பைத்தியம் போல உளறுகிறீர்களே! இந்தப் பக்கிரியா பிள்ளை என் தகப்பனாருடைய தமக்கை குமாரர். அவருக்கு என் தகப்பனார் அம்மான். ஆனால், என்

தகப்பனாருக்கு அவர் மருமகன் தானே. அவரை என் தாயாரும் அதே முறைமைப்படி தானே குறிக்க வேண்டும். அவர்கள் ஒன்று சொன்னால் நீங்கள் அதை விபரீதமாக அர்த்தம் செய்து கொண்டு அதே மாதிரி பத்திரத்திலும் எழுதி விட்டீர்கள் போலிருக்கிறதே. எங்களுக்கு முன் சப் ரிஜிஸ்டிரார் அந்தப் பத்திரத்தைப் படித்தது உண்மை ஆனாலும், எங்களுடைய தேக அவஸ்தையினால், நாங்கள் அதை அவ்வளவாகக் கவனித்துக் கேட்கவே இல்லை. நீங்கள் எழுதியிருப்பது சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை ஒன்றையே நாங்கள் உறுதியாக வைத்திருந்தோம் ஆகையால், உறவு முறைமை முதலிய சில்லரை விஷயங்களை எல்லாம் நாங்கள் கவனித்துக் கேட்கவே இல்லை. நீங்கள் ஏதோ தாறுமாறாக எழுதி வைத்து எனக்கு இப்படிப்பட்ட தலை குனிவை உண்டாக்கி விட்டீர்களே. இது உங்களுக்கு நியாயந்தானா?" என்றாள்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் நிரம்பவும் தத்தளித்தவளாய், "அடடா! அப்படியா சங்கதி! ஆகா! நான் பெருத்த தவறை அல்லவா செய்து விட்டேன்! இருந்தாலும் பாதகமில்லையம்மா! நான் செய்த தவறை நான் திருத்தி, மாசிலாமணிப் பிள்ளை முதலியோர் உன்னைப் பற்றி வித்தியாசமான எண்ணம் கொள்ளாதபடி நான் செய்கிறேன். நீ என்மேல் கோபித்துக் கொள்ள வேண்டாம். இந்தப் பக்கிரியா பிள்ளை கும்பேசுவரன் கோவிலில் தவில் அடிக்கும் உத்தியோகம் பார்ப்பவர் என்று மாசிலாமணிப் பிள்ளை என்னிடம் சொன்னார். அதன் பிறகு நான் இங்கே வந்து சமாசாரப் பத்திரிகை ஒன்றை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதிலும், அவர் தவில்காரர் என்று கண்டிருக்கிறது. அவர் உன்னுடைய அத்தை மகன் என்று நீயே இப்போது ஒப்புக் கொண்டாய் ஆகவே, நீங்கள் மேளக்கார ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது. நான் உயர்வான வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவள். நான் உங்களுடைய சவரக்ஷணையில் இருப்பது கூடாத காரியம். ஆகவே, நான் ஒரு வக்கீலைக் கொண்டு வேறே ஒரு பத்திரம் தயார் செய்து, அதன் மூலமாய் நம்முடைய ஒப்பந்தப் பத்திரத்தை ரத்து செய்து, என்னுடைய

சொத்து முழுதையும் கும்பேசுவர சுவாமிக்கு எழுதி வைத்து, மாசிலாமணிப் பிள்ளையைத் தர்மகர்த்தாவாக நியமித்து எல்லா வற்றையும் அவரிடம் ஒப்படைக்கப் போகிறேன். மாசிலாமணிப் பிள்ளைக்கு வேண்டிய வக்கீல் ஒருவர் மயிலாப்பூரில் இருக்கிறாராம். அவருக்கு மாசிலாமணிப் பிள்ளை இது விஷயமாய் ஒரு கைக்கடிதம் கொடுத்திருக்கிறார். இப்போது நான் அங்கே தான் போகிறேன். அதற்கு முன் இங்கே வந்து என் உத்தேசத்தை உன்னிடம் வெளியிட்டு விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றாள்.

அதைக் கேட்ட ரமாமணியின் மனம் விவரிக்க இயலாதபடி தவித்தது. நீலலோசனியம்மாளுடைய ஐந்து லட்சம் ரூபாயைத் தாம் அபகரிக்க எண்ணிய எண்ணம் பலிக்காமல் போய் விட்டதே என்ற ஏமாற்றமும், துக்கமும் எழுந்து அவளது மனதில் பெருத்த ஆத்திரத்தையும், கோபத்தையும் உண்டாக்கின. தங்களுக்கு வர இருந்த அபார சம்பத்தை மாசிலாமணி தன் மேல் திருப்பிக் கொள்ளப் போகிறானே என்ற பொறாமையும், வயிற்றெரிச்சலும் பிரம்மாண்டமாக மூண்டெழுந்தன. அடக்க இயலாத கோபமும், ஆவேசமும், அவளது மனத்தில் பொங்கி எழுந்தன. தான் அதற்கு மேல் நீலலோசனியம்மாளை ஏமாற்ற முடியாது என்ற விஷயமும் அவளது மனதிற்கு நிச்சயமாகப் பட்டுவிட்டது. அவள் கடைசியாக நீலலோசனியம்மாளை நோக்கி, "ஓகோ! அப்படியா சங்கதி! மாசிலாமணிப் பிள்ளை எல்லாச் சொத்தையும் தம் பேரில் எழுதிக் கொள்ளப் போகிறாரோ! சரிதான் சரிதான். இப்போது தான் உண்மை தெரிந்தது. அவர் வக்கீலுக்கு என்ன எழுதி இருக்கிறார்? என்னையும் பக்கிரியா பிள்ளையையும் சம்பந்தப்படுத்தி கடிதத்தில் ஏதாவது தாறுமாறாக எழுதி இருக்கிறாரோ என்னவோ! இப்படி எல்லாம் அவர் வக்கீலிடமும் மற்றவரிடமும் தாறுமாறாக என்னைப்பற்றி அவதூறாகப் பேசும்படி செய்தது நீங்கள் அல்லவா?" என்று கூறுனாள்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் நிரம்பவும் சமாதானமாகப் பேசத் தொடங்கி, "அம்மா! கோபித்துக் கொள்ளாதே. மாசிலாமணிப் பிள்ளை வக்கீலுக்கு எழுதிய கடிதம் இதோ

இருக்கிறது. அதை நான் தருகிறேன். இதை நீ பிரித்துப் படித்துப் பார். உன்னையும் பக்கிரியா பிள்ளையையும் பற்றி அவர் ஏதாவது அவதூறாக எழுதி இருந்தால், அந்தப் பாகத்தை மாத்திரம் நான் அடித்து விட்டு, மறுபடி கடிதத்தை வேறே உறையில் போட்டு வக்கீலிடம் கொண்டு போய்க் கொடுக்கிறேன்" என்று கூறிய வண்ணம் தனது மடிசஞ்சியை அவிழ்த்து அதற்குள் இருந்த கடிதத்தை எடுத்து அதன் உறையைக் கிழித்து உள்ளே இருந்த கடிதத்தை எடுத்து ரமாமணியம்மாளிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிய ரமாமணியம்மாள் அந்த எழுத்து மாசிலாமணியின் கையால் எழுதப்பட்டது தான் என்பதை உடனே நிச்சயித்துக் கொண்டு அதைப் படிக்கத் தொடங்கினாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

எனது அரிய நண்பரான ம-ா-ா-ஸ்ரீ சிவசிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு கும்பகோணம் மாசிலாமணி அநேக சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுதும் விக்ஞாபனம். உபய க்ஷேமம். சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளியான ஒரு விநோத சம்பவத்தை நீங்கள் படித்தறிந்து கொண்டிருக்கலாம். எங்கள் ஊர் மனிதர்கள் சிலர் கோமளேசுவரன் பேட்டைக்கு வந்திருந்ததாகவும், அவ்விடத்தில் அவர்களுக்கு அங்கஹீனம் நடந்து போனதாகவும், அவர்கள் சென்னை ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் நீங்கள் படித்திருக்கலாம். அவர்களுள் மூக்கறுபட்டவளான ரமாமணியம்மாள் யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்காதென்று நினைக்கிறேன். என் வீட்டிற்கெதிரில் இருந்த குடிகார வக்கீலுக்கு இரண்டாவது சம்சாரமாக வந்து வாய்த்த புண்ணியவதி அவள் தான். அவள் தன் புருஷனை விஷம் வைத்துக் கொன்றதாக ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள். அதை நான் அப்போது பொய் என்று நினைத்தேன். இப்போது அவளுடைய நடத்தைகளைப் பார்க்கப் பார்க்க, அவள் விஷம் வைத்தது உண்மையாக இருக்கலாம் என்றே நினைக்கிறேன். அவள் இப்போது சென்னையில் யாருக்கோ ஏதோ கெடுதல் செய்ய உத்தேசித்து அங்கே வந்ததாகத் தெரிகிறது. அது அவளுக்கும் அவளைச் சேர்ந்த மற்றவருக்கும் வந்து வாய்த்தது போலிருக்கிறது. ஈசுவரன்

அவளை இப்படி மகா கொடுமையாகத் தண்டித்திருந்தும், அந்தத் தண்டனையை அனுபவித்திருக்கும் போதே அவள் இந்தக் கடிதம் கொண்டு வரும் அம்மாள் விஷயத்தில் ஒரு பெருத்த மோசம் செய்திருக்கிறாள். இந்த ஊரில் உள்ள ஒரு தவில்காரப் பையனை அவள் தன்னுடைய நெருங்கிய பந்து என்று பொய் சொல்லித் தங்களோடு கூடவே வைத்துக் கொண்டிருப்பதோடு இந்த அம்மாளுடைய சொத்துக்களை எல்லாம் தங்கள் பேருக்கு எழுதிக் கொண்டிருக்கிறாள். இந்த அம்மாளுடைய கைவசத்தில் இருக்கும் பத்திரத்தை நீங்கள் வாங்கிப் பார்த்தால், விவரம் உடனே விளங்கி விடும். உயர்ந்த ஜாதியில் பிறந்திருந்தும், இப்படி துராசாரமுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் அவர்களுடன் இந்த அம்மாள் இனி எவ்விதச் சம்பந்தமும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. தன்னுடைய சொத்துக்களை எல்லாம் இந்த அம்மாள் கும்பேசுவர சுவாமிக்கு எழுதிவைத்து, என்னையும், என் சந்ததியாரையும் சாசுவதமான தர்மகர்த்தாக்களாக நியமிக்க விரும்புகிறார்கள். பழைய பத்திரத்தையும் உடனே ரத்து செய்ய வேண்டும். அதற்குத் தகுந்தபடி தாங்கள் ஒரு புதிய பத்திரம் எழுதி அதை உடனே ரிஜிஸ்டர் செய்து வைக்கக் கோருகிறேன். அதுவுமன்றி, இந்த அம்மாள் பணம் போட்டிருக்கும் செட்டியாருக்கும் உடனே ஒரு நோட்டீஸ் அனுப்பி பணத்தை வட்டியும் முதலுமாகச் சேர்த்து உடனே என்னிடம் ஒப்படைக்குமாறு எழுதக் கோருகிறேன். இதற்குத் தங்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமோ அதை இந்த அம்மாள் உடனே கொடுப்பார்கள். காரியம் திருப்திகரமாய் முடிந்து போகுமானால், நானும் தங்களுக்குத் தக்க சன்மானம் ஏதாவது அனுப்பி வைக்கிறேன். தயவு செய்து இந்த வேலையைத் தாங்கள் நன்றாகக் கவனித்துப் பின்னால் எவ்விதச் சிக்கலும் ஏற்படாமல் முடித்துவைக்கக் கோருகிறேன். மற்றவை பின்னால்,

இங்ஙனம் தங்கள் விதேயன்,
***மாசிலாமணி***

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கும் போதே ரமாமணியம்மாளின் மனதில் ரௌத்திராகாரமான கோபம் பொங்கி எழுந்தது. இரணியனது குடலைப் பிடுங்கி மாலையாக அணிந்து

கொண்ட நரசிம்மாவதாரம் போல, அவள் தன்னை மறந்து வீராவேசம் கொண்டு கர்ச்சித்து அந்தக் கடிதத்தைக் கீழே வீசி எறிந்து அதை மிகுந்த ஆத்திரத்தோடு தனது காலால் உதைத்தவளாய், "ஆகா! அந்த மாசிலாமணிப் பயலுடைய சேதி எனக்குத் தெரியாதென்று நினைத்து என்னை இப்படித் தாறுமாறாக தூஷிக்கிறான் போலிருக்கிறது! அவன் சொன்னதைக் கேட்டு நீங்கள் எங்களை அயோக்கியர்கள் என்றும், அவனை மகா யோக்கியன் என்றும் நினைத்து விட்டீர்கள் போலிருக்கிறது. உங்களுடைய பணம் யாருக்கு வேண்டும்? நாங்களாக வந்து உங்களிடம் பணத்தை எல்லாம் எங்கள் பேரில் எழுதி வையுங்கள் என்று கேட்கவில்லையே. நீங்களே வந்து எழுதிக் கொடுத்தது தானே. எங்களுக்குச் சாப்பாட்டுக்குக் கதியில்லாமல் போகவில்லை. உங்கள் பணம் எங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் பத்திரத்தை ரத்து செய்து கொள்ளலாம். ஆனால், நீங்கள் அந்த நொண்டியின் மெத்தை வீட்டையும், அவனுடைய சொத்துக்களையும் பார்த்து விட்டு மயங்கிப் போய், அவன் மகா யோக்கியன் என்றும், பரிசுத்தவான் என்றும் நினைத்து ஏமாறிப் போனீர்களே; அது தான் ஆச்சரியமாக இருக்கிறது. அவனுடைய அண்ணன் சட்டைநாத பிள்ளை என்று ஒருவன் இருந்தான். அவன் லஞ்சம் வாங்கி ஊரார் சொத்தை எல்லாம் கொள்ளையடித்து ஏராளமான சொத்துக்களைச் சேர்த்து வைத்து கடைசியில் பத்து வருஷம் தண்டனை அடைந்தான். அவனோடு இவனுக்கும் ஒரு வருஷ தண்டனை கிடைத்தது. இப்போதும் போலீசார் தினம் தினம் வந்து இவனை ஆஜர் பார்த்துப் போகிறார்கள். இவனும், இப்போது ஜெயிலில் இருக்கும் இடும்பன் சேர்வைகாரனும், எங்கள் மூக்கு காதுகளை அறுத்ததற்காகச் சிறைபட்டிருக்கும் ஆள்களில் சிலரும் சேர்ந்து தஞ்சாவூர் ஜெயிலிலிருந்து அவனுடைய அண்ணனை விடுவித்துக் கொண்டு வந்து கும்பகோணத்தில் எங்கேயோ ஒளித்து வைத்திருக்கிறார்கள். ஆகா! அவர்கள் அவனை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதை விசாரித்துத் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டேனே! தெரிந்து கொண்டிருந்தால், இப்போது அவர்களை எல்லாம் சந்தியில் இழுத்து விட்டிருப்பேனே. இப்போது இந்த மன்னார்குடியாரை மூளிப்படுத்த வேண்டும் என்று

இவர்களை அனுப்பியவனும் அந்த மாசிலாமணி தானே. இடும்பன் சேர்வைகாரன் உங்களுடைய மோதிரத்தைத் திருடி ஜெயிலுக்குப் போனமையால், அவனுடைய ஆள்கள் வந்து ஆள்மாறாட்டமாக எங்களை இந்தக் கொடுமைக்கு ஆளாக்கி விட்டார்கள். இதற்கு முன் அந்த மாசிலாமணியும் இடும்பன் சேர்வைகாரனும் சேர்ந்து, உப்பிலியப்பன் கோவிலில் உள்ள ஒரு பாம்பாட்டியைக் கொண்டு ஒரு பெட்டிக்குள் நாகப் பாம்புகளை வைத்து மன்னார் குடி திகம்பரசாமியாருக்கு அனுப்பி அவரைக் கொன்றார்கள். அதைக் கொண்டு போய்க் கொடுத்தவன் இந்த இடும்பன் சேர்வை காரனே. இதற்குச் சில தினங்களுக்கு முன், இந்த ஊர்க் கலெக்டருடைய மகளான மனோன்மணியை இதே இடும்பனும், இதே ஆள்களும் வந்து பலவந்தமாக அபகரித்து வரும்படி செய்த வனும் அந்த மாசிலாமணியே. அவர்கள் ஆள்மாறாட்டமாக வேறே யாரோ ஒரு பெண்ணை மாசிலாமணியிடம் கொண்டு போய்விட்டார்கள். அவளை அவன் இரண்டு மூன்று தினங்கள் வைத்து கற்பழித்து, இரவோடிரவாய் எங்கேயோ கொண்டு போய் விட்டுவிட எண்ணி இருந்தான். அப்போது நாங்கள் புறப்பட்டு இந்த ஊருக்கு வந்துவிட்டோம் ஆகையால், அவன் அந்தப் பெண்ணை என்ன செய்தான் என்பது தெரியவில்லை. இப்படி எல்லாம் அந்த மாசிலாமணி இது வரைக்கும் செய்திருக்கும் மகா கொடிய அட்டூழியங்களைச் சொல்லப் போனால், அது ஒரு பெரிய பாரத கதை போல இருக்கும். அவனைப் போல அயோக்கியனும், துஷ்டனும், பஞ்சமா பாதகத்தில் இறங்கக் கூடியவனும், இந்த உலகத்தில் இதுவரையில் பிறந்தே இருக்க மாட்டான்; இனி பிறக்கப் போவதுமில்லை. அப்படிப்பட்ட பரம சண்டாளனை நீங்கள் உங்கள் சொத்துக்குத் தர்மகர்த்தாவாகப் பொறுக்கி எடுத்தீர்களே. அது தான் எனக்குப் பரம சந்தோஷமாக இருக்கிறது. இப்படிப்பட்ட அற்பபுத்தியுடைய அந்தக் கொலை பாதகன், நான் என் புருஷனுக்கு விஷம் வைத்ததாகச் சொல்லுகிறான் அல்லவா. அது உண்மையாகவே இருக்கட்டும். அதற்கு விஷம் வாங்கிக் கொடுத்தவன் அவன் தான் என்று நான் சொல்லுகிறேன்" என்று நிரம்பவும் ஆத்திரமாகவும் பதைபதைப் பாகவும் ஓங்கிய குரலிலும் கூறி நிறுத்தினாள்.

அந்த வசை மொழிகளைக் கேட்ட நீலலோசனியம்மாள் குன்றிப் போனதன்றி நிரம்பவும் அஞ்சி நடுங்கி, "அம்மா! இது ஆஸ்பத்திரி; யாராவது வந்து கோபித்துக் கொள்வார்கள். பலமாய்க் கூச்ச லிடாமல் பேசம்மா" என்றாள்.

அவள் அவ்வாறு பேசி வாய் மூடுமுன், அந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு அந்த ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டரும், இரண்டாவது டாக்டர் முதலியாரும் திடீரென்று தோன்றினார்கள். அவர்களைக் கண்டவுடன் அங்கிருந்த இருவரும் சடக்கென்று எழுந்து வெட்கித் தலைகுனிந்து நின்றார்கள். ரமாமணியம்மாளால் எறியப்பட்ட கடிதத்தை நீலலோசனியம் மாள் உடனே எடுத்துத் தனது மடியில் சொருகிக் கொண்டாள். அங்கே வந்த பெரிய டாக்டர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் இந்த அறைக்குள் ஏன் வந்தீர்கள்? இதற்குள் யாரையும் விடாமல் பார்த்துக் கொள்ளும்படி ஒரு சேவகனை வாசலில் வைத்திருந் தேனே! அவன் உங்களைத் தடுக்கவில்லையா?" என்றார்.

நீலலோசனியம்மாள், "யாரும் தடுக்கவில்லையே! இந்த அம்மாளோடு நான் ரகசியமான சில குடும்ப விஷயங்கள் பேச வேண்டியிருந்தது. இந்த அறை காலியாக இருக்கிறதே என்று இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன். யாரும் இங்கே வரக் கூடாதென்றால், நாங்கள் இதோ வெளியில் போய்விடுகிறோம்" என்றாள்.

உடனே டாக்டர் துரை, "நீங்கள் இந்த அறைக்குள் வந்து ஏதாவது பேசினீர்களா?" என்றார்.

நீலலோசனியம்மாள், "ஆம், கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந் தோம்" என்றாள்.

டாக்டர் துரை ஒருவாறு கோபங் கொண்டு, "ஆ! பேசினீர்களா? எங்கே இருந்து பேசினீர்கள்?" என்றார்.

நீலலோசனியம்மாள், "இந்த விசிப்பலகையின் நடுவில் உட்கார்ந்து பேசினோம். ஏன், நாங்கள் ஏதாவது தவறு செய்து விட்டோமா?" என்று நிரம்பவும் விநயமாகக் கேட்டாள்.

டாக்டர் துரை, "அடாடா! என்ன காரியம் செய்து விட்டீர்கள்! வாசலில் காவல் காத்திருந்த அந்த மூடன் எங்கே போனான் என்பது தெரியவில்லையே! ஒரு முக்கியமான காரியத்தை உத்தேசித்து அல்லவா நாங்கள் இந்த அறையைக் காலி செய்து, பலகையைப் போட்டு வைத்திருந்தோம். ஒரு பெரிய குற்றவாளி நோய் கொண்டு இந்த ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டிருக்கி றார். அவர் தம்முடைய குற்றத்தைத் தாமே ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறார். அவருடைய மனதில் முக்கியமான பல ரகசியங்களை அவர் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார். அவரைக் கொன்றாலும், அவர் அவைகளை வெளியிட மாட்டார் ஆதலால், எப்படியாவது தந்திரம் செய்து ரகசியங்களை வெளிப்படுத்தும்படி கவர்னர் துரை உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்தச் சமயத்தில் கல்கத்தாவிலிருந்து மிஸ்டர் வெல்டன் என்று ஒரு பிரபல டாக்டர் வந்திருக்கிறார். அவர் ஒரு தந்திரம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார். அந்தக் குற்றவாளிக்கு அவர் உள்ளுக்கு ஒருவித மருந்து கொடுத்திருக்கிறார். அந்த மருந்து அவரால் தாங்க முடியாத படி பித்தத்தைக் கிளப்பிவிடும். அதுவுமன்றி, அந்த மருந்தில் மயக்க மருந்தும் கலந்திருப்பதால், அந்தக் குற்றவாளி உடனே மயக்கத்தில் ஆழ்ந்து போவார். பித்தப் பெருக்கினால் அவருடைய மூளையில் பதிந்து கிடக்கும் விஷயங்களை அவர் தாறுமாறாகப் பிதற்றிக் கொண்டே இருப்பார். அந்தப் பிதற்றலை அப்படியே கிராமபோன் எந்திரத்தில் பிடித்து, அதை வைத்து ஆராய்ச்சி செய்து கூடிய வரையில் உண்மைகளைக் கண்டு பிடித்து விடலாம் என்று, அந்த வெல்டன் துரை சொல்லி அதற்காக இந்த அறையில் உள்ள பலகையில் மேற்படி குற்றவாளியைப் படுக்க வைக்கிறதென்று ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் குற்றவாளிக்கு உள்ளுக்கு மருந்து கொடுத்திருக்கிறோம். அவர் பிதற்ற ஆரம்பித்திருக்கிறார். அவரைக் கொண்டு வந்து இந்தப் பலகையில் படுக்க வைக்க வந்தோம். அதற்குள் நீங்கள் யாருக்கும் தெரியாமல் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உட்கார்ந்திருந்தீர்களே, உங்களுக்குப் பின் பக்கத்தில் ஜன்னலில் அதோ கிராமபோன் யந்திரம் வைக்கப் பட்டிருக்கிறதே. அதை நீங்கள் பார்க்கவில்லையா?" என்றார்.

அதைக் கேட்ட நீலலோசனியம்மாள் தனது கைகளைப் பிசைந்து கொண்டு தவித்து, "துரைகளே! நாங்கள் அதை அவ்வளவாகக் கவனிக்கவில்லை; அதை நாங்கள் கையால் தொடக் கூட இல்லை" என்றாள்.

பெரிய டாக்டர், "அடெ பயித்தியமே! நீங்கள் பார்க்காவிட்டால் என்ன, அல்லது, அதைத் தொடாவிட்டால் என்ன? நீங்கள் பேசிய தெல்லாம் அதற்குள் பதிந்து போயிருக்குமே என்றல்லவா நான் கவலைப்படுகிறேன்" என்று கூறினார்.

நீலலோசனியம்மாள், "ஐயா! நாங்கள் எங்களுடைய குடும்ப ரகசியங்களை எல்லாம் பேசிக் கொண்டிருந்தோம். அவைகள் எல் லாம் பதிந்து போயிருக்கின்றனவா என்று பாருங்கள்" என்றாள்.

உடனே துரை ஜன்னலின் மேல் வைக்கப்பட்டிருந்த கிராமபோன் மிஷினண்டை போய் அதை முடுக்கிவிட்டார். உடனே அது பேச ஆரம்பித்தது. முதலில் ரமாமணியம்மாள், "நீங்கள் கும்பகோணத்திற்கே போகவில்லையா? போலீசார் உங்களைத் தடுத்து விட்டார்களா?" என்று ஆரம்பித்த கேள்வியும் அதன் பிறகு அவர்களுக்குள் நடந்த சம்பாஷணைகளும், முடிவில் ரமாமணியம்மாள் மாசிலாமணியின் குற்றங்களை வெளியிட்ட தும் ஆகிய விவரங்களை யாவும் ஒன்று பாக்கியில்லாமல் கணீர் கணீர் என்று அதற்குள் இருந்து அப்படியே வெளியில் வந்தன. அதற்குள்ளிருந்து விபரீதமான விஷயங்களைக் கேட்ட பெரிய டாக்டர், இரண்டாவது டாக்டர் ஆகிய இருவரும் முற்றிலும் பிரமிப்ப டைந்து மூக்கில் விரலை வைத்து அப்படியே ஸ்தம்பித்து நின்றனர். நீலலோசனியம்மாள் தனது கைகளைப் பிசைந்து கொண்டு நிரம்பவும் தவித்துத் தத்தளித்து நடுநடுங்கி, "துரைகளே! இது மறைவான இடம் என்று நினைத்து நாங்கள் இங்கே வந்து எங்களுடைய குடும்ப விஷயங்களைப் பேசிவிட்டோம். இந்த மோசக்கார யந்திரம் அதை அப்படியே பிடித்து வைத்துக் கொண்டு பாடம் ஒப்புவிக்கிறதே! ஐயா! இந்த விஷயங்கள் வேறே யாருக்கும் தெரியக்கூடாது. இந்த விஷயங்கள் பதிந்திருக்கும் ஒரு தகட்டை மாத்திரம் தயவு செய்து உடைத்துப் போட்டு விடுங்கள். அதன் கிரயத்தை நான் கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

அந்தச் சமயத்தில் ரமாமணியம்மாளது நிலைமை இன்பமும் துன்பமும் கலந்த பரமசங்கடமான நிலைமையாக இருந்தது. தன் விஷயத்தில் வஞ்சகமாக நடந்து கொண்டவனான மாசிலாமணி யின் துஷ்டச் செய்கைகள் எல்லோருக்கும் தெரிந்து போகும்படி யான நிலைமை ஏற்பட்டுப் போனது அவளுக்கு ஒரு விதத்தில் இன்பகரமாகத் தோன்றியது ஆனாலும், அதிலிருந்து தன்னுடைய துர்நடத்தைகள் வெளியாகிவிடுமோ என்ற திகிலும் கவலையும் இன்னொரு புறத்தில் எழுந்து வருத்தலாயின. ஆகவே, தான் என்ன சொல்வதென்பதை அறியாதவளாய் அவள் வெட்கித் தலை குனிந்து நின்றாள்.

உடனே பெரிய டாக்டர் அந்த இரண்டு ஸ்திரீகளையும் நோக்கி, "சரி; நேரமாகிறது. நீங்கள் போகலாம். மிஸ்டர் வெல்டன் துரையின் தந்திரம் கைமேல் பலன் கொடுத்து விட்டது! பேஷ்! பேஷ்! பலே! அவருடைய மூளை அற்புதமான மூளை. இந்த யந்திரம் சர்க்கார் பணத்தினால் வாங்கப்பட்டது ஆகையால் இதை உடைக்க எங்களுக்கு அதிகாரமில்லை. இதைப்பற்றி நாங்கள் மேல் அதிகாரிகளுக்கு எழுதி அவர்களுடைய உத்தரவின்படி நடந்து கொள்ளுகிறோம். நீங்கள் போகும் முன் ஒரு காரியம் செய்யுங்கள். மேல் அதிகாரியிடத்திலிருந்து உத்தரவு வரும் பட்சத்தில், இந்த தகட்டின் கிரயத்தை நீங்கள் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு ஒரு வாக்குமூலம் எழுதி வையுங்கள்" என்றார். அவர்கள் அதற்கிணங்கி வாக்கு மூலம் கொடுத்துக் கையெழுத்துச் செய்தனர்.

பிறகு நீலலோசனியம்மாளும், ரமாமணியம்மாளும் அந்த அறையில் இருந்து வெளியில் வந்தனர். நீலலோசனியம்மாள் மற்றவளைப் பார்த்து, "அம்மா! நீ போய்ப் படுத்துக்கொள்; நான் இப்போது நேராக வக்கீலிடம் போகிறேன். போய் அவரிடம் இந்தக் கடிதத்தையும் கொடுத்து, நீ மாசிலாமணிப் பிள்ளையைப் பற்றிச் சொன்ன விவரங்களையும் தெரிவித்து, அவர் சொல்லும் யோசனைப்படி நடந்து கொள்ளுகிறேன். என்னுடைய சொத்துக் களை எல்லாம் மாசிலாமணிப் பிள்ளை பேரில் எழுதி வைத்து விடுவேனோ என்ற கவலையையே நீ கொள்ள வேண்டாம். என் சொத்து நியாயமான வழியில் வந்த சொத்து. அது அக்கிரமஸ்தர்

களிடம் ஒருநாளும் போய்ச் சேராது" என்று கூறிய பின் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டாள்.

★ ★ ★

அதே காலத்தில் இடும்பன் சேர்வைகாரன் என்ன செய்து கொண்டிருந்தான் என்பதை நாம் சிறிது கவனிப்போம். அன்றைய தினம் காலையில் கும்பகோணத்திலிருந்து மாசிலாமணி எப்படியும் வந்து சேருவான் அல்லது பணத்தையாவது அனுப்பி வைப்பான் என்று அவன் நிச்சயமாக எதிர்பார்த்து ஆவலே வடிவாக இருந்து நிமிஷத்திற்கு நிமிஷம் வேதனை அடைந்து கொண்டிருந்தான். தனது ஆட்கள் வெள்ளிக்கிழமை இரவு, தான் கூறியபடி வேலாயுதம் பிள்ளை வீட்டாரை அங்கஹீனப் படுத்தி விட்டார்கள் என்றே அவன் நினைத்திருந்தவன் ஆதலால், அந்த விஷயம் மாசிலாமணிக்கு மிகுந்த திருப்தியையும் களிப்பையும் அளித்திருக்கும் என்றும், மாசிலாமணி தன்னை எப்படியும் கைவிடாமல் காப்பாற்றுவான் என்றும் அவன் உறுதியாக எண்ணி இருந்தான். வியாழக்கிழமை காலை ஆறு மணிக்கு ரயில் வண்டி எழும்பூருக்கு வருகிறதாகையால், காலை எட்டு, அல்லது, ஒன்பது மணிக்குள் தான் ஏதாவது நல்ல செய்தியைக் கேட்கலாம் என்று அவன் ஆவலோடு எதிர்பார்த்து எப்போது மணி ஆகும் ஆகும் என்று பதைபதைத்திருந்தான். காலை எட்டுமணி, ஒன்பதுமணி, பத்துமணியும் ஆயிற்று. எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. ஆகவே இடும்பன் சேர்வைகாரன் நெருப்புத் தணல்களின் மேல் நிற்பவன் போலத் தத்தளித்து இருக்கை கொள்ளாமல் சஞ்சலக் கடலில் ஆழ்ந்திருந்த சமயத்தில், அவன் இருந்த சிறைச்சாலையின் கதவு திறக்கப்பட்டது. இரண்டு ஜெவான்கள் உள்ளே வந்து, "சேர்வைகாரரே! போலீஸ் ஸ்டேஷனில் விசாரணை நடக்கிறது. சப் இன்ஸ்பெக்டர் உம்மை அழைத்துவரச் சொன்னார். எழுந்து வாரும்" என்றனர். உடனே இடும்பன் சேர்வைகாரனது மனம் பொங்கி எழுந்தது. கும்பகோணத்தில் இருந்து உதவி வந்திருப்பத னால் தான், தன்னை விடுவிப்பதற்காக சப் இன்ஸ்பெக்டர் தன்னை அழைத்துவர ஆட்களை அனுப்பி இருக்கிறார் என்று அவன் தனக்குள் எண்ணிக் கொண்டான். மனங் கொள்ளாத

அளவற்ற ஆனந்தமும் பூரிப்பும் தோன்றி அவனை மெய்ம் மறக்கச் செய்தன. அவன் நிரம்பவும் துடியாக எழுந்து வெளியில் வர ஆரம்பித்தான். உடனே ஜெவான்கள் அவனது கைகளைச் சேர்த்து விலங்கிட்டு அவனை அழைத்துக் கொண்டு வெளியில் சென்றனர். சென்றவர் பல தெருக்களின் வழியாக இடும்பன் சேர்வைகாரனை நடத்தி அழைத்துக் கொண்டு சுமார் முக்கால் மைல் தூரத்திற்கு அப்பால் இருந்த போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றனர். இடும்பன் சேர்வைகாரன் போலீஸ் இலாகாவில் (ஹெட்கான்ஸ்டேபில்) வேலையில் இருந்து விலக்கப்பட்டவன் என்பது முன்னரே கூறப்பட்ட விஷயம். அவன் எவ்வித இழிவிற்கும் கூசாத மற்ற முரட்டுத் திருடர்களைப் போல் அல்லாமல் தன்னை கண்ணியமான மனிதன் என்றே பாவித்திருந் தவனாதலால், கைவிலங்கோடு தெருத்தெருவாய் ஊர்வலம் போனது, அவனால் சகிக்க முடியாத மரண வேதனை போல இருந்தது. வழியில் போன ஜனங்கள் தன்னை உற்று உற்றுப் பார்த்தது அவனது இருதயத்தில் கூர்மையான ஈட்டிகளால் குத்துவது போல இருந்தது. தான் எப்பாடுபட்டாயினும் அந்த மானக்கேடான நிலைமையில் இருந்து தப்பித்து ஊர் போய்ச் சேர வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டவனாய்த் தனது முகத்தை அப்புறம் இப்புறம் திருப்பாமலும், அன்னிய மனிதரைப் பாராமலும், கீழே குனிந்தபடி அவன் நடந்து போலீஸ் ஸ்டேஷனை அடைந்தான். அந்த ஸ்டேஷனில் ஓர் அறைக்குள் சப் இன்ஸ்பெக்டர் தனியாக உட்கார்ந்திருந்தார். ஜெவான்கள் இருவரும் இடும்பன் சேர்வைகாரனை அந்த அறைக்குள் அனுப்பி விட்டு வெளியிலேயே நின்றனர். இடும்பன் சேர்வைகாரன் நிமிர்ந்து பார்த்து, அதற்கு முன் சாயப்புவிடம் லஞ்சம் வாங்கிய சப் இன்ஸ்பெக்டரே அவ்விடத்தில் இருப்பவர் என்பதைக் கண்டு கொண்டான். உடனே அவனது மனத்தில் ஒருவிதத் துணிவும் மகிழ்ச்சியும் உண்டாயின. ஆயினும், அவர் தனக்கு எவ்விதமான செய்தி கூறப்போகிறாரோ என்ற கவலையும் சஞ்சலமும் ஒரு புறத்தில் ஓயாமல் பெருகி வதைத்துக் கொண்டே இருந்தன. அவன் சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "சுவாமிகளே! நமஸ்காரம்" என்றான்.

உடனே சப் இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து கம்பீரமான பார்வையாக அவனைப் பார்த்து, "என்ன ஐயா! சேர்வைகாரரே! இப்போது மணி 12 ஆகிறது. கும்பகோணத்திலிருந்து ஒரு தகவலும் தெரிய வில்லையே. சாயப்பு தன்னுடைய குமாஸ்தாவை அனுப்பிய தாகச் சொன்னார். அவன் இன்னமும் வரவில்லையே. வண்டி காலை ஆறு மணிக்கே வந்திருக்குமே. அவன் வந்திருந்தால், இந்நேரம் தகவல் தெரிவிக்காமல் இருக்க மாட்டானே" என்றார்.

கும்பகோணத்துச் செய்தி ஏதாவது சப் இன்ஸ்பெக்டர் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்து வந்த சேர்வைகாரனுக்கு அது பெருத்த ஏமாற்றமாக முடிந்தது. அவனது முகம் உடனே வாட்ட மடைந்து கீழே சாய்ந்தது. அவனது உற்சாகமும் மகிழ்ச்சியும் போன இடம் தெரியாமல் மறைந்து போயின. அவன் அதற்கு என்ன மறுமொழி சொல்வதென்பதை அறியாதவனாய்த் தத்தளித்து, "எஜமானே! என் கடிதம் அந்த மனிதரிடம் போயிருந்தால், அவர் ஒரு நிமிஷம் சும்மா இருக்க மாட்டார்; உடனே தக்க ஏற்பாடு செய்வார். இந்த குமாஸ்தா போன காலத்தில், அவர் ஊரில் இல்லையோ, அல்லது, வேறே என்ன அசந்தர்ப்பமோ என்பது தெரியவில்லை. எப்படியும் நல்ல சேதி வந்து விடும். தாங்கள் கொஞ்சம் பொறுத்து எதையும் செய்வது நலம்" என்றான்.

அதைக் கேட்ட சப் இன்ஸ்பெக்டர் தமக்கெதிரில் இருந்த ஒரு படத்தை எடுத்து நீட்டி, "இதோ பார்த்தீரா உம்முடைய ஆட்கள் செய்த வேலையை? இதை எடுத்துப் பாரும்" என்றார். இடும்பன் சேர்வைகாரன் ஆவலோடு மேஜையண்டை நெருங்கி படத்தை வாங்கிப் பார்த்தான். உடனே அவனது முகம் மாறி விகார மடைந்து பெருத்த திகிலையும் மனக்குழப்பத்தையும் காட்டியது. "ஆகா! என்ன இது! ரமாமணியம்மாள் முதலியோர் அல்லவா மூக்கு காதுகள் எல்லாம் அறுபட்டுக் கிடக்கிறார்கள். அடடா! என்ன அக்கிரமம் இது!" என்று வியப்போடு கூறிய வண்ணம் கலங்கித் தத்தளித்தவனாய் அப்படியே நின்றான். சப் இன்ஸ்பெக்டர், "உம்முடைய ஆள்கள் இவர்களை இப்படி மூளிப்படுத்தி விட்டார்கள் என்ற செய்தி சில தினங்களுக்கு

முன்னர் சமாசாரப் பத்திரிகைகளில் வெளியாயின. அதை அந்த மாசிலாமணிப் பிள்ளையும் படித்திருப்பார்; அதனால் அவர் உம்மேல் கோபமடைந்து பேசாமல் இருந்து விடுவாரோ என்று நினைக்கிறேன்" என்றார்.

திக்பிரமை கொண்டு பைத்தியக்காரன் போல விழித்துக் கொண்டு நின்ற சேர்வைகாரன், "எஜமானே! எனக்கு யாதொரு தகவலும் தெரியாது. நான் எந்த ஆளையும் அனுப்பவுமில்லை; இப்படிப் பட்ட காரியத்தைச் செய்யச் சொல்லவுமில்லை" என்றான்.

சப் இன்ஸ்பெக்டர், "அன்றைய தினம் இரவில் கையும் மெய்யு மாய்ப் பிடிபட்ட ஆள்கள் உண்மையைச் சொல்லி விட்டார்கள். ஆயினும், இந்த ரமாமணியம்மாள் முதலியோர் இன்னம் சரியான படி பேசத் தகுந்த நிலைமைக்கு வரவில்லை. நாங்கள் அவர் களுடைய வாக்கு மூலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய ஆள்கள் சொன்னதும் ரமாமணியம்மாள் முதலியோர் சொல்வதும் ஒத்துப் போனால், உடனே உங்களை நாங்கள் மாஜிஸ்டிரேட்டிடம் விசாரணைக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் அந்தமான் தீவிற்குப் போவது நிச்சயமான விஷயம்" என்றார்.

அதைக் கேட்ட இடும்பன் சேர்வைகாரன், "சுவாமிகளே! எது எப்படி இருந்தாலும், என்னை மாத்திரம் தாங்கள் தப்பவைத்துவிட வேண்டும். சாயப்பு ஐயா சொன்னபடி நான் எப்படியும் பதினைந்து ஆயிரம் ரூபாய் வாங்கித் தங்களுக்குக் கொடுத்து விடுகிறேன். மற்றவர்களை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கெஞ்சி மன்றாடினான்.

அப்போது சப் இன்ஸ்பெக்டருக்குப் பக்கத்தில் இருந்த டெலிபோனில் மணி கணகணவென்று அடித்துக் கொண்டது. சப் இன்ஸ்பெக்டர் அதை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு அதில் வந்த செய்தியைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அவரது முகம் உடனே மிகுந்த களிப்பும் உற்சாகமும் அடைந்தது. அவர் அந்த யந்திரத்தைக் கீழே வைத்துவிட்டு, "என்ன ஐயா சேர்வைகாரரே! ஆஸ்பத்திரியிலிருந்து பெரிய டாக்டர் துரை இப்போது என்னோடு பேசினார். ரமாமணியம்மாள் உங்களுடைய சங்கதி முழுதையும்

கொஞ்ச நேரத்திற்கு முன் தான் வெளியிட்டாளாம். நீரும் மாசிலாமணிப் பிள்ளையும், இப்போது பிடிபட்டிருக்கும் ஆள்களும் சேர்ந்தே சட்டைநாத பிள்ளையை விடுவித்து கும்ப கோணத்தில் எங்கேயோ ஒளிய வைத்திருக்கிறீர்களாம். உப்பிலி யப்பன் கோவில் என்ற ஊரில் உள்ள ஒரு பாம்புப் பிடாரனிடத்தி லிருந்து நீர் தான் பாம்புகளை வாங்கி ஒரு பெட்டிக்குள் வைத்து திகம்பர சாமியாரிடம் கொடுத்து அவரைக் கொன்றீராம். இன்னம் நீர் இந்த ஆள்களோடு வந்து இந்த ஊர்க் கலெக்டருடைய பெண்ணை அபகரிக்க முயன்று அவருடைய பங்களாவில் நுழைந்து அங்கே பெண் வேஷத்தில் இருந்த கந்தசாமியைத் தூக்கிக் கொண்டு போனீராம். கந்தசாமி இன்னம் அகப்படாமையால், அவரையும் நீங்களே கொன்று விட்டதாக அனுமானிக்கப் படுகிறது. அதுவுமன்றி, இப்போது வேலாயுதம் பிள்ளை முதலி யோரை மூளிப்படுத்த நீர் ஆள்களோடு வந்தீராம். வந்த இடத்தில் நீர் மோதிரம் திருடி சிறைச்சாலை அடைந்த பின், உம்முடைய ஆள்கள் ஆள்மாறாட்டமாக ரமாமணியம்மாள் முதலியோரை மூளிப்படுத்தி விட்டார்களாம். இந்த விவரங்கள் எல்லாம் இப்போது தான் வெளியானதாக பெரிய டாக்டர் சொல்லுகிறார். ஏது, இனி நீர் தப்புவது துர்லபம். உமக்கு தீவாந்திர சிக்ஷை கிடைக்கும் என்று முன்னே நினைத்தேன். இப்போது இருக்கும் நிலைமையில், உமக்கு மரண தண்டனை கிடைக்கும் என்று நினைக்கிறேன். கும்பகோணத்தில் இருந்து பணம் வந்தால் கூட, நான் உம்மை எப்படித் தப்பவைப்பதென்பது தெரியவில்லை" என்றார்.

அதைக் கேட்ட இடும்பன் சேர்வைகாரன் திடீரென்று காலடியில் பேரிடிவிழக் கண்டவன் போல அப்படியே திக்பிரமை கொண்டு மருள விழிக்க ஆரம்பித்தான். அவனுடைய தலை சுற்ற ஆரம்பித்தது. அறிவு பிறழ்ந்து போயிற்று. கைகால்கள் உடம்பு முதலிய யாவும் கிடுகிடென்று ஆடுகின்றன. அவன் வேரற்ற மரம் போல பொத்தென்று சப் இன்ஸ்பெக்டருக் கெதிரில் விழுந்து அவரது காலைப் பிடித்துக் கொண்டு, "சுவாமிகளே! என்னை நீங்கள் எப்படியாவது காப்பாற்றியே தீரவேண்டும். கும்பகோணத்

திலிருந்து எப்படியும் பணம் வரும். தாங்கள் வாக்களித்தபடி அதை வாங்கிக் கொண்டு எப்படியாவது என்னைத் தப்பவைத்து விடுங்கள். நான் எங்கேயாவது போய் எவர் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொள்ளுகிறேன். உங்கள் பிள்ளை குட்டிகளுக்கு தரும முண்டு. எஜமானே! நீங்கள் என்னைக் காப்பாற்றுவதாகச் சொன்னாலன்றி நான் எழுந்திருக்க மாட்டேன்" என்று கூறிக் கண்ணீரைப் பெருகவிட்டு குழந்தை போல விம்மி விம்மி அழுதான்.

அந்தச் சமயத்தில் ஒரு ஜெவான் உள்ளே வந்து சப் இன்ஸ்பெக் டரைப் பார்த்து, "எஜமானே! ஜானிஜான் கான் சாயப்பு வந்து பக்கத்து அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். கும்ப கோணத்துக்குப் போன அவருடைய குமாஸ்தா திரும்பி வந்து ஒரு கடிதம் கொடுத்தாராம். இவர் வேறே எங்கேயோ வேலையாய்ப் போயிருந்தாராம். திரும்பி வீட்டுக்கு வந்தவுடன் குமாஸ்தா கடிதத்தைக் கொடுத்து, தாம் போய் வந்த வரலாற்றைச் சொன்னா ராம்; உடனே புறப்பட்டு சாயப்பு வந்தாராம். அவர் சேர்வை காரரை அழைக்கிறார்." என்றான்.

அதைக் கேட்ட சேர்வைகாரன் திடுக்கிட்டு மகிழ்ச்சி கொண்டு சரேலென்று எழுந்து நின்றான். உடனே சப் இன்ஸ்பெக்டர், "சேர்வைகாரரே! சாயப்பு வந்திருக்கிறாராம் போய்ப் பார்த்துவிட்டு வாரும்" என்றார்.

ஜெவான் சேர்வைகாரனை அழைத்துக் கொண்டு வெளியில் போய் பக்கத்தில் இருந்த இன்னோர் அறையைக் காட்டி அதற்குள் அவனை அனுப்பினான். அந்த அறைக்குள் ஜானிஜான் கான் சாயப்பு தனியாக உட்கார்ந்திருந்தார். அங்கே சென்ற சேர்வை காரன் சாயப்புவுக்கு வணக்கமாக சலாம் செய்து அவரது முகத்தைப் பார்த்தான். அது சந்தோஷமற்றதாகத் தோன்றியது. உடனே சாயப்பு உற்சாகமற்ற குரலில் பேசத் தொடங்கி, "என்ன சேர்வைகாரரே! நான் வாக்குக் கொடுத்ததைக் கருதி எவ்வளவோ வேலையைக் கெடுத்துக் கொண்டு நான் என் குமாஸ்தாவை அனுப்பினேன். அது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின

மாதிரி முடிந்தது. அந்த மனிதனை மதித்து நீர் கடிதம் எழுதிக் கொடுத்தீரே. அவன் என்னுடைய குமாஸ்தாவை அவமரியாதைப் படுத்தியதோடு, உம்மையும் நாயென்றும் கழுதை என்றும் வாயில் வந்தபடி வைது கோபத்தோடு ஏதோ கடிதம் எழுதிக் கொடுத்தானாம்; பணம் கொடுக்கவும் இல்லையாம்; தான் வருவ தாகவும் சொல்லவில்லையாம். இந்த மாதிரி நீர் இனி கடிதம் எழுதி அனுப்பினால், அதைப் போலீசாருக்கு அனுப்புவானாம்; கடிதம் கொண்டு போகிறவனுக்கும் மரியாதை நடத்துவானாம்" என்று கூறிய வண்ணம் தமது சட்டைப் பையில் இருந்த கடிதம் ஒன்றை எடுத்து சேர்வைகாரனிடம் கொடுத்தார். அவன் அவரது வார்த்தை களைக் கேட்டுக் கலகலத்துப் போய் வெட வெடவென்று ஆடிய கைகளோடு கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கலானான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

அடேய் இடும்பன் சேர்வை! திருட்டு நாயே! உனக்கும் எனக்கும் என்னடா சம்பந்தம்? என்னை சென்னைக்கு வரும்படி அழைக்க உனக்கு அவ்வளவு துணிவா? உனக்காகப் பதினையா யிரம் ரூபாய் செலவு செய்து உன்னை மீட்க எனக்கு என்ன அக்கறை வந்திருக்கிறது? நீ கொழுப்பெடுத்துப் போய்த் திருடினால் அதற்கு நானா பிணை? நீ எக்கேடு கெட்டு எருக்கு முளைத்துப் போ. இனிமேல் நீ இப்படிப்பட்ட கடிதங்களை எனக்கு அனுப்பினால் அதை உடனே போலீசாருக்கு அனுப்பி உன்மேல் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு, நீ அனுப்பும் மனிதனுக்கும் தக்க மரியாதை நடத்தி அனுப்புவேன். இந்தத் தடவை உன்னை மன்னித்து விடுகிறேன்; ஜாக்கிரதை.

*மாசிலாமணி.*

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கவே, இடும்பன் சேர்வைகாரன் அப்படியே இடிந்து உட்கார்ந்து போய் விட்டான். மாசிலாமணிக்காகத் தான் பாடுபட்டு தன்னை மரணதண்டனைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்க, அவன் நல்ல சமயத்தில் தன்னைக் கைவிட்டு விட்டானே என்ற கோபமும், ஆத்திரமும் காட்டுத்தீ போல அவனது மனதில் பொங்கி எழுந்தன. மாசிலாமணி எப்படியும் பணம் அனுப்புவான் என்றும், தான் உயிர் தப்பி

ஓடிப் போகலாம் என்றும் ஆசையோடு எதிர்பார்த்திருந்தது முற்றிலும் ஏமாற்றமாக முடிந்து போகவே, அந்த அபாய சமயத்தில் தான் என்ன செய்கிறது என்ற பெருத்த கிலியும் கலவரமும் பெருகி அவனது மனத்தைக் கப்பிக்கொண்டன. தான் என்ன செய்வது, அல்லது, என்ன சொல்வது என்பதை அறியாமல் அவன் பேச்சு மூச்சற்று அப்படியே கல்போலச் சமைந்து நின்று விட்டான்.

அவ்வாறு இடும்பன் சேர்வைகாரன் மாசிலாமணியின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், சாயப்பு அந்த அறைக்குள் சுவர்களில் தொங்கவிடப் பட்டிருந்த போலீஸ் விளம்பரங்களை எல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டே நின்றவர் எதையோ கண்டு திடுக்கிட்டவர் போல, "ஐயா! சேர்வை காரரே! இந்தக் கடிதம் அனுப்பியிருக்கும் உம்முடைய சிநேகிதரின் பெயர் மாசிலாமணிப் பிள்ளை அல்லவா? அவர் இருப்பது கும்ப கோணம் பெரிய தெருவல்லவா?" என்றார். அதைக் கேட்ட சேர்வைகாரன், "ஆம்" என்றான்.

சாயப்பு, "அவருடைய அண்ணன் சட்டைநாத பிள்ளை என்று ஒருவர் இருந்து தண்டனை அடைந்ததுண்டா?" என்றார்.

சேர்வைகாரன், "ஆம்" என்றான். உடனே சாயப்பு, "அது இருக்கட்டும். கடிதத்தைப் படித்தீரே? என் குமாஸ்தா சொன்ன படியே தான் எழுதி இருக்கிறாரா? அல்லது, பணம் அனுப்புவதாக எழுதி இருக்கிறாரா?" என்றார்.

சேர்வைகாரன் நிரம்பவும் ஆத்திரத்தோடு, "சாயப்பு ஐயா! அந்த மனிதனுக்கு நான் செய்திருக்கும் உதவிகளுக்கு அவன் எனக்குத் தன்னுடைய உயிரைக்கூடத் தரக் கடமைப்பட்டிருக்கிறான். அவன் எழுதியிருப்பது என் மனசை ரம்பத்தால் அறுப்பது போல இருக்கிறது. அவன் ஈவிரக்கமற்ற கொடிய பாதகனாக இருக்கிறான். அவனை என்ன செய்வதென்பது தெரியவில்லை" என்றான். அதைக் கேட்ட சாயப்பு தாமும் கோபம் கொண்டவராய், "ஐயா! சேர்வைகாரரே! அவருடைய அண்ணன் சில தினங்களுக்கு முன்

ஜெயிலில் இருந்து தப்பி ஓடிவந்து விட்டதாகவும், அவர் இருக்கும் இடத்தைக் காட்டுகிறவருக்குப் பதினைந்து ஆயிரம் ரூபாய் வெகுமதி தருவதாகவும் தஞ்சாவூர் போலீசார் ஒரு விளம்பரம் வெளியிட்டிருக்கிறார்கள். அது இதோ தொங்குகிறது. ஆகா! அவர் எங்கே இருக்கிறார் என்பது இந்தச் சமயத்தில் எனக்குத் தெரிந்திருந் தால், அதைச் சொல்லிவிட்டு, அந்த ரூபாயை வாங்கி உம்முடைய அவசரத்திற்கு உபயோகப்படுத்தி உம்மை நான் தப்பவைப்பேன். இந்த விளம்பரத்தில் இருப்பதைப் பார்த்தால் அண்ணன் பெரிய கொலை பாதகன் போலிருக்கிறது. அதுபோலவே தான் அவனுடைய தம்பியும் இருக்கிறான். அவர்கள் இருவரையும் உயிரோடு கழுமரத்தில் ஏற்றினால்கூட பாவம் உண்டாகாது. அதனால் பெருத்த புண்ணியம் உண்டாகும் என்று நினைக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட சேர்வைகாரன் சுவரண்டை போய் அந்த விளம்பரத்தைப் பார்த்துக் கவனமாகப் படித்த பின், "ஐயா! எனக்குத் தெரிந்த மனிதன் ஒருவன் கும்பகோணத்தில் இருக்கிறான். இந்த சட்டைநாத பிள்ளையை அவர்கள் ஒளிய வைத்திருக்கும் இடம் அவனுக்குத் தெரியும். அவன் மூலமாய் நான் அந்தத் தகவலைத் தெரிந்து கொண்டு உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் இந்தத் தொகையை வாங்கி இவர்களுக்குக் கொடுத்துவிட்டு என்னை விடுவிக்க ஏற்பாடு செய்கிறீர்களா?" என்றான்.

சாயப்பு, "சேர்வைகாரரே; நீர் கவலைப்படாதேயும். நீர் இப்போது சொன்ன விஷயத்தை நான் சப் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து, உமக்குத் தக்க உறுதிமொழி வாங்கித் தருகிறேன். நான் மறுபடியும் வருகிறேன். நீர் இவ்விடத்திலேயே இரும்" என்று கூறிய வண்ணம் எழுந்து வெளியில் சென்றார்.

தனியாக விடப்பட்ட இடும்பன் சேர்வைகாரன் மறுபடி சாயப்பு திரும்பி வருவாரோ, வந்தாலும், என்னவிதமான செய்தி கொண்டு வருவாரோ, தான் தப்பமுடியுமோ, தன்னிடம் எல்லா ரகசியங் களையும் தெரிந்து கொண்டு போலீசார் தன்னையும் மரண தண்டனைக்கு ஆளாக்கி விடுவார்களோ என்று பலவாறு சிந்தித்து

தாமரை இலைத் தண்ணீர்த் துளிபோலத் தத்தளித்து வேதனைக் கடலில் ஆழ்ந்தவனாய் நின்று கொண்டிருந்தான்.

★ ★ ★

## 14-வது அதிகாரம்
## தொடில் சுடும் நெருப்பு; விடில் சுடும் விரகநோய்

நமது தமிழ்நாட்டு வள்ளலான ஸ்ரீமான் வேலாயுதம் பிள்ளை அவர்களின் சிவபூஜை முதல் நாளில் நடந்ததைக் காட்டிலும் நூறு மடங்கு சிறப்பாய் மற்ற இரண்டு தினங்களிலும் நடந்தேறியது. சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று தினங்களிலும் அவர் மூன்று கை தண்ணீரும் மூன்று துளி விபூதியும் உட்கொண்டார் ஆனாலும், அவைகளை அவர் கேவலம் தமது வயிற்றுப் பசியைத் தீர்க்கும் ஆகாரம் என்று நினைத்து உட்கொள்ளாமல், தமது மனத்தையும், தேகத்தையும் தூய்மைப்படுத்தி, அவற்றின் பாவமலங்களை அறுப்பதான தெய்வப் பிரசாதம் என்று மதித்தே அவர் அவற்றை உபயோகித்தார். ஆயினும், அவர் தாம் அவ்வாறு கடுமையான விரதம் பூண்டு நடப்பதைக் கண்டு மற்றவரும் அது போலவே தங்களது தேகத்தை வதைத்துக் கொள்ளக் கூடாதென்று கூறியிருந்தார் ஆதலால், அவரது சொல்லை வேதவாக்கியமாக மதித்து வந்த மற்றவர் சொற்பமாகப் பலகாரம் செய்து கொண்டனர். கந்தசாமி மாயமாய் மறைந்து போனதைப் பற்றியும், அவன் மறுபடி சௌக்கியமாய்த் திரும்பிவர வேண்டுமே என்பதைப் பற்றியும் அவர்கள் எல்லோரும் கட்டிலடங்கா மன வேதனையும், பெருங் கவலையும் கொண்டு தவித்திருந்தனர் ஆதலின், அவர்களது மனம் ஆகாரம் முதலிய சௌகரியங் களையே சிறிதும் நாடவில்லை. அவர்களது நிலைமை அங்ஙனம் இருந்ததாயினும், அந்த மூன்று தினங்களிலும், ஆயிரக்கணக்கான ஏழைகளும், பரதேசிகளும் முப்பழம், ஐந்துவித பக்ஷணம், ஏழுவகைச் சித்திரான்னம், பாயசம் முதலிய விசேஷப் பதார்த்தங் களுடன் கூடிய அறுசுவைப் போஜனம் அளிக்கப்பெற்று வயிறார உண்டு, "இவரே கர்ண மகாராஜன், இவரே வள்ளல் ஏழு, இவரே

உண்மையான சிவபக்தர்" என்று வேலாயுதம் பிள்ளையை மனதார ஸ்தோத்திரம் செய்து புகழ்ந்த வண்ணம், அந்த சிவபூஜை நிரம்பவும் மேன்மை அடையும்படி செய்தனர். அவர்கள் எல்லோரும், "ஐயா! தமிழ்நாட்டைப் போலத் தவம் செய்த நாடு இந்த உலகத்தில் எங்கே இருக்கிறது. பரிசுத்தமான மனதும், உத்தமமான குணங்களும், மாசற்ற நடத்தையும், உண்மையான பக்தியும், அபாரமான ஞானமும் பெற்று இயற்கையிலேயே தெய்வத் தன்மை வாய்ந்து நடக்கும் இந்த வேலாயுதம் பிள்ளையைப் போன்ற மகா சிரேஷ்டமான புருஷர்கள் இந்தத் தமிழ் நாட்டில் அன்றோ இன்னமும் காணப்படுகின்றனர். நாயன் மார்கள் அறுபத்து மூவர் என்றும், வள்ளல்கள் இருபத்தொருவர் என்றும், கொடையில் சிறந்தவன் கர்ணன் என்றும், பொய் சொல்லாதவன் அரிச்சந்திரன் என்றும் நம்மவர் கணக்கெடுத்து வரையறுத்து விட்டார்களே. இவர்களோடு தமிழ்த்தாய் மலடாய்ப் போய்விட்டாளா? மேலே குறிக்கப்பட்ட குணங்கள் எல்லாம் தமிழ் நாட்டினரின் இரத்தத்திலிருந்து வறண்டு போய்விட்டனவா, அல்லது, அவர்களைவிட சிரேஷ்டமாகவோ சொல்லத்தக்க தெய்வபக்தியும் ஒழுக்கத் தூய்மையும் வாய்ந்த மனிதர்கள் எத்தனையோ பேர் உற்பத்தியாகிறார்களே! அறுபத்து நான்காவது ஸ்தானத்தை அடையத்தக்க யோக்கியதை வாய்ந்த மனிதர் இது வரையில் பிறக்கவே இல்லையா? அல்லது, இனி பிறக்கப் போவதே இல்லையா? அக்காலத்தில் இருந்த புலவர்களான அவ்வை முதலியோருக்குக் கூழ் வார்த்த காரி, பாரி முதலியோர் வள்ளல்கள் என்ற என்றும் அழியாப் பெயர் பெற்று விளங்கு கிறார்களே. எண்ணிக்கையற்ற ஏழைகளுக்குத் தேவாமிருத போஜனம் செய்பவர்களும், சத்திரம், சாவடி, பள்ளிக்கூடம் முதலிய பெருத்த தர்மங்களை ஸ்திரமாக ஏற்படுத்தி இருப்பவர் களுமான இந்த வேலாயுதம் பிள்ளையைப் போன்ற எத்தனையோ தனவந்தர்களும், நாட்டுக் கோட்டைச் செட்டிமார் களும் இப்போதும் இருக்கிறார்களே. இவர்கள் செய்யும் தருமத்திற்கும், இவர்களுடைய மேன்மையான மனப் போக்கிற்கும், முன்னிருந்ததாகச் சொல்லப்படும் இருபத்தொரு வள்ளல்களின் தர்மங்களும் மனப்போக்கும் ஈடு நிற்குமா?

இருபத்திரண்டாவது வள்ளலை ஏற்படுத்துவதற்கு நாதனற்றதாய் நம் தமிழ் நாடு இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறதே! பொய் சொல்லாதவன் அரிச்சந்திரன் ஒருவனே என்றால், நம் தேசத்தில் உதிக்கும் மற்றவர் எல்லோரும் பொய் சொல்லுகிறவர்கள் என்ற இழுக்கல்லவா ஏற்படுகிறது. இந்த வேலாயுதம் பிள்ளையைப் போன்றவர்கள் தம் உயிர் போவதானாலும் கனவில் கூடப் பொய் சொல்ல மாட்டார்களே. இவர்களை ஏன் நாம் இரண்டாவது அரிச்சந்திரன், மூன்றாவது அரிச்சந்திரன் என்று குறிக்கக் கூடாது. நாயன்மார்களிலும், வள்ளல்களிலும் ஜாப்தா ஏற்பட்டது போல, உண்மை பேசுவதிலும் இப்படி ஒரு ஜாப்தா ஏற்பட்டால், இந்த வேலாயுதம் பிள்ளையைப் போன்ற மகான்களின் பெயர் நிரந்தரமாக உலகத்தாரின் மனதை விட்டகலாமல் இருப்பதோடு, அவர்களது உதாரணத்தைப் பின்பற்றி மற்றவர் நடப்பதற்கும் அது ஒரு தூண்டு கோலாக இருக்கும் அல்லவா? இந்த வேலாயுதம் பிள்ளையை நாயனார் என்றும், வள்ளல் என்றும், கர்ணன் என்றும், அரிச்சந்திரன் என்றும் பெயர் கொடுத்தழைக்க, தஞ்சையில் ராஜ ராஜ சோழன் இல்லாமல் போய்விட்டானே! மதுரையில் வரகுணபாண்டி யனுடைய வம்சம் அற்றுப் போய்விட்டதே! காஞ்சிமா நகரம் தொண்டைமானின்றி நிற்கிறதே! ஆகா! இந்த உலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் காணப்படாத மகா அற்புதமான வேலைப் பாடுகளும் திறமையும் வலிமையும் நிறைந்துள்ள ஆயிரக் கணக்கான சிவாலயங்களையும், விஷ்ணுவாலயங்களையும், ஆறு களையும், தடாகங்களையும், சாலைகளையும், சத்திரம் சாவடி களையும் தென்னாடெங்கும் நிரப்பி, மனித சமூகத்தார் நற்குண நல்லொழுக்கம், தெய்வ பக்தி முதலியவற்றைக் கடைப்பிடித்து நீதிநெறி தவறாமல் ஒழுகி, உய்ந்து போமாறு எண்ணிறந்த சாதனங்களை அமைத்து வைத்துள்ளவர்களான நமது தமிழ்நாட்டு வேந்தர்கள் எல்லோரும் இருந்த இடம் தெரியாதபடி மறைந்து போய் விட்டார்களே! ஆ! கொடுமையே! தன் கன்று தேர்காலில் அகப்பட்டு இறந்து போனதாகத் தாய்ப்பசு சோழ மகாராஜனிடம் முறையிட, அவ்வாறு அஜாக்கிரதையாகத் தேர்விடுத்த தனது சொந்த மகனுக்கு மரண தண்டனை விதித்து என்றும் அழியாப்

புகழ் படைத்த மனுநீதிச் சோழன் இந்தச் சமயத்தில் இல்லாமல் போய்விட்டானே! அத்தகைய தர்ம மூர்த்திகளின் வம்சம் எல்லாம் அழிந்து போய்விட்டதே. இனி இந்தத் தேசத்தில் தரும தேவதை இருப்பதே தகாதென்றும், நம் தேசத்தில் தோன்றும் புருஷர் களுக்கு எவ்விதப் ப்ரக்யாதியும் இருக்கவே கூடாதென்றும் கடவுள் தீர்மானித்து விட்டாரோ! இத்தகைய அதிமாநுஷத் தன்மைகள் பூவுலகத்தில் இருப்பது தகாதென்பது கடவுளின் கருத்தாக இருக்குமோ! ஆகா! நம்முடைய தமிழ்நாடு இருந்த இருப் பென்ன! அது இப்போது, என்ன நிலைமைக்கு வந்திருக்கிறது. அதில் தோன்றும் உத்தம சிரேஷ்டர் எல்லோரும் தோன்றாதவர்க ளாக அல்லவா இருக்கிறார்கள்! ஆகா! என்ன கால வித்தியாசம் இது!" என்று வாய்விட்டுக் கூறி அங்கலாய்த்துக் கொண்டனர்.

முதல் நாளைய பூஜை முடிவடைந்தவுடன் அன்று மாலையி லேயே போலீஸ் கமிஷனரும், மிஸ்டர் வெல்டன் துரை என்பவரும் வந்து கோபாலசாமி தெரிவித்த முக்கியமான விஷயத்தை வெளியிட்டனர் ஆதலால், வேலாயுதம் பிள்ளை செய்த சிவபூஜையின் பலன் கையின்மேல் பலித்து விட்டது என்ற எண்ணமே எல்லோரது மனத்திலும் தோன்றிவிட்டது. அது வரையில் கந்தசாமி இன்னவிதமாய்க் காணாமல் போனான் என்ற குறிப்பே சொற்பமும் தெரியாதிருந்ததற்கு, அவன் பெண் வேஷந் தரித்து வந்து பட்டாபிராம பிள்ளையின் பங்களாவில் சிறை வைக்கப்பட்டிருந்த நிலைமையில் சில முரடர்களால் அபகரித்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறான் என்ற முக்கியமான செய்தி வெளியானதில் இருந்து மேலும் சில தினங்கள் கழிவதற்குள் அவனைப் பற்றிய வரலாறு முழுதும் அவசியம் தெரிந்து போய் விடும் என்ற நம்பிக்கை வேலாயுதம் பிள்ளை முதலிய எல்லோரது மனத்திலும் தோன்றிவிட்டது. ஆகவே அவர்களது தெய்வ பக்தியும் உருக்கமும் பூஜையின் சிரத்தையும் முன்னிலும் பதினாயிரம் மடங்கு அதிகரித்தன. அதுவுமன்றி அதுகாறும் தமது சொற்படி நடந்து வந்த மகா உத்தம குணங்கள் வாய்ந்த சற்புத்திரனான கந்தசாமி அந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் அவ்வாறு புதுமையாக நடந்து கொண்டது வேலாயுதம் பிள்ளை, அவரது மனைவியார் ஆகிய இருவரது மனத்திலும் அபாரமான

வியப்பை உண்டாக்கியது. ஆயினும் தாங்கள் பார்த்த வரையில் மனோன்மணியம்மாள் சகலமான உத்தம லட்சணங்களும் பொருந்தி, மிருதுத்தன்மையே வடிவெடுத்ததோ என்னும்படி இருக்கின்றாள் ஆதலால், கந்தசாமி அவளைக் கண்டு முற்றிலும் திருப்தியடைந்தே போயிருக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தும் கொண்டனர் ஆனாலும், தாம் கூடிய விரைவில் கோபாலசாமியுடன் பேசி, அவர்கள் மாறுவேஷத்துடன் மனோன் மணியம்மாளிடம் வருவதற்கு முன் அவர்கள் இருவருக்குள் நடந்த யோசனைகளை விவரமாய் அறிய வேண்டும் என்று நினைத்து அந்த நினைவைக் கண்ணப்பாவிடம் தெரிவித்தனர். அவன் மறுநாட் காலையில் எழுந்தவுடன் வைத்திய சாலைக்குப் போய் கோபாலசாமியைக் கண்டு அவனுடன் பேசிவிட்டுத் திரும்பி வந்து கந்தசாமிக்கும் கோபாலசாமிக்கும் முதன் முதலில் கடற்கரையில் நடந்த சம்பாஷணையின் விவரத்தைக் கூறினான். தன்னோடு பட்டாபிராம பிள்ளையின் பங்களாவிற்கு வரும்படி கண்ணப்பா கோபாலசாமியையும் அழைத்தான் ஆனாலும், அவன் பட்டாபிராம பிள்ளை மனோன்மணியம்மாள் முதலி யோருக்கு முன்னால் வருவதற்கு வெட்கமடைந்தவனாய் அங்கே வரமறுத்து வைத்திய சாலையை விட்டுக் கோமளேசுவரன் பேட்டையில் இருந்த தனது பழைய ஜாகைக்குப் போய்விட்டான்; ஆகவே, நாம் முன்னர் கூறியபடி கந்தசாமியின் வரலாற்றில் சிறிதளவு வேலாயுதம் பிள்ளை முதலியோருக்குத் தெரிந்தது ஆனாலும், அவன் எப்படிப்பட்ட துஷ்டர்களிடம் அகப்பட்டுக் கொண்டானோ, அவர்கள் அவனை உயிருடன் வைத்திருக்கிறார் களோ, அல்லது, அவனது உயிருக்கு ஏதேனும் ஹானி செய்து விட்டார்களோ, அவன் திரும்பி வருவானோ என்பது போன்ற மகா துன்பகரமான சந்தேகங்கள் எல்லாம் அவர்களது மனத்தில் தோன்றி அவர்களை நரக வேதனைக்கு ஒப்பிடத்தக்க அபாரமான சஞ்சலக் கடலில் ஆழ்த்தியபடி இருந்து வந்தன.

அத்தகைய மன நிலைமையில் அவர்களது சிவபூஜை மூன்றாவது தினமாகிய திங்கட்கிழமையோடு முடிவடைந்தது. அந்தச் சமயத்தில், முதல் நாளைய ரயிலில் மன்னார் குடியிலிருந்து புறப்பட்ட சுந்தரம் பிள்ளை, அவரது மனைவி சிவக்கொழுந்தம்

மாள், தக்க பெரிய மனிதர்களான இன்னும் சுமார் நாற்பத்தைந்து விருந்தினர் ஆகிய எல்லோரும் ஆவலும், துயரமும் வடிவெடுத்த தெனும்படி திங்கட்கிழமை காலையில், பட்டாபிராம பிள்ளையின் பங்களாவை அடைந்த பரிதாபகரமான காட்சி கல்லையும் கரையச் செய்யத் தக்கதாய் இருந்தது. "ஐயோ! தங்களுக்கு இப்பேர்ப்பட்ட கோலமும் வரவேண்டுமா!" என்று ஓலமிட்டு கோவெனக் கதறி அழுது கொண்டு உள்ளே நுழைந்த அத்தனை ஜனங்களும் வேலாயுதம் பிள்ளை முதலியோர் எவ்வித அங்கஹீனமும் அடையாமல், சௌக்கியமாய் இருக்கிறார்கள் என்றும், சமாசாரப் பத்திரிகையில் வெளியானது தப்பான வரலாறு என்றும் தெரிந்து கொள்ளவே, அவர்கள் எல்லோரும் அந்த எதிர்பாராத சந்தோஷச் செய்தியினால் ஏற்பட்ட ஆனந்தப் பெருக்கையும், தமது மனோமெய்களின் பூரிப்பையும் தாங்கமாட்டாதவர்களாய்க் கன்றைப் பிரிந்து கண்ட தாய் போல கோவென்று வாய்விட்டுக் கதறியழுது ஆனந்த பாஷ்பம் சொரிந்தனர். அவர்களுள் வயோதிகர்களாக இருந்தோர் அப்படியே ஓடிப்போய் வேலாயுதம் பிள்ளை, கண்ணப்பா ஆகிய இருவரையும் குழந்தையை வாரி எடுப்பது போலத் தூக்கி எடுத்துக் கட்டித் தழுவி விம்மி விம்மி அழத் தொடங்கி, "ஆகா! நேற்று முதல் எங்கள் உயிர் எங்கள் தேகத்திலேயே இல்லாமல் போய்விட்டது. நாங்கள் நடைப் பிணங்கள் போலவே வந்தோம். நேற்று முதல் எங்கள் மனம் பட்டபாடு ஈசுவரனுக்குத் தான் தெரிய வேண்டும். நல்ல வேளையாக கடவுள் நம்முடைய பங்கிலிருந்தார். பத்திரிகையில் வந்த சங்கதி பொய்யாக இருக்கக் கூடாதா என்று எண்ணி எண்ணி நாங்கள் தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டே வந்தோம். உங்கள் சம்பந்தி சுந்தரம் பிள்ளைக்கு பிரக்ஞை என்பதே இல்லை. அவர் பைத்தியக்காரர் போல சித்தப்பிரமை கொண்டவராகவே இருந்தார். அந்த பங்கரமான செய்தி பொய்யாக இருந்தால், தம்முடைய சொத்தில் சரிபாதியை சுவாமியின் அபிஷேக வைவேத்தியங்களுக்கு சாசுவதமாய் எழுதிவைத்து விடுவதாக அவர் பிரார்த்தனை செய்து கொண்டே வந்தார். போகட்டும், கடவுள் எங்கள் வயிற்றில் எல்லாம் பாலை வார்த்தார். எங்களுக்கு இப்போது இருக்கும் சந்தோஷ பெருக்கைத் தாங்க மாட்டாமல்

எங்கள் இருதயம் அப்படியே படீரென்று இரண்டாய்த் தெறித்து விடும்போல இருக்கிறதே" என்று முற்றிலும் தழுதழுத்து நெகிழ்ந்து உருகிய குரலில் கூறி ஆனந்த நிர்த்தனம் செய்தனர். அத்தனை ஜனங்களும் ஒரே காலத்தில் தங்களது பெருமகிழ்ச்சியை வெளிப்படுத்தித் தம்மனத்தில் பொங்கி எழுந்த விஷயங்களை வாய்விட்டு வெளியிட்டுக் கூக்குரல் செய்த காட்சி சொல்லிலும் மனத்திலும் அடங்காத மகா விநோதக் காட்சியாகவும், கன்னெஞ் சரையும் கதறியழச் செய்யும் மகா உருக்கமான காட்சியாகவும் இருந்தது. வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு மகா விபரீதமான அங்கஹீனம் நடந்துவிட்ட தென்பதைக் கேட்ட முதல் அந்த விருந்தினர் கந்தசாமி காணாமல் போன விஷயத்தை அவ்வள வாகப் பாராட்டாது பிரயாணம் செய்து வந்தனர். வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு என்றைக்கும் மாறாத களங்கம் ஏற்பட்டு விட்டதே என்ற நினைவும் பெருந் துயரமுமே அவர்களது மனத்தை முற்றிலும் கவர்ந்து கொண்டிருந்தமையால், அவர்கள் கந்தசாமியைக் குறித்துக் கவலைப்படுவதையே விட்டிருந்தனர். ஆயினும் வேலாயுதம் பிள்ளை முதலியோர் க்ஷேமமாக இருக்கின்றனர் என்பதைக் கண்ட பிறகே, அவர்களது பதை பதைப்பும் ஆவேசமும் தணிவடைந்தன. அவர்களது மனத்தில் கந்தசாமி காணாமல் போனதைப் பற்றிய நினைவும் கவலையும் தோன்ற ஆரம்பித்தன. கந்தசாமி பெண் வேஷந் தரித்து மனோன் மணியம்மாளைப் பார்க்க வந்தான் என்ற விஷயத்தைத் தமது வாயால் வெளியிட வேலாயுதம் பிள்ளை லஜ்ஜையடைந்தார் ஆகையால், அவன் அப்போதும் காணப்படவில்லை என்றும், அதைக் கருதியே தாம் உபவாசம் இருந்து சிவபூஜை செய்து கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். சுந்தரம் பிள்ளை முதலிய விருந்தினரோடு வந்த பெண்பாலார் எல்லோரும் திரிபுரசுந்தரி யம்மாளும் வடிவாம்பாளும் இருந்த இடத்தை அடைந்து, சமாசாரப் பத்திரிகையில் வெளியான விபரீதச் செய்தியைக் கேட்டது முதல் தாங்கள் பட்டபாட்டையும், தங்களது மனம் தவித்த தவிப்பையும் எடுத்துக் கூறிப் பதறிக் கதறியழுததன்றி, அவர்கள் எல்லோரும் எவ்வித அங்கஹீனமுமின்றி, சௌக்கிய மாய் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து ஆனந்தக் கண்ணீர்

சொரிந்து தேம்பித் தேம்பி அழுதனர். சிவக்கொழுந்தம்மாள் முதலியோர் முறையே திரிபுரசுந்தரி யம்மாளையும், வடிவாம் பாளையும் ஆசையோடு கட்டித் தழுவிக் கோவெனக் கதறி அழுது கண்ணீரை ஆறாய் ஓடவிட்டு சமாசாரப் பத்திரிகையில் வெளியான விபரீதச் செய்தி பொய்யாய்ப் போனதைப் பற்றி தெய்வங்களை எல்லாம் பலவாறு ஸ்தோத்திரம் செய்யலாயினர். கந்தசாமி காணாமல் போன விவரம் முழுதையும் அவர்கள் திரிபுர சுந்தரியம்மாளிடம் தெரிந்து கொண்டு அதைக் குறித்து மிகுந்த விசனமடைந்ததன்றி, எப்படியும் தெய்வத்தின் கருணையால் கந்தசாமி கூடிய சீக்கிரம் வந்து சேர்ந்து விடுவான் என்று அந்த அம்மாளுக்கு ஆறுதல் கூறினர். ஆண் பெண் பாலரான அத்தனை விருந்தினர்களும் தாம் எதிர்பாரா வகையில் தமது பங்களாவிற்கு வந்ததைப் பற்றி கலெக்டர் பட்டாபிராம பிள்ளை அளவற்ற மனவெழுச்சியும் பூரிப்பும் அடைந்து, அந்தரங்க அன்போடும் உவப்போடும் அவர்கள் எல்லோரையும் உபசரித்து வரவேற்று அந்த பங்களாவை அவர்கள் தங்களது சொந்த கிரகம் போல மதித்து எவ்வித கிலேசமுமின்றி எதேச்சையாக இருக்குமாறு கூறி வேண்டிக் கொண்டதன்றி, கண்ணப்பாவையும் தனிமையில் அழைத்து, வந்திருந்த விருந்தாளிகள் எல்லோருக்கும் ராஜோப சாரம் செய்து கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார். அதுவுமன்றி, வந்திருந்த விருந்தினர் இன்னின்னார் என்பதையும் பட்டாபிராம பிள்ளை கேட்டுணர்ந்து அவர்கள் ஒவ்வொருவரோடும் நேரில் பேசிப் பரிச்சயம் செய்து கொண்டார். பெருத்த மிராசுதார்களும் கோடீஸ்வரர்களும் வர்த்தகர்களுமான அத்தனை விருந்தாளிகளும் வேலாயுதம் பிள்ளையின் நெருங்கிய பந்துக்கள் என்பதையும், அவர்கள் எல்லோரும் அந்த அபாயச் செய்தியைக் கேட்டு சகியாத வர்களாய் தொலை தூரத்தில் உள்ள மன்னார்குடியில் இருந்து உடனே புறப்பட்டு சென்னப்பட்டணத்திற்கு வந்ததையும் கண்டு, தமது புதிய சம்பந்தியான வேலாயுதம் பிள்ளையின் மேம்பாடும் கண்ணியமும் அவரிடம் மற்றவர் வைத்திருந்த மதிப்பும் இவ்வள வென்று சொல்லி முடியாததென்று பட்டாபிராம பிள்ளை உணர்ந்து கொண்டதன்றி, அத்தகைய சிரேஷ்டமான மனிதர் களின் சம்பந்தம் தமக்கு வாய்க்கப் போவதைக் கருதி உவகை

பூத்து உணர்வு கலங்கிப் பரவசமடைந்து, தாம் இன்னது பேசுகிறோம் என்பதையே அறியாதவராய் மெய்ம்மறந்து அங்கு மிங்கும் ஓடியோடி அன்பும் உபசாரமுமே வடிவெடுத்து வந்தது போலக் காணப்பட்டார். அது போலவே, வந்திருந்த விருந்தாளிகள் அனைவரும் பட்டாபிராம பிள்ளையின் மேம்பாடுகளையும் இனிய குணங்களையும் அவரது அபாரசம்பத்தையும் பெருத்த செல்வாக்கையும் கண்டு கட்டிலடங்காப் பெருங்களிப்பும் ஆனந்தமும் அடைந்தவர்களாய்த் தத்தம் விருப்பப்படி தமது ஸ்நானபான அனுஷ்டானங்களை எல்லாம் செய்து கொண்டு யதேச்சையாக அந்த பங்களாவில் இருக்கத் தொடங்கினர். கந்தசாமி பெண் வேஷந் தரித்து வந்து, முரடர்களால் அபகரிக்கப் பட்டு போனவற்றை எல்லாம் விருந்தினர்கள் கண்ணப்பாவினிடம் தனிமையில் தெரிந்து கொண்டனர் ஆதலால், அதைக் குறித்து அவர்கள் மிகுந்த வியப்பும் விசனமும் அடைந்தவர்களாய்க் காணப்பட்டு அன்றைய தினம் நடந்த மூன்றாவது நாள் பூஜையில் கலந்து கொண்டு, முந்திய தினங்களில் நடந்ததைவிட அது பன்மடங்கு சோபிக்கும்படி செய்தனர். அன்று காலை முதல் அவர்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு வேளையிலும் மகா சிரேஷ்டமான விருந்துண்ணுவதற்குத் தக்கபடி பட்டாபிராம பிள்ளையும் கண்ணப்பாவும் ஒன்றுகூடி அபாரமான ஏற்பாடு களையும் முஸ்தீபுகளையும் செய்திருந்தனர். அன்றைய தினமாவது வேலாயுதம் பிள்ளை தங்களோடு உட்கார்ந்து அவசியம் பந்திபோஜனம் செய்ய வேண்டும் என்று சுந்தரம் பிள்ளை முதலியோர் வருந்தி வேண்டிக்கொள்ள, அதை அசட்டை செய்ய மாட்டாதவராய் வேலாயுதம் பிள்ளை அன்றைய தினம் இரவில் சொற்பமாக போஜனம் செய்து கொண்டார். எல்லோரும் உட்கார்ந்து தாம்பூலம் தரித்துக் கொண்டபடி மேலே நடக்க வேண்டியதைக் குறித்து ஆலோசனை செய்யத் தொடங்கினர். இந்த ராஜதானியிலுள்ள போலீசார் எல்லோரும் கந்தசாமியைக் கண்டு பிடிப்பதற்குத் தம்மாலேன்ற வரையில் முயன்று பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், தாம் போய்த் தேடுவதற்கு ஓர் இடமும் பாக்கி இல்லை என்றும் பட்டாபிராம பிள்ளை கூறியதைக் கேட்ட மற்ற எல்லோரும் வாட்டமும்,

கவலையும், கலக்கமும் அடைந்தவர்களாய் அப்படியப்படியே ஊமைகள் போல உட்கார்ந்திருந்தனர். அப்போது சுந்தரம் பிள்ளை மற்றவர்களைப் பார்த்து, "நம்மால் ஆவது ஒன்றுமில்லை. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. மனிதரை மனிதர் பார்த்துக் கெடுப்ப தென்பது ஒருநாளும் கூடாத காரியம். அதுவுமன்றி ஒருவனுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஆயிசு காலத்தில் ஒரு நிமிஷத் தையும் குறைப்பது எப்படிப்பட்ட மகாராஜனாலும் முடியா தென்பது உலகத்தில் நிதரிசனமாகத் தெரிந்த விஷயம். நம்முடைய கந்தசாமியை அந்தக் கும்பக்கோணத்தார்கள் தான் கொண்டு போயிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பையனுடைய ஜாதகத்தை நாங்கள் இதற்கு முன் ஒரு தடவை பார்த்தோம். அவன் எவ்வித நோய் நொடியின்றிப் பூர்ண ஆயிசாக இருப்பான் என்று ஜோசியர் நிச்சயமாகச் சொன்னார். ஆகையால், நம்முடைய எதிரிகள் அவனுடைய உடம்பில் ஒட்டிய தூசிக்குக்கூட ஒரு கெடுதலும் செய்ய முடியாது என்பதை நாம் நிச்சயமாக எண்ணிக் கொள்ளலாம். அதே துஷ்டர்கள் ஆதியில் என் பெண்ணைக் குழந்தைப் பருவத்திலேயே அபகரித்துக் கொண்டு போனார்களே, அவர்களுடைய கருத்து எள்ளளவாவது பலித்ததா? பதினைந்து பதினாறு வருஷ காலமாய் அவர்கள் அரும்பாடுபட்டு அந்தப் பெண்ணை வளர்த்து முடிவில் அதை அதற்கு உரியவர்களிடம் ஒப்புவிக்கும்படி நேர்ந்ததல்லவா. அப்படியே தான் இப்போதும் அவர்களுடைய சதியாலோசனை எதிர்மறையான பலனைத்தான் தரப் போகிறது. இப்போது கிரக பேதத்தால் காலபலன் கொஞ்சம் தாறுமாறாக இருக்கிறது. அதற்கு ஒரு சாந்தியாக நாம் தெய்வ பூஜையை நிரம்பவும் பக்தி சிரத்தையோடு அதிக விமரிசையாய் நடத்துவதொன்றே போதுமானது. அதோடு ஏழைகளுக்கு அன்ன தானம் வஸ்திரதானம் முதலியவைகளை நாம் ஏராளமாக வழங்க வேண்டும். கலியாணப் பெண்ணுக்கும் இப்போது காலபலன் சரியாக இராதென்றே தோன்றுகிறது. அதற்காக பல தினங்கள் சுமங்கலிப் பிரார்த்தனை நடத்தி நூற்றுக் கணக்கில் சுமங்கலி ஸ்திரீகளை உபசரித்து உண்பித்து ஒவ்வொரு தினமும் புடவை ரவிக்கை முதலியவை வழங்க வேண்டும். நாம் கடவுளை ஸ்தோத்திரம் செய்வதோடு, நம்மிடம் தானம் பெறும் ஆயிரக்

கணக்கான ஜனங்களும் நமக்காக பகவானை ஸ்தோத்திரம் செய்தால், அப்போதாவது கடவுளின் மனம் கனியாதா? அத்தனை ஜனங்களில் புண்ணியாத்மாக்கள் எத்தனையோ பேர் இருப்பார் கள், அவர்களுடைய பிரார்த்தனை பலன் தராமல் ஒருநாளும் வீணாகாது; போலீசார் மனிதப் பிரயத்தனங்களைச் செய்யட்டும்; நாம் தெய்வப் பிரார்த்தனையை நடத்துவோம். நாளைய தினம் முதல் நம்முடைய பிள்ளையாண்டான் அகப்படுகிற தினம் வரையில் இந்தப் பூஜை தான தருமம் முதலியவற்றை எல்லாம் நடத்தும் திருப்பணியை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஒரு நாளைக்குக் குறைந்தது பதினாயிரம் ரூபாய் வீதமாவது செலவு செய்ய வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். அண்ணா இந்த என்னுடைய அவாவை நான் நிறைவேற்றி வைக்க உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று வேலாயுதம் பிள்ளையை நோக்கிக் கூறினார். அதைக் கேட்ட வேலாயுதம் பிள்ளை மறுமொழி கூறுவதற்கு முன் மற்ற சில விருந்தினரும் உடனே பேசத் தொடங்கி, "எங்களுடைய அபிப்பிராயமும் அதே மாதிரியாக இருக்கிறது. ஆனால், எல்லாத் தினங்களிலும் சுந்தரம் பிள்ளை அவர்கள் பணச் செலவு செய்வதென்றால் அது இவ்விடம் கூடியுள்ள மற்ற தனவந்தர்களுடைய மனசுக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. ஆகையால், ஒவ்வொரு நாளைய மண்டகப்படியை ஒவ்வொருவர் நடத்த வேண்டும் என்று அண்ணன் அனுமதிக்க வேண்டும்" என்று நிரம்பவும் வணக்கமாகக் கூறினர்.

உடனே வேலாயுதம் பிள்ளை மகிழ்ச்சியோடு பேசத் தொடங்கி, "இப்போது முக்கியமாக நாம் தெய்வ பூஜை அதிதிபூஜை ஆகிய காரியங்களை நடத்த வேண்டும் என்பதைப் பற்றி எல்லோரும் ஒரே மனசாய் இருக்கிறோம். அப்படியே அதை நடத்துவோம். பணச் செலவு செய்வதைப் பற்றி இப்போது நாம் ஏன் வாத தர்க்கங்கள் செய்ய வேண்டும். யார் பணம் போட்டால் என்ன? எல்லாரிடத்தில் இருக்கும் சொத்தும் கடவுளுடைய உடைமை. எல்லாம் அவருடைய சிருஷ்டிப் பொருளே. கடவுளுக்கும், தான தருமங்களுக்கும் பணச் செலவு செய்வதற்கு ஒரு வரம்பும் உண்டா? அதைச் செய்கிறவர்களைத் தடுப்பதைப் போன்ற மகா பாதகமான காரியம் வேறு எதுவுமில்லை. ஆகையால், யார்

யாருக்குப் பிரியமோ, அவரவர்கள் செலவு செய்யலாம். அதோடு, என் கருமவினை தொலைய, நானும் என்னால் இயன்ற வரையில் செலவு செய்கிறேன். எல்லோரும் சேர்ந்து இந்தக் காரியத்தை அமோகமாக நடத்தி வைப்போம். ஆனால், நாம் எல்லோரும் சேர்ந்து பலதினங்கள் வரையில் இவ்விடத்திலிருந்து இந்தக் காரியங்களைச் செய்வது நம்முடைய சம்பந்திப் பிள்ளைக்கு நிரம்பவும் சிரமமாகவும், அசௌகரியமாகவும் இருக்கும் என்பது நிச்சயம். ஆகவே, நாம் கோமளேசுவரன் பேட்டையில் உள்ள என்னுடைய கிரகத்திற்குப் போய்விடுவதே உசிதமாகத் தோன்று கிறது" என்றார்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளையின் கண்கள் கலங்கின. அவரது முகம் வாட்டமடைந்தது. அவர் வேலாயுதம் பிள்ளையை நோக்கி நிரம்பவும் மரியாதையாகவும், வணக்கமாகவும் பேசத் தொடங்கி, "அண்ணா! தங்களைப் போலவும் தங்கள் பந்துக் களைப் போலவும் உள்ள புண்ணியாத்மாக்களின் தரிசனமும் சகவாசமும், நான் எத்தனை ஜென்மங்களில் தவம் செய்தாலும் எனக்குக் கிடைக்குமா? இதை நான் ஒரு பெரிய பாக்கியமாக அல்லவா மதித்து அப்படியே பூரித்துப் போய் இருக்கிறேன். அதுவுமன்றி, அது யாருடைய காரியம்? என் செல்வ மருமகப் பிள்ளை காணாமல் போயிருப்பதைக் கருதிச் செய்யப்படும் இந்தப் புண்ணிய காரியம் முழுதையும் செய்து வைக்க முக்கிய மாக நான் தானே கடமைப்பட்டவன். ஆகையால், தாங்களாவது மற்றவராவது எள்ளளவும் கிலேசம் என்பதே கொள்ளாமல் எத்தனை வருஷ காலமானாலும் இவ்விடத்திலேயே இருந்து இந்தக் காரியத்தை நடத்தலாம். இந்த பங்களாவையும் என் சொத்துக்களையும் ஆள் மாகாணங்களையும், என்னையும் நான் இந்த நிமிஷம் முதல் தங்கள் வசம் ஒப்புவித்துவிட்டேன். தங்கள் பிரியப்படி நடந்து கொள்ளலாம்" என்று நிரம்பவும் உருக்கமாக மொழிந்தார். முடிவாக சுந்தரம் பிள்ளை புன்சிரிப்போடு பேசத் தொடங்கி, "நாங்கள் வருஷக் கணக்கில் இங்கே இருக்க வேண்டும் என்று நம்முடைய புதிய சம்பந்திப் பிள்ளை சொன்னது ஒரு விதத்தில் சந்தோஷத்தை உண்டாக்குகிறதானாலும், இந்தச் சந்தர்ப் பத்தில் அது மிகுந்த விசனத்தைத் தருகிறது. அடுத்த நிமிஷத்தில்

நம்முடைய பிள்ளையாண்டான் வந்துவிட வேண்டும் என்றும், நம்முடைய பூஜை சமாப்தி அடைய வேண்டும் என்றும், எல்லோரும் அவரவர்கள் இருப்பிடத்தை அடைய வேண்டும் என்றும், நாம் எல்லோரும் கடவுளிடம் முறையிட்டுப் பிரார்த்தனை செய்து கொள்வோம்" என்றார்.

அதன் பிறகு, வேலாயுதம் பிள்ளையும் மற்றவர்களும் கலந்து பேசி, காணாமற் போயிருக்கும் கந்தசாமி அகப்படுகிற வரையில் எல்லோரும் அவ்விடத்திலேயே இருப்பதென்றும், சிவபூஜை தான தருமம் முதலியவற்றை ஒவ்வொரு நாளும் அபரிமிதமாய்ச் செய்வதென்றும், கந்தசாமி வந்தவுடன் நிச்சயதார்த்தம் கலியாணம் ஆகிய எல்லாச் சடங்குகளையும் நிறைவேற்றிக் கொண்டே ஊருக்குத் திரும்புவதென்றும் தீர்மானித்துக் கொண்டு, அதற்கு ஆகவேண்டிய காரியங்களை எல்லாம் அப்போதிருந்தே செய்யத் தொடங்கினார்கள்.

அவர்களது நிலைமை அங்ஙனம் இருக்க, பெண் விருந்தினர் யாவரும் தங்கள் போஜனத்தை முடித்துக் கொண்ட பின்னர், கந்தசாமிக்குக் கட்டுவதாய் வரிக்கப்பட்டிருந்த பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டு, அதைத் திரிபுரிசுந்தரி யம்மாளிடம் வெளியிட, அந்த அம்மாள் அந்த செய்தியை முன்னாகவே மனோன்மணியம்மாளுக்கு அறிவித்து விட்டு எல்லோரையும் தன்னோடு கூட அழைத்துக் கொண்டு மனோன்மணியம்மாள் இருந்த விடுதியை அடைந்தாள்.

அப்போது மனோன்மணியம்மாள் எவ்வித நிலைமையில் இருந்தாள் என்பதை நாம் உணர்வது அவசியமான விஷயம்.

மனோன்மணியம்மாள் இங்கிலீஷ் கலாசாலையில் பி.ஏ., வகுப்பில் படித்தாள் என்பதில் இருந்தும், அவள் கந்தசாமியுடன் பேசிய மாதிரியில் இருந்தும், அவள் நிரம்பவும் பண்படுத்தப்பட்ட மனமும், மகா கூர்மையான புத்தியும், சிறந்த பகுத்தறிவும் வாய்ந்தவளாய் இருந்தாள் என்பது நமது வாசகர்களுக்கு நன்கு விளங்கி இருக்கும். ஆயினும், இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இங்கிலீஷ் படிப்பில் நமது நாட்டில் உள்ள தெய்விகம் பொருந்திய

நூல்கள் எதுவும் பாடமாக வைக்கப்படுவதில்லை ஆதலால், நமது சுயயோக்கியதையும், சுயமதிப்பும் இவ்வளவு என்பதை இக்காலத்து மாணவர்கள் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் இல்லாது போனது பற்றி, அவர்கள் நம் தேசத்து விஷயங்களை இகழவும், பிற தேசத்து விஷயங்களைப் புகழவும் நேருகின்ற தென்பது நாம் கூறாமலே விளங்கும். ஆகவே, மனோன்மணியம்மாள் ஆரம்பத்தில் தவறான கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தது, அவளுக்குப் போதிக்கப்பட்ட கல்வி முறையினால் ஏற்பட்ட பலன் என்றே நாம் கொள்ள வேண்டுமன்றி, அவள் உண்மையான விவேகமும் நற்குண நல்லொழுக்கமும் அற்றவள் என்று கொள்வது சிறிதும் பொருந்தாது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறே பதம் என்கிறபடி, சூக்ஷம புத்தியுடைய மேதாவிகளின் மனம் மின்னல் தோன்றி மறைவது போலப் பளிச்சென்று விஷயங்களின் உண்மைகளை கிரகித்து அதிதுரிதத்தில் ஆக்ஷேபனை சமாதானங்களை அதுவே செய்து கொண்டு போய் உண்மையைக் கண்டு பிடித்துவிடும் ஆதலால், வேத சாஸ்திரங் களின் சாரம் போலவும், உலகத்தில் உள்ள சர்வ மதங்களையும் கடைந்து திரட்டி எடுத்த வெண்ணெய் போலவும் அமைந்துள்ள தாயுமான சுவாமிகளின் முதல் மூன்று பாக்களைக் கேட்டு, அவற்றுள் குன்று குன்றாகக் குவிந்து சமுத்திரம் போல ஆழங் காண இயலாமல் பதிந்து கிடக்கும் உண்மை ஞானத்தை எண்ண எண்ண, மனோன்மணியம்மாளின் தீக்ஷண்ய புத்தி சடேரென்று மாறுபட்டு பொறித்தட்டும் நேரத்தில் உண்மை இன்னது என்பதைக் கண்டு, அவளது மனப்போக்கையும் நடையுடை பாவனைகளையும் அடியோடு மாற்றி அவளுக்குப் புத்துயிர் கொடுத்து விட்டது. ஆகவே, அவள் தனது இங்கிலீஷ் கொள்கை களை எல்லாம் ஒரே நொடியில் விலக்கினாள்; தான் அது வரையில் சென்ற துறை தவறான தென்பதை உணர்ந்து கொண்டாள், மனிதர் கல்வி கற்பது இந்த லோகத்தில் ஏராளமாகப் பொருள் தேடி, ஆடம்பரமாக உண்டு உடுத்தி, எவருக்கும் கீழ்ப்படியா வணங்காமுடி மன்னராய் இருந்து குதூகலமாகப் பொழுதைப் போக்குவதற்கு மாத்திரமல்ல என்பதையும், அவைகளைக் காட்டிலும் மேலானதும், மனிதர் சாசுவதமாக நாடக் கூடியதுமான

புருஷார்த்தம் வேறொன்று இருக்கின்ற தென்றும், அதை அடைவதற்கு மனிதர் அவரவர்களுக்குக் கடவுளால் ஏற்படுத்தப் பட்டுள்ள கடமைப்படி ஒழுகுவது அவசியம் என்றும் மனோன் மணியம்மாள் உடனே கண்டு புது மனுஷியாக மாறி நின்ற தருணத்தில், தனக்குத் தனது தந்தையால் வரிக்கப்பட்ட மணமகனான கந்தசாமி பெண் வேஷந் தரித்து வந்து, தான் அதே மனப்போக்குடையவன் என்பதை ஸ்பஷ்டமாக அவளுக்குக் காட்டிப் போனதை எண்ண எண்ண, மனோன்மணியம்மாள் கந்த சாமியே சகலமான அம்சங்களிலும் தனக்குப் பொருத்தமானவன் என்றும், அவனுக்கு நிகரான மணமகன் தான் எந்த உலகத்தில் தேடினாலும் தனக்கு வாய்ப்பது சாத்தியமற்ற காரியம் என்றும் உறுதியாக நினைத்து விட்டாள். அவனது இயற்கையான அழகையும், புத்தி சாதுர்யத்தையும், கண்ணியமான மனப் போக்கையும் மனனம் செய்யச் செய்ய, அவளது மனம் இரவு பகல் அதே நினைவாக இருந்து அதிலேயே சென்று லயித்து விட்டது. சனிக்கிழமை மாலையில் போலீஸ் கமிஷனரும் மிஸ்டர் வெல்டன் துரையும் வந்து கோபாலசாமியிடம் கிரகித்த விஷயங்களை வெளியிட்டதைக் கேட்டது முதல் அந்த மெல்லியல் மடந்தை கந்தசாமியை நினைத்து நினைத்து மதி மயங்கி சித்தப்பிரமை கொண்டு, விரகவேதனையில் அழுந்தி, இன்பமோ துன்பமோ எனப் பகுத்தறிய இயலாத மகா உரமான புதிய மன உணர்ச்சிகளை அடைந்து தனது படுக்கையில் படுத்த வண்ணம் தத்தளித்திருந்தாள். அதே விஷயத்தை அவள் எண்ண எண்ண அவளது மனத்தில் தேவாமிர்த வெள்ளம் ஊற்றெடுத்துக் கரை புரண்டு வழியத் தொடங்கியது. மகா விஷ்ணுவின் மோகனா வதாரம் போல சகலமான ஜகத்தையும் மோகிக்கச் செய்யத் தகுந்த கண்கொள்ளா எழிலோடு பெண்ணுருக் கொண்டு வந்திருந்த கந்தசாமியின் ஜாஜ்வல்லியமான சுந்தர ரூபம் மனோன்மணியம் மாளது கண்களுக்கு எதிரில் அவளைப் பார்த்து ஆனந்தமாய்ப் புன்னகை செய்த வண்ணம் நிற்பது போலவே தோன்றியது. அன்றைய தினம் நடந்த சிவபூஜையைக் கருதி அவள் ஆகாரமே கொள்ளாதிருந்தவள் ஆதலாலும், இரவு முழுதும் தூக்கமே பிடியாதவளாய் இருந்தமையாலும் நாழிகை செல்லச் செல்ல,

அவளுக்குக் கனவிற்கும் நனவிற்கும் வித்தியாசமே தெரியாமல் போய் விட்டது. கந்தசாமியின் நாடகம் அவளது மனமாகிய அரங்க மேடையில் ஓயாமல் நடந்து கொண்டே இருந்தமையால், அது அப்போதே நடப்பது போல அவளுக்குத் தோன்றியது. அவளது மனம் நினைப்பதற்குத் தகுந்தபடி அவளது வாயிலும் சொற்கள் தாமாகவே அப்போதைக் கப்போது தோன்றிக் கொண்டிருந்தன. மறுநாள் காலையில் வெகுநேரம் வரையில் அவள் தனது சயனத்திலேயே பிதற்றிக் கொண்டு படுத்திருந்தாள். பொழுது விடிந்து விட்டதோ, அல்லது, அப்போதும் இரவாகவே இருக்கிறதோ என்பதே அவளுக்குத் தெளிவுபடாதபடி அவளது மனம் அவ்வளவு உரமாகக் கந்தசாமியைப் பற்றிய கவனமே கவனமாகக் கொண்டிருந்தது. வழக்கத்திற்கு மாறாக அவள் வெகு நேரம் வரையில் எழுந்து வெளியில் வராததைக் கண்டு அவளது வேலைக்காரி சந்தேகங் கொண்டு, அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து அந்த மடந்தையைத் தட்டி எழுப்பினாள். அவளது மாந்தளிர் போன்ற மேனி அக்கினி ஜ்வாலையாய் வீசிக் கொண்டிருந்தது. அவளது வாய் சம்பந்தமற்ற சொற்களைக் கூறின. அதை உணர்ந்த வேலைக்காரி மிகுந்த கலவரமடைந்து அவளை மேன்மேலும் தட்டி எழுப்பி உட்காரவைக்க, அப்போதே அவளுக்குச் சிறிதளவு தன் சுய அறிவு ஏற்பட்டது. வேலைக்காரி அவளிடம் வாஞ்சை யாகப் பேசத் தொடங்கி, "ஏன் அம்மா! ஒரு மாதிரியாய்ப் படுத்திருக்கிறாயே! உடம்பு என்ன செய்கிறது? நேற்று முழுதும் பட்டினி கிடந்தது இப்படி உன் உடம்பைச் சீர்குலைத்து விட்ட தென்றே நினைக்கிறேன். எழுந்து பல் தேய்த்துக் கொண்டு கொஞ்சம் ஆகாரம் பார்த்துக் கொண்டால், உடம்பு சரியான நிலைமைக்கு வந்துவிடும். எழுந்திரம்மா!" என்றாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் பேய் கொண்டவள் போல மருள மருள விழித்து அப்படியே மயங்கி ஆடி விழுந்து சிறிது நேரம் கழித்துப் பேசத் தொடங்கி, "நேற்று முதல் எனக்கு உடம்பில் இன்னதென்று சொல்ல முடியாத அவஸ்தையாக இருக்கிறது. வயிற்றில் பசியே இல்லை. நீ ஆகாரம் என்ற சொல்லை எடுக்கும் போதே எனக்குக் குமட்டல் எடுக்கிறது. எனக்கு ஒன்றும் தேவையில்லை. பேசாமல் படுத்துக் கொண்

டிருப்பதே ஆனந்தமாகத் தோன்றுகிறது. என் உடம்பு நெருப் பாய்ப் பற்றி எரிகிறது. மனம் அப்படியே படபடத்துத் தவித்துக் கொண்டே இருக்கிறது. என்ன செய்வதென்பது தெரியவில்லை" என்று கூறிவிட்டு, அப்படியே துவண்டு படுக்கையில் சாய்ந்து விட்டாள்.

அதைக் கண்ட வேலைக்காரி திடுக்கிட்டுப் பதறிப் போய், "அம்மா! நீ சொல்வதைக் கேட்க, என் மனம் பெருத்த திகில் கொள்கிறது. ஒருவேளை உனக்குப் பெரிய அம்மை காணுமோ என்னவோ என்ற சந்தேகம் தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும், நான் உடனே போய் அப்பாவை அழைத்து வருகிறேன். டாக்டர் களைத் தருவித்துப் பார்த்தால், உண்மை இன்னதென விளங்கிப் போகும். அதற்குத் தகுந்தபடி வைத்தியம் செய்யலாம்" என்று உருக்கமாக வருந்திக் கூறினாள். அதைக் கேட்ட மனோன்மணி யம்மாள், "ஐயோ! நீ பேசுவதைக் கேட்பதே எனக்கு மகா வேதனையாக இருக்கிறதே! இன்னும் அப்பாவையும் டாக்டர் களையும் கூப்பிட்டால், அதை நான் தாங்கவே முடியாது. நீ யாரையும் கூப்பிட வேண்டாம். பேசாமல் அப்பால் போ, நான் கூப்பிடும் போது வா" என்று நயந்து இறைஞ்சிக் கூறினாள்.

வேலைக்காரி, "குழந்தாய்! நம்முடைய சம்பந்தி ஐயா சிவ பூஜைக்கு ஆரம்பம் செய்து விட்டார்கள். உன்னை அப்பா அழைப்பார்களே; அதற்கு நான் என்ன சொல்லுகிறது? எல்லா வற்றிற்கும் நீ எழுந்து பல் தேய்த்துக்கொள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். மனோன்மணியம்மாள் சித்தப்பிரமை கொண்டவளாய்ச் சிறிது ஆடி விழுந்த பின் பேசத் தொடங்கி, "ஜலம் கொஞ்சம் கொண்டு வா, நான் இப்படியே பல் தேய்த்துக் கொள்ளுகிறேன். எனக்கு உடம்பு இப்படி இருப்பதாக அப்பாவிடம் சொல்ல வேண்டாம். அவர் கூப்பிட்டால், நான் அயர்ந்து படுத்துத் தூங்குவதாய்ச் சொல்லிவிடு" என்றாள். வேலைக்காரி அதற்கிணங்கி, உடனே வெளியில் சென்று ஜலம் பற்பொடி முதலியவற்றைக் கொணர்ந்து கொடுக்க, மனோன்மணி யம்மாள் தட்டித்தடுமாறி எழுந்து அப்பால் சென்று பல் தேய்த்துத் தனது தேகத்தைச் சுத்தி செய்து கொண்டு அப்படியே ஒரு கை

ஜலத்தைப் பருகிவிட்டு வந்து கட்டிலின் மீது படுத்துக் கொண்ட அடுத்த நிமிஷம் அவளது கண்கள் மூடிக்கொண்டன. அவளது அகக்கண்ணில் மறுபடியும் கந்தசாமியின் இனிய வடிவம் தோன்றி ஆனந்த நிர்த்தனம் செய்யத் தொடங்கியது. அந்தப் பெண்மணி தனக்கருகில் வேலைக்காரி இருக்கிறாள் என்பதையும், தனது தேகத்தையும் மறந்து அந்த மானசீக நாடகத்தில் தனது முழு கவனத்தையும் செலுத்தியபடி அதிலேயே ஆழ்ந்து உயிரற்றவள் போல ஆய்விட்டாள். வேலைக்காரி வெகுநேரம் வரையில் நின்று பார்த்தாள், மறுபடி மெதுவாய் இரண்டு மூன்று முறை அந்த மடந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுப் பார்த்தாள். மறுமொழி இல்லை. அவள் அயர்ந்து தூங்குகிறாள் என்று தீர்மானித்துக் கொண்டவளாய் வேலைக்காரி வெளியில் போய் விட்டாள்.

அன்றைய பகலில் வேலாயுதம் பிள்ளையின் சிவபூஜை நடந்தேறியது. முதல் நாள் செய்தது போல மனோன்மணியம் மாளோடு தாம் போக வேண்டும் என்று பட்டாபிராம பிள்ளை எண்ணி, அவளது வருகையை வெகுநேரம் வரையில் எதிர்பார்த் திருந்து நேராக அவளது விடுதிக்குப் போய்ச் சேர்ந்து அவள் கட்டிலின் மீது படுத்து காடாந்தகாரமாய்த் தூங்கிக் கொண்டிருப் பவள் போலக் காணப்பட்டதை உணர்ந்து, அவளுக்கு உடம்பு சற்று அசௌக்கியப் பட்டிருப்பதாகவும், தூங்கி விழித்தால், அது சரிபட்டுப் போகும் என்று தீர்மானித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு ஓசை செய்யாமல் வெளியில் சென்று தாம் மாத்திரம் சிவபூஜைக்குப் போய் இருந்தார். அன்று மனோன்மணியம்மாள் பூஜைக்கு வரவில்லை என்பதை மற்றவர் எவரும் கவனிக்காமல் தத்தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டே இருந்து விட்டார்கள். பூஜை அதிதி போஜனம் முதலியவை நிறைவேறின. பட்டாபிராம பிள்ளை சிறிதளவு ஆகாரம் பார்த்துக் கொண்டார். மனோன்மணியம்மாள் நன்றாகத் தூங்கி எழுந்து போஜனம் செய்து கொண்டு வழக்கப்படி தனது தெளிவான நிலைமையை அடைந்திருப்பாள் என்று அவர் எண்ணித் தனது கச்சேரியில் இருந்து வந்திருந்த சில காகிதக் கட்டுகளைப் படித்து அதற்குரிய

உத்தரவுகளைப் பிறப்பிப்பதில் அவர் அன்றைய பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார் ஆதலால், அவர் அன்றைய தினம் மனோன்மணியம்மாளைக் கவனிக்க இயலாமல் போய் விட்டது.

காலையில் கட்டிலில் படுத்த மனோன்மணியம்மாள் மாலை வரையில் பேச்சு மூச்சின்றி ஒரே நிலையாகப் படுத்திருந்ததைக் கண்ட வேலைக்காரி நிரம்பவும் திகில் கொண்டு நடுநடுங்கி மனோன்மணியம்மாளைத் தட்டி எழுப்பி, "அம்மா! என்ன விபரீதம் இது? இப்போது அந்திவேளை நெருங்கி விட்டது. காலை முதல் ஜலம்கூட சாப்பிடாமல் நீ இப்படிப் படுத்திருப்பதைக் காண என்னால் சகிக்கவே முடியவில்லை. நேற்றுகூட நீ பட்டினியாய் இருந்தாய். அப்படி இருக்க, வயிறு மந்தமாய் இருக்கிறதென்று சொல்வதற்கும் இடமில்லை. இப்போதாவது எழுந்து கொஞ்சம் சாப்பிடம்மா!" என்று நிரம்பவும் கெஞ்சி மன்றாடி வேண்டிக் கொண்டாள். அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் நிரம்பவும் வேதனைப்பட்டவளாய், "அடி! ஏனடி சாப்பாடு சாப்பாடு என்று இப்படி ஓயாமல் என்னைக் கொன்று கொண்டே இருக்கிறாய்; நீ பேசாமல் இருந்தால், அதுவே பசிதாகம் எல்லாம் தீர்ந்த மாதிரி இருக்கும்" என்றாள்.

அதைக் கேட்ட வேலைக்காரி அவ்வளவோடு பேசாதிராமல் அவ்விடத்தை விட்டு சமையலறைக்குப் போய் ஏதோ சில ஆகாரம், பால், தண்ணீர் முதலியவற்றை எடுத்து வந்து கட்டிலண்டை வைத்துவிட்டு அவளுக்கெதிரில் போய் உட்கார்ந்து கொண்டு அவளை மிகுந்த வாஞ்சையோடு தடவிக் கொடுத்து, "அம்மா! நீ இப்படி சுத்தமாய்ப் பட்டினி கிடப்பதனாலேயே மேன் மேலும் களைப்பும் சோம்பலும் அதிகரித்து, ஆகாரம் சாப்பிடவும் பலமில்லாமல் செய்திருக்கின்றன. நான் சாதத்தைப் பிசைந்து வாயில் ஊட்டுகிறேன். சாப்பிடம்மா! நீ இப்போது கொஞ்சமாவது சாப்பிடா விடில் நான் அப்பாவிடம் போய் இதைச் சொல்லத் தான் வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் என்னைக் கடுமையாகக் கோபித்துக் கொள்வார்கள்" என்று கூறியபின் ஆகாரத்தை எடுத்து வாயில் ஊட்டத் தொடங்கினாள். அவள் செய்தது மனோன்மணி யம்மாளுக்குச் சகிக்க ஒண்ணாத மரண வேதனையாக இருந்தது

ஆனாலும், அவள் தனது தந்தையை அழைத்துக் கொண்டு வந்து விடப் போகிறாளே என்ற அச்சத்தைக் கொண்டவளாய்த் தனது வாயைத் திறந்தாள். ஒரு கவளம் ஆகாரம் தொண்டை வரையில் சென்றது. வேப்பங்காயை விழுங்குகிறவர்களுக்கு எப்படிக் குமட்டலும் வாந்தியும் உண்டாகுமோ அம்மாதிரி அவள் உடனே உவ்வா உவ்வா என்று பலத்த ஓசையோடு வாந்தி எடுக்கத் தொடங்கினாள். அதைக் கண்ட வேலைக்காரி பெருத்த பீதியும் நடுக்கமும் அடைந்து, சாதம் கொடுப்பதை நிறுத்திக் கொண்டு, சுடச்சுட இருந்த பாலை எடுத்து, "இந்தப் பாலையாவது சாப்பிடம்மா இது வாந்தி செய்யாது" என்று அன்போடு கூறி அதை வாயில் பெய்ய, மனோன்மணியம்மாள் அதை மாத்திரம் நாலைந்து வாய் வாங்கி விழுங்கிய பின் அதுவும் வேண்டாம் என்று கையால் சைகை செய்து தடுத்துவிட்டு, கண்களை மூடிக் கொண்டு அப்படியே சோர்ந்து படுத்து விட்டாள். உடனே அவளது உடம்பு குபீரென்று வியர்த்துத் தண்ணீர் மயமாகி விட்டது. அவளது உடம்பின் ஒவ்வோர் அணுவும் காற்றிலசையும் மாந்தளிர் போல நடுங்கியது நன்றாகத் தெரிந்தது. அதற்கு மேல் அவளைத் தான் உபத்திரவிக்கக் கூடாதென்று நினைத்தவளாய் வேலைக்காரி மிகுதி இருந்த ஆகாரவஸ்துக்களை எல்லாம் அப்புறப்படுத்தி விட்டுத் தனது போஜனத்தை முடித்துக் கொண்டு, அந்த விடுதியிலேயே வந்து படுத்துக் கொண்டு அந்த இரவைக் கழித்தாள். மறுநாள் காலையில் படுக்கையை விட்டு எழுந்த வேலைக்காரி மனோன்மணியம்மாளை நோக்கினாள். அவளது நிலைமை முதல் நாளில் இருந்ததைவிட அதிகப் பரிதாபகரமாகவும் கேவலமாகவும் இருந்தது. அவளது தேகம் துரும்பு போல மெலிந்து தளர்வடைந்து சோர்ந்து போயிருந்தது. வேலைக்காரி அவளைத் தட்டி எழுப்பிப் பார்த்தாள். அவள் எழுந்திருக்கவுமில்லை; பேசவுமில்லை. வேலைக்காரி மிகுந்த கலவரமடைந்து, தான் அதற்கு மேல் சும்மா இருப்பது சரியல்ல என்று நினைத்து உடனே பட்டாபிராம பிள்ளையிடம் சென்று அந்தச் செய்தியைத் தெரிவித்தாள். அவர் நிரம்பவும் கவலை கொண்டவராய் உடனே புறப்பட்டு மனோன்மணியம்மாளது விடுதியை அடைந்து கட்டிலண்டை சென்று பார்த்தார். தமது

புதல்வி வாடி வதங்கித் துவண்டு முற்றிலும் அலங்கோலமாயப் படுத்திருப்பதைக் கண்டு அபாரமான திகிலும் கலக்கமும் அடைந்து, "அம்மா! அம்மா! மனோன்மணீ! மனோன்மணீ!" என்று இரண்டு மூன்று தரம் அன்பாக அழைத்துப் பார்த்தார். மறுமொழி இல்லை. அவரது திகிலும் நடுக்கமும் அதிகரித்தன. அவர் கட்டிலண்டை நெருங்கி, அவளது முதுகில் மெதுவாக இரண்டு மூன்று முறை தட்டி, "மனோன்மணீ! மனோன்மணீ" என்று மிகுந்த அன்போடும் உருக்கமாகவும் கூப்பிட, அந்தப் பெண்மணி மெதுவாகத் தனது கண்களைத் திறந்து கொண்டு பார்த்து தனது தந்தை வந்து நின்றதைக் கண்டு திடுக்கிட்டு வாரிச் சுருட்டிக் கொண்டெழுந்து கட்டிலை விட்டுக் கீழே இறங்கி அலங்கோலமாய் இருந்த தனது கேசத்தையும் ஆடையையும் சீர்திருத்திக் கொண்டு நாணிக் கோணி தூர விலகி நின்றாள். அதற்கு முன் இங்கிலீஷ் நாகரிகத்தின்படி அவள் சிறிதும் கூச்சமின்றி தனது தந்தையோடு சமமாக நின்றும், சமமாக நாற்காலியில் உட்கார்ந்தும் நேருக்கு நேர் துணிவாகப் பேசியதற்கு முற்றிலும் மாறாக நடந்து கொண்டாள். அவளை அறியாமல் அவளது தேகம் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்ற குணங்களைத் தானாகவே தோற்றுவித்தது. தான் ஏதோ பெருத்த தவறு செய்துவிட்டவள் போல அவள் தனது தந்தையின் முகத்தைப் பார்க்க வெட்கித் தனது பார்வையை அப்புறமும், கீழேயும் செலுத்தி, வேறே எதையோ கவனிப்பவள் போலத் தனது சேலைத் தலைப்பைப் பிடித்து நெருடிய வண்ணம் நின்றாள். அவளது தேகம் வாடித் துவண்டு தளர்ந்து போயிருந் தமையால், அவள் நிற்கமாட்டாதபடி அவளது கால்கள் தள்ளாடின. இடை மெலிந்து அசைந்தாடியது. சிரம் கழுத்தின் மேல் நிற்க ஆற்றாமல் அங்குமிங்கும் சாய்ந்தது. அவளது நூதன தோற்றத்தைக் கண்டு வியப்பும் கலக்கமும் அடைந்த பட்டாபிராம பிள்ளை, "அம்மா! ஏன் இப்படி இளைத்துப் போயிருக்கிறாய்? நேற்று நான் வந்து பார்த்த போது நீ தூங்கிக் கொண்டிருந்தாய்; நீ சாதாரணமாய்ப் படுத்திருக்கிறாய் என்றும், உன்னை எழுப்பக் கூடாதென்றும் நினைத்தல்லவா நான் பேசாமல் போய்விட்டேன். நீ இரண்டு தினங்களாய் சாப்பிடவே இல்லையாம். அந்த முட்டாள் வேலைக்காரி இதுவரையில் பேசாதிருந்து விட்டு இப்போது தான்

வந்து என்னிடம் இதைத் தெரிவித்தாள். வயிறு மந்தமாக இருக்கிறதா? நான் இப்போது தொட்டுப் பார்த்ததில், கடுமையான ஜுரம் போலத் தெரிந்தது. நீ ஏன் எழுந்து தூர நிற்கிறாய்? வந்து கட்டிலிலேயே படுத்துக்கொள். நான் டாக்டரை வரவழைக்கிறேன்" என்று நிரம்பவும் கனிகரமாகக் கூறினார்.

அதைக் கேட்ட பெண்மணி வாய் திறந்து பேசுவதற்கும் லஜ்ஜை அடைந்தவளாய்ச் சிறிது நேரம் கீழே குனிந்தபடி நின்று, "அப்பா! டாக்டரை அழைக்க வேண்டாம். எனக்கு உடம்பில் வியாதி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பசி தாகம் முதலிய எதுவும் உண்டாகவில்லை. இன்னம் கொஞ்சகாலம் உடம்பைப் பேசாமல் போட்டிருந்தால் சரிப்பட்டுப் போகும் என்று நினைக்கிறேன்" என்றாள். அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை, "எப்போது முதல் உடம்பு இப்படி இருக்கிறது? என்ன காரணத்தி னால் உடம்பு இப்படி இருக்கிறதென்பது தெரியவில்லையா?" என்றார்.

மனோன்மணியம்மாள் சிறிது தயங்கி மேலும் கீழும் பார்த்து, "அப்பா! எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. இந்த மன்னார்குடியாரை நான் கண்டது முதல், என் மனசில் ஒரு மாதிரி யான மன எழுச்சி உண்டாகிக் கொண்டே இருந்தது. பசி தாகம் முதலிய எதுவும் தோன்றாமல் இருந்தது. அவர்கள் செய்த பூஜையைப் பார்த்த முதலும், மிஸ்டர் வெல்டன் துரை சொன்ன ஆச்சரியகரமான செய்தியைக் கேட்ட முதலும் என் மனசு கட்டிலடங்காமல் பொங்கிப் பூரித்துக் கொண்டே இருக்கிறது. பசி தாகம் முதலிய எதுவும் தோன்றவில்லை. வேலைக்காரி உங்க ளிடம் இதைப் பற்றிச் சொல்வதாகச் சொன்னாள். நான்தான் சொல்ல வேண்டாம் என்றேன்" என்றாள்.

அதைக் கேட்ட பட்டாபிராம பிள்ளை பிரமிப்படைந்து திகைத்துப் போய்ச் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பிறகு மிகுந்த வாஞ்சையோடு தமது குமாரத்தியை நோக்கி, "அம்மா! புது மனிதர்களையும், நமக்கு நெருங்கிய பந்தக்கள் ஆகப் போகிறவர் களையும் முதன் முதலில் காணும் போது, எல்லோருக்கும் இதே

மாதிரி தான் ஒருவித மன எழுச்சி உண்டாகும். இது இயற்கைதான். ஆனாலும், அதற்காக நீ ஒரேமுட்டாய் இரண்டு மூன்று தினங் களாய்த் தண்ணீர்கூட அருந்தாமல் இருந்தால், அந்த உடம்பின் கதி என்ன ஆகிறது? நீ உடம்பை இப்படி முற்றிலும் அசட்டை செய்வது ஒழுங்கல்ல. பிடித்த வரையில் கொஞ்சம் ஆகாரம் பார்த்துக்கொள். அதுவுமன்றி நான் உன்னிடம் முக்கியமான ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு நீ சரியான மறுமொழி சொல்ல வேண்டும்" என்றார்.

மனோன்மணியம்மாள் திடுக்கிட்டு அவர் என்ன கேள்வி கேட்கப் போகிறாரோ என்று அஞ்சி அவரது முகத்தை ஆவலோடு நிமிர்ந்து பார்ப்பதும் கீழே குனிவதுமாய் நின்றாள். பட்டாபிராம பிள்ளை, "அம்மா! நீ இந்த இரண்டு தினங்களாய் இவர்களுடன் நெருங்கிப் பார்த்தாய். அதுவுமன்றி, அன்றைய தினம் கந்தசாமி யுடனும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தாய். உன்னுடைய அபிப்பிராயம் இப்போது எப்படி இருக்கிறது? இவர்களுடைய சம்பந்தம் உன் மனசிற்குப் பிடிக்கிறதா இல்லையா? நீ பயப் படாமல் உன் மனசை வெளியிட்டுச் சொல். நீ எதையும் சொல் லாமல் மனசிற்குள்ளாகவே வைத்துக் கொண்டு உன் உடம்பைச் சித்திரவதை செய்து கொள்வது சரியல்ல. வெட்கப்படாமல் என்னிடம் நிஜத்தைச் சொல்லிவிடு" என்றார்.

அந்த எதிர்பாராத சொல்லைக் கேட்டு அந்த மடந்தை திடுக்கிட்டு வெட்கி என்ன மறுமொழி கூறுவதென்பதை அறியாதவளாய்க் கீழே குனிந்தபடி மௌனமாக நின்றாள். மன்னார்குடியாரது சம்பந்தம் வேண்டாம் என்று அவள் நினைப்பது போன்ற அருவருப்புக் குறியாவது, அதிருப்திக்குறியாவது, கோபக்குறி யாவது, அவளது முகத்தில் காணப்படவே இல்லை; அவளது மனம் கட்டிலடங்காக் களிப்பையும் குதூகலத்தையும் கொண்டு, அதை வெளியில் காட்டாமல் மறைக்க முயல்வது போன்ற குறியே முகத்தில் தெள்ளிவாகத் தெரிந்தது; கந்தசாமியின் மீது காதல் கொண்டே அவள் அவ்வாறு விரக வேதனையால் தவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை ஒரு நொடியில் யூகித்துணர்ந்து

கொண்ட பட்டாபிராம பிள்ளை அவளை நோக்கி, "அம்மா! சரி, நீ என் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டாம்; நீ பட்டினி கிடப்பதால், உன் உடம்பு அலுத்துப் போய்த் தத்தளிக்கிறது. நீ வந்து மறுபடி கட்டிலில் படுத்துக்கொள். எப்படியாவது பிரயாசைப்பட்டு நீ வேளைக்கு வேளை ஏதாவது கொஞ்சம் ஆகாரம் பார்த்துக்கொள்; மற்ற எந்த விஷயத்தையும் உன்னுடைய பிரியப்படி நான் கூடிய சீக்கிரம் நிறைவேற்றி வைக்கிறேன். நீ கொஞ்சமும் கவலைப்படாதே அம்மா" என்று கூறியபின் அவ்விடத்தை விட்டு நேராக வேலாயுதம் பிள்ளை இறங்கியிருந்த விடுதிக்குப் போய்க் கண்ணப்பாவைக் கண்டு அவன் மூலமாய் மனோன்மணியம்மாளது நிலைமையைத் திரிபுர சுந்தரியம்மாளுக்குத் தெரிவித்து, தாம் என்ன செய்வதென்பதைப் பற்றி அபிப்பிராயம் கேட்க, திரிபுரசுந்தரியம்மாள் சிறிது நேரம் சிந்தனை செய்து, மனோன்மணியம்மாளிடம் தான் போனால் அவள் தன்னிடம் அவ்வளவு தாராளமாக மனதை வெளியிட மாட்டாள் என்றும், வடிவாம்பாளை அனுப்பினால், அவள் மனோன்மணியம்மாளோடு கூடவே இருந்து, அவளை அப்போ தைக்கப்போது உண்ணச் செய்து, அவளது மனதிற்குத் தேறுதல் கூறிக் கொண்டிருப்பாள் என்று நினைத்து அதைப் பட்டாபிராம பிள்ளையிடம் வெளியிட, அவர் அதற்கிணங்கினார். அவர்கள் உடனே ஒரு வேலைக்காரியை அழைத்து, அவளுடன் சேர்த்து வடிவாம்பாளை அனுப்பி வைத்தார்கள். பட்டாபிராம பிள்ளை மனோன்மணியம்மாளை விட்டு வந்த அரை நாழிகைக் கெல்லாம் வடிவாம்பாளும் வேலைக்காரியும் அங்கே போய்ச் சேர்ந்தனர். அப்போதும் துவண்டு சோர்ந்து கண்மூடிக் கட்டிலின் மீது சயனித்துக் கொண்டிருந்த அந்த மடமங்கை மனிதர் வந்த காலடி ஓசையைக் கேட்டு விழித்துக் கொண்டு பார்த்து, வடிவாம்பாள் முன்னும், வேலைக்காரி பின்னுமாய் வந்ததைக் கண்டாள். மகா அற்புதமான இயற்கையழகும், நாகரிகமான சிறந்த அலங்காரமும் பெற்றவளாய், அடக்கம், பணிவு, மரியாதை, வாஞ்சை, நாணம் முதலிய இனிய குணங்கள் எல்லாம் அவளுருவாக வந்தனவோ என நினைக்கத் தக்கபடி புன்னகை தவழ்ந்த இனிய முகத்தோடு, தோகைமயில் போல தனக்கருகில் வந்த வடிவாம்பாளைக் கண்ட

மனோன்மணியம்மாள் எழுந்து உட்கார்ந்து கொள்ள முயன்ற வண்ணம், வடிவாம்பாளை நோக்கிப் புன்னகை செய்து, "வா, அக்கா, இப்படி வந்து உட்கார்ந்து கொள்" என்றாள். வடிவாம்பாள் மிகுந்த வியப்பும் உருக்கமும் காட்டி, "என்ன இது! ஏனம்மா உன் உடம்பு இப்படி இளைத்துப் போயிருக்கிறது? இந்த இரண்டு தினங்களாய் நீ கண்ணில் படவில்லையே என்று நாங்கள் எல்லோரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். அதற்கு ஒத்த படியே உன் நிலைமை இப்படி இருக்கிறதே!" என்று மிகுந்த வாத்சல்யத்தோடு கூறிய வண்ணம், கட்டிலின் மேல் ஏறி மனோன் மணிக்கருகில் உட்கார்ந்தபடி குழந்தையைத் தாய் அணைப்பது போல, அந்த மடந்தையை அணைத்துத் தடவிக் கொடுத்து, "ஆகா! தங்கம் போல இருந்த உன் உடம்பு எப்படி வாடித் துவண்டு போயிருக்கிறது! ஐயோ! பார்க்கச் சகிக்கவில்லையே!" என்று தழுதழுத்த குரலில் கூறினாள். அவளது மனது முற்றிலும் இளக்கம் அடைந்திருந்தது என்பது அவளது முகக்குறியில் நன்றாகத் தெரிந்திருந்தது. அவளது உதடுகள் நடுநடுங்கின. வார்த்தைகள் தடுமாறின. கண்களில் கண்ணீர் பொங்கி இரண்டு கன்னங்களின் வழியாகவும் கீழே வழிந்தோடியது. வடிவாம்பாளின் உண்மையான அனுதாபத்தையும் மனமார்ந்த வாஞ்சையும் மேலான குணங்களையும் காண மனோன்மணியம்மாளின் மனதில் கட்டிலடங்காத ஒருவித உணர்ச்சி பொங்கி எழுந்தது. ஆனந்தப் பெருக்கோ துயரப் பெருக்கோ என்பது தெரியாதபடி மனோன்மணியம்மாள் வடிவாம்பாளை ஆசையாகக் கட்டிக் கொண்டு கோவெனக் கதறியழத் தொடங்கினாள். அதைக் கண்ட வடிவாம்பாள் பதறிப் போய்விட்டாள். அவளது உயிர் தள்ளாடியது. அவள் பன்மடங்கு அதிகரித்த வாஞ்சையும் உருக்கமும் காண்பித்து, "அழாதேயம்மா! அழாதே; ஏன் இப்படி அழுகிறாய்? உனக்கு என்ன குறைவு ஏற்பட்டது? ஒன்றுமில்லையே. நாம் உத்தேசித்த காரியம் வெகு சீக்கிரம் கைகூடி விடும். உனக்கு நிகரானவர்கள் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டார்கள் என்று எல்லோரும் நினைக்கும்படியான மகா சுகமான நிலைமையில் நீ இருந்து அமோகமாய் வாழப் போகிறாய். அதற்குக் கடவுளால் ஒரு காலம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் காலம் வெகு சீக்கிரம்

வந்து சேரும். கொஞ்சம் பொறுத்துக்கொள். அழாதே அம்மா! முதல் நாள் பூஜை முடிந்தவுடனேயே கடவுள் நல்ல குறியைக் காண்பித்திருக்கிறார். வெகு சீக்கிரத்தில் நல்ல செய்தி கிடைக்கும். இவ்வளவு தூரம் நம் எல்லோரையும் கூட்டி வைத்த கடவுள் முடிவில் நம்மைப் பிரித்துவிட மாட்டார். விசனப்படாதே தங்கமே!" என்று கூறினாள். அவள் பேசிய மாதிரி புண்ணில் தேவாமிருதத்தைச் சொரிவதுபோலத் தோன்றியது. ஆகவே மனோன்மணியம்மாள் ஒருவித ஊக்கமும், ஆறுதலும், மனோ திடமும் அடைந்தவளாய் எவ்வித மறுமொழியும் கூறாமல், வடிவாம்பாளை ஆசையோடு கட்டி அணைத்தபடி இருந்தாள்.

உடனே வடிவாம்பாள் பேசத் தொடங்கி, "அம்மா மனோன் மணீ! எங்களுக்கெல்லாம் எதிரிகளால் கெடுதல் நடந்து விட்டதாக சமாசாரப் பத்திரிகைகளில் சங்கதி வெளியாயிற்றல்லவா. அதைப் பார்த்து விட்டு என் தகப்பன்மாரும், தாயாரும், இன்னும் எங்கள் உறவினர்களான பெரிய பெரிய மிராசுதார்களும், கோடீஸ்வரர் களும் சுமார் நாற்பத்தைந்து பேர் வந்திருக்கிறார்கள். மத்தியானம் அவர்கள் இங்கே வந்து உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரும் போது நீ இப்படி இருப்பது பரிகாசத்திற்கு இடமாகும். ஆகையால், நீ எழுந்து நன்றாக ஸ்நானம் செய்து நெற்றிக்கு விபூதி, பொட்டு முதலியவைகள் அணிந்து கொண்டு பார்ப்பதற்கு லட்சணமாக இருக்க வேண்டும். எழுந்திரம்மா, உன் உடம்பு இளைத்துப் போய் பலவீனப்பட்டிருக்கிறது. நான் கூடவே இருந்து எல்லாக் காரியங்களையும் செய்விக்கிறேன்" என்று கூறினாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் திடுக்கிட்டு, "ஆ! அப்படியா! அத்தனை ஜனங்கள் வந்திருக்கிறார்களா! அவர்கள் அவசியம் என்னைப் பார்க்க வருவார்களா!" என்று கூறிய வண்ணம் சுறுசுறுப்பாக எழுந்து உட்கார்ந்து கொண்டாள். உடனே வடிவாம்பாள், "ஆம் அம்மா! அவர்கள் உன்னைப் பார்க்க எவ்வளவு ஆசையும் ஆவலும் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? அவர்கள் வந்தவுடனே முதலில் உன்னைப் பார்க்கவே ஆசைப்பட்டார்கள். மத்தியானம் தான் நல்ல வேளை என்று

நினைத்ததன்றி, வெறுங் கையோடு வரக்கூடாது ஆகையால் சில சாமான்களைச் சேகரம் செய்து கொண்டு வரவேண்டும் என்று நினைத்துத் தங்கள் ஆவலை அடக்கிக் கொண்டிருக்கிறார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள், "சரி; அப்படியானால், உன்னுடைய இஷ்டப்படியே நான் எல்லாக் காரியங்களையும் முடித்துக் கொள்கிறேன். நீயும் என்னோடு கூடவே இரு" என்று கூறி நயந்து வேண்டினாள். உடனே அவர்கள் இருவரும் வாசற் படியண்டை நின்ற வேலைக்காரியோடு ஸ்நான அறைக்குச் சென்றனர். அதன் பிறகு அரை நாழிகை காலத்தில் மனோன்மணி யம்மாள் கந்தசாமியைக் காணாத ஏக்கத்தை ஓரளவு மறந்து இரண்டொரு வாய்ப் போஜனம் உட்கொண்டு தண்ணீர் அருந்தினாள். அதற்கு மேல் ஆகாரம் ஏற்கவில்லை ஆதலால், அவ்வளவோடு அவள் நிறுத்திவிட்டு வடிவாம்பாளோடு மறுபடி தனது விடுதிக்கு வந்து சேர்ந்தாள். விருந்தினர் தன்னைப் பார்க்க வரும் போது தான் தனிமையில் இருப்பதைவிட வடிவாம்பாளும் தன்னோடு இருப்பது நல்லதென்று மனோன்மணியம்மாள் எண்ணினாள். அதுவுமன்றி, தன்னிடம் அமிர்தம் போல நிரம்பவும் இதமாக நடந்து கொண்ட அந்தப் பெண்மணி எப்போதும் தன்னோடு கூடவே இருந்தால், தனது கொடிய விரக வேதனையில் அது ஓர் ஆறுதலாக இருக்கும் என்றும் அவள் நினைத்தாள் ஆதலால், தன்னோடு கூடவே இருக்க வேண்டும் என்று அவள் வடிவாம்பாளிடம் கேட்டுக் கொள்ள, பின்னவள் நிரம்பவும் சந்தோஷத்தோடு அந்த வேண்டுகோளுக்கு இணங்கி அவளோடு கூடவே இருந்தாள். அன்று மத்தியானம் திரிபுரசுந்தரி யம்மாள், எல்லோரும் வர ஆயத்தமாய் இருக்கிறார்கள் என்று செய்தி சொல்லியனுப்ப, அவர்கள் வரலாம் என்று வடிவாம்பாள் மறுமொழி கூறியனுப்பி விட்டு, அவ்விடத்தில் இரண்டு மூன்று பிரம்புப் பாய்களைப் பரப்பிவிட்டு அதன்மேல் மனோன்மணியம் மாளோடு வீற்றிருந்தாள். ஐந்து நிமிஷ நேரத்தில் சுமார் இருபது ஸ்திரீகளும் திரிபுரசுந்தரியம்மாளும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தனர். விருந்தினர் எல்லோரும் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சீமாட்டிகள் போலவே காணப்பட்டனர். ஒவ்வொருவரும் சுமார்

ஐம்பதினாயிரத்திற்குக் குறையாத பெறுமானமுள்ள ஆபரணங் களையும் பட்டாடைகளையும் அணிந்திருந்ததன்றி, எல்லோரும் மிகுந்த பகுத்தறிவு, புத்திசாலித்தனம், மேலான விவேகம் முதலிய குணங்கள் நிரம்பப் பெற்றவர்களாய் இருந்தும், நாணம், அடக்கம், பணிவு முதலிய ஸ்திரீ லட்சணங்கள் பூர்த்தியாய் அமையப் பெற்றவர்களாய்க் காணப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் செல்வந்தர் வீட்டு ஸ்திரீயாதலால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு தட்டில் இருநூறு, முன்னூறு ரூபாய் பெறத்தக்க உயர்ந்த ஜரிகைப் புடவை, ரவிக்கை, கனிவகைகள், பாக்கு வெற்றிலை, மஞ்சள் முதலிய வஸ்துக்களோடு வந்து எல்லாவற்றையும் மனோன்மணி யம்மாளுக் கெதிரில் வரிசையாக வைத்து விட்டனர். அவ்வாறு வந்த மனிதர்களையும், அவர்கள் கொணர்ந்து வைத்த வரிசைப் பொருட்களையும் கண்டு பிரமித்து ஸ்தம்பித்துப் போன மனோன் மணியம்மாள் தான் என்ன செய்வது அல்லது சொல்வது என்பதை அறியாமல் வெட்கித் தலைகுனிந்து நின்றாள். வடிவாம்பாளே தலைமை வகித்து, "வாருங்கள், வாருங்கள், இப்படி உட்காருங்கள்" என்று அன்பாக உபசரித்து எல்லோரை யும் வரவேற்று உட்காரச் செய்து அவர்களை நோக்கி, "நீங்கள் இது வரையில், வடிவாம்பாளை விட சிரேஷ்டமானவள் இனி இந்த உலகத்திலேயே இருக்கப் போகிறாளா என்றும், அவளுடைய புருஷர் தான் மகா பாக்கியவந்தர் என்றும் சொல்லி என்னைப் புகழ்ந்து கொண்டே இருந்தீர்களே. இனிமேல் என்னை நீங்கள் அப்படிப் புகழவே மாட்டீர்கள். நான் படிக்காத முட்டாள். பெரியோர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்த்து அது போல நான் எல்லா விஷயங்களிலும் நடந்து கொள்ளு கிறவள். இந்த மனோன்மணியம்மாள் கல்வியைக் கரை கண்டவள். அதோடு சகலமான லட்சணங்களும் வாய்ந்து, வாசனையுடைய பொன்மலர் போல இருக்கிறாள். எல்லா விஷயங்களிலும் மனோன்மணியம்மாள் என்னைவிடப் பன் மடங்கு சிரேஷ்டமானவளாக இருப்பதால் நீங்கள் எல்லோரும் இனி இவளைப் புகழ்ந்து பாராட்டுவதைக் காண்பதே எனக்கு உண்மையில் ஆனந்தமாக இருக்குமன்றி, என்னைப் புகழ்வது அவ்வளவாக சந்தோஷம் உண்டாக்காது" என்று நயமாகக் கூறி

விட்டு மனோன்மணியம்மாளை நோக்கி, "அம்மா; உனக்கு உடம்பு சரியாக இல்லை. இப்படிப்பட்ட பலவீனமான நிலைமையில் நீ இவர்கள் ஒவ்வொருவருக்கு முன்னாலும் போய் உட்கார்ந்து எழுந்து கும்பிட முடியாது. நீ எல்லோருக்கும் பொதுவாக ஒரே தடவையாய்க் கும்பிட்டு இவர்களுடைய ஆசீர் வாதத்தைப் பெற்றுக்கொள். இவர்கள் எல்லோரும் எங்களுடைய நெருங்கிய பந்துக்கள். உனக்கு உடம்பு சரியாயில்லை என்பது தெரியுமாகையால், இவர்கள் அதைப் பற்றி வித்தியாசமாக எண்ண மாட்டார்கள்" என்று வாத்சல்யம் ததும்பக் கூறினாள். அது வரையில் தான் என்ன செய்வது என்பதை அறியாமல் தத்தளித்து நின்று கொண்டிருந்த மனோன்மணியம்மாள் தனது துர்லபமான நிலைமையையும் பொருட்படுத்தாமல் கீழே உட்கார்ந்து மண்டியிட்டு அங்கிருந்த பெண்பாலோர் எல்லோரையும் நமஸ்கரிக்க, அவர்கள் அவளைப் பலவாறு வாழ்த்தி ஆசீர்வதித் தனர். உடனே வடிவாம்பாள் அங்கிருந்த வேலைக்காரியை அழைத்து, எல்லோருக்கும் தாம்பூலம், மஞ்சள், குங்குமம், பழம், கற்கண்டு முதலியவை வழங்கச் செய்தாள். அந்த கும்பலில் இருந்த திரிபுரசுந்தரியம்மாள் மனோன்மணி முற்றிலும் தளர் வடைந்து நிற்கமாட்டாதவளாய்த் தவிக்கிறாள் என்பதைக் கண்டு, அங்கிருந்த எல்லோரையும் பார்த்து, "மனோன்மணியம்மாளுக்கு உடம்பு சரியாக இல்லை. அவள் படுத்துக் கொள்ளட்டும், நாம் இருந்தால், அவள் லஜ்ஜைப்படுவாள். ஆகையால், நாம் மறுபடி வந்து பார்க்கலாம்" என்றாள். அங்கிருந்த எல்லோரும், "சரி; அப்படியே செய்வோம்" என்று கூறிக் கொண்டு உடனே குபீரென்று எழுந்தனர். சிலர் மனோன்மணியம்மாளண்டை நெருங்கிப் போய் ஆசையோடு அவளது முதுகை மெதுவாகத் தடவிக் கொடுத்தனர். சிலர் அவளது மோவாயைப் பிடித்து அவளது முகத்தை மெதுவாக நிமிர்த்தி, முகத்தழகை ஆராய்ச்சி செய்து, இரண்டு கன்னங்களையும் இரண்டு கைகளால் வருடித் தங்களது நெற்றிப்பூட்டில் வைத்து திருஷ்டி தோஷம் கழித்தனர். சிலர், "கந்தசாமியின் அழகுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் தகுந்த படியே தான் கடவுள் அவனுக்குப் பெண் அமைத்திருக்கிறார்" என்றனர். மற்றும் சிலர், "பெண்ணினிடம் நல்ல உத்தம லட்சணங்

கள் பூர்த்தியாக நிரம்பி இருக்கின்றன. எல்லாம் திரிபுரசுந்தரியம் மாள் செய்த பூஜாபலன். அவர்களுடைய நற்குணத்திற்குத் தகுந்த படிதான் சகலமும் வந்து வாய்க்கிறது. திரிபுரசுந்தரியம்மாளுக்கு எப்படி இரண்டு குழந்தைகளும் இரண்டு சற்புத்திரர்களாக வந்து வாய்த்திருக்கின்றார்களோ, அது போல இரண்டு மருமக்கள்மாரும் விலையில்லா மாணிக்கக்கட்டிகளாக வந்து வாய்த்திருக்கின்றனர்" என்று கூறினர். வேறு சிலர், "இந்தப் புண்ணியவதி வந்து சேரப் போகிற பாக்கியத்தால், நம்முடைய கந்தசாமி எவ்விதக் கெடுதலும் இல்லாமல் சௌக்கியமாய் வீடு வந்து சேர வேண்டும்" என்றனர். மற்றும் சிலர், "வராமல் எங்கே போகிறான். அவன் வெகு சீக்கிரம் வந்துவிடப் போகிறான். நாம் எண்ணியபடி கலியாணம் முதலிய சுபச்சடங்குகளை முடித்துக் கொண்டுதான் நாம் ஊருக்குப் போகப் போகிறோம். மனோன்மணியம்மாளும் கந்தசாமியும் பார்வதி பரமேசுவரன் போல நிகரற்ற தம்பதிகளாய் ஆயிரங்காலம் அமோகமாய் வாழப் போகிறார்கள்" என்று கூறி ஆசீர்வதித்தனர். பிறகு எல்லோரும், "குழந்தை! நாங்கள் போய் வருகிறோம். நீ போய்ப் படுத்துக்கொள். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்" என்று நிரம்பவும் உருக்கமாகவும் வாஞ்சையோடும் கூறி, அவளை விட்டுப் பிரிய மனமற்றவராய்த் திரும்பித் திரும்பி அவளைப் பார்த்த வண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியில் சென்றனர்.

வடிவாம்பாள், மனோன்மணியம்மாள், வேலைக்காரி ஆகிய மூவரும் அவ்விடத்தில் தனிமையில் விடப்பட்டனர். வடிவாம் பாள் உடனே மனோன்மணியம்மாளை அழைத்துக் கொண்டு போய்க் கட்டிலின் மீது சயனிக்கச் செய்த பின், வேலைக்காரியைக் கொண்டு விருந்தினர் சன்மானித்த புடவைகள், ரவிக்கைகள், மற்ற வஸ்துக்கள் முதலிய யாவற்றையும் எடுத்து ஒருபுறமாக வைத்து விட்டு அப்பால் போயிருக்கச் செய்தாள். அதன் பிறகு அவளும் மனோன்மணியம்மாளுக்கருகில் உட்கார்ந்து தன் கையால் அவளை அன்போடு அணைத்துக் கொண்டு, "ஏனம்மா! உடம்பு அலுப்பாக இருந்தால், இப்படியே கொஞ்சம் தூங்கு; உடம்பு சரிப்பட்டுப் போகும்; நான் பக்கத்திலேயே இருக்கிறேன்" என்று மிகுந்த வாஞ்சையோடு கூறினாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் எவ்வித மறுமொழியும் கூறாமல் அப்படியே கண்களை மூடிக்கொண்டாள். அந்தப் பெண் மணியின் அப்போதைய மனநிலைமை எப்படித்தான் இருந்த தென்று சொல்வது அசாத்தியமான காரியம் என்றே கருத வேண்டும். அவள் கந்தசாமியின் மீது கடுமையல் கொண்டு, அன்னபானாதிகளை வெறுத்துத் தனது தேகத்தை அசட்டை செய்து, மெய்ம்மறந்து, அவனையே எண்ணி எண்ணி உருகித் தவித்திருந்த சமயத்தில் வடிவாம்பாள் வந்து வாத்சல்யத்தோடு உபசரித்தது நிரம்பவும் இதமாக இருந்ததன்றி, பிந்திய காலத்தில் அவளோடு தான் அன்னியோன்னியமாய் ஒன்று கூடி எப்போதும் இருக்கப் போகிறவள் ஆதலாலும், அவள் தனது கணவரது தமயனாரின் மனையாட்டி ஆதலாலும், அவள் மகா உத்தமி என்று எல்லோராலும் புகழப்பட்டவள் ஆதலாலும், அவள் தன்னோடுகூட இருந்தது மனோன்மணியம்மாளுக்குத் தன் கணவனைக் கண்டது போன்ற ஒருவித ஆறுதலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அவளது விஷயத்தில் தன் மனதில் பொங்கி எழுந்து கரைபுரண்டு வழிந்த வாஞ்சையையும் பிரேமையையும் ஆனந்தத்தையும் தாங்க மாட்டாதவளாய் இருந்த சமயத்தில், தனது கணவருக்குச் சொந்தமான, அரசப் பெருமாட்டிகள் போலக் காணப்பட்ட சுமார் இருபது ஸ்திரீகள் தோன்றி, ஒவ்வொன்றும் இருநூறு முன்னூறு ரூபாய் பெறத்தக்கவையும், ஜரிகையும் பட்டும் தகத்த காயமாய் மின்னப் பெற்றவையுமான சுமார் இருபது சேலைகளையும், நாற்பது ஐம்பது ரவிக்கைகளையும், மற்றும் ஏராளமான சாமான்களையும் கொணர்ந்து கொடுத்தது மன்றி தன்னை அபாரமாகப் புகழ்ந்து மனப்பூர்வமான பிரியத்தோடு தன்னை ஆசீர்வதித்ததையும், தன்னை ஒரு குழந்தை போல மதித்து லாலனபாலனம் செய்து தன்னிடம் கொஞ்சி விட்டுப் போனதையும் எண்ண எண்ண, மனோன்மணியம்மாள் கந்தசாமியின் மீது கொண்ட காதல் நோய் மலைப் போலப் பெருகி முன்னிலும் பதினாயிரம் மடங்கு அதிக உரமாக அவளை வதைக்கத் தொடங்கியது. "அவரை எப்போது காண்போம், எப்போது அவரிடம் ஒரு வார்த்தையாகிலும் பேசுவோம்" என்ற ஏக்கமே பெரிதாய்க் கிளம்பி ஆயிரம் தேள்கள் ஒரே காலத்தில்

கொட்டுவது போன்ற மனவேதனையை உண்டாக்க ஆரம்பித்து விட்டது. பெண் வேஷத்தோடு கந்தசாமி மறுபடி அவளது அகக் கண்ணில் தோன்றி அவளைப் பார்த்து அழகாய்ப் புன்னகை செய்து அவளது உயிரைக் குடிக்கத் தொடங்கினான். அவள் தூக்கமும் கொள்ளவில்லை; பக்கத்திலிருந்த வடிவாம்பாள் சொன்னதையும் கவனிக்கவில்லை. இரண்டிற்கும் நடு மத்திமமான் திரிசங்கு சொர்க்கத்தில் அவள் இருந்து தனது இஷ்ட தெய்வமான கந்தசாமியை நினைத்துக் கடுந்தவம் புரியத் தொடங்கினாள்.

வடிவாம்பாள் அவளோடு கூடவே இருந்து வந்தாள். அன்றைய பொழுதும் கழிந்தது. மறுநாளாகிய செவ்வாய்கிழமை முதல் வேலாயுதம் பிள்ளையின் சிவபூஜை பெருத்த தேவாலயங்களில் நடக்கும் திருவிழாவைப் போல அபாரமான ஏற்பாடுகளுடன் வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. சுந்தரம் பிள்ளையும், மற்ற மிராசுதார்களும் ஏராளமான பணத்தொகை செலவு செய்து, தினம் ஐம்பதினாயிரம் அதிதிகளுக்கு மேல் அன்னதானம், வஸ்திர தானம் முதலியவற்றை வழங்கினர். தினம் தினம் ஆயிரக்கணக்கான சுமங்கலிகளுக்கு விருந்து, புடவை தானம் முதலியவை நடத்தப் பட்டன. அந்தப் பூஜையின் வைபவத்தைக் கண்டும் கேட்டும் சென்னப்பட்டணத்தில் உள்ள ஜனங்கள் எல்லோரும் பெரிதும் வியப்பும், சந்தோஷமும் அடைந்து, இரவு பகல் அதே பேச்சாகப் பேசி வேலாயுதம் பிள்ளை வீட்டாரைப் பற்றி அசாத்தியமாகப் புகழத் தலைப்பட்டனர். செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு தினங்களுக்குள், அவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவாயின. அதற்கு மேல் கந்தசாமி வருகிற வரையில் அது போலவே செலவு செய்ய அவர்கள் சித்தமாய் இருந்தனர். கந்தசாமி காணாமல் போயிருந்ததைப் பற்றி அந்தப் பூஜை, தான தருமங்கள் முதலியவை நடத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து ஜனங்கள் எல்லோரும் தங்களது கவலைகளையும் துன்பங்களை யும் அடியோடு மறந்து கந்தசாமி வெகு சீக்கிரம் க்ஷேமமாய்த் திரும்பி வரும்படி செய்ய வேண்டும் என்று இரவு பகல் கடவுளை நிரம்பவும் உருக்கமாக வேண்டிக் கொண்டபடி இருந்தனர். பட்டாபிராம பிள்ளை அடிக்கடி போலீஸ் கமிஷனரிடம் போய் ஏதாவது தகவல் தெரிந்ததா என்பதைக் கேட்டு ஏமாற்றமும்,

விசனமும் அடைந்தவராகவே திரும்பி வந்து கொண்டிருந்தார். கந்தசாமி காணாமல் போயிருந்த துயரம் நூறுமடங்கு வருத்திய தென்றால், மனோன்மணியம்மாள் ஊணுறக்கமின்றித் துரும்பாய் மெலிந்து அவனையே நினைத்துச் சிறுகச் சிறுகத் தனது உயிரை விட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதை கேட்கக் கேட்க, அவரது விசனமும், கவலையும் ஆயிரம் மடங்கு பெருகி, அவரும் ஊணுறக்கமின்றி இரவு பகல் அதே நினைவாய் இருந்து தவிக்கும் படி செய்தன.

வடிவாம்பாள் எப்போதும் மனோன்மணியம்மாளுக்குப் பக்கத்திலேயே இருந்து இதமான மொழிகள் பேசி வேளைக்கு வேளை அவளுக்கு ஆகாரம் கொடுக்க முயற்சித்தாள் ஆனாலும், மனோன்மணியம்மாளது மனநிலைமை கட்டிலடங்காததாக இருந்தது. ஒரு நாளைக்கு ஒரு வேளை இரண்டொரு வாய் பாலைச் செலுத்துவது கூட வடிவாம்பாளுக்கு மிகுந்த பிரயாசையாகி விட்டது. மனோன்மணியம்மாள் கட்டிலை விட்டுக் கீழே இறங்கினால், அவள் தட்டுத் தடுமாறிப் பல இடங்களில் விழத் தொடங்கினாள். அவள் கடுமையான நோய் கொண்டிருக்கி றாள் என்பது வேலாயுதம் பிள்ளை முதலிய எல்லோருக்கும் தெரிந்து போனமையால், அவர்களும் அதைப்பற்றி மிகுந்த துயரமும் கலக்கமும் அடைந்து இரவு பகல் அதே கவலை கொண்டு வருந்தலாயினர். பூஜைக் காலங்களில், அவள் அவசியம் வந்து கற்பூர ஆரத்தியைக் கண்டு சுவாமி பிரசாதம் வாங்கிக் கொண்டு போனால், எப்படியும் கடவுளுக்கு மனதிரங்கும் என்று அவர்கள் கூறினர் ஆதலால், அந்தப் பெண்மணிக்கு வடிவாம்பாள் முதலியோர் கைலாகு கொடுத்துப் பூஜை செய்யும் இடத்திற்கு அவளை அழைத்து வந்து அது முடிந்தவுடன், அவளது சயனக் கிரகத்திற்கு அழைத்துப் போயினர். வடிவாம்பாள் இரவு பகல் சிறிதும் அலுக்காமல் அந்த மடந்தைக்குப் பக்கத்திலேயே இருந்தும், வேளை தவறாமல் முயன்று அரும்பாடுபட்டு அவளுக்கு ஏதேனும் சொற்ப ஆகாரமாவது உண்பித்தும், அவள் வாந்தி எடுத்தால் அதைத் தானே ஏற்றும், அவளது ஆடைகளை அடிக்கடி மாற்றியும், இதமான மொழிகளை அடிக்கடி பேசி

அவளுக்கு ஆறுதல் கூறியும், எப்போதும் குளிர்ச்சியான காற்று அவள் மீது படும்படி விசிறி கொண்டு வீசியும், அவளை ஒரு குழந்தையைப் பாதுகாப்பது போல நிரம்பவும் அக்கறையோடு பாதுகாத்து வந்தாள். எப்படியும் கந்தசாமி வெகு சீக்கிரத்தில் அகப்பட்டு விடுவார் என்றும், அதுவரையில் தான் மனோன்மணி யம்மாளைக் காப்பாற்றி விட்டால், பிறகு அவள் பிழைத்துத் தேறி விடுவாள் என்றும் எண்ணியபடி வடிவாம்பாள், மகாவிஷ்ணுவின் பக்கத்திலிருந்து அவருக்கு எந்தச் சமயத்தில் எவ்விதம் இருப்பது சுகமோ அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளும் ஆதிசேஷன் போல மகா திறமையாகவும் அத்யந்த வாஞ்சையோடும் நடந்து கொண்டாள்.

சனிக்கிழமை பொழுது விடிந்தது. வடிவாம்பாள் வழக்கப்படி மனோன்மணியம்மாளை எழுப்பி அவளுக்குரிய உபசரணை களைச் செய்ய எத்தனித்தாள். அன்று அந்த மடந்தை முற்றிலும் கேவலமான நிலைமையடைந்து தாறுமாறாகப் பிதற்றிக் கொண்டே இருந்தாள். வடிவாம்பாள் எழுப்பிய காலத்தில் மனோன்மணியம்மாள் தனது கண்களைத் திறக்காமலேயே பிதற்ற ஆரம்பித்தாள். "என் மனதைக் கொள்ளை கொண்ட என் துரையே! என் ராஜாவே! என்மேல் இன்னமுமா கோபம்! உங்களை நினைத்து நினைத்து, உருகி உருகி என் உயிரே அநேகமாய்ப் போய்விட்டது. என் சர்வாங்கமும் சுத்தமாய் ஒடுங்கிப் போய்விட்டது. மிகுதி உயிரும் போவதற்குள், உங்கள் முகத்தை நான் பார்க்கப் போகிறேனா? நான் எத்தனை கற்பகாலம் தவம் செய்தாலும், உங்களைக் கணவராய் அடைவது எளிது? அப்படிப்பட்ட யோக்கியதை நிறைந்த நீங்கள் என்னை மதித்து என் வீடு தேடி வந்திருக்க, அதை உணராது உங்களிடம் தாறுமாறாகப் பேசி நான் உங்களுக்குப் பெருத்த அபராதியாகி விட்டேனே! ஐயோ! உங்கள் சம்பந்தம் வேண்டாம் என்ற சொல்லும் இந்தப் பாவியின் வாயில் இருந்து வந்ததே! நான் சொன்னதை எல்லாம் நீங்கள் மறந்து இனி என்னை நாடப் போகிறீர்களா? நான் சொன்னதும், செய்ததும், தப்பிதம் தப்பிதம் என்று நான் லட்சம்தரம் வேண்டுமானாலும் சொல்லி, உங்கள் காலில் விழுந்து, கன்னத்தில் அடித்துக் கொள்ளுகிறேன்.

அப்போதாவது உங்கள் மனம் இரங்கி என்னை க்ஷமிக்குமா? என் உயிர் இருக்கும் போதே, உங்கள் முகதரிசனம் எனக்குக் கிடைக்கப் போகிறதா! ஆகா! நீங்கள் பெண் வேஷந்தரித்து வந்தீர்களே! உங்கள் விரலின் அழகுக்கு அந்த ரதிதேவியின் அழகுகூட ஈடாகும் என்று சொல்ல முடியுமா. ஐயோ! மறுபடி நான் உங்களை அதே பெண் வேஷத்தில் பார்க்கப் போகிறேனா! என்னைப் போன்ற பாக்கியவதியும் இந்த உலகத்தில் இருக்க மாட்டாள்; அதுபோலவே துர்ப்பாக்கியவதியும் இருக்க மாட்டாள். எவருக்கும் கிடைக்கச் சாத்தியமற்ற மகா சிரேஷ்டமான பொருளை எனக்குக் காட்டிக் கடவுள் உடனே மறைத்துவிட்டாரே! ஆகா! நான் இனி என்ன செய்யப் போகிறேன்! என்னுடைய நிலைமை இருப்பதைப் பார்த்தால், அதிக நாள் இந்த உயிர் நிற்காது போலிருக்கிறது. அதற்குள் உங்களைப் பார்க்கப் போகிறேனா? ஆகா! உங்களுடைய பெண் வடிவத்திற்கு ஒரு படமாவது பிடித்து வைத்துக் கொண்டேனா! ஐயோ, பாவி! பாவி! நான் மகா பாவி!" என்று கூறி மேலும் பலவாறு பிதற்றத் தலைப்பட்டாள். மூடப் பட்டிருந்த அவளது கண்களில் இருந்து கண்ணீர் பெருகி மாலை மாலையாய் வழிந்தது. அதைக் கண்ட வடிவாம்பாள் பதறிப் போய், அவளை அன்போடு எடுத்துத் தனது மார்பில் சாத்திக் கொண்டு கண்ணீரைத் துடைத்து விட்டு, "அம்மா! மனோன்மணீ! மனோன்மணீ! விழித்துக்கொள். பூஜை நடக்கும் நேரமாகிறது. அழைக்க மனிதர்கள் வந்துவிடுவார்கள். நீ புடவையை மாற்றிக் கொள்ள வேண்டாமா?" என்று முற்றிலும் தணிவாகக் கூறி அவளது கன்னங்களையும் முகத்தையும் தடவிக் கொடுத்தாள்.

உடனே விழித்துக் கொண்ட மனோன்மணியம்மாள் வடிவாம் பாளை நோக்கி, "ஐயோ! அக்கா! நான் சாக வழி பார்க்கிறேன். என் பிராணன் இந்த உடம்பில் இனி அதிக காலம் நிற்கப் போகிற தில்லை. எனக்காக நீ இராப்பகல் சலிப்பின்றி பெற்ற தாயைவிட ஆயிரம் மடங்கு விசேஷமான வாஞ்சையோடு எவ்வளவோ பாடு பட்டு எனக்குச் செய்யும் உபசரணைகளுக்கு நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! அல்லது, என் நன்றியறிதலை செய்கைகளில் காட்ட, நான் அதிக காலம் உயிரோடு தான் இருக்கப் போகிறேனா, அதுவுமில்லை. அக்கா! இந்த வேதனையை

என்னால் தாங்க முடியவில்லையே! என் பிராணனும் போக மாட்டேன் என்கிறதே!" என்று கூறிக் கோவென வாய்விட்டுக் கதறிக் கண்ணீரைக் கானாறாய் ஓடவிட்ட வண்ணம் வடிவாம் பாளை ஆசையோடு கட்டித்தழுவி இறுக அணைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அவள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, அவள் செய்ததை உணர்ந்த வடிவாம்பாளின் கண்களும் தானாகவே கண்ணீரைச் சொரிந்தன. அவளது மனதும் முகமும் கலங்கி மிகுந்த துயரத்தைக் கொண்டன. அவள் நிரம்பவும் நைந்திளகிய குரலில் பேசத் தொடங்கி, "அம்மா! தைரியத்தைக் கைவிடாதே! என்னுடைய பழைய வரலாற்றை நீ கேட்டிருந்தால், நீ இப்படி வருந்தவே மாட்டாய். நான் எதிரிகளிடம் அகப்பட்டு, தப்பிப் போக வழியில்லாமல் என் உயிரை விடத் தீர்மானித்துக் கிணற்றில் விழுந்து விட்டேன். அப்படி இருந்தும் கடவுள் என்னை என் இஷ்ட தெய்வத்தினிடம் சேர்த்து வைத்தார். அப்போது தெய்வம் போல வந்து உதவி என்னைக் காப்பாற்றிய திகம்பர சுவாமியார் இப்போதும் சும்மா இருக்க மாட்டார் என்பது நிச்சயம். கடவுள் அவர் மூலமாக எப்படியும் நமக்கு நல்ல காலம் பிறக்கச் செய்வார். கவலைப்படாதே! அம்மா!" என்று கூறி அவளை அன்போடு தடவிக் கொடுத்தாள். அந்தச் சமயத்தில் வேலைக்காரி ஒருத்தி அங்கே வந்து "அம்மா! தீபாராதனை நடக்கப் போகிறது. உங்களை அழைத்து வரச் சொல்லுகிறார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட வடிவாம்பாள் மனோன்மணியம்மாளைப் பார்த்து, "அம்மா! மனோன்மணீ! தீபாராதனை நடக்கப் போகிறதாம்; நம்மைக் கூப்பிடுகிறார்களாம். மெதுவாக எழுந்திரு அம்மா! உன் ஆடைகளை மாற்றிக் கொண்டு நெற்றிக்கு விபூதி முதலியவை அணிந்து கொண்டு போகலாம்" என்று மிகுந்த ஆத்திரத்தோடு கூறினாள்.

மனோன்மணியம்மாள் தனது கண்களை மூடியபடியே நிரம்பவும் ஹீனக்குரலில் பேசத் தொடங்கி, "அக்கா! என்னை ஏன் அங்கே இழுத்து அநாவசியமாக வதைக்கிறீர்கள்? இப்போதோ, இன்னம் ஐந்து நிமிஷத்திலோ போய்விடும் போல என் பிராணன் பொடுக் பொடுக் கென்று துடித்துக் கொண்டிருக்கிறது. மகா

புண்ணியாத்துமாக்களான இத்தனை பெரிய மனிதர்கள் சேர்ந்து இத்தனை தினங்களாய்க் கடவுளை ஸ்தோத்திரம் செய்து பூஜை முதலியவைகளை நடத்தி வருகிறார்கள். இன்னம் நம்முடைய கலி நீங்கவில்லை. ஆகையால், நான் இப்படியே இறந்து போக வேண்டும் என்பதே கடவுளின் சித்தம் போலிருக்கிறது. நான் அங்கே வந்து செத்து, அத்தனை ஜனங்களையும் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாக்குவதைவிட, இங்கேயே நிம்மதியாய் உன் மடியிலேயே என் பிராணனை விட்டு விடுகிறேன். அநாவசியமாக என்னையும் மற்றவரையும் உபத்திரவத்திற்கு ஆளாக்க வேண்டாம். ஏதடா இவள் நம்முடைய பேச்சை இப்படித் தட்டி மறுக்கிறாளே என்று ஆயாசப்படாதே" என்று உருக்கமாகக் கூறினாள். அதைக் கேட்ட வடிவாம்பாள் பதறிப் போய், "அம்மா! மனோன்மணீ! இதற்குள் நீ இப்படி மனத்தளர்ச்சி அடைந்து விட்டாயே! பொறுத்தார் பூமியாள்வார் என்று சொல்வதை நீ கேட்டதில்லையா? எப்படியும் கடவுள் நம்மைக் காப்பாற்றுவார் என்ற ஒரே நம்பிக்கையை நாம் திடமாக மனசில் பதியவைத்துக் கொண்டு, இடையில் நேரும் எப்படிப்பட்ட துன்பங்களையும் பொருட்படுத்தாமல், எல்லா பாரத்தையும் அவன் மேல் போட்டு விட்டு காலத்தை எதிர்பார்த்தபடி நமது கடமையை நாம் செய்து கொண்டே போனால், சர்வக்ஞனான கடவுளுக்கு அது தெரியாமல் போகாது. எல்லா இடத்திலும் நமக்குத் தெரியாமல் மறைந்திருந்து நம்மைக் காப்பாற்றி வரும் கடவுளுக்கு அது தெரியாமல் போகாது. இப்போது கடவுள் இங்கே இல்லை என்று நீ நினைக்கிறாயா? நாம் இருவரும் பேசிக் கொள்வது அவருக்குத் தெரியாதென்று நீ எண்ணுகிறாயா? அல்லது, உன் மனதை சிருஷ்டித்தவரான கடவுள் அதற்குள்ளிருந்து உன்னை வதைக்கும் துன்பங்களை அறிய மாட்டாரா? அல்லது, அதற்கு ஒரு பரிகாரம் தேடமாட்டாரா? கவலைப்படாதே அம்மா; கூடிய சீக்கிரம் கடவுள் நல்ல செய்தி கிடைக்கும்படி செய்வார். நாம் அதை அசட்டை செய்தாலும், கடவுளுக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதையை மாத்திரம் மனசால் கூட அசட்டை செய்யக்கூடாது. நாம் எவ்வளவு கேவலமான நிலைமையில் இருந்தாலும், கடவுளிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டோம் என்ற குற்றமே ஏற்படக் கூடாது.

மனிதரால் பரிகாரம் செய்ய முடியாத பெரிய துன்பத்தை நீ அனுபவித்துக் கொண்டிருக்கிறாய். அதற்குக் கடவுளே வழி செய்ய வேண்டும். அவரையும் நீ அசட்டை செய்தால், பிறகு நாம் உய்யும் மார்க்கந்தான் என்ன? கடவுளுக்கு நீ உன் கடமையைச் செலுத்தப் போகும் இடத்தில், உன் பிராணன் போகும் என்று நான் நினைக்கவே இல்லை. அப்படிப் போகுமானால், இங்கே பிராணன் போவதைவிட, அங்கே போவதை நீ ஒரு பெருத்த பாக்கியமாக மதிக்க வேண்டுமேயன்றி வேறல்ல. ஆகையால், இருந்தபடி இருக்கட்டும் என்று, நீ மனோதிடத்தைக் கைவிடாமல் புறப்படு. இவ்வளவு பரிதாபகரமான நிலைமையில் நீ அங்கே வந்து வணங்குவதைக் கண்டு கூடவா, கடவுள் இரங்க மாட்டார்! மெதுவாக எழுந்திரம்மா. உன்னை நானும் வேலைக்காரியும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுகிறோம். மெதுவாக எழுந்து வா" என்றாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் அதை மறுக்கமாட்டாதவளாய்த் தட்டுத் தடுமாறி மெதுவாக எழுந்தாள். வடிவாம்பாள் வேலைக்காரியையும் உதவிக்கு அழைத்துக் கொண்டாள். அவர்கள் இருவரும் மனோன்மணியம்மாளுக்குக் கைலாகு கொடுத்து அவளைக் கெட்டியாய்ப் பிடித்துத் தூக்கியபடி நடத்தி அழைத்துக் கொண்டு போய் அவளுக்குத் தேகசுத்தி செய்வித்து ஆடைகளை மாற்றி நெற்றியை விபூதி பொட்டு முதலியவற்றால் அலங்கரித்து அவ்விடத்திலிருந்து பூஜை நடக்கும் மண்டபத்திற்கு அழைத்துப் போயினர்.

அந்த இடம் தத்ரூபம் சர்வேசுவரன் உயிரோடு சான்னித்யம் செய்யும் கைலாசம் போலக் கண்கொள்ளாத் தேஜோ மயமாய் விளங்கிக் காண்போர் தம்மை மறந்து பரவசமடைந்து ஆனந்த நிர்த்தனம் புரியச் செய்வதாய்க் காணப்பட்டது. சுவாமியின் பூஜைப்பெட்டி முற்றிலும் ரோஜாப் புஷ்பங்களால் ஆன புஷ்பக விமானத்தின் மேல் வைக்கப்பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும், குன்று குன்றாய்ப் புஷ்பக் குவியலும், வில்வ தளங்களின் குவியலும், வண்டிக் கணக்கில் புஷ்ப ஹாரங்களுமே மயமாய் நிறைந்திருந்தன. ஏராளமான நெய்விளக்குகளும், ஊதுவர்த்திகளும், கனி வர்க்கங்களும், மகா நைவேத்தியங்களும் எங்கும்

மயமாக நிறைந்திருந்தன. எண்ணிறந்த ருத்திராக்ஷ மாலைகள், விபூதி, நார்மடி வேஷ்டிகள் முதலிய அலங்காரங்களோடு பூசைப் பெட்டிக்கு அருகில் கற்பூரத் தட்டும் கையுமாக நின்ற வேலாயுதம் பிள்ளை, கடவுளின் பிரதி பிம்பம் போலவும், கடவுள், மனிதன், கடவுளினிடம் மனிதன் காட்டவேண்டிய பக்தி ஆகிய, பதி, பசு, பாசம் என்ற தன்மை இப்படிப்பட்டது என்று உலகத்தாருக்கு நிதரிசனமாய்க் காட்டுகிறவர் போலவும், ஒரே பக்தி வடிவாயும், தூய்மையே மயமாயும் நின்றார். கண்ணப்பா, திரிபுரசுந்தரி யம்மாள், பட்டாபிராம பிள்ளை, சுந்தரம் பிள்ளை முதலியோரும் இன்னும் மன்னார் குடியிலிருந்து வந்திருந்த ஆண் பெண்பாலரான விருந்தினர்களும் நீராடி, மகா பரிசுத்தமான உடைகளணிந்து, விபூதி தரித்து, அஞ்சலி யஸ்தராய், "ஹர ஹர மகாதேவா" என்று சொல்லிக் கடவுளை ஸ்தோத்திரம் செய்தபடி ஒரு பக்கத்தில் நின்றனர். அவர்களைத் தவிர, தான தருமங்கள் பெற வந்த ஏராளமான ஸ்திரீ புருஷர்களும் கும்பிட்டதையும், ஸ்தோத்திரம் செய்த வாயுமாய் அந்த மண்டபத்திற் கெதிரில் நின்றனர். அந்தச் சமயத்தில், முற்றிலும் துவண்டு தனது கண்களை மூடிய வண்ணம் தங்கக் கம்பி போல வளைந்து வளைந்து தட்டித் தடுமாறி அடிமேல் அடிவைத்து நடந்து வந்த மனோன்மணியம்மாளை வடிவாம்பாள் முதலிய ஸ்திரீகள் தாங்கி அவள் கீழே விழுந்து விடாமல் வலுவாகப் பிடித்துக் கொண்டு ஒரு பக்கத்தில் மறைவாக நின்றனர். அவ்வாறு மகா பரிதாபகரமான நிலைமையில் நின்று கொண்டிருந்த மணப் பெண்ணைக் காண அங்கிருந்தோர் அனைவரும் மனநைந்து கண்ணீர் விடுத்து, அந்த மடந்தை க்ஷேமப்பட வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்கினர்.

அந்தச் சமயத்தில் வேலாயுதம் பிள்ளை நிரம்பவும் உருக்கமான பல பதிகங்களைப் பாடிய வண்ணம் கற்பூரத்தைக் கொளுத்தி ஆரத்தி எடுத்து சுவாமிக்கெதிரில் காட்டிக் கொண்டிருந்த சமயத்தில் அவருக்கெதிரே இருந்த கும்பலில், "ஹ! ஹ-ா!" என்ற ஒரு பெருத்த கூக்குரல் உண்டாயிற்று. எல்லோரும் திடுக்கிட்டு அந்த ஓசை உண்டான இடத்தைப் பார்த்தனர். பரதேசிக் கும்பலிற்குப்

பக்கத்தில் சுமங்கலிப் பிரார்த்தனைக்காகத் தருவிக்கப் பட்டிருந்த சுமங்கலி ஸ்திரீகளுள் ஒருத்திக்கு ஆவேசம் வந்துவிட்ட தென்பது தெரிந்தது. அவள் பிரக்ஞையற்றுக் கண்களை மூடிக் கொண்டு தனது கைகளையும், உடம்பையும் தாறுமாறாக முறுக்கிக் கொண்டாள். அவளது உடம்பு கிடுகிடுவென்று ஆடவாரம் பித்தது, அவள் மீது சுவாமி வந்துவிட்ட தென்பதை உடனே கண்டு கொண்ட ஜனங்கள் அப்பால் நகர்ந்து அவளைச் சுற்றிலும் இடம் உண்டாக்கி விட்டனர். வேலாயுதம் பிள்ளை முதலியோரின் உரோமம் சிலிர்த்தது. அவர்கள் கட்டிலடங்கா மனவெழுச்சியும் பூரிப்பும் அடைந்து முன்னிலும் அதிகரித்த பக்திப் பெருக்கைக் காட்டிக் கைகுவித்த வண்ணம் நின்று, அந்தப் பெண் பிள்ளை என்ன சொல்வாளோ என்று மிகுந்த ஆவலோடு அவளது வாயையே பார்த்திருந்தனர். அது வரையில் கண்களை மூடி அயர்ந்து தளர்ந்து நின்ற மனோன்மணியம்மாள் திடுக்கிட்டு விழித்து அது என்னவென்று கவனித்தாள். அப்போது அந்த ஸ்திரீ மறுபடியும் பிரமாதமாகக் கூச்சலிடத் தொடங்கி, "அடேய் வேலாயுதம்! அடேய் வேலாயுதம்! உன்னுடைய உண்மையான பக்தியையும், நீயும் மற்றவரும் சேர்ந்து செய்யும் பூஜையையும் தான தருமங்களையும் கண்டு நாம் சந்தோஷமடைந்தோம். அந்தக் காலத்தில் நம் பொருட்டு தன் கண்களைத் தோண்டி எடுத்து வைத்த நம் கண்ணப்பனுடைய பக்தியைவிட உன் பக்தி பன்மடங்கு மேலானதாய் இருப்பதைக் காணக் களிகொண்டோம். குழந்தாய்! பயப்படாதே; உன் கவலை வெகு சீக்கிரம் நீங்கிப் போகும். பையனுக்கு இது கொஞ்சம் கெடுதலான காலம். அவனுக்குப் பிராணாபாயம் நேர வேண்டிய சமயம் இது. அதனாலேயே, மகா புத்திசாலியும் கண்ணியவானுமான அவன் பெண் வேஷம் போட்டுக் கொள்ள நேர்ந்தது. அவன் உங்கள் விரோதியின் கையில் அகப்பட்டு, அவர்களிடத்திலிருந்து நிரம்பவும் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டு வேறிடத்திற்குப் போய் இருந்து வருகிறான். தடுக்க முடியாத சில இடையூறு களினால், அவன் தன்னைப் பற்றிய சங்கதியை மற்றவருக்குத் தெரிவிக்க மாட்டாமலும் உங்களிடம் வரமாட்டாமலும் இருக்கிறான். இன்னும் நான்கு தினங்களில் பையன் க்ஷேமமாய்

இங்கே வந்து சேர்ந்து விடுவான். இனி நீங்கள் யாரும் கொஞ்சமும் கவலை என்பதே கொள்ள வேண்டாம். கலியாணப் பெண்ணும் இனி சந்தோஷமாய் இருக்கலாம். கலியாணப் பெண் தன் புருஷனை நினைத்து வருந்தி ஊணுறக்கமின்றி அநாவசியமாகத் தன்னைக் கொன்று கொண்டிருக்கிறது. பெண்ணுக்கு இன்றைய தினமே நல்ல செய்தி கிடைக்கப் போகிறது. இனி நீங்கள் யாரும் கவலையாவது, விசனமாவது கொள்வீர்களானால், நம்முடைய கோபத்திற்கு நீங்கள் பாத்திரமாவீர்கள். இந்த நிமிஷம் முதல் நீங்கள் எல்லோரும் சந்தோஷமாய் இருக்கக்கடவீர்கள். இந்த நம்முடைய கட்டளையை நீங்கள் மீறி நடந்தால், நீங்கள் எனக்குச் செய்யும் பூஜைகள் பிரயோஜனமற்றுப் போவது நிச்சயம். அடே குழந்தாய் வேலாயுதம்! நீயே நமக்கு உகந்த பக்த சிரோமணி! உனக்கு இனி ஒரு குறைவும் வராது. க்ஷேமமாய் இரு" என்று நிரம்பவும் பலமான குரலில் கணீர் கணீர் என்று கூறிவிட்டுத் தனது வாயை மூடிக் கொண்டாள். அதற்கு மேலும் அவள் பேசுவாளோ என்று எல்லோரும் மிகுந்த ஆவலோடு அவளது வாயைப் பார்த்தனர். அவள் அதற்கு மேல் வாயைத் திறக்கவுமில்லை; கண்களைத் திறக்கவுமில்லை; மௌனமாக நின்றபடி கைகளையும் உடம்பை யும் முறுக்கிக் கொண்டு துவண்டு துவண்டு மயங்கி ஆடி விழுந்து கொண்டே பத்து நிமிஷ காலம் இருந்த பின் தெளிவடைந்து, வேலாயுதம் பிள்ளை நின்ற இடத்திற்குப் போய் கீழே உட்கார்ந்து மண்டியிட்டு சுவாமிக்கு நமஸ்காரம் செய்து எழுந்து விபூதிப் பிரசாதம் வாங்கிக் கொண்டு போய் ஜனக் கும்பலில் கலந்து கொண்டாள்.

அந்த எதிர்பாராத அதிசய சம்பவத்தைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் அப்படியே ஸ்தம்பித்து பிரமித்து பேச்சு மூச்சற்று ஊமைகள் போல நின்றனர். அவர்களது பக்தியும் உருக்கமும் முன்னிலும் நூறுமடங்கு அதிகரித்தன. எல்லோரும் கடவுளைப் பல நாமங்கள் சொல்லி மனதார ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினர். கந்தசாமி க்ஷேமமாய் இருக்கிறான் என்றும், அவன் நான்கு தினங்களில் வந்து சேருவான் என்றும் தெய்வம் வாக்குக் கொடுத்ததைக் கேட்டு வேலாயுதம் பிள்ளையும், அவரைச் சேர்ந்த ஜனங்களும் மட்டற்ற ஆனந்தமும் மயிர்கூச்சலு மடைந்து

பெருவிம்மித முற்றுத் தம்மை மறந்து இன்ப மயமாய் நின்றனர். அவ்வாறு தெய்வம் மனிதர் மீது தோன்றுவதை அதுகாறும் கண்டறியாத மனோன்மணியம்மாள் அப்படியே ஸ்தம்பித்துக் கல்லாய்ச் சமைந்து போனாள். தனது மனநிலைமையை யாரோ ஓர் அன்னிய மனுஷி உள்ளபடி அறிந்து எப்படி வெளியிட முடிந்ததென்ற வியப்பும் திகைப்பும் அவளால் தாங்க இயலாதன வாக இருந்தன. ஆயினும் கந்தசாமி நான்கு தினங்களில் வந்து சேருவான் என்ற நற்செய்தி தேவாமிருதம் பருகியது போல அவளது மனத்தில் புகுந்து அவளது தேகத்திற்கும் மனத்திற்கும் ஒரு யானையின் பலத்தைக் கொடுத்து அவளைப் புது மனுஷி யாக்கியது. அதுவுமன்றி அன்றைய தினமே தனக்கு வேறே ஏதோ நற்செய்தி வரப் போகிறதென்றும் தெய்வ வாக்கு ஏற்பட்டதை நினைத்து நினைத்து அவள் குதூகலமும் பூரிப்பும் அடைந்து அதைப் பற்றி ஆவல் கொள்ளத் தொடங்கினாள்.

அதன் பிறகு வேலாயுதம் பிள்ளை தமது அன்றைய பூஜையை அவ்வளவோடு பூர்த்தி செய்து, எல்லோருக்கும் பிரசாதம் வழங்க, ஜனக்கும்பல் கலைந்தது. மனோன்மணியம்மாள் முதலிய எல்லோரும் விபூதி, பழங்கள் முதலியவை பெற்றுக் கொண்டனர். மனோன்மணியம்மாள் நிற்க மாட்டாதவளாய்த் தத்தளிக்கிறாள் என்பதைக் கண்ட வடிவாம்பாள் வேலைக்காரிகளைச் சேர்த்துக் கொண்டு அவளை முன் போலவே ஜாக்கிரதையாக அழைத்துக் கொண்டு போய், அவளது சயனத்தில் விடுத்தபின், வேலைக்காரி களை அப்பால் அனுப்பி விட்டு, "அம்மா! மனோன்மணி! பார்த்தாயா சுவாமியின் செயலை! நான் கொஞ்ச நேரத்திற்கு முன்பு சொன்னபடியே காரியம் முடிந்தது எப்படி இருக்கிறது! கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற வாக்கு சாதாரணமான வாக்கா! அம்மா! இனியாவது நீ உன் மனக்கவலை விட்டு வேளா வேளைக்குக் கொஞ்சம் சாப்பிட்டு உன் உடம்பு கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்று நீ நன்றாக போஜனம் செய்ய வேண்டும்" என்றாள்.

பூஜை மண்டபத்திற்குப் போய் வந்த அலுப்பும், அவ்விடத்தில் நின்ற அலுப்பும் தோன்றி வதைத்தமையால், மனோன்மணியம்

மாள் முற்றிலும் சோர்ந்து தளர்ந்து கண்மூடிக் கட்டிலில் சாய்ந்து விட்டமையால், வடிவாம்பாள் கூறியதை அந்த மடந்தை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. அவள்களை தீர்ந்து விழிக்கட்டும் என்று வடிவாம்பாள் அவளுக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தாள். கால் நாழிகை காலம் சென்றது; ஒரு வேலைக்காரி, "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டு விரைவாக உள்ளே ஓடிவந்து, "தபால்காரன் இதைக் கொடுத்து விட்டுப் போகிறான். இது மனோன்மணியம்மாளுக்கு வந்திருக்கிறது. இதைப் பிரித்துப் படிக்கச் சொல்லுங்கள்" என்று ஒரு வஸ்துவை வடிவாம்பாளிடம் கொடுத்தாள். அவள் சொன்னதைக் கேட்டு வடிவாம்பாள் திடுக்கிட்டு, அவள் கொடுத்ததை வாங்கி அது என்ன வென்று உற்று நோக்கினாள். ஒன்றரைச் சாண் நீள அகலத்தில் கெட்டியான அட்டை போலக் காணப்பட்ட ஒரு வஸ்து காகிதத்தினால் மூடப்பட்டு மேலே பட்டுக் கயிற்றினால் கட்டப் பட்டிருந்தது. அதற்கு மேல் தபால் தலைகளும், முத்திரையும் மனோன்மணியம்மாளது மேல் விலாசமும் காணப்பட்டன. அதைக் கண்டு கட்டிலடங்கா ஆவலும் பதைப்பும் கொண்ட வடிவாம்பாள் மனோன்மணியண்டை போய் மெதுவாய் அவளைத் தொட்டு அசைத்து, "அம்மா! மனோன்மணீ! மனோன் மணீ! தபாலில் என்னவோ வந்திருக்கிறது. தெய்வம் வந்து குறி சொன்ன காலத்தில் உனக்கு இன்றைய தினமே நல்ல செய்தி கிடைக்கப் போகிறதென்றதல்லவா. அதுதான் வந்திருக்க வேண் டும். எழுந்து இதைப் பிரித்துப் பார்" என்றாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் திடுக்கிட்டுத் தனது கண்களைப் பளிச்சென்று திறந்து கொண்டு விரைவாக எழுந்து உட்கார்ந்து அந்தத் தபாலை வாங்கி, மேலே இருந்த கயிற்றுக் கட்டையும், காகித உறையையும் விலக்கி விட்டு அட்டை போல இருந்த வஸ்துவை வெளியில் எடுத்துப் பார்த்தாள். ஆகா! என்ன ஆச்சரியம்! கந்தசாமி பெண் வேஷந் தரித்து அவளிடம் வந்த காலத்தில் எப்படி இருந்தானோ, அதே கோலத்தோடு எடுக்கப் பட்ட ஒரு போட்டோகிராப் படம் அந்த அட்டையில் காணப் பட்டது. அதன் அடியில், "க்ஷேமமாய் இருக்கிறேன். நான்கு

தினங்களில் வருகிறேன். கவலை கொள்ள வேண்டாம்" என்ற எழுத்துக்கள் இங்கிலீஷில் டைப் அடிக்கப்பட்டிருந்தன. அதையும் மனோன்மணியம்மாள் படித்தாள். தனது ஆருயிர் மணாளன் அதற்குப் பதினைந்து தினங்களுக்கு முன் சென்ற சனிக்கிழமை அன்று எப்படி பெண் வேஷந்தரித்து அப்ஸர ஸ்திரீ போலத் தனக் கெதிரில் வந்து நின்றானோ, அதே வடிவம், தன் கண் முன் இருப்பதைப் போலக் காணப்பட்டது. மனோன்மணியம்மாள் ஆனந்த வெறி கொண்டு தன்னை மறந்து, "ஆகா! என் பிராணபதீ! என் உயிரைக் கொள்ளை கொண்டு போன தெய்வமே! இந்த ஏழையின் மேல் உங்களுக்கு இப்போதாவது தயவு பிறந்ததா! ஆகா! என் பாக்கியமே பாக்கியம்!" என்று வாய்விட்டுப் பலவாறு பிதற்றிய வண்ணம் அந்தப் படத்தில் காணப்பட்ட பெண் வடிவத்தை ஆசையோடு அப்படியே தனது கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

★ ★ ★

15-வது அதிகாரம்

## பதினையாயிரம் ரூபாய் பரிசு

சென்னையில் உள்ள பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளைக்கு புதன்கிழமை அன்று கடிதம் எழுதி, அதை நீலலோசனியம் மாளிடம் கொடுத்தனுப்பிய பிறகு நமது மாசிலாமணி நிரம்பவும் குதூகலமாகவே இருந்து வந்தான். நீலலோசனியம்மாளது ஐந்து லட்சம் ரூபாய் எப்படியும் தனக்கு வந்து சேரும்படி தனது பாரிஸ்டர் செய்து விடுவார் என்ற நிச்சயம் அவனது மனதில் உண்டானது ஆகையால், தான் எதிர்பாரா வகையில் தனக்கு நேர்ந்துள்ள அந்த அபாரமான அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி, அவன் பேருவகை பூத்து ஆனந்தக் கடலில் மிதந்து அல்லும் பகலும் அதே சிந்தனையாய் இருந்து வந்தான். அந்த ஐந்து லட்சம் ரூபாயும் ரமாமணியம்மாளுக்கு இல்லாமல் போனதைக் குறித்து, அவள் அளவற்ற ஏமாற்றமும், விசனமும், ஆத்திரமும் அடைவது நிச்சயமாகத் தோன்றியது. அதுவுமன்றி அந்த விஷயத்தில் தான் அவளுக்கு விரோதியாய்த் தோன்றி, அந்தத் தொகையை அபகரித்துக் கொள்வதைப் பற்றி அவள் தன் மீது பெருத்த

பகைமையும் குரோதமும் கொண்டு தன்னால் இயன்ற வரை ஏதேனும் கெடுதல் செய்ய எத்தனிப்பாள் என்பதும் நிச்சயமாகப் பட்டது. ஆகவே, தனது ரகசியங்களில் எதெது ரமாமணியம் மாளுக்குத் தெரிந்திருக்கிற தென்பதைப் பற்றியும், அதை வெளியிடுவதால் தனக்கு எவ்விதமான தீங்கு நேரிடும் என்பதைப் பற்றியும், மாசிலாமணி ஆழ்ந்து யோசனை செய்தான். தான் வேலாயுதம் பிள்ளை முதலியோரை அங்கஹீனப்படுத்த எண்ணி, இடும்பன் சேர்வைகாரனையும் ஆட்களையும் அனுப்பிய விஷயத்தை அவள் போலீசாரிடம் வெளியிடக் கூடுமாயினும், அவள் அப்படிச் செய்யாமல் வேறுவிதமாய் வாக்கு மூலம் கொடுத்து விட்டமையால், மறுபடி அவள் அதை மாற்றிக் கூறுவது பயன்படாதென்றும், ஆகவே அந்த விஷயத்தைக் குறித்துத் தான் எவ்விதக் கவலையும் கொள்ள வேண்டியதில்லை என்று அவன் முடிவு செய்து கொண்டான். அந்த விஷயத்தைத் தவிர இன்னம் முக்கியமான வேறொரு விஷயம் அவளுக்குத் தெரிந்திருந்ததானாலும், அந்த விஷயத்தில் அவளும் சம்பந்தப் பட்டிருந்தமையால், அதை அவள் வெளியிடமாட்டாள் என்று எண்ணினான். மேற்குறித்த இரண்டு ரகசியங்களைத் தவிர வேறு எதுவும் அவளுக்குத் தெரியாதாகையால், அவளைப் பற்றித் தான் அஞ்சவே வேண்டியதில்லை என்று அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். முக்கியமாகத் தனது ரகசியங்கள் யாவும் ஒன்று பாக்கியில்லாமல் இடும்பன் சேர்வைகாரனுக்கு மாத் திரம் தெரியும் ஆதலால், தான் எப்பாடுபட்டாயினும், அவனைக் காப்பாற்றி அவனிடம் எப்போதும் போல நட்பாகவே இருந்து விட்டால், தனக்கு எவ்வித கெடுதலும் நேராதென்றும், நீல லோசனியம்மாள் போலீசாரின் கண்ணில் படாமலே இருப்பாள் ஆதலால், சேர்வை காரன் எப்படியும் விடுதலை பெற்று வந்து சேர்ந்து விடுவான் என்றும் மாசிலாமணி எண்ணிக் கொண்டிருந் தான். தானும், இடும்பன் சேர்வைகாரனும் சேர்ந்து செய்த சதியாலோசனைகளில் மனோன்மணியம்மாளை அபகரித்துவர எத்தனித்ததும், வேலாயுதம் பிள்ளை முதலியோரை மூளிப்படுத்த முயன்றதும் பலியாமல் தாறுமாறாகப் போயின ஆனாலும், சட்டைநாத பிள்ளையை விடுவித்தது, திகம்பரசாமியாரைக்

கொன்றது ஆகிய இரண்டு பிரதான விஷயங்களிலும் தமக்கு வெற்றி ஏற்பட்டதை நினைத்து நினைத்து மாசிலாமணி எல்லை யற்ற களிப்படைந்து இரண்டு பெருத்த ராஜ்யங்களுக்கு முடி சூட்டப் பெற்றவன் போல மெய்ம்மறந்து பேரின்பத்தில் தோய்ந்திருந்தான். தனது உயிர் மாத்திரம் இருக்குமாயின், தனது ஆயுள் காலத்திற்குள் வேலாயுதம் பிள்ளை முதலியோரின் விஷயத்தில் தான் எப்படியும் பழி தீர்த்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்ததன்றி, சென்னையில் இருந்து இடும்பன் சேர்வை காரன் வந்து விடும் பட்சத்தில், தான் அவனுடன் கலந்து யோசனை செய்து, வேறு எவ்விதமாவது தனது பகைவர்களின் கருவை அறுத்தே தீரவேண்டும் என்று அவன் உறுதியாக எண்ணி இருந்தான்.

அவ்வாறு மாசிலாமணி பலவித எண்ணங்களையும் இன்பகர மான யோசனைகளையும் செய்து மனக்கோட்டை கட்டியபடி சென்னையில் இருந்து நீலலோசனியம்மாளினது வருகையையும் இடும்பன் சேர்வைகாரனது வருகையையும் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துத் துடிதுடித்திருக்க, புதன்கிழமையும் வியாழக்கிழமை யும் கழிந்தன. வெள்ளிக்கிழமை பகலில் அவன் தனது ஸ்நானம் போஜனம் முதலியவற்றை முடித்துக் கொண்டு, தனது சோபா வைத்த ஊஞ்சலில் உல்லாசமாகச் சாய்ந்து ஆடிய வண்ணம், தனது மானசீகப் பொன் கோட்டையை மேன்மேலும் அழகு படுத்திக் கட்டிக் கொண்டே இருந்த சமயத்தில், "எஜமானே! நமஸ்காரம் வருகிறது" என்ற கனத்த ஒரு குரல் உண்டாயிற்று. அது மாசிலாமணிக்கு நிரம்பவும் பழக்கமான குரலாக இருந்தது. அவன் திடுக்கிட்டு நிமிர்ந்து வாசற்படியண்டை பார்க்க, கும்பிட்ட கையும் சிரித்த முகமுமாய் நமது இடும்பன் சேர்வைகாரன் பிரசன்ன மானான். அவனைக் கண்ட மாசிலாமணி மனத்திலடங்காப் பெருங் களிப்பும் சகிக்க ஒண்ணாக் குதூகலமும் அடைந்து துள்ளிக் குதித்துப் பேரானந்தத்தினால் மலர்ந்த முகத்தினனாய், "வாரும், வாரும் சேர்வைகாரரே! இப்போது தான் உம்மைப் பற்றி நினைத் தேன்; உமக்கு நூறாயிசு; இப்படி வந்து நாற்காலியின் மேல் குந்தும்" என்று மனமார்ந்த அன்போடும் மரியாதையோடும் உப சரிக்க அவன், "உட்காருகிறேன்" என்று மறுமொழி கூறிய வண்ணம்,

ஊஞ்சலிற்கருகில் இருந்த ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்து கொண்டான்.

உடனே மாசிலாமணி, "பட்டணத்திலிருந்து எப்போது வந்தீர்? நேராய் அங்கிருந்து தான் வந்தீரா? அந்த நீலலோசனியம்மாளை மறுபடியும் நீர் கண்டீரா? போலீசார் கண்ணில் படாமல் ஒளிந்து கொள்ளும்படி நான் ஏற்பாடு செய்திருந்தேன். ஓர் அவசரகாரியமாய் அந்த அம்மாள் இங்கிருந்து மறுபடி பட்டணம் வர நேர்ந்தது. அவ்விடத்தில் நீர் ஒருவேளை அந்த அம்மாளைக் கண்டிருப்பீரோ என்று கேட்டேன். உம்முடைய வழக்கின் விசாரணை முடிந்து போய்விட்டதா?" என்றான். உடனே இடும்பன் சேர்வைகாரன், "அந்த அம்மாளை நான் அதற்குப் பிறகு பார்க்கவில்லை. அந்த அம்மாள் போலீசார் கண்ணிலும் படவில்லை. நேற்றைய தினம் மாஜிஸ்டிரேட் சப்ஜெயிலைத் தணிக்கை செய்வதற்காக வந்தார். என்னைப் போலீசார் அக்கிரமமாக அடைத்து வைத்திருக்கிறார்கள் என்றும், என் வழக்கில் சாட்சி யாரும் இல்லை ஆகையால், அவர்கள் பொய் சாட்சி தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் கேட்டுக் கொண்டேன். அவர் உடனே போலீஸ் இன்ஸ்பெக்டரைத் தருவித்து என்னைத் தம்முடைய கச்சேரிக்கு அழைத்து வரச் செய்து என் வழக்கை விசாரிக்க எடுத்துக் கொண்டார். இந்த வழக்கில் முக்கிய சாட்சியான நீலலோசனியம்மாள் எங்கும் காணப்படவில்லை என்றும், அவள் அகப்படுகிற வரையில் என்னைச் சிறையில் வைத்திருக்க வேண்டும் என்றும் போலீசார் சொன்னார்கள். மாஜிஸ்டிரேட் அதை ஏற்றுக் கொள்ளாமல், நான் குற்றவாளி என்பதற்கு சரியான ருஜுவில்லை என்று அபிப்பிராயப்பட்டு என்னை விடுதலை செய்துவிட்டார். நான் நேற்று இரவு வண்டியில் ஏறி இன்று காலையில் இங்கே வந்தேன். வந்து என் வீட்டிற்குப் போய்ப் பெண்ஜாதி பிள்ளைகளை எல்லாம் பார்த்துவிட்டு ஸ்நானம் சாப்பாடு முதலியவற்றை முடித்துக் கொண்டேன். நேற்று இரவில் தூக்கமே இல்லை; சாப்பிட்டவுடன் தூக்கம் வந்தது. ஆனாலும் உடனே வந்து எஜமானைப் பார்க்க வேண்டும் என்று என் தூகத்தை அடக்கிக் கொண்டு புறப்பட்டு வந்தேன். உடனே உன்னைப் பார்க்க வேண்டும் என்ற பிரியம் ஒரு பக்கத்தில் இருந்ததானாலும், அந்தக் கந்தசாமியைத் தாங்கள்

என்ன செய்தீர்கள் என்பதைக் கேட்க வேண்டும் என்ற ஆவலில் என் தூக்கம் எல்லாம் பறந்து போய் விட்டது. அந்த விஷயத்தை முதலில் சொல்லுங்கள். போன செவ்வாய்க்கு முந்திய செவ்வாய் அன்று நீங்கள் சோபன முகூர்த்தம் ஏற்படுத்தி இருந்தீர்களே. அன்றைய இரவில் என்ன நடந்தது? ஆண் பிள்ளையே அப்படிப் பெண் வேஷத்தோடு வந்திருப்பதாக நீங்கள் எப்போது கண்டு கொண்டீர்கள்? அவன் நம்முடைய பகைவனான கந்தசாமி என்பதை நீங்கள் தெரிந்து கொண்டீர்களா இல்லையா? தெரிந்து கொண்டிருந்தால், நீங்கள் அவனை இரண்டு துண்டாய் வெட்டி பூமிக்குள் புதைத்து விட்டீர்களா இல்லையா? ஆகா! பட்டணத்தி லிருந்து அவனை மோட்டாரில் எடுத்து வந்த காலத்தில் அவன் கந்தசாமி என்பது தெரியாமல் போய்விட்டதே! தெரிந்திருந்தால், அவனை நானே கண்டதுண்டமாய் வெட்டி நடுவழியில் நாய் நரி களுக்கு விருந்தாய்ப் போட்டுவிட்டு வந்திருப்பேன். அந்தப் பெருமை எனக்கு இல்லாமல் போய்விட்டது. போனாலும் போகட்டும்; நீங்கள் அவனை என்ன செய்தீர்கள்? அவன் இன்ன மும் இந்த உலகத்தில் இருக்கிறானா அல்லது அடுத்த உலகத்தில் இருக்கிறானா? அதை முதலில் சொல்லுங்கள்" என்றான்.

உடனே மாசிலாமணி நிரம்பவும் அதிருப்தியும் அருவருப்பும் காட்டி, "அவன் கடைசி வரையில் பெண் போலவே நடித்து மகா சாமர்த்தியமாகப் பேசி, என்னை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டான் ஐயா, அவன் கந்தசாமி என்பது மாத்திரம் தெரிந்திருந்தால், நான் அவனை உயிரோடு விட்டிருப்பேன் என்று நினைக்கிறீரா? பூத்தொட்டியை எடுத்து ஒரே அடியாய் அவனுடைய மண்டையில் அடித்து அவனை மாளச் செய்து ரகசியமாய்க் கொண்டு போய்க் காவிரியாற்று வெள்ளத்தில் எறிந்துவிட்டு வந்திருப்பேன். அவன் சொன்ன கட்டுக்கதையை நம்பி சோபன முகூர்த்தத்தை மறுநாள் வைத்துக் கொள்வதற்கு நான் இணங்கி, அவனை முன்னிருந்த அறைக்கு அனுப்பிவிட்டு, நான் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டேன். இரவு சுமார் 12-மணிக்கு அவன் எழுந்து எவரும் காணாதபடி வாசற்கதவைத் திறந்து கொண்டு வெளியில் போய்விட்டான் போலிருக்கிறது. மறுநாட் காலையில் தான் அந்தச் சங்கதி எனக்குத் தெரிந்தது. அவன் எங்கே போனான்

என்பதைக் கண்டுபிடிக்கவே முடியாமல் போய்விட்டது. இதை நம்முடைய துரதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்" என்று மிகுந்த விசனத்தோடு கூறினான்.

உடனே இடும்பன் சேர்வைகாரன், "அவன் பெண் வேஷத்துடனேயே போனானா? அவன் போன பின் அவனுடைய உடம்பில் இருந்த புடவை ரவிக்கை நகைகள் எல்லாம் இங்கே இருந்தனவா?" என்றான்.

மாசிலாமணி, "செவ்வாய்க்கிழமை இரவில் அவன் அணிந்திருந்த நகைகளையும் புடவை ரவிக்கைகளையும் அவன் இங்கே வைத்து விட்டுப் போகவில்லை; இங்கே இருந்து வெள்ளை வேஷ்டி எதையும் எடுத்துக் கொண்டும் போகவில்லை. ஆகையால், அநேகமாய் அவன் பெண் வேஷத்தோடு தான் போயிருக்க வேண்டும் என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது. வெளியில் போன பிறகு அவன் எங்கேயாவது போய் வேஷங் கலைத்து விட்டுப் போனானோ, அல்லது, பெண் வேஷத்துடனேயே போனானோ, அதைத் தான் நிச்சயிக்க முடியவில்லை. அவன் உயிர் தப்பிப் போனதுமன்றி சுமார் லட்சம் ரூபாய் பெறத் தக்க வைர நகைகளோடு அவன் இவ்விடத்திலிருந்து போய் விட்டான். குதிரை தூக்கிப் போட்டதுமன்றி குழியும் தோண்டிய தென்பார்கள். அது போல இருக்கிறது அவன் செய்த காரியம்" என்றான்.

அவன் அவ்வாறு சொல்லி வாய் மூடுமுன் எதிர்பக்கத்திலிருந்த கதவிற்கு அப்பால் இருந்து, "ஆகா அப்படியா! மகா சாமர்த்திய சாலியாகிய நீர்கூடவா அப்படி ஏமாறிப் போனீர்? எங்களுக்கெல்லாம் இது நிரம்பவும் அவமானமாக அல்லவா இருக்கிறது?" என்ற ஒரு குரல் கேட்டது. மாசிலாமணி திடுக்கிட்டுத் கதவுப்பக்கம் திரும்பிப் பார்த்தான். தாங்கள் பேசியதை யாரோ ஒளிந்து கேட்டு விட்டார்களே என்ற கோபத்தினால், அவனது கண்கள் நெருப்புத் தணல் போலச் சிவந்துபோயின. "யாரடா அங்கே ஒளிந்திருப்பவன்?" என்று மாசிலாமணி அதட்டிக் கேட்க, "ஒளிந்திருக்கவில்லை, இப்போது தான் வந்து கொண்டிருக்கிறோம்" என்று கூறிய வண்ணம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அண்ணாவையங்கார்

உள்ளே நுழைந்தார். அவருக்குப் பின்னால் ஆயுதபாணிகளாய் நான்கு ஜெவான்களும் வந்தனர். அவர்களைக் காண, மாசிலாமணி திடுக்கிட்டுப் போனான். அவனது முகம் உடனே வாட்டமடைய, மிகுந்த கோபம் பொங்கி எழுந்தது. இடும்பன் சேர்வைகாரன் போலீசாரைக் கண்டு மிகுந்த கிலேசம் அடைந்தவனாய்க் காணப் பட்டான். இருவரும் உடனே தங்களது ஆசனங்களை விட்டுக் கீழே இறங்கினர். எதற்காகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்போது வந்திருக்கிறாரோ என்ற அச்சமும் கவலையும் மாசிலாமணியின் மனத்திலெழுந்து வதைக்கத் தொடங்கின ஆனாலும், தான் அந்தரங்கமாக இருந்து பேசிக் கொண்டிருந்த சமயத்தில் போலீசார் தனக்கு அறிவிக்காமல் தாராளமாய் உள்ளே வந்ததைப் பற்றி அவன் அடக்க இயலாத ஆத்திரமடைந்தான். அதுவுமன்றி, கந்தசாமியின் விஷயத்தில் தான் ஏமாறிப்போனதாக இடும்பன் சேர்வைகாரனிடம் சொன்னதை அவர்கள் கேட்டிருந்து, அது விஷயத்தில் தன்னைக் குத்தியது போல வார்த்தை சொல்லியதைக் கேட்கவே, மாசிலாமணி அதற்கு முன் போலீஸ் அண்ணாவையங் காரிடம் காட்டி வந்த மரியாதையை விட்டு அவரை நோக்கி அலட்சி யமாகப் பேச ஆரம்பித்து, "என்ன சுவாமிகள்! போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டியவர்கள் வழி தவறி இங்கே வந்து விட்டீர்களா? அல்லது, போலீஸ் ஸ்டேஷன் கட்டிடம் இடம் போதவில்லை என்று, இந்த வீட்டையும் உங்கள் ஸ்டேஷனாக உபயோகித்து வருகிறீர்களா? இனி நான் கலியாணம் செய்து கொண்டால் கூட நான் என் பெண்சாதியோடு பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது போலிருக்கிறதே; எப்போது பார்த்தாலும் போலீசார் இந்த வீடே கதியாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்தால், அவர்களுக்கு இதைத் தவிர வேறே வேலையே இல்லை போலவும் இருக்கிறது. இத்தனை போலீஸ் உத்தியோ கஸ்தரும், ஜெவான்களும் என் ஒருவன் பொருட்டே நியமிக்கப் பட்டிருப்பதாக அல்லவா தோன்றுகிறது. இந்த இரண்டு வாரத்திற் குள் நீங்கள் எட்டுத் தடவை வந்து இந்த வீட்டைச் சோதனை போட்டுப் பார்த்து விட்டீர்கள்; இன்னம் என்னை விட்ட பாடில்லை. உங்கள் கண்ணிலெல்லாம் படாமல் நான் எந்தக் குற்ற வாளிகளை இங்கே ஒளிய வைத்திருக்கிறேன்? இந்தத் தெருவில்

இந்த வீடு இருப்பது போலீசார் கண்ணுக்கு உறுத்தலாக இருந்தால், இதை இடித்தாவது தரைமட்டமாக்கி விடுங்களேன். ஏன் இப்படி அடிக்கடி மூட்டைப்பூச்சிகள் போல மறைந்திருந்து மனிதரைக் கடித்து அவருடைய இரத்தத்தை ஓயாமல் குடித்துக் கொண்டே இருக்கிறீர்கள்?" என்றான்.

அவன் ஆத்திரமாகவும் அவமரியாதையாகவும் பேசியதைப் பற்றி அண்ணாவையங்கார் கோபங் கொள்ளாதவராய் மாசிலா மணியை நோக்கி சந்தோஷகரமாய் மலர்ந்து புன்னகை செய்த முகத்தோடு சாந்தமாகப் பேசத் தொடங்கி, "ஏது மாசிலாமணிப் பிள்ளைக்கு இன்று அசாத்தியமான கோபம் வருகிறது! உமக்கு நான் இன்று ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். அதைக் கேட்டு நீர் சந்தோஷமடைய வேண்டியதை விட்டு இப்படிக் கசந்து பேசுகிறீரே! நீர் கலியாணம் செய்து கொள்ளாத பிரம்மசாரி என்பது எனக்குத் தெரியாதா? நீர் கலியாணம் செய்து கொண்ட குடும்பஸ்தராய் இருந்தால், நான் இப்படி திடீரென்று உள்ளே வருவேனா? நீர் என்னுடைய நண்பர் என்ற உரிமை பாராட்டி நான் வந்துவிட்டேன். நீர் யாரோ ஆண்பிள்ளையோடு தானே பேசிக் கொண்டிருந்தீர். ஆனாலும் இது உமக்கு அசந்தர்ப்ப வேளையாய் இருந்தால் நான் வெளியில் போய் உம்முடைய ஆள்வசம் சொல்லி அனுப்புகிறேன். உம்முடைய அனுமதி கிடைத்த பிறகு மறுபடி வருகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட மாசிலாமணி, "போலீசார் கூட மனிதருக்கு நல்ல சங்கதி சொல்வதுண்டா? தூமகேது என்ற நட்சத்திரம் தோன்றினால், அது உலகத்திற்கு அழிவு ஏற்படப் போகிறது என்பதைக் காட்டும் குறி என்பார்கள். அது போல, போலீசார் வந்தால், அந்த மனிதனுக்கு ஏதோ அபாயம் நேரப் போகிறது என்பதைக் காட்டும் அறிகுறியல்லவா அது. ஆனால், நீங்கள் என்னை உங்களுடைய நண்பன் என்ற பதவிக்கு உயர்த்தி இருக்கிறபடியால் ஒருவேளை உண்மையிலேயே நீங்கள் ஏதாவது எனக்கு நன்மை செய்ய வந்திருக்கலாம். எப்படியாவது இருக்கட்டும்; விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றான்.

அண்ணாவையங்கார், "முன் தடவைகளில் நான் வந்து உம்முடைய தமயனார் சட்டைநாத பிள்ளை இந்த வீட்டில்

ஒளிந்து கொண்டிருக்கிறாரோ என்று சோதனை போட்டுப் பார்த்த காலத்தில், அவர் சிறைச்சாலையில் இருப்பதே உமக்கு அனு கூலமான தென்று நீர் சொன்னீர் அல்லவா? அதுவுமன்றி, உம் முடைய அண்ணனைப் பிடித்துக் கொடுப்பவருக்குநாங்கள் ஐயாயிரம் ரூபாய் வெகுமதி கொடுப்பதாக வெளியிட்டபோது, நீர் அதற்கு இரட்டிப்புத் தொகை வெகுமதி கொடுப்பதாக ஒப்புக் கொண்டு எழுதிக் கொடுத்தீரல்லவா?" என்றார்.

மாசிலாமணி, "ஓ! அதைப்பற்றி சந்தேகமென்ன? அதை இப்பொழுதும் சொல்லி உறுதிப்படுத்துகிறேன்" என்று அழுத்த மாகக் கூறினான்.

அண்ணாவையங்கார், "சரி! சந்தோஷம்; எனக்குப் பட்டணத்தில் இருந்து ஓர் அவசர உத்தரவு வந்திருக்கிறது. உம்முடைய தமையனார் ஒளிந்திருந்த இடத்தை யாரோ ஒருவர் காட்டி விட்டாராம். உம்முடைய தமயனாரைப் பிடித்துக் கொண்டு போய்த் தஞ்சாவூரில் வைத்திருக்கிறார்களாம்" என்றார்.

மாசிலாமணி, "ஓகோ! அப்படியா! அது நிரம்பவும் சந்தோஷ கரமான செய்திதான்" என்றான்.

அண்ணாவையங்கார், "அதைச் சொல்லி என் நண்பரான உம்மை உடனே சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற அவசரத்தி னால்தான், நான் உம்முடைய சந்தர்ப்பத்தை அறிந்து கொள்ளாமல் வந்து விட்டேன். அந்த உத்தரவில் இன்னம் இரண்டொரு விஷயங்களும் காணப்படுகின்றன. இன்று வெள்ளிக்கிழமை அல்லவா; இந்த வழக்கை தஞ்சாவூரில் உள்ள ஜில்லா ஜட்ஜி துரையே திங்கட்கிழமை அன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு முடிவு செய்ய வேண்டும் என்றும், உம்முடைய தமயனாரைக் காட்டிக் கொடுத்தவருக்கு அந்த ஜட்ஜி துரை அப்போதே பதினை யாயிரம் ரூபாய் சன்மானம் கொடுக்க வேண்டும் என்றும், அதில் நீர் கொடுப்பதாகச் சொன்ன பதினாயிரம் ரூபாயோடு உம்மை வரவழைத்து ஆயத்தமாய் வைக்க வேண்டும் என்றும், உத்தரவு வந்திருக்கிறது" என்றார்.

மாசிலாமணி, "ஓஹோ! அப்படியா! நான் சொன்னபடி பதினாயிரம் ரூபாயை அன்றைய தினமே மூட்டையாகக் கட்டித்

தயாராய் வைத்திருக்கிறேன். திங்கட்கிழமை தானே விசாரணை? நான் அன்றைய தினம் தஞ்சாவூர் ஜட்ஜி கச்சேரிக்கு அவசியம் வந்து சேருகிறேன்" என்று துடியாகக் கூறினான்.

அண்ணாவையங்கார், "அந்த உத்தரவில் இன்னொரு சங்கதியும் இருக்கிறது. இதுவரையில் கிடைத்த சாட்சியத்தின்படி, உம்முடைய தமயனாரை விடுவித்த விஷயத்திலும், அவரை ஒளிய வைத்திருந்ததிலும் நீரும் சம்பந்தப்பட்டிருப்பதாக ருஜு அகப்பட்டிருக்கிறதாம். ஆகையால், உம்மையும் உடனே அழைத்துக் கொண்டு போய்ப் போலீஸ் கண்காணிப்பில் பந்தோ பஸ்தாய் வைத்திருக்கும்படியும், நீர் வக்கீல் முதலியோரை அமர்த்திக் கொள்ள எண்ணினால், அதற்குத் தகுந்த சௌகரியங் கள் செய்து கொடுக்கும்படியும், நீர் உம்முடைய சொத்துகளோடு வீட்டைப் பூட்டி முத்திரை வைத்து திறவுகோலை உம்மிடமே வைத்துக் கொண்டிருக்கச் செய்ய வேண்டும் என்றும் உத்தரவு வந்திருக்கிறது" என்று நயமாகக் கூறினார்.

அதைக் கேட்ட மாசிலாமணி திடுக்கிட்டான். அவனது முகம் மாறிப் போயிற்று. அவன் அண்ணாவையங்காரை நோக்கி, "இப்போது கடைசியாக என் நண்பர் சொன்னதுகூட சந்தோஷச் செய்தியில் சேர்ந்ததுதானோ?" என்று ஆத்திரமாகவும் குத்தலாக வும் கூறினான்.

அண்ணாவையங்கார், "நீர் இந்த விஷயத்தில் கொஞ்சமும் சம்பந்தப்பட்டதே இல்லை என்று என்னிடம் எத்தனையோ தடவைகளில் சொல்லிப் பிரமாணம் செய்திருக்கிறீர். இந்த விசாரணையின் முடிவில் நீர் எவ்வித களங்கமும் இல்லாத யோக்கியர் என்ற பெயருடன் வெளியில் வரப் போகிறீர் அல்லவா? அதைவிட சந்தோஷகரமான செய்தியும் வேறே உண்டா?" என்றார்.

அதைக் கேட்ட மாசிலாமணி, "ஒகோ! சரி, வாஸ்தவந்தான். இப் போது நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?" என்றான்.

அண்ணாவையங்கார், "வேறொன்றுமில்லை. நீர் வெகுமதி கொடுப்பதாகச் சொன்னபடி ரூபாய் பதினாயிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அதைத் தவிர உம்முடைய அண்ணன் நீர் ஆகிய இருவருக்கும் வக்கீல் வைத்து வாதாட வேண்டியதற்கு ஏதாவது தொகை வேண்டும் என்று நீர் நினைத்தால், அதையும் எடுத்துக் கொள்ளும். உம்முடைய வேலைக்காரர்களை நீர் இரண்டொரு தினங்கள் வேறே எங்கேயாவது இருக்கும்படி சொல்லி அனுப்பிவிட்டு, வீட்டைப் பூட்டி, முத்திரை வைத்து திறவுகோலை உம்மிடமே பத்திரமாக வைத்துக் கொள்ளும். எங்களோடு கூட நீர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து உம்முடைய சொந்த வீட்டில் இருப்பது போல அங்கே இரும். உமக்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் நாங்கள் செய்து கொடுக்கிறோம். வக்கீல் யாரையாவது அமர்த்தி அவரை வருவித்துப் பேச உத்தேசித்தால் அதற்குத் தேவையான உதவி களையும் செய்கிறோம்; ஞாயிற்றுக்கிழமை இரவு நாம் புறப் பட்டுத் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்து, திங்கட்கிழமை விசா ரணைக்கு ஆஜராக வேண்டும். அவ்வளவுதான் செய்தி. அதிகம் ஒன்றுமில்லை" என்றார்.

அதைக் கேட்ட மாசிலாமணி இன்னது செய்வதென்பதை அறியாதவனாய்ச் சிறிது நேரம் கலங்கித் தவித்த பின், "சரி; நீங்கள் சொன்னபடியே செய்யலாம். பட்டணத்திலிருக்கும் பாரிஸ்டர் சிவ சிதம்பரம் பிள்ளைக்கு உடனே அவசர தந்தியொன்று கொடுத்து அவர் நாளைய தினமே இங்கே வரும்படி செய்ய வேண்டும். நான் உங்கள் ஸ்டேஷனிலேயே இருக்கிறேன். இந்த வீட்டையே நீங்கள் போலீஸ் ஸ்டேஷனாக மாற்றி இருக்கும் போது, நான் இங்கே இருந்தால் என்ன; அங்கே இருந்தால் என்ன. இரண்டிற்கும் அதிக வித்தியாசம் ஒன்றுமில்லை. அதிருக்கட்டும், என்னை நீங்கள் இப்போது விலங்கிட்டு அழைத்துக் கொண்டு போக உத்தேசிக்கிறீர்களா என்ன?" என்றான்.

இன்ஸ்பெக்டர், "இல்லை; இல்லை. உம்முடைய யோக்கியதை எங்களுக்குத் தெரியாதா. நாங்கள் உம்மை அப்படி அவமானப் படுத்த மாட்டோம். வாசலில் வண்டி வந்து தயாராய் நிற்கிறது. நீர்

சாதாரணமாக வந்து அதில் உட்கார்ந்து கொள்வதே போதுமானது. எவருக்கும் தெரியாமல் நாம் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேருவோம்" என்றார்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்திருந்த சமயத்தில் இடும்பன் சேர்வைகாரன் மெதுவாக நழுவி வெளியில் போய் அவ்விடத்தில் நின்ற ஒரு ஜெவானிடம் ஏதோ பேசிய பின் வெளியில் போய் விட்டான்.

அதன் பிறகு கால் நாழிகை காலம் கழிந்தது. இன்ஸ்பெக்டர் கூறியபடி மாசிலாமணி பணத்தொகையை நோட்டாக எடுத்துக் கொண்டு வேலைக்காரர்களை அனுப்பிவிட்டு வீட்டைப் பூட்டி முத்திரை வைத்து முடித்து ஆயத்தமாக, இன்ஸ்பெக்டர் அவனையும் ஜெவான்களையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு கால் நாழிகையில் போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார்.

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் கழிந்தன. கும்பகோணத்தில் பிரபல வக்கீலாக இருந்து பத்து வருஷ காலத்திற்கு தண்டனை அடைந்தவரும், சிறைச்சாலையில் இருந்து தந்திரமாகத் தப்பி ஓடிப் போனவருமான சட்டைநாத பிள்ளை மறுபடி அகப்பட்டுக் கொண்டார் என்ற செய்தியும், அந்த வழக்கு திங்கட் கிழமை அன்று தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜி கச்சேரியில் பரிசீலனை செய்யப்படப் போகிறதென்ற செய்தியும் காட்டுத் தீ பரவுவது போல வெகு சீக்கிரத்தில் தஞ்சை ஜில்லா முழுதும் பரவிப்போனது ஆகையால், விசாரணை காலத்தில் வேடிக்கை பார்க்கவும், அதன் முடிவைத் தெரிந்து கொள்ளவும் ஆவல் கொண்டு ஜனங்கள் ஆயிரக் கணக்கில் ஜில்லா ஜட்ஜியின் கச்சேரியிலும் அதற்கு வெளியிலும் வந்து காலை ஒன்பது மணி முதலே கூடி நெருங்கி அதைப் பற்றி மிகுந்த வியப்போடு பேசியபடி ஆவலோடு காத்திருந்தனர். சட்டைநாத பிள்ளை எப்படி இருப்பார் என்று பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் தூண்டப்பட்டவர்களாய் நூற்றுக் கணக்கில் வக்கீல்மார்கள் பிரசன்னமாகி கச்சேரி மண்டபம் முழுதையும் அடைத்துக் கொண்டனர். குற்றவாளியின் சார்பாக சென்னையில் இருந்து வந்திருந்த பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை திண்டு தலையணைகள் போலக் காணப்பட்ட ஒரு வண்டி சட்ட

புஸ்தகங்களைக் கொணர்ந்து படாடோபமாய் எதிரில் பரப்பிவிட்டு முதல் ஆசனத்தில் வெகு ஆடம்பரமாக உட்கார்ந்திருந்தார். சர்க்கார் தரப்பில் அந்த வழக்கை நடத்துவதற்காக அண்ணாஜிராவ் என்ற பிரபல வக்கீல் மேற்படி பாரிஸ்டருக்கு எதிரில் பூனை போல அடங்கி உட்கார்ந்திருந்தார். அவர் உயரத்தில் நான்கு அடியே இருந்தார் ஆனாலும், சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில், தமது திறமையினால், அவர் மகா விஷ்ணுவின் வாமனாவதாரம் எப்படி திரிவிக்கிரமாவதாரமாய் உயர்ந்து உலகம் முழுதும் நிரம்பியதோ அது போலச் செய்யத்தக்க மகா மேதாவியாய் இருந்தார். அவரை ஜனங்கள் மிளகு குடுக்கை அண்ணாஜிராவ் என்ற காரணப் பெயரினால் அழைத்தனர். ஜனங்களுக்குப் பரபரப்பை உண்டாக்கக் கூடிய முக்கியமான வழக்குகளில் கச்சேரியில் ஆயிரக் கணக்கில் ஜனங்கள் கூடி அந்த ராயர் பேசுவதைக் கேட்கவும், அவருடைய குறுக்கு விசாரணையின் சாமர்த்தியத்தைப் பார்க்கவும் வருவார்கள். ஆனால், மற்ற வக்கீல்களின் இடையில் அவர் அகப்பட்டுப் புதைந்து போய்விடுவார் ஆதலால், ஜனங்கள் எவ்வளவு தான் முயன்றாலும், அவரது வடிவத்தைக் காண முடியாதாயினும், தேங்காய் உடைப்பது போல, அவர் அபார சாமர்த்தியத்தோடு குறுக்கு விசாரணை செய்யும் குரலோசையை யும், சடார் படார் என்று சிலம்பம் விளையாடுவது போலவும், கலகலவென்று புளியம்பழம் உலுக்குவது போலவும் அவர் வாக்குவாதம் செய்யும் குரலோசையும் கணீர் கணீர் என்று வெகு தூரம் வரைக்கும் கேட்கும். அத்தகைய பெருங்கீர்த்தி வாய்ந்த சிறிய மூர்த்தி காலத்திற்கு முன்பே ஆஜராய் அந்த வழக்கின் தகவல் எதையும் அறிந்து கொள்ளாதவர் போல நிஷ்களங்கமான முகத் தோற்றத்தோடு உட்கார்ந்திருந்தார். இன்னும் பல போலீஸ் இன்ஸ் பெக்டர்களும் மற்ற ஜெவான்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். விசாரணை குமாஸ்தா உமாமகேசுவர ஐயர் என்பவர் சாந்துப் பொட்டணிந்து, முறுக்காகக் கஞ்சியேற்றப்பட்ட தூய வெள்ளை யான ஆடைகளை அணிந்து கருக்காகத் தமது கேஸ் கட்டுகளை ஒழுங்குப் படுத்திக் கொண்டு அன்றைய தினம் சுருக்காகவே வந்து உட்கார்ந்து ஜட்ஜி துரையின் வருகையை ஆவலோடு எதிர்பார்த் திருந்தார். சரியாக மணி 11 அடித்தது. ஜட்ஜ் விண்டர் போதம்,

ஐ.சி.எஸ். துரை பிரசன்னமாகித் தமது ஆசனத்தில் அமர்ந்து, விசாரணை குமாஸ்தாவை நோக்கி, "இன்று எந்த வழக்கு விசாரணைக்குப் போட்டிருக்கிறது?" என்றார்.

விசாரணை குமாஸ்தா, "ஜெயிலிலிருந்து தப்பி ஓடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பவரின் வழக்கு விசாரணைக்குப் போடப்பட்டிருக்கிறது" என்று கூறி அந்த வழக்கு சம்பந்தமான காகிதக் கட்டை எடுத்து ஜட்ஜிக்கு முன்னால் வைக்க, அவர் அதில் இருந்த காகிதங்களைத் தள்ளித் தள்ளி அங்குமிங்கும் படித்துப் பார்த்துவிட்டு, சாந்தமே வடிவாக நிமிர்ந்து தமக்கெதிரில் இருந்த வக்கீல்களைப் பார்த்தார். வலது பக்கமாயிருந்த சாட்சிக் கூண்டிற் கருகில் நின்று கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி, "குற்றவாளிகளை அழைத்து வாருங்கள்" என்றார். அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் பக்கத்திலிருந்த ஜெவானைப் பார்க்க, அவன் உடனே வெளியில் ஓடினான். ஐந்து நிமிஷ நேரம் கழிந்தது. அங்கே கூடியிருந்த வக்கீல்களும் மற்ற ஜனங்களும் சட்டைநாத பிள்ளை வரப் போகிறார் என்றும், அவர் எப்படி இருக்கிறார் என்று பார்க்கவும் ஆவல் கொண்டு வாசற்படியைப் பார்த்தபடி இருந்தனர். அப்போது மாசிலாமணியை அழைத்துக் கொண்டு இரண்டு ஜெவான்கள் உள்ளே வந்தனர். ஆனால், அவர்கள் அவனைக் கைதிகள் நிற்கும் கூண்டிற்குப் பக்கத்தில் கொண்டு வந்து நிற்க வைத்தார்கள். அவன் தனது கையில் பண நோட்டுகள் அடங்கிய மூட்டை ஒன்றை வைத்துக் கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்றான். அவன் வந்ததைக் கண்ட ஜட்ஜ் துரை இன்ஸ் பெக்டரைப் பார்த்து, "இவர் யார்?" என்று கேட்க, இன்ஸ் பெக்டர், "இவர் சட்டைநாத பிள்ளையின் தம்பி. சட்டைநாத பிள்ளையைப் பிடித்துக் கொடுக்கிறவர்களுக்குத் தாமும் பதினாயிரம் ரூபாய் வெகுமதி கொடுப்பதாக இவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆகை யால், பணத்தோடு இவரை அழைத்துக் கொண்டு வந்திருக்கி றோம். விசாரணையின் முடிவில் பதினையாயிரம் ரூபாயைக் கோர்ட் டாரே அதற்குரியவருக்குச் சன்மானிக்க வேண்டும்" என்றார்.

அந்தச் சமயத்தில் கத்தி துப்பாக்கிகளோடு வேறு மூன்று கைதிகளை நடத்தி அழைத்துக் கொண்டு நான்கு ஜெவான்கள் உள்ளே நுழைந்து, அவர்கள் மூவரையும் ஜட்ஜிக்கு நேர் எதிரில்

இருந்த கைதிக் கூண்டில் நிறுத்தினார்கள். அந்த மூன்று கைதிகளுள் இருவர் கால் சட்டை, மேல் சட்டை, குல்லா முதலிய உடைகள் தரித்த துருக்கர்களாய்க் காணப்பட்டனர். இன்னொருவர் உயரமாக வளர்ந்தவராயும் சுமார் இருபத்தைந்து வயதடைந்தவராயும் காணப்பட்டார். மூன்றாவது கைதி ஒரு துருக்க கோஷா ஸ்திரீ ஆதலால், அவள் தலை முதல் கால் வரையில் துப்பட்டியால் தன்னை மூடிக்கொண்டிருந்தாள். முகத்தில் கண்களுக்கு மாத்திரம் இரண்டு துளைகள் விடப்பட்டிருந்தன. அந்த ஸ்திரீயின் சிவந்த பாதங்களும் அவற்றில் காணப்பட்ட கொலுசுகள் பாதசரம் முதலிய வைகளும் வெளிக்குத் தெரிந்தன. அவற்றிலிருந்து, துப்பட்டியின் உயரம் பருமன் முதலியவற்றிலிருந்தும், அதற்குள் இருந்தது கொடி போல இருந்த நல்ல யௌவனப் பருவத்து ஸ்திரீ என்பது ஒருவாறு யூகிக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் மூவரையும் கண்ட ஜனங்களும் வக்கீல்களும் அந்தக் கைதிகள் வேறே ஏதோ வழக்கிற்கு சம்பந்தப்பட்டவர்கள் என்று எண்ணிக் கொண்டு, சட்டைநாத பிள்ளை ஏன் வரவில்லை என்று அப்போதும் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

உடனே ஜட்ஜி துரை தமக்கு முன்னால் வக்கீல்களின் இடையில் சிறிய வடிவத்தோடு குழந்தை போல உட்கார்ந்திருந்த மிளகு குடுக்கை ராயரைப் பார்த்து, "சர்க்கார் தரப்பில் மிஸ்டர் அண்ணாஜி ராவ் இந்த வழக்கை நடத்தப் போகிறார் என்பது தெரிகிறது" என்றார். உடனே அவருக்கெதிரில் உட்கார்ந்திருந்த பாரிஸ்டர் சிவ சிதம்பரம் பிள்ளை தமது விலாசம் அச்சடித்த ஒரு கார்டை ஜட்ஜியின் மேஜையில் வைத்துவிட்டு, தாம் எதிரிகளுக்காக ஆஜராவதாய்த் தெரிவித்துவிட்டுக் கீழே உட்கார்ந்து கொண்டார். உடனே ஜட்ஜி ராயரைப் பார்த்து, "சரி; கைதிகள் வந்து விட்டார்கள் அல்லவா. விசாரணையைத் தொடங்குவோம்" என்றார். அதைக் கேட்டவுடனே ராயர் அம்பு பாய்வது போலச் சடேலென்று எழுந்து நிரம்பவும் அலட்சியமாகவும் கம்பீரமாகவும் நின்று கணீர் கணீர் என்று பேசத் தொடங்கினார். கைதிகள் வந்து விட்டார்கள் என்று ஜட்ஜி துரை சொன்னதைக் கேட்டும், ராயர் பேச ஆரம்பித்ததைக் கண்டும் வக்கீல்களும் ஜனங்களும் பிரமிப்படைந்தனர். சிலர், "யாரோ

துருக்கர்கள் அல்லவா வந்திருக்கிறார்கள். இது ஒரு வேளை வேறே வழக்காக இருக்குமோ? சட்டைநாத பிள்ளையின் வழக்கை ஒரு வேளை இதற்குப் பிறகு எடுத்துக் கொள்வார்களோ" என்று தணி வான குரலில் கூறினர். வேறு சிலர், "ஒரு வேளை சட்டைநாத பிள்ளை தான் துருக்கராய் உருமாறி இருக்கிறாரோ என்னவோ?" என்றனர். சட்டைநாத பிள்ளையை அதற்கு முன் பார்த்திருந்த சிலர், "ஆமய்யா, ஆமய்யா! அதோ குட்டையாக இருக்கிறாரே! அவர் சட்டைநாத பிள்ளை போலவே இருக்கிறாரைய்யா! சரி சரி; அவர் தான் சட்டைநாத பிள்ளை" என்றனர். அதைக் கேட்ட மற்றவர், "ஓகோ அப்படியா! ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவந்து துருக்க சாயப்புவைப் போல வேஷம் போட்டுக் கொண்டா அவர் ஒளிந்து கொண்டிருக்கிறார்; அவரோடு கூட இருக்கும் மற்ற இருவரும் யார் என்பது தெரியவில்லையே!" என்றனர். வேறு சிலர், "இன்னம் கொஞ்சம் பொறுத்தால் எல்லா விவரமும் வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்து போகிறது" என்று கூறினர்.

அங்கிருந்த கச்சேரி டபேதார், "உஸ் உஸ், யாரும் பேச வேண்டாம்" என்று கூறி அடக்க, உடனே எல்லோரும் வாயை மூடிக் கொண்டு, ராயர் என்ன பேசப் போகிறார் என்பதையே மிகுந்த ஆவலோடு கவனிக்கத் தொடங்கினர்.

ராயர் தாம் குள்ளமாய் இருக்கிறோம் ஆதலால் மற்றவருக்குச் சரியாக உயர வேண்டும் என்று எண்ணுகிறவர் போலத் துள்ளித் துள்ளிக் குதித்த வண்ணம் கணீர் கணீர் என்று பேசத் தொடங்கி, "நியாயாதிபதி அவர்களே! இந்த வழக்கின் சாட்சிகளை விசாரிக்கும் முன் வழக்கப்படி நான் இதன் ஸாரத்தை சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி விடுகிறேன். இப்பொழுது கொண்டு வரப் பட்டிருக்கும் வழக்கு முதல் பார்வைக்கு நிரம்பவும் சிக்கலாகத் தோன்றும் என்பது நிஜமே. ஆயினும் இதை நாம் மூன்று பாகங்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு பாகமாய் எடுத்துக் கொண்டு விசாரணையை அதற்குச் சம்பந்தப்பட்ட வரையில் நடத்திக் கொண்டு போவதே நல்லது. பத்து வருஷ காலத்திற்கு தண்டனை அடைந்து சிறைச்சாலையில் இருந்த கைதியான சட்டைநாத பிள்ளை என்பவர் வார்டர்களிடம் பாதுகாப்பிலிருந்து

தப்பி ஓடிய குற்றத்தை நாம் முதல் அம்சமாக எடுத்துக் கொள்வோம். அது முடிந்த பிறகு, பல வந்தமாக சட்டைநாத பிள்ளையை விடுவிக்க அனுகூலமாய் இருந்தது, அவர் ஒளிந்திருந்த உதவியாய் இருந்தது ஆகிய குற்றங்களைச் செய்த துணைக் குற்றவாளிகளின் வழக்கை நாம் இரண்டாவது அம்சமாக வைத்துக் கொள்வோம். அந்தத் துணைக் குற்றவாளிகளுள் சிலர் வேறு முக்கியமான சில குற்றங்களையும் செய்திருக்கிறார்கள் ஆதலால், அதை நாம் மூன்றாவது அம்சமாக வைத்துக் கொள்வோம். இப்போது நாம் முதலாவது அம்சத்தைக் கவனிப்போம். கும்பகோணத்தில் பெரிய தெருவில் இருந்தவரும், வக்கீல் வேலை பார்த்து வந்தவருமான சட்டைநாத பிள்ளை என்பவர் ஏதோ சில குற்றங்கள் செய்ததற்காக சுமார் இரண்டு வருஷ காலத்திற்கு முன் மன்னார்குடி ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டினால் பத்து வருஷ காலத்திற்குக் கடினக் காவல் தண்டனை விதிக்கப்பெற்று இந்த ஊர்ப் பெரிய சிறைச்சாலையில் இருந்து வந்தார். இந்த ஊர் ஜெயிலில் ஆட்டப்படும் நல்லெண்ணெயை வார்டர்கள் ஒரு கைதியின் தலையில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்து விற்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கடைசி இரண்டு மாதகாலமாய்ச் சட்டைநாத பிள்ளை செக்கோட்டும் உத்தியோகத்திலிருந்து, எண்ணெய் தூக்கி விற்கும் உத்தியோகத்திற்கு உயர்த்தப்பட்டார். சுமார் 20 தினங்களுக்கு முன் ஒரு நாள் எண்ணெய்க் குடத்தைக் கூடைக்குள் வைத்துத் தலையில் சுமந்து சட்டைநாத பிள்ளை பரமசாதுவாய் இந்த ஊர் மேற்கு ராஜவீதியின் வழியாக வந்து கொண்டிருந்தார். இரண்டு வார்டர்கள் காவலாக அவரோடு வந்து கொண்டிருந்தனர். ஒரு சந்தின் பக்கத்தில் அவர்கள் வந்த போது அவ்விடத்தில் ஒரு விநோத சம்பவம் நடந்தது. அதன் விவரம் பத்திரிகைகளில் நன்றாக வெளியிடப்பட்டிருப்பதால், இந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கும் விவரத்தைப் படிக்கிறேன்" என்று கூறி, ஒரு பிரபலக்கைதி ஜெயிலிலிருந்து தப்புவிக்கப் படுகிறார் என்ற தலைப்பின் கீழ் இந்தக் கதையின் இரண்டாவது அதிகார முடிவில் வெளியிடப்பட்டிருக்கும் செய்தி முழுதையும் தெளிவாகப் படித்துக் காட்டினார். காட்டிய பின் ராயர் மேலும் பேசத்

தொடங்கி, "அதன் பிறகு போலீசார் இந்தச் சட்டைநாத பிள்ளை எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார் என்பதைக் கண்டு பிடிப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் செய்து, பார்க்கக்கூடிய சகலமான இடங்களிலும் தேடிப்பார்த்து விட்டார்கள். இவர் எங்கும் அகப்படவில்லை. சட்டைநாத பிள்ளையின் தம்பி மாசிலாமணிப் பிள்ளை என்பவர் கொடுப்பதாகச் சொன்ன பதினாயிரம் ரூபாயோடு சர்க்காரில் ரூபாய் ஐயாயிரம் சேர்த்து, பதினையாயிரம் ரூபாய் வெகுமதி கொடுக்க ஒதுக்கி வைத்திருப்பதாகவும், சட்டைநாத பிள்ளையைப் பிடித்துக் கொடுப்போருக்கு அதை உடனே கொடுப்பதாகவும் போலீசார் இந்த இந்தியா முழுமையிலும் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் விளம்பரம் அனுப்பி பத்திரிகைகளிலும் பகிரங்கப் படுத்தினார்கள். போன வியாழக்கிழமை வரையில் எவ்விதத் தகவலும் தெரியாதிருந்தது. வெள்ளிக்கிழமை தினம் சென்னப்பட்டணத்திலிருந்து ஜானிஜான் கான் சாயப்பு என்ற ஒருவர் கும்பகோணம் போலீசாரிடம் வந்து தாம் சட்டைநாத பிள்ளையின் இருப்பிடத்தைக் காட்டுவதாகச் சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு போய், அந்த இடத்தைக் காட்டினார். கும்பகோணத்தில் லப்பைத் தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அதில் சுமார் 200-வீடுகள் இருக்கின்றன. அந்தத் தெருவில் இருப்பவர்கள் எல்லோரும் துருக்க ஜாதியைச் சேர்ந்தவர்கள். அந்தத் தெருவில் உள்ள துருக்கருக்குள் கட்டுப்பாடும் சுயஜாதி அபிமானமும் அதிகம். அன்னிய ஜாதியார் அந்தத் தெருவிற்குள் வந்து ஏதேனும் சேஷ்டை செய்தால், அவர்களிடமிருந்து உயிரோடு தப்பி வெளியில் போவது துர்லபம். போலீசார்கூட அந்தத் தெருவிற்குள் போக அஞ்சுவார்கள். எல்லா வீடுகளிலும் கோஷா ஸ்திரீகள் இருப்பார்கள் ஆதலால், கதவுகள் எப்போதும் அநேகமாய் சாத்தப்பட்டே இருக்கும். போலீசாராயினும் மற்றவ ராயினும் அந்தத் தெருவிற்குள் போய் அற்ப சங்கதியும் தெரிந்து கொள்ள முடியாது. அத்தெருவில் உள்ள ஒரு துருக்கருக்கு ஏதாவது ஒரு துன்பம் வந்துவிட்டால், மற்ற எல்லோரும் அவருக்கு உதவியாக உடனே கூடிவிடுவார்கள். அப்படிப்பட்ட கட்டுப்பாடான தெருவின் நடுவில், சட்டைநாத பிள்ளை துருக்கராக மாறி,

வீட்டிற்குள்ளேயே இருந்து வந்தார். அதற்கு முன் அவருக்குப் பழக்கமாக இருந்த பத்மாசனி என்ற தாசிப் பெண், அவளுடைய அண்ணனான கலியப்பெருமாள் பிள்ளை என்பவர் ஆகிய இருவரும் துருக்கராக மாறி, அவருக்கு உதவியாக அவரோடு இருந்து வந்தார்கள். அவர்கள் இருவரும் சட்டைநாத பிள்ளையும் அந்த வீட்டில் எவ்வித அலங்காரத்தோடு இருந்தார்களோ அப்படியே கைதி செய்யப்பட்டு இப்போது இதோ ஆஜர் செய்யப்பட்டிருக்கிறார்கள்" என்றார்.

அந்த விநோதமான வரலாற்றைக் கேட்ட வக்கீல்கள் முதலிய எல்லோரும் பெருத்த வியப்பினால் தம்மை மறந்து, "ஆகா! அப்படியா சங்கதி" என்று தமது ஆச்சரியத்தை வெளியிட்டனர்.

ராயர் மேலும் பேசத் தொடங்கி, "முதல் அம்சத்தின் சாரம் இது தான். சிறையிலிருந்து ஓடி ஒளிந்திருந்ததான குற்றத்தைச் சட்டைநாத பிள்ளை செய்தாரா என்பதைத் தீர்மானிப்பதே முதல் அம்சமாய் இருக்க, இவருக்குத் துணையாக இருந்த மற்ற இருவரையும் இப்போது இங்கே ஆஜர்படுத்த வேண்டிய காரணம் என்ன என்ற கேள்வி பிறக்கலாம். சட்டைநாத பிள்ளை அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தைச் செய்தார் என்பது சம்பந்தமான சில தகவலை இவர்கள் மூலமாய் ருஜுப்பிக்க வேண்டும் ஆதலால் மற்ற இருவரும் கூடவே இருப்பது அவசியமாகத் தோன்றுகிறது. இவ்வளவே நான் இப்போது சொல்லக் கூடியது. மற்ற விஷயங்களை சாட்சிகள் வெளியிடுவார்கள்" என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

உடனே, முதல் சாட்சி தஞ்சாவூர் பெரிய சிறைச்சாலையின் தலைமை அதிகாரி (ஜெயிலர்) அழைக்கப்பட்டார். அவர் சாட்சிக் கூண்டின் மேல் ஏறிக் கிரிஸ்துவ வேதத்தைத் தொட்டுப் பிரமாணம் செய்தபின், சட்டைநாத பிள்ளை சிறைச்சாலையில் இருந்து தப்பித்துக்கொண்டு போன வரலாறு முழுதையும் அவர் மேலதி காரிக்கு விஸ்தாரமாக எழுதியனுப்பிய அறிக்கையின் நகலை வைத்துக் கொண்டு அதைப் படித்துக் காட்டி, அதுவே தமது சாட்சியும் என்று கூறினார்.

*உடனே ராயர்:-* (எழுந்து நின்று ஜெயிலரைப் பார்த்து) ஐயா! இந்தச் சட்டைநாத பிள்ளை சிறைச்சாலையில் அடைபட்ட முதல்

சுமார் இரண்டு வருஷ காலம் அங்கே இருந்தார் அல்லவா? அவரை நீங்கள் எத்தனை தடவை பார்த்திருப்பீர்கள்?

***ஜெயிலர்:-*** நான் ஒரு நாளும் ஒவ்வொரு கைதியையும் பார்க்கக் கடமைப்பட்டவன். ஆகையால், அந்தச் சட்டைநாத பிள்ளையையும் நான் ஒவ்வொரு நாளும் பார்த்திருக்கிறேன்.

***ராயர்:-*** அவருடைய அடையாளம் உங்களுக்கு நன்றாக தெரியுமல்லவா?

***ஜெயிலர்:-*** ஓ! தெரியும்.

***ராயர்:-*** சரி! இதோ கைதிக்கூண்டில் இருக்கும் இருவருள் கொஞ்சம் குள்ளமாக இருக்கிறாரே. அவர் யார் என்பது தெரிகிறதா?

***ஜெயிலர்:-*** (கைதியை உற்றுப் பார்த்து) ஆம். அவர் சட்டைநாத பிள்ளையைப் போல இருக்கிறார்; ஆனால் இவர் துருக்க உடை தரித்திருக்கிறார். அது ஒன்று தான் பேதம்.

***எதிர்கட்சி பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை:-*** (எழுந்து கனைத்துக் கொண்டு ஜெயிலரைப் பார்த்து) ஐயா! கைதிக் கூட்டில் இருப்பவர் சட்டைநாத பிள்ளையைப் போல இருக்கிறார் என்று நீங்கள் எதைக்கொண்டு சொன்னீர்கள்?

***ஜெயிலர்:-*** சட்டைநாத பிள்ளையின் உயரம், பருமன், நிறம், வயசு, சாயல் எல்லாம் என் மனசில் பதிந்து போயிருக்கின்றன. இங்கே இருப்பவருடைய உயரம், பருமன் முதலிய அம்சங்கள் எல்லாம் என் மனசில் பதிந்திருப்பவை போலவே இருப்பதால், அவரே இவர் என்று கண்டுபிடித்தேன்.

***பாரிஸ்டர்:-*** உலகத்தில் ஒருவரைப் போல இன்னொருவர் இருக்கிறார் என்று ஜனங்கள் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

***ஜெயிலர்:-*** ஆம். கேட்டிருக்கிறேன்.

***பாரிஸ்டர்:-*** சட்டைநாத பிள்ளையின் உயரம், பருமன் முதலியவைகளைப் போல இவருடைய உயரம் பருமன் முதலியவை இருக்கின்றன. ஆகையால், இவர் சட்டைநாத பிள்ளையைப் போல இருக்கிறார் என்று நீங்கள் சொல்லலாமே அன்றி, இவர்

தான் சட்டைநாத பிள்ளை என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் எண்ணெய்க் குடத்தைப் போட்டபின் விலங்கையும் ஜெயில் உடையையும் விலக்கியவுடன் எங்கெங்கே போனாரோ, அங்கெல்லாம் நீங்கள் போய், அவர் துலுக்கர் உடை தரித்து லப்பைத் தெருவில் இருந்த வரையில் கூடவே இருந்து பார்த்திருந் தாலன்றி, எண்ணெய்க் குடம் தூக்கியபடி அங்கே இருந்த சட்டை நாத பிள்ளை தான் இப்படி சாயப்புவாக மாறி இருக்கிறார் என்று நீங்கள் சொல்ல முடியாதல்லவா?

**ஜெயிலர்:-** ஆம், வாஸ்தவம் தான். சிறைச்சாலையில் இருந்த சட்டைநாத பிள்ளை தம் பழைய ஆடை முதலியவற்றை விலக்கி விட்டு இப்படி மாறியதை எல்லாம் நான் நேரில் பார்க்கவில்லை. இவர் அவரைப் போலவே இருக்கிறார் என்று தான் நான் சொல்ல முடியும் என்றார்.

அவ்வளவோடு தாம் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொள்வ தாகவும், மறுபடி தேவையானால் அவரைத் தருவித்து விசாரிக்க அனுமதி கொடுக்க வேண்டும் என்றும் பாரிஸ்டர் கேட்டுக் கொள்ள, ஜட்ஜி அதற்கிணங்கினார். அவ்வளவோடு ஜெயிலர் வெளியில் அனுப்பப்பட்டார்.

பிறகு சட்டைநாத பிள்ளையோடு எண்ணெய் விற்றுக் கொண்டு போன ஜெயில் வார்டர்கள் இருவரும் ஒருவர்பின் ஒருவராக வந்து வாக்குமூலங் கொடுத்தனர். பத்திரிகையில் வந்த வரலாற்றையே அவர்கள் எடுத்துக் கூறினர். பிறகு இரண்டு கட்சிகளின் வக்கீல்களும் அதற்கு முன் வந்த ஜெயிலரிடம் கேட்டது போல ஒருவர் பின் ஒருவராய்க் கேள்வி கேட்க, கைதிக் கூண்டில் நின்ற இரண்டு ஆண்பிள்ளைகளுள் ஒருவர் சட்டைநாத பிள்ளையைப் போலவே இருக்கிறார் என்றும்; ஆனால், அவர் தான் சட்டைநாத பிள்ளை என்று தாம் நிச்சயமாய்க் கூற இயலாதென்றும் அந்த இரண்டு வார்டர்களும் வாக்குமூலம் கொடுத்தனர்.

பிறகு நான்காவது சாட்சியாக ஒரு வெள்ளைக்கார துரை விசாரிக்கப்பட்டார். அவர் மனிதரது கைவிரல் ரேகைகளைப் பரீட்சை செய்வதில் நிரம்பவும் தேர்ச்சி பெற்ற நிபுணர். அவர்

சாட்சிக் கூண்டில் ஏறி நின்று கிறிஸ்துவ வேதத்தைத் தொட்டுப் பிரமாணம் செய்தார். சர்க்கார் வக்கீலான ராயர் அவரது வாயிலிருந்து அடியில் கண்ட விஷயங்களை வருவித்தார்:-

நான் கைவிரல் ரேகைகளைப் பரீட்சை செய்கிற உத்தியோகஸ்தன். எனக்கு துரைத்தனத்தார் மாதம் ரூபாய் 2500 சம்பளம் கொடுக்கிறார்கள். துரைத்தனத்தாருடைய உத்தரவின் மேல் நான் நேற்று இந்த ஊருக்கு வந்து சப் ஜெயிலுக்குப் போய், இதோ நிற்கும் மூன்று கைதிகளின் கைவிரல் ரேகைக் குறிகளை கருப்பு மையின் உதவியால் ஒரு காகிதத்தில் பதியவைக்கச் செய்து, அவைகளை வாங்கிக் கொண்டு போய் வைத்துக் கொண்டு, இதற்கு முன் தண்டனை அடைந்தவர்களுடைய கைவிரல் ரேகைக் குறிகளோடு ஒத்திட்டுப் பார்த்தேன். கைதிக் கூண்டில் நிற்பவர்களுள் இருவர் இதற்கு முன் தண்டனை அடைந்தவர்களாகத் தோன்றவில்லை. ஆண்பிள்ளை இருவருள் கொஞ்சம் குள்ளமாய் இருப்பவரின் கைவிரல் ரேகை இதற்கு இரண்டு வருஷ காலத்திற்கு முன் தண்டனை அடைந்து சிறைச்சாலைக்குப் போன சட்டைநாத பிள்ளை என்பவருடைய கைவிரல் ரேகை போலவே இருக்கிறது. இரண்டிற்குக் கொஞ்சமும் பேதமே இல்லை - என்று அவர் வாக்கு மூலம் கொடுத்தார்.

***பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை:-*** "ஐயா! ரேகை நிபுணரே! இதோ குள்ளமாய் இருக்கும் கைதியின் கைவிரல் ரேகை அடையாளமும் சட்டைநாத பிள்ளை என்ற ஒருவனுடைய கைவிரல் ரேகை அடையாளமும் ஒரே மாதிரியாய் இருப்பதாகச் சொன்னீர்களே. முந்திய ரேகை அடையாளம் இந்தக் கைதியின் கைவிரலில் இருந்து எடுக்கப்பட்டது தான் என்று தங்கள் நிச்சயமாகச் சொல்ல முடியுமா?"

***ரேகை நிபுணர்:-*** இரண்டு ரேகைகளும் ஒரே மாதிரி இருக்கின்றன என்பதை மாத்திரம் நான் சொல்ல முடியுமே அன்றி, இவருடைய கையில் இருந்து தான் முந்திய அடையாளமும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் எப்படிச் சொல்லுகிறது.

*பாரிஸ்டர்:-* வாஸ்தவம். அதையே தாங்கள் சொல்ல முடியா தென்கிறீர்களே; அப்படி இருக்க, இவர்தான் சட்டைநாத பிள்ளை என்று தாங்கள் சொல்ல முடியுமா?

**ரேகை நிபுணர்:-** அதை எல்லாம் நியாயாதிபதி தீர்மானிக்க வேண்டுமன்றி, நான் சொல்ல முடியாது.

*பாரிஸ்டர்:-* சரியான வார்த்தை. அதிருக்கட்டும். இன்னொரு விஷயம் நான் கேட்கிறேன். இந்த ரேகை சாஸ்திரம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதே. இதை எப்படிக் கண்டு பிடித்தார்கள்? இந்த உலகத்தில் உள்ள சகலமான மனிதர்களுடைய கைவிரல் ரேகை யைப்போல இன்னொருவருடைய ரேகை இருக்கவில்லை என்பதை நிர்த்தாரணம் செய்திருக்கிறீர்களா?

**ரேகை நிபுணர்:-** (சிரித்துக் கொண்டு) அப்படிச் செய்யவில்லை.

*பாரிஸ்டர்:-* அப்படி இருக்க, ஒருவருடைய விரல் ரேகையைப் போல மற்றொருவருடைய விரல் ரேகை இருக்காதென்பது நீங்கள் துணிந்து முடிவாகச் சொல்ல முடியுமா?

**ரேகை நிபுணர்:-** பரீக்ஷை செய்து பார்த்த வரையில், ஒருவருடைய விரல் ரேகையைப் போல மற்றவருடைய விரல் ரேகை இருக்கவில்லை. அதிலிருந்து, எல்லோருடைய விரல் ரேகையும் அப்படித்தான் ஒன்றுக்கொன்று ஒத்துக்கொள்ளா தென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

*பாரிஸ்டர்:-* ஆகையால் இது கடைசி வரையில் பூர்த்தியாய் சோதனை செய்து நிர்ணயிக்கப்பட்ட சாஸ்திரமல்ல. யூகத்தின் மேல் நிர்ணயிக்கப்பட்ட சாஸ்திரம்; அல்லவா?

**ரேகை நிபுணர்:-** அப்படித்தான் சொல்ல வேண்டும்.

*பாரிஸ்டர்:-* சந்தோஷம். நான் இன்னொரு கேள்வி கேட்கிறேன். ஒரு தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கிறார்கள். இரண்டு குழந்தைகளும் சகலமான அங்கங்களிலும் ஒரே மாதிரி தோற்ற முடையவர்களாக இருக்கிறார்களே. அப்படிப் பட்டவர்களுடைய கைவிரல் ரேகைகளை நீங்கள் எப்போதாவது சோதனை செய்ததுண்டா?

*ரேகை நிபுணர்:-* இரட்டைக் குழந்தைகளின் விஷயம் பிரத்தியேக மானது. அவர்களுடைய ரேகை அடையாளம் ஒரே மாதிரியாக இருக்கவும் கூடும்; வித்தியாசப்படவும் கூடும்.

*பாரிஸ்டர்:-* நீங்கள் சோதனை செய்ததுண்டா என்றல்லவா கேட்கிறேன்.

*ரேகை நிபுணர்:-* நான் பார்த்ததில்லை. இதற்கு முன் பார்த்திருக்கி றார்கள். சில ரேகைகள் ஒத்துக் கொண்டிருக்கின்றன. சில வித்தியாசமாக இருக்கின்றன.

*பாரிஸ்டர்:-* சரி; சில ஒத்துக் கொள்கின்றன அல்லவா. இப்போது இந்தப் பிரஸ்தாபக் கைதி இருக்கிறாரே இவருக்கு இப்போது தாய் தகப்பன்மார் இல்லை. இது போலவே சட்டைநாத பிள்ளை என்பவருடைய தாய் தகப்பன்மாரும் உயிரோடில்லை. சட்டை நாத பிள்ளையும், இந்தப் பிரஸ்தாபக் கைதியும் இரட்டைக் குழந்தைகளாய்ப் பிறந்திருந்து, இவர் குழந்தையாய் இருந்த போது யாராவது ஒரு முகம்மதியர் அந்தக் குழந்தைகளில் இவரை அபகரித்துக் கொண்டு போய்த் தமது சொந்தக் குழந்தை போல வளர்த்திருக்கக் கூடுமல்லவா. அப்படி இருக்க, இந்த இரண்டு ரேகைகளும் ஒத்துக் கொள்வதனாலேயே, இவர் தான் சட்டைநாத பிள்ளை என்று நீங்கள் நிச்சயப்படுத்த முடியுமா?

*ரேகை நிபுணர்:-* அதை எல்லாம் சாட்சியத்தைக் கொண்டு நியாயாதிபதி நிர்ணயிக்க வேண்டுமேயன்றி, அதற்கெல்லாம் எங்கள் சாஸ்திரம் பயன்படாது.

*பாரிஸ்டர்:-* நிரம்ப சந்தோஷம்; அதிருக்கட்டும். நான் இன்னம் ஒரு கேள்வி கேட்கிறேன். இரட்டைக் குழந்தைகளின் விஷயம் ஒருபுறம் இருக்கட்டும். மனிதருக்கு மனிதர் சிலர் ஒருவர் போல இன்னொருவர் இருப்பதாக ஜனங்கள் சொல்வதுண்டல்லவா?

*ரேகை நிபுணர்:-* உண்டு.

*பாரிஸ்டர்:-* சரி, அந்த ஒற்றுமை எப்படி ஏற்படுகிறது? ஒரு வருடைய முகம், கை, கால், கண், காது, மூக்கு முதலிய சகலமான அவயவத்திலும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை இருப்பதினால் தானே மொத்தத் தோற்றத்தில் ஒற்றுமை ஏற்படுகிறது?

**ரேகை நிபுணர்:-** அப்படித்தான் சொல்ல வேண்டும்.

**பாரிஸ்டர்:-** அப்படி ஒவ்வோர் உறுப்பும் ஒத்துப் போகும் போது, கைவிரல் ரேகையும் ஒத்துத்தானே போகும்?

**ரேகை நிபுணர்:-** ஆம். அநேகமாய் ஒத்துத்தான் போகும்.

**பாரிஸ்டர்:-** அநேகமாய் என்று ஏன் சொல்லுகிறீர்கள்?

**ரேகை நிபுணர்:-** ஒரு மனிதருடைய தோற்றமும், மற்றொரு மனிதருடைய தோற்றமும் அநேகமாய் ஒத்துக்கொள்ளுகிறபடியால், விரல் ரேகைகளும் அநேகமாய்த்தானே ஒத்துக்கொள்ளும்.

**பாரிஸ்டர்:-** அப்படியானால், மனித சிருஷ்டியில் ஒரு மனிதனைப் போலவே தத்ரூபம் இன்னொருவன் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாமல் இருக்க முடியாது என்று நாம் சொல்ல முடியுமா? கடவுள் சர்வ வல்லமையுடையவர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளும் போது, கொஞ்சமும் பேதமில்லாத இரண்டு மனிதரை அவர் உலகத்தில் சிருஷ்டித்திருக்க முடியாது என்று நாம் சொல்ல முடியுமா?

**ரேகை நிபுணர்:-** அதெல்லாம் பெரிய தத்துவங்கள். அதில் எல்லாம் எனக்கு அவ்வளவு திறமை போதாது. அதை எல்லாம் நியாயாதிபதிகள் நிர்ணயிக்க வேண்டும் - என்றார்.

**பாரிஸ்டர்:-** சரி; அப்படியானால், நான் உங்களுக்கு இனி தொந்தரவு கொடுக்கவில்லை - என்றார்.

அதோடு அவரது விசாரணை முடிந்தது. அவர் வெளியில் அனுப்பப்பட்டார். அதன் பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சட்டைநாதபிள்ளையின் போட்டோப் படங்கள் சிலவற்றைக் கொணர்ந்து நியாயாதிபதியிடம் கொடுத்துவிட்டு சாட்சிக் கூண்டில் ஏறித் தாம் லப்பைத் தெருவிற்குச் சென்று அம்மூவரையும் கைதி செய்த விவரத்தைக் கூறினார்.

**பாரிஸ்டர்:-** ஏன் ஐயா! இன்ஸ்பெக்டரே! குள்ளமாக இருக்கும் கைதி பார்வைக்கு சட்டைநாத பிள்ளையைப் போல இருப்பதாலும், சட்டைநாத பிள்ளையின் போட்டோப்படம் இவரைப்

போலவே இருப்பதாலும், இவரைக் கைது செய்தீர்; கைரேகைகளும் ஒத்துக் கொண்டன. அதிருக்கட்டும், மற்ற இருவர்கள் தாசி பத்மாசனியம்மாள் என்றும், அவளுடைய அண்ணன் கலியப் பெருமாள் பிள்ளை என்றும் சொன்னீரே. அதற்கு ருஜூ ஒன்றும் ஏற்படவில்லையே?

*ராயர்:-* அவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். குள்ளமாய் இருப்பவர் சட்டைநாத பிள்ளை என்று ருஜூப்படுத்துவதே போதுமானது. மற்ற இருவரும் அவருக்கு உதவியாக இருந்ததான குற்றத்தைச் செய்தார்கள் என்று ருஜூவாவதே போதுமானது. அந்த ருஜூவை இரண்டாவது அம்சத்தில் கொடுக்கிறோம். நீங்கள் இப்போது சொன்னதிலிருந்து, இவர் சட்டைநாத பிள்ளை என்று ருஜூவாய்விட்டதைத் தாங்களும் ஒப்புக் கொள்ளுகிறீர்கள். அதுவே போதுமானது.

*பாரிஸ்டர்:-* யாரும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. இந்த சாயப்பு சட்டைநாத பிள்ளையைப் போல இருக்கிறார் என்று நீங்கள் ருஜூப்படுத்தினீர்களே யன்றி, இவர் சட்டைநாத பிள்ளை தான் என்று ருஜூப்படுத்தவே இல்லை.

*ராயர்:-* ஓகோ! அப்படியா! தாங்கள் அப்படித்தான் சொல்ல வேண்டும். நியாயாதிபதியும் மற்ற யாவரும் அப்படி நினைக்க மாட்டார்கள். நியாயாதிபதியும் திருப்தி அடைந்திருப்பார் என்பது நிச்சயம் - என்றார்.

உடனே ஜட்ஜி துரை கைதிக் கூண்டில் நின்ற குள்ளமான மனிதரைப் பார்த்து, "சிறைச்சாலையில் இருந்து தப்பி ஓடிவந்த சட்டைநாத பிள்ளை நீர் தான் என்று இப்போது சாட்சிகள் சொன்னார்களே. அது உண்மைதானா?" என்றார். குள்ளமான கைதி, "அது சுத்தப் பொய்; நான் ஒரு பாவத்தையும் அறியேன். நான் முஸ்லீம் தாய் தகப்பன்மாருக்குப் பிறந்தவன்" என்றார்.

*ஜட்ஜ்:-* உம்முடைய பெயர் என்ன?

*கைதி:-* என்னைக் கமாலுதீன் சாயப்பு என்று கூப்பிடுவார்கள்.

*ஜட்ஜ்:-* மற்ற இருவரும் யார்? அவர்களுடைய பெயர் என்ன?

***கமாலுதீன்:-*** இவன் என்னுடைய தம்பி. இவனுடைய பெயர் அப்துல் வகாப் சாயப்பு. அதோ இருக்கும் கோஷா என்னுடைய பெண்ஜாதி. அவளுடைய பெயர் மும்தாஸ் பீபீ.

***ஜட்ஜ்:-*** நீங்கள் என்ன தொழில் செய்கிறவர்கள்?

***கமாலுதீன்:-*** நாங்கள் கமிஷன் வியாபாரம் செய்து, எந்தெந்த சமயத்தில், எந்தெந்த சரக்கு மலிவாக விற்கிறதோ, அதை வாங்கி இந்த கைக்கு அந்தக் கை விற்று லாபம் சம்பாதிக்கிறது.

***ஜட்ஜ்:-*** நீர் எப்போதும் கும்பகோணம் லப்பைத் தெருவில் தான் இருக்கிறதா?

***கமாலுதீன்:-*** எங்களுடைய சொந்த ஊர் நாகூர். கும்பகோணத்துக்கு வந்து ஆறுமாதகாலம் ஆகிறது.

***ஜட்ஜ்:-*** கும்பகோணத்தில் நீங்கள் இருப்பது சொந்தவீடா? வாடகை வீடா?

***கமாலுதீன்:-*** சொந்த வீடு. ஆறுமாதத்துக்கு முன் வாங்கினோம்.

***ஜட்ஜ்:-*** வீடு யார் பேரில் வாங்கப்பட்டிருக்கிறது? விற்றது யார்?

***கமாலுதீன்:-*** வீடு எங்கள் இரண்டு பேரிலும் வாங்கப்பட்டிருக்கிறது. மீராசா லெப்பை என்பவர் அதை எங்களுக்கு விற்றார்.

***ஜட்ஜ்:-*** வீட்டை நீங்கள் வாங்கனீர்களே அப்போதாவது, அந்தப் பத்திரம் சப் ரிஜிஸ்டிரார் கச்சேரியில் ரிஜிஸ்டர் செய்யப் பட்டதே அப்போதாவது அந்த மீராசா லெப்பை உம்மைப் பார்த்த துண்டா?

***கமாலுதீன்:-*** நான் அப்போது வியாபாரத்தின் நிமித்தம் வடக்கே யுள்ள திருப்பத்தூர் வாணியம்பாடிக்குப் போயிருந்தேன். வீட்டை வாங்கும்படி என் தம்பியினிடம் சொல்லிவிட்டுப் போனேன். அவன் தான் வாங்கினான்.

***ஜட்ஜ்:-*** நீர் அந்த மீராசா லெப்பையைப் பார்த்ததுண்டா இல்லையா?

***கமாலுதீன்:-*** இல்லை.

**ஜட்ஜ்:-** நாகூரில் நீங்கள் இருந்தது சொந்த வீடா? வாடகை வீடா?

**கமாலுதீன்:-** வாடகை வீடு.

**ஜட்ஜ்:-** அது யாருடைய வீடென்பது ஞாபகமிருக்கிறதா?

**கமாலுதீன்:-** நாங்கள் அப்போது ஏழ்மை நிலைமையில் இருந்தோம். பல இடங்களில் இருந்திருக்கிறோம்; சில சந்தர்ப்பங்களில் சத்திரம் சாவடிகளில் கூடத் தங்கியிருந்திருக்கிறோம். கடைசியாக நாங்கள் நாகூரில் ஒரு மரைக்காயருடைய தர்மக் கட்டிடத்தில் இருந்தோம். அவருடைய பெயரை நாங்கள் விசாரிக்கவில்லை.

**ஜட்ஜ்:-** உமக்குச் சொந்தமான முஸ்லீம்கள் யாராவது இருக்கிறார்களா?

**கமாலுதீன்:-** எல்லா முஸ்லீம்களும் ஒருவருக்கொருவர் சகோதரர்களே. அதைத் தவிர எங்களுக்கு நெருங்கிய பந்து யாருமில்லை. எங்கள் தாய் தகப்பன்மார் ஏழைப் பக்கீர்களாய் இருந்தவர்களாம்; சிறு பிராயத்திலேயே எங்களை விட்டு இறந்து போய்விட்டார்கள்.

**ஜட்ஜ்:-** உம்முடைய சம்சாரத்தின் தாய் தகப்பன்மார் எந்த ஊரில் இருக்கிறார்கள்?

**கமாலுதீன்:-** அவளுடைய தாய் தகப்பன்மார்களும் எங்களைப் போலவே ஏழைப் பக்கீர்கள். அவர்கள் யாரும் இப்போது உயிரோடு இல்லை.

**ஜட்ஜ்:-** உமக்காவது உம்முடைய தம்பிக்காவது இங்கிலீஷ் பாஷை தெரியுமா?

**கமாலுதீன்:-** தெரியாது.

**ஜட்ஜ்:-** உங்கள் மூவருக்கும் துருக்க பாஷை தெரியுமா?

**கமாலுதீன்:-** தெரியும்.

**ஜட்ஜ்:-** நீங்கள் குரான் முதலிய வேதங்களைப் படித்திருக்கிறீர்களா? அந்த வேதங்களில் கேள்விகள் கேட்டால் சரியான உத்தரம் கொடுக்க முடியுமா?

*கமாலுதீன்:-* ஓ! முடியும்.

*ஜட்ஜ்:-* உமக்கும் உம்முடைய தம்பிக்கும் சுன்னத் முதலிய சடங்குகள் ஆகியிருக்கின்றனவா?

*கமாலுதீன்:-* அந்தச் சடங்குகளைச் செய்து கொள்ளாத முஸ்லீம்களும் இருப்பார்களா? - என்றார்.

அவ்வளவோடு ஜட்ஜியின் கேள்விகள் முடிந்தன. அவர் அவ்வளவோடு நிற்க, சர்க்கார் வக்கீலான ராயர் எழுந்து நியாயாதிபதியைப் பார்த்து, "கோர்ட்டார் அவர்கள் ஒரே ஒரு முக்கியமான விஷயம் அனுமதிக்க வேண்டும். நாங்கள் கை ரேகைகளைக் கொண்டும், போட்டோப் படத்தைக் கொண்டும், நேரே பார்த்துள்ள மனிதரைக் கொண்டும், இவர் தான் சட்டைநாத பிள்ளை என்று ருஜூப்படுத்தி விட்டோம் ஆயினும், ஜட்ஜ் துரையின் திருப்தியின் பொருட்டு இன்னொரு காரியமும் செய்யக் கோருகிறோம். இதற்கு முன் சட்டைநாத பிள்ளை சிறைச்சாலையில் இருந்த போது சிறைச்சாலை நிஜாரோடு இருந்த நிலைமையில் எடுத்த படம் ஒன்று தங்களிடம் இருக்கிறது. இவர் தம்முடைய வீட்டில் இருந்த போது, பட்டுக்கரை வஸ்திரங்கள், சட்டை, தலைப்பாகை முதலியவை போட்டுக் கொண்டு எடுத்த படம் ஒன்று இருக்கிறது. அந்த உடைகளெல்லாம் இதோ தருவிக்கப் பட்டிருக்கின்றன. இவருடைய துருக்க உடைகளை விலக்கச் செய்து, முதலில் நிஜாரைப் போட்டு நிற்கவைத்து, இவரையும் படத்தையும் பாருங்கள். பிறகு, வீட்டில் இருந்தது போல சட்டை, தலைப்பாகை, ஜரிகை வஸ்திரங்கள் முதலியவைகளை அணிவித்து, அது இருக்கும் படத்தை வைத்துக்கொண்டு ஒத்திட்டுப் பாருங்கள். உடனே கோர்ட்டாரின் மனம் நிச்சயமான முடிவிற்கு வந்துவிடும்" என்றார்.

உடனே பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை எழுந்து, "கோர்ட்டார் அவர்கள் இந்த வேண்டுகோளுக்கு அனுமதி தரக்கூடாது. இதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன். என் கட்சிக்காரர் ஏழையாக இருந்தாலும், கண்ணியமாக ஜீவனம் செய்யும் வர்த்தகர். அவர் எவ்வித குற்றமும் செய்ததாக ருஜூ ஆகாதிருக்கையில் அவருக்கு

ஜெயில் நிஜார் போடுவது சட்ட விரோதம். ஆகையால், ஜெயில் நிஜார் போட்டு, போட்டோ எடுக்க, நாங்கள் இணங்க மாட்டோம். மற்றப்படி தலைப்பாகை, சட்டை, பட்டுக்கரை வேஷ்டிகள் தரிப்பது இந்துக்களின் வழக்கமே அன்றி, அவைகளை முஸ்லீம் அணிவது அவர்களுடைய ஜாதி ஆசாரத்திற்கும் பழக்கத்திற்கும் ஒவ்வாத காரியம். என் கட்சிக்காரர் அதற்கு இணங்கினால், மற்ற முஸ்லீம்கள் இவரைப்பற்றி அவமதிப்பாக எண்ணுவார்கள். ஆகையால், முகம்மதிய மதஸ்தர்களுக்குள் பழக்கமில்லாத காரியத்தைச் செய்யும்படி ஜட்ஜு துரை அனுமதிப்பது நியாய சம்மதமாகாது. இப்போது என் கட்சிக்காரர் என்ன ஆடைகளில் இருக்கிறாரோ இப்படியே போட்டோப் படம் வேண்டுமானால் பிடித்துக் கொள்ளலாம். அதற்கு நாங்கள் சம்மதிக்கிறோம்" என்றார்.

ஜட்ஜி துரை சிறிது நேரம் யோசனை செய்து, "பாரிஸ்டருடைய ஆட்சேபனைகள் நியாயமாகப் படுவதால், ராயர் கேட்டுக் கொண்டபடி போட்டோ எடுக்க நான் உத்தரவு கொடுக்க முடியாது. வாதி கட்சியின் சாட்சியம் இவ்வளவுதான் என்று நினைக்கிறேன். இனி நீங்கள் இருவரும் உங்கள் வாதங்களைத் துவக்கலாம், இதில் ஒரு விஷயம்; சட்டைநாத பிள்ளை சிறைச் சாலையில் இருந்து தப்பி ஓடியது சந்தேகமற ருஜுவான விஷயம் ஆதலால், அதைப் பற்றி வாதி கட்சியார் எவ்வித ருஜுவும் கொடுப்பது தேவையில்லை. நம்முடைய பாரிஸ்டர் அதைப் பற்றி ஆட்சேபிக்கா விட்டால், அதை விட்டு அந்த சட்டைநாத பிள்ளை இவர்தானா என்ற விஷயத்தை மாத்திரம் ஆராய்ச்சி செய்வோம்" என்றார்.

பாரிஸ்டர், "ஓ! அதைப்பற்றி எனக்கு ஆட்சேபனையும் இல்லை. இவர் தானா சட்டைநாத பிள்ளை என்ற விஷயம் ஒன்றையே நாம் கவனிக்கலாம்" என்றார். உடனே ராயர் வெகு துடியாய் எழுந்து நின்று, "அப்படியானால் என் வேலை இன்னமும் சுலபமானதாயிற்று. சிறைச்சாலையில் இருந்து பலவந்தமாக விடுவிக்கப்பட்டு ஓடிப்போனவரான சட்டைநாத பிள்ளையே கமாலுதீன் சாயப்பு என்று பெயர் வைத்துக் கொண்டு

லப்பைத் தெருவில் ஒளிந்து இருந்து வருகிறார் என்பது மூன்று வகையில் பரிஷ்காரமாக ருஜுவாகி இருக்கிறது. இதுவரை நேரில் பார்த்து இவரோடு நன்றாய்ப் பழகியவர்களும், இவருடைய அங்க மச்ச அடையாளங்களை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தவர் களுமான சிறைச்சாலை உத்தியோகஸ்தரும், வார்டர்களும் இவர் சட்டைநாத பிள்ளையைப் போலவே இருப்பதாகக் கூறுகின்றனர். இவர் மகம்மதிய உடைகள் தரித்திருப்பதால், அவரைப் போலவே இருக்கிறார் என்று சொல்ல முடியுமேயன்றி, அவர்தான் என்று சொல்லுவது சாத்தியமான காரியமல்ல. இவருடைய மகம்மதிய உடைகளை விலக்கிவிட்டு, சட்டைநாத பிள்ளையின் உடைகளை இவர் அணிந்து கொண்டிருந்தால், இவர் தான் சட்டைநாத பிள்ளை என்று சாட்சிகள் நிச்சயமாகச் சொல்லி இருப்பார்கள்! இவர் தம்முடைய உடைகளைக் கொஞ்ச காலம் மாற்றிக்கொள்ள மறுப்பதன் உள்கருத்தை நியாயாதிபதி அவர்கள் அவசியம் கவனிக்க வேண்டும். இரண்டாவது இவர் சுயேச்சையாக இருந்த காலத்திலும், சிறைச்சாலையில் இருந்த காலத்திலும் எடுக்கப்பட்ட இவருடைய போட்டோப் படங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக் கின்றன. அவைகளையும் இவரையும் கோர்ட்டார் ஒத்திட்டுப் பார்ப்பதொன்றே போதுமானது. அதைத் தவிர, இதற்கு வேறு எவ்வித சாட்சியமும் தேவையே இல்லை. இந்த இரண்டுவித சாட்சியங்களைவிட முக்கியமானதும், நிச்சயமானதும் ரேகை அடையாளம். ரேகை சாஸ்திர நிபுணர் அந்த விஷயத்தை நன்கு ஆராய்ச்சி செய்த மகா கெட்டிக்காரர். அவருடைய சாட்சியத்தை அசட்டை செய்வதற்கு ஏதுவே இல்லை. அந்த சாஸ்திரம் உபயோகமற்ற தென்று இவ்வளவு சுலபத்தில் நாம் அசட்டை செய்து விட்டால், எத்தனையோ லட்சக் கணக்கில் பணத்தொகை செலவு செய்து, அந்த இலாகாவை ஏற்படுத்தி இருக்கும் இங்கிலீஷ் துரைத்தனத்தாரை நாம் முட்டாள்கள் என்று சொல்வது போலாகும். பல வருஷகாலமாக அந்த இலாகா ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஒரு கைதி இதற்கு முன் எத்தனை தடவை தண்டனை அடைந்திருக்கிறார் என்பதை இந்த ரேகை சாஸ்திரத்தி னாலேயே இதுவரையில் நிர்ணயித்து வந்திருக்கிறார்கள். ஒரு குற்றத்திற்காக ஆறுமாத காலம் தண்டனை அடையக்கூடிய

ஒருவன், அவனுடைய ரேகை அடையாளத்தைப் பரிசோதிப்ப தால், இதற்கு முன் அவன் பல தடவை தண்டனை அடைந்த பழைய குற்றவாளி என்பதைக் கண்டு அவனுக்கு ஐந்து வருஷக் கடினக்காவல் தண்டனைகூடக் கொடுத்து விடுகிறார்கள். அப்படி இது வரையில் தண்டனை கொடுத்துவரும் நியாயாதிபதிகளின் தீர்மானங்கள் எல்லாம் அக்கிரமத் தீர்மானம் என்றல்லவா அர்த்த மாகும். ஆகையால், ஜட்ஜு துரையவர்கள் மற்ற எதை அலட்சியஞ் செய்தாலும் ரேகை சாஸ்திர நிபுணருடைய சாட்சியத்தை அவசியம் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி றார்கள். அதை அலட்சியம் செய்துவிட்டால், இனி துரைத்தனத் தார் அந்த இலாகாவையே எடுத்துவிட நேரும். இதுவரையில் அதன் சாட்சியத்தால் அதிக தண்டனை அடைந்திருப்பவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து விடுவிக்க நேரும். இனி, பழைய குற்றவாளி களைக் கண்டு பிடிக்கும் முறையே இல்லாமல் போய்விடும். ஆகையால், ஜட்ஜ் துரையவர்கள் இதில் வேறுவிதமான அபிப்பிராயம் கொள்வதற்கே வழியில்லை. இது நிற்க. கைதி இப்போது இருக்கும் வீட்டைத் தாம் வாங்கவில்லை, தமது தம்பியே வாங்கினார் என்று சொல்வதையும், வீட்டை விற்றவரைப் பார்த்ததே இல்லை என்பதையும், இந்த வீட்டிற்கு வரும் முன் இவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதைப் பற்றியும், இவர்களுடைய உறவினர்களைப் பற்றியும் இவர் எவ்விதமான பிடியும் கொடாமல் வாக்குமூலம் கொடுத்திருப்பதையும் ஜட்ஜ் துரையவர்கள் கொஞ்சம் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், இவர் சட்டைநாத பிள்ளையேயன்றி, வேறே மகம்மதியர் அல்லர் என்பது எளிதில் தெரிந்துபோம். ஆகையால், இவர் தான் சட்டை நாத பிள்ளை. இவர் சிறைச்சாலையில் இருந்து பலவந்தமாகத் தப்பித்து வந்து ஒளிந்திருந்த குற்றத்தைச் செய்திருக்கிறார். அதற்குத் தக்க தண்டனையை நியாயாதிபதி அவர்கள் ஏற்படுத்தி இவரை மறுபடி சிறைச்சாலைக்கு அனுப்புவதே நியாயமான விஷயம்" என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார். உடனே பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை எழுந்து நின்று, "கோர்ட்டார் அவர்களே! நான் இதுவரையில் எத்தனையோ வழக்குகளில் ஆஜராயிருக்கிறேன். இதைப் போல இவ்வளவு அபாண்டமாக

ஒரு நிரபராதியின் மேல் கொண்டுவரப்பட்ட வழக்கை நான் பார்த்ததே இல்லை. இப்போது ருஜுவான மூன்றுவகை சாட்சியங்களும், இவர் சட்டைநாத பிள்ளையைப் போல இருக்கிறார் என்று ருஜுப்படுத்தினரேயன்றி, அவர் தான் இவர் என்று ஸ்தாபிக்கவே இல்லை. இவர் இன்னொருவரைப் போல இருப்பது சட்டப்படி குற்றமாகும் என்று நான் படித்த வரையில் எந்த சட்ட புஸ்தகத்திலும் காணப்படவில்லை. அப்படியே குற்றமாகுமானால், அது இவரை சிருஷ்டித்த கடவுளின் குற்றமே அன்றி இவருடைய குற்றமாகாது. வாதி கட்சியார் முக்கியமாக மதிக்கும் சாட்சியமான ரேகை சாஸ்திரம் சம்பூர்ணமான சாஸ்திரமே அல்ல. தண்டனை அடைகிறவர்களுடைய ரேகைகளை எல்லாம் பார்த்து அந்த சாஸ்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே அன்றி, உலகத்தில் உள்ள எல்லோருடைய ரேகைகளையும் சோதனை செய்து பார்க்கப்படவுமில்லை. ஒருவருடைய ரேகையைப் போல இந்த உலகத்தில் இன்னொருவருடைய ரேகை இருக்கவே இருக்காது என்றும் முடிவு கட்டப்படவில்லை. தோற்றத்தில் ஒருவரைப் போல இன்னொருவர் இருந்தால், அவர்களுடைய ரேகைகளிலும் அதிக வித்தியாசம் இருக்காது. அநேகமாய் இரண்டும் ஒன்று போலவே இருப்பது சகஜமே. ஆகவே, என் கட்சிக்காரர் பிறப்பிலேயே சட்டைநாத பிள்ளை என்பவரைப் போலவே இருப்பதால், இவருடைய ஒவ்வோர் அங்கத்திலும் ஒற்றுமை இருக்கிறது. அது போலவே கை ரேகைகளிலும் ஒற்றுமை இருக்கிறது. இதைக் கொண்டே, இருவரும் ஒருவர் தான் என்று தீர்மானிப்பது நியாயமாகாது. அந்த இலாகாவை துரைத்தனத் தார் நியமித்திருப்பதைப் பற்றி, அவர்களை நாங்கள் முட்டாள்கள் என்று மதிப்பதாகக் கருதக்கூடாது. ரேகை சாஸ்திரத்தைக் கொஞ்ச தூரம் வரையில் உதவியாக வைத்துக் கொள்ளலாமே யன்றி, முற்றிலும் அதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு அநியாயமாய் ஒரு நிரபராதியைத் தண்டிப்பது சட்ட சம்மதமானதல்ல. இதுவோ சாதாரணமான குற்றமல்ல. இன்னொருவர் செய்த குற்றத்தில் எட்டு வருஷம் இவருக்கு வருவதோடு, சிறைச்சாலையில் இருந்து ஓடியதற்கு பல வருஷங்கள் சேரும். ஆகவே, இவருடைய ஆயிசே சிறைச்சாலைக்கு அர்ப்பணமாகிவிடும். நிரபராதியான

ஒருவருடைய முழு ஆயுளும் இப்படி அநியாயமாய் அழியும்படி செய்து அவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் தீராத் துன்பத் திற்கும் துயரத்திற்கும் ஆளாக்குவது தர்ம சம்மத மாகாது. இப்பேர்ப்பட்ட முக்கியமான வழக்குகளில் வாதி கட்சியார் சாதாரணமாக தேக ஒற்றுமையையும், ரேகையின் ஒற்றுமை யையுமே போதுமான ருஜுவாக நம்பி இருக்கக்கூடாது; இயற்கை யிலேயே இரண்டு மனிதர்கள் ஒருவர் போல சிருஷ்டிக்கப்படுவது சகஜமே, அதுவுமன்றி, நான் முன்னர் சொன்னது போல, இவர்கள் இருவரும் இரட்டைக் குழந்தைகளாக இருந்து, பாலியத்தில் இவர் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த மனிதரிடம் போய்ச் சேர்ந்திருக்கலாம். அதை எல்லாம் ருஜுப்பிக்க என் கட்சிக்காரர் கடமைப்பட்டவர் அல்லர். அதுவுமன்றி, என் கட்சிக்காரர் தம்முடைய பூர்வீக வரலாறுகளை எல்லாம் உள்ளபடியே சொல்லி இருக்கிறார். அதில் எதுவும் அசம்பாவிதமே இல்லை; அதுவுமன்றி, அதில் எந்த விஷயமாவது பொய் என்றும் எதிர்க்கட்சிக்காரர் மெய்ப்பிக்க வில்லை. என் கட்சிக்காரருக்கு வேறே உறவினர் யாரும் இல்லை என்றால், அதில் அசம்பாவிதம் என்ன இருக்கிறது. இதோ நான் இருக்கிறேன்; எனக்கு வேறே யாரும் சொந்தக்காரர் இல்லை. அதே சட்டைநாத பிள்ளையை எடுத்துக் கொள்வோம். அவரையும், அவருடைய தம்பியையும் தவிர அவருக்கு வேறே சொந்தக்காரரே இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இதெல்லாம் உலகத்தில் சகஜமாக இருக்கக் கூடியதே யன்றி வேறல்ல; இந்த விஷயங்களை எல்லாம் எதிர்க் கட்சிக்காரர் தங்களுக்கு அனுகூலமாக வியாக்கியானம் செய்து கொள்வது நியாய சம்மதமாகாது. இவர்கள் என்ன செய்திருக்க வேண்டிய தென்றால், சட்டைநாத பிள்ளை சிறையில் இருந்து தப்பித்துக் கொண்டார் அல்லவா. அது முதல் அவர் இப்படி சாயப்புவாய் மாறுகிற வரையில் நடுநடுவில் அவர் செய்த காரியங்களுக்கு சாட்சியம் சம்பாதித்து, அவர் தான் இப்படி மாறியிருக்கிறார் என்று எல்லோரும் திருப்திகரமாக நம்பும்படியான ருஜுவைக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் எங்கேயோ போன ஒருவருக்கும், வேறு எங்கேயோ இருக்கும் இன்னொருவருக்கும் தேக ஒற்றுமை இருக்கிறதென்ற காரணத்தினால் அவர் தான் இவர்

என்று சொல்வது கொஞ்சமும் பொருந்தவே பொருந்தாது. சட்டை நாத பிள்ளை சிறைச்சாலையில் இருந்து ஓடிய பிறகு, இன்ன தையல்காரனிடம் துருக்க உடை தைத்தார்; இன்ன இடத்தில் சுன்னத் செய்து கொண்டார்; இன்ன இடத்தில் மற்ற இருவரையும் சந்தித்தார்; இன்னாருடைய வண்டியில் அந்த வீட்டுக்குப் போனார். அவர் தமிழராய் இருந்து துருக்கருடைய உடைகளைத் தரித்த போது இன்னார் பார்த்தவர்கள் என்பது போன்ற சாட்சி யங்களைக் கொணர்ந்திருந்தால், அது எல்லோருக்கும் ஒப்புக் கொள்ளத் தக்கதாய் இருக்கும். சட்டைநாத பிள்ளை மறைந்த தற்கும், பிறகு அவர் இந்த ரூபம் அடைந்ததற்கும் மத்தியில் உள்ள இடைவெளியை இவர்கள் எப்படி சம்பந்தப் படுத்துகிறார்கள் என்பதே தெரியவில்லை. ஆகையால் இவர்கள் கொணர்ந் திருப்பது இத்தகைய பெருத்த குற்றத்திற்குப் போதிய ருஜுவா காது. இந்த மனிதரைக் கண்டு பிடிப்பவருக்கு பதினையாயிரம் ரூபாய் பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அது பிரம்மாண்டமான தொகை ஆகையால், அதை அபகரித்துக் கொள்ள யாரும் எண்ணி சட்டைநாத பிள்ளையைப் போல் இருக்கும் மனிதர் யாராவது இருக்கிறார்களா என்று தேடிப் பிடித்து தண்டனைக்குக் கொண்டு வருவது சாதாரணமாக நடக்கக்கூடிய விஷயமே. போலீசாருக்கு இந்தக் குற்றவாளிகளைக் காட்டிக் கொடுத்தவர் ஜானிஜான் கான் சாயப்பு என்ற ஒருவர் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் தெரிவித்தனர். அவர் துருக்கர் ஆதலால், தம்முடைய ஜாதியாருக்குள் சட்டைநாத பிள்ளையைப் போல இருந்த இவரைப் பார்த்தவுடன், பதினையாயிரம் ரூபாயை அபகரிக்க வேண்டும் என்ற துர் எண்ணங் கொண்டு அவர் இந்தக் காரியத்தில் இறங்கி இருக்கிறார் என்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது. ஆகவே, ஜட்ஜ் துரையவர்கள் எல்லா அம்சங்களையும் தீர்க்கா லோசனை செய்து நிரபராதியான என் கட்சிக்காரரையும், அவரைச் சேர்ந்த மற்ற இருவரையும் கண்ணியமாக விடுதலை செய்து, அவர்களுக்கு ஏற்பட்ட மான நஷ்டத்திற்கும் பொருள் நஷ்டத் திற்கும் ஈடாக குறைந்தது ஐயாயிரம் ரூபாயாவது கொடுக்கும்படி உத்தரவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

அங்கு கூடியிருந்த வக்கீல்களும், ஜனங்களும் அப்படியே பிரமித்துப் போயினர். ஜட்ஜ் துரை கைதிகளை விடுதலை செய்து விடப் போகிறார் என்பது எல்லோருக்கும் நிச்சயமாகப் பட்டது. அதற்கிணங்க, ஜட்ஜ் துரையின் முகம் மிகுந்த மனக் குழப்பத்தைக் காட்டியது. அவர் பல தடவை தமது தலையைச் சொறிந்து நெற்றியை அமுத்திக் கொண்டு வாதிவக்கீலாகிய ராயரை நோக்கி, "பாரிஸ்டர் அவர்கள் சொன்னது போல, இந்த வழக்கு நிரம்பவும் முக்கியமானது; பல மனிதர்களுடைய ஆயிசுகாலம் முழுவதையும் இது பாதிக்கக்கூடியது. ஆகையால் இதுவரையில் கொடுக்கப்பட்ட சாட்சியம் மாத்திரம் போதுமானதென்று நானும் எண்ணவில்லை. இவர் சட்டைநாத பிள்ளையாக இருக்கலாம் என்று என் மனம் சந்தேகித்தாலும், ஜெயிலிலிருந்து ஓடினவர் இந்த ரூபமாக மாறினார் என்பதற்குக் கொஞ்சமும் ருஜு கொடுக்கப் படவில்லை. ஆகையால் எல்லோரும் அரை மணி நேரம் பொறுங்கள். நான் என் தீர்மானத்தை எழுதிச் சொல்லிவிடுகிறேன்" என்று பேனாவைக் கையில் எடுத்துத் தீர்மானம் எழுத ஆரம்பித்தார். ஜனங்களும், மற்ற வக்கீல்களும், ஜட்ஜ் துரை சட்டைநாத பிள்ளையை விட்டுவிடப் போகிறார் என்று உடனே யூகித்துக் கொண்டனர். போலீஸ் இன்ஸ்பெக்டர், சர்க்கார் வக்கீல் முதலியோரது முகங்கள் வாட்டமும், அவமானமும் அடைந்து சூம்பின. கமாலுதீன் முதலிய கைதிகளின் முகம் மலர்ந்து சந்தோஷத்தைக் காட்டின. ஜட்ஜி எப்போது தமது தீர்ப்பை எழுதிப் படிப்பார் என்று எல்லோரும் ஒரே ஆவலாகவும் முற்றிலும் நிச்சப்தமாகவும் இருந்தனர். அந்தச் சமயத்தில் ஜனக்கும்பலின் நடுவில் இருந்து ஒரு பெருத்த கூக்குரல் உண்டாயிற்று. ஒருவர், "ஐயோ! பாம்பு! பாம்பு! ஓட்டிலிருந்து தொங்குகிறது. அதோ சட்டைநாத பிள்ளையினுடைய தலையின் மேல் விழுந்து விட்டது. ஓ சட்டைநாத பிள்ளை! தலையை உதறும்," என்று இங்கிலீஷ் பாஷையில் பலமாகக் கூச்சலிட்டுக் கூற, அந்த விபரீதக் கூச்சலைக் கேட்ட ஜனங்களும் ஜட்ஜ் துரையும் திடுக்கிட்டு நடுநடுங்கிக் கைதிக் கூண்டிலிருந்த கமாலுதீன் சாயப்புவைப் பார்த்தனர். அவ்வாறு உண்டான ஓசையைக் கேட்ட அதே க்ஷணத்தில் கமாலுதீன் சாயப்பு தம்மை மறந்து துள்ளிக் குதித்து

தமது தலையில் இருந்த குல்லா வெகு தூரத்திற்கப்பால் போய் விழும்படி தமது தலையை நிரம்பவும் வலுவாக அசைக்க, அவரது குல்லா விழுந்த இடத்தில் குல்லா மாத்திரம் இருந்ததே அன்றி பாம்பு காணப்படவில்லை. ஓட்டிலிருந்து அவருடைய தலையில் விழுந்த பாம்பு கழுத்தில் உள்ள சட்டை இடுக்கால் சட்டைக்குள் நுழைந்திருக்குமோ என்று எல்லோரும் எண்ணி, "சட்டையை உதறிப்பாரும்" என்றனர். உடனே கைதி மளமளவென்று தமது சட்டையைக் கழற்றி வெகு தூரத்திற்கப்பால் எறிந்தார். பாம்பு உடம்பில் காணப்படவில்லை. ஜனங்கள், "நிஜாரை உதறிப் பாரும்" என்றனர். கைதி மெய்ம்மறந்து தத்தளித்து நிஜாரையும் உடனே கழற்றி அப்பால் எறிந்தார். உள்பக்கத்தில் இடுப்பில் பட்டுக்கரையுள்ள ஒரு வெள்ளை வஸ்திரம் காணப்பட்டது. ஆனால் பாம்பு எங்கும் அகப்படவில்லை. எல்லோரும் ஆச்சரிய வசத்தராய் ஸ்தம்பித்திருக்க, பாம்பு, பாம்பென்று கூச்சலிட்ட நமது ஜானிஜான் கான் சாயப்பு விரைவாகப் போய் சாட்சிக் கூண்டில் ஏறி நின்று, "நியாயாதிபதி அவர்களே! இந்த சட்டைநாத பிள்ளையை நான் தான் பிடித்துக் கொடுத்தவன். பதினையாயிரம் ரூபாய் பரிசு எனக்கே சேர வேண்டும். அதைக் கொடுக்க, உத்தரவு செய்யுங்கள்" என்றார்.

அதைக் கேட்ட ஜட்ஜூம் ஜனங்களும் முற்றிலும் பிரமிப் படைந்து அப்படியே ஸ்தம்பித்து கைதியின் முகத்தையும் ஜானி ஜான் கானின் முகத்தையும் மாறி மாறி ஆவலோடு பார்த்த வண்ணம் பதுமைகள் போல இருந்தனர். ஜட்ஜ் துரை, "இவர் சட்டைநாத பிள்ளை என்று ருஜூ ஆகவில்லையே" என்றார்.

சாயப்பு, "இப்போது நான் தான் ருஜூப்படுத்தினேனே. இவருக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாதென்று இவர் தங்களிடம் கொஞ்ச நேரத்திற்கு முன் சொன்னாரே. அப்படி இருக்க, சட்டை நாத பிள்ளையின் தலையில் பாம்பென்று நான் இங்கிலீஷில் சொன்னவுடன் இவர் அதன் கருத்தை எப்படி உணர்ந்தார்? அதுவுமன்றி, சட்டைநாத பிள்ளையின் தலையில் பாம்பு என்று சொன்னவுடன், இவர் அதே க்ஷணத்தில் தாமே சட்டைநாத பிள்ளை என்று உணர்ந்து தம்முடைய குல்லாவைத் தட்டி விட்டார் அல்லவா? இவர் சட்டைநாத பிள்ளையாய் இல்லா

விட்டால், அவ்வளவு விரைவில் அதை உணர்ந்திருக்க மாட்டார் அல்லவா? அதுவுமன்றி, கொஞ்ச நேரத்திற்கு முன் இந்துவின் உடைதரிக்க மறுத்தவர் நிஜாருக்குள் பட்டுக்கரை வேஷ்டி அணிந்திருக்க வேண்டிய காரணம் என்ன? இவைகளைவிட இன்னும் வேறே திருப்திகரமான ருஜு என்ன தேவை?" என்றார்.

அதைக் கேட்ட ஜட்ஜி துரை கட்டிலடங்கா வியப்பும் களிப்பும் அடைந்து தமது மூக்கில் விரலை வைத்து அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்து போனார். ஜனங்கள் எல்லோரும் ஆச்சரியத்தினாலும், சந்தோஷத்தினாலும் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

உடனே ஜட்ஜி துரை தமது தீர்மானத்தை எழுதிப் படித்தார். கமாலுதீன் சாயப்பு என்ற கைதி உண்மையில் சட்டைநாத பிள்ளைதானா என்ற விஷயத்தில் தமக்கு இருந்த சொற்ப சந்தேகமும், கடைசியில் ஜானிஜான் கான் சாயப்பு செய்த வேடிக்கையான தந்திரத்தினால் முற்றிலும் நிவர்த்தியாகி விட்டதென்றும், கமாலுதீன் சாயப்பு என்பவர் உண்மையில் சட்டைநாத பிள்ளைதான் என்பது சந்தேகமற ருஜுவாகி விட்டதென்றும் ஜட்ஜி துரை அபிப்பிராயப்பட்டதன்றி, கமாலுதீன் சாயப்புவாக வேஷம் போட்டுக் கொண்டிருந்த சட்டைநாத பிள்ளை அதற்கு முன் அடைந்த தண்டனையில் பாக்கியிருந்த சுமார் எட்டு வருஷ காலத்தோடு, சிறைச்சாலையில் இருந்து தப்பித்து வந்து ஒளிந்து கொண்டிருந்த குற்றத்திற்காக ஆறுவருஷ காலம் சேர்த்து, பதினான்கு வருஷ காலம் அந்தமான் தீவில் தண்டனை அனுபவித் திருக்க வேண்டும் என்று ஜட்ஜ் துரை தீர்ப்புச் சொல்லியதோடு, அவர் ஒளிந்திருந்த ரகசியமான இடத்தைக் கண்டுபிடித்து, முடிவில், அவர் தான் சட்டைநாத பிள்ளை என்பதை மகா திறமையாக மெய்ப்பித்த ஜானிஜான் கான் சாயப்பு என்பவருக்குச் சேர வேண்டிய பதினையாயிரம் ரூபாய்ப் பரிசை அப்போதே கொடுத்துவிட வேண்டும் என்று தீர்ப்பு எழுதிப் படித்தார். அதைக் கேட்ட கைதிகளும், மாசிலாமணியும் அப்படியே இடிந்து உட்கார்ந்து போயினர். அங்குக் கூடியிருந்தவர்களில் பலர் மிகுந்த மகிழ்ச்சியும், மற்றவர் சட்டைநாத பிள்ளையின் விஷயத்தில் இரக்கமும் அனுதாபமும் வெளியிட்டனர்.

உடனே சர்க்கார் வக்கீல் எழுந்து போலீஸ் இன்ஸ்பெக்டருக்குச் சைகை காட்ட, அவர் ஆயத்தமாக வைத்திருந்த ஐயாயிரம் ரூபாய் நோட்டுகளைக் கொண்டு போய், சாட்சிக் கூண்டில் நின்று கொண்டிருந்த ஜானிஜான் கான் சாயப்புவிடம் கொடுத்து, தாங்கள் எல்லோரும் அவருக்கு மிகுந்த நன்றி செலுத்துவதாய்க் கூறிய பின், மாசிலாமணியை அழைத்து அவன் வைத்திருந்த பதினாயிரம் ரூபாயையும் உபசார வார்த்தைகளோடு அவரிடம் கொடுக்கும்படி ஏவினார். மாசிலாமணியின் அப்போதைய மனநிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்துக் கொள்ள வேண்டுமன்றி அதை விவரித்துக் கூறுவது சாத்தியமற்ற காரியம் என்றே கூற வேண்டும். தான் செய்த தந்திரங்கள் எல்லாம் வீணாகும்படி செய்து, தனது அண்ணன் அந்தமான் தீவிற்குப் போகும்படி செய்தவரான ஜானி ஜான் கான் சாயப்புவுக்கு, அவர் செய்தது நல்ல காரியம் என்ற உபசார வார்த்தையோடு தானே பதினாயிரம் ரூபாய் வெகுமதி கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று நினைத்து மாசிலாமணிக்கு உண்மையில் அவமானமும், விசனமும், அழுகையும், சகிக்க ஒண்ணாத மனவேதனையும் உண்டாயின ஆனாலும், அவைகளை எல்லாம் வெளியில் காட்டிக் கொள்ளாமல், வற்புறுத்தி தனது முகத்தில் புன்னகையை உண்டாக்கிக் கொண்டு ஜானிஜான் கான் சாயப்புக் கெதிரில் போய், "ஐயா! நான் கொடுப்ப தாக ஒப்புக் கொண்ட பதினாயிரம் ரூபாய் இதோ இருக்கிறது. நீங்கள் செய்த காரியத்தைப் பற்றி நானும் உங்களை நிரம்பவும் பாராட்டுகிறேன்" என்று கூறிப் பணத்தைக் கொடுத்து சலாம் வைத்தான். அந்தத் தொகையைப் பெற்றுக் கொண்ட சாயப்பு, "ஐயா! உங்கள் அண்ணனை நான் பிடித்துக் கொடுத்ததைப் பற்றி நீர் இவ்வளவு தூரம் சந்தோஷப்படுவது உம்முடைய மேலான மனப்போக்கைக் காட்டுகிறது. அவர் சிறையில் இருந்து ஓடி வந்த விஷயத்தில் நீர் சம்பந்தப்படவில்லை என்பதையும் நீர் இதன் மூலமாய் வெளியிடுகிறீர். அது போலவே காரியத்திலும் நீர் சம்பந்தப்படாமல் இருந்தால் உம்மைப் போல உத்தம சிகாமணி யாரும் இருக்க மாட்டார்கள். எந்தக் காரியமும் வெளிப்படைக்கு மாத்திரம் செய்தால் அது எப்படியும் காலக்கிரமத்தில் தெரிந்து போவது நிச்சயம். இன்னும் பாக்கியிருக்கும் விசாரணையில் நீர்

சம்பந்தப்படாமல் இருக்கிறீரா என்பதைப் பார்க்கலாம்" என்று மறுமொழி கூறினார். அதற்கு மாசிலாமணி எவ்வித மறுமொழியும் கொடாமல், அப்பால் சென்றான். அவன் சாயப்புவுக்குச் சன்மானம் கொடுத்த சமயத்தில், கமாலுதீன் சாயப்பு கீழே குனிந்தபடி பூமாதேவியை நோக்கிய வண்ணம் கண்ணீர் விடுத்தவராய் வெட்கிக் குன்றிபோய் நின்றார். அடுத்த நிமிஷம் போலீஸ் ஜெவான்களுள் இருவர் மற்ற இரண்டு கைதிகளையும் அவ்விடத்தி லேயே விட்டு, கமாலுதீன் சாயப்புவை மாத்திரம் அழைத்துக் கொண்டு போய்விட்டனர். பணத்தைப் பெற்றுக்கொண்ட சாயப்பு வும் சாட்சிக் கூண்டை விட்டு வெளியில் சென்றார்.

அதன் பிறகு அந்த வழக்கில் மிகுதி இருந்த இரண்டு பாகங்களும் ஒன்றன் பின் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சட்டைநாத பிள்ளையை அழைத்து வந்து ஜெயில் வார்டர்களைக் கட்டிப் போட்டுவிட்டு, அவரை விடுவித்து அபகரித்துக் கொண்டு போன குற்றத்தைச் செய்ததாக ரமாமணியம்மாளும், இடும்பன் சேர்வைகாரனுடைய ஆள்கள் பத்து மனிதரும் கொணர்ந்து நிறுத்தப்பட்டனர். மூக்கு அறுபட்டுப் பரம விகாரமாக வந்து நின்ற ரமாமணியம்மாளைக் காண, எல்லோரும் கைகொட்டி நகைத்து ஏளனம் செய்து பலவாறு தூஷித்தனர். ஜெயில் வார்டர்கள் இருவரும் சாட்சியாக வந்து, அந்தப் பெண்பிள்ளையே தம்மை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போனவள் என்றும், அந்த ஆட்களே தம்மைக் கட்டிப் போட்டுவிட்டு சட்டைநாத பிள்ளையை பலவந்தமாக விடுவித்துக் கொண்டு போனவர்கள் என்றும் உறுதியாகக் கூறினர். அதற்கு அனுசரணையாக, அந்த ஆட்கள் தாம் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட தன்றி, ஜட்ஜ் துரை அவர்கள் தங்கள் விஷயத்தில் காருண்யம் காட்டி சொற்பமாகத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ரமாமணியம்மாள் தங்களோடு வந்தது உண்மைதான் என்றும், தாங்கள் மாசிலாமணிப் பிள்ளை, இடும்பன் சேர்வைகாரன் ஆகிய இருவரது வேண்டுகோளின்படி அவ்வாறு செய்ததாகவும் கூறினர். ரமாமணியம்மாள் மாத்திரம், தான் அந்தக் குற்றத்தைச் செய்யவே இல்லை என்று கூறி மறுத்தாள். பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை

தம்மால் இயன்ற வரையில் திறமையாகப் பேசி அவளைத் தப்புவிக்க முயன்றார். ஆயினும், அது சிறிதும் பலியாமல் போயிற்று. ரமாமணியம்மாளுக்கு இரண்டு வருஷக் கடினக்காவல் தண்டனையும், மற்ற ஆட்கள் பதின்மருக்கும் ஒவ்வொரு வருக்கும் அவ்வாறுமாத காலம் கடுங்காவல் தண்டனையும் கிடைத்தது. அதன் பிறகு சட்டைநாத பிள்ளையை மறைத்து வைப்பதில் அவருக்கு உடந்தையாய் இருந்த குற்றத்தை அப்துல் வகாப் சாயப்பு என்பவரும், மும்தாஸ் பீபீ என்கிற ஸ்திரீயும் செய்ததாகக் கொணர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்கு முன் குற்றத்தை ஒப்புக்கொண்ட ஆட்களுக்கு ஜட்ஜ் துரை குறைவான தண்டனை கொடுத்ததை அவர்கள் கவனித்துக் கொண்டிருந்ததன்றி, சட்டைநாத பிள்ளையே தண்டனை அடைந்து விட்டமையால் தாம் தப்ப முடியாதென்பதையும் உணர்ந்து அவர்கள் உண்மையை ஒப்புக் கொண்டனர். மும்தாஸ் பீபீ என்பவள் உண்மையில் பத்மாசனி என்ற தாசி என்றும், அப்துல் வகாப் என்பவன் அவளுடைய அண்ணனான கலியபெருமாள் பிள்ளை என்பவன் என்றும், நெடுநாளாய் சட்டைநாத பிள்ளை பத்மாசனியை வைத்திருந்தார் என்றும், அவர் சிறைச்சாலையில் இருந்த போது மாசிலாமணிப் பிள்ளை தங்களைக் கேட்டுக் கொண்டதன் மேல் தாங்கள் அவருக்கு உதவியாய் இருந்ததாகவும் ஒப்புக்கொண்டனர். ஜட்ஜ் துரை அவர்களுக்கும் அவ்வாறுமாதக் கடினக் காவல் தண்டனை விதித்தார். கடைசியாக மாசிலாமணியும், ரமாமணியம்மாளும், இடும்பன் சேர்வைகாரனது ஆட்கள் பதினாறு மனிதர்களும், கொணர்ந்து கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டனர். அந்த ஆட்களுள், முன்னர் ரமாமணியம்மாளோடு, தண்டனைப் பெற்ற பத்து மனிதர்களும் மறுபடியும் வந்திருந்தனர். மாசிலாமணியின் மீது அடியில் காணப்படும் குற்றங்கள் சுமத்தப்பட்டன. (1) சட்டை நாத பிள்ளையைச் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கவும், அவரை மறைத்து வைக்கவும் பலரைத் தூண்டி, அந்தக் காரியங்களை நிறைவேற்றியது. (2) நாகப்பாம்புகளைப் பெட்டிக் குள் வைத்து திகம்பர சாமியாருக்கு அனுப்பி அவரைக் கொல்ல எத்தனித்தது. (3) பிறகு ஆட்களை அனுப்பி சென்னை பட்டாபி

ராம பிள்ளையின் பங்களாவில் உள்ள மனோன்மணியம்மாளை பலவந்தமாக அபகரித்து வர முயற்சித்தது. (4) முடிவில் ஆள்களையும் ரமாமணியம்மாளையும் அனுப்பி வேலாயுதம் பிள்ளை முதலியோரை மூளிப்படுத்த எத்தனித்தது ஆகிய நான்கு பெரிய குற்றங்கள் மாசிலாமணியின் மீது சுமத்தப்பட்டன. மேலே குறிக்கப்பட்ட நான்காவது குற்றத்தைச் செய்ய உதவியாய் இருந்ததாக ரமாமணியம்மாளும், மற்ற ஆட்களும் குற்றம் சாட்டப் பட்டனர்.

அந்த விசாரணை நிரம்பவும் விரிவாக நடத்தப்பட்டது. ஏராள மான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அநேக தஸ்தாவேஜுகள் ஆஜர் செய்யப்பட்டன. மாசிலாமணி தான் ஒரு குற்றத்தையும் செய்யவில்லை என்று அடியோடு மறுத்தான். பாரிஸ்டர் சிவசிதம் பரம் பிள்ளை தமது அபார வல்லமை முழுதையும் வெளிப்படுத்தி அவனுக்காக வெகு பாடுபட்டார். ஆதியில் இருந்து அவனுக்கு உதவி செய்த இடும்பன் சேர்வைகாரன் அப்ரூவராக எடுத்துக் கொள்ளப்பட்டான். சகலமான ரகசியங்களையும் அவன் வெளியிட்டு விடுவதென்றும், அவனை ஜட்ஜ் துரை மன்னித்து விட வேண்டும் என்றும் சென்னையிலேயே ஏற்பாடு செய்து கொள்ளப் பட்டிருந்தமையால், அவன் முதல் சாட்சியாக வந்து, ஆதியிலிருந்து மாசிலாமணி செய்த காரியங்களை எல்லாம் எடுத்துக் கூறினான். ஒரு குற்றவாளி அப்ரூவராக எடுத்துக் கொள்ளப் படுவதென்றால், அவனும், மற்ற குற்றவாளிக்கு சமதையாக அந்தக் குற்றத்தைச் செய்திருக்க வேண்டும் என்று சட்டம் சொல்லுகிற தாகையால் திகம்பர சாமியாரைக் கொல்ல முயற்சித்து, சென்னையில் நடந்த இரண்டு சம்பவங்கள் ஆகிய மூன்றிலும் அவன் சம்பந்தப்பட்டிருந்தது பற்றி அவன் அந்த மூன்று குற்றங்களுக்கும் அப்ரூவராக எடுத்துக் கொள்ளப் பட்டான். சட்டைநாத பிள்ளையை விடுவித்த விஷயத்தில், அவன் தனது ஆட்களை மாத்திரம் அனுப்பிவிட்டு தான் நேரில் போய் அதில் சம்பந்தப்படா திருந்தமையால் அவனது சாட்சியம் பயனற்ற தென்று சட்டைநாத பிள்ளையின் விசாரணையில் இடும்பன் சேர்வைகாரன் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை.

மாசிலாமணியின் உத்தரவின்படி, தான் உப்பிலியப்பன் கோவிலில் இருந்த பாம்புப் பிடாரனிடம் நாகப்பாம்புகள் வாங்கிப் பெட்டிக்குள் வைத்து மன்னார்குடிக்குக் கொண்டு போய் திகம்பர சாமியாரிடம் சேர்ப்பித்து வந்ததாகவும், அதன் பிறகு சென்னை யில் பட்டாபிராம பிள்ளையின் பங்களாவில் ஆட்களோடு நுழைந்து மனோன்மணியம்மாளை அபகரித்து வர முயன்று ஆள் மாறாட்டமாக வேறொருவரை அபகரித்து வந்து மாசிலாமணி யிடம் சேர்த்ததாகவும், வேலாயுதம் பிள்ளை முதலியோரை மூளிப்படுத்தும் எண்ணத்துடன் உதவிக்கு ரமாமணியையும் அழைத்துக் கொண்டு போனதாகவும், ஆள்களைப் பின்னால் வரச் சொல்லி இருந்ததாகவும், அதற்குள் ஒரு திருட்டுக் குற்றத்திற்காகத் தன்னை போலீசார் சிறைப்படுத்தியதாகவும் கூறினான். பிறகு உப்பிலியப்பன் கோவில் பாம்புப்பிடாரன் அடுத்த சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அதன் பிறகு நீர்மேல்குமிழி நீலலோசனி யம்மாள் ஆஜராகி வாக்கு மூலம் கொடுத்தாள். தனக்கும் ரமாமணி யம்மாள் முதலியோருக்கும் ரயிலில் பழக்கம் ஏற்பட்டதையும், தான் தனது சொத்தை அவர்களுக்கு எழுதி வைத்த வரலாற்றை யும், அதன் பிறகு கும்பகோணம் வந்த வரலாற்றையும் கூறிய தன்றி, தானும் அவர்களும் சேர்ந்து எழுதி ரிஜிஸ்டர் செய்து கொண்ட ஒப்பந்தப் பத்திரம், ரமாமணியம்மாள் மாசிலாமணிக்கு எழுதி தான் சமுத்திரத்தில் போட்டு விட்டதாகச் சொன்ன கடிதம், ஆகிய தஸ்தாவேஜிகளை ஆஜர்ப்படுத்தினாள். பிறகு சென்னை யில் இருந்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்து, பட்டாபி ராம பிள்ளையின் வீட்டில் முதலில் நடந்த சம்பவம், பிறகு கோமளேசுவரன் பேட்டையில் ரமாமணியம்மாள் முதலியோர் அங்கஹீனப் படுத்தப்பட்ட சம்பவம் முதலியவற்றிற்குச் சம்பந்தப் பட்ட விசாரணைக் காகிதங்களை ஆஜர் செய்வதோடு, சென்னை பெரிய ஆஸ்பத்திரியில் இருந்த கிராமபோன் யந்திரத்தையும் கொணர்ந்து அதற்குள் பதிந்திருந்த நீலலோசனியம்மாள் - ரமா மணியம்மாள் சம்பாஷணையை அது வெளியிடும்படி செய்து காட்டி, அது எந்தச் சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட தென்பதைப் பற்றி பெரிய டாக்டர் எழுதியிருந்த கடிதத்தையும் தாக்கல் செய்தார். அவரைத் தவிர, சென்னையில் இருந்தும், மன்னார் குடியில்

இருந்தும் கும்பகோணத்தில் இருந்தும் வேறு பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். முடிவில் வக்கீல்கள் இருவரும் வெகு நேரம் வரையில் தத்தம் கட்சியின் வாதங்களை எடுத்துக் கூறி ஒருவரோ டொருவர் முஷ்டியுத்தம் செய்தனர். அவ்வளவோடு அன்றைய தினம் பகல் பொழுது முடிந்து போய்விட்ட தாகையால், ஜட்ஜி துரை தனது தீர்மானத்தை எழுதி மறுநாள் படிப்பதாகக் கூறிவிட்டு, அவ்வளவோடு கச்சேரியை நிறுத்தினார். வக்கீல்களும் மற்ற ஜனங்களும் எழுந்து வெளியில் சென்றனர். கைதிகள் அனைவரும் சிறைச்சாலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டனர்.

★ ★ ★

16-வது அதிகாரம்

## ஊடலில் தோற்றவரே கூடலில் வெல்பவர்

பெண் வேஷத்தோடு எடுக்கப்பட்ட கந்தசாமியின் புகைப்படம் தபால் மூலமாய் மனோன்மணியம்மாளுக்குக் கிடைத்த செய்தியும் அதன் அடியில் குறிக்கப்பட்டிருந்த சந்தோஷச் செய்தியும், பட்டாபிராம பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, விருந்தினர் முதலிய எல்லோருக்கும் வெகு சீக்கிரத்தில் பரவி, அவர்கள் அனைவரும் அளவிட இயலாத ஆச்சரியமும் ஆனந்தமும் கொள்ளும்படி செய்தன. அன்றைய தினம் பூஜை நடந்த போது ஒரு ஸ்திரீ சன்னதங் கொண்டு தெரிவித்ததற் கிணங்க, உடனே அன்றைய தினமே நல்ல செய்தி வந்து சேர்ந்ததை எண்ணி எண்ணி எல்லோரும் பூரித்துப் புளகாங்கிதம் எய்தி, தங்களது விஷயத்தில் கடவுள் கண்கூடாக வந்து உதவி செய்து காப்பாற்றுவதைக் கண்டு, மிகுந்த பக்திப் பெருக்கும், நன்றி விசுவாசமும் அடைந்து எல்லோரும் கடவுளைப் பலவாறு ஸ்தோத்திரம் செய்யத் தலைப்பட்டதன்றி, கந்தசாமியால் அனுப்பப்பட்ட படத்தை மனோன் மணியம்மாள் இடத்தில் இருந்து வருவித்து அதை ஒருவர் பின் ஒருவராய் ஆவலோடு வாங்கி வாங்கிப் பார்த்து, அவனது ஒப்புயர்வற்ற அற்புத வடிவத்தைக் கண்டு பிரமிப்பும் ஆச்சரியமும் பெருமகிழ்ச்சியும் அடைந்தவராய்க் குதூகலமாய் சம்பாஷிக்கத் தலைப்பட்டனர். அதற்கு முன் வேலாயுதம்

பிள்ளை, திரிபுரசுந்தரியம்மாள், கண்ணப்பா, சுந்தரம் பிள்ளை ஆகிய முக்கியஸ்தர்கள், கந்தசாமியும் பெண் வேஷத்தில் வந்திருப்பானோ என்று சந்தேகித்தவர்களாகவே இருந்தனர் ஆதலால், அந்தப் படத்தைப் பார்த்த பிறகே அவர்களது மனம் ஒருவாறு அதை உண்மை என்று நம்பியதன்றி, மகா உத்தம குணங்கள் வாய்ந்த சற்புத்திரனான கந்தசாமி கூட அவ்விதமாக நடந்து கொண்டானே என்ற பெரு வியப்பும் திகைப்பும் அடைந்த வர்களாய் அப்படியே ஸ்தம்பித்துப் போயினர். பட்டாபிராம பிள்ளை, கந்தசாமி பெண் வேஷத்தோடு வந்திருந்த காலத்தில், தாம் அன்னிய ஸ்திரீயை ஏறெடுத்துப் பார்ப்பது தகாதென்று நினைத்து அவனை அவ்வளவு நன்றாக கவனிக்காமல் இருந்தவர் ஆதலால், அவர் அந்தப் படத்தை வாங்கித் தமது கையில் வைத்துக் கொண்டு இமை கொட்டாமல் வெகு நேரம் வரையில் அதை உற்று உற்று நோக்கி அதன் அழகில் ஈடுபட்டவராய் மெய்ம்மறந்து போய், அதன் சிகை முதல் கால் நகம் வரையில் மேலும் கீழும் நூறுதரம் பார்த்து, "ஆகா! என்ன அழகு! என்ன அழகு! இவ்வளவு அழகுடைய பெண் இந்த உலகத்தில் இருப்பாளா என்பதே சந்தேகம்! ரதிதேவியை இவருடைய காலில் கட்டியடிக்க வேண்டும். ஐயோ! இவருடைய புருவவில், கண்கள், பல்வரிசை, மூக்கு முதலிய ஒவ்வொன்றையும் எவ்வளவு நாழிகை பார்த்தாலும், அததையே பார்த்துக் கொண்டி ருக்கும்படி அல்லவா ஒவ்வொன்றும் தெவிட்டாத அழகுத்திரளாய் அமைந்திருக்கிறது. ஆகா! என்ன வசீகரமான முகம்! உலகத்தில், கற்கண்டு, பாகு, தேன், தேவாமிருதம் முதலியவைகள் இனிப்பென்று ஜனங்கள் கருதுகிறார்களே! இந்த வடித்தைப் பார்க்கும் போது தானாகவே என் மனதில் அமிர்த ஊற்று பெருக்கெடுத்து, இன்னதென்று விவரிக்க முடியாத ஒருவித இன்பம் சுரக்கும்படி செய்கிறதே! அழகு என்பது உண்மையில் இதுவேயன்றி மற்றதெல்லாம் அழகல்ல. இவரையும் பார்த்து என் மகளையும் பார்த்தால், இருவருக்கும் எந்த மூலைக்கு எந்த மூலை! இவர் என் மகளின் மீது ஆசை கொள்ளப் போகிறாரா? ஆகா! மகா அற்புத சிருஷ்டியில் சேர்ந்த இந்த உத்தம புருஷர் எங்களை மதித்து எங்களைப் பார்க்கும் பொருட்டு எங்கள் வீட்டை நாடி வந்த

காலத்தில், இவருக்குத் தக்க உபசரணை புரிந்து, இவருடைய மனம் எங்கள் மேல் பிரியம் கொள்ளும்படி செய்ய வேண்டிய திருக்க, அதை விட்டு, இவரைப் போலீசாரிடம் ஒப்புவித்து சிறைப்படுத்தி, எவ்விதமான அவமானத்திற்கும் அவமரியாதைக் கும் ஆளாக்கி விட்டோம். அடடா! என்ன மூடத்தனம் செய்து விட்டோம்! நல்ல சமயத்தில் மதியீனம் வந்து இப்படித் தானா மூடிக் கொள்ள வேண்டும்! இவர் என்றைக்கும் மறக்காதபடி அல்லவா, நாங்கள் மகா கேவலமாக நடந்து கொண்டோம். ஆயினும், இவர் பெருந்தன்மை வாய்ந்தவர் என்பது நன்றாகத் தெரிகிறது. இவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுடைய குணமும் ஒழுக்கமும் எப்படி மகா சிரேஷ்டமாக அமைந்திரு கின்றனவோ, அது போலத் தானே இவருடைய குணாதிசயங் களும் அமைந்திருக்கும்; இவர் முக்கியமாக பெற்றோர் பெரியோருடைய சொல்லை மீறி நடப்பவரல்லர் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆகவே, நாங்கள் இவருடைய விஷயத்தில் கொடிய தவறுகள் செய்து, இவரை நிரம்பவும் அவமரியாதைப் படுத்தியிருந்தும், என் மகள் மனோன்மணி யம்மாள் இவருடைய மனதிற்குச் சிறிதும் ஒவ்வாத நடையுடை பாவனைகள் உடையவளாய் இருந்ததைக் கண்டும், இவர் எங்களிடம் வெறுப்புக் கொள்ளாமல், எங்கள் சம்பந்தத்தை நாடியே இருக்கிறார் என்பது, இவர் இதனடியில் க்ஷேம சமாசாரம் எழுதி அதை என் மகளுக்கு நேரில் அனுப்பி இருப்பதிலிருந்து நன்கு விளங்குகிறது. என்னவோ, நாங்கள் இந்த ஜென்மத்தில் இதுவரையில் கடவுளை நினையாமல் நீச ஒழுக்கத்தை மேற் கொண்டு, எங்கள் ஆயிசு காலத்தில் பெரும் பாகத்தையும் போக்கி விட்டோம் ஆனாலும், நாங்களும், எங்கள் முன்னோர்களும் பூர்வ ஜென்மங்களில் செய்த பூஜா பலனே இப்படிப்பட்ட பெருத்த பாக்கியம் எங்களுக்குக் கிடைக்கும்படி செய்திருக்க வேண்டு மன்றி வேறல்ல. நல்ல வேளையாக என் மகள் மனோன்மணி யம்மாளும் தன்னுடைய துராசரங்களையும், துர் அபிப்பிராயங் களையும் வெகு சீக்கிரத்தில் விலக்கி விட்டு, சரியான வழிக்குத் திரும்பி விட்டாள். கற்பிற்கரசிகளான திரிபுரசுந்தரியம்மாள், வடிவாம்பாள் முதலியோருடைய மகா அற்புதமான வசீகர சக்தி

எப்பேர்ப்பட்ட கொடிய துஷ்டைகளின் மனதையும் ஒரு நொடியில் மாற்றி, அவர்களை நல்வழிப் படுத்தும் என்றால், அந்த மந்திரக் கோல் மனோன்மணியம்மாளை மாற்றியது ஒரு விந்தையா! கடைசியில் எங்களுக்குக் கடவுள் நல்ல வழியைக் காட்டினார். இது போலவே எங்கள் கோரிக்கையைக் கடைசி வரையில் அவர் நிறைவேற்றி எங்களை உய்விக்க வேண்டும்" என்று தமக்குள்ளாகவே எண்ணி எண்ணி அந்தப் படத்தைத் தமது கையில் வெகுநேரம் வரையில் வைத்துப் பார்த்துக் கொண்டே இருந்து மனோன்மணியம்மாள் மறுபடியும் அதைப் பார்க்க ஆசைப்படுகிறாள் என்று வேலைக்காரி கேட்ட போதே அதை அவர் தமது கையை விட்டு விலக்கினார். கந்தசாமி நான்கு தினங்களில் வந்துவிடுவான் என்றும், அதுவரையில் எவரும் கவலையாவது விசனமாவது கொள்ள வேண்டாம் என்றும், சுவாமியின் வாக்கு உண்டான பிறகு வேலாயுதம் பிள்ளை முதலி யோரது பக்திப் பெருக்கும் பூஜைகளும் தானதருமங்களும் முன்னிலும் பதினாயிரம் மடங்கு அதிகரித்தன. கந்தசாமி எவ்வித இடருமின்றி க்ஷேமமாய் எப்படியும் வந்து சேர்ந்து விடுவான் என்ற நம்பிக்கை எல்லோரது மனத்திலும் உண்டாகி விட்டது ஆனாலும், யார் அவனை அபகரித்துக் கொண்டுபோய் இருப்பார்கள் என்றும் அத்தனை நாள்கள் அவன் தங்களுக்கு எவ்விதத் தகவலும் சொல்லாமல் இருக்கும்படி அவனுக்கு எவ்விதமான இடுக்கண் நேர்ந்திருக்கும் என்றும், அவன் அந்த ஊரில் இருக்கிறானோ என்றும், அவன் எந்த நிமிஷத்தில் வருவானோ என்றும் அவர்கள் எல்லோரும் பலவித எண்ணங் களும் சந்தேகங்களும் கொண்டு ஆவலே வடிவாக மாறிப் போயிருந்தனர். அவர்களது மனம் போஜனத்தையாவது, தூக்கத் தையாவது சிறிதும் நாடாமலேயே இருந்து வந்தது.

இவ்விடத்தில் நாம் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் கூற வேண்டும். கந்தசாமியின் நண்பனான கோபாலசாமி என்பவன் ஆஸ்பத்திரியில் இருந்து நேராக கோமளேசுவரன் பேட்டையில் உள்ள தனது ஜாகைக்குப் போனதாயும், பட்டாபிராம பிள்ளையினது பங்களாவிற்கு வர அவன் வெட்கினான் என்றும், கண்ணப்பா அவனிடம் சென்று, அவனும்

கந்தசாமியும் உருமாறி வந்த வரலாறு முழுதையும் கேட்டறிந்து கொண்டு வந்து வேலாயுதம் பிள்ளை முதலியோருக்குத் தெரிவித்தான் என்றும் நாம் முன்னரே சொன்னோம் அல்லவா? அதன் பிறகு இரண்டு மூன்று தினங்கள் கழிந்த பின், கோபால சாமியை எப்படியாவது வரவழைத்து அவனுடன் நேரில் பேச வேண்டும் என்ற விருப்பம் வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு உண்டானதாகையால், அதற்கிணங்க, கண்ணப்பாவும், பட்டாபி ராம பிள்ளையும் மறுபடியும் அவனிடம் போய், அவனைப் பற்றி பங்களாவில் உள்ள எல்லோரும் மேன்மையான அபிப்பிராயமே கொண்டிருப்பதனால், அவன் அங்கே வருவதற்கு லஜ்ஜை அடைய வேண்டிய அவசியமே இல்லை என்று கூறி அவனது மனத்தைத் தெளிவித்து அவனை பங்களாவிற்கு அழைத்து வந்து சேர்த்தனர். அவ்வாறு வந்தவனுடன் நேரில் வேலாயுதம் பிள்ளை திரிபுரசுந்தரியம்மாள் முதலியோர் சம்பாஷித்து, கந்தசாமி மனோன் மணியம்மாளைக் கலியாணம் செய்து கொள்ளுவதில் எவ்வித மான மனப்பான்மையோடு இருந்தான் என்பதை உணர்ந்து கொண்டதன்றி, தாங்கள் அந்த ஊரில் இருக்கும் வரையில் அவனும் அந்த பங்களாவில் இருந்து பூஜை தான தருமங்களில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர் ஆதலால், அவனும் அவ்வாறே அவர்களோடு இருந்து வந்தான். அவன் மனோன்மணி யம்மாளைப் பார்ப்பதற்கு வெட்கினான் ஆதலால், தான் அவளது திருஷ்டியில் படக்கூடாது என்ற தீர்மானத்தோடு அவன் அவ்விடத்தில் இருந்து வந்தான். ஆயினும், மனோன்மணி யம்மாள் தனது நடையுடை பாவனைகளில் முற்றிலும் மாறிப் போனதன்றி, கந்தசாமியை மணக்க ஆவல் கொண்டு அவனையே நினைத்து விரக வேதனைப்பட்டு, நோய் கொண்டு படுத்திருக்கி றாள் என்பது கோபாலசாமிக்குத் தெரிந்து போனதாகையால், அது பற்றி அவன் மிகுந்த களிப்பும் இரக்கமும் கொண்டு கந்தசாமி எப்போது திரும்பி வருவான் வருவான் என்று ஆவலே வடிவாக எதிர்பார்த்திருந்ததான். சனிக்கிழமை அன்று ஒரு பெண் பிள்ளை ஆவேசங்கொண்டு கந்தசாமியைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்த காலத்தில் அவனும் அந்தக் கும்பலில் இருந்து மற்றவர் களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகரித்த ஆனந்தமும் பூரிப்பும்

அடைந்தவனாய் ஆவல் தீய்க்கு இரையாய் இருந்து வந்தான். தபால் மூலமாக வந்த கந்தசாமியின் பெண் வேஷ வடிவம் எடுக்கப்பட்ட படத்தை அவன் ஆசையோடு வாங்கிப் பார்த்து, "ஆகா! இந்தப் படம் அவன் இருந்த மாதிரியே இருக்கிறதே! முரடர்களிடம் அகப்பட்டுக் கொண்டவனுக்கு இவ்விதம் படம் பிடிக்க எப்படி சந்தர்ப்பம் ஏற்பட்டதென்பது தெரியவில்லையே! அதுவுமன்றி, இவன் டைப் அடிப்பதற்கு எப்படி முடிந்தது! இப்படித்தான் செய்தி அனுப்பினானே, தான் இன்ன இடத்தில் இன்னவிதமான நிலைமையில் இருப்பதனால், இன்றைய தினம் புறப்பட்டு வருகிறேன் என்று இவன் ஏன் எழுதி இருக்கக்கூடாது. இதில் இன்னொரு அசம்பாவிதமும் இருக்கிறது. சாதாரணமாக இவன் ஸ்திரீகளிடத்தில் பழகுவதற்கே நிரம்பவும் லஜ்ஜைப்படுகிற சுபாவம் உடையவன். இவன் மற்ற ஆண்பிள்ளைகளுக்கு இந்த விஷயத்தை எழுதாமல், தனக்கு மனைவியாக வரிக்கப்பட்டிருப் பவளும், இவனுடைய மனப்போக்குக்கு விரோதமான நடையுடை பாவனைகளைக் கொண்டிருந்தவளுமான மனோன்மணி யம்மாளுக்குத் துணிந்து படமனுப்பி செய்தி எழுதி விடுத்திருப்பது எனக்கு அசாதாரணமாகப் படுகிறதே யன்றி சாதாரணமாய் நடக்கக் கூடியதாய்த் தோன்றவில்லை. மற்றவர் இதை உண்மை என்று நம்பி ஒருவாறு தேறுதல் அடைந்திருப்பதை நாம் ஏன் கெடுக்க வேண்டும். இன்னம் நான்கு தினங்களில் அவனே வருவான் என்று சுவாமி வாக்குக் கொடுத்தது எப்படித்தான் முடிகிறதோ பார்க்கலாம்" என்று தனக்குத் தானே ஆட்சேபனை சமாதானங்கள் செய்துகொண்டு அவ்விடத்திலேயே இருந்து வந்தான். ஞாயிற்றுக் கிழமை, திங்கட்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் கழிந்தன. செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந்தது. மற்ற தினங்களில் நடந்தது போல, அன்றைய தினமும் பூஜை தானதருமங்கள் முதலியவை நிரம்பவும் சிறப்பாகவும் ஆடம்பரமாகவும் நடந்தேறின. ஆவேசம் வந்து வாக்குக் கொடுத்த தினம் முதல் அது நான்காவது தினம் ஆதலால், அந்த பங்களாவில் இருந்தோரும், தானதருமங்கள் பெற ஆயிரக்கணக்கில் வந்தோரும் கந்தசாமி எப்படியும் அன்றைய தினம் இரவிற்குள் வந்து சேர வேண்டும் என்று கூறிய வண்ணம் அவன் எப்போது வருவானோ என்ற ஆவலே நிறைந்தவராக

மாறிப் போயிருந்தனர். பங்களாவின் வாசலில் இருந்து உள்பக்கத்தில் யாராவது வந்தால், "பையன் வந்து விட்டானா?" என்ற கேள்வியையே உள்ளே இருந்தவர்கள் கேட்டனர். "இன்னமும் வரவில்லை" என்ற ஏக்கமான மறுமொழியே பிறந்து கொண்டிருந்தது. அவ்வாறு அன்றைய தினம் மாலை வரையில் கழிந்தது. வேலாயுதம் பிள்ளை முதலிய எல்லோரும் தண்ணீர் கூட அருந்த மனமற்றவராய்க் கந்தசாமி வரவில்லையே என்று நினைத்து நினைத்து ஏங்கிப் பைத்தியங் கொண்டவர்களைப் போல, வேறே எதிலும் நாட்டங் கொள்ளாதவர்களாய் இருந்து தத்தளித்துத் தவித்த வண்ணம் இருந்தனர்.

கோபாலசாமியின் நிலைமையோ விவரிக்க இயலாத பரம வேதனையானதாக இருந்தது. சனிக்கிழமை பெண் பிள்ளை ஆவேசங் கொண்டு சொன்ன வார்த்தைகளின் மேல் அவனுக்கு அவ்வளவாக நம்பிக்கை உண்டாகவில்லை ஆனாலும், அவனையும் மீறி அவனது மனம் அந்த நான்காவது தினத்தில் கந்தசாமியின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் தாமரை இலைத் தண்ணீர்த் துளிபோலத் தவித்தபடி இருந்தது. மற்றவரைப் போல அவனும் அன்னந் தண்ணீர் முதலிய எதையும் நாடாமல் பிற்பகல் வெகுநேரம் வரையில் இருந்து பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அவனுக்கு அந்த பங்களாவில் இருக்கையே கொள்ள வில்லை ஆதலால், அவன் அவ்விடத்தை விட்டு மாலை ஆறுமணி சமயத்திற்கு வெளியில் வந்து, அந்த பங்களாவில் வலது பக்கத்தில் இருந்த பிரம்மாண்டமான பூஞ்சோலைக்குள் நுழைந்தான்.

அது, ஆலவிருக்ஷங்கள், தென்னை, கமுகு, வேறு பலவகைப் பட்ட பழமரங்கள் முதலியவை ஏராளமாக நிரம்பப்பெற்ற இடமாக இருந்தது. எங்கும் புஷ்பத் தொட்டிகளும், ஊஞ்சல் பலகைகளும், மருதாணி வேலிகளும், வாவிகளுமே மயமாய் நிறைந்து நிரம்பவும் ரமணீயமாகவும், குளிர்ச்சியாகவும், நிழல் அடர்ந்ததாகவும் இருந்தது. காற்று ஜிலீர் ஜிலீர் என்று வீசி மனதையும் தேகத்தை யும் பரவசப்படுத்திக் கொண்டிருந்தது. அடிக்கடி ஏராளமான குயில்கள் நிரம்பவும் கனிவாகவும் மதுரமாகவும் கூவி இன்னொலி

பரப்பிக் கொண்டிருந்தன. அத்தகைய இனிய பூஞ்சோலைக்குள் சென்ற கோபாலசாமி அப்போதும் கந்தசாமி வரவில்லையே என்றும், சுவாமி வாக்குக் கொடுத்தது பலிக்குமோ, பலிக்காதோ என்றும், முற்றிலும் குழம்பிக் கலவரமடைந்த மனத்தினனாய்ச் சென்று அங்குமிங்கும் சிறிது நேரம் உலாவிவிட்டு அவ்விடத்தில் ஒரு கமுகுத் தோப்பில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சல் பலகையைக் கண்டு அதன் மேல் உட்கார வேண்டும் என்ற ஆசை கொண்டு, அதனிடம் சென்று உட்கார்ந்து கொண்டு கால் நாழிகை காலம் கழித்தான். அவ்விடத்திலும் அவனது மனம் சாந்தம் அடையவில்லை. ஒரு வேளை அந்நேரம் கந்தசாமி பங்களா விற்குள் வந்திருப்பானோ என்ற எண்ணம் உண்டாயிற்று. தான் அப்போது பூஞ்சோலையில் இருப்பது தவறெனவும், உடனே தான் பங்களாவிற்குப் போக வேண்டும் என்றும் நினைத்தவனாய், கோபாலசாமி எழுந்திருக்க முயன்ற காலத்தில் அவனுக்குப் பின் பக்கத்தில் யாரோ ஒருவர் திடீரென்று தோன்றித் தமது கைகளால் அவனது கண்கள் இரண்டையும் இறுக மூடிக்கொண்டதை உணர்ந்த கோபாலசாமி, "யார் அது? கண்ணப்பாதான். நிச்சயம். நூறு ரூபாய் பந்தயம். கைவிரல்கள் நன்றாக அடையாளம் சொல்லு கின்றன. கண்ணப்பாதான்" என்று அழுத்தமாகவும் அன்போடும் கூறினான். அவனது கண்களைப் பொற்றினவன், "அடேய் கோபாலசாமி! உன் குறி வண்ணான் குறி மாதிரி எப்போதும் தவறுகிறதில்லை. ஆனாலும் நீ இப்போது தோற்றுப் போனாய். போடு பந்தயப் பணத்தை இப்படி" என்று வேடிக்கையாகவும் மகிழ்ச்சியோடும் கூறிய வண்ணம் தனது கைகளை விலக்க, அவனது குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு உடனே திரும்பிப் பின்புறம் பார்த்த கோபாலசாமி, "ஆ நீயா!" என்ற கூச்சலுடன் தன்னை முற்றிலும் மறந்து அப்படியே துள்ளிக் குதித்துப் பாய்ந்து, "அப்பா! கந்தசாமி! வந்தாயா? ஆகா! என்ன ஆச்சரியம்! நீ இந்தச் சோலைக்கு எப்படி வந்தாய்? நான் இங்கே வந்திருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்டு இங்கே வந்தாயா? நீ உண்மையில் கந்தசாமிதானா? அல்லது, என் கண்கள் என்னை ஏமாற்றுகின் றனவா!" என்று மிகுந்த வியப்போடு கூறி ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தனக்குப் பின்னால் வந்து நின்ற கந்தசாமியை

ஆசையோடும், ஆவலோடும் கட்டியணைத்து இறுகப்பிடித்துக் கொண்டான். அவனது மனம் காட்டாற்று வெள்ளம் போலப் பொங்கி எழுந்து ஆனந்தமாய் வழிந்தோடத் தொடங்கியது. தேகம் பரவசமடைந்து வெடவெடவென்று ஆடுகிறது. பாதாதிகேசம் வரையில் உரோமம் சிலிர்த்து ஆனந்த நிர்த்தனம் செய்கின்றது. மடை திறந்து விடப்பட்ட ஆறு போல அவனது கண்கள் இரண்டும் ஆனந்த பாஷ்பத்தைச் சொரிகின்றன. அவன் கட்டிலடங்கா ஆவலும், வாத்சல்யமும், மன நெகிழ்வும் கொண்டு, கந்தசாமியை விடாமல் மேன்மேலும் இறுகத் தழுவி, "அப்பா! கந்தசாமி! எத்தனை பேருடைய வயிற்றில் பாலை வார்த்தாயப்பா! ஆகா! உன்னைக் காணாமல் நாங்கள் எல்லோரும் படும்பாடு ஈசனுக்குத் தான் தெரியும். உன் தாய் தகப்பனார் முதலியோர் இந்தப் பதினைந்து தினங்களாய் பட்டினி கிடந்து, இறந்தவர் களிலும் சேராமல் உயிரோடிருப்பவர்களிலும் சேராமல் தவிக்கிறார் களப்பா! அவர்கள் எல்லோரையும் விட மனோன்மணியம்மாளின் நிலைமை தான் வாயால் சொல்ல முடியாததாக இருக்கிறது! அப்பா! உன்னை நினைத்து நினைத்து அவள் அநேகமாய்த் தன்னுடைய பிராணன் முழுதையும் விட்டுவிட்டாளப்பா! நல்ல வேளையாக வந்தாயே!" என்று பிரலாபித்துக் கூற, அதற்கு மேல் பேசமாட்டாமல் அவனுடைய தொண்டை அடைத்துக் கொண்டது. அவனுடைய மூச்சுத் திணறுகிறது. அவன் மேலே பேசமாட்டாதவனாய்க் கந்தசாமியை மேன்மேலும் இறுகத் தழுவியபடி ஊமை போல் அப்படியே ஓய்ந்து போய் இன்பமோ துன்பமோ என்பது தெரியாத மனநிலைமையில் நிற்க, அவனது நிகரற்ற வாஞ்சையைக் கண்டு அவனது உருக்கமான சொற்களைக் கேட்ட கந்தசாமியும் கட்டிலடங்கா மனவெழுச்சியும் ஆனந்தப் பெருக்கும் அடைந்து, கண்ணீரை ஆறாய் ஓடவிட்டுத் தேம்பித் தேம்பி அழுத வண்ணம் தழுதழுத்த குரலில் பேசத் தொடங்கி, "அப்பா! கோபாலசாமி! உன்னைப் போன்ற சிநேகிதன் இந்த உலகத்தில் வேறே யாருக்காயினும் இருந்திருப்பானா; உண்மை யான பிரியமுள்ளவர்கள் யார் என்பதை ஆபத்துக் காலத்தில் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பார்கள். அதைப் போல நீ மகா உத்தமமான பரம மித்ரன் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

அது முதல் அதை நினைக்கும் போதெல்லாம் என்னுடைய மனம் அப்படியே பொங்கிப் போகிறது. உடம்பு பரவசம் அடைந்து விடுகிறது. நான் தான் பெண் வேஷம் போட்டுக் கொண்டு வந்தேன் என்பதை நீ கடைசி வரையில் சொல்லாமல், அவர்கள் உன்னைக் குழியில் போட்டு மேலே மண்ணைத் தள்ளும் போது கூட நீ பிணம் போலவே இருந்தாயாமே. ஆகா! கோபாலசாமி! கோபாலசாமி! நீயே உண்மையான தீரன்! நீயே உண்மையான ஆண்மகன்! நீயே உண்மையான சிநேகிதன்! நீயே உண்மையான புருஷ சிங்கம்! ஆகா! நீ என் விஷயத்தில் வைத்திருக்கும் வாஞ்சை எவ்வளவு உறுதியானது என்பதை நீ நன்றாய்க் காட்டினாய்! உன்னுடைய உயிரைக் கொடுத்தாவது என்னுடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற மகா அற்புதமான மனோதிடத்தோடு நடந்து கொண்ட உன்னை நான் என்னவென்று புகழுகிற தென்பது தெரியவில்லை. கோபாலசாமி! உலகத்தில் மற்றவரும் சிநேகிதர் நீயும் சிநேகிதனா! ஆகா! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வதென்பது தெரியவில்லை. உனக்கு நான் என் உயிரையும் கொடுப்பேன் என்று சொல்வது கேவலம் மகா அற்ப சன்மான மாகத் தோன்றுகிறது; செய்கையிலேயே நீ எனக்காக உன் உயிரை விட்டுக் காட்டினாயே! அப்பேர்ப்பட்ட மனப்போக்குடைய உன்னிடம் நான் என் உயிரை உனக்காகக் கொடுப்பேன் என்று சொல்வது, உனக்கு அவ்வளவு பிரமாதமாகத் தோன்றாது. அல்லது, உனக்கு லட்சம் பத்து லட்சம் பொருள் கொடுப்பதாக நான் சொல்வது, கேவலம் நீ கூலிக்கு வேலை செய்பவன் என்று சொல்வது போலத் தோன்றும்; என் விஷயத்தில் நடந்து கொண்ட மகா அபூர்வமான மாதிரியைப் பற்றி நான் என்ன சொல்வ தென்ப தாவது என்ன செய்வதென்பதாவது தெரியவில்லையே; நான் என்ன செய்வேன்" என்று நிரம்பவும் தழுதழுத்து நெகிழ்ந்த குரலில் கூறினான்.

அதைக் கேட்ட கோபாலசாமியின் ஆவேசமும் உருக்கமும் முன்னிலும் பன்மடங்கு பெருகின. அவனது கண்கள் முன்னிலும் அபாரமாகக் கண்ணீரை வழிய விட்டன. அவன் வாய் திறந்து பேச மாட்டாமல் தத்தளித்து, பத்து நிமிஷ நேரம் வரையில் அப்படியே ஓய்ந்து பேசாமல் நிற்க, அவனது மன எழுச்சியும், உணர்ச்சிகளும்

சிறிது தணிவடையத் தொடங்கின. அவன் மிகுந்த ஆவலும் விரைவும் காட்டி, "அப்பா கந்தசாமி! எனக்கு நீ உபசார வார்த்தை கூடச் சொல்ல வேண்டுமா? நான் உபசார வார்த்தையையாவது, அல்லது, பிரதி உதவியையாவது கருதி இப்படி நடந்து கொண்டவ னல்ல என்பது உனக்கு நன்றாகத் தெரியும். நான் அந்தச் சமயத்தில் செய்தது சிரேஷ்டமான காரியம் என்று நீ நினைத்து சந்தோஷப் பட்டால், அதுவே எனக்குப் போதுமானது. அதைவிட வேறு எதையும் நான் கோரவில்லை. அதிருக்கட்டும் கந்தசாமி! பங்களாவில் இருக்கிறவர்கள் இன்றைய தினம் நீ அவசியம் வருவாய் என்று ஆவலோடு உன் வருகையை எதிர்பார்த்து நெருப்பின் மேல் நிற்பவர் போலத் தவித்திருக்கிறார்கள். வா, பங்களாவுக்குப் போவோம் சீக்கிரமாக" என்று கந்தசாமியின் கையைப் பிடித்திழுக்க, அவன் சந்தோஷமாகப் புன்னகை செய்து, "அடேய் கோபாலசாமி! எனக்கு அங்கே வர வெட்கமாக இருக்கிறது; என் கால் பின்னுக்கு இழுக்கிறதே யொழிய முன்னுக்குப் போகமாட்டேன் என்கிறது" என்று நயமாகக் கூறினான். கோபாலசாமி, "அப்படியானால், நீ இவ்விடத்திலேயே இரு. நான் ஒரே ஓட்டமாக ஓடி, நீ வந்திருப்பதாகச் சொல்லி அவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று நிரம்பவும் துடியாகக் கூறி, பங்களாவை நோக்கி ஓடுவதற்கு அறிகுறியாக இரண்டோரடி எடுத்து வைத்தான். உடனே கந்தசாமி எட்டி அவனைப் பிடித்து நிற்க வைத்த, "இரு, கோபாலசாமி! போகலாம். இன்னம் வெளிச்சமாக இருக்கிறது விளக்கு வைத்த பிறகு போகலாம். நான் மெயில் வண்டியில் இன்று காலையி லேயே இந்த ஊருக்கு வந்துவிட்டேன். நாம் செய்த காரியம் இவ்வளவு தூரம் பகிரங்கத்திற்கு வந்த பிறகு, எனக்கு முக்கியமாக அப்பா, அம்மா, அண்ணன், இந்தப் பட்டாபிராம பிள்ளை முதலியோரை எப்படிப் பார்க்கிறது என்ற ஒருவித லஜ்ஜை வந்து போராடுகிறது. கோமளேசுவரன் பேட்டையில் யாரும் இல்லை என்பது தெரியும். ஆனால், நான் அங்கே போனால், எனக்குத் தெரிந்தவர்கள் உடனே இங்கே வந்து நான் வந்திருப்பதாகச் சொல்லிவிடப் போகிறார்களே என்று நான் அங்கே போகாமல், பட்டணத்தில் மறைவாக ஓரிடத்தில் இருந்து, இப்போது தான்

புறப்பட்டு வருகிறேன். நான் இந்த பங்களாவிற்கு வருவதற்குள் இருட்டிப் போய்விடும் என்று நினைத்தேன். இன்னம் வெளிச்ச மாக இருக்கிறது. இப்படித் தோட்டத்திற்கு வெளியில் மறைந்திருக் கலாம் என்று நினைத்து வந்தேன். தோட்டத்து வேலியில் ஒரு வழி விடப்பட்டிருந்தது. அதன் வழியாக இந்தத் தோட்டத்திற்குள் வந்து, இங்கே கொஞ்ச நேரம் இருந்து, இப்படியே பங்களா விற்குள் போய், முதலில் உன்னைக் கண்டு பிறகு மற்றவரைக் காண நினைத்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது போல நீ இவ்விடத்திலேயே ஆஜராய் உட்கார்ந்திருந்தாய்! உன்னைப் பார்த்தவுடன், உண்மையில் நீதானா, அல்லது, என்னுடைய மனப்பிராந்தியோ என்றுகூட நான் நினைத்து விட்டேன்" என்றான்.

*கோபாலசாமி:-* உன்னைப் பார்த்தவுடன் நான் கூட அப்படித் தான் நினைத்துவிட்டேன். நாம் எப்போதும் எந்த விஷயத்திலும் ஒரே மாதிரியான அபிப்பிராயம் கொள்கிறவர்கள் அல்லவா. நானும் ஆஸ்பத்திரியில் இருந்து இங்கே வர லஜ்ஜைப்பட்டுக் கொண்டு கோமளேசுவரன் பேட்டைக்குப் போய்விட்டேன். பிறகு பட்டாபிராம பிள்ளையும், நம்முடைய கண்ணப்பாவும் வந்து என் சங்கோசத்தை விலக்கி என்னை அழைத்துக் கொண்டு வந்தார்கள். இது நம்முடைய மனசின் கெடுதலேயொழிய மற்றவர்கள் நம்மிடம் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவே போகிறதில்லை. உன்னை எப்போது காண்போம் என்று எல்லோரும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீ வந்தால், எல்லோரும் அப்படியே சந்தோஷத்தினால் பரவசமடைந்து குதிப்பார்களே யன்றி, பழைய சங்கதி எதையும் பேச மாட்டார்கள். ஆனாலும் உன்னுடைய பிரியப்படியே நாம் இன்னம் கொஞ்ச நேரம் பொறுத்துப் போகலாம். உன்னை அவர்கள் எங்கே கொண்டு போனார்கள்? என்ன செய்தார்கள்? இந்தப் பதினைந்து தினங்களாய் நீ எங்கே இருந்தாய்? உன்னைப் பற்றி எங்களுக் கெல்லாம் எவ்விதத் தகவலும் தெரிவிக்காமல் நீ இருந்த காரணம் என்ன? எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று என் மனம் பதறுகிறது.

அதைக் கேட்ட கந்தசாமி சந்தோஷத்தினால் மலர்ந்த முகத்தோடு பேசத் தொடங்கி, பெண் வேஷத்தோடு வந்திருந்த தன்னை பட்டாபிராம பிள்ளையும் மனோன்மணியம்மாளும் தனியாக வைத்துக் கதவை வெளியில் தாளிட்டுக் கொண்டு போனது, பிறகு நடு இரவில் முரட்டு மனிதர்கள் வந்து மயக்க மருந்தை முகரச் செய்தது, பிறகு தன் மயக்கம் தெளிந்த போது தான் கும்பகோணத்தில் இருந்தது, அவ்விடத்தில் திங்கட்கிழமை அன்று தனக்கும் மாசிலாமணிக்கும் கலியாணம் நடந்தது, பிறகு செவ்வாய்க்கிழமை அன்று, அவன் சோபனக் கலியாணத்திற்காக ஏற்பாடுகள் செய்தது, பிறகு தானும் அவனும் சோபன அறையில் சந்தித்தது, அவ்விடத்தில் இருவருக்கும் சம்பாஷணை நேர்ந்தது, தான் அவனிடம் தன்னைப் பற்றி பொய்யான வரலாற்றைச் சொல்லி, சோபனக் கலியாணத்தை மறு நாளைக்கு மாற்றிக் கொண்டு அவ்விடத்தை விட்டு முன்னிருந்த அறைக்கு வந்தது முதலிய வரலாறுகளை எல்லாம் விரிவாகக் கூறி, மேலும் பேசத் தொடங்கி, "அப்பா கோபாலசாமி! நாம் எந்த வேளையில் பெண் வேஷம் போட எண்ணினோமோ! அது இப்படிப்பட்ட அநர்த்தத்தை எல்லாம் கொண்டு வந்துவிட்டது. நீ என் புருஷன் என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தும், சமயத்தில் என்னைக் காப்பாற்ற முடியாத நிலைமையில் இருந்தாய். ஆனாலும் நான் அந்தத் துஷ்டனுடைய கைகூட என் மேல் படாதபடி தந்திரம் செய்து மகா பதிவிரதா சிரோன்மணியாகவே திரும்பி வந்து சேர்ந்தேனப்பா! அதைப் பற்றி நீ தான் உண்மையில் சந்தோஷப்பட வேண்டியவன். நான் மாசிலாமணியை விட்டுப் பிரிந்து போனேன் அல்லவா? அந்த அசுரனுடைய சோபன அறைக்குள் கொஞ்ச நேரம் இருந்து அந்த அத்தர், புனுகு முதலியவற்றின் அபாரமான வாசனையை முகர்ந்தது என்னால் தாங்கவே முடியாமல் போய்விட்டது. எனக்கு மயக்கம் வந்து தலையைச் சுற்றியது. அந்த நிலைமையில், "அவன் வெள்ளிக்கிழமை அன்று செய்ய எண்ணி இருந்த பயங்கரமான சதியாலோசனையைக் கேட்கவே, என்னால் நிற்கக் கூட முடியாமல் போய்விட்டது. என் மனம் பதறித் தத்தளித்தது. எப்படியாவது நான் அவ்விடத்தை விட்டு உடனே தப்பித்து, மன்னார்குடிக்குப் போய், அவர்கள் செய்த காரியத்தையும்,

செய்ய எண்ணியிருந்த பயங்கரமான காரியங்களையும் தெரிவித்து, அதற்குத்தக்க முன் ஜாக்கிரதையான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நினைத்து என் மனம் பறந்தது. உடனே நான் வெளியில் போனால் யாராவது விழித்திருந்து நான் போவதைக் கண்டு, என்னைப் பிடித்துக் கொள்ளப் போகிறார் களே என்று நினைத்து நான் இரவு பன்னிரண்டு மணி வரையில் பொறுத்திருந்தேன். என்னுடைய பெண் வேஷத்தைக் கலைத்து விட்டு, வேஷ்டிகள் கட்டிக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போக வேண்டும் என்ற எண்ணம் உதித்ததானாலும், ஆணுடையோடு நான் வெளியில் போகும் போது என்னை அவர்கள் கண்டால் திருடன் என்று மதிப்பார்கள் என்ற எண்ணம் உதித்தது ஆகை யால், அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை. அதுவுமன்றி, வேஷ்டிகளும் அவ்விடத்தில் காணப்படவில்லை. ஆகவே, நான் பெண்ணுடையோடு மன்னார்குடிக்குப் போய், அவ்விடத்தில் வேஷ்டி கட்டிக்கொண்டு, மாசிலாமணியின் ஆடையாபரணங் களை, இன்னார் அனுப்பியது என்ற குறிப்பே தெரியாதபடி, மாசிலாமணிக்கு அனுப்பிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, இரவு 12-மணி சுமாருக்கு மெதுவாக எழுந்து வாசற் கதவைத் திறந்து கொண்டு வெளியில் போய், முன்னும் பின்னும் திரும்பிப்பார்த்தபடி தெருவோடு ஓட்டமும் நடையுமாகப் போனேன்; எங்கேயாவது குதிரை வண்டி கண்ணில் படுகிறதா என்று பார்த்தேன். அது அர்த்தராத்திரி வேளை ஆகையால் எங்கும் வண்டியே கிடைக்கவில்லை. நான் ஒரே நடையாக நடந்து ரயில் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தேன். அவ்விடத்தில் நாலைந்து குதிரை வண்டிகள் நின்று கொண்டிருந்தன. ஒரு வண்டிக்காரனை அழைத்து, வண்டி மன்னார்குடிக்கு வருமா என்றேன். அவன் நீடாமங்கலம் வரையில் தான் வரும் என்றான். அதுவரையில் போய், அவ்விடத்தில் வேறு வண்டி அமர்த்திக் கொண்டு போகலாம் என்று தீர்மானித்துக் கொண்டு நான் அந்த வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, வண்டியை அவசரமாக ஓட்டும்படி செய்தேன். வண்டிக்காரன் அன்று மாலையில் நாலைந்து கட்டுகள் பச்சைப் புல் வாங்கி வண்டி முழுதும் பரப்பி, அதன்மேல் ஒரு பெரிய கோணியை விரித்திருந்தான். அதன் மேல்

உட்கார்ந்தது மெத்தையின் மேல் இருப்பது போலத் தோன்றியது. குதிரையும் விசையாய் ஓடியதாகையால், நான் அப்படியே சாய்ந்து படுத்தேன். பசுமையான புல்லின் மேல் படுத்தது; குளிர்ச்சியாகவும் சுகமாகவும் இருந்தது. வண்டி விசையாக ஓடியதில் என் உடம்பு அங்குமிங்கும் ஆடியசைந்தது. கோணி வழுக்கிக் கொண்டு சென்றது. வலங்கிமான் என்ற ஊரைத் தாண்டி அப்பால் சென்று வெட்டாற்றுப் பாலத்தைக் கடந்து ஆலங்குடிக்கு அருகில் போன சமயத்தில், என் காலில் சுரீர் என்று என்னவோ குத்தியது போல இருந்தது. ஒரு வண்டி நெருப்பை அள்ளி ஒரே காலத்தில் என் மேல் கொட்டினால் கூட அவ்வளவு கஷ்டம் இருந்திராது. நான் உடனே "ஐயோ! என்னவோ கடித்துவிட்டதே!" என்று அலறிக் கொண்டு எழுந்து வண்டியை விட்டுக் கீழே குதித்தேன். அந்த விபரீத ஓசையைக் கேட்டு வண்டிக்காரன் திடுக்கிட்டு வண்டியை நிறுத்திவிட்டு முன்னால் இருந்த லாந்தரை எடுத்துக் கொண்டு பின்பக்கம் ஓடி வந்து, "என்ன அம்மா?" என்றான். அதற்குள் என் உயிர் துடிக்கும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. என் உடம்பு முழுதும் குபீரென்று வியர்த்து ஜலமாய் ஓடுகிறது. வாய் நுரை நுரையாகத் தள்ள ஆரம்பித்தது; கைகால் உடம்பெல்லாம் வெட வெடவென்று நடுங்க ஆரம்பித்தன. நான் உடனே வண்டிக்காரனைப் பார்த்து, "வண்டிக்குள் இருந்து என்னவோ சுருக்கென்று கடித்த மாதிரி இருந்தது. வலி நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரிக்கிறது. என்னால் நிற்கக்கூட முடியவில்லை. வாயிலிருந்து நுரை நுரையாக வருகிறது. நெஞ்சு காய்ந்து போகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் பிராணன் போய்விடும் போலிருக்கிறது" என்றேன். அதைக் கேட்ட வண்டிக்காரன், என்னை ஒரு பக்கமாக உட்காரச் செய்துவிட்டு கையில் ஒரு தடிக்கம்பை எடுத்துக் கொண்டு வண்டியில் இருந்த புல்லை ரஸ்தாவில் தள்ளிவிட்டு, கொஞ்சம் தூரமாக விலகி நின்று கோலினால் புல்லைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரித்து விட்டுப் பார்த்துக் கொண்டே போக, புல்லிற்குள் கன்னங்கரேலென்று கருத்து ஒரு சாண் நீளமிருந்த ஒரு நட்டுவாய்க்காலி (நண்டுத்தெருக்கால்) விருவிரென்று ரஸ்தாவில் ஓட ஆரம்பித்தது. அந்த மகா பயங்கரமான ஜெந்து என் காலில் பலமாகக் கொட்டிவிட்ட

தென்பதை நான் உடனே உணர்ந்து கொண்டேன்; வண்டிக் காரனும் உணர்ந்து கொண்டான். அந்த ஜெந்துவைப் பார்க்கும் போதே எனக்குக் குலை நடுக்கம் உண்டாகிவிட்டது. ஆனால், வண்டிக்காரன், "அம்மா! நல்ல வேளை தான். ஏதாவது பாம்பு கடித்திருக்குமோ என்று என் மனம் நிரம்பவும் தவித்துப் போய் விட்டது. நல்ல வேளைதான். நீங்கள் தப்பினீர்கள். இது கொட்டி னால், உயிருக்கு அபாயமில்லை. இரண்டொரு நாளைக்குக் கொஞ்சம் உபத்திரவமாக இருக்கும்; பிறகு சரிப்பட்டுப் போகும். இதைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்" என்று கூறிய வண்ணம் அந்த நட்டுவாய்க்காலியை இரண்டு மூன்று அடிகளில் அடித்துக் கொன்று ரஸ்தாவிற்கு அப்பால் தூக்கி எறிந்துவிட்டு, புல்லை நன்றாகத் தட்டி சோதனை செய்து, வேறு கெடுதல் எதுவுமில்லை என்று நிச்சயித்துக் கொண்டு அதையும் கோணியையும் மறுபடி வண்டியில் போட்டு அதன்மேல் என்னை உட்காரச் செய்து, "அம்மா! இதோ பக்கத்தில் ஆலங்குடி என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் ஏகாம்பர முதலியார் என்று ஒரு பெரிய மிராசுதார் இருக்கிறார். அவருடைய வீட்டிற்கு நாம் போவோம். அந்த ஊரில் இதற்கு யாராவது வைத்தியம், மாந்திரீகம் தெரிந்தவர்கள் இருப்பார்கள்" என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு அந்த மிராசுதாருடைய வீட்டிற்குப் போய், அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அந்த மனிதரை எழுப்பி விஷயத்தை அவரிடம் சொன்னான். அவர் நிரம்பவும் தயாள குணமுடையவர். அதுவுமன்றி, நான் ஏராளமான நகைகளையும் உயர்ந்த உடை களையும் தரித்து ராஜ ஸ்திரீ போல இருந்ததைக் கண்டு அவர் துடிதுடித்து, என்னை அவருடைய வீட்டிற்குள் அழைத்துப் போய் ஒரு படுக்கையில் படுக்க வைத்தபின், தாம் என்னிடம் வரக்கூடாது என்று நினைத்து, தமது வீட்டில் உள்ள ஸ்திரீகளை எல்லாம் என்னிடம் வந்து, எனக்கு உபசரணை செய்யுமாறு அவர் கூப்பிட்டார். நான் அதற்கு இடங் கொடுக்கக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டேன். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய உண்மையான வரலாற்றையும் சொல்ல என்னால் கூடவில்லை; அதைச் சொல்வது அசங்கியமாகவும் தோன்றியது. ஆகையால், நான் அவரைப் பார்த்து, "ஐயா! உங்கள் வீட்டு

ஸ்திரீகளை என்னிடம் அனுப்ப வேண்டாம். நான் பெண்பிள்ளை அல்ல; ஒரு காரணத்தை முன்னிட்டு நான் பெண் வேஷம் போட்டுக் கொண்டேன். அதை நான் உங்களிடம் பிற்பாடு தெரிவிக்கிறேன். நீங்கள் எனக்கு உடனே இரண்டு வஸ்திரங்கள் கொடுக்க வேண்டும். அதுவுமன்றி, என் பிராணன் போய்விடும் போல இருக்கிறது. இதற்கு ஏதாவது மருந்து போடும்படி செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். நான் சொன்னதைக் கேட்டு அந்த மனிதர் ஆச்சரியமடைந்தார் ஆனாலும், என்னுடைய ஒழுங்கான நடத்தையைக் கண்டு என்மேல் நல்ல அபிப்பிராயம் கொண்டு, உடனே எனக்குச் சலவை செய்த இரண்டு வஸ்திரங்களைக் கொடுத்தார். நான் என் பெண் வேஷத்தை எல்லாம் ஐந்து நிமிஷத்தில் கலைத்து ஆடையாபர ணங்களை மூட்டையாகக் கட்டி ஒரு பக்கத்தில் வைத்து விட்டு அவர் கொடுத்த வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டேன்; அவர்கள் கொடுத்த ஜலத்தை வாங்கி ஏராளமாகச் சாப்பிட்டு விட்டு அப்படியே படுத்துக் கொண்டேன். அதற்குள் விஷம் உடம்பு முழுதும் பரவி மரணாவஸ்தை போல என்னை வதைக்கத் தலைப்பட்டது. வாயில் நுரை வந்து கொண்டே இருந்தது. உடம்பு முழுதும் வியர்வை வெள்ளமாக வந்தது ஆனாலும், நெருப்பாய்ப் பற்றி எரியத் தொடங்கியது. நான் பல்லைக் கடித்துப் பொறுத்துப் பார்த்தேன். என்னால் அந்த பாதையைத் தாங்க முடியவில்லை. அன்னியர் பக்கத்தில் இருக்கிறார்களே என்பதையும் கவனிக்காமல் நான், "ஐயோ! அப்பா! அம்மா!" என்று வாய்விட்டுக் கதறி அலறத் தொடங்கிவிட்டேன். கொஞ்ச நேரத்தில் அந்த ஊரில் உள்ள சகலமான வீட்டாரும் வந்துகூடி என்னுடைய நிலைமையை உணர்ந்து அவர்களுக்குத் தெரிந்த மருந்துகளைக் கொடுக்கத் தொடங்கினர்; வேறு சிலர் வேப்பிலையை வைத்துக் குழையடித்து மந்திரிக்கத் தொடங்கினர். ஆகா! அந்த வேப்பிலையின் குணத்தை நான் அப்போதே உணர்ந்தேன். சகலமான அவஸ்தைகளுக்கும் பாமர ஜனங்கள் வேப்பிலையை வைத்துக் குழையடிப்பதைக் கண்டு நாம் அவர்களைப் புரளி செய்தோமே; அந்த வேப்பிலையின் காற்று படும்போதெல்லாம், அந்த வலி அவ்வளவு அதிகமாக உறைக்காமல் நிரம்பவும் இதமாக

இருந்ததோடு விஷமும் அதிகமாய்ப் பரவாமல் அது தடுப்பது போலத் தோன்றியது. ஆகவே பொழுது விடிகிற வரையில், நாலைந்து ஆள்கள் என் பக்கத்தில் உட்கார்ந்து ஒருவர் மாறி ஒருவர் குழையடித்துக் கொண்டும், வாயில் தண்ணீர் வார்த்துக் கொண்டும், வேறு பல மருந்துகளைக் கொடுத்துக் கொண்டும் இருந்தனர். ஆனாலும் அந்த இரவு நான் அனுபவித்தது நரக வேதனை என்றே சொல்ல வேண்டும். நெருப்பில் கிடந்து துடிக்கும் புழுவைப் போல நான் கிடந்து தவித்ததைக் கண்ட அந்த மிராசுதார் நிரம்பவும் இரங்கித் தத்தளித்து ஓர் ஆளை உடனே அழைத்துச் சுமார் பத்து மைல் தூரத்திற் கப்பால் இருந்த அம்மாபேட்டைக்கு அனுப்பி அவ்விடத்திலிருந்த ஒரு பிரபல வைத்தியரை அழைத்து வரச் செய்தார். அவர் மறுநாட் காலையில் வந்து சேர்ந்து என்னுடைய அவஸ்தையைக் கண்டு ஏதோ சில மருந்துகளைப் பிரயோகம் செய்தார். அவரை வருவித்த மிராசுதார் வைத்தியரைப் பார்த்து, "இந்த விஷம் உடனே இறங்கா விட்டாலும் பரவாயில்லை; மெதுவாக இறங்கட்டும். இவர் இந்த வலியின் உபத்திரவத்தை உணராமல் இருக்க ஏதாவது மருந்து இருந்தால் கொடும்" என்றார். அவர் முரட்டு மனிதர்களுக்கே மருந்து கொடுத்துக் கொடுத்துப் பழகிய பட்டிக்காட்டு வைத்தியர் ஆகையால், என் உடம்பு மகா நுட்பமான தன்மையுடையது என்பதை அறியாமல், அபினி கலந்திருந்த ஒரு மருந்தில் கொஞ்சம் அதிகமாகவே எடுத்துக் கொடுத்து விட்டார். அதற்கு முன், மாசிலாமணியின் சோபன அறையிலிருந்த அபரிமிதமான வாசனையைத் தாங்கமாட்டாமல், என் மூளை கலங்கிப் போயிருந்தது. அந்த நிலைமையில் மாசிலா மணி வெள்ளிக்கிழமை அன்று எங்களுக்குச் செய்ய எண்ணி இருந்த சதியாலோசனையைக் கேட்ட அதிர்ச்சியை நான் தாங்க மாட்டாதவனாய் இருந்தேன். அந்த நிலைமையில் அவ்விடத்தி லிருந்து பயந்து பயந்து தப்பி வந்த கலக்கமும் சேர்ந்தது. அதோடு நட்டுவாய்க்காலி கொட்டியது என்மேல் இடி விழுந்தது போல என் உடம்பையும் மூளையையும் சிதற அடித்து சின்னாபின்ன மாக்கி விட்டது. அதில் அபினியும் சேரவே, என் மூளை தளர்ந்து அப்படியே விழுந்து போய்விட்டது. எனக்கு உடனே பிரக்ஞை

தவறிப் போய்விட்டது. அதன் பிறகு என்ன நடந்த தென்பதே எனக்குத் தெரியாமல் போய்விட்டது. நான் அபினி மருந்து சாப்பிட்டது புதன்கிழமையல்லவா. அடுத்த புதன்கிழமை தான் என் மயக்கம் கொஞ்சம் தெளிய ஆரம்பித்தது. அந்த ஒரு வாரம் நான் கண்களைத் திறக்கவே இல்லையாம். மற்றவர்கள் கூப்பிட்ட தற்கும் நான் பதில் பேசவே இல்லையாம். ஆனால், கைகால்கள் அப்போதைக்கப்போது அசைந்து கொண்டிருந்தனவாம். மூச்சு சொற்பமாக வந்ததாம். அவர்கள் கஞ்சியையும் பாலையும் பலவந்தமாக என் தொண்டைக்குள் செலுத்தினார்களாம். அந்த மிராசுதார் நான் பிழைப்பேனோ மாட்டேனோ என்று எண்ணி, பெருத்த கிலி கொண்டு அந்த ஒரு வாரம் இரவு பகல் தூக்க மில்லாமல், படாத பாடெல்லாம் பட்டாராம். எனக்குக் கொஞ்சம் தெளிவு உண்டானதும், பிறகு அது மறைவதுமாக இருந்ததாம். போன வெள்ளிக்கிழமை முதல் கும்பகோணத்திலிருந்து ஒரு பிரபல டாக்டரை வருவித்து எனக்கு வைத்தியம் செய்தார்கள். அவர் இங்கிலீஷ் வைத்திய முறையோடு ஆயுர்வேத சாஸ்திரம் முறையிலும் நன்றாகத் தேர்ச்சி பெற்றவர். அவர் காலை மாலை கும்பகோணத்தில் இருந்து ஆலங்குடிக்கு வந்து பலவித சிகிச்சைகள் செய்து, தாதுபுஷ்டி மருந்துகள் கொடுத்து, விழுந்து போன என் மூளையையும், நரம்புகளையும் மறுபடி சரியான நிலைமைக்குக் கொண்டு வந்தனர். ஞாயிற்றுக்கிழமையே எனக்கு பழைய நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆனாலும், அன்றைய தினமும் இருந்து திங்கட்கிழமை அன்று புறப்பட்டு நான் ஊருக்கு போகலாம் என்றார். நான் தெளிவு அடைந்த பிறகு அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து, நான் 12, 13-தினங்கள் படுத்த படுக்கை யாக இருந்தேன் என்று தெரிந்து கொண்டேன். அதை உணரவே என் மனம் அளவிட முடியாத வேதனையும் கவலையும் கொண்டது. நிச்சயதார்த்தத்திற்காகக் குறிக்கப்பட்டிருந்த தினமாகிய வெள்ளிக்கிழமை அன்று என் தகப்பனார் முதலியோருக்கு மாசிலா மணி ஏதாவது கெடுதல் செய்திருப்பானோ என்ற அபாரமான சஞ்சலம் தோன்றி வதைக்க ஆரம்பித்தது. அப்போது நானும் அந்த டாக்டரும் தனியாக இருந்தோம். அவர் என்னைப் பார்த்து, "அப்பா! உன் பெயரென்ன?" என்றார். நான் "கந்தசாமி" என்றேன்.

அவர் உடனே என்னைப் பார்த்து, "நீ மன்னார்குடி வேலாயுதம் பிள்ளையின் இரண்டாவது மகனல்லவா?" என்றார். அதைக் கேட்ட எனக்கு நிரம்பவும் ஆச்சரியமாகிவிட்டது. நான் மிகுந்த ஆவல் கொண்டு, "ஐயா! இந்த விவரமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றேன். அதற்கு அவர், "அப்பா! கந்தசாமி! பட்டணத்திலிருந்து எனக்குத் தினம் தினம் சமாசாரப் பத்திரிகை வருகிறது. சில தினங்களுக்கு முன் சென்னை கலெக்டர் பட்டாபிராம பிள்ளையின் வீட்டில் நடந்த ஓர் அதிசயச் சம்பவம் பத்திரிகையில் வெளியாயிருந்தது. வேலாயுதம் பிள்ளையின் மைத்துனி புருஷனென்று சொல்லிக் கொண்டு வந்த ஆண்பிள்ளை அடிபட்டு பிரக்ஞையற்று ஆஸ்பத்திரியில் கிடப்பதாக அந்தப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருந்தது. இந்த ஊரிலிருந்து ஒரு பெரிய மனிதர் ஒரு முக்கியமான வியாதியைக் குறித்து வைத்தியம் செய்து கொள்ள, சென்னப்பட்டணம் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார். அவர் குணமடைந்து, இரண்டு தினங்களுக்கு முன் கும்பகோணத்திற்கு வந்தார். அவர் பட்டணம் பெரிய ஆஸ்பத்திரியின் வேடிக்கைகளை எல்லாம் சொன்ன போது, மிஸ்டர் வெல்டன் என்ற டாக்டர் துரை ஒருவர் வந்து அபூர்வமான காரியங்கள் செய்ததாகச் சொன்னார். அப்போது வேலாயுதம் பிள்ளையின் மைத்துனி புருஷனென்று பட்டாபிராம பிள்ளையின் வீட்டிற்குப் போய் அடிபட்டுப் பிரக்ஞையற்றுக் கிடந்த மனிதனை அந்த வெல்டன் துரை தந்திரமாகக் கிளப்பி, அவனைப் பேசும்படி செய்து, அவனுடைய ரகசியங்களை எல்லாம் வெளிப்படுத்திய மாதிரியைச் சொன்னார்" என்று சொல்லி, நீ வேண்டுமென்றே பிரக்ஞை தவறியவன் போல பாசாங்கு செய்து, சாப்பிடாமலே பல தினங்கள் இருந்ததாகவும், கடைசியில் மிஸ்டர் வெல்டன் துரை வந்து நீ இறந்து போனதாகச் சொல்லி உன்னைக் குழியில் போட்டு மண்ணைத் தள்ளியபடி நான் இறந்து போனதாகப் பொய் சொன்னதாகவும், அதைக் கேட்டவுடன், "ஆ! அப்படியா!" என்று நீ எழுந்து உட்கார்ந்ததாகவும், பிறகு நீ அவரிடம் உண்மையை வெளியிட்டதாகவும் அந்த நோயாளி தம்மிடம் சொன்னதாக கும்பகோணம் டாக்டர் என்னிடம் சொன்னார். அதைக் கேட்டவுடன் நான் அப்படியே

பிரமித்துப் போய்விட்டேன். மேலும் அந்த டாக்டர் என்னைப் பார்த்து, "அப்பா! கந்தசாமி! நீ அன்றைய தினம் அர்த்தராத்திரியில் பெண் வேஷத்தோடு இங்கே வந்ததாக இவர்கள் சொன்னதைக் கேட்டவுடனே, நான் சமாசாரப் பத்திரிகையில் படித்த விஷயமும், மிஸ்டர் வெல்டன் துரை வெளிப்படுத்தியதாக நான் கேள்வியுற்ற விஷயமும் நினைவிற்கு வந்தன. பெண் பேஷத்தோடு பட்டாபிராம பிள்ளையின் வீட்டிற்குப் போய், அவ்விடத்தில் இருந்து முரட்டு ஆட்களால் அபகரித்துக் கொண்டு போகப்பட்டது நீயாகத் தான் இருக்க வேண்டும் என்ற யூகத்தின் மேல் நான் கேட்டேன். அது சரியாய்ப் போய்விட்டது" என்று சொன்ன தோடு, அவர் வேறு இரண்டு பத்திரிகைகளையும் எனக்குக் காட்டினார். வெள்ளிக்கிழமை இரவில் தாம் செய்ய ஏற்பாடு செய்திருப்பதாக மாசிலாமணி என்னிடம் சொன்னபடி, அவன் ஆட்களை அனுப்பியதில், அவர்கள் வேறே சிலருடைய மூக்கு காதுகளை எல்லாம் அறுத்துவிட்டதாக நான் உடனே தெரிந்து கொண்டேன். அந்தக் கொடிய கொலைபாதகனுடைய சதியாலோ சனையால், யாரோ சிலர் அங்கஹீனம் அடைந்ததைப் பற்றி என் மனம் நிரம்பவும் இரங்கித் தவித்ததானாலும், என் தகப்பனார் முதலியோர் தெய்வாதீனமாய் அந்தப் பெருத்த அபாயத்தில் இருந்து தப்பித்துக் கொண்டதை அறிய, அதற்கு முன் நான் கொண்டிருந்த கவலையும், வேதனையும் விலகின. கும்பகோணம் டாக்டர் இன்னொரு விஷயமும் தெரிவித்தார். என்னுடைய தகப்பனார் முதலிய எங்கள் மனிதர்கள் எல்லோரும் பட்டாபிராம பிள்ளையின் வீட்டிலேயே இருந்து என்னைப் பற்றிக் கவலையுற் றிருப்பதாகத் தெரிகிறதென்றும், நான் நேராக அங்கே போக வேண்டும் என்றும் அவர் வற்புறுத்திக் கூறி, நேற்றைய தினம் இரவு வண்டியில் அவர் டிக்கெட்டு வாங்கிக் கொடுத்து என்னை இந்த ஊருக்கு அனுப்பினார். நான் தரித்துக் கொண்டு வந்த ஆடை ஆபரணங்கள் எல்லாம் மாசிலாமணிக்குச் சொந்தம் ஆகையால், அவைகளை ஓர் ஆள்மூலமாய் மாசிலாமணிக்கு அனுப்பி, இன்னாரிடம் இருந்து அவை வந்தன என்பது தெரியாதபடி அவனிடம் சேர்த்துவிடும்படி அந்த மிராசுதாரிடம் நான் ஏற்பாடு செய்து விட்டு, அவரும் மற்றவர்களும் என் பொருட்டு பட்ட

பாடுகளைப் பற்றி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்து, அவர்களை விட்டுப் பிரிய மனமற்றவனாய் நேற்றிரவு வண்டியில் ஏறி இன்று காலை இங்கே வந்து சேர்ந்தேன். நாம் ஏதோ விளையாட்டாகச் செய்ய எண்ணியது இப்பேர்ப்பட்ட பெருத்த அபாயத்தில் கொண்டு போய்விட்டது" என்றான். அவன் சொல்லி வந்த சங்கதிகளைக் கேட்ட கோபாலசாமி கண்ணீர் வடித்துக் கலங்கி அழுது, "அப்பா! கந்தசாமி! உன்னை நட்டுவாய்க்காலி கொட்டியதால் நீ பட்ட அவஸ்தையைக் கேட்கும் போது என் குடல் நடுங்குகிறதப்பா! ஐயோ! உனக்கு என்ன சங்கடம் நேர்ந்ததப்பனே! உன் தகப்பனார் முதலியோர் உன் ஜாதகத்தை ஆராய்ந்து பார்க்கச் செய்ததில், ஏதோ கிரகபேதத்தால், உன் உயிரே போகும்படியான நிலைமை ஏற்படும் என்றும், முடிவில் நீ தப்பி வருவாய் என்றும் ஜோசியர்கள் சொன்னார்கள். அது உண்மையாகவே முடிந்தது. பட்ட கஷ்டமெல்லாம் போகட்டும். எப்படியாவது நீ உயிரோடு வந்து உன் முகத்தை எங்களுக்கெல்லாம் மறுபடி காட்டினாயே! அது ஒன்றே போதுமானது. உன் உயிருக்கு ஏதாவது அபாயம் நேர்ந்திருந்தால், முக்கியமாய்ப் பழிக்கு நானே பாத்திரனாவேன். என் பேச்சைக் கேட்டுத் தான் நீ இப்படிப்பட்ட பிராணாபாயத்தில் அகப்பட்டாய் என்று எல்லோரும் என்னை தூஷிப்பார்கள். என் மனசும் என்னைக் குத்திக் கொண்டே இருக்கும். போன சனிக் கிழமை இங்கே பூஜை நடந்த காலத்தில் ஒரு பெண்பிள்ளைக்கு ஆவேசம் வந்தது. நீ யாரோ பகைவரிடம் அகப்பட்டு அங்கிருந்து தப்பி வேறிடத்திற்கு போயிருந்தாகவும், அவ்விடத்தில், தடுக்க முடியாத ஏதோ இடையூறினால், நீ உன்னைப்பற்றிய தகவலை வெளியிட மாட்டாமலும், இங்கே வரமாட்டாமலும் இருக்கிற தாகவும், இன்னம் நான்கு தினங்களுக்குள் நீ எப்படியும் வந்து சேருவாய் என்றும், யாரும் கவலையாவது விசனமாவது கொள்ளக் கூடாதென்றும் அந்த அம்மாள் சொன்னாள். அது முதல் எங்கள் எல்லோருக்கும் கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது. அந்த அம்மாள் குறித்த வாய்தா இன்றோடு முடிவதால், இன்று நீ வருவாய் என்று நாங்கள் எல்லோரும் எண்ணி, ஆவலோடு இன்று காலை முதல் வழி பார்த்துப் பார்த்துச் சாப்பாட்டையும்

நாடாமல் இருந்து வந்தோம். உன் வழியைப் பார்த்துப் பார்த்து எங்கள் கண்கள் பூத்துப் போயின. பங்களாவில் எனக்கு இருக்கையே கொள்ளவில்லை. அதுவுமன்றி மற்றவர்களுடைய அலங்கோலமான நிலைமையை என் கண்ணால் பார்க்கவும் சகிக்க வில்லை. ஆகையால், நான் புறப்பட்டு இந்தப் பூஞ்சோலைக்குள் வந்தேன்" என்றான்.

கந்தசாமி, "நீ சொல்வது நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறதே. அந்தப் பெண்பிள்ளை உண்மையை எல்லாம் நேரில் பார்த்தவள் போல் அல்லவா சொல்லியிருக்கிறாள்! இந்தக் கலிகாலத்தில் இப்படியும் சுவாமி பிரத்தியக்ஷமாய் வந்து மனிதரோடு பேசுவ துண்டா!" என்று மிகுந்த வியப்போடு கூறினான். உடனே கோபாலசாமி, "அது மாத்திரமல்ல. அந்த அம்மாள் அன்றைய தினமே மனோன்மணியம்மாளுக்கு நல்ல செய்தி வரப்போகிற தென்றும் சொன்னாள். அது போலவே அன்றைய தினம் மனோன்மணியம்மாளுக்கு நீ அனுப்பிய படம் வந்து சேர்ந்தது" என்றான். அதைக் கேட்ட கந்தசாமி நிரம்பவும் துடிதுடித்து வியப்புற்று, "என்ன! என்ன! நான் அனுப்பிய படமா! நான் படம் அனுப்பியதாக உன்னிடம் எப்போது சொன்னேன்? என்ன படம் அது?" என்று ஆவலோடு கூறினான்.

கோபாலசாமி முற்றிலும் பிரமிப்படைந்து, "என்ன ஆச்சரியம்! நீ மனோன்மணியம்மாளுக்குத் தபாலில் படம் அனுப்பவில் லையா?" என்றான். கந்தசாமி, "இல்லவே இல்லையே. நானாவது படமாவது அனுப்புவதாவது, என்னிடம் படம் ஏது?" என்றான்.

கோபாலசாமி திகைத்துக் குழம்பிப் போய், "இது கண்கட்டு வித்தை மாதிரியல்லவா இருக்கிறது, நீ அன்றைய தினம் பெண் வேஷத்தோடு எப்படி இருந்தாயோ அப்படியே ஒரு புகைப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடியில் இங்கிலீஷில், "க்ஷேமமாய் இருக்கிறேன். நான்கு தினங்களில் வருகிறேன். கவலை கொள்ள வேண்டாம்" என்று டைப் அடிக்கப்பட்டிருக்கிறது" என்றான்.

அதைக் கேட்ட கந்தசாமி அப்படியே பிரமித்து ஸ்தம்பித்து கோபாலசாமியை உற்றுப் பார்த்தபடி வியப்பே வடிவாக மாறி, "என்ன கோபாலசாமி! இது இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம்

என்பார்களே, அது போல இருக்கிறதே நீ சொல்வது. நான் நேற்று வரையில் ஒரு பட்டிக்காட்டில் இருந்தேன். டைப் அடிக்கும் யந்திரத்தை நான் கண்ணால் பார்த்து மாதக் கணக்கில் ஆகிறதே! நான் டைப் அடிக்கவும் இல்லை, படமும் அனுப்பவில்லை. வேறே யாரோ அதை அனுப்பி இருக்கிறார்கள்" என்றான்.

கோபாலசாமி, "நீ உன் சம்சாரத்துக்கு அதை அனுப்பி அதைப் பற்றி நாங்கள் புரளி பண்ணுவோம் என்று நினைத்து நீ உண்மையை மறைக்கிறாய் போலிருக்கிறது" என்றான்.

கந்தசாமி உறுதியாகப் பேசத் தொடங்கி, "இல்லையப்பா! உன்னிடம் நான் பொய் சொல்லுவேனா! நான் அதை அனுப்பவே இல்லை. வேறே யாரோ அனுப்பி இருக்கிறார்கள். அந்தப் பெண் என்னை நினைத்து நோய் கொண்டிருப்பதாக நீ சொன்னாய் அல்லவா. ஒரு வேளை அவளுடைய தகப்பனாரே, அந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் தேறுதலாக இருக்கும் என்று நான் அனுப்பியது போல, அதைத் தபாலில் அனுப்பி இருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றான்.

கோபாலசாமி, "அடேய்! என்னடா இது! நீ சொல்வது கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதென்பது போல் அல்லவா இருக்கிறது, வேறே யாராவது அனுப்பியதாகச் சொல்ல, உன் பெண் வேஷப்படம் மற்றவருக்கு எப்படிக் கிடைத்தது? பட்டாபி ராம பிள்ளை அனுப்பப் போவது, ஆவேசங் கொண்ட பெண் பிள்ளைக்கு எப்படித் தெரிந்தது? அன்றைய தினம் வேஷம் போட்டுக் கொண்டவுடன் நாம் நேரில் இங்கே வந்தோம். அன்று நீ இந்த வீட்டில் நடு இரவு வரையில் இருந்தாய். அது வரையில் யாரும் உன்னை வைத்துப் படம் பிடிக்கவில்லை. அதன் பிறகு நீ கும்பகோணம் போய் அவ்விடத்தில் செவ்வாய்க்கிழமை இரவு 12-மணி வரையில் இருந்தாய். அது வரையில் அங்கேயும் யாரும் படம் பிடித்ததாக நீ சொன்ன வரலாற்றில் தெரியவில்லை. பிறகு நீ குதிரை வண்டியில் ஆலங்குடிக்குப் போனவுடன் உன் பெண் வேஷத்தைக் கலைத்து விட்டதாகச் சொல்லுகிறாய். அப்படி இருக்க, இந்தப் படம் எங்கிருந்து வந்தது? அதே புடவை, அதே ரவிக்கை, அதே நகைகள், அதே அலங்காரம் எல்லாம் அப்படியே இருக்கிறதே!" என்றான்.

கந்தசாமி முற்றிலும் குழம்பிப் போய் உண்மையான அன்போடு, "கோபாலசாமி! உன்னிடம் நான் பொய் சொல்வதாக நீ நினைக்கிறாயா? இல்லையப்பனே; நான் சொல்வது பிரமாண மான சங்கதி. நான் அதை அனுப்பவே இல்லை. வேறே யார் அனுப்பினார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. அதுவுமன்றி, நான் பெண் வேஷத்தோடிருந்த தினங்களில், நான் பிரக்ஞை யோடு தான் இருந்தேன். யாரும் படம் பிடித்ததாகத் தெரிய வில்லை. எப்படித்தான் இந்த மாயப் படம் வந்ததோ என்பது கடவுளுக்குத் தான் தெரிய வேண்டும். நீங்கள் எல்லோரும் இங்கே இருந்து படும் பாட்டைக் கண்டு கடவுளே அந்தப் படத்தை சிருஷ்டித்து அனுப்பி இருக்கிறார் என்று தான் நாம் எண்ண வேண்டும்" என்று கூறினான். கோபாலசாமி முற்றிலும் குழம்பித் தடுமாற்றம் அடைந்தவனாய், "சரி; அப்படியே இருக்கட்டும். தெய்வம் எப்போதும் மனிதர் மூலமாகவே தனது கருத்தை நிறைவேற்றும் என்பார்கள். அது போலவே, இதில் யாராவது மனிதரும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். இருந்தாலும், இதன் அந்தரங்கம் மனிதருடைய மூளைக்கு எட்டாததாகத் தான் இருக்கிறது. விளக்கு வைத்தாய் விட்டது. உன் தகப்பனார் சிவபூஜை செய்து வருகிறார், இப்போது சாயங்கால வேளை; தீபாராதனை செய்ய ஆரம்பிப்பார்கள். நாம் போவோம் வா" என்றான்.

உடனே கந்தசாமியும் கோபாலசாமியும் பூஞ்சோலையை விட்டு பங்களாவை நோக்கி நடக்கத் தலைப்பட்டனர். அப்போது கந்தசாமி, "அடேய் கோபாலசாமி! எனக்கு மற்றதெல்லாம் ஆச்சரியமாகத் தோன்றவில்லை. இந்தப் பெண்ணுக்கு நான் புருஷன் ஆகலாமா என்பதை நிச்சயிக்க வந்ததற்குள், நான் வேறு இரண்டு புருஷர்களுக்கு சம்சாரம் ஆக நேர்ந்ததை நினைக்க நினைக்க எனக்கு உண்டாகும் ஆச்சரியம் சொல்ல முடியவில்லை" என்றான்.

கோபாலசாமி, "நாம் இப்படிப்பட்ட மூடத்தனமான காரியம் செய்து விட்டோமே என்று முதலில் நான் எண்ணி நிரம்பவும் வேதனைப்பட்டேன். பின்னால் காரியங்கள் நடந்திருப்பதைப்

பார்க்க, எல்லாம் நம்முடைய நன்மையைக் கருதி கடவுள் செய்வித்த காரியமாகவே படுகிறது. பெண் வேஷம் போட்டுக் கொண்டு இங்கே வரவேண்டும் என்ற விபரீதமான எண்ணம் நமக்குண்டானதும், நாம் வந்திருப்பதை டெலிபோன் மூலமாய்க் கேட்டவுடனே மன்னார்குடிக்குத் தந்தி கொடுத்து மறுதந்தி வருவிக்க வேண்டும் என்று பட்டாபிராம பிள்ளைக்குப் புத்தி கொடுத்ததும், பிறகு இவர்கள் உன்னை மனோன்மணியம் மாளுடைய அறையிலேயே சிறைப்படுத்தியதும் எல்லாம் கடவுளின் சூழ்ச்சிகள் என்றே நாம் நினைக்க வேண்டி இருக்கிறது. அன்றைய தினம் இம்மாதிரி காரியம் நடந்திராவிட்டால், அவர்கள் அவசியம் மனோன்மணியம்மாளை எடுத்துக் கொண்டே போயிருப்பார்கள். அவ்விடத்தில் எப்படிப்பட்ட விபரீதம் நேர்ந் திருக்குமோ! அந்த அசுரனிடத்தில் அகப்பட்டு மனோன்மணியம் மாள் அநேகமாய்த் தன் உயிரையே விட்டிருக்க நேர்ந்திருக்குமன்றி வேறல்ல. கடவுளின் திருவிளையாடல் எவ்வளவு ஆச்சரியகரமாக இருக்கிறது பார்த்தாயா? இந்த மடந்தைக்கு நேர இருந்த மகா பயங் கரமான அபாயத்தை விலக்குவதற்குக் கடவுள் உன்னைப் பொறுக்கி எடுக்க வேண்டிய காரணமென்ன என்பதை நீ யோசித்துப் பார்த்தாயா? நீ தான் இந்தப் பெண்ணுக்கு உரிய புருஷன் என்று கடவுள் நேரில் வந்து சொல்லிவிட்டுப் போனது போல் அல்லவா இருக்கிறது. அவர் இவ்விதம் சூழ்ச்சி செய்ததற்குத் தகுந்தபடி பெண்ணும் உன் மனம் போல சகலமான அம்சங்களிலும் உன்னுடைய அண்ணியைத் தோற்கச் செய்யக் கூடியவளாய் மாறிப் போயிருக்கிறாள். அடேய் கந்தசாமி! நீ மகா பாக்கியசாலியடா! நீ முன் ஜென்மங்களில் மகா அருமையான பூஜை செய்தவனடா! சுவாமி இப்படி வேறே யாருக்கும் கண் கூடாக வந்து, இவள் தான் உன் சம்சாரம் என்று காட்டியதை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையடா" என்று மிகுந்த வியப்பும் ஆனந்தமும் அடைந்தவனாய்க் கூறினான்.

அதைக் கேட்ட கந்தசாமி, "அடே! நீ எப்படி எப்படியோ தந்திர மாய்ப் பேசி, மகா வக்கிரபுத்தியுடைய இந்த உபயோகமற்ற பெண்ணைக் கொண்டு வந்து என் கழுத்தில் பிணைக்க முடிவு செய்து கொண்டிருக்கிறீர்கள். அன்றைய தினம் நான் அவளை

நேரில் பார்த்து அவளோடு பேசவில்லையா? அவளாவது மாறுபடு கிறதாவது? அவளுடைய மனப்போக்கை மாற்ற யாராலும் முடியாது. அவள் கட்டியிருக்கும் மஸ்லின் புடவையை அவள் விலக்கும்படி செய்ய கடவுளால் கூட முடியும் என்று நான் நினைக்கவில்லை" என்று பரிகாசமாகக் கூறினான். கோபாலசாமி முற்றிலும் நயமாகவும் உருக்கமாகவும் பேசத் தொடங்கி, "அடே கந்தசாமி! இனி இம்மாதிரியான வார்த்தைகளை நீ வாயில் வைத்துப் பேசாதே; உன் தகப்பனார் முதலியோர் இந்த பங்களாவிற்கு வருவதற்கு முன்பே, மஸ்லின் ஆடை எல்லாம் போய்விட்டது. அவள் தன்னிடம் இருந்த இங்கிலீஷ் புத்தகத்தை எல்லாம் நெருப்பில் போட்டுக் கொளுத்தி விட்டாளாம். மஞ்சள் பூசிக் குளிப்பது முதல், புருஷனுக்குப் பாத பூஜை செய்வது வரையில் உள்ள சகலமான விஷயங்களையும், அவள் இப்போது உன்னுடைய அண்ணியிடம் கற்றுக்கொண்டு விட்டாளாம். நீ வரவில்லையே என்று ஏங்கி உயிரை விட்டுக் கொண்டு ஊணுறக்க மில்லாமல் துரும்பாய் இளைத்துப் போயிருக்கிறாள். இரவு பகல் உன் அண்ணி அவளுடன் கூடவே இருந்து காப்பாற்றி வருகிறாள். நீ வந்துவிட்டாய் என்ற சந்தோஷச் சங்கதியை முதலில் மனோன்மணியம்மாளுக்குத் தான் சொல்ல வேண்டும். முதலில் அவளுடைய வேலைக்காரியைக் கண்டு, சங்கதியைச் சொல்லி விட்டு பிறகு உங்கள் மனிதர் இருக்கும் இடத்திற்குப் போவோம்" என்றான்.

அதைக் கேட்ட கந்தசாமி, "அவளுடைய அறைக்குப் பக்கமாய் ஏதாவது வழி இருந்தால் அப்படியே அழைத்துக் கொண்டு போ. அவள் என்ன நிலைமையில் இருக்கிறாள் என்று நான் என் கண்ணால் பார்த்து, நீ சொல்லுகிறபடி அவள் உண்மையிலேயே மாறுபட்டிருக்கிறாளா என்பதைப் பார்க்கிறேன். ஆனால், நான் இப்போது அவளைப் பார்த்துவிட்டு வந்தேன் என்பது என் தகப்பனார் முதலிய எவருக்கும் தெரியக்கூடாது" என்றான். கோபாலசாமி அதற்கிணங்கி மனோன்மணியம்மாள் இருந்த விடுதிப் பக்கமாய்க் கந்தசாமியை அழைத்துச் சென்று, தான் தூர நின்று கொண்டு, அவ்விடத்திலிருந்த ஜன்னல் கதவின் இடுக்கால் உட்புறத்தில் பார்க்கும்படி கந்தசாமியைத் தூண்ட அவன் அப்படியே செய்தான். அந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் உள்

புறத்தில் போடப்பட்டிருந்த கட்டிலின் மீது மனோன்மணி யம்மாள் சாய்ந்து கொண்டிருந்தாள். அவளது உடம்பு தங்கக் கொடி போலத் துவண்டு கிடந்ததானாலும், கந்தசாமி அதற்கு முன் பார்த்ததற்குப் காற்பங்காய் இளைத்து உருமாறிப் போயிருந்தது. அவள் மஞ்சள் பூசிக் குளித்து நெற்றியில் விபூதி, சாந்துத் திலகம் முதலியவற்றை அணிந்து உடம்பில் ஐந்நூறு ரூபாய் பெறத்தக்க பனாரீஸ் புட்டாப் புடவையையும் தலை முதல் கால் வரையில் ஏராளமான ஆபரணங்களையும் தரித்து தேஜோ மயமாகவும் மனோக்கியமாகவும் காணப்பட்டாள். முகம் வாட்டமடைந்து ஏக்கத்தைக் காண்பித்தது. அவளைக் கண்ட கந்தசாமி தான் அதற்கு முன் கண்ட மனோன்மணியம்மாள் அவள் தானோ என்று சந்தேகித்து, முற்றிலும் பிரமிப்படைந்து அப்படியே ஸ்தம்பித்து அவள் மீது வைத்த விழியை வாங்காமல் நின்றுவிட்டான். அவளுக்கருகில் வடிவாம்பாள் தனது இயற்கையான உத்தம லட்சணங்கள் ஜ்வலிக்க மகா சிரேஷ்டமான அலங்காரத்தோடு காணப்பட்டு கரை புரண்டு வழிந்த வாத்சல்யத்தோடு மனோன் மணியம்மாளைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். அதற்குள் மனோன்மணி யம்மாள் நிரம்பவும் மிருதுவான குரலில் பேசத் தொடங்கி, "அக்கா! இந்த ஆவல் என்னைக் கொன்றுவிடும் போலிருக்கிறதே! ஐயோ! இந்த வேதனை என்னால் தாங்க முடியவில்லையே! அன்றைக்கு சுவாமி வாக்குக் கொடுத்தபடி இன்று தானே நான்காவது தினம். இன்னம் ஒரு சேதியும் தெரியவில்லையே. ஒரு வேளை அது பொய்யாய்ப் போகுமா?" என்று முற்றிலும் ஏங்கிக் கூறினாள். அவளது கண்ணீர் மாலை மாலையாகப் பொங்கி வழிந்தது. அவளது நிலைமை கல்லுங் கரைந்துருகத்தக்க மகா பரிதாபகரமான நிலைமையாய் இருந்தது. அதைக் கண்ட கந்தசாமி அப்படியே பிரமித்து நிலைகலங்கி நின்றுவிட்டான். அவனது மனம் பாகாய் உருக ஆரம்பித்தது. முகம் மிகுந்த கலக்கமும் இளக்கமும் காட்டின. கண்கள் உருகிக் கண்ணீர்த் துளிகளை வெளிப் படுத்தின. அந்த நிலைமையில் அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவனது இருதயத்தில் சுருக் சுருக்கென்று பாய்ந்து, அவன் முற்றிலும் நிலைதடுமாறி தான் என்ன செய்வதென்பதை அறியாமல் தவிக்கும்படி செய்துவிட்டது.

அப்போது வடிவாம்பாள் கன்றிற்குக் கனிந்திரங்கும் தாய்ப் பசுவைப் போல, கரை புரண்டு வழிந்த வாஞ்சையோடு மனோன் மணியம்மாளைத் தடவிக் கொடுத்து, "அம்மா! நமக்கு எப்பேர்ப் பட்ட துன்பம் வந்தாலும், கடவுள் ஒருவரே கதியென்றும், அவர் எப்படியும் காப்பாற்ற வருவார் என்றும், நாம் ஒரே உறுதியாக நம்பியிருந்தால், நமக்கு எப்படியாவது வழி பிறக்குமென்று நான் இதற்கு முன் சொன்னதை நீ மறந்து விட்டாயா! சுவாமி நமக்குக் கொடுத்த வாக்கு பலிக்காமல் போகுமா? அன்றைய தினமே நல்ல குறி ஏற்பட்டு விட்டதே. இன்னம் நாம் அவநம்பிக்கைப் படலாமா? நான்கு தினங்களில் வருவார் என்று சுவாமி வாக்குக் கொடுத்திருப்பது ஒரு நாளும் பொய்க்காது. இன்னும் இந்த இரவு முழுதும் கழிந்த பிறகல்லவா நான்காவது நாள் கழிந்து போன மாதிரி. அதற்குள் எப்படியும் அவர் வந்துவிடுவார். இன்றிரவு கழிவதற்குள் நாம் எப்படியும் அவரைப் பார்க்கத்தான் போகிறோம். அந்த வாக்கு சாதாரணமான வாக்கல்ல. அதைப்பற்றி அவநம்பிக்கைப்படுவது பெருத்த அபசாரம்" என்றாள்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். ஆயினும், அவளது கண்ணீர் வழிந்தபடியே இருந்தது. பெருமூச்சுகள் வந்து கொண்டே இருந்தன. சிறிது நேரங்கழித்து அந்தப் பெண்மணி மறுபடியும் பேசத் தொடங்கி, "அக்கா! என்னவோ ஒருவித உணர்ச்சி என்னை வதைத்துக் கொண்டே இருக்கிறதே அக்கா! என் பிராணன் போய்விடும் போல இருக்கிறதே! கிட்ட வந்து என்னை அணைத்துக்கொள். ஐயோ! அவரிடம் நான் அன்றைய தினம் நடந்து கொண்ட மாதிரியைக் கண்டு அவர் என் மேல் முற்றிலும் அருவருப்பும் கோபமும் கொண்டிருப்பார் என்பது நிச்சயம். பட்டணத்திற்கு வந்தவர், என்னைப் பார்க்க இஷ்டப்படாமையால், இங்கே வராமல் ஒரு வேளை கோமளேசுவரன் பேட்டையிலேயே இருப்பாரோ! அக்கா! மற்றவருக்குத் தெரியாமல் யாராவது ஓர் ஆளை அங்கே அனுப்பியாவது பார்த்துவரச் சொல்லக்கா? அவர் அங்கே இருந்தால், நான் செய்ததெல்லாம் தப்பிதம், தப்பிதமென்று நான் ஆயிரந்தரம் கன்னத்தில் அடித்துக் கொண்டு, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகவும், இனி நான் அவருடைய

பிரியப்படி அடிமையிலும் அடிமையாய் நடந்து கொள்வேன் என்று தெரிவித்ததாகவும் சொல்லி அனுப்பு. அக்கா! அக்கா! நான் பிறந்த பிறகு என் தாய் எப்படி இருப்பாள் என்று பார்த்ததே இல்லை. இப்போது நீ தான் என் தாய். ஆகையால், நான் கூசாமல் என் மனசைத் திறந்து உன்னிடம் எல்லாவற்றையும் வெளியிட்டுப் பேசுகிறேன். இதைப்பற்றி என்னை நீ இளக்கார மாக நினைத்தாலும் பரவாயில்லை" என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதாள். அப்போது ஒரு வேலைக்காரி அங்கே தோன்றி, "அம்மா! தீபாராதனை நடக்கிறது; கூப்பிடுகிறார்கள்" என்றாள்.

மனோன்மணியம்மாளது பரிதாபகரமான சொற்களையும் நிலைமையையும் உணர்ந்த கந்தசாமிக்கு அதற்கு மேல் அவ்விடத்தில் நிற்க சிறிதும் சகியாமல் போய்விட்டது. அடக்க இயலாத அபாரமான ஓர் ஆவேசம் அவனது மனத்தில் குபீரென்று பொங்கி எழுந்தது. உடனே உள்ளே புகுந்து, தான் வந்துவிட்ட தாகவும், தனக்கு அவளிடம் சிறிதும் அருவருப்பென்பதே இல்லை என்றும் சொல்லிவிடலாமா என்ற ஓர் அவா எழுந்து அவனைத் தூண்டியது. ஆயினும், தனது அண்ணியும், வேலைக் காரியும் இருக்கையில் தான் அங்கே போவது தவறான நடத்தை எனப்பட்டது. ஆகவே தான் அதற்கு மேல் எவ்விடத்திலும் நின்று காலஹரணம் செய்யாது, உடனே சென்று தனது மனிதர்களைப் பார்ப்பதே அதற்குத் தக்க பரிகாரம் என்றும், உடனே அந்தச் செய்தி மனோன்மணிக்கும் எட்டிவிடும் என்றும், அல்லது, அவளே, அதற்குள் அங்கே வந்துவிடுவாள் என்றும், தான் வந்து விட்ட செய்தியைக் கேட்டு அவள் உடனே தேறுதலடைவாள் என்றும் தீர்மானித்துக் கொண்டவனாய், அவன் சரேலென்று அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, சிறிது தூரத்திற்கப்பால் நின்ற கோபாலசாமியையும் அழைத்துக் கொண்டு விரைவாக உள்ளே செல்லத் தொடங்கினான். தனது தகப்பனார் முதலியோரது முகத்தில் தான் எப்படி விழிப்பது என்று அவன் அதற்கு முன் லஜ்ஜை அடைந்ததெல்லாம் போன இடந் தெரியாதபடி பறந்து போய்விட்டது. ஆகவே, அவன் கோபாலசாமியை அழைத்துக் கொண்டு பூஜை மண்டபத்தை நோக்கி விரைந்து வந்தான். பூஜை மண்டபமும், புஷ்பக விமானமும், பூஜைப் பெட்டியும்

மல்லிகைப் புஷ்பமே மயமாக நிறைந்து, பார்வதி பரமேசுவரர்கள் கொலு வீற்றிருக்கும் வெள்ளியங்கிரி போல மகா அற்புதமான காட்சியாக விளங்கின. எங்கு பார்த்தாலும் மணி விளக்குகள் ஜெகஜ் ஜோதியாக நிறைந்திருந்தன. வேலாயுதம் பிள்ளையும், அவரைச் சேர்ந்த விருந்தினர், பட்டாபிராம பிள்ளை முதலிய சுமார் ஐம்பது ஜனங்கள் நன்றாக விபூதி பூசி, பக்திப் பெருக்கை ஓடவிட்ட தோற்றத்தினராய்க் கும்பிட்ட கையும் குனிந்த முகமுமாய் நின்றனர். அன்றைக்குள் கந்தசாமி வருவான் வருவான் என்று எல்லோரும் எதிர்பார்த்துப் பார்த்து ஏங்கித் தவித்து வாடித் துவண்டு, அந்த நிலைமையில் ஈசுவரன் தான் தங்களுக்குள் வழி காட்டி உய்விக்க வேண்டும் என்ற உறுதியோடு அன்றைய மாலைப் பூஜையை நடத்திக் கொண்டிருந்தனர். வேலாயுதம் பிள்ளையின் உடம்பு அதற்கு முன் இருந்ததற்குக் கால் பங்காக இளைத்துப் போயிருந்தது. புத்திர சோகத்தினாலும், ஊணுறக்கம் இன்றியும் அவர் அவ்வாறு மெலிந்து பாகாய் இளகித் தமது முழு நம்பிக்கையையும் கடவுளின் மீது வைத்து, அவனன்றி ஓரணுவும் அசையாதென்றும், அவனது தாளே கதியென்று உறுதியாகப் பற்றினால், அவன் எப்படியும் மனிதர் மூலமாய்த் தமது கோரிக்கையை நிறைவேற்றி வைப்பான் என்றும் நினைத்து ஒரே உறுதியாக இருந்து, மற்ற நாட்களைவிட அன்று மிகமிக நைந்துருகி தீபாராதனைத் தட்டைக் கையில் ஏந்தி கற்பூரத்தைக் கொளுத்தி விட்டு அதைத் தூக்கி சுவாமிக்கெதிரில் காட்ட ஆரம்பித்தார். அவரது தேகம் தீபாராதனைத் தட்டைத் தூக்கிப் பிடிக்கவும் வலுவற்றதாய் மெலிந்து போயிருந்தமையால், கைகள் வெட வெட வென்று நடுங்கின. உடம்பும் கால்களும் தள்ளாடின. அவரது சிலிர்த்தது. கண்கள் கண்ணீர்த் துளிகளை உதிர்த்தன. அவர் தமது பக்திப் பெருக்கில் முற்றிலும் தம்மை மறந்து அடியில் வரும் பாக் களைக் கூறி வாய்விட்டுக் கதற ஆரம்பித்தார்:-

விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்து கிடந்தழுது
விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும் சிறியேன்,
அளக்கறியாத் துயர்க்கடலில் அழுந்தி நெடுங்காலம்
அலைந்தலைந்து மெலிந்து துரும்பதனின் மிகத் துரும்பேன்,

கிளக்கறியாக் கொடுமையெல்லாம் கிளைத்த பழுமரத்தேன்,
கெடுமதியேன், கடுமையினேன், கிறிபேசும் வெறியேன்,
களக்கறியாப் புவியிடை நான் ஏன் பிறந்தேன் அந்தோ!
கருணைநடத் தரசே! நின்கருத்தை அறியேனே!

என்று பாடி நெக்கு நெக்குருகிக் கண்ணீர் மல்கிப் பேரின்ப நிலையில் தோய்ந்து ஆடியசைந்து நின்று தத்தளித்தபின் மறுபடியும் பாடத் துவக்கி:-

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த் தெப்பொழுதென்
உடல் உயிர் ஆதியவெல்லாம் நீ எடுத்துக்கொண்டுன்
உடலுயி ராதியவெல்லாம் உவந்தெனக்கே யளிப்பாய்?
வடலூறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுள்
மணியே! என் குருமணியே! மாணிக்க மணியே!
நடன சிகாமணியே! நன் மணியே! பொன் மணியே!
நடராஜ மணியே!
நான் படும்பாடு, சிவனே! உலகர் நவிலும் பஞ்சு
தான் படுமோ, சொல்லத்தான் படுமோ, எண்ணத்தான் படுமோ?
கான் படு கண்ணியின் மான் படுமாறு கலங்கி நின்றேன்;
ஏன் படுகின்றனை என்றிரங்காயெனில் என் செய்வனே.

என்று பாடிப் பரவசமடைந்து மனதைப் பரப்பிரம்மத்தில் லயிக்க விடுத்து மெய்ம்மறந்து புளகித்து கண்களை மூடி ஆடியசைந்து கற்பூர ஆரத்தியும் கையுமாய் நிற்க, அதைக் கண்ட மற்ற எல்லா ஜனங்களும் கைகுவித்து, “ஹரஹர ஹரஹர மகாதேவ சம்போ சம்போ சங்கரா கருணாநிதே" என்று கூறிக் கன்னங்களில் அடித்துக் கொண்டு கைகுவித்து மனம் நைந்து பாகாயுருகி ஓடிய வண்ணம் பக்திப் பெருக்கை ஆனந்த பாஷ்பமாய்க் கண்வழி ஓடவிட்டவராய் நிச்சப்தமாய் நிற்க, அந்த நிலைமையில் அவர்கள் எல்லோரது பக்திப் பெருக்கும், உருக்கமும், மனநெகிழ்வும், ஆவலும், வேதனையும் உச்சநிலையடைந்து நின்றன என்றே சொல்ல வேண்டும். அப்போது சிறிது தூரத்திற்கப்பால் யாரோ நிரம்பவும் பரபரப்பாய் தடதடவென்று ஓடிவந்த ஓசை கேட்டது. அதைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டு மருண்டு அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தனர். அடுத்த க்ஷணத்தில்,

"கண்ணப்பா! கண்ணப்பா! வந்துவிட்டான் கந்தசாமி! இதோ வந்து விட்டான்! சுவாமியின் வாக்கு பலித்துவிட்டது! கவலைப் படாதீர்கள்" என்று பெருத்த கூக்குரல் செய்த வண்ணம் கோபால சாமி அலங்கோலமாய் ஓடிவந்து அந்தக் கும்பலில் நுழைந்தான். அதைக் கேட்ட எல்லோரது உடம்பும் திடீரென்று தூக்கிப் போட்டது. எல்லோரும் ஏககாலத்தில், "ஹா! வந்து விட்டானா! எங்கே அவன்?" என்று கூறி அப்படியே வியப்பே வடிவாய் மாறிப் பதறித் துடிதுடித்துப் பேரின்ப நிலையை எட்டிப்பிடிக்கத் தாவுகிறவர்கள் போல கோபாலசாமி வந்தவுடன் அவனுக்குப் பின்னால், தயங்கித் தயங்கி மிகுந்த கிலேசத்துடன் வந்து தலையை நீட்டிய கந்தசாமியைக் காணவே, கன்றைப் பிரிந்து கண்ட தாய்ப் பசு போல திரிபுரசுந்தரியம்மாள் மற்ற புருஷர்கள் நிற்கிறார்கள் என்பதையும் மறந்து ஓடோடியும் சென்று, "அப்பா! தம்பீ! கந்தசாமி! வந்தாயா! உன்னை உயிரோடு காணப்போகிறோமா என்று நாங்கள் எல்லோரும் ஏங்கிப் போய் உன்னை நினைத்து உயிரை விட்டுக் கொண்டிருந்தோமப்பா! நல்ல வேளையாக வந்து சேர்ந்து எங்கள் வயிற்றிலெல்லாம் பாலை வார்த்தாய்!" என்று மிகுந்த வாஞ்சையோடு கூறிய வண்ணம் கந்தசாமியின் கைகளை ஆசையோடு பிடித்து அவனது முதுகையும் கன்னங்களையும் பிரியமாகத் தடவிக் கொடுத்து, ஆனந்த பாஷ்பத்தை ஆறாய்ப் பெருக விட்டாள். அதே சமயம் கண்ணப்பாவும் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, "தம்பீ கந்தசாமி! வந்தாயா? ஆகா! எங்களை எல்லாம் தவிக்க விட்டு, இத்தனை நாள் மாயமாய் மறைந்து போய்விட்டாயே அப்பா!" என்று வாஞ்சையோடு அவனைக் கட்டி அணைத்துக் கொண்டான். வேலாயுதம் பிள்ளையின் கையில் இருந்த கற்பூர ஆரத்தித் தட்டும், அவரது பசியும், களையும், இளைப்பும் போன இடம் தெரியாமல் மறைந்து போயின. அவரும் தமது வாத்சல்யப் பெருக்கில் தம்மை மறந்து தமது குமாரனைக் கட்டிப்பிடிக்க ஆவல் கொண்டு இரண்டோரடி எடுத்து வைத்தார். ஆயினும், மற்றவர் அவனைச் சுற்றி நின்றதால் தமக்கு இடம் கிடைக்காதென்று நினைத்து தூரத்தில் நின்றபடி கந்தசாமியைத் தலை முதல் கால் வரையில் இரண்டு மூன்று தரம் ஏற இறங்கப் பார்த்துத் தமது ஆசை வெள்ளத்தினால் அவனை அபிஷேகம் செய்வித்து, "கடவுள்

உன்னைக் காப்பாற்றட்டும்" என்று தமக்குள்ளாகவே ஆசீர்வதித்தார். அது போல, மற்ற விருந்தினர், உறவினர், பட்டாபி ராம பிள்ளை ஆகிய எல்லோரும் மிகுந்த மன எழுச்சியும், ஆசைப் பெருக்கும், மன நெகிழ்வும், மயிர்சிலிர்ப்பும் அடைந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கந்தசாமியைச் சூழ்ந்து கொண்டு அவரவருக்குத் தோன்றியபடி கேள்விகள் கேட்கலாயினர்.

"அப்பா! கந்தசாமி! வந்தாயா! வா அப்பனே!" என்போரும், "ஐயோ! உன்னைக் காணாமல் நாங்கள் எல்லோரும் பரிதவித்துக் கொண்டிருக்கிறோமே தம்பீ!" என்போரும், "இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்?" என்போரும், "உன்னை எடுத்துப் போனது யார்?" என்போரும், "அவர்கள் உன்னை ஏதாவது உபத்திரவித்தார்களா?" என்போரும், "நீ ஏன் இத்தனை நாள் உன்னைப் பற்றிய தகவலைத் தெரிவிக்கவில்லை?" என்போரும், "கடைசியில் நீ எப்படித் தப்பி வந்தாய்?" என்போருமாய் ஒருவர் பின் ஒருவராயும், ஒரே காலத்திலும் கேள்விகள் கேட்ட வண்ணம் வந்து நெருங்கி பெருத்த கூக்குரல் புரியலாயினர். கால் நாழிகை காலம் வரையில் அந்த இடம் பெருத்த குழப்பமும், கூச்சலுமே மயமாக நிரம்பி இருந்தது. வேலைக்காரிகள் வேலைக்காரர்கள் ஆகிய எல்லோரும் மற்றவர்களைப் போலவே கட்டிலடங்கா ஆவலும் ஆசையும் கொண்டு, தங்கள் எஜமானரது மருமகப் பிள்ளை எப்படி இருக்கிறார் என்று பார்க்க வேண்டும் என்று ஓடோடியும் வந்து மூலை முடக்குகளினின்றும் தமது கழுத்து களை ஒட்டகம் போல நீட்டி நீட்டிக் கந்தசாமியைப் பார்க்க முயன்றனர்.

அப்போது வடிவாம்பாளும் வேலைக்காரியும், முற்றிலும் சோர்ந்து தளர்ந்து துரும்பு போல மெலிந்து, நடக்கவும் சக்தியற்றுத் தள்ளாடித் தவித்து அடிமேலடி வைத்து நடந்து வந்த மனோன் மணியம்மாள் கீழே விழுந்து விடாதபடி தாங்கிக் கொண்டு பூஜை மண்டபத்திற்கு அருகில் வந்து கொண்டிருந்தனர். அவர்களுக் கெதிரில் தலை தெரிக்க ஓடிவந்த ஒரு வேலைக்காரி கந்தசாமி வந்து விட்டதாகவும், பூஜை மண்டபத்தில் இருப்பதாகவும் அவர்களிடம் கூறவே, அதைக் கேட்ட மூவரும் திடுக்கிட்டு ஆனந்தப் பெருக்கு என்ற ஒரு பலமான அலையினால் மோதப்

பட்டவராய், "ஆ! அப்படியா" என்றனர். அந்த மன அதிர்ச்சியைத் தாங்கமாட்டாதவளாய் மனோன்மணியம்மாள் காம்பொடிபட்ட தாமரைப் புஷ்பம் போல அப்படியே மயங்கிக் கீழே சாய்ந்து விட்டாள். தனது உயிரையும் காதலையும் கொள்ளை கொண்ட சுந்தராங்கனான அந்தப் புருஷ சிங்கத்தைத் தான் பார்க்க வேண்டும் என்ற ஆசை அந்தப் பெண்மணியின் மனதில் எழுந்து துடித்ததானாலும், அத்தனை ஜனங்களுக்கெதிரில் நான் அவரை எப்படிப் பார்ப்பது என்ற நாணம் எழுந்து அவளை வதைக்கத் தொடங்கியது. ஆகவே, அவள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இருவித ஆசைகளால் உலப்பப்பட்டவளாய் வடிவாம்பாளை நோக்கி, "அக்கா! என்னை மெதுவாகக் கொண்டு போய் என் படுக்கையில் விட்டு விடுங்கள். இனி நான் பூஜை மண்டபத்துக்கு வருவது ஒழுங்கல்ல" என்று நயந்து வேண்ட, அது போலவே அவள் உடனே தனது சயனத்தில் கொண்டு போய்விடப் பட்டாள்.

அன்றைய இரவு முழுதும் அந்த பங்களாவில் இருந்தோர் அடைந்த ஆனந்தமும் குதூகலமும் இவ்வளவென்று சொல்வதே சாத்தியமான காரியமல்ல. எல்லோரும் பரவசமடைந்து அடக்க இயலாத தமது மன எழுச்சியில் ஆனந்த நிர்த்தனம் செய்து ஓயாமலும் சலியாமலும் அதே பேச்சாகப் பேசிய வண்ணம் தூங்காமலும் ஆகாரத்தை நாடாமலும் அந்த இரவைக் கழித்தனர். அவர்கள் திருஷ்டிக்குக் கந்தசாமி விலையற்ற மாணிக்கக் குன்றாகவும், தெவிட்டாத சுவை போன்ற இன் நிலையாகவும் காணப்பட்டான்; அவன் போய் வந்த வரலாறு முழுதையும் கோபாலசாமி சொல்ல எல்லோரும் தெரிந்து கொண்டு, அவனுக்கு விஷக்கடியால் நேர்ந்த அபாயத்தைப் பற்றி அளவற்ற துயரமும், முடிவில் அவன் தப்பி வந்ததைப் பற்றி மட்டற்ற ஆனந்தமும் தோற்றுவித்தவராய்ப் பொழுதைப் போக்கினர். மறுநாளாகிய புதன்கிழமை அன்று, அந்த சிவ பூஜையை முற்றுவிப்ப தென்றும், மற்ற தினங்களில் நடத்தியதைவிட நூறு மடங்கு சிரேஷ்டமாய் அன்று பூஜை தானதருமங்கள் முதலியவற்றைச் செய்வதென்றும், அன்றைய தினம் ஒவ்வொரு மிராசுதாரும் தலைக்குப் பதினாயிரம் ரூபாய் செலவு செய்வதென்றும், சென்னையில் உள்ள சகலமான

ஏழை ஜனங்களுக்கும் வேஷ்டி, புடவைகள், போஜனம் முதலியவை வழங்க வேண்டும் என்றும் தீர்மானித்து அது போலவே பெருத்த பெருத்த ஏற்பாடுகள் செய்து, பழைய காலங் களில் தசரதர், தருமபுத்திரர் முதலிய மண்டலேசுவர்ர்கள் யாகங்கள் கலியாணங்கள் நடத்திய காலத்தில் இப்படிப்பட்ட மகா அபாரமான ஏற்பாடுகள் தான் செய்யப்பட்டனவோ என்று எல்லோரும் பிரமித்துத் திகைத்து அதை என்றும் மறவாமல் புகழ்ந்து கொண்டே இருக்கத்தக்கபடி அந்தப் பூஜையை அன்றைய மாலையோடு சமாப்தி செய்தனர்.

அந்த ஓர் இரவு ஒரு பகலுக்குள் மனோன்மணியம்மாள் தாங்க இயலாத ஆனந்தப் பெருக்கினால் பூரித்துப் பெருத்துத் தனது இளைப்பும் களைப்பும் நீங்கப் பெற்றவளாய்ப் புது மேனியும் புது அழகும் அடைந்து பட்டை தீர்ந்த மாணிக்கக்கட்டி போல் ஜ்வலிக்கத் தொடங்கினாள். தன் ஆருயிர்க் காதலர் வந்து விட்டார்; தன் காதற்கலி தீர்க்க வந்த மதனவேள் வந்துவிட்டார்; தன் மனதைக் கொள்ளை கொண்ட உத்தமகுண வள்ளல் வந்து விட்டார் என்று அவள் தனக்குள்ளாகவே நினைத்து நினைத்துக் கந்தசாமியின் பெண் வடிவப் படத்தை நொடிக்கு நூறு தடவை பார்ப்பதும், அந்த ஆசையோடு தனது கண்களில் ஒற்றிக் கொள்வதுமாய் அதே பைத்தியமாகப் பிதற்றியபடி ஆனந்த மயமாக இருந்து வந்தாள். ஆனாலும், மற்றவருக்குத் தெரியாமல் தான் எப்படியாவது அவரை ஒரு தடவையாவது கண்டு களிக்க வேண்டும் என்ற பேராவல் அவளது மனத்தில் எழுந்து நிமிஷத் திற்கு நிமிஷம் தூண்டிக் கொண்டே இருந்ததானாலும், அந்த நற்குண மடந்தை அரும்பாடுபட்டு அந்த வேட்கையை அடக்கிய படியே இரவு பகல் இன்பக்கனவு கண்டவளாய் இருந்து வந்தாள். மறுநாள் மாலையில், பட்டாபிராம பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, கண்ணப்பா, கந்தசாமி முதலிய ஆண்மக்கள் அனைவரும் ஒரு பெருத்த கூடத்தில் ஆனந்தமாக உட்கார்ந்து பழைய சம்பவங்களைப் பற்றி வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர். திரிபுரசுந்தரியம்மாள் முதலிய பெண்பாலார் அனைவரும் பக்கத்து அறையில் உட்கார்ந்திருந்தபடி, புருஷர்கள் பேசியதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அப்போது அன்றைய

மாலையில் வழக்கமாக வரும் சில சமாசாரப் பத்திரிகைகள் வந்தன. அவைகளை வாங்கிய பட்டாபிராம பிள்ளை, முக்கியமான ஒரு பத்திரிகையை எடுத்துப் பிரித்து அதன் பக்கங்களை அலட்சிய மாகத் தள்ளித் தலையங்கங்களைப் படித்துக் கொண்டே போக, அதில் முக்கியமான ஒரு சங்கதி இருந்ததைக் கண்டு வியப்புற்று, "இதில் ஒரு விசேஷ சங்கதி வந்திருக்கிறது. படிக்கிறேன் கேளுங்கள்" என்றார். மற்ற எல்லோரும் வியப்போடு அதைக் கேட்கத் தலைப்பட்டனர்.

உடனே பட்டாபிராம பிள்ளை அடியில் வருமாறு எழுதப் பட்டிருந்த ஒரு செய்தியைப் படித்தார்.

சென்னை துரைத்தனத்தார் போன செவ்வாய்க்கிழமை அன்று வெளியிட்ட கெஜட்டில் அடியில் காணப்படும் விஷயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது:-

மன்னார்குடியில் இருந்து வந்த மகா புத்திமானும், பரோபகாரியும், கௌரவப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுமான திகம்பர சாமியார் என்ற மகான் பாம்பு கடித்ததனால் இறந்து போய் விட்டதாக உணர்ந்து நிரம்பவும் விசனித்து, நமது மனப்பூர்த்தி யான அனுதாபத்தையும் துக்கத்தையும் மேற்படி யாருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பொது ஜனங்கள் க்ஷேமப்பட வேண்டும் என்றும், தான் ஜென்மம் எடுத்தது பரோபகாரத்தின் பொருட்டே என்றும் கருதி, அவர் கடைசி வரையில் தமது உயிரைப் பொது ஜன நன்மைக்கே அர்ப்பணம் செய்தவர். அவர் மண்ணுலகைத் துறந்தது தமிழ் மக்களுக்கும் நமக்கும் என்றைக்கும் நிவர்த்தியாகாத பெருத்த நஷ்டம் என்றே கருதுகிறோம்.

அவரைப் போல சகலமான குணாதிசயங்களும் வாய்ந்த மேதாவிகள் யாரேனும் இருந்து நமக்கு மனுச்செய்து கொண்டால், மேற்படியார் வகித்து வந்த உத்தியோகத்தை நாம் தக்க யோக்கியதை உடையவருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நமக்கு நேரில் விண்ணப்பங்கள் அனுப்பிக் கொள்ளலாம்.

**மிஸ்டர் வாட்ஸ் யூவர் நேம்**

சென்னை கவர்னர்.

- என்று எழுதப்பட்டிருந்த விளம்பரத்தை பட்டாபிராம பிள்ளை படித்து முடித்தார். திகம்பரசாமியார் இறக்கவில்லை என்ற ரகசியம், அங்கே இருந்தோருள் முக்கியமான சிலருக்கு மாத்திரம் தெரிந்திருந் ததே யன்றி, மற்ற பெரும்பாலோருக்குத் தெரியாதிருந்தது. அதை அறிந்திருந்தவர்கள் அந்த விளம்பரத்தைப் படிக்கக் கேட்டு எவ்வித அபிப்பிராயமும் வெளியிடாமல் மௌனமாக இருந்தனர். மற்றவர் மிகுந்த வியப்போடு பேசத் தொடங்கி, "ஆகா! அந்த மகானைப் போன்ற அவதார புருஷர் இனி உலகத்திலும் அகப்படப் போகிறார்களா? அவருக்கும் அப்பேர்ப்பட்ட காலம் வந்ததே! ஆகா! அவருக்கு நிகரான மனிதர் அவரேயன்றி, வேறு யாரைச் சொல்ல முடியும்? அந்த வேலையை வகிக்கக்கூடியவர் இனி பிறக்க வேண்டும்" என்று அங்கலாய்ப்பாகக் கூறித் தமது விசனத்தை வெளியிட்டனர்.

அப்போது அந்த சமாசாரப் பத்திரிகையின் பக்கங்களை எல்லாம் தள்ளிப் பார்த்துக் கொண்டே போன பட்டாபிராம பிள்ளை திடுக்கிட்டு வியப்பே வடிவாக மாறி, "நம்முடைய சட்டைநாத பிள்ளையைப் பிடித்து தண்டித்து விட்டார்களாமே!" என்றார். அதைக் கேட்ட மற்ற எல்லோரும் ஏககாலத்தில் திடுக்கிட்டு, "ஹா! அப்படியா! படியுங்கள், படியுங்கள்" என்று கூறி ஆவலே வடிவாகவும் பட்டாபிராம பிள்ளையின் வாயைப் பார்த்தபடியும் இருந்தனர்.

பட்டாபிராம பிள்ளை அடியில் கண்டபடி எழுதப்பட்டிருந்த செய்தியைப் படிக்கலானார்:-

*(அசோஸியேடட் பிரஸ்)* தஞ்சை, புதன்கிழமை.

பத்து வருஷ கால தண்டனை அடைந்து தஞ்சை பெரிய ஜெயிலில் இருந்து வந்த வக்கீல் சட்டைநாத பிள்ளை சுமார் 20 தினங்களுக்கு முன் வார்டர்களின் வசத்திலிருந்து பலவந்தமாக விடுவிக்கப்பட்டது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர், அவருடைய தாசி பத்மாசனி, அவளுடைய அண்ணன் கலியப் பெருமாள் பிள்ளை ஆகிய மூவரும் துருக்கர்களாக மாறி, கும்பகோணம் லப்பைத் தெருவில் இருந்தார்கள். சென்னை ஜானிஜான் கான் சாயப்பு என்ற ஒரு சாயப்பு அவர்களைப்

போலீசாரிடம் பிடித்துக் கொடுத்தாராம். அவர்களுடைய விசாரணை நேற்று இந்த ஊர் செஷன்ஸ் ஜட்ஜ் துரையின் முன்னர் விசாரணைக்கு வந்தது. குற்றவாளிகளின் பக்கம் சென்னை மயிலாப்பூர் பாரிஸ்டர் சிவசிதம்பரம் பிள்ளை ஆஜராகி வெகு திறமையாக வாதித்தார். கைதி செய்யப்பட்டவர் சட்டைநாத பிள்ளையே அன்றென்று கடைசி வரையில் அவர் வாதித்துப் புகைப்படம், ரேகை முதலியவற்றின் சாட்சியங்களை எல்லாம் சின்னா பின்னமாக்கி விட்டார். கமாலுதீன் சாயப்பு என்று பெயர் வைத்துக் கொண்டிருந்த சட்டைநாத பிள்ளை தமக்கு இங்கிலீஷே தெரியாதென்று சொல்லி மறுத்துவிட்டார்; அதுவுமன்றி, வாதி கட்சிக்காரர், அவருடைய முகம்மதிய உடைகளை விலக்கி பட்டுக்கரை வேஷ்டி கட்டிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கும் அவர்கள் இணங்கவில்லை. ஜட்ஜ் துரை அவர்களை விடுதலை செய்யப் போன சமயத்தில் மேற்படி ஜானிஜான் கான் சாயப்பு ஒரு வேடிக்கையான தந்திரம் செய்து, கூரையிலிருந்து ஒரு பாம்புக் குட்டி சட்டைநாத பிள்ளையின் தலையில் விழுந்த விட்டதென்று ஆங்கிலத்தில் கூறினார். உடனே கமாலுதீன் சாயப்பு தமது குல்லாவையும் சட்டை நிஜார்களையும் விலக்கி எறிந்துவிட்டு உள்பக்கத்தில் அணிந்திருந்த பட்டுக்கரை வேஷ்டியோடு விளங்கினார். அதைக் கண்ட ஜட்ஜி துரை அவரே சட்டைநாத பிள்ளை என்று நிச்சயித்து, அவர் பதினான்கு வருஷ காலம் அந்தமானில் தண்டனை அனுபவிப்பதென்று தீர்மானித்தார். அவருடைய தம்பி மாசிலாமணி என்பவர் உடனே அந்த சாயப்புவுக்குப் பதினாயிரம் ரூபாயும், சர்க்காரில் ஐயாயிரம் ரூபாயும் சன்மானமளிக்க ஜட்ஜி உத்தரவு செய்தார்.

இது மாத்திரமல்ல. அன்றைய தினம் அவரைச் சேர்ந்த வேறு பலரும் பலவகையான குற்றங்கள் செய்ததாக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டனர். அந்த விசாரணை நேற்று முழுதும் இழுத்து விட்டது. அதில் ஜட்ஜி துரை இன்று தீர்ப்புச் சொன்னார். சட்டைநாத பிள்ளையின் தம்பி மாசிலாமணி பலரைத் தூண்டி அவரை விடுவிக்கச் செய்து ஒளிய வைத்திருந்த குற்றத்திற்காகவும், நாகப்பாம்புகளைப் பெட்டியில் வைத்தனுப்பி மன்னார்குடி திகம்பரசாமியாரைக் கொல்ல முயற்சித்த குற்றத்திற்காகவும், ஆள்களை அனுப்பி சென்னை கலெக்டர் பட்டாபிராம பிள்ளை

அவர்களுடைய பங்களாவில் புகுந்து அங்கிருந்த அவரது பெண்ணை எடுத்துவர முயற்சித்த குற்றத்திற்காகவும், பிறகு மன்னார்குடி வேலாயுதம் பிள்ளை முதலியோரை மூளிப்படுத்த எத்தனித்த குற்றத்திற்காகவும் மொத்தத்தில் பதினான்கு வருஷம் அந்தமான் தீவில் தண்டனை அனுபவிப்பதென்றும், அவர்களுடைய அபாரமான சொத்து முழுதும் பறிமுதல் செய்யப்பட்டு சர்க்கார் கஜானாவில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஜட்ஜி தீர்ப்புச் சொன்னார். தாசி பத்மாசனியும், கலியப்பெருமாள் பிள்ளையும் ஜெயிலிலிருந்து ஓடிவந்த கைதி மறைந்திருக்க அனுகூலமாய் இருந்த குற்றத்திற்கு அவ்வாறு மாதம் கடினக்காவல் தண்டனை பெற்றனர். எண்ணெய்க்குடம் எடுத்து வந்த சட்டை நாத பிள்ளையை விடுத்த குற்றத்தைச் செய்த ரமாமணியம்மாள் இரண்டு வருஷக் கடினக்காவல் தண்டனையும், வேறு சில ஆட்கள் அவ்வாறு மாதக் கடினக்காவலும் பெற்றனர். சென்னையில் நடந்த இரண்டு சம்பவங்களிலும் துணைக் கருவியாய் இருந்த முரட்டு ஆள்கள் மும்மூன்று வருஷம் கடினக் காவல் தண்டனை அடைந்தனர். ஆனால், வேலாயுதம் பிள்ளை முதலியோரை மூளிப்படுத்தும் விஷயத்தில் உதவி செய்ய வந்த ரமாமணியம்மாள் தானே மூக்கறுபட்டுப் போனாள் ஆகையால், அந்த ஒரு குற்றம் சம்பந்தப்பட்ட வரையில், அவளுக்கு அந்தத் தண்டனையே போதுமான தென்று ஜட்ஜி துரை தீர்மானம் கூறினார். சாட்சி விசாரணையின் விரிவான செய்தி நாளைய தினம் வரும்.

- என்று வெளியிடப்பட்டிருந்த மகா ஆச்சரியகரமான செய்தியைப் படித்த பட்டாபிராம பிள்ளையும், மற்ற எல்லோரும் அப்படியே பிரமித்து, வியப்பும் திகைப்பும் அடைந்து, "ஆகா! என்ன ஆச்சரியம்! நமக்குத் தெரியாமல் எவ்வளவு விசாரணை நடந்திருக்கிறது! நம்மைக் கெடுக்க எத்தனை பேர் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள்! ஆகா! சட்டைநாத பிள்ளை கடைசி வரையில் அவனுடைய வக்கிர புத்தியை விட்டானில்லையே! ஐயோ பாவம்! அவனுடைய தம்பி போன வருஷந்தானே சிறையில் இருந்து வெளியில் வந்தான். வந்தவன் ஒழுங்காக இருந்து இனியாவது நல்லவன் என்று பெயரெடுக்கக் கூடாதா! ஜெயிலி

லிருந்த அண்ணனை விடுவிக்க முயன்று, அவனையும் கெடுத்து, தானும் அடியோடு கெட்டு, இன்னுமுள்ள வேறு பல மனிதரையும் கெடுத்தானே! சட்டைநாத பிள்ளையினுடைய சொத்தெல்லாம் இப்படியா அழிய வேண்டும்? ஆகா! இது காதால் கேட்பதற்கே சகியாத மகா துக்ககரமான செய்தியாக இருக்கிறதே! ஐயோ! பாவம்! கடவுளே! இன்றைய தினம் எங்கள் காதால் இந்த மகா சங்கடமான செய்தியை நாங்கள் கேட்க வேண்டுமா!" என்று மிகுந்த இரக்கமும் உருக்கமும் தோன்றக் கூறினர்.

அந்தச் செய்தியைக் கேட்டதனால் அவர்கள் எல்லோரும் உற்சாகமும் சந்தோஷமும் அற்றவராய் அந்த இரவைக் கழித்தனர். மறுநாள் பட்டாபிராம பிள்ளை தமது பங்களாவிற்கு வந்திருந்த விருந்தாளிகள் அனைவருக்கும் ஒரு பெருத்த விருந்து தயாரித்தார். ஒரு பெருத்த மண்டலேசுவரனுக்குச் செய்யப்படும் விருந்து எவ்வளவு சிறப்பாகவும், விமரிசையாகவும், அபூர்வமாகவும் இருக்குமோ அம்மாதிரி மகா சிரேஷ்டமான விருந்து தயாரிக்கப்பட, பட்டாபிராம பிள்ளை எல்லோருக்கும் ராஜோபசாரம் செய்து ஓடியோடி வணங்கி உவப்போடு உபசரித்து உண்பித்து அதைப் போன்ற விருந்தைத் தாம் அதுகாறும் உண்டதுமில்லை கண்டது மில்லை என்று எல்லோரும் அபாரமாக வியந்து கூறும்படி செய்து விட்டார்.

எல்லோரும் விருந்துண்ட பின்னர் சந்தனம் பூசித் தாம்பூலந் தரித்த காலத்தில், வேலாயுதம் பிள்ளை பேசத் தொடங்கி, "என்னவோ கிரக பேதத்தால், நமக்கு ஏற்பட்ட தீமைகளெல்லாம் எம்பிரான் செயலால் சூரியன் முன் இருள் போல விலகியது. பையனுடைய ஜாதகத்தையும், பெண்ணினுடைய ஜாதகத்தை யும் நேற்று இரவு நான் பார்த்ததில், அவர்களுக்கு இனி சந்தோஷ காலம் ஆரம்பமென்பது தெரிந்தது. ஆகையால், நாம் கோரிய சுபகாரியத்தை இனி தாமதப் படுத்தாமல் நடத்திவிட வேண்டும். இன்று புதன்கிழமை அல்லவா. வருகிற வெள்ளிக்கிழமை அன்று நல்ல சுபமுகூர்த்த தினம் ஆதலால், அன்றைய தினம் நிச்சய தார்த்தம், கலியாணம் முதலிய சடங்குகளை எல்லாம் நடத்தி விடலாம் என்று நினைக்கிறேன். நாங்கள் கலியாணத்திற்கு ஆக வேண்டிய சகலமான ஏற்பாடுகளையும் செய்து மன்னார் குடியில்

வைத்திருக்கிறோம். இப்போதே தந்தி கொடுத்து, இன்றைய ரயிலிலேயே எல்லாவற்றையும் போட்டு அவை நாளைய தினம் இங்கே வரும்படி செய்கிறேன். நம்முடைய சம்பந்திப் பிள்ளைக்கு இதனால் எவ்வித அசௌகரியமும் இல்லையானால், சுபகாரியத்தை நடத்தி விடலாம்" என்றார். மற்ற எல்லோரும் அதை ஆமோதித்தனர். பட்டாபிராம பிள்ளை தாம் அதை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாகவும் அன்றைய தினமே கலியாணத்தை நிறைவேற்றி விடுவதென்ற தீர்மானம் செய்யப்பட்டது. அதன் பிறகு வேலாயுதம் பிள்ளை, திரிபுரசுந்தரியம்மாள், கண்ணப்பா, பட்டாபிராம பிள்ளை ஆகிய நால்வரும் தனியாக இருந்து சம்பாஷித்த காலத்தில் திரிபுரசுந்தரியம்மாள் பேசத் தொடங்கி, "கண்ணப்பா! நாம் மன்னார்குடியில் இருந்து புறப்பட்டு வந்த தினத்தன்று நீ கும்பகோணம் போய் அரசலாற்றுப் பாலத்தில் எழுதி விட்டு வந்த பிறகு நம்முடைய சுவாமியார் ஐயா எங்கே இருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. அவர்கள் அதற்கு என்ன பதில் எழுதினார்கள் என்பதும் தெரியவில்லையே. இந்தக் கலியாணம் நடக்கும் போது நம்முடைய சுவாமியார் ஐயா அவசியம் இருக்க வேண்டும். இந்தக் கலியாணம் முக்கியமாக அவர்களாலேயே நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால், அவர்களை விட்டு நாம் இதை நடத்துவது ஒழுங்கே அல்ல. இப்போது தான் அந்த விரோதிகள் சிறைச்சாலைக்குப் போய் விட்டார்கள். இனி சுவாமியார் ஐயா பயமின்றி வெளியில் வரலாம். ஆகையால், நீ இன்றைய தினம் இரவு ரயிலில் புறப்பட்டு கும்பகோணம் போய் நாளைய பகல் முழுதும் இருந்து பாலத்தடியில் எழுதியாவது வேறு எப்படியாவது அவரைக் கண்டு அழைத்துக் கொண்டு வெள்ளிக்கிழமை காலையில் இங்கே வந்து சேர்; அன்று பகலில் தானே கலியாணம். அதற்குள் நீங்கள் வந்து விடலாம். அவர்கள் வராவிட்டால், நாம் இந்த முகூர்த்தத்தைத் தள்ளித்தான் வைத்துக் கொள்ள வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்டு மற்றவர்கள் அதற்கு இணங்கினார்கள். கண்ணப்பா அன்று இரவு 8-மணி மெயில் வண்டியில் போவதற்கு ஆயத்தமாக இருந்தான். மன்னார்குடியிலிருந்த சாமான்களை எல்லாம் அன்றைய தினமே ரயிலில் போட்டுக் கொண்டு வந்து சேரும்படி அவசரத் தந்தி ஒன்று உடனே மன்னார்

குடி நடராஜ பிள்ளைக்கு அனுப்பப்பட்டது. அவர் அப்படியே செய்வதாக உடனே மறு தந்தி கொடுத்தார்.

அன்றைய தினம் மாலையில் முதல் நாள் கூடியது போல பங்களாவில் இருந்த ஆண் பெண் பாலார் அனைவரும் கூடங்களில் உட்கார்ந்து சம்பாஷித்திருந்த தன்றி, தஞ்சையில் நடந்த விசாரணையின் விவரம் முழுதும் அன்றைக்கு வரும் என்று மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அதன்படியே பத்திரிகை கள் வந்தன. பட்டாபிராம பிள்ளை முதல் நாள் செய்தது போல ஒரு பத்திரிகையைப் பிரித்து ஆராய்ந்து பார்த்து, தஞ்சையில் நடந்த விசாரணையின் விவரம் முழுதும் விஸ்தாரமாக வெளியிடப் பட்டிருந்ததைக் கண்டு அதைப் படித்துக் கேட்ட எல்லோரும் ஆச்சரியமும் பிரமிப்பும் அடைந்தவராய்ப் பலவித அபிப்பிராயங் களை வெளியிட்டனர். போலீசார் பலவகையில் உழைத்து ஏராளமான சாட்சியங்களைச் சேகரித்து இடும்பன் சேர்வைகாரனை அப்ரூவராகச் செய்து, ஜானிஜான் கான் சாயப்பு, நீலலோசனியம் மாள் முதலியோரின் உதவியால் அந்த வழக்கை வெகு திறமையாக நடத்தியதைப் பற்றி எல்லோரும் வெகுவாகப் புகழ்ந்தனர். அந்தச் சமயத்தில் பட்டாபிராம பிள்ளை பெரிதும் கூச்சலிட்டு, "ஆகா இதோ இன்னொரு விஷயம் இருக்கிறது. இதையும் படிக்கிறேன். கேளுங்கள்" என்று கூறிய வண்ணம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்த செய்தியைப் படிக்கலானார்:-

★ ★ ★

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் துரை அவர்களுக்கு மன்னார்குடி திகம்பரசாமியார் நிரம்பவும் வணக்கத்துடன் செய்து கொள்ளும் விண்ணப்பம்:-

சென்ற வார கெஜட்டில் தாங்கள் வெளியிட்டுள்ள விளம்பரத்தை நான் நேற்றைய தினம் பத்திரிகை மூலமாய்ப் படித்துத் தெரிந்து கொண்டேன். என்னுடைய பொதுஜன சேவையைப் பற்றித் தாங்கள் அபாரமாகப் புகழ்ந்திருப்பது பற்றி நான் எனது மனமார்ந்த நன்றி விசுவாசம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் நான் இறந்து போய் விட்டதைப் பற்றி தாங்கள் விசனிப்பதையும், என் குடும்பத்தாருக்கு அனுதாபம்

தெரிவிப்பதையும் இன்னொரு சந்தர்ப்பத்திற்கு ஒத்திவைத்துக் கொள்ளுமாறு வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், பாம்புகளை அனுப்பி என் உயிரைக் கொண்டு போக எண்ணிய பெரிய எமனை முடிவில் அந்தப் பாம்பே ஜானிஜான் கான் சாயப்புவின் வாயிலிருந்து வந்து கொன்று விட்டது. அவனும் அவனைச் சேர்ந்த எமபடர்களும் என்னை விட்டுத் தங்கள் சொந்த உலகத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். நான் மறுபடி ஜென்மம் எடுத்து வந்து இன்று முதல் என் உத்தியோகத்தை வகித்துக் கொண்டேன். நான் பாம்பினால் இறந்த பிறகும், இப்போது மறு ஜென்மம் எடுத்ததற்கு முன்னாலும் உள்ள இடைக்காலம் எனக்கு ஒரு கிரகண காலம் என்றே நான் நினைக்கிறேன். மற்ற காலங்களில் செய்வதைவிட, கிரகண காலங்களில் மந்திரம் ஜெபித்தால், அது நன்றாய்ப் பலிக்கும் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அது போல என்னுடைய கிரகண காலத்தில் நான் செய்த ஜெபம் கைமேல் பலித்து விட்டது. அதன் விவரம் இன்னதென்பதை வெளியிடுவது ஒரு வகையில் என் மனதிற்குப் பிடிக்கவில்லை ஆயினும் அதை நான் வெளியிடாமல் இருப்பது அவ்வளவு உசிதமாகத் தோன்ற வில்லை. உலகத்தோருக் கெல்லாம் உதவி செய்வதாக அபாரமாக எல்லோராலும் புகழுப்படுகிற திகம்பரசாமியார் தனது ஆப்த மித்ரர்களை அவர்களது அபாய காலத்தில் கைவிட்டு, தனது உயிரையே பிரதானமாக மதித்து சுயநலம் கருதி எதிரிகளுக்குப் பயந்து எவ்விடத்திலோ பத்திரமாக ஒளிந்திருந்து விட்டு, அபாய மெல்லாம் நீங்கியவுடன் தனது பதவியை வகிப்பதற்கு வெட்க மில்லாமல் வந்துவிட்டான் என்று பொது ஜனங்கள் நினைத்து என்னைத் தூற்றுவார்கள். அப்படித் தூற்றுவதில், நான் எதைப் பற்றிக் கவலைப்படுகிறேன் என்றால், இனி நான் பொது ஜன சேவை செய்வதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் என்னை வெறுத்து விலக்குவார்கள் என்பதைப் பற்றியே நான் முக்கியமாகக் கவலை கொள்கிறேன். அதுவுமன்றி, நீங்களும், இன்னும் என்னுடைய ஆப்த மித்ரர்களும் என்னைப் பற்றி வெளிப்படை யாக எவ்வித அருவருப்பையும் வெளியிட மாட்டீர்களாயினும் மனதிற்குள்ளாவது என்னைப் பற்றி மதிப்புக் குறைவாக எண்ண நேரும் என்றும் என் மனம் சொல்லுகிறது. ஆகவே, நான் வெளி

யிடப் போவது, என் ஆப்த மித்திரர்களுடைய குடும்ப சம்பந்த மான விஷயங்களாக இருந்தாலும், அவைகளை நான் வெளியிடு வதைப் பற்றி என்னை மன்னிக்குமாறு பன்முறையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இந்த இருபது தினங்களும் நான் உண்மையிலேயே இறந்து போனவன் போலவும், அந்தக் காலத்தில் நான் செய்தவைகள் கனவு போலவுமே இப்போது எனக்குத் தோன்றுவதால், அந்தக் கனவில் நான் எடுத்த புதிய புதிய ஜென்மங்களில் செய்த வேலைகளை எனக்கு நினைவிருக்கும் வரையில் தெரிவிக்கிறேன். நமது மாசிலாமணி ஒரு வருஷ காலம் தண்டனை அடைந்து விடுபட்டு வந்த பிறகு அவன் நம்மை மறந்திருப்பான் என்று நான் நினைக்கவே இல்லை. அவன் யாரையாவது சேர்த்துக் கொண்டு எனக்கும் என் ஆப்த நண்பர்களுக்கும் ஏதேனும் கெடுதல் செய்ய நினைப்பான் என்று நான் எதிர்பார்த்தே இருந்தேன். ஆனால், அவன் சட்டைநாத பிள்ளையை விடுவிக்க எத்தனிப்பான் என்று நான் நினைக்கவேயில்லை. அவன் யாரோடு சிநேகம் வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதையும், எவ்விதமான சதியாலோசனை கள் செய்கிறான் என்பதையும் அறிவதற்கு நானும் போலீஸ் ஜெவான் வேஷந்தரித்து மற்ற ஜெவான்களோடு அப்போதைக் கப்போது அவனுடைய வீட்டிற்குப் போய் அவனோடு பேசி விட்டு வந்திருக்கிறேன். போலீஸ் இலாகாவில் ஹெட்கான்ஸ்டே பில் வேலையிலிருந்து நீக்கப்பட்டவனான இடும்பன் சேர்வை காரனோடு மாசிலாமணி சிநேகம் வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதும், அவன் பக்கத்து வீட்டுக்காரனிடம் பழக்கம் செய்து கொண்டு அந்தப் பக்கமாய் ஏணி வைத்து ஏறி ஜன்னல் திறப்பால் நுழைந்து உள்ளே வந்து அடிக்கடி மாசிலாமணியோடு பேசி விட்டுப் போகிறான் என்பதும் எனக்குத் தெரியும். அவன் மாசிலா மணியுடன் சிநேகமாய் இருப்பது மற்றவருக்குத் தெரியக்கூடா தென்று அப்படிச் செய்கிறான் என்றும், அவர்கள் ஏதோ சதியாலோசனை செய்கிறார்கள் என்றும் நான் நிச்சயித்துக் கொண்டேன் ஆனாலும், அவர்கள் எதைப்பற்றி சதியாலோசனை செய்து வருகிறார்கள் என்பதை நான் அறியக்கூடவில்லை. அதுவு மன்றி, அவன் எதிர்த்த வீட்டிலிருந்த ரமாமணியம்மாளைத் தன்

வைப்பாட்டியாக வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் நான் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருந்தேன். அந்த நிலைமையில் சட்டைநாத பிள்ளை விடுவிக்கப்பட்டுப் போனதாகச் செய்தி வந்தது. பிறகு அவர்கள் பெட்டிக்குள் பாம்பை எனக்கு அனுப்பினார்கள். நான் முன் விவரிக்கப்பட்டபடி இறந்தவன் போல இருக்க எண்ணி, சனிக்கிழமை இரவே புறப்பட்டு கும்பகோணம் வந்து சேர்ந்தேன். ரமாமணியம்மாள் வீட்டில் வேலை செய்து வரும் கிழவியின் வீட்டில் நான் இருப்பதென்று தீர்மானித்துக் கொண்டேன். கிழவியோடு இருப்பதற்கு கிழவி வேஷமே பொருத்தமானதல்லவா? ஆகையால், நான் கிழவியாக மாறினேன். முற்றிலும் நரைத்து வெளுத்துப் போன மயிர்களால் செய்த டோப்பா ஒன்றை நான் தலையில் வைத்து, அதை நல்ல பசையினால் தலையோடு தலையாய் ஒட்டிக்கொண்டேன். நன்றாக க்ஷவரம் செய்து கொண்டு சில பச்சிலைச் சரக்குகளாலான பொடியை முகத்தில் தேய்த்துக் கொண்டால், ஒருவார காலத்திற்கு மயிரே முளைக்காதென்ற ரகசியம் நான் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருந்தேன். ஆகையால், நான் அப்படியே செய்து புடவை உடுத்தி கிழவியாக மாறி, அந்த வேலைக்காரியின் வீட்டில் இருந்தேன். அவளுக்குப் பணம் கொடுத்து அவ்விடத்திலேயே சாப்பாட்டையும் வைத்துக் கொண்டு அவளுடைய பிரியத்தை அடைந்து உண்மைகளைக் கிரகித்து வந்தேன். அவளுக்கு மாசிலாமணியின் வீட்டு ரகசியம் எதுவும் தெரியவில்லை. ஆனால், அவன் ரமாமணியிடம் நட்பாயிருப்பது முதல் அவள் அவனை ஏமாற்றி ரகசியத்தில் வேறொருவனை வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது வரையில் நான் ஞாயிறு திங்கள் ஆகிய இரண்டு தினங்களில் தெரிந்து கொண்டேன். செவ்வாய்க் கிழமை அன்று கண்ணப்பா ஆற்றுப் பாலத்தினடியில் எழுதி யதைப் படித்து, கந்தசாமி காணப்படவில்லை என்பதையும், மன்னார்குடியார் எல்லோரும் அன்றிரவு சென்னைக்குப் போவதையும் அறிந்து கொண்டேன். கந்தசாமியை மாசிலாமணி அபகரித்து வந்திருப்பான் என்ற சந்தேகம் எனக்கு அப்போது உண்டாகவில்லை ஆகையால், அவன் சென்னையிலேயே எங்கேயாவது இருந்து இரண்டொரு தினங்களில் வந்துவிடுவான் என்று நினைத்து அதைப்பற்றி அதிக கவலை கொள்ளாமல்

இருந்தேன். அன்று மாலையில் நான் கிழவியிடம் பேசியதில், ரமாமணியம்மாளின் குடும்பத்தார், அவளுடைய போயி, இடும்பன் சேர்வைகாரன் ஆகியவர்களை மாசிலாமணி அவசரமாக சென்னப்பட்டணத்திற்கு அன்றைய இரவு வண்டியில் அனுப்புகி றான் என்று நான் தெரிந்து கொண்டேன். வெள்ளிக்கிழமை நடக்கப் போகும் சுபகாரியத்திற்கு முன் ஏதாவது கெடுதல் விளைவிக்க வேண்டும் என்றே மாசிலாமணி அவர்களை அனுப்புகிறான் என்று என் மனம் சந்தேகித்தது. அவர்களைத் தொடர்ந்து போனால், அவர்களது கருத்தை அறிந்து கொள்வ தோடு, கந்தசாமி காணாமல் போன விவரத்தையும் தெரிந்து கொள்ளலாம் என்றும், கூடுமானால் நிச்சயதார்த்தத்திற்கும் வரலாம் என்றும், நினைத்து நானும், அவர்களோடு பட்டணம் வரத் தீர்மானித்து, நீர்மேல்குமிழி நீலலோசனியம்மாளாக மாறினேன். நீர்மேல்குமிழி என்ற ஊர் திருவரங்கத்தை அடுத்து இருப்பதாக நான் முன்னர் சொன்னது நினைவிருக்கலாம். திருவரங்கம் என்பது கடவுளின் நாடகமேடை அல்லவா. கடவுளின் நாடக மேடையாகிய இந்த உலகில், நீர்மேல்குமிழி போன்ற இந்த உடம்பே என் ஆத்மாவின் இப்போதைய இருப்பிடம் அல்லவா. ஆகையால், நான் பொய் சொன்னதிலும் மெய்யையே சொன்னேன். கும்பகோணத்திலேயே அவர்க ளோடு நான் ஏறினால், அவர்கள் சந்தேகங் கொள்வார்கள் என்று நினைத்து, ரயில்வே கார்டுக்கு பத்து ரூபாய் கொடுத்து, அவருடைய வண்டியிலேயே உட்கார்ந்து சிதம்பரம் வரையில் வந்தேன். அவ்விடத்தில், என்னை அவர், நான் காட்டும் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏற்றிவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன் ஆகையால், அவர் அதற்கிணங்க, என்னை ரமாமணியம்மாள் முதலியோர் இருந்த வண்டியில் ஏற்றி விட்டார். அவ்விடத்திலேயே ரமாமணியம்மாளின் ஆசை நாயகன் இன்னான் என்பதைக் கண்டு கொண்டேன். அவன் கும்பேசுவரன் கோவிலில் தவில் அடிப்பவன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவன் ரமாமணியம்மாளுடைய ஆசை நாயகன் என்பதைக் காண, எனக்கு மிகுந்த வியப்பு ஏற்பட்டது. ஆனாலும், அதை அடக்கிக் கொண்டு நான் அவர்களோடு அன்னி யோன்னியமாகப் பேசிக்கொண்டே போனேன். அவர்கள் பணப்

பேய் பிடித்த துராத்மாக்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும் ஆதலால், எனக்கு ஐந்து லட்சம் ரூபாய் இருப்பதாகவும், நான் அவர்களுடன் கும்பகோணத்தில் இருக்க விரும்புவதாகவும் சொல்லி அவர்களுடைய ஆசைப் பேயைக் கிளப்பி விட்டேன். அந்தப் பேய் நன்றாகப் பிடித்துக் கொண்டது. அவர்கள் தலை விரித்து ஆடத் தொடங்கினார்கள். அவர்களோடு கூடவே இருந்து எப்படியாவது உண்மையைக் கிரகிக்கத் தீர்மானித்துக் கொண்டேன். வண்டி எழும்பூரில் வந்து நின்றது. நாங்கள் இருந்த வண்டிக்கெதிரில் கலெக்டர் பட்டாபிராம பிள்ளையும் அவருடைய புதல்வியும் நின்று கொண்டிருந்தார்கள். அதே வண்டியில் மன்னார்குடியிலிருந்து வேலாயுதம் பிள்ளை முதலி யோர் வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களைப் பார்க்க கலெக்டர் வந்திருப்பதாக உடனே உணர்ந்து கொண்டேன். ஆனால், அந்த மடந்தை வெள்ளை உடை தரித்து வந்திருந்தது என் மனதிற்குப் பிடிக்கவில்லை; அந்தக் கோலத்தில் அந்தக் குழந்தை தனது மாமனார் மாமியாரைப் பார்ப்பது எனக்கு அவ்வளவு உசிதமாகப் படவில்லை. ஏனென்றால், நானே அந்தப் பெண்ணை ஏற்பாடு செய்தவன் ஆகையால், தூஷணைக்கு நானே பாத்திரம் ஆக வேண்டும் என்ற நினைவுண்டான தாகையால், நான் உடனே கீழே இறங்கினேன். ரமாமணியம்மாள் முதலியோர் இடும்பன் சேர்வைகாரன் கொணர்ந்த சாமான்களை இறக்குவதைக் கவனித்திருந்தார்கள் ஆதலால், நான் ஒரே நொடியில் மனோன்மணியம்மாளிடம் போய் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டுத் திரும்பி வந்து விட்டேன். நான் அப்போது சொன்ன வார்த்தைகள் உடனே பலன் தந்து விட்டன என்பதை நான் பின்னால் அறிந்து கொண்டு, என் சமயோசிதமான திறமையைப் பற்றி என்னை நானே புகழ்ந்து கொண்டேன். பிறகு அவர்களோடு நான் சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்திற்கு வந்து, அவர்களோடு நிரம்பவும் அன்னியோன்னியமாய்ப் பழகிக் கொண்டு, அடிக்கடி கோவில்களுக்கும் சுவாமி தரிசனத்திற்கும் சமுத்திர ஸ்நானத்திற்கும் போவதாய்ப் பாசாங்கு செய்து கொண்டு வந்தேன். ஏனென்றால், நான் எப்போதும் அவர்களோடு கூடவே இருந்து காட்டிவிட்டால், பிறகு ஏதாவது அவசர சமயத்தில் நான் அவர்களை விட்டுப் போக நேரும் போது காரணம் சொல்ல

வேண்டி வரும் என்று அவ்வாறு செய்து வந்தேன். அவர்களோடு நான் பழகியதில் பக்கிரியா பிள்ளையே அசடனென்பதையும், எளிதில் ஏமாறக்கூடியவன் என்பதையும் கண்டு அவனை அழைத்துக் கொண்டு திருவொற்றியூர் போய்; அவ்விடத்தில் அவனுக்கு வைர மோதிரம் சன்மானித்து, இடும்பன் சேர்வைகாரன் இன்ன கருத்தோடு வந்திருக்கிறான் என்பதை அறிந்து கொண்டேன். வெள்ளிக்கிழமை அன்று இடும்பன் சேர்வைகாரன் இல்லாமல் போகும்படி செய்ய உத்தேசித்து அவனை எப்படியாவது போலீசாரைக் கொண்டு கைது செய்து விட நினைத்து, முதல் நாள் இரவில் அவனுக்கு நானே சாப்பாடு பரிமாறினேன். என்னுடைய கை மோதிரத்தைக் குழம்பில் கலந்து அவனுடைய சாதத்தில் வார்த்து விட்டேன். அவன் பெரிய பெரிய கவளமாய் விழுங்கும் முரட்டு மனிதன் ஆகையால், அவனுடைய தொண்டையில் மோதிரம் சிக்கிக்கொள்ளாது என்று நான் நினைத்தேன். தவறி, சிக்கிக் கொண்டாலும், பரிமாறும் போது, மோதிரம் எனக்குத் தெரியாமல் வழுக்கிக் குழம்பில் தவறி விழுந்து விட்டதாகச் சொல்லி அதை வாங்கிக் கொண்டு, பிறகு வேறே ஏதாவது தந்திரத்தினால் அவனைக் கைது செய்ய நினைத்தேன். மோதிரத் தந்திரமே பலித்துவிட்டது. அன்றைய இரவில் நான் கூக்குரல் செய்து மோதிரத்தை யாரோ அபகரித்துக் கொண்டதாகச் சொல்ல, போலீசார் வருவிக்கப்பட்டனர். அவர்கள் மூட்டை முடிச்சுகளை எல்லாம் சோதனை செய்த காலத்தில், நான் அது விழுங்கப்பட்டிருந்தாலும் இருக்கும் ஆதலால், அது போனால் போகிறதென்று அலட்சியமாகப் பேசி, எல்லோருடைய வயிற்றை யும் அவர்கள் சோதனை செய்யும்படி தூண்டி, இடும்பன் சேர்வை காரனைச் சிறைப்படுத்தினேன். நான் இன்னது செய்கிறேன் இன்ன இடத்திற்குப் போகிறேன் என்பதை வேலாயுதம் பிள்ளை முதலியோருக்குக் கூடத் தெரிவிக்கக் கூடாதென்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், ஒருவருக்குத் தெரிவதே ரகசியமன்றி, இருவருக்குத் தெரிந்தால், அது எப்படியும் பகிரங்கத்திற்கு வந்து விடும் என்பது என் கொள்கை ஆகையால், நான் நேரில் வேலாயுதம் பிள்ளையிடமாவது பட்டாபிராம பிள்ளையிடமாவது போய், அவர்களுடைய சதியாலோசனையை வெளியிட விரும்ப வில்லை. ஆகையால், சப் ஜெயிலிலிருந்து ஒரு ஜெவான்

சொன்னது போல, அந்த விவரத்தைப் பட்டாபிராம பிள்ளைக்கு ஏதோ ஒரு டெலிபோனிலிருந்து தெரிவித்தேன். ஆனாலும், அவ்வளவோடு நான் நிற்கவில்லை. பட்டாபிராம பிள்ளை ஜெவான்களைக் கொணர்ந்து காவல் போட்டுக் கொண்டு பந்தோபஸ்தாக இருக்கிறாரா என்பதையும், வேலாயுதம் பிள்ளை முதலியோர் கோமளேசுவரன் பேட்டையிலிருந்து பட்டாபிராம பிள்ளையின் வீட்டிற்கு வருகிறார்களா என்பதையும் கவனித்துக் கொண்டு எச்சரிக்கையாக இருந்தேன். அன்றைய தினம் இரவில் நான் போலீசாரிடம் போய் சில முரட்டு மனிதர்கள் கோமளேசுவரன் பேட்டைக் கலியாண வீட்டில் நுழைந்து திருட உத்தேசித்து இருப்பதாகக் கூறி, போலீசாரை எச்சரித்து நானும் கூட இருந்தேன். ரமாமணியம்மாள் முதலியோர் இரவில் கோமளேசுவரன் பேட்டை கலியாண வீட்டுக்குள் நுழைந்ததை நான் கவனித்தேன். அதற்கு மேல் என்ன நடக்கிறதென்று நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். ஆனால், அவர்களுடைய ஆள்கள் குடிவெறியால் அவர்களையே மூளிப்படுத்துவார்கள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை. பிறகு ஆள்கள் வந்து அவர்களை மூளிப்படுத்தி விட்டு ஓடிவந்த போது போலீசார் அவர்களைப் பிடித்துக் கொண்டனர். ரமாமணியம்மாள் முதலியோருக்கு தெய்வச் செயலாக நேர்ந்த பொல்லாங்கைப் பற்றி நான் நிரம்பவும் விசனமுற்றேன் ஆயினும், நான் சந்தேகித்து கும்பகோணத்திலிருந்து அவர்களோடு வந்ததனால், வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு நேர இருந்த பெருத்த அபாயம் விலகியதென்ற விஷயம் அளவற்ற சந்தோஷத்தை உண்டாக்கியது. அன்றைக்கு மறுநாள் நான் கோமளேசுவரன் பேட்டைக்குப் போய், அவ்விடத்திலிருந்த வேலைக்காரியைக் கண்டு பேசி, நான் பட்டாபிராம பிள்ளையின் உறவினள் என்று கூறி, கந்தசாமி இருந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தேன். அவ்விடத்தில் அவனுடைய புகைப்படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. கந்தசாமியைக் கண்டு பிடிப்பதற்கு அது உபயோகப்படும் என்று நினைத்து, கலியாணப் பெண் தன் புருஷனுடைய படத்தைப் பார்க்க ஆசைப்படுகிறதென்று வேலைக்காரியிடம் சொல்லி அந்தப் படத்தை வாங்கிக் கொண்டேன். கண்ணப்பா கும்பகோணம் அரசலாற்றுப் பாலத்தடியில் எழுதிய விவரத்தில், சென்னை ஆஸ்பத்திரியில்

ஸ்மரணையற்றுப் படுத்திருந்தவன், அவனுடன் கூட இருந்து படித்து வந்த கோபாலசாமி என்று எழுதி இருந்தான் ஆதலால், அவனைக் கொண்டே, அந்த ரகசியத்தை அறிய வேண்டும் என்று நான் தீர்மானித்துக் கொண்டு, மிஸ்டர் வெல்டன் துரையாக வேஷம் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரியின் இரண்டாவது டாக்டரிடம் பழக்கம் செய்து கொண்டு, கோபாலசாமியைப் பல தடவை பார்த்தேன். அவனைத் தெளிவிக்க அவர்கள் பட்டபாடுக ளெல்லாம் வீணாய்ப் போகவே, அவன் ஒரு வேளை பாசாங்கு பண்ணுகிறானோ என்ற சந்தேகம் உதித்தது. அவன் மாசிலா மணிக்கு வேண்டியவனா, அல்லது, கந்தசாமிக்கு வேண்டியவனா என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற யோசனையும் தோன்றியது. நான் மற்றவர்களுடன் போய், அவனுடைய கண்ணில் மூக்குப் பொடியைப் போட்டுப் பார்த்தேன். கண்ணீர் நன்றாக வந்தது. ஆகவே, அவன் பாசாங்கு செய்கிறான் என்று நிச்சயித்துக் கொண்டேன். மாசிலாமணி வந்திருப்பதாகச் சொல்லிப் பார்த்தேன். அதற்கும் அவன் அசையவில்லை. ஆகவே, அவன் மாசிலாமணிக்கு வேண்டியவனல்ல என்று நிச்சயித்துக் கொண்டு அவனைக் குழியில் போட்டுப் புதைக்கப் போவதாகச் சொல்லிப் பார்த்தேன். அதற்கும் அவன் அசையவில்லை. அவன் கந்தசாமிக்கு வேண்டியவன் என்பது தெரிந்த தாகையால், கந்தசாமி இறந்து போய் விட்டான் என்றால் அப்போதாவது விழித்துக் கொள்ள மாட்டானா என்று நினைத்து அப்படிச் சொல்ல, அந்த மருந்து உடனே பலித்தது. அதன் பிறகு அவனிடம் சகலமான உண்மைகளையும் நான் கிரகித்துக் கொண்டதோடு, கந்தசாமி எவ்விதமான புடவை, ரவிக்கை, நகைகள் அணிந்திருந்தான் என்பதை விவரமாகக் கேட்டறிந்து கொண்டேன். பிறகு போலீஸ் கமிஷனர் என்னைப் பட்டாபிராம பிள்ளை வீட்டிற்கு அழைத்து வந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மறுநாள் நான் எனக்குத் தெரிந்த ஒரு சித்திரக்காரனிடம் போய், கந்தசாமியின் புகைப் படத்தைக் கொடுத்து, கோபாலசாமி சொன்னபடி அதன் தலைக்கு டோப்பா, நகைகள், புடவை, ரவிக்கை முதலியவற்றைப் போட்டு எழுதச் செய்து, அதை வைத்து மறுபடி போட்டோ எடுக்கச் செய்ததில், அது தத்ரூபம் கந்தசாமி பெண் வேஷம் போட்டுக் கொண்டு வந்தது போல இருந்தது. அதை நான் என் மடிசஞ்சியில்

பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டேன். கந்தசாமியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற கவலையில் நான் இரவு பகல் தூங்க வில்லை. கோபாலசாமி சொன்ன விவரத்தைக் கேட்ட பிறகு மாசிலாமணி ஆள்களை அனுப்பி மனோன்மணியம்மாளை அபகரித்து வர முயற்சித்து, அன்றைய தினம் தற்செயலாய் அங்கே பெண் வேஷத்தில் போன கந்தசாமியைக் கொண்டு போயிருக்க வேண்டும் என்று நான் உடனே நிச்சயித்துக் கொண்டேன். மிஸ்டர் வெல்டன் துரை வேஷத்தில் நான் இருந்த காலத்தில் போலீஸ் கமிஷனரைத் தூண்டி, அவர் உடனே கும்பகோணம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அண்ணாவையங்காருக்கு ஒரு தந்தி கொடுக்கச் செய்து, உடனே மாசிலாமணியின் வீட்டைச் சோதனை போடச் செய்தேன். அவர் அப்படியே செய்து, அந்த வீட்டில் அவனையும் அவனுடைய ஆள்களையும் தவிர, வேறே யாரும் இல்லை என்று தெரிவித்து விட்டார். என் கவலையும் திகிலும் அதிகரித்து விட்டன. கந்தசாமியை அவர்கள் ஒரு வேளை கொன்று விட்டார்களோ, அல்லது, வேறே எங்கேயாவது பந்தோபஸ்தாக வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் உதித்தது. அதை அவர்களைக் கொண்டே நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் தீர்மானித்துக் கொண்டேன். அவர்கள் சாதாரணமாக ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்க மாட்டார்கள் ஆகையால், கரடகன் தமனகன் வேலை செய்து ஒருவரை ஒருவர் குடுமி முடிந்து விட்டாலன்றி உண்மை வெளியாகாதென்று நினைத்தேன். கந்தசாமியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதை நான் முதல் காரியமாக மதித்தேன். அதோடு சட்டைநாத பிள்ளையின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதையும், அவர்கள் எல்லோரும் செய்த சதியாலோசனைகளை வெளிப்படுத்து வதையும் இரண்டாவதாக வைத்துக் கொண்டு, நீலலோசனி யம்மாளாய் மாறி ஆஸ்பத்திரிக்குப் போய், பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொண்டதன்றி, மாசிலாமணிக்கு ரமாமணியம் மாளைக் கொண்டு ஒரு கடிதமும் எழுதிப் பெற்றுக் கொண்டேன். அந்தக் கடிதம் பின்னால் உபயோகப்படும் என்று, அது கடலில் விழுந்து விட்டதாகச் சொல்லி மறுபடி அதே மாதிரி இன்னொரு கடிதம் எழுதிக் கொடுக்கச் செய்து அதையும் வாங்கி வைத்துக் கொண்டேன். பிறகு ஜானிஜான் கான் சாயப்புவாக மாறி போலீஸ்

கமிஷனரிடம் போய், நான் திகம்பரசாமியாரின் கீழ் வேலை செய்த துப்பறியும் உத்தியோகஸ்தன் என்று சொல்லி திகம்பரசாமியார் கொடுத்தது போல நான் எழுதி வைத்துக் கொண்டிருந்த ஒரு நற்சாட்சிப் பத்திரத்தை அவருக்குக் காட்டினேன். இடும்பன் சேர்வைகாரன் பல குற்றங்களைச் செய்திருப்பதால், அவனிடம் நான் சில உண்மைகளைக் கிரகிக்க வேண்டும் என்றும், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் எனக்கு உதவியாய் இருக்க உத்தரவு செய்யு மாறும் கேட்டுக் கொண்டேன். திகம்பரசாமியாருடைய கையெழுத்தை அவர் பார்த்து, என் வார்த்தையை நம்பி, எனக்கு உதவி செய்யும்படி போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்கு உத்தரவு கொடுத்தார். நான் அவருடைய உதவியைக் கொண்டு, இடும்பன் சேர்வைகாரன் இருந்த சிறைச்சாலையில் ஒரு கைதி போல இருந்து தந்திரம் செய்து, அவனிடம் கடிதம் எழுதி வாங்கினேன். அந்தக் கடிதத்தில் இருந்த எழுத்தைப் போல நான் வேறொரு கடிதத்தில் எழுதி அன்றைய தினமே மாசிலாமணிக்கு தபால் மூலமாய் ஒரு கடிதம் அனுப்பினேன். கடிதத்தோடு வருகிறவன் போலீஸ்காரன் என்றும், பணம் கொடுக்க வேண்டாம் என்றும் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது முன்னரே தெரிந்த விஷயம். அதுவுமன்றி, கந்தசாமியே பெண் வேஷந் தரித்து வந்திருந்தவன் என்பதைக் கேட்டவுடனே இடும்பன் சேர்வைகாரன் ஆச்சரியமடைந்து, அதை மாசிலாமணிக்குத் தெரிவித்ததைக் கொண்டு, கந்தசாமி அவர்களுடைய வசத்திலேயே எங்கேயோ இருப்பதாகவும், அவனுக்குக் கெடுதல் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு அந்த விஷயத்தை மாசிலாமணிக்குச் சேர்வைகாரன் எழுதுகிறான் என்றும் நான் யூகித்துக் கொண்டு, அன்றே கும்பகோணம் போய் நீலலோசனியாய் மாறி போலீஸ் அண்ணாவையங்காரிடம் போய், சென்னை கமிஷனரிடம் சொன்னது போலப் பொய் சொல்லி, நான் திகம்பரசாமியாரின் கீழ் வேலை செய்த துப்பறிபவன் என்று ஒரு நற்சாட்சிப் பத்திரத்தைக் காட்டி, அவர் ஒரு ஜெவானைக் கடிதத்தோடு மாசிலாமணிக்கு அனுப்பும்படி செய்தேன். அவன் திரும்பி வந்து மாசிலாமணி சொன்னதை எல்லாம் என்னிடம் சொல்லி அவன் கொடுத்த கடிதத்தையும் என்னிடம் கொடுத்தான். நான் உடனே நீலலோசனியாக மாசிலாமணியிடம் போய், ரமாமணியம்மாளின் கடிதத்தைக் கொடுத்து, அவனோடு சம்பாஷித்து முடிவில், ரிஜிஸ்டர் செய்த பத்திரத்தைக் காட்டி

அவனுக்கு அவள் பேரில் அருவருப்பும் பகைமையும் கோபமும் உண்டாகும்படி செய்தேன். அவனைத் தூண்டி ரமாமணிக்கே கடிதம் எழுதும்படி செய்தால், அவன் சந்தேகம் கொள்வான்; அதோடு அவன் அவளை நேருக்கு நேர் தூஷித்து எழுதவும் மாட்டான் என்று நினைத்து, வக்கீலுக்குக் கடிதம் எழுதித் தரச் செய்து அதை வாங்கிக் கொண்டு வந்தேன். அப்போது கந்தசாமியைப் பற்றிய பிரஸ்தாபம் வந்த காலத்தில் அவன், "ஆகா மோசம் போனேனே!" என்று சொன்னதைக் கொண்டு, கந்த சாமிக்கு அவன் அதுவரையில் யாதொரு கெடுதலும் செய்ய வில்லை என்றும், கந்தசாமி தப்பித்துக் கொண்டு போயிருக்க வேண்டும் என்றும் நிச்சயித்துக் கொண்டேன். அவன் தன்னுடைய வீட்டை எனக்குக் காட்டிய போது, சில அறைகள் மூடிவைக்கப்பட்டிருந்தன. கந்தசாமி அவற்றிற்குள் இருக்க மாட்டான் என்ற எண்ணம் உண்டானதானாலும், நான் உடனே அண்ணாவையங்காரிடம் போய் ஜெவான்களை அனுப்பி அன்றைய மாலையில் ஒரு தரம் மாசிலாமணியின் வீடு முழுதையும் சோதனை போடச் செய்ததன்றி, நான் கையில் வைத்திருந்த கந்தசாமியின் பெண் வேஷப் படத்தை மாசிலா மணியின் வேலைக்காரர் வேலைக்காரிகளுக்குக் காட்டச் செய்து, அந்தப் பெண்ணைப் பற்றிய தகவல் ஏதாவது தெரியுமா என்று கேட்கச் செய்ததில், அவர்கள் தங்களுக்கு ஒரு செய்தியும் தெரியா தென்று சொல்லிவிட்டார்கள். ஆகையால், நான் அன்றைய தினமே பட்டணம் திரும்பி வந்து, மறுநாள் காலையில், மறுபடியும் மிஸ்டர் வெல்டன் துரையாக மாறி ஆஸ்பத்திரி பெரிய டாக்டரைக் கண்டு, ரமாமணியம்மாள் முதலியோர் பெரிய குற்றவாளிகள் என்று போலீஸ் கமிஷனர் சொன்னதாகவும், அவர்களுடைய வாக்குமூலத்தைத் தந்திரமாக கிரகிக்க வேண்டும் என்றும் சொல்லி, ஒரு கிராமபோன் யந்திரம் வாடகைக்கு வாங்கி, அதை வைத்துவிட்டுப் போய், நீலலோசனியம்மாளாக வந்து, ரமாமணியம்மாளை அழைத்து வந்து, மாசிலாமணி தனது வக்கீலுக்கு எழுதிய கடிதத்தைக் காட்டி அவள் கோபாவேசம் கொள்ளும்படி செய்தேன். அந்தக் கடிதத்தை நான் அதற்கு முன்னரே பிரித்துப் பார்த்திருந்தேன் ஆதலால், அதைப் படித்த வுடன் அவள் கோபங் கொண்டு பிதற்றுவது நிச்சயம் என்று தோன்றியதாகையால், அதை அப்படியே பிடிக்க கிராமபோன்

யந்திரம் வைத்தேன். அங்கிருந்தபடியே டெலிபோன் மூலமாய் சப் இன்ஸ்பெக்டருடனே பேசி, இடும்பன் சேர்வைகாரனை வரவழைத்து வைக்கும்படி செய்து விட்டு நான் மறுபடி ஜானி ஜான் கானாக மாறி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இடும்பன் சேர்வைகாரனுடன் பேசி, அவன் மாசிலாமணியின் மீது கோபமும் பகைமையும் கொள்ளும்படி செய்து, அவனை அப்ரூவராக எடுத்துக் கொள்வதாகவும், அவன் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்றும் எழுத்து மூலமாய் ஏற்பாடு செய்து கொண்டோம். பிறகு, நானும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் அவனை அழைத்துக் கொண்டு கும்பகோணம் வந்தோம். அவன் அப்ரூவர் ஆதலால், அவன் சட்டைநாத பிள்ளையைக் காட்டிக் கொடுத்தால், அவனுக்குப் பரிசு கிடைக்காதென்றும், மாசிலாமணி கச்சேரியில் தன் கையினாலேயே பரிசு கொடுக்கும் பெருமை அவனுக்கு இல்லாமல் போய்விடும் என்றும் நினைத்தேன். ஆகையால், நானே சட்டைநாத பிள்ளையின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தவன் என்று சொல்ல ஏற்பாடு செய்து கொண்டேன். அவ்வாறு மாசிலாமணியை அவமானப்படுத்தி, அவனது திமிரை அடக்க வேண்டும் என்பது என் அவா; சர்க்கார், ஐயாயிரம் ரூபாய் வெகுமதி கொடுப்பதாக வெளியிட்டால் அவன் தன் தமயன் இருக்கும் இடத்தைக் காட்டுவோருக்குப் பதினாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்வதன் அர்த்தம், "எவராலும் அவர் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியாது. நான் பதினாயிரம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்" என்று ஆகிறதல்லவா. அந்தத் திமிரை அடக்குவது அவசியமான விஷயம் என்று நினைத்தேன். ஆகவே, மறுநாளாகிய வெள்ளிக்கிழமை நாங்கள் சட்டைநாத பிள்ளையை யும், அவனோடு இருந்தவர்களையும் மாசிலாமணியையும் கைது செய்தோம். ஆனால், மாசிலாமணியைக் கைது செய்யும் முன், இடும்பன் சேர்வைகாரனை அனுப்பி, கந்தசாமி எங்கே இருக்கிறான் என்பதை விசாரிக்கும்படி செய்தேன். செவ்வாய்க் கிழமை இரவிலேயே அவன் பெண் வேஷத்தோடு தப்பித்துக் கொண்டு போய்விட்டதாகத் தெரிந்தது. நான் சென்னையிலிருந்து வரும் போது, போலீஸ் கமிஷனரைத் தூண்டி கவர்னரிடம் அனுப்பி, சட்டைநாத பிள்ளை முதலியோரின் வழக்கை திங்கட் கிழமை அன்று தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜ் துரையே விசாரிக்க வேண்டும் என்று உத்தரவு வாங்கிவரச் செய்திருந்தேன்

ஆகையாலும், நான் அந்த உத்தரவை அண்ணாவையங்காரிடம் கொடுத்து, அவர் கைதிகளை அழைத்துக் கொண்டு தஞ்சைக்குப் போகும்படி செய்து நான் விசாரணை காலத்தில் வருவதாகச் சொல்லிவிட்டுக் கந்தசாமி போன இடத்தைக் கண்டு பிடிக்க முயன்றேன். செவ்வாய்க்கிழமை இரவு 12-மணிக்குத் தப்பித்து வெளியில் வந்தவன் உடனே சென்னைக்குப் போக ரயில் இல்லை. நான் சென்னைக்கு வரவும் இல்லை. ஆகவே, அவன் நேராக மன்னார்குடிக்கே போக முயன்றிருக்க வேண்டும் என்று நான் ஒருவாறு நிச்சயித்தேன். நடுஇரவில் அவன் அநேகமாய் நடந்து போயிருக்க மாட்டான்; வண்டிகளில் தான் போயிருக்க வேண்டும் ஆகையால், அந்த ஊரிலிருந்து நீடாமங்கலம் வலங்கிமான் முதலிய ஊர்களுக்கு வழக்கமாய் விடப்படும் வாடகை வண்டிக்காரர்களை எல்லாம் முதலில் விசாரித்துப் பார்த்து விட வேண்டும் என்ற யோசனை தோன்றியது. அவர்கள் அநேகமாய் ரயில் ஸ்டேஷனிலிருந்தே போகிறது வழக்கம் ஆதலால், நான் நேராக ரயில் ஸ்டேஷனுக்குப் போய், அவ்விடத்தி லிருந்த வண்டிக்காரர்களை ஒவ்வொருவராய்த் தனிமையில் அழைத்து என்னிடமிருந்த பெண் படத்தைக் காட்டி, செவ்வாய்க் கிழமை இரவு 12-மணிக்கு, அம்மாதிரியிருந்த ஒரு பெண் பிள்ளை எந்த வண்டியிலாவது நீடாமங்கலம் பக்கம் போனதுண்டா என்று விசாரித்ததில், ஒரு குதிரை வண்டிக்காரன், தன் வண்டியில் போன தாகவும், வழியில் நட்டுவாய்க்காலி கொட்டி விட்டதாகவும், ஆலங்குடி ஏகாம்பர முதலியார் வீட்டில் அப்போதும் வியாதி யாய்ப் படுத்திருப்பதாகவும், தனக்குச் சேர வேண்டிய வண்டிச் சத்தத்தைக்கூட ஏகாம்பர முதலியாரே கொடுத்துத் தன்னை அனுப்பியதாகவும் சொன்னான். நான் உடனே அதே வண்டியில் உட்கார்ந்து கொண்டு, அந்த ஊரில் உள்ள ஒரு பிரபல டாக்டரிடம் போய், அவருக்கு ரூபாய் 50-கொடுத்து அவரை அதே வண்டியில் உட்கார வைத்துக் கொண்டு ஆலங்குடி போய்ச் சேர்ந்து கந்தசாமியைக் கண்டேன். காணவே, என் உயிர் வந்தது. நான் அப்போது ஜானிஜான் கான் சாயப்புவாக இருந்தேன். கந்தசாமி எனக்குப் பழக்கமான ஒருவருடைய பெண்ணைக் கலியாணம் செய்யப் போகிறவன் என்று சொல்லி, அவன் சென்னையிலிருந்து வந்த வரலாற்றையும் அந்த டாக்டரிடம் தெரிவித்தேன். நாங்கள் போய்ப் பார்த்த காலத்தில், கந்தசாமியின் மயக்கம் தெளிவதும்,

மறுபடி தோன்றுவதுமாக இருந்தது. அன்று வெள்ளிக்கிழமை. டாக்டர் அவனது நிலைமையை சோதித்துப் பார்த்து விட்டு, அவன் ஞாயிற்றுக்கிழமைக்குள் சரியான நிலைமைக்கு வந்து விடுவான் என்று உறுயாகச் சொன்னார். அவனைப் பற்றிய கவலை நீங்கியது ஆனாலும் சென்னையில் அவனைக் காணாது உயிரை விட்டுக் கொண்டிருப்போருக்கு நல்ல செய்தி சொல்லி அவர்களைத் தைரியப்படுத்த எண்ணி நான் அன்றைய தினமே பட்டணத்திற்குப் புறப்பட்டேன். அவன் தெளிவடைந்தவுடன், திங்கட்கிழமை ரயிலில் அவனை சென்னைக்கு அனுப்பி வைக்கும்படி டாக்டரிடம் ஏற்பாடு செய்துவிட்டு, நான் அதில் சம்பந்தப்பட்ட தாகக் கந்தசாமியிடம் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டு மறுநாள் காலையில் பட்டணம் வந்து, மறுபடி நீலலோசனியாக மாறினேன். ஆனால், அந்தச் சமயம் நீலலோசனியை சுமங்கலியாக மாற்றினேன். அவளுக்கு சிவப்புப் புடவையும், தாலியும், குங்குமப் பொட்டும், கொடுத்தேன். பட்டாபிராம பிள்ளையின் பங்களாவில் புகுந்தேன்; வேலைக்காரிகளோடு தந்திரமாகப் பேசி மனோன்மணியம்மாள் கந்தசாமி காணாது போனது பற்றி நோய் கொண்டு பட்டினி கிடந்து துரும்பாய் மெலிந்து போய் நிரம்பவும் துர்லபமான நிலைமையில் இருப்பதாகவும், அவளுடைய பிராணன் இனி அதிக நாள் நில்லாதென்றும் கேள்வியுற்றேன். அவளைத் தேற்றும் பொருட்டும், அவள் சந்தோஷமடையும் பொருட்டும் நான் உடனே ஒரு காரியம் செய்தேன். என்னிட மிருந்த கந்தசாமியின் பெண் வேஷப் படம் அதற்கு மேல் எனக்கு உபயோகம் இல்லாமல் என் மடிசஞ்சிக்குள் தூங்கிக் கொண்டிருந் தது ஆகையால், அது மனோன்மணியம்மாளிடம் போய் அவளை சந்தோஷப்படுத்தி அவள் இறக்காமல் தடுப்பதான பெரிய காரியம் செய்யப் பயன்படும் என்று நினைத்ததன்றி, அதை உடனே அவள் பேருக்கு விலாசம் எழுதி தபாலில் அனுப்பி விட்டேன். அம்மாதிரி நான் கந்தசாமியின் பெயரை உபயோகித் தது, அந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற பெருத்த உத்தேசத்தோடு செய்ததாகையால் கந்தசாமி என்னை அவசியம் மன்னிப்பான் என்று நம்புகிறேன். அதன் பிறகு நான் அந்தக் கும்பலில் புகுந்து, புடவை தானம் வாங்கிக் கொண்டேன்; மன்னார்குடியில் நான் இறந்த பிறகு அன்றைய தினந்தான் திருப்தி கரமாக போஜனம் செய்தேன். நான் சாதாரணமாக வந்து, கந்தசாமி

இன்ன இடத்தில் இருக்கிறான் என்றால், எல்லோரும் பதறி அடித்துக் கொண்டு புறப்பட்டு ஆலங்குடிக்கு ஓடுவார்கள் என்றும், கந்தசாமி நிம்மதியாய் இருந்து குணமடைவது கெட்டுப் போகும் என்றும் நினைத்து, நான் ஆவேசம் கொண்டவள் போல நடித்து, இன்ன இடத்தில் அவன் இருக்கிறான் என்பது தெரியாதபடி விஷயத்தைத் தெரிவித்து, அவர்கள் சந்தோஷமாய் இருக்கும்படி செய்தேன். நான் வேறே ஏதாவது வேஷத்தோடு ஆவேசம் கொண்டிருந்தால், அது நம்பிக்கைப் படாதென்று நினைத்து சுமங்கலி வேஷம் போட்டுக் கொண்டேன். ஏனென்றால், அவ்வளவு பெரிய மனிதரான வேலாயுதம் பிள்ளையை ஒரு பெண் பிள்ளை துணிந்து, "அடே வேலாயுதம்" என்று கூப்பிடு வதைக் கண்டு, அதை அவரும் மற்றவர்களும் கடவுளின் வாக்கென்றே நம்புவார்கள் என்று நினைத்து அப்படிச் செய்தேன். பலருடைய மனவேதனையை நிவர்த்தி செய்வதான பெருத்த நன்மையைக் கருதி நான் கடவுளின் சக்தியை வகித்துக் கொள்ளத் துணிந்ததையும், வேலாயுதம் பிள்ளை அவர்களை மரியாதைக் குறைவாக அழைத்ததையும் எல்லோரும் மன்னிக்க வேண்டு கிறேன்; அந்த ஆவேசம் கொண்ட ஸ்திரீ சொன்னதை உண்மை என்று எல்லோரும் நம்பி இருப்பதற்கு அனுகூலமாக, நான் சொன்னது நிஜமென்று அவர்கள் உடனே எண்ணிக் கொள்ளட்டு மென்று, அன்று காலையில் நான் மனோன்மணியம்மாளுக்கு அனுப்பிய படம் அன்றைய மாலைக்குள் அவளிடம் வந்து சேரும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அன்றைய தினமே நல்ல செய்தி வரப்போகிறதென்று அவர்களுக்குச் சொல்லி வந்தேன். மனதில் துர்நினைவும் துராசையும் இன்றி, பிறரது நன்மை ஒன்றையே கருதி மனிதர் பொய் சொல்வதும், குற்றமான செய்கைகளைச் செய்வதும் மன்னிக்கத் தகுந்தவைகள் என்பது நம் முன்னோரின் கொள்கை ஆதலால், நான் அதே கொள்கைப்படி நடந்து கொண்டேன். நான் புத்திக் குறைவினால் தவறுகள் செய்திருந்தாலும், அவைகளை நண்பர் அனைவரும் க்ஷமிக்கு மாறு பன்முறை வேண்டிக் கொள்கிறேன். சனிக்கிழமை இரவே நான் புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூருக்குப் போய் திங்கட் கிழமை நடக்க இருந்த விசாரணைக்கு ஆக வேண்டிய காரியங் களைக் கவனித்து, ஜானிஜான் கான் சாயப்புவாகவும், நீலலோசனி

யம்மாளாகவும் கச்சேரியில் வந்து நான் எடுத்துக் கொண்ட காரியங்கள் பூர்த்தியடையும்படி செய்து விட்டேன். நான் மிஸ்டர் வெல்டன் துரையாக மாறி ஆஸ்பத்திரிக்குப் போன காலத்தில் ரமாமணியம்மாள் முதலியோரைக் கண்டு அவர்களுக்கு ரப்பர் மூக்கு முதலியவை செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்தேன். அது ஒன்று தான் பாக்கி இருக்கிறது. அவர்கள் பிறருக்குத் தீங்கு நினைத்து அதைத் தாங்களே அனுபவிக்க நேர்ந்தாலும், அதைப் பற்றி நான் நிரம்பவும் வருந்தி அவர்களுக்கு அந்த உதவியை யாவது செய்ய எண்ணி கல்கத்தாவில் உள்ள ஒரு நிபுணருக்கு எழுதி ஏற்பாடு செய்திருக்கிறேன். அவை சீக்கிரம் வந்து சேரும். அது நிற்க, திருவாளன் கந்தசாமி செவ்வாய்க்கிழமை தினம் சென் னைக்கு வந்து தனது மனிதர்களிடம் சேர்ந்து, எல்லோர் மனதும் சந்தோஷம் அடையச் செய்திருப்பான். வெள்ளிக்கிழமை அன்று காலையில் நான் சென்னைக்கு வந்து எனது இஷ்ட தெய்வங்க ளாகிய வேலாயுதம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, சிவக்கொழுந்தம் மாள், திரிபுரசுந்தரியம்மாள், வடிவாம்பாள், கண்ணப்பா முதலி யோரை தரிசனம் செய்து கொள்ள எண்ணி இருக்கிறேன். அப்போது கவர்னர் துரை அவர்களையும் நேரில் வந்து பார்க்க உத்தேசிக்கிறேன். அப்போது மற்ற விவரங்களையும் நேரில் பேசிக்கொள்கிறேன்.

இங்ஙனம்

பொதுஜன ஊழியன்,

**திகம்பர சாமியார்.**

என்று எழுதப்பட்டிருந்த விரிவான செய்தியைப் படித்த பட்டாபிராம பிள்ளையும் மற்ற எல்லோரும் உடனே மயிர்சிலிர்க் கப் பெற்றுப் பரவசமடைந்து, "ஆகாகாகாகா!" என்று வியப்புக் கூச்சலிட்டு மூக்கின் மேல் விரலை வைத்துப் பெரு முழக்கம் செய்தனர். வேலாயுதம் பிள்ளை தாங்கமாட்டாத மனவெழுச்சியும் ஆனந்தப் பெருக்குமடைந்து, "ஐயோ! என்னப்பனே! ஆகாகாகா! உம்மை ஈசுவரனுடைய அவதாரம் என்றே சொல்ல வேண்டு மப்பா. முன்பு என் பெரிய மருமகள் விஷயமாக அந்தத் துஷ்டர் களால், என் குடும்பத்துக்கு ஏற்பட்ட எத்தனையோ பெரிய இடர்களை நீக்கி, எங்கள் குடும்ப விளக்கை நிலை நிறுத்திய காருண்ய வள்ளலாகிய நீரே இப்போதும் பேசுந் தெய்வமாய் வந்து இந்த உலகத்தில் வேறு எவராலும் சாதிக்க இயலாத

இத்தனை அரிய பெரிய அற்புத சாமர்த்தியச் செய்கைகளைச் செய்து மறுபடியும் நாங்கள் உஜ்ஜீவிக்கும்படி செய்ய முன் வந்தீரா! ஆகா! நானும் என் சந்ததியாரும் எத்தனையோ ஜன்மங்கள் எடுத்து, உமக்குத் தினம் தினம் பாதபூஜை செய்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்தாலும், நாங்கள் உம்மிடம் பட்ட கடன் தீரவே தீராது. மகா தீர புருஷன்! எந்த உத்தமியின் மணி வயிறு பெற்றெடுத்த அவதார புருஷரோ! எங்களைக் காப்பாற்று வதற் கென்றே வந்து ஜெனித்த மகானே! நீர் இருக்கும் திக்கு நோக்கி அநந்த கோடி தண்டன் சமர்ப்பிக்கிறேன்" என்று நிரம்பவும் நெகிழ்ந்து தழுதழுத்த குரலில் கூறி திகம்பரசாமியார் இருந்த திக்கு நோக்கி சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து வணக்கமாக நமஸ்கரித்து எழுந்தார். திரிபுரசுந்தரியம்மாள், கண்ணப்பா, கந்தசாமி ஆகிய மூவரும் ஆனந்தமயமாய் நிரம்பிப் போய்த் தேம்பித் தேம்பி அழுத வண்ணம் பேசமாட்டாதவராய்த் தொண்டை அடைத்துப் போய் சித்திரப் பதுமைகள் போல நின்றனர். விருந்தினர் அனைவரும் ஆனந்த நிர்த்தனம் செய்து ஆர்ப்பரித்து, திகம்பர சாமியார் செய்த ஒவ்வொரு சாமர்த்தியச் செய்கையையும் சொல்லிச் சொல்லிக் களிவெறி கொண்டு பெருத்த கோஷம் செய்தனர். பட்டாபிராம பிள்ளை தமது கையில் இருந்த பத்திரிகையை உடனே மனோன்மணியம்மாளுக்குக் கொடுத் தனுப்ப, அவளும் அவளோடிருந்த வடிவாம்பாளும் அந்த மகா அதிசயமான வரலாற்றைப் படித்து வாய் பேசா ஊமைகளாய் மாறி ஆனந்த வெள்ளத்தில் மிதந்தனர். திகம்பர சாமியார் வெளியிட்ட அற்புதமான வரலாற்றை இந்த உலகத்தோர் அனைவரும் படித்து வியப்புற்று ஆனந்தம் எய்தி அவரைப் புகழ்ந்தனர். சிறைச்சாலை யில் இருந்த சட்டைநாத பிள்ளை, மாசிலாமணி, ரமாமணியம்மாள் முதலியோரும் அதைப் படித்து, "ஆகா! இந்தப் படுபாவியா எங்களை ஏமாற்றினவன்!" என்று கூறி வியப்பே வடிவாக மாறினர். பட்டாபிராம பிள்ளையின் பங்களா தத்ரூபம் சுவர்க்க லோகம் போலவே காணப்பட்டது. அங்கிருந்தோர் அனைவரும், பசி, தூக்கம், விசனம், கவலை முதலிய எவ்வித தேக பாதையும் மனோபாதையுமின்றி நிச்சலனமான பேரின்ப சாகரத்தில் ஆழ்ந்து மிதந்திருந்தனர் என்று சொல்வதைக் குன்றக் கூறியதாகக் கருத வேண்டும்.

மறுநாள் பொழுது விடிந்தது. அன்றைக்குள் சகலமான கலியாண ஏற்பாடுகளையும் தாங்கள் செய்து விட வேண்டும் என்று எல்லோரும் வெகு சுறுசுறுப்பாகத் தத்தம் வேலைகளைச் செய்யத் துவக்கி, அன்றைய தினம் இரவு கழிவதற்குள் அந்த பங்களாவை இந்திர விமானம் போல அலங்கரித்து பெருத்த மண்டலாதிபதியின் பட்டாபிஷேகத்திற்குச் செய்யத்தக்க ஏற்பாடு களை எல்லாம் செய்து விட்டனர். மன்னார்குடியிலிருந்து சகலமான சாமக்கிரியைகளும் அம்பாரம் அம்பாரமாக வந்து குவிந்து விட்டன. அன்றிரவு முதலே மேளங்களும், பாண்டு வாத்தியங்களும் ஜாம் ஜாமென்று முழங்கத் தலைப்பட்டு விட்டன.

கலியாண தினமும் வந்து சேர்ந்தது. திகம்பர சாமியார் வரப் போகிறார் என்ற செய்தி சென்னை முழுதும் பரவிப் போகவே, லட்சக்கணக்கில் ஜனங்கள் அதிகாலையிலே வந்து நிறைந்து ரயில் ஸ்டேஷன் முதல் பட்டாபிராம பிள்ளையின் பங்களா வரையில் கூடி நெருங்கி விட்டனர். பத்திரிகையில் வெளியான சங்கதிகளைப் படித்த சென்னை கவர்னர், போலீஸ் கமிஷனர், பெரிய டாக்டர் துரை முதலியோரும், இன்னும் மற்றுமுள்ள பெரிய உத்தியோகஸ் தர்களும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்து மிகுந்த ஆவலோடு அந்த மகானது வருகையை எதிர்பார்த்திருந்தனர். வேலாயுதம் பிள்ளை முதலிய பிரமுகர்கள் மேள வாத்தியம், பாண்டு வாத்தியம், பூர்ண கும்பம் முதலியவற்றோடு தோன்றி சாக்ஷாத் ஈசுவரனையே தரிசிக்க நிற்பவரைப் போலக் கைகட்டி அங்கங்களை ஒடுக்கிக் கொண்டு நின்றனர். ரயிலும் காலத்தில் வந்து சேர்ந்தது. திகம்பர சாமியார் முதல் வகுப்பில் வருவார் என்று எல்லோரும் எதிர்பார்த்து முதல் வகுப்பு வண்டிகளில் தேடினர். அவர் காணப்படவில்லை. இரண்டாவது வகுப்பு வண்டிகளிலும் காணப்படவில்லை. அவர் வரவில்லை என்று எல்லோரும் நினைத்து ஏமாற்றமடைந்து ஏங்கி நின்ற தருணத்தில் மூன்றாவது வகுப்பு வண்டியிலிருந்து இறங்கி ஜனக் கும்பலைக் கண்டு ஒதுங்கி ஒரு மூலையாகப் போய்க் கொண்டிருந்தவர்களும், காஷாய வஸ்திரம் அணிந்தவர்களுமான ஒரு பரதேசியையும், அவரது மனைவியையும் கண்ட யாரோ சிலர், "சாமியார் அதோ போகிறார் போலிருக்கிறதே!" என்றனர். அதைக் கேட்ட வேலாயுதம் பிள்ளை முதலியோர் ஓடோடியும் சென்று, "சுவாமி!

ஆண்டவனே! எங்களைப் காப்பாற்றிய உயிர்த் தெய்வமே! உங்களைப் பார்ப்பதற்கு பக்த கோடிகளாகிய நாங்கள் எல்லோரும் இங்கே காத்திருக்கிறோமே. எங்களைப் பாராது போவது தருமமா" என்று கூறி சாஷ்டாங்கமாக சாமியாருக்கு முன்னால் விழுந்து கும்பிட்டு எழுந்தார். அவரைப் போல அவரது குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் செய்தனர். அதைக் கண்ட மற்ற ஜனங்களில் பெரும்பாலோரும் தம்மை மறந்து அப்படியே செய்தனர். சிலர் சாமியாருக்குப் பூமாலை சாத்தினர். சிலர் பூர்ண கும்பம் வழங்கினர். சிலர் பாதபூஜை செய்தனர். அப்போது சென்னை கவர்னரும் கமிஷனரும் தோன்றி, தாங்கள் இன்னார் என்று கூறி அவருக்குத் தமது மரியாதையைச் செலுத்தி அவரது தெய்விகமான சாமர்த்தியத்தை அபாரமாகப் புகழ்ந்து அவரை வாழ்த்தினர். அத்தனை ஜனங்களும் வருவார்கள் என்று சுவாமியார் எதிர்பார்த் தவரல்லர் ஆதலால் அவர் அப்படியே ஸ்தம்பித்து மெய்ம்மறந்து போய் ஒவ்வொருவருக்கும் தக்கபடி உபசார வார்த்தை கூறினார்.

உடனே எல்லோரும் சுவாமியாரையும், அவரது மனைவியாரை யும் மேள வாத்தியங்கள் முழங்க அழைத்துக் கொண்டு வெளியில் சென்று நூற்றுக் கணக்கில் ஜதை ஜதையாக நிறுத்தப் பட்டிருந்த மோட்டார் வண்டிகளில் ஒன்றில் அவர்களை உட்காரச் செய்து தாங்களும் அமர்ந்து ஊர்வலம் போலப் புறப்பட்டு கலெக்டரது பங்களாவை அடைந்தனர். அவ்விடத்தில் வடிவாம்பாள் முதலிய ஸ்திரீ ரத்னங்கள் மஞ்சள் நீர் ஆரத்தியோடு ஆயத்தமாக நின்று சுவாமியாருக்கு திருஷ்டி தோஷம் கழித்து மங்களகீதம் பாடி அவர்களை வரவேற்றனர். எல்லோரும் பங்களாவில் அமைக்கப் பட்டிருந்த கலியாண மண்டபத்திற்குச் சென்று ஆசனங்களில் அமர்ந்தனர்.

வேலாயுதம் பிள்ளையும் பட்டாபிராம பிள்ளையும் அன்றைய தினம் தாம் கலியாணம் நடத்த உத்தேசித்திருந்த செய்தியைத் திகம்பர சாமியாரிடம் கூறி அவரது அனுமதியைப் பெற்று அதற்குரிய சடங்குகளைத் தொடங்க ஆரம்பித்தனர். அன்றைய பகலில் திருவளர் செல்வன் கந்தசாமிக்கும், திருநிறைச் செல்வி மனோன்மணியம்மாளுக்கும் திருக்கல்யாணம் வெகு விமரிசை யாக நிறைவேறியது. லட்சக்கணக்கில் ஜனங்கள் விஜயம் செய்து ஆசி கூறி விருந்துண்டனர். அது கர்ண மகாராஜனது கலியாணமே

என்று எல்லோரும் வெகு காலம் வரையில் புகழும்படி ஏராளமான தான தருமங்கள் வழங்கப்பட்டன. கலியாணத்திற்கு மறுதினமாகிய சனிக்கிழமை அன்று கங்கணவிசர்ஜனம் முதலிய சடங்குகள் நிரம்பவும் அமோகமாய் நடைபெற்றன. மறுதினமாகிய ஞாயிற்றுக்கிழமை இரவில் புதிய தம்பதிகளுக்கு சாந்தி முகூர்த்தம் நடத்துவதென்று எல்லோரும் தீர்மானித்து அதன் பொருட்டு லட்சக்கணக்கில் பொருட் செலவு செய்து பள்ளியறை ஜோடித்து மன்மதன், தேவேந்திரன் முதலியோர் கூட அத்தகைய சயனமாளிகையை அதுகாறும் கண்டிரார்கள் என்று எல்லோரும் வியந்து புகழத்தக்கபடி அமைத்து, அதில் பக்ஷண பலகாரங்கள் முதலிய உபகரணங்கள் யாவற்றையும் பூர்த்தியாக நிரப்பினர். வைதிகச் சடங்குகள் போஜனம் முதலியவை நடந்தேறிய பின்னர் மனோன்மணியம்மாள் சர்வாபரண பூஷிதையாய் ஜெகஜ் ஜோதியாய் அலங்கரிக்கப்பட்டு அந்த சயனக் கிரகத்திற்குள் அனுப்பப்பட்டிருந்தாள். அவளுக்குப் பின்னர் சரியான சுப காலத்தில் மணமகனும் தத்ரூபம் மன்மதன் போன்ற அலங்காரத்தோடு உள்ளே அனுப்பப்பட்டான். அதற்கு முன் தனக்கும் மனோன்மணியம்மாளுக்கும் நேர்ந்த சந்திப்பின் ஞாபகம் கந்தசாமியின் மனதில் மாறாமல் இருந்தது ஆகையால், தன்னிடம் அவள் அன்று எவ்வாறு நடந்து கொள்வாளோ என்று மிகுந்த கவலையும் கலக்கமும் கொண்டவனாய் அந்த யௌவன வடிவழகன் தயங்கித் தயங்கி உள்ளே சென்று தனக்காக அமைக்கப்பட்டிருந்த முத்துக் கட்டிலிற்கு சமீபமாய்ப் போய்ச் சேர்ந்து தனது கடைக்கண் பார்வையை நாற்புறங்களிலும் செலுத்தித் தனது நாயகி என்ன நிலைமையில் இருக்கிறாள் என்று ஆராய்ந்து பார்த்தான். உடனே மனோன்மணியம்மாள், ஒரு வெள்ளித் தட்டில் ஏராளமான ரோஜாப் புஷ்பங்களையும் இன்னும் பூஜைக்குரிய சாமான்களையும் கரத்தில் ஏந்திய வண்ணம் நாணிக் குனிந்து அன்ன நடை நடந்து அவனுக்கெதிரில் வந்து, அவனது காலடியில் அவைகளை வைத்து, அவனுக்குப் பாதபூஜை செய்து, ரோஜா மலர்களால் அவனது பாதங்களை அர்ச்சித்து, அவனைச் சுற்றிப் பன்முறை பிரதக்ஷணம் செய்து அவனுக்கு முன்னால் மண்டியிட்டு நமஸ்காரம் செய்து, கன்னங்களில் அடித்துக் கொண்டு கைகுவித்துக் குனிந்து நிற்க, அதைக் கண்ட மணமகன் முற்றிலும் பிரமித்து வியப்பும் திகைப்பும் அடைந்து பேரானந்த நிலையில்

தோய்ந்து நின்றபடி மிருதுவாகவும் வாஞ்சை ததும்பிய குரலிலும் பேசத் தொடங்கி, "என்ன இது? நான் முன் தடவையில் பார்த்த மனோன்மணியம்மாளைக் காணோமே! இது யார் என்பது தெரிய வில்லையே!" என்றான்.

அதைக் கேட்ட மனோன்மணியம்மாள் நாணிக் குனிந்து வணக்க வொடுக்கமாக நின்றபடி, "முன் தடவையில் ஏதோ அறியாமையால் அடியாள் செய்த அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும். நான் ஆங்கிலக் கல்வி கற்க வேண்டும் என்ற ஆசையில் வழி தப்பி, ஸ்திரீகளுக்கு அவசியமற்ற விஷயங்களைக் கற்று மமதை கொண்டு, செய்யத் தகாத துராசாரங்களை மேற் கொண்டொழுகி விட்டேன். இப்போது எனக்கு ஒரு சத்குருவின் தரிசனம் கிடைத்தது. ஸ்திரீகள் அத்தனை பாடுபட்டு தங்கள் ஆயுட்காலத்தை வீணாக்கி, கல்வி கற்பதைவிட, வெகு சுலபத்தில்,

"தெய்வந்தொழாள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்ற ஒரு சிறிய வாக்கியத்தின் கருத்தை நான் அனுபவத்திற்குக் கொண்டு வருவதே போதுமானது என்பதை அந்த சற்குருவாகிய என் அக்காளிடம் நான் தெரிந்து கொண்டேன். கல்வி கற்பதன் பயன் முக்கியமாய் அறிவைப் பெருக்கி, அவரவர் தம் தம் நெறிப்படி நற்குண நல்லொழுக்கத்தோடு ஒழுகுவதன்றி வேறல்ல. நான் ஸ்திரீ தர்மங்களைக் கற்பதற்கு, எவ்வகையிலும் நமக்கு எதிரிடையாய் உள்ள அன்னிய நாட்டாரின் புஸ்தகங்களை ஆயிரக் கணக்கில் படித்துத் திசை தெரியாது தடுமாறும் கப்பல் போல அலைந்து, உண்மையான ஞானம் இன்னதென்று காணாமல் தவித்தேன். நம்மவர் உலகாநுபவங்களை வெண் ணெய் போலக் கடைந்து திரட்டி வைத்துள்ள மேற்கண்ட ஒரு செய்யுளில் அடங்கியுள்ள ஸாரம் இந்த உலகத்தில் எங்குமில்லை. குடும்ப வாழ்க்கை ஒற்றுமையாகவும், க்ஷேமமாகவும், மங்களகர மாகவும் நடப்பதைவிட, மனிதர் அடையக்கூடிய இம்மைப் புருஷார்த்தம் வேறொன்றுமில்லை. அதற்கு அனுகுணமாக ஸ்திரீகள் தமது புருஷரையே தெய்வமென்று கருதி அவருடைய விருப்பம் போல அடங்கி ஒடுங்கிப் பணிவாகவும் வாஞ்சையாக வும் நடந்து கற்பிற்கரசிகளாய் விளங்குவதை விட மேலான தர்மம் வேறு என்ன இருக்கிறது? அதைத் தவிர நான் கற்றுக் கொள்ளக்

கூடியது ஒன்றுமே இல்லை என்பதை இப்போது உணர்ந்து கொண்டேன். அதன்படி நடப்பதே எனக்கு இப்போது பரம ஆனந்தமாகத் தோன்றுகிறது. நான் என் குருவினிடம் கற்றுக் கொண்ட இந்தப் பாடத்தை இன்று முதல் இனி என் ஆயிசு கால முடிவு பரியந்தம் மறக்காமல் மனதில் வைத்து அதன்படியே நடந்து கொள்வேன் என்பது திண்ணம். இனி அடியாள் முன் போல நடந்து கொள்வேனோ என்ற சிந்தனையே தங்களுக்கு வேண்டாம்" என்று நிரம்பவும் பணிவாகவும் மிருதுவான குரலிலும் கூறினாள். அவளது எதிர்பாராத பணிவான நடத்தையைக் கண்டு, அவனது விநயமான வார்த்தைகளைக் கேட்ட மணமகன் பூரித்துப் புளகாங்கிதமடைந்து, "ஆகா! இப்போதே நான் கிருதார்த்தனானேன்! இதற்கு நிகரானதும் இதற்கு மேம்பட்டதுமான சுகமும் பாக்கியமும் புருஷருக்குக் கிடைக்கப் போகின்றனவா! இங்கிலீஷ் படிப்பெதற்கு? எம்.ஏ., பட்டம் எதற்கு? ஸாரத்தை விட்டு சக்கையை நாடுகிறவர்களே அதைத் தேடிக் கொள்ளட்டும், நம்முடைய சீதாதேவி, சாவித்திரி முதலியோர் எந்த எம்.ஏ., பட்டம் பெற்று அழியாப் பெயர் அடைந்தனர்? ஸ்திரீகளுக்கு பதிவிரதா தர்மம் என்பதைவிட மேலான பட்டம் ஒன்றுமே தேவையில்லை. அதை உடையவர்களே பட்டமகிஷிகள். அவர்களே கல்வியில் சரஸ்வதிக்குச் சமதை யானவர்கள். அவர்களே விலைமதிப்பற்ற வைரக் கற்கள். அவர்களே தெவிட்டாத இன்பக் களஞ்சியம். அந்த நிலைமையை நீ அடைந்து விட்டாய் என்பதைக் காண, என் அங்கம் பூரிக்கிறது; என் உள்ளம் ஆனந்த வெள்ளமாய்ப் பொங்குகிறது. எனக்கு ஈசன் அளித்திருக்கும் மற்ற ஏராளமான செல்வம் எல்லாம் உண்மைச் செல்வமே அல்ல. பதிவிரதா தர்மத்தைக் கடைப்பிடித் தொழுகும் மகா புத்திசாலியான பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாக நான் பெற்றதே ஒப்பற்ற தெய்வீகச் செல்வம். "கண்ணே! ஏன் தூர நிற்கிறாய்? வா சமீபத்தில்" என்று கூறி, அளவிட இயலாத வாஞ்சையோடும் பிரேமையோடும் அந்தப் பேடன்னத்தை சுவீகரித்துத் தழுவினான்.

**சுபம்! சுபம்!! சுபம்!!!**


# ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
# நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
# அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்




## திகம்பர சாமியார்

1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா வினோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா வினோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா வினோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா





... ... ... இதற்கு மேலும் வருவார் !